T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXIV No4 and 5

March 31th and 9th April. 1984

V211,31 N84
N34.64.4&5
136251

N84.64.4 f5

136251

600 008.

உள்ளடக்கம்.

31—3—1984.

பக்கம்

1 வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 533—562

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 563—626

2 தகவல் கோரல்—

(அ) பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து. 626

(ஆ) தொகுதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அந்தந்தத் தொகுதி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பது. 626—628

(இ) நுகர்பொருள் வாணிப கழக ஊழியர்கள் உண்ணாவிரதப் போராட்டம். 628

3 ஒத்திவைப்புத் தீர்மானம்—

கல்லூரி ஆசிரியர், ஆசிரியர் அல்லாதவர் பல்கலைக் கழகத் தேர்வுப் பணியை புறக்கணிக்க இருப்பது. 628—646

4 கவன ஈர்ப்பு—

தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதி பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பது. 647—648

5 அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதி 30 (3) இன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம். 648

(ஆ) பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல் .. 733

6 அறிவிப்புகள்—

(அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984, (ஆ.இ.) 648—649

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.) 649

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.) 650

| | பக்கம். |
|---|---|
| அறிவிப்புகள்—தொடர்ச்சி. | |
| (ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.). | |
| (உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.). | 650—651 |
| (ஊ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான—மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1984 (மே.செ.) | 651 |
| (எ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1984 (மே.செ.) | 732 |
| 7 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | 732 |
| (அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984. | |
| (ஆ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984. | 649 |
| (இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984. | 649 |
| (ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984. | 650 |
| (உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984. | 650—651 |
| | 651 |
| 8 வரவு-செலவுத் திட்டம் 1984–85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் .. | 652—653 |
| (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் .. | 653—654 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 653, 654 663, 669 707, 730 |
| திரு. பி. எம். தங்கவேல்ராஜ் .. .. | 654—660 |
| திரு. மே. அ. இராசகுமார் .. .. .. | 660—662 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. .. | 662—672 |
| திரு. கே. குப்புசாமி .. .. .. .. | 672—681 |
| திரு. ரா. உமாநாத் .. .. .. .. | 681—695 |
| திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். | 698—701 |
| திரு. இரா. கருப்பையா .. .. .. | 701—707 |
| 9 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 733—734 |


2787

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 31, சனிக்கிழமை.

பங்குனி 18, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு—2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை ".

யாரிடத்திலும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல், நடுவு நிலைமை பொருந்தி, செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சீர்திருத்திய தமிழ் எழுத்துக்களைப் பின்பற்றச் செய்யும் திட்டம்.

520—* (வினா எண் 12988) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பின்பற்றாதவர்களைப் பின்பற்றச் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) சீர்திருத்தம் செய்யப்பட்ட எழுத்துக்களைத் திரைப்படம், தொலைக் காட்சி மூலம் பரப்ப அரசு செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசுத் துறைகளைச் சாராத பொது மக்களிடையேயும், மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட மற்றவர்கள் இடையேயும், தமிழ் சீர்திருத்திய

எழுத்துக்களை கட்டாய முறையில் பரப்ப வாய்ப்பில்லை. அரசு அலுவலகங்களைப் பொறுத்த வரையில், அரசுப் பணியாளர்கள் அனைவரும் சீர்திருத்திய எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். இது தொடர்பாக தமிழ் வளர்ச்சித் துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

(ஆ) இது குறித்து தனி நடவடிக்கை ஏதுமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக் காட்சி, திரைப்படம் மூலம் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய தனி நடவடிக்கை இல்லையென்றாலும் இன்றைக்கு இதை வேகமாகப் பரப்புவதற்குப் பத்திரிகைகள் பெரிதும் பயன்படுகிற ஒரு நிலைமையிருக்கிறது. எனவே, பத்திரிகையாளர்கள் இதை கடைப் பிடிப்பதற்கு ஏதாவது பிரத்தியேக நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்பொழுதிருக்கிற பத்திரிகைகளில் தினமலர் பத்திரிகை இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை கடைபிடித்து வருகிறது. எனவே மற்ற பத்திரிகைகளிலே இந்த எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் பத்திரிகைகளுக்கு ஏதாவது சலுகைகளோ அல்லது ஊக்கம் கொடுக்கும் முறையிலோ அரசு அறிவிப்பு கொடுத்து, கட்டாயமாக இல்லையென்றாலும் அவர்கள் விரும்பி இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ள அரசு பிரத்தியேகமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் தொலைக் காட்சியில் பெயர்களை, எழுத்துக்களைக் காட்டும்போது சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். தமிழ்நாடு திரைப்பட பிரிவுகள் தயாரித்து வெளியிடும் செய்திப் படங்கள், வணிகப் படங்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றில் சீர்திருத்த எழுத்துக்களைக் கடைப்பிடித்து வருகின்றார்கள். பத்திரிகைகளைப் பொறுத்த மட்டில் தமிழ் சீர்திருத்த எழுத்துக்களைப் பின்பற்ற வேண்டுமென்று நாம் கேட்டு வருகின்றோம். அவர்கள் அரசினுடைய வேண்டுகோளை—இது ஒரு முக்கியமான சீர்திருத்தமாக இருக்கிற காரணத்தால்—ஏற்று செயல்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இன எழுத்துக்களில் இன்னும் சீர்திருத்தத்தைச் செய்தால் கூடுதலான எழுத்துக்களைக் குறைக்க முடியும் என்பது உண்மையா ? ஆமென்றால் அந்தச் சீர்த்திருத்தங்கள் விவரம் என்ன ? அந்தச் சீர்திருத்தத்தைத் துறை அமுல்படுத்த ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம், ஆகிய 4 வகை எழுத்துக்களை எழுத நாம் பல்வேறு முறைகளைக் கையாளுகிறோம். இப்பொழுது சு என்றால் ஒரு மாதிரி எழுதுகிறோம். கு என்கிறபொழுது வேறு மாதிரி குறியைப் போடுகிறோம். அப்படிப் பார்த்தால் அந்த 4 வகை எழுத்துக்களில் பல மாதிரியான வடிவங்களை அல்லது குறிகளை எல்லாம் நாம் சேர்த்து வருகிற காரணத்தால் எழுத்துக்கள் அதிகம் ஆகின்றன. ஆகவே, அந்த 4 வகை இனங்களில் ஒரே மாதிரியான குறியை, இகரத்திற்கு ஒரே மாதிரி, ஈ என்றால் அதற்கு ஒரே மாதிரி, உ என்றால் அதற்கு ஒரே மாதிரி, ஊ என்றால் அதற்கு ஒரே மாதிரி, அந்தக் குறியைப் போடுகிற முயற்சி எடுத்து, நாம் ஏற்றுக் கொள்வோமேயானால் நிறைய எழுத்துக்கள் குறையக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எழுத்துச் சீர்திருத்தம் என்பது தந்தை பெரியார் அவர்கள் எழுதிய, சொல்லிய அந்த முறை கையாளப்பட்டு வழக்கத்திற்கு வந்திருக்கிறதா ? ஆரம்பப் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் வரை இருக்கிற பாட நூல்களிலே இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை தீவிரமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பாட நூல் நிறுவனம் சார்பாக பாட நூல்களில் இந்த எழுத்துக்களையே பின்பற்றும்படி சொல்லியிருக்கிறோம். அதேபோல் அரசு சார்பாக நடைபெறுகிற அரசு சம்பந்தப்பட்ட எல்லா புத்தகங்கள், வெளியீடுகள், அறிக்கைகள் ஆகியவற்றிலும் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றி வருகிறோம். தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள் என்ற ஒன்றின் காரணமாக மட்டும் இதைப் பின்பற்றவில்லை. அவர் சொன்னது மிகவும் தேவையானதாகவும் விஞ்ஞான ரீதியாகவும் இருக்கிற காரணத்தால்தான் நாம் ஏற்றுக் கொண்டு அதைச் செயல்படுத்த முன் வந்திருக்கிறோம்.

இன்றைக்கு நாம் இந்த சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தோம் என்ற ஒரே காரணத்திற்காகவே முரசொலி பத்திரிகையில் அதை இன்னமும் ஏற்றுக் கொள்ளாமல் இருந்து வருகிறார்கள். இன்றைக்கு நான் கேட்டுக் கொள்ள விரும்புவது நாங்கள் கொண்டு வந்தோமா அல்லது இன்னொருவர் கொண்டு வந்தார்கள் என்பதோ அல்ல; தந்தைப் பெரியார் சொல்லி இருக்கிறார் என்பதை கூட வைத்தல்ல. இதுபோன்ற ஒரு முற்போக்கான திட்டத்திற்கு நாம் அரசியல் கட்சி வேறுபாடு கருதாது ஏற்றுக் கொள்ள வேண்டும். அது தான் முறை ; அதன்படி எல்லா வகை பத்திரிகைகளும், எல்லா வகை பத்திரிகை வெளியீட்டாளர்களும் இதை கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 31

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
படிப்பவர்கள் 10 பேர் என்றால் பார்ப்பவர்கள், கேட்பவர்கள்
90 பேர்கள் என்ற நிலை இருக்கிறது. கல்வி அறிவு குறைந்த
இடத்தில் புத்தகம் படிப்பவர்களைவிட படம் பார்க்கக் கூடிய
வர்கள் தான் அதிகம் என்ற அளவில் இன்றைய தினம் பல்வேறு
நிகழ்ச்சிகள் படம் பார்ப்பவர்கள் மூலம் நடைபெறுகின்றன
என்று வரலாறு எடுத்துச் சொல்கிறது. அந்த அடிப்படையில்
இதை ஒரு எஜுகேஷன் பிலிம், கல்விப்படம் என்ற வகையில்
கல்வித் துறை அந்த எழுத்துக்கள் எந்தெந்த எழுத்து எப்படி
இருக்க வேண்டும், எப்படி பயன்படுத்த வேண்டுமென்று சொல்லக்
கூடிய வகையில் அதை எடுத்து செயல்படுத்துவதற்கு, திரைப்
படம், தொலைக் காட்சி ஆகியவற்றின் மூலமாக விளம்பரம்
செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, நாம் இதை பயன்படுத்த ஆரம்பித்து விட்டோம்.
அரசைப் பொறுத்த வரையில் இந்த நடவடிக்கையை எடுத்து
நாம் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இன்னும் ஒன்றை
சொல்லவேண்டுமேயானால் நாம் செய்திருக்கிற சீர்திருத்தத்தை
சிங்கப்பூர் அரசும் ஏற்றுக்கொண்டு அவர்கள் எல்லா துறைகளி
லும், எல்லா நிலைகளிலும் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்
கள். ஆகவே, இனி மற்றும் உள்ள மலேசியா, ஸ்ரீலங்கா
போன்ற நாடுகளில் கூட அவர்களும் சீர்திருத்தத்தை நடை
முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.
எதிர் காலத்தில் நாம் செய்யவிருக்கிற எழுத்துச்சீர்திருத்தத்தில்
மற்றைய நாடுகளிலும் இருக்கிற அரசுகளை கலந்துகொண்டு
அவர்களையும் இதில் ஈடுபடுத்திக் கொண்டு நாம் இந்த எழுத்து
மாற்றத்தைச் செய்ய விரும்புகிறோம். அப்படிச் செய்தால்
ஒரே சமயத்தில் நாம் செய்திருக்கிற எழுத்துச் சீர்திருத்தம்
உலகத்திலே தமிழை பயன்படுத்துகிற எல்லா இடங்களிலும்
நடைமுறைக்கு வரும். அதன் மூலமாக மொழியில் ஒரேமாதிரி
யான நடைமுறையை நாம் பெறுவதற்கும் எளிதாக இருக்கும்.
இந்தக் காரணங்களால் அப்படிச் செய்ய நாம் நினைத்துக்கொண்
டிருக்கிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே'
பழங்காலத்தில் இருந்த தமிழ் எழுத்துக்களிலிருந்து தற்
காலத்தில் இருக்கிற வடிவத்தை அமைத்துக் கொடுத்த பாதர்
பெஸ்கி என்ற வீரமாமுனிவர் காலத்திற்குப் பிறகு இன்று வரை
யில் சில மாற்றங்கள் தான் எழுத்துக்களில் ஏற்பட்டிருக்கின்றன.
இன்றைக்கு இருக்கிற நவீன டைப்ரைட்டர், அச்சு போன்ற
கருவிகளில் அவைகளுக்கு உதவியாக எழுத்துக்களைச் சுருக்கு
வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.



1984 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, இப்போது நாம் எழுதுகிற இந்தத் தமிழ் திரு
வள்ளுவருக்குத் தெரியாது. அவர் இப்போது வந்தால் கூட
இதைப் படிக்கச் சொன்னால் அவருக்கு படிக்க முடியாது.
காரணம் அவர்கள் காலத்தில் இந்த எழுத்துக்கள் இல்லை.
கொஞ்சம், கொஞ்சமாக மாறி இந்த நிலைக்கு நாம் வந்திருக்
கிறோம். மாறி மாறி வந்திருக்கிறோம் என்பதே இந்த மொழி
யில் தேவையான மாற்றங்கள் என்று நாம் கருதுகிறபோது நாம்
செய்து இந்த மொழியை இந்த அளவிற்கு நாம் கொண்டு வந்
திருக்கிறோம். இப்போது இருக்கிற நிலைமை டெலிபிரிண்டர்,
டைப்ரைட்டர் போன்ற கருவிகளில் சுலபமாக பயன்படுத்துகிற
அளவிற்கு இந்தச் சீர்திருத்தம் இருக்க வேண்டும். நவீன வசதி
களை பயன்படுத்துகிற அளவிற்கு இந்தச் சீர்திருத்தம் இருக்க
வேண்டும். அப்போதுதான் மொழியில் வேகமான வளர்ச்சியை
பெறமுடியும் என்பதால் நாம் இந்தச் சீர்திருத்தத்தைக்கொண்டு
வந்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல். படிக்கிறவர்களுக்குக்
கொஞ்சம் எளிதாக இருக்கும். '' கு '' எப்படி போடுகிறோமோ
அப்படித்தான் '' சு '', அப்படித்தான் '' மு '' என்று
நாம் சொல்வோமேயானால் ஒரேமாதிரியாகப்போட்டு, அந்த
18 எழுத்துக்களை எழுதிவிடுவார்கள். இல்லையென்றால்
ஒவ்வொன்றுக்கும் அதற்கு இப்படி, இதற்கு அப்படி என்று எழுது
கிறபோது 18 எழுத்துக்களை படிக்க வேண்டியவர்கள் 38 எழுத்
துக்களை, 36 எழுத்துக்கள் படிக்க வேண்டிய நிலைமைக்கு வந்து
விடுகிறார்கள். ஆகவே, தமிழை புதியதாக படிக்க விரும்பு
கிறவர்களுக்கு இவை தடைகள் போல அமைந்துகொண்டிருக்
கின்றன. ஆகவே, நாம் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரு
கிறபோது முதியோர் கல்வி, வயது வந்தோர் கல்வித் திட்டத்தை
தீவிரமாக நாம் செயல்படுத்தினோம். அப்போதே நாம் சொன்
னோம். இந்த முதியோர் கல்வி அல்லது வயது வந்தோர் கல்வி
என்பது இந்தச் சீர்திருத்தத்தின் மூலம் இன்னும் கொஞ்சம்
அதிகமான அளவிற்கு வெற்றி பெறுவதற்கு அது அடிப்படையாக
அமையும் என்று கூட சொல்லி இருக்கிறோம். தமிழ் நாட்டில்
தமிழ் தெரியாதவர்கள் 100-க்கு 52 பேர்கள், 60 பேர்கள்
இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு
பார்த்தால் கூட இந்த கேவலமான நிலையைப் போக்க இந்த
மொழி படிப்பதிலே ஏதாவது சங்கடங்கள், தடைகள் இருக்கு
மானால் அதைத் தீர்ப்பது என்பது அந்த படிக்காத மக்களுக்கு
நாம் செய்கிற ஒரு உதவியாக கூட அதைக் கருதி நாம் இதிலே
கவனம் செலுத்த வேண்டும்.

(முற்பகல் 9-10)

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழ் எழுத்து சீர்திருத்தம் சம்பந்தமாக பிற நாடுகளில் இருக்கும்
தமிழ் அறிஞர்களைக் கலந்து கொள்வது சம்பந்தமாகக் கூட
அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். நான் கேட்கவிரும்பு

வது, எழுத்து சீர்திருத்தம் என்பது மக்கள் சமுதாயத்திற்குப் பயிற்றுவிக்க வேண்டிய ஒன்று. இதுவரையிலும் எழுத்து சீர் திருத்தத்தால் ஏற்பட்டு இருக்கும் செம்மை என்ன? தமிழ் நாட்டில் மேலும் அதைச் செம்மைப் படுத்த என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? தமிழ் பேரறிஞர்களை அழைத்து கலந் தாலோசித்து அதற்கு எந்த வகையில் சிறப்புத் தரலாம் என் பதைக் கண்டறிய மாநில அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலை வர் அவர்களே, நாம் ஒரு குழுவை அமைத்து இருக்கிறோம். அதிலே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் வி. ஏ. சுப்பிரமணியம், அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் குழந்தைசாமி, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., கலை மகள் ஆசிரியர் கி.வா.ஜ. மற்றும் ஔவை நடராசன், தமிழ் வளர்ச்சி இயக்குனர் ஆகியோர் அடங்கிய குழு இருக்கிறது. நாம் அவர்களையும் கலந்து கொண்டு அவர்களுடைய கருத்துக் களையும் தெரிந்து முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம். இப்போது இருக்கும் நிலைமை நாம் ஏற்கெனவே கொண்டு வந்து இருக்கும் சீர்திருத்தத்தைக் கூட முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலைமை இருப்பதால்தான் நாம் மேற்கொண்டு எழுத்துச் சீர் திருத்தத்தைக் கொண்டு வருவதைத் தாமதப்படுத்திக்கொண்டு இருக்கிறோம். நாம் கொண்டு வந்து விடுவதில் கடினம் ஒன்றும் இல்லை.

நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு நிலையைக் குறிப் பிடுவது நல்லது என்று கருதுகிறேன். இப்போது ஜ, ஷ, ஹ, க்ஷ போன்ற எழுத்துக்கள் எலலாம் இருக்கின்றன. அந்த எழுத்துக் கள் எல்லாம் வடமொழி எழுத்துக்கள் என்று சொல்லி பெரும் பாலும் யாரும் உபயோகிப்பது இல்லை. அந்த எழுத்துக்களின் மேலேயே ஒரு காழ்ப்புணர்ச்சியை காட்டி வருவதன் மூலம் தமி ழுக்கு நாம் ஏதோ தொண்டு செய்வது போல், சேவை செய்வது போல் செய்கிறோம். வட மொழியில் பார்த்தால் அந்த எழுத்து களே இல்லை. அந்த எழுத்துக்கள் ஒலிகூறும் எழுத்துக்கள். தமிழுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்கள். தமிழ் அறிஞர் களால் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்கள். தமிழில் அதைப் பயன்படுத்துவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள். இப்படி நாம் அதை நினைப்போமானால் அந்தக் குறியீடுகள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கிறது. இகாரம், உகாரம் எல் லாம் ஒரே மாதிரியாக இருக்கிறது. அந்தக் குறியீடுகள் எல் லாம் நாம் கண்டுபிடித்ததுதான். நம்முடைய தமிழ் மொழியில் இருப்பவர்கள் கண்டுபிடித்ததுதான். ஆகவே, அந்தக் குறியீடு களையும் நாம் கவனத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சி னையைத் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு தமிழ் எழுத்து சீர்திருத்தத்திற்கு தடையாக இருப்பது எல்லாம் நம்மிடத்தில் இருக்கும் பழமை உணர்வும், பிடிவாத உணர்வும் புதுமையைப் பற்றி கவலைப்படாத ஒன்று





தான் அது. நமக்கும் நம்முடைய மொழிக்கும் இருக்கும் அந்த உறவை வைத்து இருக்கும் அந்தச் சாதாரண மக்களுக்குப் பயன் படவேண்டிய ஒரு கருவி இந்த மொழி என்பதை நாம் பரவலாக சிந்திக்காததன் விளைவுதான் இன்றைக்கு இந்த நிலைமை இருந்த வருகிறது.

மேற்கொண்டு எழுத்து சீர்திருத்தம் கொண்டு வருவது கடினம் அல்ல. இருப்பதை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு, ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டபிறகு நாம் கொண்டு வருவதுதான் நல்லது.

### திருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ்வழிப் பிரிவு வகுப்பு தொடங்கும் திட்டம்.

521—(* வினா எண். 18431) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரியில் தமிழ் வழிப் பிரிவு (Tamil Medium) வகுப்பு தொடங்கப்பெற வேண்டும் என கோரிக்கை? மனு ஏதேனும் மாணவர்களிடம் இருந்து வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கை அரசின் பரிசீலையில் உள்ளது.

### வெளிமாநிலங்களில் தொழில்கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்.

522—(* வினா எண். 21687) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்குப் பொறியியல் கல்வி படிப்பதற்குச் செல்லும் மாணவர்களுக்கு அரசு செய்யும் உதவிகள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வெளி மாநிலங் களில் தொழில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு கீழ்க் கண்ட கல்வி உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

| | இடம். | உதவித் தொகை எண்ணிக்கை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், பெங்களூர். | ஒரு வருடத்தில் ஒரு பாடப் பிரிவில் 1 மாணவர் வீதம் 8 பாடப்பிரிவுக்கும். |

[1984 மார்ச் 31

| இடம். (1) | உதவித் தொகை எண்ணிக்கை. (2) |
| --- | --- |
| 2 தேசிய சர்க்கரை பயிற்சி நிலையம், கான்பூர். | வருடத்தில் ஒரு நபர் வீதம். |
| 3 அரசினர் சுரங்கப் பயிற்சிப் பள்ளி, கொத்தகுடம். | வருடத்தில் 2 நபர்களுக்கு. |
| 4 சுரங்கப்பள்ளி, கோர மாண்டல். | வருடத்தில் 18 நபர்களுக்கு (புதியது மற்றும் புதுப்பித்தல் உட்பட). |
| 5 கடல் பொறியியல் பயிற்சி நிலையம், கல்கத்தா. | வருடத்தில் 2 நபர்களுக்கு. |
| 6 இந்திய சுரங்கப் பள்ளி, தன்பாத். | இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மாணவர்களுக்கு. |

மேற்படிக் கல்வி உதவி மாதம் ரூ. 125 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர, வெளிமாநிலங்களில், பயிலும் தமிழக மாணவர்களுக்கு (1) இயற்கை எய்திய அரசு ஊழியர்களின் மக்களுக்கான கல்வி உதவி (2) தாயகம் திரும்பியோரின் மக்களுக்கான கல்வி உதவி (3) 92 எம்.ஈ.ஆர். படி கல்வி கட்டண சலுகைகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

### ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப் பட்டறைகள்.

523—(* வினா எண். 21642) திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு, கொல்லுப் பட்டறைகள் எத்தனை ஒன்றியங்களில் இயங்குகின்றன ?

(ஆ) இதுபோல் தொழிற் பட்டறைகள் மற்ற பஞ்சாயத்து யூனியன்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 198 இடங்களி ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப்பட்டறைகள் 152 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுகின்றன.

(ஆ) அவைபோன்ற தொழிற்பட்டறைகளை மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது அமைக்கும் வாய்ப்பு இல்லை.



1984 மார்ச் 31]

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, 152 ஒன்றியங்களில் 198 தச்சு கொல்லுப் பட்டறைகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில ஒன்றியங்களில் ஊழல்கள் அந்த ஒன்றியத் தலைவர்களால் நடைபெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெற்றிருக்கிற ஒன்றியத் தச்சு கொல்லுப் பட்டறைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? அந்த ஊழல்களுக்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தச்சு கொல்லுப் பட்டறைகள் அமைக்கவேண்டுமென்று ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஒருசிலர் பணத்தை எடுத்து மோசடி செய்திருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டம் அண்ணா ஒன்றியத்தில் கூட இதைப் போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்கு மன்றத்திலே வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, இப்போது இருப்பவை தவிர வேறு ஒன்றியங்களில் இந்த தச்சு கொல்லுப் பட்டறைகளை அமைக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். நல்ல நிலைமையில் இருக்கிற ஒன்றியங்களில் கூட்டுறவு முறையில் தச்சு கொல்லுப் பட்டறைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? மேலும், இந்த தச்சு கொல்லுப் பட்டறைகளில் என்னென்ன பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன ? அவை மலிவாக கிராம மக்களுக்கு கிடைக்க அரசு குறைந்த இலாபத்தை கருதி அந்தத் தொழில்களை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த தச்சு கொல்லுப் பட்டறைகள் மூலமாகச் செய்யப்படும் பொருள்கள் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்படுகின்ற முறையில் கூட்டுறவு முறையிலே ஆரம்பிக்கப்பட்டன. இந்த பட்டறைகளுக்கு நாம் கொடுக்கும் கருவிகளின் விலை அதிகமாக இருக்கிறது. அங்கே உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் எக்னாமிக்காக, பொருளாதார ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இல்லை. ஆகவே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் பட்டறைகளே கூட பெரும்பாலும் நஷ்டத்தில் செயல்படுகின்றன. அவற்றை எப்படி இலாபகரமாகச் செயல்படச் செய்வது என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இப்போது ஆராய்ச்சிச் செய்யப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது இந்த தச்சு கொல்லுப் பட்டறைகள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று சொன்னார்கள். அங்கே இலாபகரமாக செயல்படுகின்ற தொழில்களும் இருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய உள்ளாட்சி, அரசாங்க பள்ளிகளை எடுத்துக் கொண்டால், மேசை, நாற்காலி போன்றவை

க்களை வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கிக் கொடுப்பதைவிட இந்தப் பட்டறைகளில் செய்யப்படுபவை விலை குறைவாக, இலாபகரமாக இருக்கிறது. இந்த மாதிரி கார்பண்டரி போன்ற தொழில்கள் இலாபகரமாக இருக்கும்போது, இப்படிப்பட்ட தொழில்களை நல்ல முறையில் தொடர்ந்து நடத்த அரசாங்கம் முதலீடு கொடுத்து ஊக்குவிக்க ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இவை எல்லாம் கசப்பான உண்மைகள். ஆகையால்தான் நான் அவற்றை வெளியிடாமல் கொஞ்சம் கட்டிக்காத்து, பதில் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், இங்கே உள்ள உறுப்பினர் ஒருவர் கூட இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர் இப்போது அவையில் இல்லை. அதைச் சொல்லக்கூடாது என்பதற்காக மறைத்துச் சொல்கிறேன். இந்தப் பட்டறைகள் மூலம் கிடைக்கின்ற பொருள்களை ஆங்காங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள், அரசின் சார்பிலே இருக்கின்ற மன்றங்கள் போன்றவைகளுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனாலும், அரசாங்கத்தின் மூலம் செய்யப்படுகிற பொருள்கள் எல்லாம் We must ensure the quality ஏனென்றால், குவாலிட்டி, தரம் நல்லதாக இருக்க வேண்டுமென்ற முறையில் இவை செய்யப்படுகின்றன. அதனால் விலை வெளி மார்க்கெட்டில் இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் வெளி மார்க்கெட்டில் ஏன் வாங்கக் கூடாது என்ற எண்ணம் இருக்கிறது. அந்த அடிப்படையில், நல்ல தரமான, தேவையான பொருள்களை உற்பத்திச் செய்ய முடியுமா என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற வில்லேஜ் இன்டஸ்டிரீஸ் அதிகாரிகள் மூலமாக தச்சுப் பட்டறைகள், மற்ற தொழில்கள் நடந்து வருகின்றன. ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த பல இலாக்காக்கள் போய்விட்டதைப் போல் இதையும் கவனிக்காமல் விட்டால், போய்விடும். அதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற பொறுப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. இந்த நிலையைப் போக்க, இதைச் சீர் செய்ய அமைச்சரவர்கள் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், வேறு துறைகளின் மூலம் நல்ல முறையில் அதைச் செய்யவேண்டும் என்கிற எண்ணத்தோடு, அரசாங்கம் இப்படிப் பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால்





குறைவாக அதிகாரம் இருந்தாலும், நிறைவான முறையில் அதைச் செய்ய வேண்டும் என்பதைத் தான் அரசு முக்கியமாகக் கருதுகின்றது. இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து, பல்வேறு திட்டங்களை, ஊராட்சி ஒன்றியம் மூலமாக செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பெரும் தலைவராக இருந்தவர். அவர் இப்போதுகூட தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்று விரும்பினார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) என்னிடத்திலே போட்டியிடப் போவதாகக் கூடச் சொன்னார். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களினுடைய அதிகாரங்கள் விரிவாக்கப்பட வேண்டுமென்றுகூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தச்சு, கொல்லுப் பட்டறைகள் போன்றவை 152 ஊராட்சி ஒன்றியங்களில் 198 இடங்களில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும், அதே சமயத்தில் நஷ்டம் வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் தொழிற்திறமையுள்ள வல்லுநர்களைப் போட்டு, நஷ்டம் இல்லாமல், மேலும் முன்னேறுவதற்கு, இன்னும் பல்வேறு ஒன்றியங்களிலும் புதியதாக ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இருக்கின்ற ஒன்றியங்களில் உள்ள பட்டறைகளை முதலில் லாபத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதற்குப் பிறகு தான் பாக்கி இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி ஆய்வு செய்ய முடியும்.

ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கட்டின் ஏலத்தொகை வருமானம்.

524—(*வினா எண். 21663) திரு. ரு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கட்டின் ஏலத் தொகை வருமானம் கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு குறைந்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கென்ன காரணம் ?

(இ) 1981-82, 1982-83 ஆண்டுகளுக்குக் கிடைத்துள்ள ஏல வருமானம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கெட்டின் ஒரு பகுதியில் புதியதாக கட்டிடங்கள் கட்டுவதற்காக காலி செய்ய நேர்ந்ததால் வருமானம் குறைய நேர்ந்தது.

(இ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 3,05,700.
1982-83 ஆம் ஆண்டு ரூ. 4,80,221.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த தினசரி
மார்க்கெட் வருமானம் குறைந்து போனதற்கு உரிய காரணம்,
அங்கே அதை ஏலத்தில் எடுக்க வரக்கூடியவர்கள் ஒரு கட்டாய
மாக இருந்து, ஏலத் தொகை மேலே போக முடியாமல் தடுத்துக்
கொண்டிருக்கும் நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கிறார்
கள் என்று கூறுகிறார்களே, அது உண்மையா? அப்படியானால்,
அந்த ஏலத்திற்கு கட்டுப்பாடு ஏற்படாமல், ஒவ்வொருவரும்
தனித்தனியாக ஏலம் கோரும் முறையில் ஏல ஏற்பாடுகளைச்
செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்
போதெல்லாம் அதிகமாக ஈரோட்டைப் பற்றி கவலைப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். தன்
னுடைய தொகுதி என்று இல்லாமல் மற்ற தொகுதிகளைப் பற்றி
யும் கவலைப்படுகின்ற உறுப்பினராக இருப்பது குறித்து
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அமைச்சருடைய
தொகுதி என்பதனால் கவலைப்படுகிறார்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஈரோடு நகராட்சிக்குச் சொந்தமான
ஆர். கே. வெங்கிடுசாமி சாலை தினசரி மார்க்கெட் 31—1—1981
முடிய குத்தகைதாரருக்கு விடப்பட்ட பகுதியில் இருந்து வந்த
ஒரு பகுதியை, பெட்ரோல் பங்க், பழைய பேருந்து நிலையம்,
வாழைக்காய் மார்க்கெட், கழிப்பிடம், 1981-82 ஆம் ஆண்டுக்கு
ஏலம் விடும்போது நீக்கப்பட்டது. ஆனால், மீண்டும் அந்த ஏலத்
தொகை குறைந்த காரணத்தால், மீண்டும் விடப்பட்டு, கொஞ்
சம் அதிகமாகக் கிடைத்தது. 1982-83 ஆம் ஆண்டிற்கு, 4,80,000
ரூபாய்க்கு மேல் நமக்குக் கிடைத்திருக்கிறது. வரும் ஆண்டுகளில்
பழைய நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும் என்று முயற்சி
எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஈரோடு நகரம்
சிறியதாக மாறிவிடவில்லை. ஈரோடு நகரம் பெரியதாகிக்
கொண்டிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள், மார்க்கெட்
ஏதோ சில இடங்களில் கைவிடப்பட்டு, வேறு கட்டிடங்களுக்குப்
போய்விடுவதால், வருமானம் குறைந்தது என்று சொல்கின்ற
வாதம் சரியல்ல. இன்றைக்கு அதிகப்படியான இடங்களில் இப்
படிப்பட்ட மார்க்கெட்டுகள் விஸ்தரிக்கப்பட்டு, புதியதாக
தோற்றுவிக்கப்படுகின்றன. இதற்கு அடிப்படையான காரணம்,
இதற்குச் சரியான ஏலத் தொகைக்கு எடுக்காமல், இருக்கும்
நடவடிக்கைகளை - எந்தத் தொகுதியானாலும் சரி, எந்தக்
கட்சியானாலும் சரி, எந்த நிறமானாலும் சரி, இப்படி எதுவும்
பார்க்காமல், எந்தப் பகுதியினராவது இப்படிப்பட்ட



நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா? அதற்கான நடவடிக்கைகளை எடுப்பாரா?
என்பது தான் நான் கேட்ட கேள்வியின் முக்கியமான சாராம்சம்.
அதற்கு அவர் பதில் சொல்லவில்லை. அதே சமயத்தில் இவ்வளவு
விஸ்தரிக்கப்பட்ட இந்த நகரத்தில் 4 இலட்சம் ரூபாய் தான்
வருமானம் என்றால் - வேறு எந்த ஒரு சாதாரண நகராட்சி
யிலும் கூட, அதிகமான வருமானம் வருகிறபோது, இது எப்படி
சரியாக இருக்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
இதில் தவறு ஏதாவது நடைபெற்றிருக்கிறதா என்ற ஐயப்பாட்
டில்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அப்படி தவறு
எதுவும் நடைபெறவில்லை. ஏனென்றால் பொது ஏலத்தில் விடு
கிறோம். ஓப்பன் டெண்டர், பப்ளிக் ஆக்ஷன் என்ற முறையில்
தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொது ஏலத்தில் விடும்
போது யார் வேண்டுமானாலும், அதிகமாகக் கேட்கக்கூடிய அள
விற்கு, உரிமை உண்டு. பொது ஏலத்தில் கடந்த ஆண்டை விட
குறைவாக வரும் நேரத்தில் மீண்டும் ரீ டெண்டர் என்ற
முறையில் மறு ஏலம் போடப்படுகிறது. மறு ஏலத்திலும்
குறைவாக இருந்தால் மீண்டும் ஒரு டெண்டர் என்ற முறையில்
தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். பொது ஏலம்
நடைபெறுவதால் எந்தவிதமான தவறும் ஏற்பட அங்கு வாய்ப்
பில்லை. ஆனால் அப்படி தவறாக நடந்திருக்கிறது என்று
ஆதாரபூர்வமாக என்னிடத்தில் நீங்கள் ஏதாவது ஆதாரங்கள்
கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். அதே
நேரத்தில், ஈரோடு நகராட்சியைப் பொறுத்த வரையில்
அது வளர்ந்து வருகின்ற நகரம். அதற்குக் கிடைக்கக்கூடிய
வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற முறையில் ஒருங்
கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி என்ற அடிப்படையில் பல
திட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆண்டுக்காண்டு வருமா
னம் கூடியிருக்கிறதே தவிர வருமானம் குறைவதாக இல்லை.
இதன் மூலம் ஒன்று அல்லது இரண்டு இலட்சம் ரூபாய் குறைந்
திருக்கலாமே தவிர கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ பத்து
இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் அதிகமாகியிருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, பொதுவாக
இப்படிப்பட்ட ஏலத்தில் விடுகிறபோது சிலயிடங்களில் சில
பேர்கள் தங்களுடைய ஆட்களை வைத்து கட்டுப்படுத்த சில
சூழ்நிலைகளை உருவாக்குவது பொதுவாக நடைபெறுகிற விஷ
யம். அதற்கு மாறாக, டெண்டர் கேட்பது, அதேபோல
ஏலத்தில் விடுவது இந்த இரண்டிலும் எதில் அதிகமாகக் கிடைக்
கிறதோ அதற்கு கொடுக்கும் விதத்தில் நிலையை உருவாக்கினால்
இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாது என்பதை அமைச்சர்
அவர்கள் அறிவார்களா?

[1984 மார்ச் 31

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
ஒரு சிலயிடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் கூட ஏற்படு
கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. வியாபாரிகள்
ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அங்கே கேள்வி கேட்பவர்களை
எப்படியாவது தடுத்துவிடவேண்டும் என்ற முறையில் அவர்
களைக்கூட விலைக்கு வாங்குகிற நிலை ஒரு சிலயிடங்களில் இருக்
கிறது. அப்படிப்பட்ட நிலைகள் தவிர்க்கப்படவேண்டும் என்ற
முறையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நமக்கு வரக்கூடிய
வருமானம் குறைவு என்றால் அப்போது ஏலத்தில் விடுவதில்லை.
மீண்டும் பொது ஏலத்தில் கூப்பிடுகிற ஒரு நிலையை ஏற்படுத்திக்
கொண்டிருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட நிலைகளையெல்
லாம் தவிர்க்கிற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்
கொண்டிருக்கிறது.

## அரசின் அனுமதி பெறாமல் உருவாகும் புதிய குடியிருப்புகளைத் தடுக்கும் திட்டம்.

525—(* வினா எண். 21786) திரு. எம். சின்னசாமி;
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல இடங்களில் அரசின் நகரமைப்புத் திட்ட விதி
களைப் பின்பற்றாமல், அரசின் அனுமதி பெறாமல், புதிய
குடியிருப்புகள் உருவாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை
எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) :
நகரமைப்புத் திட்ட மற்றும் கட்டிட விதிகளைப் பின்பற்றா
மலும், முன் அனுமதி பெறப்படாமலும், நகராட்சிகளில் உரு
வாகும் புதிய குடியிருப்புகள் பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்க
வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்
கெல்லாம் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு
கின்றன.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இப்போ
திருக்கிற விதிமுறைகள்படி நகரமைப்பு விதிகளை மீறினால்
சாதாரண தண்டனைதான் வழங்கப்படுகிறது. ஆகவே அப்படி
விதிமுறைகளை மீறுகிறவர்கள் மீது கிரிமினல் கோர்ட்டில் வழக்கு
தொடர்ந்து தண்டனை கொடுக்கக்கூடிய அளவிற்கு செய்யவில்லை
யென்றால் சட்டத்தைப் பற்றி கவலைப்படமாட்டார்கள்.
ஆகவே அப்படிப்பட்ட முயற்சியை அரசாங்கம் எடுக்குமா என
அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
இப்போதும் கூட கிரிமினல் வழக்குதான் போடப்படுகிறது.
கிரிமினல் கோர்ட்ஸ்-ல் தான் இவைகள் எல்லாம் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. செகன்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்
டில், யார் யார் இப்படி அனுமதி பெறாமல் இது போன்று
கட்டடங்களைக் கட்டுகிறார்களோ அவர்களுக்கு அபராதத்
தொகை அந்த வழக்கு மன்றத்தில் போடப்படுகிறது. அந்த
நிலைதான் இருந்து வருகிறது. இருக்கிற தண்டனையை அதிக
மாக்கவேண்டும் என்பதைவிட யார் யார் எந்த எந்தப் பகுதி
யில் அலுவலர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அதற்குரிய
நடவடிக்கைகளை ஒரு மாதத்தில் எடுக்காவிட்டால் அவர்கள்மீது
நடவடிக்கை எடுத்து அவர்களை தற்காலிக பணி நீக்கம் செய்கிற
அந்தத் திட்டத்தைத்தான் இப்போது அரசாங்கம் மூலம் ஆய்வு
செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இப்படி
அனுமதி பெறாமல் வீடு கட்டுபவர்களுக்கு மின்சாரம் கொடுக்கக்
கூடாது. பேரூராட்சி அல்லது நகராட்சி அப்படிப்பட்டவர்
களுக்கு குடிநீர் வழங்கக்கூடாது என்ற முறையில் விதியைத்
திருத்தினால் நிச்சயமாக அனுமதி பெற்றுச் செய்கிற நல்லதொரு
வாய்ப்பு ஏற்படும். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த வகையில்
இதற்கு ஒரு பரிகாரம் காண்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
அனுமதி இல்லாமல் கட்டக்கூடிய கட்டடங்களுக்கு மின்சாரத்
துறை நம்மைக் கேட்காமலேயே அல்லது நகராட்சிகளைக்
கேட்காமலேயே மின் இணைப்பை கொடுத்துவிடுகிறார்கள்.
அப்படிப்பட்ட நிலை போக்கப்பட வேண்டும் என்று மின்சார
வாரியத்திற்கு பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்
கிறோம். ஆகவே இதைத் தவிர்க்கிற முறையில் கண்டிப்பாக
நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதே நேரத்தில், அனுமதி
பெறாமலேயே பல்வேறு கட்டிடங்கள் பல பகுதிகளில் கட்டிக்
கொண்டிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து நாம்
'டெமாலிஷன் நோட்டீஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு
கட்டிய கட்டடங்களை எல்லாம் உடனடியாக இடித்துத் தீர
வேண்டும் என்ற அந்த அறிக்கையையும் கூட கொடுக்கி
றோம். ஆனால் கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் தடை பெற்று
வந்து விடுகிறார்கள். ஆகவே இடிக்கவும் முடியவில்லை, கட்டு
வதைத் தடுக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைதான்
ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் இருக்கிற அதி
காரிகள் இதற்கு முக்கிய காரணமாக இருக்க முடியும்.

எனவே அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஒவ்வொரு அதிகா
ரிக்கும் இந்த இந்த அதிகாரங்களைக் கொடுத்து, இன்னென்னப்
பணிகளைப் பார்க்கவேண்டுமென்ற விதியின் அடிப்படையில்
நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த
அதிகாரிகள் 'ஹாண்ட் இன்கிளவ்' என்பது போல்,

[1984 மார்ச் 31

அவர்களே இதற்கு உடந்தையாக இருக்கிறார்களோ என்ற
ஐயப்பாடு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான், அவர்கள்
மீது நடவடிக்கை எடுத்தால், கட்டிடங்களை அனுமதி
பெறாமலே கட்டப்படும் சூழ்நிலை கண்டிப்பாக தவிர்க்கப்படும்
என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 9-30)

இரவு நேரத்தில் ஓட்டப்படும் ஆம்னி பஸ்கள்.

526—(*வினா எண். 17186)—திரு. து. புருஷோத்தமன்:
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
வுக்கு விடையளிப்பாரா—

இரவு நேரத்தில் ' ஆம்னி ' பஸ்கள் ரெகுலர் சர்வீசாக
நடைபெற்று வருவதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்
துக்கு வருவாய்க் குறைவு ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்துக்கு
வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இரவு நேரத்தில் ஆம்னி
பஸ்கள் ஓட்டப்படுவதால் திருவள்ளுவர் போக்குவரத்துக்
கழகத்தின் வருவாய் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது
என்பதைப் பற்றி ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. முழு விபரங்
கள் கிடைக்கப்பெற்ற பிறகு அரசு ஒரு கொள்கை முடிவெடுக்க
உத்தேசித்துள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஆம்னி பஸ்கள் ரெகுலர் சர்வீசாக ஓடுவதால் நம்முடைய பேருந்து
கள் பாதிக்கப்படுவது நாம் அறிந்தது தான். நம்முடைய அரசே
இப்படிப்பட்ட பஸ்கள் ஓட்டுகிறவர்கள் மீது வழக்கு தொடர்ந்து,
தற்காலிகமாக அந்த பஸ்கள் ஓட்டுவதை நிறுத்தியாகிவிட்டது.
அதனால் திருவள்ளுவர் போக்குவரத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது
என்று தெரிந்துதான், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்
கிறது. ஆகவே, மீண்டும் இந்த ஆய்வு தேவையா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
ஆய்வு என்பது எந்த வகையில் நம்முடைய பேருந்துகள் சிறப்பாக
இருந்தால், அந்தப் பேருந்துகளுக்கு ஈடு செய்ய முடியும் என்ற
வகையில் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். நாம் முழுமை
யாக செய்கிற போது, பாதிப்பு இருக்குமா என்பதை ஆய்வு
செய்து, அதற்கான ஏற்பாட்டை ஒவ்வொரு இடத்திலும் செய்து
கொண்டிருக்கிறோம். ஆய்வு என்பது இரண்டு ஆண்டுகளுக்கு
பிறகு செய்து முடிப்பதல்ல. ஒவ்வொரு வழித் தடத்திற்கும்
அந்த ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை ஆங்காங்கே
எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



1984 மார்ச் 31]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது ஆம்னி பஸ்கள் ரெகுலர் சர்வீசாக ஓடிக் கொண்டு
இருக்கின்றன. அதைப் போல டூரிஸ்ட் என்று போட்டுக்
கொண்டு, ஆம்னி பஸ்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு,
திருவள்ளுவர் போக்குவரத்தை மறந்து விடுகின்ற அளவுக்கு
அந்தப் பேருந்துகளிலே பல்வேறு வசதிகளை, வீடியோ போன்ற
வசதிகளை செய்து கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய
பேருந்துகளிலும் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.
ஆனால், மக்களைக் கவரத்தக்க அளவுக்கு போட்டியாக இந்த
பஸ்களை நடத்துகிறவர்கள் செய்கிறார்கள். அதைப் போல்
டூரிஸ்ட் பஸ்களை நடத்துகிறவர்களும் செய்கிறார்கள். பெரு
மளவு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இதனால் பாதிக்கப்
பட்டிருக்கிறது என்பதை அறிந்தும், இப்படிப் பார்த்துக்
கொண்டே விடுகிறார்களே, யாருக்காக, எதற்காக என்பதை
அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
யாருக்காகவும் அல்ல ; எதற்காகவும் அல்ல. இருக்கின்ற நிலை
மையைப் பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கையை ஒவ்வொரு
வழித் தடத்திலும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரேடியாக
எல்லா இடங்களிலும் நாம் செய்துவிட முடியாது. அப்படிச்
செய்வதென்றால், ஏறத்தாழ கூடுதலாக ஒரு 150 பேருந்துகள்
ஓட்டினால் தான் நிலைமையைச் சமாளிக்க முடியும். இதை
எல்லாம் கவனத்தில் கொண்டுதான், ஒவ்வொரு வழித் தடமாக
நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். எனவே, நமது
பேருந்துகளில் முன்னேற்றம் செய்து, அவைகளைச் சட்டப்படி
தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு
இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்டப்படி எப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்
டுமோ, அப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சட்டப்படி இரண்டு
ஆண்டுகளுக்கு முன்னாலே, ஏற்கனவே அரை டஜன் ஆர்.டி.
ஓ-க்களும், சில டிராபிக் இன்ஸ்பெக்டர்களும் சஸ்பெண்ட் செய்யப்
பட்டு—இந்த மாதிரி இல்லீகலாக ஆம்னி பஸ்கள் ஓட அனு
மதித்ததால் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, 6 மாதங்கள் கழித்து
அவர்கள் மீண்டும் ரீ இன்ஸ்டேட் செய்து, அவர்கள் மீது டிபார்ட்
மெண்ட் ஆக்ஷன் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்
னார்கள். ஆனால், நான் கேட்க விரும்புவது, அன்றைக்கு
ஓடிக் கொண்டிருந்த ஆம்னி பஸ்கள் இன்றைக்கும் அன்றுள்ள
தைக் காட்டிலும் 4 மடங்குகள் அதிகமாக ஓடுகின்றதை நான்
கண்ணால் எக்மோரிலே பார்த்திருக்கிறேன். ஏன் அதன் மீது
நடவடிக்கை எடுக்கவில்லை ? ஆங்கிலத்தில் " விங்க் " என்று
சொல்லுவார்கள், அதாவது தெரிந்தும் தெரியாமல் இருக்கிற

[1984 மார்ச் 31

மாதிரி அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்களா ? இதை நான்
ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, தெரிந்தும் தெரியாதது
போல் இருக்கிறீர்களா என்று கேட்கிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்மோரிலே ஓடிக்
கொண்டிருக்கின்ற பஸ்கள் எல்லாம் ஆல் இண்டியா பர்மிட்
பஸ்கள்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் சொல்கிற மாதிரி நேஷனல்
பெர்மிட்டல்ல. அது அல்லாதது. ஆகவே நீங்கள் பார்த்தும்
பார்க்காமல் அப்படி ஏதாவது இருக்கிறீர்களா—விங்க் நடக்
கிறதா?—என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர்
அவர்களே, பார்த்த பின்பு பார்க்காமல் இருப்பது என்பது எங்
களுக்குத் தெரியாது. பார்த்தும் பார்க்காமல் இருப்பது என்பது
உங்களுக்குத் தான் தெரியும். எங்களுக்கு அது புரியாது. ஆனால்
அங்கே இருக்கின்ற நிலைமை என்ன என்று சொன்னால், அது
'' இல்லீகலாக '' இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள்.
அப்படித் தான் நினைத்து நாம் அதிகாரிகளை அனுப்பி
நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் நீதிமன்றத்திலே அவர்கள்
செய்தது சரி என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிடுகிறார்கள்.
இப்படிப்பட்ட நிலைமை பல்வேறு நேரங்களில் அரசாங்கத்திற்கு
உருவாகி இருக்கிறது. எனவே அந்த வகையில் தான், நம்
முடைய பேருந்துகளை நல்ல முறையில் கொண்டு வருவதன்
மூலமாக அதைத் தடுக்க முடியுமா என்ற முயற்சியிலே
அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு
தலைவர் அவர்கள் சொல்வது போல், '' ஆல்
இண்டியா பெர்மிட் '' அவர்களுக்கு நிறைய வந்திருக்கிறது.
அவர்கள் இந்தத் தொழிலிலே ஒரு இடையூறாக இருந்து கொண்டு
இருக்கிறார்கள்.

திரு. மீ. வின்சென்ட் : தலைவர் அவர்களே, இரவு நேரங்
களில் ஓடுகின்ற இந்த ஆம்னி பஸ்களை பயணிகள் அதிகமாக
விரும்புவதற்குக் காரணம், வீடியோக்களை வைத்து, 3 படங்
களைக் காண்பிப்பதுதான் என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா?
வள்ளுவனுக்கும் வருவாயைப் பெருக்கு, வசதி படைத்தவனாக
ஆக்குவதற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும் உள்ள
பஸ்களுக்கு வீடியோக்களை வைத்து, குறைந்தபட்சம் 2 படங்
களாவது போட்டு வருவாயைப் பெருக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அதிக தூரம் செல்லுகின்ற பேருந்துகளில் அந்த நடவடிக்கைகளை
எடுப்பதற்கான ஏற்பாடுகளை நாம் ஏற்கனவே செய்து முடித்து
விட்டோம். இரண்டு படங்களா, மூன்று படங்களா அல்லது ஒரு



1984 மார்ச் 31]

படமா என்பதைப் பற்றி, அந்த தூரத்தைப் பொறுத்து, நாம்
நடவடிக்கை எடுக்கலாம். எப்படிப்பட்ட படங்கள் காட்டப்பட
வேண்டும் என்பதற்கு அரசாங்கமே ஒரு வழிகாட்டியாக இருக்க
வேண்டும் என்ற முறையில், முறையான நல்ல படங்கள் போட
முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசு பேருந்துகளுக்கு பெருவாரியான
நஷ்டத்தை உண்டாக்குகிற முறையில் ஆம்னி பஸ் என்ற முறை
யில்எந்த நேரத்திலும் ஓடிக்கொண்டு இருக்கிறதே, அதைக் கட்டு
படுத்தி, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் அனுமதித்து, அரசுப்
பேருந்துகளுக்கு அதிகமான வருவாய் வருவதற்குரிய நடவடிக்கை
களை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
ஒரு நேரத்தை நம்மால் நிர்ணயிக்க முடியாது. காரணம்,
அவர்கள் அப்படிப்பட்ட உரிமத்தை வழங்கியிருக்கிறார்கள்.
வேண்டுமானால், ஒட்டுமொத்தமாக இந்த கனரக வண்டிகள்
இரவு நேரத்தில் ஓட்டக் கூடாது என்று நாம் தடை விதிக்கலாம்.
அப்படி விதித்தால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும்
சேர்ந்து பாதிக்கப்படும். அதற்குப் பின்பு நீங்கள் எல்லாம்
வருவதற்கு நேரம் ஆகும்.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

527—(*வினா எண். 21601) திரு பாபு ஜனார்த்தனன் :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை
அழகிரி போக்குவரத்துப் பேருந்துகள்—பயணிகள் பயணம்
செய்ய இயலாத அளவுக்குப் பழுதுகள் நிறைந்துள்ளன என்பது
அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) புதிய பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) தற்பொழுது
பேருந்துகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு சிறப்பாக
இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்
1983–84 ஆம் ஆண்டில் 60 புதிய பேருந்துகளை பழைய
பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றி வழித்தடங்களில் விட்டு
உள்ளது. மேலும் 1984–85-ல் 100 புதிய பேருந்துகள் விட
உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

[1984 மார்ச் 31

திரு. பாபு ஜனார்த்தனன் ; பேரவைத் தலைவர் அவர்
களே, இன்றையதினம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்
தில் புதிதாக பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்று மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் இன்
னும் பல இடங்களில்,—பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில்
இருந்து பிரித்த நேரத்தில், அதிலேயிருந்த பாழடிக்கப்பட்ட
பேருந்துகள் எல்லாம் இந்தப் பட்டுக்கோட்டை அழகிரி போக்கு
வரத்துக் கழகத்திற்குக் கொடுத்துவிட்ட காரணத்தால்—எங்கள்
பகுதியில் இருக்கின்ற, 203ஏ, 203-பி, 110-ஊ போன்ற பல்
வேறு பஸ்கள் இன்னும் பழுதடைந்த நிலையில்தான் ஓடிக்
கொண்டு இருக்கின்றன. நானே பிரயாணம் செய்கின்ற நேரத்
தில் நடுவழியில் நிற்கின்ற நிலைமை உருவாகக்கூடிய அளவில்
இருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பட்டுக்
கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பல்வேறு
பேருந்துகள் பல்வேறு இடங்களில் வழியில் நின்றுவிடுகின்றன.
ஆகவே எல்லாவற்றையும் துரிதமாக புதிதாக மாற்றுவதற்கு
அரசு முயற்சி செய்யுமா? என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
ஏற்கனவே 60 பேருந்துகள் அங்கே புதிதாக மாற்றியிருக்கி
றோம். மேலும் 100 பேருந்துகளை மாற்றவேண்டும் என்று
உத்தேசித்துள்ளோம். அதைப் பிரிக்கிறபோது இதற்கு
பழைய வண்டிகளாக பிரித்து விட்டார்கள் என்பது உண்மை.
எனவே தான் அந்தப் பகுதியில் மட்டும், கொஞ்சம் பழைய
பேருந்துகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அதை மிக விரை
வாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கு இருக்கிறது.
இந்த கூண்டுகள் கட்டுகின்ற கெப்பாசிட்டி மிகக் குறைச்சலாக
இருக்கின்றது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலேயும்
அது குறைவாக இருக்கிறது. அதை அதிக்கப்படுத்துவதற்கான
வாய்ப்பு நமக்கு இல்லை. வெளியிலே கொடுத்து கூண்டு
கட்டக்கூடாது என்ற காரணத்தால், படிப்படியாகச் செய்ய
வேண்டிய முயற்சியை நாம் எடுத்து வருகிறோம்.

(முற்பகல் 9-40)

திரு தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்
தின் மூலமாக புதிய பேருந்துகளை வழித் தடங்களில் விட
முடியவில்லை என்றாலும், அன்-செர்வ்ட் ஏரியாக்களிலும், அன்-
எக்கானமிக் ரூட்டுகளிலும் மக்களுடைய தேவையை கருதியும்
நிர்வாகத்தினுடைய சிக்கத்தைக் கருதியும், மினி பஸ்களை
விட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
மினி பஸ்களை ஏதோ செலவு குறைவாக ஏற்படும் என்பதற்
காக விடப்படுவதில்லை. எங்கெங்கே பெரிய பேருந்துகள்



1984 மார்ச் 31]

போக முடியாதோ அந்த இடங்களுக்குத்தான் விட வேண்டும்.
முக்கியமான இடங்களில் பேருந்து அதிகமாக விட வேண்டியது
அவசியம் என்று இருந்தால், அந்த இடத்திற்கு பெரிய பேருந்து
களை விடலாம். பெரிய பேருந்துகள் போக முடியாத நிலைமை
இருக்குமானால், மினி பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை
எடுக்கும்.

திரு பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்
களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு
புதிய பேருந்துகளை விடுவதற்கு பைனான்சியல் ஒதுக்கீடு மிக குறை
வாக இருக்கிறது என்று தகவல் வருகிறது. அவ்வாறு இல்லாமல்
நல்ல முறையில் ஒதுக்கீடு செய்து, புதிய பேருந்துகளை விட
அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர்
அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் இவ்
வளவு பேருந்துகளை மாற்றுப் பேருந்துகளாக விடலாம் என்று
நிர்ணயம் செய்திருக்கிறோம். அதிலே பட்டுக்கோட்டைக்காக
இந்த ஆண்டு 100 பேருந்துகளை நிர்ணயம் செய்திருக்கிறோம்.
இந்த 100 பேருந்துகளுக்கு மேலே கூண்டு கட்டுகிற சூழ்நிலை
இல்லாத காரணத்தினால், அந்த அளவிற்குத்தான் கெப்பாசிட்டி
இருக்கிறது என்ற காரணத்தினால் 100 என்று நிர்ணயம் செய்
திருக்கிறோம். அதிகமாகக் கூண்டு கட்டுகிற நிலைமை இருக்
குமானால், இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமாக
ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 528, 529
மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரின் வேண்டு
கோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள்
கட்டும் திட்டம்.

530—(வினா எண். 18365) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :
மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு
வீடுகள் வழங்கும்போது 1,075 ரூபாய் முதலில் அரசுக்கு கட்ட
வேண்டும் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகையில் 1,000 ரூபாயை
அரசு கடனாகக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம்.

(ஆ) பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் 'தாட்கோ' மூலம் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்படி ஒரு வீட்டுக்காகும் மொத்தச் செலவு ரூ. 4,300-ல் அரசு பங்கு ரூ. 3,225 ஆகும். பயன்பெறுபவர்களின் பங்கு ரூ. 1,075 ஆகும். இந்த பங்குத் தொகையை அவர்கள் பணமாக, உழைப்பு அல்லது தளவாடங்கள் மூலம் செலுத்தவேண்டும். மேற்படி திட்டத்தின்படி ஏற்கனவே அரசு உதவியாக ரூ. 3,225 கொடுப்பதால், மீதியைக் கடனாகக் கொடுக்கும் கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1,075 ரூபாயை பணமாகக் கட்ட வேண்டும் என்ற நிலை இருக்கிற காரணத்தினால்தான், அந்த ஏழை பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு வீடு கட்டுவதற்கு முன் வர முடியாத சூழ்நிலையை உருவாகிறது. ஆகவே, அந்த ஆயிரம் ரூபாயை எப்படியாவது கடனாகக் கொடுத்தால்தான், வீடு கட்டுவதற்கு அந்த மக்களுக்கு வாய்ப் பாக இருக்கும் என்பதால், இது மீண்டும் பரிசீலனை செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 3,225 ரூபாயை அரசு பங்குத் தொகையாகக் கொடுக்கிறோம். மீதியைக் கட னாக கொடுக்கிற கேள்விக்கு இடம் இல்லை என்பதை மறு படியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயிரத்து சொச்சம் ரூபாயை அவர்கள் கட்ட வேண்டுமானால், 10 ரூபாய் வட்டிக்கு வாங்க வேண்டும். அப் படி கட்ட முடியாது என்ற காரணத்தினால்தான், அரசாங்கம் எவ்வளவோ பணம் செலவு செய்கிறது, ஆகவே அந்த 1,075 ரூபாயில் 75 ரூபாயை பங்காக வாங்கிக் கொண்டு மீதி 1,000 ரூபாயை கடனாகக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்? ஏனென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியத்தின் மீது பேசும்போது, ஒரு வீட்டுக்கு 5,600 ரூபாய் தரப்படும் என்று சொன்னார்களே, அது உண்மையா? இந்த 4,300 உண்மையா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயிரம் ரூபாயை அதிக மாகக் கொடுக்கிற எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனால், 4,300- லிருந்து 5,600 ஆக உயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்துக் கொண் டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்



பற்றி உங்களுக்குத் தெரியும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் குற்றப்பரம்பரைச் சட்டம் இருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு அந்த சட்டம் ரத்து செய்யப்பட்டது. இன்று நல்ல பிரஜைகளாக உருவாகி வருகிறார்கள். ஏழ்மை என்பது அவர்களுடைய சமுதாயத்தில் பரம்பரையாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாக சொன்னார்களே, அதை, நாள்தோறும் உயர்ந்து வருகிற விலைவாசிகளைக் கருத்தில் கொண்டு, கூலி யையும் கருத்திலே கொண்டு, விரைவாக ஒரு கால கட்டத்தை நிர்ணயித்து, அதற்குள் அவர்களுக்கு உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

ஏனென்றால் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வந்து நேரில் பார்த்தால் தெரியும். ஏற்கெனவே கடன் வாங்கிய வர்கள் பலர் பாதி கட்டிவிட்டு அப்படியே நிறுத்தியிருக் கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு விரைவாக கொடுக்கும் வகையில் அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : விரைவாகக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் கட்டு வதற்காக மானியத் தொகை கொடுக்கிறபோது அவர்கள் 1,075 ரூபாய் கட்ட' வேண்டுமென்றும் இல்லையென்றால் அரசு அதைக் கொடுக்க இயலாது என்றும் சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திருமதி பொன்னம்மாள் சொன்னது போன்று அவர்கள் அந்த ஆயிரம் ரூபாய் கூட இல்லாத நிலையில் தான் வீடுகள் கட்டமுடியாமல் பராரியாக இருக்கிறார்கள். பிரிட் டிஷார் காலத்திலே அடக்கியொடுக்கப்பட்ட ஒரு சமுதாயம் அது. ஆகவே மானியமாகக் கொடுக்கப்படுகிற தொகையை அவர்கள் பெறுவதற்காக ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்க வேண்டு மென்று சொல்கிறோம். ஆகவே ஆயிரம் ரூபாயை அரசு நீண்ட காலக் கடனாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா? அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது திட்டவட்டமாக இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு வழங்கப்படுகிற மானியம் பற்றாத நிலையில் இந்த ஆயிரம் ரூபாயைக் கடனாகக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : இதை அரசு பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அரசியல் நிர்ணயச் சட்டத்திலே ஜாதி, இன வேறுபாடற்ற சமுதாயம் அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிற நேரத்திலே

குறிப்பிட்டு பிரமலைக்கள்ளர்கள் என்று பிரித்து அவர்களுக்கு
சலுகைகள் வழங்கப்படுகிற நிலையில்லாமல் பிற்பட்ட நிலையில்
இருக்கும் அத்தனை மக்களுக்கும் சலுகைகளை வழங்க அரசு
முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்
களே, டி. என். சி.யில் தமிழகத்திலே 70 வகுப்பினைச் சேர்ந்த
வர்கள் இருக்கிறார்கள். பிரமலைக்கள்ளர்களுக்கு 1979-80,
1980-81 ஆண்டுகளிலே 967 வீடுகள் கட்டுவதற்கு புரட்சித்
தலைவர் ஆட்சியிலே தான் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. 967
வீடுகளில் 577 வீடுகள் இப்போது கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.
இன்னும் 390 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. எல்லா சமு
தாயத்திற்கும் வீடு கட்டிக் கொடுப்பது என்பது இந்த அரசின்
பரிசீலனையில் இல்லை.

கட்டளை மதுராமாரி மங்கலம் கிராமத்திலுள்ள ஏரிக்கு
மதகு அமைக்கும் திட்டம்.

531—(*வினா எண் 17661) திரு. கே. எம். தங்கமணி :
மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் கட்டளை
மதுராமாரிமங்கலம் கிராமத்தில் உள்ள ஏரிக்கு மதகு இல்லாமல்
இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மதகு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும (ஆ) கட்டளை
கிராமம் மற்றும் அதன் சிற்றூரான மாரிமங்கலம் ஆகியவற்றிற்கு
நீர் வழங்கும் கட்டளை ஏரியில் ஏற்கெனவே ஒரு மதகு இருக்
கிறது. ஆயக்கட்டு நிலங்களுக்கு இந்த ஒரே மதகிலிருந்து நீர்
வழங்குவதில் இதுவரை எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இது ஒரு ஏரி
மட்டும் அல்லாமல் மாநிலத்திலே உள்ள பல ஏரிகள் இதுபோன்று
மதகுகள் இடிந்தும் ஓட்டையாகியும் பொதுப்பணித் துறை
பராமரிக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஷட்டர்ஸ்,
சொருகு பலகைகள் எல்லாம் சிரழிந்து இருப்பது அரசின் கவனத்
திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன்மீது அரசு
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? நீண்ட நாட்களாக இருக்
கிற பிரச்சினையாக இருப்பதால் அமைச்சர் அவர்கள் இதை
கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வரு
வார்களா ?



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
இப்படிப்பட்ட மதகுகளைப் பழுதுபார்த்தல், ஷட்டர்களைப்
பழுது பார்த்தல் போன்ற பிரச்சினைகளெல்லாம் தொன்று
தொட்டு இருந்து வருகின்றன. அவைகளை அவ்வப்போது
பொதுப்பணித் துறையின் பாசனப் பிரிவு கவனித்து நடவடிக்கை
எடுத்து வருகிறது. தற்போது ஏரிகள் பயன் படுத்தப்படக்கூடிய
நிலைமை அதிகமாக இருக்கிறது, ஒரு காலத்திலே ஏரிகள் ஒரு சில
ரால் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது
பொதுமக்களின் கையில் போய்விட்டதால் அதிகமாக பயன்
படுத்தப்பட்டு அதனால் பழுது பார்க்கவேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இயன்ற அளவுக்கு
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் அதிக அளவில்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு துறைக்கு
அறிவுறுத்தும்,

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இன்றைய
தினம் பல்வேறு இடங்களிலே மழை பெய்து ஏரிகள் நிரம்பி இருக்
கின்றன. ஆனால் மதகுகள் பழுது பார்க்கப்படாமல் இருப்பதால்
ஷட்டர்ஸ் பழுது அடைந்திருப்பதால் அதிலே உள்ள ஸ்க்ருக்கள்
சரியாக இல்லாத நிலையில் தண்ணீர் அவைகளிலே தேங்கி நிற்க
முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளையெல்லாம்
சீர்திருத்தி தண்ணீர் தேங்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து
விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய முறையிலே உடனடியாக அரசு,
நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
நான் முன்பே சொன்னதைப்போல் ஏரி பராமரிப்பு சம்பந்தப்பட்ட
பிரச்சினைகள், மதகுகள் பராமரிப்பு போன்றவைகளில் நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சொன்
னதைப் போல் இன்னும் அதிகமான அளவுக்கு அதிலே அக்கறை
செலுத்த அந்தத் துறை அறுவுறுத்தப்படும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்விலுள்ள பாசனத் திட்டங்கள்.

532—(*வினா எண் 19074) திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு
நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் ஆய்வில் உள்ள பாசனத்
திட்டங்கள் எத்தனை ?

(ஆ) வறட்சியான இப்பகுதியில் பாசனத் திட்டங்களை விரை
வாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆறு.

(ஆ) தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

[1984 மார்ச் 31

(முற்பகல் 9-50)

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய கேள்வி சத்தியமங்கலம் தொகுதியில்
ஆய்வில் உள்ள பாசனத்திட்டங்கள் எத்தனை என்று கேட்டிருக்
கிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை
வைத் தலைவர் அவர்களே, ஆறு திட்டங்கள் என்பதை பதிலில்
தெரிவித்து இருக்கிறேன்.

மதுராந்தகம் பெரிய ஏரியின் வலப்புறக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

533—(*வினா எண் 21732) திரு. எஸ். டி. உகம்சந்த் :
மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியில் வலப்புறக் கால்வாய்
அமைக்கும் பணி எப்பொழுது துவக்கப்படும் ?

(ஆ) இத் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்
பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மதுராந்தகம்
பெரிய ஏரியின் வலப்புறக் கால்வாய் அமைக்கும் திட்டம் பரி
சீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுராந்தகம் பெரிய ஏரியில் வலப்புறக்கால்வாய்
அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதற்கு எத்
தனை லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வுகள் செய்யப்பட இருக்
கின்றன. எத்தனை ஏரிகள் இதனால் அதிகமாக பாசன வசதிகள்
பெறும் என்பது பற்றி ஆய்வு ஏதாவது நடத்தப்பட்டு இருக்
கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் மதுராந்
தகத்தை சுற்றியுள்ள 31 ஏரிகளுக்கு பாசனம் அளிக்க இந்தக்
கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.
இதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த 31 ஏரிகள் உட்பட
522 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறும். அத்துடன்
1,180 ஏக்கர் நிலம் இரண்டாம் போகம் பாசன வசதி பெறும்
என்று இங்கே எனக்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் உள்ளது.
இந்தத் திட்டம் விரிவான திருத்திய மதிப்பீட்டுக்காக தலைமைப்
பொறியாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 31]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டம் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில்
சேர்க்கப்படுமா ? அதுபோல் மதுராந்தகம் பெரிய ஏரியில் தூர்
வாருவதற்கு ஏற்கனவே ஆய்வுகள் செய்யப்பட்டதா ? அந்தத்
திட்டம் எப்போது செயலுக்கு வரும் என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஏரியில் தூர் வாருவது
பற்றி இங்கே என்னிடம் தற்போது எந்த குறிப்புகளும் இல்லை.
ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி
போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற
போது 31 ஏரிக்கு இந்தக் கால்வாய் தண்ணீர் கொண்டு பயன்
பெறும் என்றும் சுமார் 1,000 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்றும்
சொன்னார்கள். இவ்வளவு சொன்னபோது எவ்வளவு ரூபாய்
அந்தத் திட்டத்திற்கு ஆய்வுக்கு ஒதுக்கினார்கள் ? எவ்வளவு
எஸ்ட்டிமேட் என்று சொன்னார்கள் ? இயற்கை சூழ்நிலையினால்
திடீர் என்று மழை பெய்தால் இந்த 31 ஏரிகளிலும் தண்ணீரை
தேக்கி வைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். ஆகவே இதை
உடனடியாக எடுத்துக்கொள்ள அரசு முன்னுரிமைக் கொடுக்குமா
என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு திட்டம் போடுகின்ற நேரத்தில்
அந்தத் திட்டத்தினால் எந்த எந்த பகுதிகள் பயன்பெறும்.
அதனால் அந்தப் பகுதியில் எவ்வளவு தூரத்திற்கு பாசன வசதி
கிடைக்கும் என்பதை பற்றி ஆரம்ப கட்ட ஆய்வு மேற்
கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில்
தான் இங்கே விடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. விரிவான
ஆய்வுக்குப் பிறகுதான் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய்
தேவை போன்ற விவரங்கள் எல்லாம் தெரியும் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயிறு வாரியத்திடமிருந்து
1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு கிடைத்த தொகை.

534—(*வினா எண். 17065)—திரு. டி. மணி : மாண்புமிகு
ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரின் கீழ் இயங்கும் கயர் போர்டி
லிருந்து (Coir Board) 1982-83ஆம் ஆண்டில் சுமார் 13
கோடி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்த
பங்கு என்ன ?

(ஆ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தேங்
காய் மட்டை நாரிலிருந்து கயிறு, கயிறுப்பாய், கயிறு மெத்தை
தயாரிக்கப்படுகிறது ? அவை எந்தெந்த கூட்டுறவு மையங்களில்
தயாரிக்கப்படுகிறது ?

(இ) அரசின் தேவைகளுக்குக் கூட்டுறவு மையங்களிலிருந்து
நேரிடையாக வாங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) தமிழ்நாட்டில்
கயிறு தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காக ஒரு மண்டல
கயிறு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தினை நிறுவிட கயிறு
வாரியம் முன்வந்துள்ளது. இந்நிலையத்தினை நிறுவுவதற்காக
1982–83 ஆம் நிதி ஆண்டில் ரூ. 50.90 லட்சம், கயிறு வாரியம்
ஒதுக்கி உள்ளது. இந்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளை
யார்பட்டி கிராமத்தில் விரைவில் அமையும். கயிறு வாரியம் ஒரு
மத்திய அரசின் நிறுவனம். இந்நிறுவனத்திற்கு மத்திய அரசு
1982-83 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கிய தொகை பற்றிய விபரம்
ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் நீலகிரி மற்றும் செங்கல்பட்டு மாவட்
டங்கள் தவிர ஏனைய 14 மாவட்டங்களில் 57 கயிறு மற்றும்
கயிறு பொருட்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு
உள்ளது.

(இ) கூட்டுறவு சங்கங்களிடமிருந்து அரசின் தேவைகளுக்கு
பொருட்களை வாங்குவதற்கு நான்காவது முன்னுரிமை இடம்
அளிக்கப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை 31-3–1987 வரை நீட்
டிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
மத்திய சர்க்காரின் கயர் போர்டின் கீழ் மாநில அரசுக்கு ஏற்
கனவே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக மாண்புமிகு அமைச்
சரவர்கள் அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே அதற்கு
மூன்னோடித் திட்டமாக விரைவில் அமையும் என்றும் சொல்லி
யிருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த மன்றத்தில் அறிவிக்கப்
பட்ட விவரம்தான் இது. அது ஆரம்பிக்கப்பட்டு உள்ளதா ?
ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணத்திலிருந்து குமரி மாவட்டத்தில் கூட்
டுறவுத் துறையின் மூலமாக இதை அபிவிருத்தி செய்வதற்கு
ஏதாவது செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?
சேலம் மாவட்டத்திலேயும் இம்மாதிரி செய்வதற்கு அரசின்
செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் நீங்கலாக மற்ற
மாவட்டங்களில் அரசின் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)





திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மற்ற மாவட்டங்களிலே அப்படி ஆரம்பிப்பதற்கான
செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரி
வித்தார்கள் ; இதைப்போன்ற கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கயிறு,
கயிறுபாய், கயிறு மெத்தை போன்றவைகள் உற்பத்தி செய்யப்
படுகின்றன. அரசின் தேவைக்கு அண்டை மாநிலங்களிலிருந்து
வரவழைக்கின்ற நிலைமையைப் போக்க வேண்டும். நம்முடைய
மாநிலத்திலேயே ஏற்கனவே சுமார் ஐம்பது இலட்சம் தொழி
லாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் தொழில் அழிந்து
விடாமல் பாதுகாப்பதற்கு, நம்முடைய மாநிலத்திலே உள்ள
கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கயிறு, கயிறுபாய், கயிறு மெத்தை
போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்காக ஒதுக்கியிருக்கின்ற
பணத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக நிதி உதவி செய்து
உதவுவதற்கு மாநிலஅரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவரவர்களே, கயிறுதொழிற் கூட்டுறவுச்
சங்கங்களைப் பொறுத்த வரை, 1979-ம் ஆண்டு வரை 10 சங்கங்
களே இருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசின் தீவிர
நடவடிக்கைகளின் பயனாக, தற்பேது 57 கயிறு தொழிற் கூட்
டுறவுச் சங்கங்கள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. குடிசைத்
தொழில் மற்றும் கிராமத் தொழிலை வளர்ச்சியடையச் செய்ய
வும், அப்பொருள்களுக்குத் தக்க மார்க்கெட் கிடைக்க வேண்டும்
என்ற நோக்கத்தோடு, அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்
களுக்குத் தேவையான பொருட்களைத் தமிழ் நாடு காதி கிராமத்
தொழில் வாரியத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றும் அரசு
ஆணையிட்டுள்ளது. காதி கிராமத் தொழில் வாரியத்தினால்
வழங்க இயலாதபோது அல்லது அவ்வாரியத்திடம் இல்லாத
பொருட்களைக் கீழ்க்கண்ட வரிசை அடிப்படையில் அந்நிறுவனங்
களிடம் வாங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது ; சிறை
மற்றும் சிறைத்துறையின்கீழ் உள்ள நிறுவனங்கள்; நவீனப் பயிற்சி
மற்றும் உற்பத்தி நிலையம், முட்டுக்காடு; அரசினால் நிர்வகிக்கப்
படும் நிறுவனங்கள், டான்சி உள்பட; கூட்டுறவு நிறுவனங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கயர்போர்டு
மூலமாகத் தென்னையிலிருந்து கயிறுப் பொருட்கள் தயாரிக்கின்ற
ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?
ஏனென்றால், செங்கற்பட்டு மாவட்டத்தில் தென்னை மரங்கள்
அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, மதுராந்தகம் வட்டத்தில்
அதிகமாக இருக்கின்றன. மேலும், அரசு
அந்த வட்டத்தைப் பின் தங்கிய பகுதியாகவும் அறிவித்திருக்கி
றது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, அங்கே கயிறு தாயாரிக்
கின்ற கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?
அதற்கான வசதிகள்

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த நாட்டிற்கு மிகத் தேவையான சங்கங்கள். இதிலே தயாரிக்கப்படும் இந்தக் கயிறு, கயிறுபாய், கயிறு மெத்தை போன்றவைகளைப் பொறுத்தவரையில், அரசுக்குத் தேவையானவற்றிற்கு முதல் முன்னுரிமை கொடுத்தால் அவை அழிந்துபோகாமல் நல்ல முறையில் நிலைமைகள் இருப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, இவைகள் தயாரிக்கின்ற பொருட்களுக்கு அரசு முதல் முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதைப் போல, காதி கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றும், அது இல்லாத சமயத்தில் நான் முன்பு சொன்ன சிறை மற்றும் சிறைத் துறையின்கீழ் உள்ள நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### 1979-80 இல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் புள்ளி விவரம்.

1—வினா எண் 1563—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ் நாட்டில் 1979–80-ல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் இவைகளின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கப்படுமா ?

**விடை—**

1979–1980-ல் நடந்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், திருட்டுகள் இவைகளின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1979 | 1980 |
|---|---|---|
| 1. கொலைகள் (Murder) .. | 953 | 1,289 |
| 2. பெருங்கொள்ளை (Dacoity) .. | 47 | 82 |
| 3. வழிப்பறிக்கொள்ளை (Robbery) | 306 | 336 |
| 4. கன்னக் களவுகள் (Burglary) | 10,289 | 10,206 |
| 5. திருட்டுகள் (Thefts) | 34,545 | 34,376 |
| 6. கற்பழிப்புகள் (Rape) .. | 98 | 151 |



### பாப்பாங்குளத்தில் சுகாதார நிலையம் திறக்கும் செயற் குறிப்பு.

2—வினா 2705—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பாப்பாங்குளத்தில் மினி ஹெல்த் சென்டர் ஒன்று திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை.

3—வினா 4038—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் மாணவர் விடுதிகள் உள்ளனவா ?

(இ) மாணவர் விடுதி இல்லாத பள்ளிகளுக்கு புதிதாக விடுதிகள் ஆரம்பிக்கப்படுமா ?

**விடை—**

(அ) 31–5–1982-ல் உள்ள நிலவரப்படி 102 மேல்நிலைப் பள்ளிகள் வடாற்காடு மாவட்டத்தில் உள்ளன.

(ஆ) இல்லை.

(இ) அரசு பள்ளிகளில் உள்ள ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தருவது ஆதி திராவிட நலத்துறை இயக்குநரின் கண்காணிப்பில் உள்ளது. மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு தனியாக விடுதி அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

[1984 மார்ச் 31

**பழனி கிழக்குப் பகுதிக்கென்று தனியாக காவல் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு.**

4—வினா 5559—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :-

(அ) பழனி கிழக்குப் பகுதிக்கென்று தனியாக காவல் நிலையம் ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழனி கிழக்குப் பகுதிக்கென்று தனியாக காவல்நிலையம் அமைக்க செயற்குறிப்பு இல்லையென்றாலும் பழனி கோவில் அடிவாரத்தில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. 1983-84-ம் ஆண்டின் பகுதி II திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டிய விளம்பரங்கள்.**

5—வினா 6172—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டிய விளம்பரங்கள் என்னென்ன செய்தித் தாள்களுக்கு கொடுக்கப்பட்டன ?

(ஆ) அதன் மூலம் ஏற்பட்ட செலவு என்ன ?

விடை—

(அ) மதுரையில் 1981—ஜனவரி திங்களில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி கீழ்க்கண்ட பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன :—

| வ.எண். | பத்திரிகையின் பெயர் (ஆங்கிலம்). |
|---|---|
| 1 | இந்து |
| 2 | இந்தியன் எக்ஸ்பிரஸ் (அனைத்துப் பதிப்புக்கள்). |
| 3 | மெயில். |
| 4 | ஆப்டர் நூன். |
| 5 | அம்ரித பஜார் பத்திரிக்கா (கல்கத்தா, லக்னோ மற்றும் அலகாபாத்). |





| | |
|---|---|
| 6 | ப்ரீ பிரஸ் ஜெர்னல் (பம்பாய்). |
| 7 | டெக்கான் ஹெரால்டு (பெங்களூர்). |
| 8 | நேஷனல் ஹெரால்டு (லக்னோ மற்றும் டெல்லி). |
| 9 | பிசினஸ் ஸ்டாண்டர்ட் (கல்கத்தா). |
| 10 | பேட்ரியட் (டெல்லி). |
| 11 | ஸ்டேட்ஸ்மேன் (கல்கத்தா மற்றும் டெல்லி). |

2. தமிழ்.

| வ.எண். | பத்திரிகையின் பெயர் (தமிழ்). |
|---|---|
| 1 | தினத்தந்தி |
| 2 | தினமணி |
| 3 | தினமலர் |
| 4 | மக்கள்குரல் |
| 5 | அண்ணா |
| 6 | மாலை முரசு |
| 7 | தினகரன் |
| 8 | முரசொலி |
| 9 | நீரோட்டம் |
| 10 | சுதேசமித்திரன் |
| 11 | மக்கள் செய்தி |
| 12 | விடுதலை |
| 13 | அலைஓசை |
| 14 | மாலைமலர் (கோவை மற்றும் சேலம்). |
| 15 | நவ இந்தியா (கோவை) |
| 16 | மதுரைமணி (மதுரை) |
| 17 | தீக்கதிர் (மதுரை) |
| 18 | தினச்சுடர் (பெங்களூர்) |
| 19 | மராத்திய முரசு (பம்பாய்) |

3. உருது.

| | |
|---|---|
| 1 | முசல்மான் (சென்னை) |
| 2 | தமிழ்நாடு டைம்ஸ் (சென்னை) |
| 3 | இட்டஹாட் (சென்னை) |

[1984 மார்ச் 31

4. சஞ்சிகைகள்.

| வ. எண். | பத்திரிகையின் பெயர் |
| --- | --- |
| 1 | கலைமகள் |
| 2 | இதயம் பேசுகிறது |
| 3 | கல்கி |
| 4 | அலிபாபா |
| 5 | தேவி |
| 6 | சாவி |
| 7 | தினமணிக்கதிர் |
| 8 | குங்குமம் |

(ஆ) விளம்பரங்கள் செய்ததற்கான மொத்தச் செலவு ரூ. 11,42,547·52.

ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை விதித்தது.

6—வினா எண். 6666—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் ரங்கநாதபெருமாள் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் கோவிலில் உள்ள ஸ்ரீரங்கம் விமானத்திற்கு மகாசம்ப்ரோக்ஷணம் செய்வதை சென்னை உயர் நீதிமன்றம் 9—2—1981 அன்று இரண்டு வாரங்களுக்கு தடை விதித்தது. பின்னர் ஆலயச் செயல் அலுவலர் தாக்கல் செய்த எதிர் மனுவினை பரிசீலித்து உயர் நீதிமன்றம் தடை நீக்கம் செய்தது. கும்பாபிஷேகம் நடத்தக்கூடாது என்றோ புறப்பாடு வகைகள் செய்யக்கூடாது என்றோ உயர் நீதிமன்றம் தடையேதும் விதிக்கவில்லை. எனவே 26—3—1981ல் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெற்று முடிந்தது.



1984 மார்ச் 31]

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள முதுமலை வன விலங்கு சரணாலயம்.

7—வினா 8250—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் இரண்டு மோட்டார் லாரிகள் உள்ளது, பணிக்காகாதென்று கண்டம் செய்யப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கண்டம் செய்யப்பட்ட லாரிகளை ஏலத்தில் விற்பனை செய்தார்களா ?

(இ) விற்பனையில் கிடைத்த தொகை என்ன ?

விடை—

(அ) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தைச் சேர்ந்த லாரிகள் எம்.டி.எண். 6412 மற்றும் எம்.டி.எண். 6648 இரண்டும் பணிக்காகாதென்று முடிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

(இ) எம்.டி.எண். 6648 என் உள்ள லாரியை விற்றதன் பேரில் ரூ. 38,156 கிடைத்துள்ளது. மேலும் இதன்மீது விற்பனை வரி மற்றும் சர் சார்ஜ் ரூ. 5,722.40-ம், ரூ. 572.35-ம் வசூலிக்கப்பட்டுள்ளது. எம்.டி.எண். 6412 எண். உள்ள லாரி ரூ. 35,555.73க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மீது விற்பனை வரி ரூ. 5,333.40-ம் மற்றும் சர்சார்ஜ் ரூ. 533.35-ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

கோபி சக்தி மெயின் ரோட்டிற்கும் கடை வீதிக்கும் இடைப்பட்ட கீரிப் பள்ளத்துக்குப பாலம் அமைக்கும் திட்டம்.

8—வினா 8653—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோபி சக்தி மெயின் ரோட்டிற்கும் கடை வீதிக்கும் இடைப்பட்ட கீரிப்பள்ளத்துக்கு பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பணி எப்போது துவங்கப்படும் ?

[1984 மார்ச் 31

விடை—

4 ஆம். கீரிப்பள்ளத்தில் கோபி சக்தி சாலையையும், பழைய மருத்துவ மனை சாலையையும் இணைக்கும் பாலம் அமைக்கும் திட்டம் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, 7—2—1981-ம் நாளிட்ட நிலை ஆணை எண். 80-ல் உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையில், இத்திட்டம் டெபாசிட் வேலையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேலைக்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் ரூ. 5.00 இலட்சத்தை 3—1—1982ல் அளிக்கப்பட்டுள்ளது. பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, வேலை நடந்துகொண்டு வருகிறது.

நத்தம் தொகுதி சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்-கம்பளியாம் பட்டி கிராமம் காட்டுப்பட்டி சாலையில் பாலம் கட்டும் திட்டம்.

9—வினா 9962—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பளியாம்பட்டி கிராமம் காட்டுப்பட்டி சாலையில் உள்ள கண்மாயில் பொது மக்கள் போக்குவரத்திற்கு கஷ்டப்படுவதால் அந்த சாலையில் பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மதுரை மாவட்டம் நத்தம் தொகுதியில் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கம்பளியாம்பட்டி காட்டுப்பட்டி சாலையில் (ஒன்றிய சாலை) கி. மீ. 2/6ல் கருவேடங்குளம் அருகில் ஒரு தாம்போகி, ரூபாய் 30,000 செலவில் கிராம தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தற்போது கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

நத்தம் தொகுதி கோசுகுறிச்சி வழியாக துவரங்குறிச்சிக்குச் செல்ல பாலாற்றின் நடுவில் பாலம் அமைக்கும் திட்டம்.

10—வினா 9967—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி கோசுகுறிச்சி வழியாக துவரங்குறிச்சிக்குச் செல்ல பாலாற்றின் நடுவில் ஒரு பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1984 மார்ச் 31]

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி பற்றாக்குறையின் காரணமாக இப்பணியை 1982-83-ஆம் ஆண்டில் இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்க முடியவில்லை. ஆயினும், இப்பணியின் முக்கியத்துவம் மற்றும் அரசின் நிதி நிலைமை ஆகியவற்றை அனுசரித்து 1983-84 ஆம் ஆண்டில் இரண்டாம் பாகத் திட்டத்தின் கீழ் இப்பணியைச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகர் பகுதியில் அருள்மிகு கங்காதீசுவரர் ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தில் வசிக்கும் குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு மனை பட்டா செய்து கொடுக்கும் திட்டம்.

11—வினா 10231—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சாலை மாநகர் பகுதியில் அருள்மிகு கங்காதீசுவரர் ஆலயத்திற்குப் பாத்தியப்பட்ட நிலத்தில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா செய்துக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

மயிலாடும்பாறை—மள்ளப்புரம் மலைச் சாலையினை அமைக்கும் செயற்குறிப்பு.

12—வினா 10839—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடும்பாறை—மள்ளப்புரம் மலைச்சாலையினை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப் பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) மயிலாடும்பாறை—மள்ளப்புரம் மலைசாலையினை அமைக்கும் பணியை 1983-84 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1984 மார்ச் 31

### வரதமாநதியிலிருந்து (பழனி) பாசன வாய்க்காலை சிமெண்ட் சிலாப் அமைத்துத்தரக் கோரிக்கை.

13—வினா 11133—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வரதமாநதியிலிருந்து (பழனி) பாசன வாய்க்கால்களை சிமெண்ட் சிலாப் அமைத்துத்தர கோரி விவசாயிகள் விண்ணப் பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எனினும், இவ்வாய்க்கால்களுக்கு லைனிங் அமைத்துத் தருவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரி வித்துள்ளார்.

### உதயனூர் ஊராட்சி கிறுகுடி கண்மாயிலுள்ள காட்டு கருவேல மரங்கள் ஏலம் விடப்படுதல்.

14—வினா 11599 —திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி ஒன்றியம் உதயனூர் ஊராட்சி கிறுகுடி கண்மாயிலுள்ள காட்டு கருவேல மரங்கள் 1981-ம் ஆண்டு ஏலம் விடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு ஏலம் விடப் பட்டது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி ஒன்றியம் உதயனூர் ஊராட்சி கிறுகுடி கண்மாயிலுள்ள காட்டு கருவேல் மரங்களை சில நபர் களால் கள்ளத்தனமாக வெட்டப்பட்டு எடுத்துச் செல்லும்போது, இளையான்குடி வட்ட கடன் துணை வட்டாட்சியரால் பிடிக்கப் பட்டு, மேற்படி வெட்டப்பட்ட மரங்கள் 4—9—1981 அன்று ரூபாய் 450-க்கு ஏலம் விடப்பட்டன. ஆனால், அந்த ஏலம் சிவகங்கை கோட்டாட்சியரால் ரத்து செய்யப்பட்டது. மீண்டும், இளையான்குடி வட்டாட்சியரால் 24—3—1982 அன்று மறு ஏலம் ரூபாய் 500-க்கு விடப்பட்டது.



1984 மார்ச் 31]

### வடமதுரை ஒன்றியத்தில் அய்யலூர்—ஆலம்பட்டி சாலையில் இருந்து ஏ. கோம்பை-பஞ்சதாங்கி வரை புதிய சாலை அமைக்கும் பணி.

15—வினா 11816—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி வடமதுரை ஒன்றியத்தில் அய்யலூர் ஆலம்பட்டி சாலையில் இருந்து ஏ. கோம்பை-பஞ்சதாங்கி வரை புதிய சாலை அமைக்கும் பணி நீண்டகாலமாக தொடங்கப் படாததற்கு காரணம் என்ன ?

விடை—

அய்யலூர்-ஆலம்பட்டி சாலையில் இருந்து பிரிந்து செல்லும் ஏ. கோம்பை-பஞ்சதாங்கி சாலை வனத்துறையினால் 1907-ல் அமைக்கப்பட்டது. வனத்துறை இந்தச் சாலையை நீண்ட காலமாக உபயோகிக்காததால், அது சீர்த்திருத்தப்படவில்லை. அய்யலூர்-செந்துரை சாலைக்குள், ஏ. கோம்பை-பஞ்சதாங்கி சாலை உள்ளதால், இதனை சீர்திருத்தவும், முன்னேற்றப் படுத்தவும் வகை செய்யும்பொருட்டு, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறைக்கு, வனத்துறை வசமிருந்து அதை மாற்று வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### சங்கரன்கோவில் நகரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்.

16—வினா 11914—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலம் அரசுக்கு தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஆனால் தமிழ் நாட்டில் தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்கான முன்னுரிமைப்பட்டியலில் சங்கரன் கோவில் இடம் பெற்றுள்ளது. அதன் முறை வரும்பொழுது அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும்.

## கிருஷ்ணராயபுரம் தொகுதி கடலூர் யூனியனை மலைப் பிரதேசமாக அறிவித்தல்.

17—வினா 12191—திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதி கடலூர் யூனியனை மலைப் பிரதேசமாக அறிவிப்பு செய்ய திருச்சி கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கன்னியாகுமரி மாவட்டம் மண்டபம் மற்றும் ராமேஸ்வரம் கடற்கரையை ஒட்டிய தீவுத் திடல்களில் பூங்காக்கள் அமைத்தல்.

18—வினா 12457—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் மண்டபம் மற்றும் ராமேஸ்வரம் கடற்கரையை ஒட்டிய மன்னார் வளைகுடா போன்ற 17 தீவுத்திடல்களில் தமிழக அரசு பூங்காக்களை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கடற்கரை மன்னார் வளைகுடாப் பகுதியில் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி கடற்கரைப் பகுதிகளை ஒட்டியுள்ள 21 சிறிய தீவுகளை உள்ளடக்கி அப்பகுதியில் காணும் அபூர்வ தாவர மற்றும் விலங்கினங்களையும், பவழப் பாறைகளையும் பேணிப் பாதுகாக்க தேசிய கடற்பூங்கா ( Marine National Park ) ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



## திருவண்ணாமலை நகருக்குப் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

19—வினா 12690—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை நகருக்குப் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—

தற்போதுள்ள அனைத்து நாடுகள் குடிநீர் மற்றும் துப்புரவு பத்தாண்டு திட்டத்தின்படி, ஒரு இலட்சம் மக்கள் தொகையுடைய முதலாம் தர நகரங்கள் அனைத்திற்கும் பாதாள சாக்கடைத் திட்டம், ஆறாவது திட்ட காலத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்குப்படி திருவண்ணாமலை நகரின் மக்கட் தொகை 89,462 ஆகும்.

திருவண்ணாமலை நகரத்திற்கு ஒரு பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. மேலும் இதைப்பற்றி திருவண்ணாமலை நகராட்சியிடமிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு எந்த கோரிக்கையும் வரவில்லை. எனினும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்நகரத்திற்குப் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பரிசீலனை செய்யப்படும்.

## திருச்செங்கோடு அடுத்த எலச்சப்பாளையம் பக்கம் உள்ள இலுப்புளி கிராமம் கூட்டுறவு விவசாய நாணய சங்கத்தில் கையாடல்.

20—வினா 12908—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் திருச்செங்கோடு அடுத்த எலச்சப்பாளையம் பக்கம் உள்ள இலுப்புளி கிராமம் கூட்டுறவு விவசாய நாணய சங்கத்தில் அடகு வைத்த ரூ. 4 இலட்சம் பெறுமான நகைகள் 1981ஆம் ஆண்டு இறுதியில் கையாடல் நடந்துள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருச்செங்கோடு வட்டம் இலுப்புளி விவசாய சேவை கூட்டுறவு சங்கத்தில் ஈடுவைக்கப்பட்ட ரூ. 4.5 இலட்சம் பெறு மான நகைகள் 27–11–1981 அன்று இரவு களவாடப்பட்ட விபரம் 28-11–1981 அன்று சேலம் மத்திய கூட்டுறவு வங்கிக்குத் தெரிந்தவுடன் 28–11–1981 அன்றே சேலம் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரிடம் புகார் செய்யப்பட்டது. காவல் துறையினரின் புலனாய்வின் போது களவாடப்பட்ட ரூ. 4.5 இலட்சம் பெறுமான நகைகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. இந்த நகைகளவு குறித்து திரு. சி. கந்தசாமி, சங்க எழுத்தர், திரு. பொன்னக்கவுண்டர் மேற்படி சங்க எழுத்தரின் மாமனார், திரு. சலதன் என்கிற முத்துராஜிக்கவுண்டர் கள வாடிய நகைகளை விற்க உடந்தையாக இருந்தவர் ஆகிய மூன்று நபர்களைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். மேற் கண்ட 3 குற்றவாளிகளின் பேரில் சங்ககிரி நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கு விசாரணை யில் உள்ளது. சங்க எழுத்தர் திரு. சி. கந்தசாமி 3-12-1981 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். கைப்பற்றப்பட்ட நகைகள் அனைத்தும் சங்ககிரி நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா அபிவிருத்திக் கழக அதிகாரி கையாடல் செய்துள்ளதாகப் புகார்.

21—வினா 12973—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா அபிவிருத்திக் கழக அதிகாரி ரூபாய் 5.00 லட்சம் வரை கையாடல் செய்துள்ளதாக 1981ஆம் ஆண்டு இறுதியில் அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாள ராக பணியாற்றிய திரு. பி. ராம்ஜி மீது குறித்த கால வைப்பு நிதியிலிருந்து 1980–81-ல் ரூபாய் 1.00 இலட்சம்





கையாடல் செய்ததற்காகவும், கணக்குகளை பொய்யாக வைத்த தற்கும், காவல் துறையினரால் 6–2–1982-ல் குற்றம் சாட்டப் பட்டு சென்னை நகர் குற்றவியல் இணை நீதிபதி, நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

பாப்பா நாயக்கன் பாளையத்தில் இருந்து ஆவரம்பாளையம் செல்லும் பாதையில், ராயன் கோயில் பள்ளத்தில் பாலம்.

22—வினா 13177—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாநகரப் பகுதியான பாப்பா நாயக்கன் பாளை யத்தில் இருந்து ஆவரம்பாளையம் செல்லும் பாதையில் ராயன் கோயில் பள்ளத்தில் பாலம் கட்ட அரசு எடுத்துக்கொண்ட நட வடிக்கைகள் என்ன ?

விடை—

கோவை மாநகராட்சிப் பகுதியான பாப்பா நாயக்கன் பாளையத்திலிருந்து ஆவரம்பாளையம் செல்லும் பாதையில் ராயன் கோயில் பள்ளத்தில் பாலம் கட்டுவது குறித்து திட்டம் ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை என ஆணையர் தெரி வித்துள்ளார்.

பள்ளிப்பட்டு வட்டத்தில் சந்தன மரங்கள் பயிரிடுதல்.

23—வினா 13630—திரு. பி. எம். நரசிம்மன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் காட்டி லாகாவிற்கு சொந்தமான நிலங்களில் சந்தன மரங்கள் பயிர் செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு கிராமத்தில் வனத் துறைக்கு சொந்தமான நிலங்களில் சந்தன மரங்கள் பயிர் செய்திட திட்டமில்லை. ஆனால் இப்பகுதியில் செம்மரங்கள் (Red Sanders) மற்றும் பல மரங்கள் நட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென திருத்தணியில் ஒரு வனச் சரகரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

### எதிர்க்கட்சிகள் நடத்திய பாரத் பந்தின் காரணமாக ஏற்பட்ட இழப்பு.

24—வினா 13678—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமீபத்தில் 19–1–1982 அன்று எதிர்க்கட்சிகள் நடத்திய பாரத் பந்தின் காரணமாக தமிழக அரசுக்கு அல்லது பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு—மாவட்டவாரியாக எவ்வளவு ?

விடை—

கடந்த 19-1-1982 அன்று நடைபெற்ற 'பந்த்' காரணமாக தமிழக அரசுக்கு அல்லது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றிய மாவட்ட வாரியான விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண் மற்றும் மாவட்டம் | பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பு. | அரசுக்கு ஏற்பட்ட இழப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சென்னை .. .. | .. | 2,000 |
| 2. செங்கற்பட்டு .. .. | .. | 400 |
| 3. தென் ஆற்காடு .. .. | 1,500 | .. |
| 4. சேலம் .. .. | .. | 1,200 |
| 5. கோயம்புத்தூர் .. .. | .. | 1,425 |
| 6. தஞ்சாவூர் .. | 16,620 | 11,550 |
| 7. திருச்சிராப்பள்ளி .. .. | 2,000 | .. |
| 8. மதுரை .. .. | 200 | 9,150 |
| 9. இராமநாதபுரம் .. | 5,400 | 1,000 |
| 10. திருநெல்வேலி .. .. | 1,000 | 2,220 |
| 11. கன்னியாகுமரி .. .. | 350 | 1,800 |
| மொத்தம் .. | 27,070 | 30,745 |

2. இந்த பந்தின்போது, தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்கள் செல்லாததன் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய நட்டம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.





### பெரிய வடவாடி இராமத்தின் அருகே நரி ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல்.

25—வினா 13806—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி பெரிய வடவாடி கிராமத்தின் அருகே நரிஓடையின் குறுக்கே ஏரி அமைத்து பாசனவசதி ஏற்பாடுசெய்ய ரூ. 2,40,000 ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் வட்டத்தில் பெரிய வடவாடி கிராமத்தின் அருகில் பானூர் ஒதுக்கக்காட்டில் நரியோடையின் குறுக்கே ஒரு ஏரி அமைப்பதற்காக திட்டம் ஒன்று 1974-ல் ரூ. 1.73 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு பிறகு பொருளாதார ரீதியில் சிக்கனமற்றதாக இருந்ததாலும், இத்திட்டத்திற்கு வேண்டிய நிலங்களைக் கையகப்படுத்துதல் கடினம் என நிச்சயிக்கப்பட்டதாலும் திட்டம் செப்டம்பர் 1979-ல் கைவிடப்பட்டது.

### சங்கராபரணி ஆற்றில் செவலபறை என்ற இடத்திலிருந்து கலையூர் வழியாக கால்வாய் வெட்டும் திட்டம்.

26—வினா 14026—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், நடுவநந்தல் கிராம அழிசல் ஏரியை நீர்த்தேக்க ஏரியாக மாற்ற சங்கராபரணி ஆற்றில் செவலபறை என்ற இடத்திலிருந்து கலையூர் வழியாக கால்வாய் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

மயிலம் ஒன்றியம் கூட்டேரிபட்டில் ஒன்றியப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு.

27—வினா 14033—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், மயிலம் ஒன்றியம், கூட்டேரிபட்டில் ஒன்றியப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இதுவரை திட்டம் ஏதும் நிலுவையிலில்லா ததால் குடியிருப்பு இல்லங்கள் கட்டும் பணியை மேற்கொள்ள விழுப்புரம் கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

முகவை மாவட்டத்தில் போலீஸ் நிலையங்களுக்கு ஜீப் சப்ளை.

28—வினா 14196—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்தில் போலீஸ் ஸ்டேஷன்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜீப் சப்ளை செய்யும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) அப்படியானால் ஜீப்புகளில் "ரிலே அண்டு ரிசீவிங் செட்" பொருத்தப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



சுக்கிரன் ஏரியில் இரண்டாம் நம்பர் கிளை வாய்க்காலை மராமத்து செய்தல்.

29—வினா 14252—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் உள்ள சுக்கிரன் ஏரியில் இரண்டாம் நம்பர் கிளை வாய்க்காலை மராமத்து செய்ய அரசு முன் வருமா ?

விடை—

சுக்கிரன் ஏரி இரண்டாம் நம்பர் கிளை வாய்க்காலை மராமத்து செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் அடைப்புக் காலத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள பாசன குளங்களின் நீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடும் செயற்குறிப்பு.

30—வினா 14359—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள பாசன குளங்களின் நீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): பொதுப் பணித் துறையைச் சார்ந்த நீர்வரத்து வாய்க்கால்களைப் பழுதுபார்க்க தனித்திட்டம் ஏதும் இல்லை. எனினும், வரத்து வாய்க்கால்கள் எங்கெங்கே பழுது அடைந்துள்ளனவோ அவை நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப விரைவு படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டத்தின்கீழ், சீர்செய்யப்படுகின் றன.

பெரியார் மாவட்டத்தில் அரசுத் துறையில் பொறியியற் கல்லூரி தொடங்கும் திட்டம்.

31—வினா 14405—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் அரசுத் துறையில் பொறியியற் கல்லூரி தொடங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில் அடுத்த கல்வி ஆண்டிலாவது செயல் படுத்தப்படுமா ?

விடை—

(அ) பெரியார் மாவட்டத்தில் அரசினர் பொறியியற் கல்லூரி தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அடுத்த கல்வியாண்டிலும் இதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

பெருந்துறை—காங்கயம் நெடுஞ்சாலையிலுள்ள இரயில்வே கேட்டிற்கு பாலம் கட்டும் செயற்குறிப்பு.

32—வினா 14407—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை வட்டம், பெருந்துறை—காங்கயம் நெடுஞ்சாலையிலுள்ள இரயில்வே கேட்டிற்கு பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.



ஓமலூர் வட்டம், சரபங்கா நதியின் குறுக்கே தெசவிளக்கு அருகில் தடுப்பு அணை கட்டும் திட்டம்.

33—வினா 14440—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சரபங்கா நதியின் குறுக்கே தெசவிளக்கு அருகில் தடுப்பு அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தெசவிளக்கு அருகில் சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பு அணை கட்டும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஏற்கெனவே தெச விளக்கு அருகில் சரபங்கா ஆற்றில் கட்டப்பட்டுள்ள அணையின் மூலம் ஆற்றில் நீர்வரத்து இருக்கும் காலங்களில் பாசனம் நடை பெற்று வருகிறது.

வடாற்காடு மாவட்டத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பங்கள்.

34—வினா 14545—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் மின் இணைப்பு கோரி பிப்ரவரி 1982 வரை வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(ஆ) அதில் விவசாயம், தொழிற்சாலை இணைப்புகள் மற்ற இணைப்புகள் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

விடை—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் மின் இணைப்பு கோரி 1982ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 55,340 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

(ஆ) இவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | (விண்ணப்பங்கள்) |
|---|---|
| 1 விவசாயம் (புதிய மற்றும் கூடுதல் விண்ணப்பங்கள்). | 49,847 |
| 2 குறைந்த மின் அழுத்தம் பெறும் தொழிற்சாலைகள் (புதிய மற்றும் கூடுதல் பளு விண்ணப்பங்கள்). | 647 |
| 3 உயர்மின் அழுத்தம் பெறும் தொழிற்சாலைகள். | 34 |
| 4 தெரு விளக்குகள் (புதிய மற்றும் கூடுதல் பளு விண்ணப்பங்கள்). | 244 |
| 5 பொது குடிநீர் விநியோகம் .. | 49 |
| 6 வீடுகள் .. .. .. .. .. | 2,222 |
| 7 வர்த்தக நிலையங்கள் .. .. .. | 142 |
| 8 குடிசைகள் .. .. .. .. | 2,147 |
| 9 தற்காலிக மின் இணைப்பு .. .. | 8 |
| மொத்தம் .. | 55,340 |

வாழைப்பந்தல் கிராமத்தில் பால் கூட்டுறவுச் சங்கத்தில் நிர்வாகிகள் மாற்றம்.

35—வினா 14656—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி வாழைப்பந்தல் கிராமத்தில் பால் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல் புரிந்துள்ள நிர்வாகிகளை மாற்றி புதிய நிர்வாகிகளை அமர்த்தும் பணி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ?



விடை—

(அ) மற்றும் (ஆ) வாழைப்பந்தல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் ஊழல் எதுவும் நடந்ததாகத் தகவல் இல்லை. அச்சங்கத்தில் தலைவர், உப தலைவர் உள்பட காலியாக இருந்த ஏழு நிர்வாக உறுப்பினர் பதவிகளுக்கு அச்சங்கத்தில் 28-6-1982-ல் நடைபெற்ற தேர்தலில் ஏழு புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமக் கிடங்குகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், மற்றும் விற்பனைக் கிடங்குகள் கட்டப்படுதல்.

36—வினா 14682—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1982-83 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமக் கிடங்குகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனைக் கிடங்குகள் முறையே எங்கெங்கு கட்டப்படும் ?

விடை—

1982-83 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழக ஆதரவு திட்டத்தின்கீழ், அடியில் கூறியுள்ள இடங்களில் 100 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 100 கிராமப்புற கிடங்குகளும், 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக 5 விற்பனைக் கிடங்குகளும் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது :—

கிராமப்புற கிடங்குகள்.

| வரிசை எண். | கூட்டுறவுச் சங்கங்களின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 நேசப்பாக்கம் .. | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம். | செங்கற்பட்டு |
| 2 கருங்குழி .. .. | ஷை | ஷை |
| 3 நல்லம்பாக்கம் .. | ஷை | ஷை |
| 4 மேலவலம்பேட்டை .. | ஷை | ஷை |
| 5 மாகாண்யம் .. .. | ஷை | ஷை |
| 6 அர்பாக்கம் .. .. | ஷை | ஷை |

[1984 மார்ச் 31

| வரிசை எண். (1) | கூட்டுறவுச் சங்கங்களின் பெயர். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|
| 7 சுமைதாங்கி .. | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம். | வட ஆற்காடு. |
| 8 பென்னத்தூர் .. | டிட்டோ | டிட்டோ |
| 9 பெரிய ஓலைப்பாடி .. | டிட்டோ | டிட்டோ |
| 10 செங்கம் .. | டிட்டோ | டிட்டோ |
| 11 கோத்தூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 12 செம்பள்ளி .. .. | டிட்டோ | டிட்டோ |
| 13 வால்கடை .. | டிட்டோ | டிட்டோ |
| 14 சாலவேடு .. .. | டிட்டோ | டிட்டோ |
| 15 கணக்கன்குப்பம் .. | டிட்டோ | தென் ஆற்காடு. |
| 16 பெரியதாச்சூர் .. | டிட்டோ | டிட்டோ |
| 17 அனுமந்தை .. .. | டிட்டோ | டிட்டோ |
| 18 பூவாளை .. .. | டிட்டோ | டிட்டோ |
| 19 தோலார் .. .. | டிட்டோ | திருச்சிராப்பள்ளி. |
| 20 வயலூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 21 அத்தியூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 22 கொப்பம்பட்டி .. | டிட்டோ | டிட்டோ |
| 23 நெய்குப்பை .. .. | டிட்டோ | டிட்டோ |
| 24 இருங்களூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 25 வி. கலிங்கமுடையாம் பட்டி. | டிட்டோ | டிட்டோ |
| 26 வெங்கடாச்சலபுரம் | டிட்டோ | டிட்டோ |
| 27 லாலாபேட்டை .. | டிட்டோ | டிட்டோ |
| 28 பூதலூர் .. .. | டிட்டோ | தஞ்சாவூர். |
| 29 வல்லம்புதூர் .. | டிட்டோ | டிட்டோ |
| 30 மண்டலக்கோட்டை | டிட்டோ | டிட்டோ |
| 31 தம்பிக்கோட்டை .. | டிட்டோ | டிட்டோ |
| 32 நடுவூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 33 வல்லூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 34 மேட்டுப்பாளையம் | டிட்டோ | டிட்டோ |
| 35 பாளையூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 36 குரும்பூண்டி .. .. | டிட்டோ | புதுக்கோட்டை. |
| 37 வடுகபட்டி .. .. | டிட்டோ | டிட்டோ |
| 38 குளத்தூர் நாயக்கர் பட்டி. | டிட்டோ | டிட்டோ |
| 39 மஞ்சபேட்டை .. | டிட்டோ | டிட்டோ |
| 40 மணமேல்குடி .. | டிட்டோ | டிட்டோ |
| 41 நீரேத்தான் .. .. | டிட்டோ | மதுரை. |
| 42 எம். கல்லுப்பட்டி .. | டிட்டோ | டிட்டோ |



[1984 மார்ச் 31

| வரிசை எண். (1) | கூட்டுறவுச் சங்கங்களின் பெயர். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|
| 43 மங்களம்கொம்பு .. | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச்சங்கம். | மதுரை. |
| 44 பண்ணக்காடு .. | டிட்டோ | டிட்டோ |
| 45 தங்கம்மாபட்டி .. | டிட்டோ | டிட்டோ |
| 46 எரியோடு .. .. | டிட்டோ | டிட்டோ |
| 47 பன்றிமலை .. .. | டிட்டோ | டிட்டோ |
| 48 பி. புதுப்பட்டி .. | டிட்டோ | டிட்டோ |
| 49 பாகநத்தம் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 50 கிச்சநாயக்கன்பட்டி .. | டிட்டோ | இராமநாதபுரம். |
| 51 சேதுநாராயணபுரம் .. | டிட்டோ | டிட்டோ |
| 52 பி. அருணாசலபுரம் | டிட்டோ | டிட்டோ |
| 53 சின்னவள்ளி குளம் | டிட்டோ | டிட்டோ |
| 54 ராஜகம்பீரம் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 55 பொட்டகவயல் .. | டிட்டோ | டிட்டோ |
| 56 செல்வநாயகபுரம் .. | டிட்டோ | டிட்டோ |
| 57 சம்பகுளம் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 58 இலத்தூர் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 59 கங்கைகொண்டான் .. | டிட்டோ | திருநெல்வேலி. |
| 60 விஜயபதி .. .. | டிட்டோ | டிட்டோ |
| 61 இறப்புவாரிபட்டர் புரம். | டிட்டோ | டிட்டோ |
| 62 மேட்டுப்பட்டி .. | டிட்டோ | டிட்டோ |
| 63 நடுவீர் பட்டி .. | டிட்டோ | டிட்டோ |
| 64 புலியூர் சாலை .. | டிட்டோ | கன்னியாகுமரி. |
| 65 திம்மன்குத்து .. | டிட்டோ | கோயம்புத்தூர். |
| 66 பருவாய் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 67 ஜமீன்காளியாபுரம் | டிட்டோ | டிட்டோ |
| 68 குருவகவுண்டபாளையம் | டிட்டோ | டிட்டோ |
| 69 அரசம்பாளையம் .. | டிட்டோ | டிட்டோ |
| 70 கோடங்கிபாளையம். | டிட்டோ | டிட்டோ |
| 71 வி. தள்ளிப்பாளையம் | டிட்டோ | டிட்டோ |
| 72 பூக்குளம் .. .. | டிட்டோ | டிட்டோ |
| 73 மலையாண்டிப்பட்டினம் | டிட்டோ | டிட்டோ |
| 74 குடிமங்களம் .. | டிட்டோ | டிட்டோ |

[1984 மார்ச் 31

| வரிசை எண். (1) | | கூட்டுறவுச் சங்கங்களின் பெயர். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|---|
| 75 | மேலக்காளிப் பாளையம். | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம். | கோயம்புத்தூர். |
| 76 | தொட்டம்பட்டி .. | ஷை | ஷை |
| 77 | வேடபட்டி .. .. | ஷை | ஷை |
| 78 | அழகப்பகவுண்டனூர் .. | ஷை | ஷை |
| 79 | அக்கரை செங்கம்பள்ளி | ஷை | ஷை |
| 80 | நல்லாம்பட்டி .. | ஷை | பெரியார். |
| 81 | கோலநல்லி குட்டப் பாளையம். | ஷை | ஷை |
| 82 | சீனாப்புரம் சல்லிப் பாளையம். | ஷை | ஷை |
| 83 | கிளிப்பாளையம் .. | ஷை | ஷை |
| 84 | பச்சம்பாளையம் .. | ஷை | ஷை |
| 85 | சேந்தி குமாரப் பாளையம். | .. ஷை | ஷை |
| 86 | என்னமங்களம் .. | ஷை | ஷை |
| 87 | எருமைக்காரன்புதூர். | ஷை | ஷை |
| 88 | அண்ணிக்கோரை .. | ஷை | நீலகிரி. |
| 89 | ஜடையலிங்கா .. | ஷை | ஷை |
| 90 | கடலூர் | கூட்டுறவு வேளாண்மை வங்கி. | ஷை |
| 91 | ஹல்லத்தி .. .. | ஷை | ஷை |
| 92 | சரஸ்வதி | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம். | ஷை |
| 93 | எஸ். கடத்தூர் .. | ஷை | சேலம். |
| 94 | போதனூர் .. .. | ஷை | ஷை |
| 95 | வெங்கரை .. .. | ஷை | ஷை |
| 96 | சுள்ளநத்தம் .. | ஷை | ஷை |
| 97 | கோத்தப்பள்ளி .. | ஷை | ஷை |
| 98 | மலையாண்டஹள்ளி | ஷை | தரும்புரி. |
| 99 | பேரிகை .. .. | ஷை | ஷை |
| 100 | அச்சல்வாடி .. | ஷை | ஷை |



1984 மார்ச் 31]

விற்பனைக் கிடங்குகள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஹரூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (1,000 மெ. டன்.). | | தருமபுரி. |
| 2 | உத்தங்கரை | ஷை | ஷை |
| 3 | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோயம்புத்தூர் (1,000 மெ. டன்). | | கோயம்புத்தூர் |
| 4 | திருமயம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (500 மெ. டன்.). | | புதுக்கோட்டை. |
| 5 | பெரம்பலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (500 மெ. டன்.) | | திருச்சிராப்பள்ளி. |

## வைகை நதியோரமுள்ள கிராமங்களுக்கு பம்பு செட் அமைத்தல்.

37 —வினா 14683 —திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை வைகை நதி ஓரமுள்ள கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்கு ஆற்று நீரை பம்பு செட் மூலம் எடுத்துச் செல்ல பம்பு செட் அமைப்பதற்குக் கடன் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1984 மார்ச் 31

காஞ்சிபுரத்தில் சாலைகளைச் சீர் செய்யத் திட்டம்.

38—வினா 14726—திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்பு
மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடை அளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சாலைகளை சீர்செய்ய ஏதேனும்
திட்டம் உள்ளதா ?

(ஆ) நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை, நகராட்சி
மூன்றும் ஒருங்கிணைந்து சாலை வசதி அளிக்கத் திட்டம் ஏதும்
வகுக்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குள் அடங்கிய நெடுஞ்
சாலைத் துறையைச் சார்ந்த சாலைகள் அனைத்தும் நெடுஞ்
சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரால் வருட பராமரிப்
பின் கீழ் ஒவ்வொரு வருடமும் படிப்படியாக நிதிநிலைக்கேற்ப
பழுது பார்க்கப்பட்டு வருகிறது. எனவே, நெடுஞ்சாலைத் துறை,
பொதுப்பணித்துறை, நகராட்சி மூன்றும் ஒருங்கிணைந்த சாலை
வசதி அளிக்கத் திட்டம் வகுக்கப்படத் தேவையில்லை எனக்
கருதப்படுகிறது.

கால்நடைகளுக்குத் தொற்று நோய்த் தடுப்பு ஊசி போடத் திட்டம்.

39—வினா 14733—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக
நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முழுமையாக எல்லா கால்நடைகளுக்கும் தொற்று நோய்த்
தடுப்பு ஊசிபோட அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

பொதுவாக, இம்மாநிலத்திலுள்ள கால்நடைகளுக்கு நோய்
ஏற்படுவதற்கு முன்னரும், நோய் ஏற்பட வாய்ப்பு உள்ள போதும்
இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலை
யத்தில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசி மருந்துகளைக் கொண்டு
அதாவது கோட் டிஸ்யூ ரிண்டர் பெஸ்ட் வேக்ஸின், டிஷ்யு
கல்ச்சர் ரிண்டர்பெஸ்ட் வேக்ஸின்களைக்கொண்டு (தொண்டை



1984 மார்ச் 31]

அடைப்பான், சப்பை நோய், அந்தராக்ஸ் போன்றவைகளுக்காக)
தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது. கோமாரி
நோய் கண்ட பகுதியில் கால்நடைகளுக்கு 'மோனோ வாலண்ட்'
கோமாரி தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது.
வெக்கை நோய்த் தடுப்புத் திட்டத்தினை செயல்படுத்தும்
வகையில், தமிழகத்திலுள்ள எல்லாக் கால்நடைகளுக்கும்
வெக்கை நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தமிழகத்
திலுள்ள உழவர் பெருமக்களின் கால்நடைச் செல்வங்களைக்
காக்கும் பொருட்டு தமிழக அரசு, இந்திய அரசின் உதவியோடு
கலப்பினக் கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படும் இடங்களான
கோவை, நீலகிரி, பெரியார், சென்னை, செங்கற்பட்டு, வட
ஆற்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, நெல்லை,
இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமாரி ஆகிய மாவட்டங்களில்
உழவர்களின் கால் நடைகளுக்கு 50 சத விகிதம் மானிய விலையில்
கோமாரி நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.

2. தென் இந்தியாவை ஒரு "நோயற்ற பகுதியாக"
அமைக்க ரூ. 41 கோடி செலவில் செயல்படுத்த மைய அரசுக்கு
ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம்
"நோயற்ற பகுதி" ஏற்படுத்தி, நோயற்ற உயிருள்ள கால்
நடைகள் மற்றும் இறைச்சியை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி
செய்வதேயாகும். இப்பகுதியிலுள்ள அனைத்து கால்நடைகளும்
வெக்கை நோய், கால் மற்றும் வாய் நோய் முதலிய தொற்று
நோய்கள் வராமல் பராமரிக்கப்படும். மேலும் நீலகிரி மாவட்டத்
தில் கால், வாய் நோயைக் கட்டுப்படுத்த ரூ. 3.12 கோடி
செலவில் ஒரு முன்னோடி திட்டம், தேசிய பால் அபிவிருத்தி
வாரியத்தால் (என்.டி.டி.பி.) செயல்படுத்தப்பட்டு, அந்நிறுவனத்
தால் நீலகிரி மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குக் கோமாரி
நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

திருவேங்கடம் பேரூராட்சியில் மருந்தகம் துவக்க செயற்குறிப்பு.

40—வினா 14792—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்
திருவேங்கடம் பேரூராட்சியில் ஒரு மருந்தகம் துவக்க அரசு
செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

விடை—

இல்லை.

[1984 மார்ச் 31

மலையூர், கானத்தூர், சுண்டிவாக்கம் மற்றும் நெடுமரம் ஆகிய அரிசன குடியிருப்புப் பகுதிகளுக்குச் சாலை வசதி.

41—வினா 14839—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியம் மலையூர், கானத்தூர், சுண்டிவாக்கம், நெடுமரம் ஆகிய அரிஜன குடியிருப்புப் பகுதிகளுக்கு சாலை வசதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் மேற்படி கிராமங்களுக்குச் சாலை வசதி அமைத்துக் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட காலனிக்குத் தேசிய கிராம வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கும் வேலைகள் இந்த நிதியாண்டில் (1982–83) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுராந்தகத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்.

42—வினா 14852—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பணி துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1984 மார்ச் 31]

மதுராந்தகத்தில் இருந்து அருங்குணம்– புளியர்ணங் கோட்டை வழியாக மினி பஸ்கள் விடுதல்.

43—வினா 14865—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்திலிருந்து அருங்குணம்-புளியர்ணங் கோட்டை வழியாக மினி பஸ்கள் விடப்படுமா?

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை மினி பஸ்கள் விடப்படுகின்றன?

விடை—

(அ) மதுராந்தகத்திலிருந்து அருங்குணம் புளியர்ணங் கோட்டை வழியாக சிறு உந்து விடும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணியிலிருந்து சோளிங்கர்வரை ஒரு சிறு உந்து விடப்பட்டுள்ளது.

சென்னையில் அண்ணா மருத்துவ மனையை மேம்படுத்தும் திட்டம்.

44 —வினா 14912 —திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னையில் உள்ள அண்ணா மருத்துவ மனையை மேம்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

விடை—ஆம்.

1. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட சிறார் பிரிவு புதிதாக ஏற்படுத்த அரசு ஒப்பளித்துள்ளது. கட்டிட வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

2. இந்திய மருந்துகளின் செயல்திறன் நோயாளிகளின் நோயின் தன்மை ஆகியவற்றை நவீன முறையில் அறிந்து திறம்பட செயல்புரிய புதியதாக உயிர் வேதியியல் (Bio-Chemistry Laboratory) மற்றும் நோய் கணிப்பியல் (Pathology Laboratory) ஆய்வுக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

[1984 மார்ச் 31

3. நுண்கதிர் (X-Ray) நிலையம் அமைக்கவும் அரசு ஒப்பளித்துள்ளது. நுண்கதிர் இயந்திரம் வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. தைலம் குடிநீர், லேகியம் முதலியவை விரைவாகவும் அதிக அளவிலும் உற்பத்தி செய்ய கொதிகலன் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. செவிலியர்கள் இந்திய மருத்துவத் துறையில் பயிற்சி பெற பயிற்சிப்பள்ளி அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

6. மருத்துவர்கள் மற்றும் மருந்தாளுநர் பயிற்சி மாணவர்கள் படித்து பயன்பெற நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

7. மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய மருந்து செய் நிலையத்தை இயந்திரமயமாக்கும் திட்டம் உள்ளது. இதற்காக ரூபாய் 8 இலட்சம் நிதி உதவி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. அரசு மொத்தம் ரூபாய் 2,96,570-க்கு கருவிகள் வாங்க ஆணை வழங்கியுள்ளது. இதில் ஒரு லட்சம் ரூபாய்க்குக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் கருவிகள் வாங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

### வேடசந்தூர் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தனியார் கடன் தள்ளுபடி.

45—வினா எண் 14954—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் தங்களது தனியார் கடன்களைத்தள்ளுபடி செய்யக்கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எவ்வளவு?



1984 மார்ச் 31]

விடை—

| | |
|---|---|
| (அ) வேடசந்தூர் வட்டத்தில் கடன்நிவாரணச் சட்டத்தின் கீழ் தங்களுடைய தனியார் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை .. .. .. .. | 842 |
| (ஆ) அதில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை (நிவாரணம் அளிக்கப்பட்டவர்கள்) .. .. .. .. | 69 |
| (இ) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை .. .. .. .. | 773 |
| (ஈ) நிவாரணம் அளிக்கப்பட்ட கடன் தொகை .. .. .. .. | 1,55,629 |

### பழனி அரசு மருத்துவமனைக்கு வாகன வசதி

46—வினா எண் 14984—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அரசு மருத்துவமனைக்குச் சொந்தமாக வாகன வசதி அரசாங்கத்தால் செய்து தரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விபத்து மற்றும் அவசர சிகிச்சைத் திட்டத்தின்கீழ் பழனி அரசு மருத்துவமனைக்கு மூன்று ஆம்புலன்ஸ் ஊர்திகளை வாங்க அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட ஊர்திகள் விபத்துக்குள்ளானோர் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படுவோர் ஆகியவர்களை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும். இந்த ஊர்திகள் ஏற்கெனவே பழனி அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டு விட்டன

[1984 மார்ச் 31

### பழனி அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை

47.—வினா 14987—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அரசு மருத்துவமனையில் 1979-80-ம் ஆண்டில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தற்பொழுது இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 117.

(ஆ) 123.

### திண்டுக்கல் மாவட்ட மருத்துவ மனையில் படுக்கைகள் வசதி

48.—வினா 14988—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் படுக்கைகள் வசதி 25 சதவீதம் உயர்த்தித் தரப்படுமா?

விடை—

திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் தற்பொழுது உள்ள 252 படுக்கைகளை மேலும் 37 சதவீதமாக உயர்த்த கட்டிட வேலைகள் கீழ்க்கண்டவாறு நடந்து கொண்டிருக்கின்றன:—

கட்டிட விபரம்.

1. 48 படுக்கைகள் கொண்ட உள்ளிருப்பு பகுதி கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது.
2. 25 படுக்கைகள் கொண்ட சித்தப் பிரிவு உள்ளிருப்புப் பகுதி வேலை தொடங்கப்பட்டுள்ளது.
3. 20 படுக்கைகள் கொண்ட குடும்பநல அறுவை சிகிச்சைக்குப்பின் தேவைப்படும் மருத்துவ கவனத்துடன் கூடிய ஓய்விற்கான பிரிவு.

இதைத் தவிர மேலும் படுக்கைகள் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு வேறு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.



1984 மார்ச் 31]

### பழனி தாலுக்காவில் எடுக்கப்பட்ட உபரிநிலம்

49.—வினா 14995—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுக்காவில் மார்ச் 1982 முடிய உபரி நிலமாக எடுக்கப்பட்ட நிலத்தின் அளவு என்ன?

(ஆ) எத்தனை பேர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது (ரெவின்யூ கிராமங்கள் வாரியாக)?

(இ) இன்னும் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக்கும் நிலங்கள் எவ்வளவு?

விடை—

(அ) பழனி தாலுக்காவில் மார்ச் 1982 முடிய உபரி நிலமாக எடுக்கப்பட்ட நிலங்களின் அளவு 7,745.845 ஏக்கர்.

(ஆ) 783 நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளவை தனியே கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

(இ) இன்னும் 4,567.385 ஏக்கர் நிலம் பிரித்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

### பழனி தாலுக்காவில் கிராம வாரியான உபரி நிலம் வழங்கியவர்களின் எண்ணிக்கை.

| கிராமத்தின் பெயர். (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. அமரபூண்டி | 4 |
| 2. அய்யம்புள்ளி | 2 |
| 3. அரசப்பிள்ளைப்பட்டி | 20 |
| 4. ஆண்டிப் பட்டி | 212 |
| 5. பாலசமுத்திரம் | 5 |
| 6. போடுவார்ப்பட்டி | 22 |
| 7. சின்னக்காம்பட்டி | 2 |
| 8. சத்திரப்பட்டி | 7 |
| 9. சித்திரகுளம் | 1 |
| 10. சின்னக்கலையம்புத்தூர் | 3 |
| 11. தாசரிப்பட்டி | 11 |
| 12. கிழக்கு ஆயக்குடி | 5 |
| 13. எல்லப்பட்டி | 7 |

| கிராமத்தின் பெயர். (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| 14. கொழுமகொண்டம் .. .. .. | 1 |
| 15. எ. கலையம்புத்தூர் .. .. .. | 22 |
| 16, கல்லிமந்தையம் .. .. .. .. | 5 |
| 17. கோரிக்கடிவு .. .. .. .. | 2 |
| 18. கல்லுப்பட்டி .. .. .. .. | 3 |
| 19. கோவிலம்மாப்பட்டி .. .. .. | 15 |
| 20. கே. கீரனூர் .. .. .. .. | 4 |
| 21. கோட்டத்துரை .. .. .. .. | 20 |
| 22. கொத்தயம் .. .. .. .. | 2 |
| 23. கேதையிருப்பு .. .. .. .. | 26 |
| 24. கோதைமங்கலம் .. .. .. .. | 15 |
| 25. காவலம்பட்டி .. .. .. .. | 12 |
| 26. இரவிமங்கலம் .. .. .. .. | 1 |
| 27. இடையகோட்டை .. .. .. | 22 |
| 28. மரிச்சிலம்பு .. .. .. .. | 15 |
| 29. மேலக்கோட்டை .. .. .. .. | 7 |
| 30. மானூர் .. .. .. .. .. | 10 |
| 31. மேல்கரைப்பட்டி .. .. .. .. | 8 |
| 32. முத்துநாயக்கன்பட்டி .. .. .. | 4 |
| 33. ஒட்டன்சத்திரம் .. .. .. .. | 1 |
| 34. புளியம்பட்டி .. .. .. .. | 89 |
| 35. பருத்தியூர் .. .. .. .. | 2 |
| 36. பொருளூர் .. .. .. .. | 24 |
| 37. புளியமரத்துக்கோட்டை .. .. | 1 |
| 38. பெரியம்மாபட்டி .. .. .. | 28 |
| 39. புன்கமுத்தூர் .. .. .. .. | 56 |
| 40. ரெட்டியப்பட்டி .. .. .. .. | 1 |
| 41. ராஜாம்பட்டி .. .. .. .. | 15 |
| 42. ரெட்டயம்பாடி .. .. .. .. | 6 |
| 43. தெற்கு தாதநாயக்கன்பட்டி .. .. | 5 |
| 44. சுக்கமநாயக்கன்பட்டி .. .. .. | 6 |
| 45. தொப்பம்பட்டி .. .. .. .. | 14 |
| 46. தும்பலப்பட்டி .. .. .. .. | 23 |
| 47. தட்டான்குளம் .. .. .. .. | 1 |
| 48. தாழையூத்து .. .. .. .. | 10 |
| 49. தாமரைக்குளம் .. .. .. .. | 3 |
| 50. விருப்பாட்சி .. .. .. .. | 1 |
| 51. வாகரை .. .. .. .. .. | 1 |
| 52. மேற்கு ஆயக்குடி .. .. .. .. | 3. |





### பழனியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவ, மாணவியருக்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சிப்பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு

50—வினா 14736—திரு. எஸ். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள பழனி நகரில் ஆதி திராவிட பழங்குடி இன மாணவர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு, சுருக்கெழுத்து கற்றுக்கொடுக்கும் பயிற்சி நிலையம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இனிமேல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவ மாணவியருக்குத் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்தில் இலவசமாகப் பயிற்சி அளிக்கும் நிலையம் எதுவும் அரசினரால் நடத்தப்படுவதில்லை. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் தனியார் பயிற்சி நிலையங் களில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவ மாணவியர்க்கு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயிற்சிக் காக உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகைக்காக, பழனியில் உள்ள பதினாறு தனியார் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவியரிடமிருந்து அப்பயிற்சி நிலையங்கள் மூலம் விண்ணப்பங்கள் ஏதும் இதுகாறும் வரப்பெறவில்லை. மனுக் கள் வரப்பெறின் இது குறித்து உகந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் தாலுக்காவில் மதிகெட்டான் ஓடையில் அணை கட்டுதல்

51—வினா 15040—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் தாலுக் காவில் மதிகெட்டான் ஓடையில் அணை கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 31

### விளவங்கோடு தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்

52—வினா 15041— திரு. டி. மணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் 1981-82-ல் கிராமப்புற வீடு கட்டும் சொசைட்டி மூலம் ஆதிதிரா விடர்களுக்கு எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டது ?

விடை—

117. இவற்றில் 103 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### கல்விராயன் மலைப்பகுதி மறு அளவு (ரீ சர்வே) செய்யும் நோக்கம்.

53—வினா 15083— திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்விராயன் மலைப் பகுதி மறு அளவு (ரீ சர்வே) செய்யும் நோக்கம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ரீ சர்வே செய்யப்படும் ?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்ட கல்விராயன் மலைப் பகுதி ஏற்கனவே மறு நிலஅளவை (ரீ சர்வே) செய்யப்பட்டு, அது தொடர்பான பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

### கல்லுப்பட்டி ஒன்றியத்தில் கான்கிரீட் டேங்குகள் கட்டி குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு.

54—வினா 15191— திரு. ஓ. ரா. முத்தையா: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஒன்றியத்தில் கான்கிரீட் டேங்குகள் கட்டி குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1984 மார்ச் 31]

விடை—

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கான்கிரீட் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுடன் கூடிய 12 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் 7 திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள 5 திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### தேனி அரண்மனைப்பதூர்— ஸ்ரீரங்கபுரம் சாலையில் பெரியாற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு.

55—வினா 15223— திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி அரண்மனைப்பதூர்—ஸ்ரீரங்கபுரம் சாலையில் பெரியாற்றின் குறுக்கேயுள்ள குறுகிய பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

விடை—

இப்பணி அரசின் ஒப்புதல் பெற்ற எந்தப் பணியிலும் இடம் பெறவில்லை. ஆனால் இப்பணியினை 1983-84-ம் ஆண்டில் பாகம் II மாநிலச் சாலைகள் திட்டத்தில் மாவட்ட இதர சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்வது சம்பந்த மாகப் பரிசீலிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட் டிருக்கிறது.

### இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பளிக்க கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு.

56—வினா 15284— திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பளிக்க கூட்டுறவு, நூற்பாலைகள் அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு எனத் தனியாகக் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் இல்லை. ஆனால் புதிதாக நிறுவ இருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் தேவைப்படும் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிப்பதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரிவாக்கம் செய்யப்படும் வேலூர் மற்றும் சேலம் கூட்டுறவு நூற்பாலைகளிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

### தேவலா கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

57—வினா 15297—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) நீலகிரி மாவட்டம் தேவலா கிராமம் 'ஏ' ரோடு சர்வே 129-6, 129-5-ல் குடியிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு அந்நிலங்களை வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா.

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவலா கிராமம் எண். 129-5 மற்றும் 129-6-ல் உள்ள நிலங்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் விவசாயம் செய்து வருவதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் தெவித்துள்ளார்.

### வீரசிகாமணி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை.

58—வினா 15305—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் ஒன்றியம் வீரசிகாமணி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?



தமிழ்நாடு ஆவணக்காப்பகம் சென்னை-600 008. 136251



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

### தமிழக அரசால் வழங்கப்படும் உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை.

59—வினா 15319—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் வழங்கப்படும் உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை 1979-80, 1980-81, 1981-82 ஆண்டுகளில் பெற்றவர்கள் எண்ணிக்கை என்ன?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு

விடை—

(அ) மற்றும் (ஆ):

| வருடம். (1) | உதவித்தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை. (2) | வழங்கப்பட்ட தொகை. (3) ரூபாய். |
|---|---|---|
| 1979-80 | 9,017 | 60,72,453.25 |
| 1980-81 | 12,145 | 1,09,80,621.35 |
| 1981-82 | 12,040 (31-3-1982 முடிய). | 1,59,60,277.00 |

### முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை.

60—வினா 15321—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் வழங்கப்படும் முதியோர் உதவித் தொகை 1979-80, 1980-81, 1981-82 ஆண்டுகளில் பெற்றவர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

[1984 மார்ச் 31

விடை—

(அ) மற்றும் (ஆ) :

| வருடம். | பயன டைந்த நபர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய். |
| 1979-80 | 73,442 | 1,90,67,413.95 |
| 1980-81 | 95,663 | 2,48,23,972.37 |
| 1981-82 | 1,06,978 | 3,07,50,973.16 |

## ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகள்.

61—வினா 15330— திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1981 ஆம் ஆண்டு டிசம்பர் வரை ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் எத்தனை ?

விடை—

48,142

## உசிலம்பட்டி வட்டம், வண்டப்புலி மற்றும் வேப்பம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு பாசனக் கண்மாய்.

62—வினா 15345— திரு. இரா. முத்தையா : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வண்டப்புலி, வேப்பம்பட்டி ஆகிய இரு கிராமங்களுக்கும் சேர்ந்த ஒரே பாசனக் கண்மாய் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இரு கிராமங்களுக்கும் தனித்தனியாக ம ட அமைக்கப்படுமா ?



1984 மார்ச் 31]

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்கண்மாயின் கீழுள்ள அனைத்து ஆயக்கட்டு நிலங்
களும் பாசனம் பெற ஏற்கனவே இரண்டு மடைகள் உள்ளன.
இதன் மூலம், கடந்த ஐந்து பசலி ஆண்டுகளில், வறட்சி ஆண்
டான பசலி 1390, தவிர, மற்ற ஆண்டுகளில் இதன் ஆயக்கட்டு
நிலங்கள் அனைத்திலும் பயிர் செய்யப்பட்டுள்ளது. எனவே,
இக்கண்மாய்க்கு மேலும் ஒரு மடை தேவையில்லை. இப்போ
துள்ள நிலையே தொடரப்படும்.

## மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கும் உரிமை.

63—வினா 15349— திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் வெட்டி எடுக்கும் உரிமை எத்தனை பேருக்கு குத்தகையாகத் தரப்பட்டுள்ளது ?

(ஆ) அவர்கள் ஆண்டுக்கு எத்தனை டன் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கிறார்கள் ?

(இ) அவ்வாறு வெட்டி எடுக்கும் கல்லை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வருகிறார்களா ? அல்லது அங்கேயே தொழிற்சாலை வைத்து நடத்துகிறார்களா ?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுக்கும் குத்தகை உரிமை நான்கு பேருக்கு தரப்பட்டுள்ளது.

(ஆ) அவர்கள் 1981 ஆம் ஆண்டு 357 ஆயிரம் மெட்ரிக் டன் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுத்துள்ளனர்.

(இ) வெட்டியெடுக்கப்படும் சுண்ணாம்புக்கல் திருச்சி
ராப்பள்ளி, சேலம் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்
றது. தவிர சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு மதுரை மாவட்டத்
திலேயே சொந்தத் தொழிற்சாலை நடத்துகின்றார்கள்

[1984 மார்ச் 31

### இலாவட்டம் கிராமத்தில் ஆதிதிராவிட முன்னாள் இராணுவத்தினர் நிலத்திற்குப் பட்டா.

64—வினா 15460—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா:—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிலா
வட்டம் கிராமத்தில் ஆதி திராவிட முன்னாள் இராணுவத்தினர்
தாங்கள் அனுபவிக்கும் நிலத்திற்கு பட்டா கோரியுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் பட்டா எப்பொழுது வழங்கப்படும்.

விடை—

(அ) மற்றும் (ஆ) : திரு. கெங்கன் என்ற முன்னாள்,
இராணுவ வீரர் ஒருவர் மதுராந்தகம் வட்டம், சிலாவட்டம்
கிராம மேய்க்கால் புறம்போக்கு சர்வே எண். 334 மொத்த
விஸ்தீரணம் 40.65 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் நிலம் தன் பெயரில்
நிலப் பட்டா கோரி விண்ணப்பித்துள்ளார் என்றும், இவரைத்.
தவிர இன்னும் 19 நபர்கள் இந்த நிலத்தில் 1390-ம் பசலியில்
இருந்து ஆக்கிரமனம் செய்து வருகின்றனர் என்றும் செங்கல்
பட்டு மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி
நிலம் கிராமக் கால்நடைகளின் மேய்ச்சலுக்குத் தேவைப்படுகிறது
என்றும், நீர்ப்பிடிப்புப்பகுதி என்றும் யாருக்கும் அதை ஒப்படை
செய்ய வேண்டாமென்றும் அந்தக் கிராம மக்கள் மற்றும் மது
ராந்தகம் பஞ்சாயத்து யூனியன் ஆணையரும் ஆட்சேபனை தெரி
வித்துள்ளார்கள். ஆனால் மேற்படி ஆட்சேபனைகள் காலங்
கடந்து வந்தவையென்றும் ஆக்கிரமனதார்கள் தலா ரூ. 500
வீதம் மேற்படி நிலத்தை செப்பனிடச் செலவு செய்துள்ளதாக
வும் கிராமத்தில் போதிய அளவு கால் நடைகளுக்கு மேய்க்கால்
வசதி உள்ளதெனவும் இந்த நிலத்தை ஒப்படை செய்தால் எவ்
விதப் பாதிப்பும் ஏற்படாது எனவும், மேற்படி நிலம் மேடான
பகுதியாக உள்ளதால் நீர்ப்பிடிப்புக்கு இடமில்லையெனவும்,
ஆகையால் ஆட்சேபனைகள் ஆதாரமற்றவையெனவும் மது
ராந்தகம் வட்டாட்சியர் தெரிவித்துள்ளதாக மாவட்ட அதிகாரி
கூறியுள்ளார்.

மேலும் மேற்படி நிலத்தில் மொத்தம் 20 ஆக்கிரமனங்கள்
உள்ளதாகவும், ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருவதாகவும் மதுராந்தகம் வட்டாட்சியரின் அறிக்கையைபெற்ற
உடன் ஒப்படை சம்பந்தமான மேல்நடவடிக்கை எடுக்கப்படும்
எனவும் செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்
துள்ளார்.



1984 மார்ச் 31]

### சரவணபுரத்தில் புதிய நீர்ப்பாசன கண்மாய் வெட்டுவதற்கான செயற்குறிப்பு.

65—வினா 15473—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள உப்பாற்றின் குறுக்கே, சரவணபுரத்தில் புதிய நீர்ப்பாசன கண்மாய் வெட்டுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ரூ. 5 இலட்சம் செலவில் இத்திட்டத்தை மேற் கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (I.R.D.P.) ஒட்டப்பிடாரம் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்.

66—வினா 15479—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (I.R.D.P.) 1981—82-ல் ஒட்டப்பிடாரம் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் விவரம் என்ன ?

(ஆ) அதற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

(இ) அதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

[1984 மார்ச் 31

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் 1981-82-ல் ஒட்டப்பிடாரம் தொகுதியில் கீழ்க் கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அத்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| (1) | கயத்தாறு வட்டம். (2) | ஒட்டப்பிடாரம் வட்டம். (3) | மொத்தம் (ஒட்டப்பிடாரம் தொகுதி). (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. வேளாண்மைத் திட்டம் : | | | |
| 1. வண்டிமாடு வாங்க | 22,613 | 39,476 | 62,089 |
| 2. விசைத் தெளிப்பான் | 906 | 4,749 | 5,655 |
| 3. கைதெளிப்பான் | 2,442 | 2,569 | 5,011 |
| 4. தென்னங்கன்றுகள் | 3,656 | 2,206 | 5,862 |
| 5. விவசாயக் கருவிகள் | 1,515 | 4,650 | 6,165 |
| 6. திட்டத்தில் பயனடைந்தோர் எண்ணிக்கை. | 332 | 423 | 755 |
| 2. கால்நடை பராமரிப்பு— | | | |
| 1. கறவை மாடுகள் வாங்க | 6,50,900 | 3,87,279 | 10,38,179 |
| 2. ஆடுகள் வாங்க | 1,38,620 | 36,250 | 1,74,870 |
| 3. பயனடைந்தோர் எண்ணிக்கை | 1,159 | 609 | 1,768 |
| 3. சிறு பாசனம்— | | | |
| 1. புதிய கிணறுகள் | 12,093 | 10,000 | 22,093 |
| 2. கிணறுகள் தோண்ட, நீர் இறைக்கும் எஞ்சின் வாங்க | 4,000 | 4,000 | 8,000 |
| 3. பயனடைந்தோர் எண்ணிக்கை | 7 | 6 | 13 |
| 4. தொழில் துறை— | | | |
| 1. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்உதவி | 1,81,500 | 1,81,500 | 3,63,000 |
| 2. சுய வேலைவாய்ப்புத் திட்ட பயிற்சியாளர் களுக்கும் கிராம கைவினைஞர்களுக்கும் உதவி | 26,090 | 20,468 | 46,558 |
| 3. பயனடைந்தோர் எண்ணிக்கை | 258 | 254 | 512 |



1984 மார்ச் 31]

## அரியலூர் கலைக்கல்லூரியில் பி.காம் வகுப்புகள் ஆரம்பித்தல்.

67—வினா 15485—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பி. காம் வகுப்புகள் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## அரியலூரில் பெண்கள் பாலிடெக்னிக் அமைக்க திட்டம்.

68—வினா 15486—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரியலூரில் ஒரு பெண்கள் பாலிடெக்னிக் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காததற்கு நீதிமன்றத்தில் வழக்கு.

69—வினா 15528—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) கடந்த ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்பதற்காக யாரேனும் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர் வழக்கு மன்றம் சென் றிருக்கின்றனர் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 38 பேர்.

வடாற்காடு மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை.

0—வினா 15598— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை பேர் தங்கி இருக்கிறார்கள் ?

விடை—

இலங்கையிலிருந்து 1983 தாயகம் திரும்பிய குடும்பங்கள் கீழ்கண்டவாறு வட ஆற்காடு மாவட்டத்தில் தங்கியிருக்கிறார்கள் :—

வட ஆற்காடு மாவட்டத்தில் மறுவாழ்வு உதவி பெற்றவர்கள் —

| | | |
|---|---|---|
| (1) வணிகக் கடனுதவி அளிக்கப்பட்ட குடும்பங்கள் | .. | 582 |
| (2) நூற்பாலையில் வேலையில் அமர்த்தப் பட்ட குடும்பங்கள் | .. | 111 |
| (3) இராணிப்பேட்டையில் உள்ள தொழிற் பேட்டையில் வேலையில் அமர்த்தப் பட்ட குடும்பங்கள் | .. | 60 |
| (4) நிலக்குடியேற்றத் திட்டத்தில் அமர்த் தப்பட்ட குடும்பங்கள் | .. | 106 |
| (5) சர்க்கரை ஆலைகளில் வேலையில் அமர்த்தப்பட்ட குடும்பங்கள் | .. | 102 |
| (6) கோழிப் பண்ணை திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் | .. | 49 |
| மொத்தம் | .. | 1,010 |
| இதர மாவட்டங்களில் வணிகக் கடன் உதவி பெற்ற பின் வட ஆற்காடு மாவட்டத்தில் வந்து குடியிருப்பவர்கள் | .. | 973 |
| ஆக மொத்தம் | .. | 1,983 |



கதர் வாரியத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு.

71—வினா 15613— திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

கதர் வாரியத்தின் மூலம் 1981-82 ஆம் ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

விடை—

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கி வரும், தமிழ்நாடு மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையத்தின் மூலமாக தும்பு மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு 1981-82-ம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தும்பின் மதிப்பு ரூ. 28.25 இலட்சமாகும். வேறு எந்தப் பொருளும் இவ்வாரியத்தின் மூலம் ஏற்றுமதி செய்வது இல்லை.

விளவங்கோடு தாலுகாவில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க செயற்குறிப்பு.

72—வினா 15627— திரு. டி. மணி : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## அரசு கலைக் கல்லூரிகளில் மாற்று முறை (Shift System).

73—வினா 15656—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இம் மாநிலத்தில் 1982ல் அரசு கலைக் கல்லூரிகள் எவற்றிலேனும் மாற்றுமுறை (Shift System) ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் ?

விடை—

(அ) இவ்வாண்டு (1982-83-ல்) அரசு கல்லூரிகள் எவற்றிலும் மாற்று முறையில் (Shift System) வகுப்புகள் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை.

(ஆ) மாற்றுமுறை (Shift System) ஏற்படுத்தவில்லை எனினும் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க அனுமதி கோரிய கல்லூரிகள் அனைத்திற்கும் அக்கல்லூரிகளில் அமைந்துள்ள வசதிகளுக்கேற்ப கூடுதல் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு மேற்பட்டு பத்து சதவீதம் தங்களுக்கு விருப்பமான தகுதியுள்ள மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள தனியார் கல்லூரி நிர்வாகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

## எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் வசிக்கும் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

74—வினா 15675 திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் வசிக்கும் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?





விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கிடாத்திருக்கை கிராமத்திற்கு போக்குவரத்து வசதி

75—வினா 15699—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முதுகுளத்தூர் வட்டம், கிடாத்திருக்கை கிராமத்திற்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## ஆனைமலை பேரூராட்சியில் இருந்து மேற்கே பெரியபோதூர் வரை செல்லும் பாதையை அகலப்படுத்த நடவடிக்கை.

76—வினா 15707—திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆனைமலை பேரூராட்சியில் இருந்து மேற்கே பெரிய போதூர் வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட பாதையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தற்போது இச்சாலை நல்ல நிலையில் உள்ளது. இச்சாலையில் போக்குவரத்து எண்ணிக்கை குறைவு. மேலும் இச்சாலையை அகலப்படுத்த இரு பக்கங்களிலும் போதுமான நிலம் இல்லை. இச்சாலையை அகலப்படுத்த தேவைப்படும் நிலத்தை தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும். எனவே இச்சாலையை உடனடியாக அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

[1984 மார்ச் 31

**புது அழகாபுரி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி முறையீடு.**

77—வினா 15709—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், புது அழகாபுரி கிராமத்தைச் சேர்ந்த பால் கறவையாளர்களிடமிருந்து அங்கு ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி 1981 டிசம்பரில் மதுரை துணைப் பதிவாளர் (பால் பதம்) அலுவலகத்திற்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் பால் சேகரிப்புக் குழுத் தலைவரின் பிரேரணையின்பேரில் புது அழகாபுரி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் பொருட்டு திரு. மா. சுப்பிரமணி என்பவர் முதன்மை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தில் சேர்ந்து பயனடைய விரும்பும் நபர்களிடமிருந்து பங்குத் தொகை வசூலித்து மதுரை மத்திய கூட்டுறவு வங்கி வேடசந்தூர் கிளையின் கணக்கில் செலுத்துமாறு முதன்மை அமைப்பாளர் கோரப்பட்டுள்ளார். அவ்வாறு பங்குத் தொகை செலுத்தப்பட்ட விவரம் வரப்பெற்றதும், மதுரை துணைப் பதிவாளர் (பால் பதம்) அவர்களால் அக்கிராமங்களில் சங்கம் பதிவு செய்யப்பட உள்ளது.

**திருமங்கலம் அரசினர் மேல் நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்**

78—வினா 15727—திரு. என். எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் ஏதும் கட்டப்படுமா ?

விடை—

அப்பள்ளியில் 1981-82 ஆம் ஆண்டில் ஒரு ஆய்வுக்கூடம் மற்றும் ஒரு வகுப்பறை கொண்ட கட்டிடம் கட்டித்தரப்பட்டுள்ளது.



1984 மார்ச் 31]

**ஆற்காடு நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் கிளை டெப்போ அமைக்கும் செயற் குறிப்பு.**

79—வினா 15749—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக கிளை டெப்போ அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இச்செயற்குறிப்பு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திடமுள்ளது.

(ஆ) கிளை மனைக்கு உரிய நிலத்தினை உடமையாக்கிக் கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது முடிவுற்றபின் கிளை மனை நிர்மாணிக்கப்படும்.

**மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறன்.**

80—வினா 15790—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் 1980-81 ஆம் ஆண்டின் உற்பத்தித் திறன் என்ன ?

(ஆ) அரசுக்குச் சேர வேண்டிய கடன் இன்னும் எவ்வளவு உள்ளது ?

(இ) இதில் பணிபுரியும் Technical, Non-Technical தொழிலாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) நாளொன்றுக்கு 1,750 டன்கள் கரும்பு பிழியும் திறன்.

(ஆ) ரூபாய் 146 இலட்சம்.

(இ) தொழில் நுட்ப தகுதி பெற்றவர்—608 பேர்.
தொழில் நுட்ப தகுதி பெறாதவர்—345 பேர்.

[1984 மார்ச் 31

**1981–82-ல் மதுராந்தகம் தொகுதியில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகள்.**

81—வினா 15805—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் எத்தனை ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு 1981-82-ல் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டன?

விடை :—

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 1981-82-ம் ஆண்டு 3 ஆதி திராவிடர் காலனிகளுக்கு தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே மற்ற எல்லா ஆதி திராவிடர் காலனிகளுக்கும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் நல்லாமூர்த்தி கிராமத்திற்கும் ஆதி திராவிடர் குடியிருப்புக்கும் இடையே பாதை.**

82—வினா 15811—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், நல்லாமூர்த்தி கிராமத்திற்கும் ஆதி திராவிடர் குடியிருப்புக்கும் பாதை வசதி இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக அப்பாதை வசதி அமைக்கப்படுமா?

விடை :—

(அ) மற்றும் (ஆ): மேற்படி சாலையை நடப்பு (1982-83) ஆண்டில் கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ரூ. 3,000 மதிப்பீட்டில் மதுராந்தகம் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1984 மார்ச் 31]

**கருங்குழி பேரூராட்சியில் கருங்குழி கிராமம் மற்றும் மேலவலம் பேட்டை தொடக்கப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடம்**

83—வினா 15816—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் கருங்குழி கிராம தொடக்கப்பள்ளி மற்றும், மேலவலம் பேட்டை தொடக்கப்பள்ளிகளின் இடநெருக்கடியை தீர்க்க புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

விடை —

மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு துணை பள்ளிக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இல்லை. ஆனால் மேலவலம் பேட்டை பள்ளிக்கு 1972 ஆம் ஆண்டில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டது. கருங்குழி கிராமத்திற்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1981-82 ஆம் ஆண்டில் புதிய பள்ளிக் கட்டிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. மேலும் 1982-83 ஆம் ஆண்டில் கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு கிடைத்ததும் துணைப்பள்ளிக் கட்டிடம் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

**மேச்சேரியில் நுகர் பொருள் வாணிபக் கழகம் அங்காடி திறக்கும் செயற் குறிப்பு.**

84—வினா 15899—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரியில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக அங்காடி திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1984 மார்ச் 31

### குடிசை மாற்று வாரியத்திற்கு வரவேண்டிய வாடகை பாக்கி.

85—வினா 16905.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1—1—1982 வரை குடிசை மாற்று வாரியத்திற்கு வரவேண்டிய வாடகை பாக்கி எவ்வளவு?

விடை—

குடிசை பகுதி மாற்று வாரியத்திற்கு 1—1—1982 வரை வரவேண்டிய வாடகை பாக்கி ரூ. 1,24,18,690.55 ஆக உள்ளது. இந்த பாக்கியின் விவரம் தவணை முறைத் திட்டம், வாடகைத் திட்டம், வருவாய் ஈட்டுத் திட்டம் என்ற திட்டங்களின் அடிப்படையில் தயாரித்த பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1—1—1982-ல் வாரியத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி விவரம்.

| | ரூ. |
|---|---|
| **தவணை முறைத் திட்டம் :** | |
| 1. தவணை முறை குடியிருப்புகள் | 6,04,912.60 |
| 2. குத்தகை விற்பனை திட்ட மனைகள் | 74,855.10 |
| **வாடகைத் திட்டம் :** | |
| 3. வாடகைக் குடியிருப்புகள் | 96,41,894.10 |
| 4. திறந்தவெளி மனைகள் | 8,93,082.06 |
| 5. தீப்பிடிக்காத வீடுகள் | 8,24,367.00 |
| 6. பங்குகள் | 1,07,448.70 |
| 7. கூண்டு வீடுகள் | 35,234.20 |
| 8. தற்காலிக வீடுகள் | 43,198.00 |
| 9. கோட்டூர்புரம் குடியிருப்புகள் | 22,821.13 |
| **வருவாய் ஈட்டுத் திட்டம் :** | |
| 10. கடைகள் | 1,57,335.05 |
| 11. மார்க்கெட் | 9,254.50 |
| 12. தனி நபர் அறைகள் | 4,288.00 |
| | 1,24,18,690.55 |



1984 மார்ச் 31]

### பிள்ளையார்குளம் கிராமம் உள்கடை பெருமாள் தேவன்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு.

86—வினா 15911.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம் பிள்ளையார்குளம் கிராமம் உள்கடை பெருமாள் தேவன்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### பட்டுப் புழு வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் விதத்தில் திரைப்படம் எடுக்கும் செயற்குறிப்பு.

87—வினா 15914.—திரு. இரா. தாமரைக்கனி & திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுப் புழு வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் விதத்தில் திரைப்படம் எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

பட்டுப் புழு வளர்ப்பு சம்பந்தப்பட்ட திரைப்படத் தொகுப்பு எடுப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் மாம்பழங்களை பதப்படுத்தி ஊறுகாய், ஜாம் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தும் உத்தேசம்.

88—வினா 15921.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பு ஒன்றியத்தில் மாம்பழங்களை பதப்படுத்தி ஊறுகாய், ஜாம் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

போளூரில் பனை ஓலைகளிலிருந்து ஓலைப் பொருட்கள் தயார் செய்யும் செயற்குறிப்பு.

89—வினா 15922.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், போளூர் பகுதியில் பனை ஓலைகளிலிருந்து ஓலைப் பொருட்கள் தயார் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

திருவண்ணாமலையில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம்.

90—வினா 15940.—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.



1980-81 ஆம் ஆண்டு தமிழக அரசு விருதுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட தொகை.

91—வினா 15953.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசு விருதுத் திட்டத்தில் சிறந்த படம், நடிகர், நடிகைகளுக்கு பரிசு அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்கு அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஈ) போட்டியில் கலந்துகொண்ட படங்கள் எத்தனை?

விடை :

(அ) ஆம்.

(ஆ) உயர்ந்த கலைத் திறம், சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1-ம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் வரையிலுள்ள கால வரம்பிற்குள் தயாரித்து, தணிக்கைக் குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களில் சிறந்த படங்கள் மற்றும் சிறந்த கலைஞர்கள் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். அரசால் அமைக்கப்படும் தேர்வுக்குழு சிறந்த படங்களையும் கலைஞர்களையும் தேர்ந்து எடுக்கிறது.

(இ) ரூ. 2,26,700 (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து எழுநூறு மட்டும்).

(ஈ) 28 (இருபத்தெட்டுப் படங்கள்).

செங்கற்பட்டு நகரத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புறத் திட்டம்.

92—வினா 15963.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புறத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) செலவாகும் தொகை எவ்வளவு?

விடை—

(அ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புறத் திட்டத்தை செயற்படுத்த தேர்ந்து எடுக்கப்பட்ட 28 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் செங்கற்பட்டு நகரமும் ஒன்றாகும். செங் கற்பட்டு நகரத்தில் மேற்குறிப்பிட்ட திட்டத்தினைச் செயல் படுத்த செங்கை நகராட்சி ரூபாய் 80.00 இலட்சம் கடனுதவி பெற தகுதி பெறுகிறது.

(ஆ) செங்கற்பட்டு நகரத்தில் மேற்குறிப்பிட்ட திட்டத் தினை நிறைவேற்ற முதல் கட்டமாக ரூபாய் 52.56 இலட்சம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு ரூபாய் 10.00 இலட்சம், முதல் வேலையாக கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | மொத்த ஒதுக்கீடு. | 1980-81 ஆண்டின் ஒதுக்கீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 குடியிருப்பு வசதி .. .. | 9.96 | |
| 2. போக்குவரத்து வசதி— | | |
| 1 பேருந்து நிலையம் அமைத்தல் | 15.30 | 4.00 |
| 2 பேருந்து நிலையத்தினை விஸ்தரிக்க நில ஆர்ஜிதம் மற்றும் முன்னேற்றம். | 6.00 | .. |
| 3. அங்காடிகள்— | | |
| 1 தினசரி அங்காடி .. .. | 14.97 | 3.60 |
| 2 காந்தி சாலை சந்திப்பில் அங்காடி அமைத்தல். | 4.75 | 2.00 |
| 3 அண்ணா சாலையில் கடைகள் கட்டுதல். | 1.50 | 0.38 |
| | 52.56 | 9.98 அல்லது 10 லட்சம். |

மேற்குறிப்பிட்ட திட்டத்தில் குடியிருப்பு வசதி திட்டத்திற் கான நில சேர்க்கை மற்றும் நில ஆர்ஜித பணிகள் செய்வது மாவட்ட வருவாய்த் துறையின் பரிசீலனையில் உள்ளது. பேருந்து நிலைய பணிகள் தற்போது தாம் தொடங்கப்பட்டுள்ளது. அங் காடிகள் அமைப்பதற்கான இடத்தினை நகராட்சி தற்போது



உள்ள எல்லா பழைய கட்டிடங்களையும் அப்புறப்படுத்தி இடத்தை பொதுப் பணித் துறையினருக்கு ஒப்புவிக்க வேண்டும் இன்னும் பொதுப் பணித் துறையினருக்கு கொடுக்கப்படவில்லை.

பேருந்து நிலைய விஸ்தரிப்பு (2-வது கட்டம்) பணிகள் மாவட்ட வருவாய்த் துறையின் பரிசீலனையில் உள்ளது. காந்தி சாலை சந்திப்பில் அங்காடிகள் அமைத்தல் பணியில், நிலச் சொந் தக்காரர்களின் தகராறு உள்ளது. அண்ணா சாலை கடைகள் கட்டும் பணியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டு, பணி விரைவில் முடியும் தருவாயில் உள்ளது.

(இ) மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்காக இதுகாறும் ரூபாய் 7.98 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 54.43 இலட்சத்திற்கான கூடுதல் திட்டங்கள் மத்திய அரசின் அனுமதிக்காக பரிந்தனுப்பப்பட்டுள்ளன.

கோவை மாநகரில் பெண்கள் கல்லூரி அமைத்தல்

93—வினா 15998- திரு. கு ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாநகரத்தில் ஒரு பெண்கள் கல்லூரியை அமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திண்டுக்கல்லில் கால் நடை மருந்தகத்தை கால் நடை மருத்துவமனை யாக்கும் செயற்குறிப்பு.

94—வினா 16009-- திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால் நடை மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை. நிதி ஒதுக் கீட்டிற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் சில மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக உயர்த்தப்பட்டு வருகின்றன. உரிய காலத்தில் இவ்விடம தகுதி பெற்றவுடன் உயர்த்தப்படும்.

## கோதையார் மின் நிலையத்தில் ஏர்கண்டிஷன் அமைத்தல்

95—வினா 16911—திரு. டி. மணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோதையார் மின் நிலையம் ஒன்றில் ஏர்கண்டிஷன் அமைக்க 1976-ல் காண்ட்ராக்ட் விடப்பட்டதா ?

(ஆ) ஏர்கண்டிஷன் அமைத்து தர ஒப்பந்த கம்பெனிக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) தற்போது அது செயல்படுகிறதா ?

விடை—

(அ) இல்லை. ஆனால் 1973ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோதையார் மின் நிலையத்தில் குளிர்சாதனம் அமைக்க '' எவர்வெர்ஜின் ப்ரிஜ் என்ஜினியர்ஸ், சென்னை '' என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த ஆணை அளிக்கப்பட்டது.

(ஆ) ரூபாய் 56,970.

(இ) செயல்படுகிறது.

## திருநெல்வேலி நகரத்தில் சட்டக் கல்லூரி ஆரம்பித்தல்.

96—வினா 16023—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி நகரத்தில் சட்டக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

## மது விலக்கு குற்றங்களை பிடிக்க அமைக்கப்பட்ட தனி போலீஸ் படை

97—வினா 16053—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுவிலக்கு குற்றங்களை பிடிக்க தனி போலீஸ்படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

(அ) மற்றும் (ஆ) : 1980 செப்டம்பர் திங்களில் மது விலக்கை செயற்படுத்தும் அதிகாரம் உள்ளூர் காவலரின் வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு காவல் துறையில் இதற்கென்று தனியாக உள்ள மதுவிலக்கை செயற்படுத்தும் குழுவிடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (செயற்படுத்துதல்) காவல் துறை மதுவிலக்குப் பிரிவிற்கு கூடுதலாக பதவிகள் ஏற்படுத்துதல் குறித்து பரிந்துரைகள் செய்தார். அப்பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டு, அம்முடிவினை முதல் அமைச்சரவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29-3-82 அன்று அறிவித்தார். தற்போது காவல் துறை மதுவிலக்குப் பிரிவில் சென்னையிலும் மாவட்டங்களிலும் உள்ள பதவிகள் அமைப்பு பின்வருமாறு :

| | தலைமையகம் (சென்னை) | | |
|---|---|---|---|
| | மதுவிலக்கு புலனாய்வு பிரிவு | மயக்க மருந்து புலனாய்வு பிரிவு. | மாவட்டங்கள். |
| காவல் துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல். | 1 | .. | காவல் துறை உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை. 1 |
| காவல் துறை கண் காணிப்பாளர். | 1 | .. | காவல் துறை உதவி ஆணையாளர், சென்னை. 2 |
| காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர். | 1 | .. | காவல் துறை கூடு தல் கண் காணிப்பாளர். 20 |
| காவல் துறை துணை கண்காணிப்பாளர் | 4 | 1 | காவல் துறை உதவி ஆணையாளர். 2 |
| காவல் துறை ஆய் வாளர்கள். | 9 | 1 | 91 |
| காவல் துறை சார்பு ஆய்வாளர்கள். | 9 | 4 | 216 |
| காவல் துறை தலை மைக் காவலர்கள். | 5 | 17 | 169 |
| காவலர்கள் தரம்-1 | 4 | 1 | 40 |
| காவலர்கள் தரம்-2 | 70 | 5 | 1,446 |

[1984 மார்ச் 31

மது விலக்கு வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட் அமைத்தல்.

98—வினா 16056—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுவிலக்கு வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட்டு அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் எந்த இடத்தில் கோர்ட்டு அமைக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : குற்றவியல் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகளை விரைவாக விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்காக தமிழகத்தின் பல் வேறு இடங்களில் குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்ரேட் பதவி தரத்தில் 21 சிறப்பு நீதி மன்றங்களை ஆறு மாத காலத்திற்கு அமைக்க 23—1—82 நாளிட்ட உள்துறை அரசாணை எண் 147-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(இ) வடாற்காடு மாவட்டத்தில் அரக்கோணம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய இரு இடங்களில் மேற்குறிப்பிட்ட சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

வட ஆற்காடு ஆரணி நகர அபிவிருத்தி திட்டத்திற்கு அனுமதி அளித்தல்

99—வினா 16062—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடஆற்காடு ஆரணி நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கானது) செயல்படும் நகரங்களுள் ஆரணி நகரமும் ஒன்று ஆகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு 50 சதவீதமும், மாநில அரசு 50 சதவீதமும், கடனுதவி அளிக்கிறது. வட்டி ஆண்டொன்றிற்கு 6¼ சதவிகிதம் ஆகும்.



1984 மார்ச் 31]

(இ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த, ரூ. 80 இலட்சம் கடனுதவி பெற ஆரணி நகரம் தகுதி பெறுகிறது. ஆரணி நகரத்தில் மேற்குறிப்பிட்ட திட்டம் நிறைவேற, முதல் கட்டமாக கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசால் ரூ. 11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் கடனுதவி தொகை ரூ. 11 இலட்சம்.

| அங்காடிகள். | மொத்த தொகை. | 1981—82-ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு. |
|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்.) |
| 1. போக்குவரத்து— பேருந்து நிலையம் கட்டுதல். | 35.00 | .. |
| 2. அங்காடிகள் — | | |
| (அ) தினசரி அங்காடிகள் கட்டுவதற்காக. | 27.00 | 12.00 |
| (ஆ) கிடங்குகள் அமைக்க | 17.50 | 10.00 |
| | 79.50 | 22.00 |

பரமக்குடி தாலுகா அரசு நகரிய கண்மாயை மராமத்து செய்யும் திட்டம்.

100—வினா 16067—திரு. செ. இவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பரமக்குடி தாலுகா அரசு நகரிய கண்மாயை மராமத்து செய்யும் திட்டம் ஏதாவது உள்ளதா ?

விடை —

பரமக்குடி தாலுகா, போகலூர் ஒன்றியம் அரசு நகரிய கண்மாய்க்கு பாசன ஆயக்கட்டு 74—75 ஏக்கர். இக்கண்மாய்க்கு தரம் நிர்ணயம் செய்ய ரூ. 80,000 மதிப்பில் 1982—83 வருடத்தில் ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(குறிப்பு, ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

## 2. தகவல் கோரல்.

### அ) பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர். மனிதாபிமான பிரச்சினை ஒன்று. கண் பார்வையற்றோர் கோட்டை நோக்கி ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது குறை, அவர்கள் பயிற்சி பெற்றாலும் வேலை வாய்ப்பு பெறமுடியவில்லை என்பதாகும். மத்திய அரசாங்கத்தின் கொள்கை கண்பார்வை இழந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது; ஊமையர்களாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்பது. அதற்காக இவர்களுக்கு, ஒரு, ஒரு சதம் ஒதுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நமது அரசாங்கத்திற்கு இது ஏற்கெனவே தெரியும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாய்ன்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. சொல்ல வேண்டியதைச் சொல்லி, ரெக்கார்டில் ஏற்றி விட்டீர்கள். மற்றதை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

### ஆ) தொகுதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அந்தந்த தொகுதி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பது.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, அவையிலே பணியாற்றுகின்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலே இருக்கிற பிரச்சினை ஆகும். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொகுதிகளிலே நடக்கின்ற அரசு விழாக்களிலே அமைச்சர்கள் பங்கேற்கின்ற பொழுது, அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்திக் கேட்டு, நம்முடைய அவை முன்னவராலே அப்படி செய்யப்படும் என்கின்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் என்னுடைய சைதாப்பேட்டை தொகுதியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பால்வள அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். ** அவர்கள் கூட கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்று தமிழ்நாட்டிலும் இல்லை, உலகத்திலும் இல்லை. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : இன்றைய தினம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் மற்றும் மூன்று மந்திரிகளும் என்னுடைய தொகுதியில் ஒரு விழாவிலே கலந்து கொள்ள இருக்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



றார்கள். தொகுதி உறுப்பினராகிய நான் கலந்து கொள்ள வாய்ப்பு தரப்படவில்லை. (குறுக்கீடு) இது உரிமைப் பிரச்னையே ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உரிமைப் பிரச்னை என்றால் எழுதிக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது உரிமைப் பிரச்னை ஆகாது. பொதுவாக அரசு நடத்துகின்ற விழாக்களிலே, அரசு விழாக்கள், எந்த எந்தத் தொகுதியிலே நடைபெற்றாலும் அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை அந்தந்த நிகழ்ச்சி நிரலிலே சேர்க்க வேண்டுமென்று நானே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆனால் அப்படிப் போட்டுங்கூட பல நிகழ்ச்சிகளிலே அவர்கள் வருவதில்லை, சில நிகழ்ச்சிகளுக்கு வருகிறார்கள். ஆனால், இது உரிமைப் பிரச்னை ஆகாது. இப்பொழுதும் சொல்கிறேன், என்னைப் பொறுத்தவரையிலும், அவர்கள் வந்தாலும் வரா விட்டாலும் கூட, போகிற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளிலே அவர்களுடைய பெயர்களைப் போட்டுவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதையே அத்தனை அமைச்சர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் போட்டாலும் வருவதில்லை. வராததற்கு ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால், அதற்காக அரசு அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. அரசு விழாக்களைப் பொறுத்த வரையில், அந்தந்தத் தொகுதியிலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் போடப்பட வேண்டுமென்று தான் பெரும்பாலான விழாக்களில் சொல்லப்படுகிறது. மாண்புமிகு புருஷோத்தமன் சொல்வது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

திரு. து. புருஷோத்தமன் : சார், பாய்ன்ட் ஆப் ஆர்டர், (கூச்சல், குழப்பம்).

டாக்டர் கே. சமரசம் : துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தார் அரசு விழாக்களிலும், அமைச்சர் கலந்துகொள்கிற கூட்டங்களிலும் கலந்துகொள்வதில்லை என்ற தீர்மானத்தைப் போட்டு கலந்து கொள்ளாமல் பல நேரங்களில் இருந்திருக்கிறார்கள். அந்த நிலையிலிருந்து கொண்டு அந்தப் பிரச்சினையைப் பற்றி கேட்பது..............

(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் பாய்ன்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு)

திரு. து. புருஷோத்தமன் : நான் சொல்லியது..........

[1984 மார்ச் 31

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;
தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற துணைத்
நான் எடுத்துச் சொல்லி விட்டேன். ஆகவே இதை நிலைமைகளை
மாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவாத

(இ) நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் உண்ணாவிரதப்
போராட்டம்,

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே,
மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை வழங்கக் கூடிய
நுகர் பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்கள்
நூற்றுக்கும் அதிகமானவர்கள் இன்றைய தினம் உண்ணாவிரதப்
போராட்டத்தை............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அது
பற்றி முறையாக எழுதிக் கொடுத்து விடுங்கள். (கூச்சல், குழப்
பம்)

திரு. சோ. அழகர்சாமி : இன்றைக்குப் பிறகு சட்டமன்றம்
ஏப்ரல் 9 ஆம் தேதி தான் கூடுகிறது. திரு. கருப்பையா அவர்கள்
ஒரு முக்கியமான பிரச்னையை எழுப்பியிருக்கிறார். ஆகவே,
அதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப இயலாது. அதற்காக
னாலும் அரசிடம் அதற்கு பதில் இருக்காது. இவர் எழுப்பி
கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்). முறையாக எழுதிக்

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கல்லூரி ஆசிரியர், ஆசிரியர் அல்லாதவர் பல்கலைக் கழகத் தேர்வுப் பணியை புறக்கணிக்க இருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
ப. பொன்னுரங்கம், எஸ். ரெத்தினராஜ், கு.பா. பழனியப்பன்,
த. ஆறுமுகம், ரா. கிருஷ்ணன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி
என்கிற சொரணம், என். பழனிவேல், ஜே. ஹேமச்சந்திரன்,
என். வரதராஜன், ரா. உமாநாத், மு. அப்பாதுரை, தி.கா.
நல்லப்பன், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், உ. சுப்பிர
மணியன், எல். இளையபெருமாள் ஆகியோர், "தமிழகம் முழு
வதும் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பணியாற்றி வரும்
ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதார் வருகிற ஏப்ரல்—
மே மாதங்களில் நடைபெற இருக்கும் பல்கலைக் கழகத் தேர்
வுப் பணிகளை புறக்கணிக்க இருப்பதை யொட்டி கல்லூரி
மாணவர்கள் மத்தியிலும், அவர்தம் பெற்றோர் மத்தியிலும்



ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்
மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள்
கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்
துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக்
கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, வரும் ஏப்ரல்—மே மாதங்களில் நடைபெற இருக்
கிற கல்லூரித் தேர்வுகள் அனைத்தையும் புறக்கணிக்க முடிவு
செய்து—ஒரு கல்லூரி அல்ல, ஒரு மாவட்டம் அல்ல—தமிழகத்
தில் உள்ள அத்தனை கல்லூரிகளைச் சார்ந்த ஆசிரியர்களும்.
ஆசிரியர்கள் அல்லர்தவர்களும் முடிவு எடுத்து இருக்கிறார்கள்.
வரும் ஏப்ரல் 11 ஆம் தேதி துவங்க இருக்கிற இந்தத் தேர்வு
களை அனைத்து ஆசிரியர்களும், ஆசிரியர்கள் அல்லாதவர்
களும் புறக்கணிக்கிற துர்பாக்கியமான நிலைக்கு அவர்கள்
தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை முதலில் வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் அதைப் படிக்கிறபோது கூட 'மாணவர்கள் மத்தி
யிலும் அவர்தம் பெற்றோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பதட்ட
நிலை' என்று தான் படித்தீர்கள். கல்லூரிகளை ஆசிரியர்கள்
மற்றும் ஆசிரியர்கள் அல்லாதவர்கள் புறக்கணிக்கிறார்கள்
என்றால் சாதாரண நாட்களில் ஓரிரு நாட்கள் கல்லூரியை மூடி
விட்டு மாணவர்களை வீட்டிற்கு அனுப்பி விடலாம். ஆனால்
இந்த பாய்-காட் என்பது அவர்கள் தேர்வுகளை புறக்கணிக்
கிறார்கள். 'கனெக்டட் வித் எக்சாமினேஷன்ஸ்' என்று அவர்
கள் தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். தேர்வோடு தொடர்
புள்ள அனைத்து வேலைகளையும் புறக்கணிக்க இருக்கிறோம்
என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அரசாங்கம் இந்த
முடிவிற்கு அவர்களைத் தள்ளியதற்கு என்ன காரணம் என்று
பார்க்கிறபோது அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை
—ஓராண்டில் ஏற்பட்ட நிலைமைகள் அல்ல; ஆண்டாண்டாக
கிடப்பிலே இருக்கிற பல்வேறு கோரிக்கைகளை—வைத்து,
அரசாங்கம் தங்களால் முடியாது என்று கைவிரித்து விட்ட
பிறகுதான் இந்த முடிவிற்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.
எனக்கு கிடைத்த தகவல், அரசிலிருந்து அவர்களுக்கு சொன்ன
பதில், 'பினான்ஷியல் பொசிஷன்வீக்' என்று சொல்லி இருக்கி
றீர்கள். நம்முடைய நிதிநிலை சரியில்லை என்று சொல்லி
அதனால் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற
வாய்ப்பு அரசாங்கத்திற்கு இல்லை என்று அரசாங்க சார்பிலே
சொல்லி இருப்பதாக நான் அறிகிறேன்.

நாம் பார்க்கிறோம், இன்றைக்கு இரண்டாயிரத்துச் சொச்
சம் கோடி ரூபாய்க்கு நாம் பட்ஜெட் வழங்கியிருக்கிறோம். இந்த
நிலையில் அவர்களுடைய நியாயமான சில கோரிக்கைளை மறுப்
பது எப்படி நியாயம் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை.
அவர்கள் கோரிக்கையிலே ஒரு சில—பல்வேறு அமைப்புகளில்
தரப்படுகின்ற இடைக்கால நிவாரணம் இவர்களுக்கும் தரப்பட
வேண்டும். இது எப்படி தவறாகும் என்பது என்னுடைய
தாழ்மையான கருத்தாகும்.

(முற்பகல் 10-10).

மற்றொன்று, அரசு கல்லூரிகளில் தரப்படுகின்ற சலுகைகள்
தனியார் கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர், ஆசிரியர் அல்லாத
வர்களுக்கும் தரப்பட வேண்டும். நான் கேட்கிறேன், அரசு
கல்லூரியிலே வேலை செய்பவனும் மனிதன் தான். தனியார்
கல்லூரியில் வேலை செய்பவனும் மனிதன் தான். அரசு
கல்லூரியில் இருப்பவர் மட்டும் தான் அதிகம் படித்தவர்கள்
தனியார் கல்லூரியில் இருப்பவர்கள் அதிகம் படித்தவர்கள்
இல்லையா, படிக்காதவர்களா, ஏன் இந்த பாராபட்சம்? தனி
யார் கல்லூரிகளுக்கும் நாம் தான் நிதி தருகிறோம். அப்படி
இருக்கும்போது இந்தப் பாராபட்சம் ஏன் என்பது
என்னுடைய தாழ்மையான கருத்தாகும். நிதி நிலை போத
வில்லை அதனால் இந்தப் பிரச்னை வந்தது என்று அரசு
தரப்பில் காரணம் சொல்லப்படுவதாகத் தெரிகிறது.

திரு. மி. வின்சென்ட் : பாராபட்சம் என்று தமிழ் மொழி
யில் இல்லாத ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிப்பட்ட
வார்த்தை இருக்கிறதா இல்லையா என்பதை புத்தகத்தைப்
பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் கொச்சை தமிழில் அந்த
பாரபட்சம் என்று சொன்னேன். அவர்கள் ஊரில் பாரபட்சம்
என்று சொல்வார்கள். அடுத்து, தனியார் கல்லூரிகள் சட்
டத்திலே அவசரமாக சில திருத்தங்களைக் கொண்டு வர
வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைக்கொண்டு வர என்ன
தயக்கம் இருக்கிறது. அரசின் அணுகுமுறையின் காரணமாகத்
தான் இன்றைக்கு இந்த மோசமான நிலை இருக்கிறது. இந்தக்
காரணத்தால் தான் அனைத்து ஆசிரியர்களும், ஒரு யூனிவர்
சிடி அல்ல, இரண்டு யூனிவர்சிடி அல்ல, ஒரு மாவட்டம் அல்ல,
இரண்டு மாவட்டம் அல்ல, தமிழகத்தில் உள்ள அனைத்துக்
கல்லூரிகளிலும் இருக்கின்ற ஆசிரியர்கள், ஆசிரியர்கள்
அல்லாதவர்கள் தேர்வுகளைப் புறக்கணிக்கும் அளவிற்கு வந்
திருக்கிறார்கள். இதற்கு இந்த அரசின் அணுகுமுறைதான்
காரணம் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.



அதைத்தான் நீங்கள் படிக்கும்போது சொன்னீர்கள், வேண்டு மானால் ஆசிரியர்கள் நின்று விடலாம். பாவம், மாணவர்கள் அவர்களுடைய பெற்றோர்கள், தங்களுடைய பையன் இந்த ஆண்டு பைனல் பரீட்சை. எழுதுகிறான், பாஸ் செய்வான், வேலைக்குப் போவான், சம்பளம் வாங்கித் தருவான் என்று நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வீணாக்கும் முறையில் இந்த அரசின் அணுகுமுறை இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக கல்வித்துறையின் அணுகுமுறை இருக்கிறது என்பதை என்னால் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆகவே உடனடியாக அரசு முன் வந்து இதிலே சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்து ஆசிரியர், ஆசிரியர் அல்லாதார் பிரதிநிதிகளைச் சந்தித்து இதற்கு முடிவு கண்டாக வேண்டும். ஏப்ரல் 11 ஆம் தேதி நடக்க இருக்கும் அந்த பெருநிகழ்ச்சி தவிர்க்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா எடுத்துக்கொள்ளாதா என்றசந்தேகம் இருப்பதால், இதைப்பற்றி தீவிரமாக விவாதிக்க வேண்டும். அப்படி விவாதிக்கிறபோது, இதிலே விஷயம் தெரிந்த அனைத்து உறுப்பினர்களும் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11—4—1984 முதல் அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களின் ஸ்தாபனங்கள், அவர்களுடைய ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்சில், நான்-டீச்சிங் ஸ்டாப் ஆகியோர் தேர்வுகளை பாய்காட் பண்ணுவது என்ற முடிவு நம் முன்னால் இன்றைக்கு வந்து இருக்கிறது. இது நடந்தது என்று சொன்னால், உண்மையிலேயே இது ஒரு சீரிஸ்ஸான நிலைமையை உண்டாக்கும் என்ற கவலை எங்களுக்கு இருக்கிறது. இது இந்த மாநிலத்தில் உள்ள ஏராளமான மாணவர்களின் படிப்பை பாதிக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தும். ஆகவே இதிலே முதலிலே நான் கேட்டுக்கொள்வது, இதிலே பிரஸ்டிஜ் என்ற பிரச்னை பார்க்காமல், அரசாங்கம் இதிலே அவர்கள் வைத்து இருக்கும் பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்கு முன்னாலே அவர்களை அழைத்துப் பேசி முடிவு காண்பது மிகவும் முக்கியமானது, இந்த மாநிலத்தின் மாணவர்கள் நலன் கருதி இதைச் செய்ய வேண்டியது அவசியமானதென்று என்று நான் கருதுகிறேன்.

1977 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு வந்த பிறகு யு.ஜி.சி. ஸ்கேல் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் அதுபற்றி பல பேச்சு வார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன, 1977-க்கு பின்னர் அவர்கள் சொல்கின்ற கோரிக்கை என்னவென்றால் பல

பேச்சுவார்த்தைகளின் போது கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் (அஷ்யூரன்ஸ்) நிறைவேற்றப்படவில்லை என்பது. இது ஒரு முக்கியமான விஷயம். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியதுதான் அது, மீண்டும் பேச்சுவார்த்தைக்குரிய விஷயம் அல்ல. அப்படிப்பட்ட கோரிக்கைகளை சார்ட் அவுட் பண்ணி உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

தனியார் கல்லூரிகளில் இன்னும் பயங்கரமாக பழிவாங்கும் தன்மை இருக்கிறது என்பது அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும். நிர்வாகத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி நிர்வாகம் மாணவர்களிடமிருந்து வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியும் இன்னும் கொடுக்கவில்லை; அது பாக்கியாக இருக்கிறது. அது சம்பந்தமாக நானே போன் பண்ணிக் கேட்டேன். நேரிலே வந்தால்தான் பதில் சொல்வோம் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்கள். நான் எம்.எல்.ஏ. மக்கள் பிரதிநிதி பேசுகிறேன் என்று சொன்ன பிறகும் நேரிலே வந்தால் தான் சொல்ல முடியும் என்று சொன்னார்கள். அந்த பாக்கி நிலைமை என்ன, அதனுடைய புரொசீஜர் என்ன என்று கேட்டேன். நேரே வாருங்கள் என்றார்கள். நான் அங்கே வருவதற்கு நேரமில்லை; பிரின்சிபாலுடன் பேசுகிறேன், போனை கொடுங்கள் என்று சொன்னேன். முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்படி நம்மிடமே நடந்துகொண்டால் மற்றவர்களிடம், மாணவர்களின் பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்வார்கள், டீச்சர்களிடம் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அவினாசிலிங்கம் செட்டியார் உமென்ஸ் காலேஜ் ஒன்று கோவையில் இருக்கிறது. அங்கே எவ்வளவு அட்ராசிட்டீஸ் நடக்கின்றன? நிலைமை எவ்வளவு சீரியசாக இருக்கிறது? அங்கே பணியாற்றுகின்ற பெண்களுக்கு பிரசவ விடுப்பு கொடுக்கக்கூடாது என்பதற்காக என்ன சொல்கிறார்கள் தெரியுமா? நீங்கள் வெக்கேஷன் பீரியட்டில் பிரசவம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது என்ன அட்ஜஸ்ட்மென்ட் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படிச் சொல்லக்கூடிய தனியார் நிர்வாகம் இருக்கிறது. அரசாங்கமும் அதிலே பாராமுகமாக இருக்கிறது. மறைமுகமாக தற்போது அரசாங்க ஆணை வருவதாகக் கூட சொல்கிறார்கள். அப்படிச் சொல்லி விட்டு, அவர்கள் சொல்லுகிற முக்கியமான விஷயம் 'மைனர் அஃபன்ஸ் மேஜர் அஃபன்ஸ்' என்று வைத்திருக்கிறார்கள். சஸ்பென்ஷன், லேட் டிடக்ஷன் எல்லாம் மைனர் அஃபன்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். சஸ்பென்ஷன் செய்ய வேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இப்படி நிறைய இருக்கிறது. நான் அதனுடைய டீட்டேல்சுக்குள் போகவில்லை. ரிலீஃப் கேட்டால் கிடைக்கவில்லை. பீகார், ஆந்திரா, வெஸ்ட் பெங்கால் போன்ற மாநிலங்களில் ரிலீஃப்



கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தமாதிரி நம்முடைய அரசாங்கத்திலும் ஏன் கேட்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.

அதைப்போல அரசு ஊழியர்கள் விடுப்பில் செல்லும்போது பயணச் சலுகை, மருத்துவச் சலுகை, ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் வழங்குதல் போன்ற சலுகைகள் அரசு ஊழியர்களுக்கு இருக்கின்றன. இந்த சலுகைகளை தனியார் பள்ளிகள் கல்லூரிகளுக்கும் எக்ஸ்டன்ட் பண்ண வேண்டுமென்று கேட்கிறார்கள். ட்ரான்ஸ்ஃபர் என்பது அரசுக் கல்லூரிகளில் ஏராளமாக இருக்கிறது. அதை நிறுத்த வேண்டும்.

ஜனநாயக முறையில் பல்கலைக் கழகங்கள் நடக்க வேண்டும். பல்கலைக் கழகச் சட்டங்களை எல்லா கல்லூரிகளுக்கும் அமுல்படுத்த வேண்டும். இது மோஸ்ட் இம்பார்ட்டன்ட். அவர்கள் இதை பிரதானமாகக் கேட்டிருக்கிறார்கள். யு.ஜி.சி. ஸ்கேலை இந்த அரசாங்கம் வந்தபிறகு அமுல்படுத்தினார்கள். 1977 லிருந்து அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது 1984. இன்னும் அதிலே இருக்கிற அனாமலி தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதற்கு ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்.

திண்டுக்கல்லில் ஒரு அரசு கல்லூரி இருக்கிறது. அங்கே ஒரு ஆசிரியருக்கு, அவர் 1—1—1974 முதல் பிட்மென்ட் செய்யப்பட்டும், இன்கிரிமென்ட் 1—1—1975ல்தான் கொடுத்தார்கள். அவரைவிட ஜூனியர் ஒருவருக்கு 1—1—1971லிருந்தே இன்கிரிமென்ட் கொடுத்தார்கள். அரசாங்க டிபார்ட்மென்ட் கரக்ட் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. ஜூனியரை விட சீனியர் குறைந்த சம்பளம் பெறுவதாக இருந்தால் அதை ரெக்டிபை செய்து, இருவருக்கும் சரிசமமான சம்பளம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்க ஆணை இருக்கிறது. ஆனால் இந்த ஆசிரியரைப் பொறுத்தவரையில் அது சரிசெய்யப்படவில்லை. இதுபற்றி நானே டைரக்டருக்கு போன் பண்ணினேன். ஒருவாரம் டைம் கொடுங்கள் என்று சொன்னார். ஒரு வாரம் கழித்து மீண்டும் போன் பண்ணினேன். உங்கள் ப்ரொசீடிங்க்ஸ் சரியாக இருக்கிறதே, இதில் என்ன கஷ்டம் என்று கேட்டேன். இன்னும் ஒரு வாரம் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்புறம் அப்படியே சைலன்ட் ஆகிவிட்டார். இன்றைக்கு அதுபற்றி நான் ஒரு லெட்டரை அமைச்சரிடம் கொடுக்கிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 31

ஜி. ஓ. அமல்படுத்தப்படாமல் இந்த மாதிரி பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. பிரச்சினை சீரியஸ் ஆன பிரச்சினைகள் சிலவற்றுக்கு அரசாங்கம் செய்யமுடியும். சிலவற்றுக்கு அரசாங்கம், சிபாரிசுகளை செய்யமுடியும். பழிவாங்கும் நிலை யில் அவர்கள் அங்கே காரியங்களைச் செய்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளில் தலையிட்டு, செட்ரைட் பண்ணமுடியும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, அவர்கள் 11 ஆம் தேதி நடத்த இருக்கின்ற போராட்டத் திற்கு முன்னதாக, அந்த மாணவர்களை அழைத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள், பேசி, ஒரு சுமுகமான தீர்வை நல்லமுறையில் காணவேண்டுமென்பதற்காக, ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டுமென்பதால், இந்தமாதிரிப் பிரச்சினைகளை விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற 11—4—1984 முதல் பல்கலைக் கழகத் தேர்வுப் பணிகளை புறக்கணிப்பது என்று பல்வேறு ஆசிரியர் மன்றங்கள், மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர் மன்றம் தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் மன்றம், அமைப்புகளின் ஆசிரியர்கள், 13,000 ஆசிரியர் பெருமக்களும், அலுவல் பணி புரிகின்ற 10,000 பேர்களும் ஆகமொத்தம் 23,000 பேர்கள் இந்தத் தேர்வுகளை புறக்கணிப்பது என்ற முடிவை செய்திருக் கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய தோழர் உமாநாத் அவர்கள் பல்வேறு ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் சொல்வ தெல்லாம். தனியார்க் கல்லூரிகளில் பணிபுரியக்கூடிய ஆசிரியர் கள், பேராசிரியர்கள், சம்பள வெட்டு, தற்காலிக பணிநீக்கம் உயர்வூதிய வெட்டு, தற்காலிக விடுப்பு மறுக்கப்படுவது போன்ற முறைகேடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த தனி யார்க் கல்லூரிகள், அரசாங்கத்தின் மான்யத்தைப் பெற்றுக் கொண்டு, அங்கு பணிபுரியும் ஆசிரியர்களை, இப்படி கொடுமை களுக்கு உட்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சட்டம் கொண்டுவந்து, இப்படிப்பட்ட குறைபாடுகளை போக்கவேண்டு மென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். 1973-ல் நம் முடைய பல்கலைக்கழக மாநிலக் குழு கொடுத்த சிபாரிசுகளை 1977 ஆம் ஆண்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் நிறைவேற்றியது என்று சொன்னாலும் கூட, 1973க்கு பின்பு 1983-ல்தான் இரண்டாவது பல்கலைக் கழக ஊதியக் குழு ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அந்தக் குழு சிபாரிசு செய்த



1984 மார்ச் 31] [திரு மு. அப்பாதுரை]

சலுகைகள் எப்போது வரும். எப்போது அந்த சலுகைகள் வழங்கப்படும் என்பது இன்றைக்கும் கேள்விக்குறியாக இருக் கிறது. இடைப்பட்டகாலத்தில், தங்களுக்கு இடைக்கால நிவாரணம் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று, பணி பாதுகாப்பு. 26—2—1979-க்குப் பின் சேர்ந்த தற்காலிக ஆசிரியர்களைப் பணிவரன் முறை செய்ய சிறப்புத் தேர்வாணைக் குழு, ஸ்பெஷல் கமிஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போல இன்றைக்கு கல்லூரிப் பேராசிரியர்களும், பல்வேறு கஷ்டங்களுக்கு ஆட் படுத்தப்பட்டிருக்கிறார்கள். பேறு கால விடுப்பு கூட கிடைப் பதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு ஒரு ஸ்பெஷல் கமிஷன் போட்டு, பணிவரன் முறை செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வைத் திருக்கிறார்கள். அதைப்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அரசு ஆணைகளை அமுலாக்குவது, தற்காலிக ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது சம்பந்தமாக ஒரு ஜி.ஓ. அதாவது எம். எஸ். நம். 1820, கல்வித்துறை முன் னோக்கிய பணிவரன் முறைக்கு ஆணையிட்டது. ஆனால் இது வரை அமுலாக்கப்படவில்லை. அதை அமுல்படுத்தவேண்டு மென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதேபோன்று இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்து போராட்டத்தை துவக்குவதாக தீர்மானித்திருக்கிறார்கள்.

அதற்கு பின்பு, பேராசிரியர்கள், 15, 20 ஆண்டுகாலம் பணி புரிந்ததற்குப் பின்னால், அவர்கள் எம். பில்., படிக்கவேண்டு மென்று சொல்கிறார்கள். அவர்கள் எம். ஏ., எம்.எஸ்.சி. படித்துவிட்டு, இன்றைக்கு எம்.பில். படிக்கவேண்டுமென்று அவர்களைச் சொல்கிறார்கள். வேண்டுமானால் புதியதாக சேர் கின்ற ஆசிரியர்களுக்கு இந்தத் தகுதிகள் வேண்டுமென்று கேட்கலாம். ஆனால் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அவர்கள் சர்வீஸ் செய்தபிறகு, மீண்டும் அவர்கள் இப்படிப்பட்ட தகுதியைப் பெறவேண்டுமென்று சொல்வது சரியாக இருக்காது. இவைகளை யெல்லாம் மறுபரிசீலனை செய்யவெண்டுமென்று கேட்கிறார்கள்.

அதேபோன்று. அரசு கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு 'சி ப்ளஸ்' பிரச்சினை சம்பந்தமாக தண்டனை வழங்கப்படுகின்ற நிலை இருக்கிறது. 1—12—1977-ல் தனியார் கல்லூரிகளில் உள்ள பயிற்றுநர் அனைவர்க்கும் பதவி மேம்பாடு கிடைக்கையில் அரசு கல்லூரிகளில் உள்ள சி ப்ளஸ் பெற்ற பயிற்றுநர்களுக்கு பதவி மேம்பாடு கிடைக்கவில்லை.

அதேபோல் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்
லூரியில் ஜெகதீசன் என்பவர், அங்குள்ள கல்லூரி நிர்வாகத்தின
ரால் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதை எதிர்த்து
நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட சட்ட
மன்றத்திலே சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியத்தின் மீது
பேசுவது போல் உறுப்பினர் பேசக் கூடாது. ஒத்திவைப்பதற்கான
காரணத்தை மட்டும் சொல்லி, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. அப்பாதுரை: ஆகவே இன்றைக்கு அந்த சிவகாசி
ஐயநாடார், ஜானகி அம்மாள் காலேஜில் பணி நீக்கம் செய்யப்
பட்ட ஜகதீசன் அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அங்கே இருக்ககூடிய நிர்வாகம் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றது.
உயர்நீதி மன்றம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது.
ஆனால் இன்றைக்கு ஆசிரியர்கள் மன்றம் உச்ச நீதிமன்றத்திற்குச்
சென்று அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பைப் பெற்று வந்திருக்
கின்றது. அந்த நிலைமையைப் பொறுத்தமட்டில் நம்முடைய
தமிழக அரசின் கையில்தான் எப்படிப்பட்ட தீர்ப்பு வழங்க
வேண்டும் என்று கோப்பு இருக்கின்ற காரணத்தால், உடனடியாக
அந்தப் பேராசிரியரை பணியில் அமர்த்தவேண்டும் என்று கோரிக்
கையை வைத்து இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குக்
கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். ஜனநாயக
உரிமைகள் மதிக்கப்படவில்லை. இடைக்கால நிவாரணம்
கேட்டும் கொடுக்கப்படவில்லை. அரசின் ஜனநாயக விரோதப்
போக்கினால், அரசின் கல்லூரி ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்
கள். அரசு ஊழியர்களுக்கு அறிவிப்பதைப் போன்று விடுப்புக்
காலப் பயணச்சலுகை, மருத்துவச் சலுகை, ஓய்வு பெற்றால்
10 ஆயிரம் போன்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.
அவைகள் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அரசுக் கல்லூரி ஆசிரியர்கள்
மீது மாற்றல் மூலம் தாக்குதல் நடக்கின்ற இயக்கு
நரைத் தட்டிகேட்கவேண்டும் என்றும், இன்னும் இது போன்ற
கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக, இன்றைக்கு
கல்லூரி பேராசிரியர்கள் வரக்கூடிய தேர்வை புறக்கணிக்க முடிவு
செய்திருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்
பட்டால், தமிழகம் பூராவும் இருக்கின்ற மாணவர்களுக்கு
பாதிப்பு ஏற்படும். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்கவேண்டும்.
அந்த நிலையை உருவாக்கக்கூடாது. எனவே இந்தப் பிரச்
சனையை இன்னும் விரிவாக விவாதித்து, இந்தப் போராட்டத்தை
தடுத்து நிறுத்துகின்ற முறையில், விரிவாக விவாதிக்க வேண்டும்
என்ற காரணத்தால், சபையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து
விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் கூட்டத் தொடர் இன்று
முடிவடைந்து மீண்டும் ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி துவங்க
இருக்கின்றது. ஆனால் 11 ஆம் தேதியிலிருந்து தமிழகத்திலே
இருக்கின்ற கல்லூரி ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாதவர்களுமாக
ஏறத்தாழ 13 ஆயிரம் பேர்கள் ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி
யிலிருந்து பல்கலைக் கழகத் தேர்வுகளை புறக்கணிப்பது என்ற
முடிவை எடுத்து இன்றைக்குப் போராட்டத்திற்கு கொடி காட்டி
இருக்கிறார்கள். சென்னை, மதுரை காமராசர் பல்கலை
கழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள்,
ஆசிரியர் அல்லாதவர்கள் இன்றைக்கு இந்தப் போராட்டத்தை
தொடங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், ஏதோ
இன்றைக்கு நேற்றைக்கு சொல்லிவிட்டு அவர்கள் இந்தப்
போராட்டத்தைத் தொடங்கவில்லை. 1977-ம் ஆண்டிலேயிருந்து
அரசின் கவனத்திற்கு பல்வேறு முறை கொண்டு வந்து பல்வேறு
போராட்டங்களை நடத்தி, அவைகள் நிறைவேற்றப்படாமல்
பழைய கோரிக்கைகளாக இருக்கின்ற காரணத்தால்தான் இந்த
ஆசிரியப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தைத் தொடங்கி
இருக்கிறார்கள். பொதுவாக மாணவர்கள்தான் பரிட்சையை புறக்
கணித்து போகாமல் இருப்பது என்ற நிலைமை மாறி, ஆசிரியர்
களே, போராட்டம் நடத்தத் தொடங்கி இருப்பது ஒரு துரதிருஷ்
டவசமானது வருந்தத்தக்கது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்
கள் தொடர்ந்து பழி வாங்கப்படுகின்ற காரணத்தாலே, அதை
அரசாங்கம் உரிய நேரத்தில் தடுத்து நிறுத்தாத காரணத்தாலே,
அவர்கள் வைத்துள்ள பல்வேறு கோரிக்கைகளிலே இதுவும் ஒரு
கோரிக்கையாக இடம் பெற்றிருக்கிறது. கல்லூரியிலே பணியாற்று
கின்ற ஆசிரியப் பெருமக்கள் இன்றைக்கு சமுதாயத்தில், பல்
வேறு துறைகளிலே இருக்கின்றவர்கள் ஏன் ராணுவத்திலே இருப்
பவர்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், தனியார் துறைகளில்
இருப்பவர்களைப் போல, மத்திய அரசின் பல்வேறு துறைகளில்
இருப்பவர்களைப் பார்க்கின்றபோது, மிகவும் குறைந்த வசதி
யிலே இன்று ஆசிரியப் பெருமக்கள் இருக்கிறார்கள். எனவே,
அந்த நிலையை மாற்றவேண்டும் என்று 1978 ஆம் ஆண்டிலே
யிருந்து ஆசிரியர்கள் குரல் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.
அரசாங்கம் இறுதியாகவும், உறுதியாகவும் முடிவு எடுப்பதற்கு
முன்னாலே, இடைக்கால நிவாரணம் வேண்டும் என்று கேட்டு,
அதுவும் இன்றைக்கு மறுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது.
இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும் என்று சொல்லி,—நான்
கேள்விப்படுகிறேன்—பீகார், மராட்டியம், மேற்கு வங்காளம்
போன்ற மாநிலங்கள் மத்திய அரசுக்கு எழுதியுள்ள நிலைமையில்,
நம்முடைய அரசாங்கம் எழுதாமல் இருக்கின்ற நிலைமையில்
இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் போலவே, ஓரே

ஊரிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு மத்திய அரசு ஒரு
கிராக்கிப் படியும், மாநில அரசு ஒரு கிராக்கிப் படியும் இருக்கின்ற
காரணத்தால், கிராக்கிப் படியை உயர்த்தித் தர வேண்டும் என்று
அவர்கள் இன்றைக்கு குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10.30)

பொருள்களை வாங்கப் போகின்ற நேரத்தில் மத்திய அரசு ஊழி
யர்களுக்கு என்று ஒரு விலையும், மாநில அரசு ஊழியர்களுக்கு
என்று குறைந்த விலையும் எந்த வணிகரும் சொல்லாத காரணத்
தாலே, இன்றைக்கு குறைந்த வருவாயிலே இருக்கும் ஆசிரியப்
பெருமக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ
வசதியும் கூட, மிகச் சாதாரணமான மருத்துவ வசதியாகவே
இருந்துக்கொண்டிருக்கிறது. அதிலும் கூட தனியார் கல்லூரியிலே
இருக்கிற நிர்வாகம் 57 ரூபாயைக் கட்டவில்லை என்று சொன்னால்
தனியார் கல்லூரியிலே பணி புரியும் ஆசிரியர்களுக்கு அந்த
மருத்துவ வசதியும் இல்லை என்று நாங்கள் கேள்விப்படுகி
றோம்.

பயணச் செலவுகளைப் பொறுத்த வரையில் கூட, சென்னை
யிலே இருந்து கோயம்புத்தூர் போக சலுகை உண்டு. திரும்பி
வர சலுகை கிடையாது என்று சொல்கிறார்கள் என்ற அளவுக்கு
நிலைமை இருந்துக் கொண்டிருப்பதை பார்க்கும்போது நமக்கு
வேடிக்கையாக இருக்கிறது. இந்தச் சலுகை கூட தனியார்
கல்லூரியிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு இல்லை என்று சொல்
கிறார்கள். கிராமப் புறங்களிலேயும், மற்ற புறநகர்ப் பகுதி
களிலேயும் வாழ்கிற ஆசிரியப் பெருமக்களுக்கு வீட்டு வாடகைப்
படிகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இடைக்கால விடுப்பு
கூட ஆண்டு ஒன்றுக்கு 3 நாட்கள் என்று வரையறுக்கப்பட்
டிருக்கிறது. 11 நாட்களுக்கு ஒரு ஈட்டிய விடுப்பு என்ற விதி
மற்றவர்களுக்கு பொருந்தும்போது, ஆசிரியப் பெருமக்களுக்கு
மட்டும் ஏன் பொருந்தாது என்று அவர்கள் கேட்பது ஒரு நியாய
மான கோரிக்கையாக இருக்கிறது. பதவியிலிருந்து ஓய்வு பெறு
கின்ற அரசு ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் அளிப்பதைப்
போல அவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்றும், பி.ஃஎப்பிலே
வட்டி விகிதம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், வீட்டு வசதி
வாரிய ஒதுக்கீட்டிலும் கோட்டா நிர்ணயிக்கப்பட வேண்டும் என்
றும் பல்வேறு கோரிக்கைகளை முன்னாலே வைத்து இன்றைக்கு
அவர்கள் போராட்டத்தை துவங்கியிருக்கிறார்கள். அரசாங்
கத்தைப் பொறுத்த வரையில், பணச் செலவு இருக்கிற கோரிக்
கைகளும் இருக்கின்றன. பணச் செலவு இல்லாத கோரிக்கை
களும் இருக்கின்றன. அதற்கு மனம் இல்லாத காரணம்தான்
என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தப் பணம் சம்பந்தப்
படாத பிரச்சினைகளைக் கூட, சற்று முனைப்பாக இருந்து
அரசாங்கம் தீர்ப்பதற்கு முயற்சி செய்திருக்கலாமே, என்ன
காரணத்தினாலே அவைகளை அரசாங்கம் உதாசீனம் செய்து
வருகிறது என்று தெரியவில்லை.



சங்கத்திலே உறுப்பினர்களாக இருப்பார்களேயானால் சம்பள வெட்டு என்றும் கூட சில தனியார் நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டிலே ஒரு நாள் வகுப்பிலே குறிப்பிட்ட பாடத்திற்கு பதிலாக வேறு பாடம் நடத்தினார்கள் என்று சொல்லி தமிழ் துறையிலே 6 பேர்களை 3 ஆண்டுக்கு ஊதிய உயர்வு கிடையாது என்று கூட நிர்வாகம் குறைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் போல பல்வேறு தனியார் கல்லூரிகளிலே இருக்கிற முறைகேடுகளைப் பார்க்கிற போது, ஆசிரியர்களைப் பழி வாங்குகிற போக்கினைப் பார்க்கிற போது, அரசாங்கம் நிச்சயமாக தலையிட்டு, அவைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு ஆதரவாக போராட்டம் நடத்திய நேரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, அவர்கள் அந்தப் போராட்டக் காலத்திற்கு சம்பளம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கோவையிலே சில தனியார் கல்லூரிகளிலே அந்த சம்பளத்தை பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை. 10 நாட்களுக்கு மருத்துவ விடுப்பு எடுத்தால் கூட, மெடிகல் போர்டுக்குப் போ என்று சொல்லக் கூடிய நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

முச்சிறப்பு பாடத்தை எடுக்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் சொன்னதற்காக, 7 பாட வகுப்புகளை மூடிவிட்டதாக அவினாசிலிங்கம் கல்லூரியில் அறிவித்திருப்பதாக கூடச் சொல்லுகிறார்கள். இதைப்போல பல்வேறு முறைகேடுகள் இன்றைக்கு இருக்கின்றன. என்னிடத்திலே ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. அந்த அளவுக்கு நடந்துக் கொண்டிருக்கிறது.

கல்லூரி கல்வி இயக்குநருடைய செயல்பாடுகளை சென்னை உயர்நீதி மன்றம் முதல் பல நீதிமன்றங்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டும் கூட, ஆசிரியர்களுக்கு தக்க நீதிகள் வழங்கப்படவில்லை. சென்னை எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி நிர்வாகத்தை தனி அதிகாரிகளின் கவனத்திலே விட்டுவிடுவோம் என்று 82-லே சட்டமன்றத்திலே கொடுத்த வாக்குறுதி இன்னும் கூட நிறைவேற்றப்படவில்லை ; இன்னும் சில தனியார் கல்லூரிகளில் கூட ஆசிரியர்களை ஆளைவிட்டு அடிக்கக்கூடிய ஒரு கொடுமையான முறையிருக்கிறது. சான்றாக என்னிடம் சில பெயர்கள் கூட இருக்கின்றன. அதுவும் தவிர, ஜாதிமத அடிப்படையில் கூட ஆசிரியர்களை கல்லூரி முதல்வர்கள் பழி வாங்குகிறார்கள் என்ற விபரம் எல்லாம் கூட வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னாலே வைத்துத்தான் இன்றைக்கு ஆசிரியப் பெருமக்கள், தங்களுடைய கோரிக்கைகளை பல்வேறு சமயத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும்கூட, அரசு கேளாகாதாக இருக்கிற காரணத்தாலே, இன்றைக்குப் போராட்டம் என்ற ஒரு நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, பல்கலைக் கழகத்திலே இருக்கிற சட்டங்
கள் எல்லாம் கூட இன்றைக்கு ஜனநாயகத்திற்கு மாறாக ஒவ்வாத
சட்டங்களாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் திருத்த
வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்
னதைக் கூட இன்னும் நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார்
கள். இன்னும் கூட, டிரான்ஸ்பர் என்று சொல்லக் கூடிய
முறையிலே ஆசிரியர்களை பழி வாங்கக்கூடிய முறை இருக்கிறது.
பக்கத்திலே இருக்கிற ஒரு ஊரிலே காலியிடம் இருந்தாலும் கூட,
ஆசிரியர்களை வேறு ஊருக்கு மாற்றக்கூடிய ஒரு நிலைமை
இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, இதுபோன்ற
பல்வேறு நியாயமான கோரிக்கைகளை இன்றைக்கு அரசாங்கம்
ஏற்றுக் கொள்ளாத காரணத்தாலே, வேறு வழி இல்லாத
காரணத்தாலே, அவர்கள் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள்.

எனவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்
உங்கள் மூலமாக கல்வி அமைச்சரை கேட்டுக் கொள்வதெல்லாம்,
11 ஆம் தேதி என்று அவர்கள் நாள் கெடு நிர்ணயித்திருக்கிற
காரணத்தாலே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள். ஆசிரிய
பிரதிநிதிகளை அழைத்து உடனடியாக அரசாங்கம் செய்யக்
கூடிய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி, இந்த
போராட்டங்களை தவிர்த்து, இன்றைக்கு ஏடு தூக்கி,
நாளைக்கு நாடு காக்க இருக்கும் அந்த மாணவச் செல்வங்களை
ஒழுங்காக, முறையாக, நிம்மதியாக பரீட்சை எழுதுவதற்கான
முயற்சிகளை செய்ய வேண்டும். இப்போது ஆசிரியர்கள் போராட்
டம் துவங்கி இருக்கிற காரணத்தாலே, மாணவர்கள் மத்தியில்
மட்டும் அல்ல, பெற்றோர்கள் மத்தியிலும் கூட இன்றைக்கு
பதட்ட நிலை இருக்கிற காரணத்தாலே, இதைவிட வேறு
பிரச்னை இன்றைக்கு தமிழகத்தில் இல்லாத காரணத்தாலே,
பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்
டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலி
யுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற
ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதார் வர இருக்கின்ற தேர்வுகளில்
பங்கு ஏற்க முடியாது என்ற ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்
கிறார்கள். அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள்
என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்
களுடைய உணர்வுகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். கல்
லூரி ஆசிரியர்களுக்கு 1977-லிருந்து அவர்களுடைய பிரச்சினை
களையெல்லாம் நாம் தொடர்ந்து ஆராய்ந்து பல்வேறு நட
வடிக்கைகளை எடுத்து வருகிறோம். இங்கே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இந்தக் கல்லூரி ஆசி
ரியர்களுக்காக வாதாடியதை நான் பாராட்டுகிறேன் என்றாலும்
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தீராமல் இருந்த பல்





கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளை சம்பள விகிதங்
களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு வந்துதான் அமல்படுத்தியது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். தனியார் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும்
அரசுத் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் நாங்கள்
ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்ற வரையில் இருந்த வித்தியாசங்
களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வந்
திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
நாங்கள் அதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.
நான் இதைச் சொல்வதன் மூலமாக அந்த ஆசிரியர்கள் எங்கள்
மீது நம்பிக்கை வைப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே
பல்வேறு பிரச்சினைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும்
குறிப்பாக தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்
களைப் பற்றிப் பல்வேறு பிரச்சினைகளைச் சொன்னார்கள்.
நானே, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது,
விசாரித்த நேரத்திலே பல சந்தர்ப்பங்களிலே அந்த ஆசிரியர்கள்
மீது தவறு நிரூபிக்கப்பட்ட நிலையும் அல்லது ஓரளவுக்கு நிரூபிக்க
பட்ட நிலையும் ஆசிரியர்கள் சார்பாக நான் அந்தத் தனியார்
துறை நிறுவனங்களோடு பேசி ஓரளவுக்கு வேண்டிக் கேட்டுக்
கொண்டு சமரசம் ஏற்படுத்த நானே முயற்சித்திருக்கிறேன். நான்
அமைச்சர் என்ற நிலையில் இல்லாமல் அந்தப் பாதிக்கப்பட்ட
ஆசிரியர்களுக்காக ஓரளவுக்கு வேண்டிக் கேட்டுக் கொள்கிற
நிலைமைக்கே போய் இருக்கிறேன். காரணம் வேறு விதத்திலே
நடக்க முடியாத அளவுக்கு அங்கே நிலைமைகள் இருந்து வரு
கின்றன. அதிலும் குறிப்பாக 2, 3 ஆசிரியர்களைப் பொறுத்த
மட்டில் அது பெண்கள் சம்பந்தப்பட்டு இருப்பதால் நம்மால்
அங்கே எதுவும் மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை.
ஆகவே, அந்த அளவுக்கு அமைச்சர் என்ற நிலையைக் கூட மறந்து
விட்டு ஆசிரியர்களுக்காக நான் பேச இருக்கிறேன் என்பதை
அந்த ஆசிரியர்கள் உணர்வார்கள். அப்படி நான் பேசியதையே
ஒரு வாக்குறுதி தந்ததாக நோட்டீசிலே அடித்து நான்
நிறைவேற்ற வேண்டுமென்று சொல்வது நான் இவர்களை நம்பி
பேச ஆரம்பித்தால் அவர்கள் ஒரு வாக்குறுதி தந்ததாகக் கருதி
எனக்கு ஒரு பாடத்தைச் சொல்லித் தருவது போல் இருக்கிறது.
அவர்களுக்காக அந்த நிலைக்கும் நான் போய் வந்தேன் என்ற
நிலையை ஏற்றிருக்கிறபோது அதை அவர்கள் தவறாக ஏற்றுக்
கொள்ளக் கூடாது, அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
குறிப்பாக வேலூர் டி. சி. எம். காலேஜை இதே ஆசிரியப் பெரு
மக்களுக்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகம்
எந்த அளவுக்கு மோசமானது என்பதைத் தெரிந்து அரசு அந்த
அளவுக்கு நிலையை மேற்கொண்டது. பல வழக்குகளைப்
பார்க்கிறபோது நாம் ஒரு அரசாங்கத் துறையை வைத்துக்
கொண்டே—லா டிபார்ட்மெண்டை வைத்துக் கொண்டே அவர்
களிடத்திலே போராடுவதற்காக பெரும் கஷ்டப்பட்டுக் கொண்
டிருக்கிறோம். இன்றைய நிலையில் புதிதாக அந்தக் கல்லூரியை

ஏற்று நடத்திக் கொண்டிருக்கிற அந்தக் காலக் கட்டத்திற்காக
வாடகையும் நட்ட ஈடும் கேட்கிற அளவுக்கு அந்த நிர்வாகம்
வந்திருக்கிறது என்றால் அரசாங்கம் எடுக்கிறபோது தனியார்த்
துறைக் கல்லூரிகள் இந்த அளவுக்குப் போயிருக்கிறார்கள் என்
றாலும் அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும்கூட நாங்கள் ஆசிரி
யர்களுக்காக பெரிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.
ஒரு வழக்குத்தான் என்றாலும் அது அமைச்சருக்கும் நிர்வாகத்
துறைக்கும் எந்த அளவுக்குப் பாரமானது என்பதை குறிப்பாக
வழக்கு சம்பந்தமான அனுபவம் உள்ளவர்கள் அறிவார்கள்.
இப்படி எல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

அவினாசிலிங்கம் கல்லூரியைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்
கள் பாதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ஒரு போராட்டம்
நடைபெற்றது. அந்தப் போராட்டத்தின் போது, தனிப்பட்ட
வர்களைப் பற்றி முழக்கங்களை எழுதியதையும், பேசியதையும்
நான் ஆசிரியர்களிடத்திலே அறிவுரை சொல்லி உங்களுடைய
கோரிக்கைகளை நீங்கள் சொல்லலாமே தவிர தனிப்பட்டவர்
களை விமர்சனம் செய்வது என்பது கோரிக்கைகளையே பலவீனப்
படுத்தும் என்று சொல்லி அதற்குப் பிறகு உங்களுடைய பிரச்
சினைகள் பற்றி நீங்கள் போராட்டம் நடத்தலாமே தவிர அக
டமிக் மேட்டர்களில் பாட சம்பந்தமாக போராட்டம் என்று
சொல்வது சரியல்ல, எந்த அளவுக்குப் பாதகமோ அதைப் பற்றிச்
சொல்லுங்கள் என்று சொல்லிய பிறகு 2 ஆண்டுக் காலமாக
அமைதி நிலவி அவர்களுடைய பிரச்சினைகள் கூட என்னைப்
பொறுத்த வரையில் இரண்டு பேர்களோடும் பேசி பேசி ஓரள
வுக்கு அந்தப் பிரச்சினை முடிந்து இருக்கிறது என்று கருதுகிறேன்.
பல்கலைக் கழகத்தினுடைய ஆதரவோடும் ஆசிரியர்களுடைய
ஆதரவோடும் நிர்வாகத்தினுடைய ஆதரவோடும் அதை முடித்து
இருக்கிறேன். நானும் கோயம்புத்தூரைச் சேர்ந்தவன் என்ற
முறையில் அங்கே நடைபெறுகிற பிரச்சினைகள் எனக்கு ஓரள
வுக்கு நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.
நான் கோயம்புத்தூருக்குப் போகிறபோது ஆசிரியர்கள்
என்னை வந்து சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், நிர்வாகமும்
சந்தித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

ஆனால் இந்த குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை லீவு சம்பந்த
மாக 2 விதமான பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு
பிரச்சாரம் ஒரு ஆசிரியை கர்ப்பமாக இருந்தார்கள்; என்றும் அவர்
கள் பிரசவ லீவு கேட்ட போது அந்த பிளே கிரௌண்டில் ஒரு
ரவுண்டு ஓடச் சொல்லி அபார்ஷன் செய்யச் சொன்னார்கள் என்
றும் ஒரு புகார் இருந்தது. அதைப்போலவே மாண்புமிகு உறுப்
பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறியது போல் அந்த கோடைக்
காலத்தில் குழந்தை பெறுவதற்கு ஏற்ப நீங்கள் இருக்க வேண்டும்.





குழந்தை பெற வேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார்கள்.
அது எப்படி முடியும் என்று கேட்டார்கள். இப்போது அப்படி
எல்லாம் சொல்லக்கூடாது, அதெல்லாம் முடியும். ஆகவே அறிவு
வளர்ந்து இருக்கிற காலத்தில் அது உங்களுக்கு தெரிந்து இருக்க
வேண்டும். (குறுக்கீடு) ஆகவே அது தெரியாது என்று சொல்
வதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. ஆனால் நான் இங்கே
குறிப்பிட விரும்புவது நான் போய் ஒவ்வொருமுறையும் அந்த
ஆசிரியர்களை சந்திக்கின்ற நேரத்தில் இந்தப் பிரச்சினை இப்படி
நடந்ததாக அவர்கள் சொல்லவில்லை. ஆகவே மாண்புமிகு
உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள
விரும்புவது தயவுசெய்து அதை வெரிபை செய்து பாருங்கள்.
அங்கு இருக்கிற ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களை கூப்பிட்டு
கேளுங்கள் அல்லது கோவைக்குச் செல்கிறபோது கூப்பிட்டுக்
கேளுங்கள். அப்படி தெளிவுபடுத்திக் கொள்வதற்குப் பிறகு
வேண்டுமானால் அந்தக் கருத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.
அதற்கு முன்னால் தயவுசெய்து அப்படிப்பட்ட கருத்தைச்
சொல்ல வேண்டாம். காரணம் மாண்புமிகு உறுப்பினர்
திரு. உமாநாத் போன்றவர்கள் சொல்கிறபோது
பத்திரிகையில் வரும். அப்படி வருகின்றபோது ஒரு கல்லூரி
நிறுவனத்தின்மீது ஒரு தப்பை இவ்வளவு மோசமான
நிறுவனமா என்று மாசு கற்பிக்கின்ற ஒரு நிலைமை
ஏற்பட்டு விடும். அதிலும் கோவையில் இப்படிப்பட்ட அநியாயம்
நடக்க விட்டுவிடமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுவும்
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் தொகுதி
யில் இருந்து கொண்டிருக்கிறது. அவருடைய கவனத்திற்கு வரும்.
நான் மேற்கு தொகுதியில் இருக்கிறேன். என்னுடைய கவனத்
திற்கு வரும். எங்களையும் மீறி சென்னைக்கு வருகிறது என்றால்
அது தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக
எங்களை மீறி அங்கு ஒன்றும் நடந்து விடமுடியாது. அவ்வளவு
மோசமாக போகின்ற அளவுக்கு அவர்கள் யாரும் இருக்க
முடியாது. அப்படி ஆசிரியர்களும் விட்டுவிடவும் மாட்டார்கள்.
இந்த தனிப்பட்ட ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பல்
வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. சிலதை எல்லாம் நாங்கள்
தடுக்க முடியாத நிலையில் சட்ட முறைகள் அமைந்து இருக்
கின்றன. என்கொயரி நடக்கிறது என்றால் அனுமதி கேட்கிறார்
கள் என்றால் தரமுடியாது என்று சொல்ல வேண்டும் அல்லது தர
வேண்டும். எப்படி சொன்னாலும் அது நிர்வாகத்திற்குச் சாதக
மான நிலைமையில் இந்தச் சட்டப்படி இருக்கின்றன. அதற்கு
வேண்டி நாங்கள் அதை தடுத்து நிறுத்திக் கொண்டு இருக்கிறோம்.
இப்போது எங்களுக்கு நோட்டீஸ் விட்டு இருக்கிறார்கள். இது
எல்லாம் எதனால் நடைபெறுகிறது என்றால் ஆசிரியர்களுக்கு
உதவ வேண்டும் என்று ஒரு நடவடிக்கை எடுக்கும்போது அரசாங்
கமே சட்டத்திற்குமாறாக நடக்கிறதோ என்ற ஒரு சந்தேகத்தை
அந்த நிறுவனம் ஏற்படுத்துகிறது. இன்றைக்கு கோர்ட்டுக்குப்
போனால் அது எந்த விதத்தில் வரும் என்று என்னால் சொல்ல
முடியாது. ஆனால் இப்படி எல்லாம் உதவ வேண்டும் என்று
சிக்கல்கள் இருந்தாலும்கூட நாங்கள் ஆசிரியர்களுக்கு உதவ

வேண்டும் என்ற கருத்துக்குத்தான் அதை எல்லாம் செய்து
கொண்டு இருக்கிறோம். இதிலே முக்கியமான பிரச்சினை என்பது
இடைக்கால நிவாரணம் என்பதுதான். இடைக்கால நிவாரணம்
என்பது பல்கலைக் கழக மானிய குழு அவர்கள் சம்பள குழுவை
ஆராய்வதற்காக ஒரு ஏற்பாடு மேற்கொண்டிருக்கிறார்கள்.
அது வருவதற்குள்ளாக ஒரு நிவாரணத்தை தர வேண்டும் என்று
கேட்கிறார்கள். போன பல்கலைக்கழக மானியக் குழு சிபாரிசை
ஏற்றுக் கொண்டு அமுல் செய்யாத மாநிலங்கள் இருக்கின்றன.
குறிப்பாக கேரளா இருந்து கொண்டிருக்கிறது. அதை நாம்
ஏற்று நடத்திக் கொண்டு இருக்கிறோம். அதுவும் அ.இ.அ.தி.மு.
அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் ஏற்று நடத்திக்
கொண்டு இருக்கிறோம். ஆக இனிமேல் மானியக் குழு சிபாரிசு
வந்த பிறகு நாம் செய்ய வேண்டிய ஒன்றை இப்போதே கட்டுப்
படுத்துவது போல் இருக்கிறது என்றாலும் இடைக்கால நிவார
ணம் தருவதற்கு அல்லது அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள
முடியாத ஒரு விசேசமான சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்
கிறது. அது என்ன என்றால் நாம் மாநில அரசு ஊழியர்களுக்கு
ஒரு சம்பள கமிஷன் போட்டு இருக்கிறோம். அவர்கள் இந்தக்
கோரிக்கையை வைக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மறுத்துக்
கொண்டிருக்கிற ஒன்றைதான் இவர்கள் ஏற்றுக் கொள்ள
வேண்டும் என்று வற்புறுத்தும் போது-ஆனால் இது மற்ற மாநிலங்
களில் இல்லாத ஒரு சூழ்நிலை. இந்த சூழ்நிலையில் நாங்கள்
இடைக்கால நிவாரணம் தர வேண்டும் என்று அங்கே சிபாரிசு
செய்தால் இங்கே கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்வதில்
ஒரு சரியான நியாயம் இருக்க முடியாது. இங்கே இல்லை என்று
சொல்லிவிட்டு அங்கே அவர்களுக்கு ஏறக்குறைய அந்த முறையில்
தான் சொல்ல முடியும். ஆகவே ஆசிரியர்களை பாதுகாக்கின்ற
அளவுக்கு நாம் எதிர்காலத்தில் நடந்து கொள்வதற்கான ஒரு
வாக்குறுதியை தரமுடியுமே தவிர மாறாக அவர்களுடைய நலன்
கள் பாதுகாப்பதில் அக்கறைக் கொள்ளவே முடியும் என்று
சொல்லலாமே தவிர இப்போதே நிலவரம் தெரியாத நிலைமையில்
அதுவும் மாநில அரசு ஊழியர்கள் கேட்டு நாம் மறுத்து இருக்கிற
சூழ்நிலையில் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்
பார்ப்பது சரியாக இருக்குமா என்பதை கல்லூரி ஆசிரியர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதில் இருக்கின்ற முக்கியமான
பிரச்சினை தேர்வு. தேர்வு என்பது 1 ஆண்டு காலம், 2 ஆண்டு
காலம், 3 ஆண்டு காலம் படித்த மாணவர்கள் பல்கலைக் கழக
தேர்வு எழுத இருக்கிறார்கள். இது 6 மாத காலமாக திட்ட
மிட்டு நடத்தப்படுகின்ற ஒன்றாகும். இப்பொது அந்த நேரத்
திலே அது நடைபெறவில்லை என்றால், அது 3 மாதம், 4 மாதம்
காலம் மறுபடியும் திட்டமிட்டு நடத்துவதற்கு அந்த டைம்
டேபிள் மறுபடியும் போட்டு நடத்துவதற்கு ஆகும்.
அப்படி ஒரு 2 மாதம் ஆனாலும்கூட திருத்த
திருத்தி முடிவுகளை வெளியிட அதுவும் இப்போது இருக்கிற
நிலைமையில் அது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இவைகள்
எல்லாம் முடிய ஒரு செமஸ்ட்டர், கல்வி மாணவர்களுக்கு





பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்படலாம் அல்லது மேல் வகுப்பு
களிலும் சேருவதற்கான போட்டிகளில், இவர்கள் கலந்து கொள்ள
முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே தேர்வு, தேர்வு
முடிவுகள், தேர்வு சம்பந்தப்பட்ட வேலைகளை செய்ய மறுப்
பது என்பது மாணவர்களை யாருக்காக இந்தக் கல்லூரி நடத்தப்
படுகிறதோ அந்த மாணவர்களுடைய வாழ்க்கையை பெரும்
அளவுக்கு பாதிக்கக் கூடிய ஒன்றாகும்.

நான் இந்த மன்றத்திலேயும், மேலவையிலேயும் கூறி வந்த
தைப் போல, போராட்டம் நடத்துகின்ற உரிமை அனைவருக்
கும் இருக்கிறது; ஆனால் அது இன்னொரு நபரை—மூன்றாவது
நபரைப் பாதிக்கின்ற அளவிற்கு இருக்கக் கூடாது. அதை ஓரள
விற்குத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
ஆகவே, மாணவர்களுடைய எதிர்கால வாழ்வை நினைத்து அவர்
கள் இந்த வகையான போராட்டங்களைக் கைவிட வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்பற்றிப் பேசுவது என்பதில் எங்களுக்கு எந்தவிதமான
சிரமமும் கிடையாது. அந்தஸ்தோ, பிரிஸ்டிஜோ பார்க்கின்ற
வழக்கம் இந்த அரசைப் பொறுத்த வரையில் கிடையாது. அவர்
கள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வருகிறார்கள். பேசுகிறார்
கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவேளை நினைக்கலாம்,
இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசு பேசுகிறது ; அதற்குப்
பிறகு ஆசிரியர்களோடு தொடர்பு இல்லை என்று அப்படி யாரும்
நினைக்க வேண்டாம்.

என்னைப் பொறுத்தவரையில், கட்சிக்காரர்களோடு இருக்
கின்ற தொடர்பைவிட ஆசிரியர்களோடு இருக்கின்ற தொடர்பு
அதிகம். தினந்தோறும் பத்து பேர், இருபது பேர் வந்து ஏதா
வது பிரச்சினைக்காக பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
அதில், கல்லூரி ஆசிரியர்களும் வந்து கொண்டும், போய்க்கொண்
டும்தான் இருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையானாலும் வரு
கிறார்கள், போகிறார்கள். ஆகவே, இன்றுவரையிலும் பேசா
மல் இருந்தோம் என்று கூடச் சொல்ல முடியாது. ஆகவே,
புதிதாகப் பேசவேண்டுமென்ற நிலைமைகள் கூட இல்லை.
பேசிக் கொண்டு இருக்கின்ற நிலைமைகளைத்தான் தொடர்ந்து
பேச வேண்டிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் அவர்களோடு பேச
வும், அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும்
தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன். ஆகவே, அரசைக் கண்டு அஞ்சியோ அல்லது அரசு
ஏதாவது செய்து விடுமோ என்று நினைத்தோ இந்தப் போராட்
டத்தைக் கைவிட வேண்டுமென்றுகூட நான் கேட்கவில்லை.
நம்முடைய மாணவர்களின் நலனை மனத்தில் வைத்து இதைக்
கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1984 மார்ச் 31

10, 15 ஆண்டுகளாக ஒரு அமைதியின்மையும், ஒரு கட்டுப்
பாடின்மையும் வளர்ந்து வந்திருந்த கல்லூரிகல்வி நிலையில், கடந்த
இரண்டாண்டுகளாக ஓரளவு சீர்த்திருந்தி இருக்கிறது. ஆனால்
கல்வித் தரம் உயர்ந்தது என்பதிலோ அல்லது சீர்திருந்தி விட்டது
என்பதிலோ நமக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றாலும் அதற்
கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றுதான் அரசு
நினைத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், மறு
படியும் அந்த அமைதியின்மையும், கட்டுப்பாடின்மையும் வரு
கின்ற சூழ்நிலைகளைப் புதிதாகப் தோற்றுவிக்க வேண்டாமென்று
தான் கல்லூரி ஆசிரியர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகச் சட்டங்களைத் திருத்துவதில் அவர்கள்
சொல்லுகிறார்களோ இல்லையோ நாமே முன்முயற்சி எடுத்துக்
கொண்டு, புதிதாகச் சட்டங்களைக் கொண்டு வந்து, அவைகள்
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பழைய சட்டத்திலேயும்
திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்
கொண்டு வருகிறோம். பல்கலைக் கழக மானியக் குழுவி
னிடத்தில் பலவற்றைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.
அவர்களுக்கு ஒரே மாதிரியான சட்டம் கொண்டு வர வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் அதற்கான
முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பிரைவேட் காலேஜ் பில் இங்கே கொண்டுவரப்பட்டு நிறை
வேற்றப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம். நாம் சொல்லித்
தான், சட்ட பூர்வமாகக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கி
றோம். போன சட்டசபையில் நிறைவேற்றியிருக்கிறோம்.

இதையெல்லாம் பார்க்கின்றபொழுது, கல்லூரி ஆசிரியர்
களைப் பொறுத்தவரையில் அரசு சும்மா இருக்கவில்லை; அவர்
களை அரசு அலட்சியப்படுத்தவில்லை என்பதும், அவர்களுடைய
பிரச்சினைகளை நாம் தொடர்ந்து கவனித்து, நிறைவேற்றிக்
கொண்டிருக்கிறோம் என்பதும் தெரியும்.

எனவே, இந்த அளவிற்கு விளக்கங்களை தந்து, அவர்கள்
இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, அரசோடு பேச்சுவார்த்தை நடத்தித் தீர்த்துக் கொள்ள
வேண்டுமென்ற வேண்டுகோளைவிடுத்து, இந்த அளவிற்கு நான்
பேசிய நிலையிலேயும், மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரி
வித்த நிலையிலேயும், மேலும் இந்த அவையின் இதர அலுவல்
களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசிய
மில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி
அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்
களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை
இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## 4. கவன ஈர்ப்பு.

### தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பகுதி பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, ''தர்மபுரி
மாவட்டம், காவேரிப்பட்டினம் பகுதியில் பாசனக் கால்வாயில்
கழிவு நீர் கலப்பதால் மக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத்
தலைவரவர்களே, காவேரிப்பட்டினத்தில் ஓடும் பெண்ணையாற்
றின் அருகே சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு
பாசனக் கால்வாய் செல்கிறது. பொதுப்பணித் துறையினரால்
இப்பாசனக் கால்வாய்க்கு சிமெண்டு கான்கிரிட் தடுப்புச் சுவர்
கட்டப்பட்டுள்ளது. இச்சுவர் பாசன வாய்க்கால் நீர் ஆற்றில்
கலக்காமல் தடுத்து வருகிறது.

தற்போது நான்கு இடங்களில் சாக்கடை நீர் பாசனக் கால்
வாயில் கலக்கிறது. இந்தப் பாசனக் கால்வாயின் நீரை மக்கள்
குளிக்கவோ, குடிக்கவோ, பயன்படுத்துவது இல்லை. ஆற்று
நீரைக்கூட நேரிடையாகக் குடிக்க உபயோகப் படுத்தப்பட
வில்லை. நீரைச் சுத்திகரிப்பு செய்து குளோரைன் கலக்கப்பட்டு
அந்த நீரைத்தான் அந்தப் பகுதி மக்கள் குடித்துக்கொண்டு இருக்
கிறார்கள்.

அதிலே உள்ள முக்கியமான பிரச்சினை என்னவென்றால்,
குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற பிரச்சினையாகும்.
அந்தப் பாலம் கட்ட வேண்டுமென்று டெண்டர் கோரப்பட்டிருக்
கிறது. உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன,
ஆகவே, சீக்கிரம் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஆறில்லா ஊரில் அழகு பாழ் என்பார்கள்.
ஆறு இருந்தும் அது கவனிக்கப்படாத காரணத்தினால் காவேரிப்
பட்டின நகரத்தினுடைய அழகு பாழாக்கக்கூடிய நிலைமை
யிலே இருக்கிறது. அங்கே பாசனக் கால்வாய் 3 அடி,
4 அடி உயரம் கட்டியிருக்கிறார்கள்; அதிலே படிக்கட்டு
இல்லை. ஆற்றிலே குளித்துவிட்டு வருகின்றவர்கள் சேற்றிலே
கால் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. படிக்கட்டும்
இல்லாத காரணத்தால் துணி மூட்டைகளையும் சுமந்து
கொண்டு 3 அடி தூரம் உயர ஏறி, இறங்கி சேற்றிலே கால்
வைக்க வேண்டிய நிலைமை பெண்களுக்கு வரும்போது,
மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே, காவேரிப்
பட்டினத்தில் முக்கிய தெருவாக இருக்கிற பன்னீர்

செல்வம் தெரு, அப்பாசாமி நாயுடு தெரு என்று இருக்கக் கூடிய அந்தத் தெருக்களுக்கு நேராக அந்த ஆற்றைக் கடக்கக் கூடிய இடத்தில் படிக்கட்டுகளைச் சரி செய்யவும் பாலங்களைக் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மூலம் அறிகிறேன். அதை வேகப்படுத்தி, விரைந்து செய்து அந்த மக்களைக் பாதுகாக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாக வேகப்படுத்த ஆவன செய்யப்படும்

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 30(3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட திர்மானத்தை மொழிகிறேன்.

'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள எண் 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் என்கிற தலைப்பின்கீழ் 2-வதில் உள்ளதை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. அறிவிப்புகள்.

(அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1984 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர், தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7 அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி,

(ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984, (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு; தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் —தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[1984 மார்ச் 31

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,05,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே "To discuss policy" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,05,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, "சென்னையில் உள்ள பெருநகர் நீதிபதிகளின் அலுவலகம் பழைய கட்டிடங்களில் நடத்தப்படுவதால் தற்கால மக்கள் தொகைக்கேற்ப குற்றங்கள் அதிகமாக இருப்பதால் விசாரணைக்கு மக்கள் வருவதற்கு ஏற்றவகையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகிற ரூ. 12,05,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, "திருநெல்வேலியில் நீதிமன்ற கட்டிடம் திறக்கப்பட்டும் இன்னும் செயல் படாமல் இருப்பது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,05,40,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "



1984 மார்ச் 31]

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்திற்கென தனியாக தொழில் நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டும் என விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,05,40,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,22,56,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "To discuss policy" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,22,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, "சென்னை சிறைச் சாலையில் உள்ள 'சி' வகுப்பு கைதிகளைப் பார்ப்பதற்கும், பேசுவதற்கும் தற்போது உள்ள வசதியை மாற்றி நல்ல வசதியாக காணுவதற்கும், பேசுவதற்கும் எந்த விதமான இடையூறுகள் இல்லாமல் இருக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,22,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, "ஆயுள் தண்டனை கைதிகள் 10 ஆண்டுகள் முடிவு பெற்ற உடன் விடுதலை செய்யப்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,22,56,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ''பெருந்
துறை கிளைச் சிறைச்சாலைக்கு முறையான கழிவறை வசதி
செய்வது பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்
மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,22,56,000 இல்
ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்
கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு
வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்
னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, கொள்கை விளக்க குறிப்புகளில் ** கொடுக்
கப்பட்டிருப்பவைகளை நான் அவையில் படித்ததாகக் கருதி
அவைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை கேட்ட
பிறகு என்னுடைய பதிலை நான் நல்குகிறேன்.

*திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களே, மானியக் கோரிக்கை 13—நீதி நிர்வாகம், மானி
யக் கோரிக்கை 14—சிறைச்சாலைகள் ஆகியவற்றில் நான் சார்ந்
திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில
கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில்
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீதி நிர்வாகத்திற்கு ரூபாய்
12,05,40,000-க்கு மேற்படாதத் தொகையும், சிறைச்சாலைகள்
நிர்வாகத்திற்கு ரூ. 7,22,56,000-க்கு மேற்படாத தொகையும்
அரசுக்கு வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கோரி
இருக்கிறார்கள். இவ்வாறு கோரியிருக்கிற தொகைகள் மிகவும்
குறைவானது என்றே நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக் கொண்டால் உயர்நீதி
மன்றத்தில் கடந்த 4, 5 ஆண்டுகளாக 25 நீதிபதிகள் இருக்க
வேண்டியதில் 19 நீதிபதிகள் தான் இருந்து வருகிறார்கள்.
இதன் காரணமாக ஆயிரக்கணக்கான வழக்குகள் அங்கே தேங்கி
இருக்கின்றன. கடந்த 4, 5 ஆண்டுகளாக நீதிபதிகள் நியமிக்கப்
படாமல் இருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன என்பதை
அறிய விரும்புகிறேன்.

---

**735—802ஆம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப்
பெற்றுள்ளன.





(முற்பகல் 11-00)

25 நீதிபதிகள் சென்னை ஹைக்கோர்ட்டில் இருக்கிறார்கள்
என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீத விகிதாச்சாரப்படி
பார்த்தால் 2 நீதிபதிகள் அங்கே இருக்க வேண்டும். ஆனால்
இன்றைக்கு ஒரே ஒருவர் தான் இருக்கிறார். மேலும், இதுவரையில்
அரிசனங்கள் யாரும் டைரக்டாக உயர்நீதிமன்ற நீதிபதிகள்
ரெக்ரூட் செய்யப்படவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு
அமைச்சர் அவர்களிடத்தில் தாழ்மையோடு கேட்டுக் கொள்வது,
தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம அந்தஸ்து, சமவாய்ப்பு கொடுக்
கப்பட வேண்டும் என்ற முறையில், சட்டப்படி அவர்களுக்குக்
கிடைக்க வேண்டிய 18 சதவீத ஒதுக்கீடு கொடுக்கப்படுகின்ற
முறையில், இரண்டு நீதிபதிகள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில்
இருந்து நியமிக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மதுரையில் ஒரு உயர்நீதிமன்ற கிளையும், சென்னையில்
ஒரு உச்ச நீதிமன்ற கிளையும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்து
கொண்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டு
இருக்கிறார்கள். இந்தக் கருத்து 4-5 ஆண்டுக் காலமாகச் சொல்
லப்பட்டு வருகிறது. இது இந்த அளவிற்குக் கால தாமதம்
ஆவதற்கான காரணம் என்ன? இந்த விஷயத்தில் அரசாங்கம்
போதிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

கடந்த 10 ஆண்டு காலமாக டைரக்டாக டிஸ்டிரிக்ட் முன்சீப்
நியமிக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அறிவார்கள். இன்றைக்கு பல்வேறு மாவட்டத்திலும் சட்டக்
கல்லூரி ஏற்படுத்தியிருக்கிறோம். இதன் காரணமாக வருஷா
வருஷம் புதிதாக ஏராளமான வழக்கறிஞர்கள் வந்து கொண்டு
இருக்கிறார்கள். அந்த அளவிற்கு வழக்குகள் வருவது இல்லை.
மேலும் நீதிமன்றத்திற்கும் நேரடியாக ரெக்ரூட்மென்ட் செய்வது
இல்லை என்பதால் அவர்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்
கிறது. ஆகவே, டைரக்டாக டிஸ்டிரிக்ட் முன்சீப் பதவிகளுக்கு
தேர்வுகள் நடத்த தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக
ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மாவட்ட நீதிபதிகளுக்குக்
கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. உயர்
நீதி மன்ற நீதிபதியாக ஒருவர் இருக்கிறார் என்றால் அவர்
தன்னுடைய ஸ்டான்டர்ட் ஆப் லிவ்விங்கிற்கு ஏற்ற வகையில் கார்,
பங்களா போன்றவை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.
அவர்களுக்கு தற்போது கொடுக்கப்படுகிற சம்பளம் போதாது.
புதிதாகத் தொழிலுக்கு வந்த வழக்கறிஞர்கள் 5,000, 10,000
ரூபாய் என்று சம்பாதித்து, கார், பங்களா வைத்திருக்கும் போது,
உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 3,500 ரூபாய் அல்லது 4,000
ரூபாய் சம்பளம் கொடுப்பது என்பது மிகவும் குறைவு. அதை
உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1984 மார்ச் 31

இன்றைக்கு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்களுக்கு கார் வழங்குகிறோம்.
அவர்கள் ஹெட் ஆப் தி டிப்பார்ட்மென்ட் என்ற முறையில்
மாவட்டத்தில் இருந்தால் மட்டுமே கார் வழங்கப்படுகிறது. அந்த
அந்தஸ்தில் உள்ள மற்ற நீதிபதிகளுக்கு கார் வழங்கப்படுவது
இல்லை. அவர்களுக்கும் கார் வழங்கப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

நாம் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம்.
அந்தப் பல்வேறு சட்டங்களில் ஓட்டைகள், ஆம்பிகியூட்டிஸ்
அதிகமாக இருக்கின்றன. அதனால் மனதிற்குத் தோன்றியவாறு
நீதிமன்றத்தில் தீர்ப்பு சொல்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த
நிலையில் பணிவோடு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்
படுகிறேன். நாம் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தோம்.
1976 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒரு கடன் நிவாரணச் சட்டம்
கொண்டு வந்தது அதிலே தெளிவாகஇருந்தது. 2,400 ரூபாய்க்குக்
குறைவாக வருமானம் உள்ளவர்களாக இருந்தால் அல்லது
நஞ்சை ஒரு ஏக்ர்க அல்லது புஞ்சை 2 ஏக்கருர்குக் குறைவாக
வைத்திருப்பவர்களாக இருந்தால் அவர்களுக்குக் கடன்நிவாரணம்
அதில் இருந்து விதி விலக்கு என்று சொல்லி, அவர்கள் கடனைத்
திருப்பிக் கட்ட வேண்டாம், என்று தெளிவாகப் போடப்பட்டு
இருந்தது. ஆனால் நாம் கொண்டு வந்த 13/83 ஆகட்டும், 40/79
ஆகட்டும், மற்ற சட்டங்களாகட்டும், இந்த மாதிரி தெளிவான
நிலையில் கொண்டு வரப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்
கிறேன். ஒருவருக்கு 4,000 ரூபாய் வருமானத்திற்குக் குறைவாக
இருந்தால், அல்லது 25,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து வைத்
திருந்தால், அல்லது நிலங்கள் அந்த அளவிற்குக் குறைவாக இருந்
தால், சட்டப்படி விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று இருக்
கிறது. 4,500 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வருகிறது
என்று எப்படி நிர்ணயிக்க முடியும்? மாதச் சம்பளம் பெறுப
வராக இருந்தால் அவர் இவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்
பதை வைத்து அதை நிர்ணயித்து விடலாம். ஆனால் விவசாயி
என்கிறபோது அவனுடைய வருமானத்தை எப்படி நிர்ணயிப்பது?
அதற்கு எந்த விதமான கைய்ட்லைன்ஸூம் கொடுக்கப்படவில்லை.
ஒரு இடத்தில் உள்ள நிலத்தின் மதிப்பை வைத்துக் கொண்டு
நிர்ணயிக்கலாம் என்று சொன்னால், அதற்கும் கைய்ட்லைன்ஸ்
கொடுக்கப்படவில்லை. இப்படி கைய்ட்லைன்ஸ் இல்லாத கார
ணத்தால் ஒவ்வொரு நீதிபதியும் ஒவ்வொரு விதமான முறையில்
தீர்ப்பு சொல்கின்ற நிலைமையேற்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், ஒருவர் இரண்டு ஏக்கர்
புஞ்சை வைத்து இருக்கிறார் என்றால், உண்மையிலேயே அந்த
நிலத்தின் மதிப்பு 2,000 ரூபாய் அல்லது 3,000 ரூபாய் என்று
இருக்கலாம். ஆனால் பக்கத்தில் உள்ள ஒருவரின் நிலத்தின்
மதிப்பு 50,000 ரூபாய் என்று சாட்சி சொன்னால் அதைவைத்துக்
கொண்டு இதையும் அதே அளவுமதிப்பீடு செய்து, அந்தக்
கடன் நிவாரணத்திற்கு அவர் தகுதியில்லை என்று சொல்லிவிடும்
நிலை இருக்கிறது. ஆகவே நாம் கொண்டு வரும் சட்டம் இனிய



1984 மார்ச் 31] [திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]

ராக இருக்க வேண்டும். பாமர மக்களுக்கும், படிக்காதவர்களும்
புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால், குறிப்
பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
வந்ததில் இருந்து கொண்டுவரப்பட்ட பல சட்டங்களில் இருந்த
குறையின் காரணமாக அவை கோர்ட்டில் தோற்கடிக்கப்
பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

மேலும் குத்தகை நிலத்திலிருந்து குத்தகைப் பாக்கிக்காக
வெளியேற்றக் கூடாது என்று நாம் சட்டம் போட்டிருக்கிறோம்.
ஆக்ட் நம்பர் 26/83—ஏதாவது காரணத்தினால் குத்தகை கட்ட
முடியவில்லை என்றால் உடனே அந்த நிலத்திலிருந்து வெளியேற்
றக்கூடாது என்பது நம்முடைய சட்டம். மழையின் காரணமாக
கட்ட முடியாமல் போகலாம், வறட்சியினால் கட்ட முடியாமல்
போகலாம். இப்படிப்பட்ட நேரங்களில் குத்தகைதாரர்களுக்குப்
பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான் இந்தச் சட்டம். ஆனால் சட்
டத்தில் இருக்கிற ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக்
கொண்டு, நிலச் சொந்தக்காரர்கள் சிவில் கோர்ட்டில் கேஸ்
போட்டு குத்தகையை வசூல்செய்து கஷ்டப்படுத்துகிறார்கள் ரிசீவர்
போட்டு வசூல் செய்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள்
எல்லாம் இருக்கின்றன. நாம் போட்ட சட்டங்களை முறையாகச்
செயல்படுத்த முடியவில்லை, பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதற்
கும் கடவுளுக்கு அடுத்தபடியாக இருப்பவர் நீதிபதி என்று அந்த
அளவுக்கு நீதிபதிகள் மதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த
நீதிபதிகள் சரியாக வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு
வழங்காததால் இன்றைக்கு தமிழ்நாட்டில் நியாயம் முக்கால்வாசி
கள் கெட்டு விட்டன என்று சொல்லலாம். அதனுடைய முக்கிய
காரணம் அவர்களுக்கு போதுமான அளவுக்கு சம்பளம் கொடுக்கப்
படவில்லை என்று சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அரசு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள்.
ஜி.பி.பி.பி.ஏ.பி.பி.2,ஏ.பி.பி.1 நியமனம் செய்யப்படுகின்றபோது
திறமையானவர்களைப் பார்த்து தேர்ந்தெடுப்பதில்லை.
கட்சிக்காரர்களா, அல்லது கட்சி ஆதரவாளர்களா என்று
பார்க்கிறார்கள். அதைப் போன்று பப்ளிக் பிராசிகியூட்டரை
நியமிக்கும்போது கட்சிக்காரரா என்று பார்த்து நியமிக்கிறார்,
கள். அவர்களுடைய திறமையைப் பார்ப்பதில்லை. ஆளும்
கட்சிக்கு வேண்டியவர்களாக இருந்தால், அவர்களுக்குத் திறமை
இல்லாவிட்டாலும், நியமிக்கப்படுகிறார்கள். அதனால் சரியான
முறையிலே வழக்காடாமல், கேஸ் கெட்டுப் போகிறது.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் விரைவிலே வழங்க வேண்டு
மென்று நினைக்கிறோம். அதற்கான நிலத்திதை ஆர்ஜிதம் செய்
கிறபோது அதனால் பல வழக்குகள் வருகின்றன. இன்றைக்கு
அரிசனங்களுக்கு வீட்டுமனை சம்பந்தமாக நிலஆர்ஜிதம் செய்யப்

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1984 மார்ச் 31

பட்ட வழக்குகள் கோர்ட்டில் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. நல்ல எண்ணத்தோடு சட்டம் கொண்டு வந்தோம். ஆனால் செயல்படுத்த முடியவில்லை.

ஆகவே, அவர்களுக்கு வீட்டுமனை வழங்குவது சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைவிலே தீர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்த மாதிரி வழக்குகளை சீக்கிரமாகத் தீர்க்கநடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். அரிசனங்களுக்கு யார் யார் தீங்கு செய்கிறார்களோ அவர்கள் சம்பந்தமாக வரக்கூடிய வழக்குகளை விசாரிப்பதற்குத் தனிப் போலீஸ் படை வைத்திருக்கிறோம். ஆனால் இந்த 'அன் டச்சபிலிட்டி' சம்பந்தமாக வருகிற வழக்குகளை விசாரிப்பதற்கு ரிட்டயர்டு ஸ்டேஜில் இருக்கிற நீதிபதிகளைப் போடுகிறோம்; ரிட்டயர்டு ஸ்டேஜில் இருக்கிற சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்களைப் போடுகிறோம். அதைப் போன்று ரிட்டயர்டு ஸ்டேஜில் இருக்கிற ஹெட்கான்ஸ்டபிள்களைப் போடுகின்றோம். அதனால் அவர்கள் ஆக்டிவாக வேலை செய்யவில்லை. ஏதோ மாடு வந்தது, பிடித்துக் கட்டு என்பார்களே, அந்த மாதிரியாகச் செயல்படுகிறார்கள்.

இந்த அன்டச்சபிலிட்டி வழக்குகள் எப்படி நடைபெறுகின்றன என்பதற்கு ஒருசில உதாரணங்களைச் சொல்கிறேன். சிதம்பரத்திலே மாணிக்கம் என்ற ஆசிரியர் இந்த மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் போட்டார். அவரை பள்ளப் பயலே, பறப் பயலே, சக்கிலிப் பயலே என்று திட்டியதால் கேஸ் போட்டார். வழக்கை விசாரிப்பவர் என்ன சொல்கிறார் என்றால், "நீ உண்மையிலே பள்ளன் தானே" அதனால் பள்ளப் பயலே, பறப்பயலே என்று சொன்னால் என்ன வந்து விட்டது, போடா" என்று சொல்கிறார். இது சிதம்பரத்திலே நடைபெற்ற ஒரு சம்பவம்.

அதைப்போன்று மூர்த்தி என்ற ஒருவர் இந்த மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கேஸ் போட்டார். அந்தக் கோர்ட்டில் இருந்த முன்சீப் அல்லது மாஜிஸ்ட்ரேட்டும் இந்த மாதிரித்தான் சொல்லியிருக்கிறார், கேள்வி கேட்டிருக்கிறார். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த வழக்குகளை விசாரிப்பவர்கள் நேர்மையாக நடக்க வேண்டும், சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும். யாருக்கும் பயப்படாமல் வழக்குகளை நடத்த வேண்டும். இப்படிப்பட்ட வழக்குகளைப் போடுவதற்கே பயந்துபோய், யாரும் முன்வருவதில்லை. அப்படி வந்தாலும் இந்த மாதிரித் தீர்ப்பு வழங்கினால் இந்தச் சட்டத்தினால் என்ன பயன் ஏற்படப்போகிறது? கேஸ் கொடுக்க வரும்போது போலீஸ்



1984 மார்ச் 31] [திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]

காரர்களே தடுக்கிறார்கள். ஆளை வைத்து மிரட்டுகிறார்கள். இதை எல்லாம் மீறி கோர்ட்டுக்கு வரும்போது நல்ல முறையில் விசாரித்து, நீதிபதிகள் தீர்ப்பு வழங்க வேண்டும்.

அரிசன மக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்ப
தற்கு என்றே ஜில்லாவுக்கு ஒரு கோர்ட் ஏற்படுத்தியிருக்கிறோம்.
திருச்சியிலே ஒரு கோர்ட் இருக்கிறது. அந்தக் கோர்ட்டுக்கு
60 மைல், 70 மைல் தூரத்திலிருந்து கூட அரிசன மக்கள் வர
வேண்டியிருக்கிறது. அப்படி 60 மைல், 70 மைல் தூரத்தி
லிருந்து வந்து கேஸ் போட்டாலும் அதைச் சரியாக நடத்துவ
தில்லை. 10 நாள், 15 நாட்களுக்கு ஒருமுறை வரச்சொல்
கிறார்கள். வருஷக் கணக்கில் கேஸ் நடக்கிறது. அதனால்
சிரமப்பட்டு வழக்கை நடத்த முடியாமல் கூடப்போய்விடுகிறது.
இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தாலுகா லெவலில் ஒரு மொபைல் கோர்ட்
ஏற்படுத்தினால் நல்லமுறையில் அரிசனங்களுக்கு அதிக சிரமம்
இல்லாமல் வழக்குகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க வாய்ப்
பாக இருக்கும்.

(முற்பகல் 11-10)

காட்டுமன்னார்கோவில் கோர்ட்டில் இருந்து ஒரு கேஸ் பரங்
கிப்பேட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, சிதம்பரத்
திலிருந்து வழக்கறிஞர் வருவதும் போவதும் சிரம
மாகிவிடுகிறது. காட்டுமன்னார் கோவிலுக்கும், பரங்கிப்
பேட்டைக்கும் இடையிலே ஒரு கோர்ட் ஏற்படுத்தினால்
மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

1969 ஆம் ஆண்டில் இளையபெருமாள் கமிட்டி ஏற்படுத்தப்
பட்டது. அந்தக் கமிட்டியினுடைய முக்கிய சிபாரிசுகள், அரி
சன மக்களை அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமுதாயத்
திலும் எப்படி முன்னேற்ற வேண்டுமென்பதுதான். அதற்காக
இளையபெருமாள் கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் பிர
காரம் ஒவ்வொரு தாலுக்காவிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக
தாலுக்கா போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சியில் ஒரு தாலுக்கா போர்டு ஏற்படுத்தி ஒரு
சேர்மன் என்றும் போட்டிருந்தார்கள். ஆனால், அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்படி இல்லை.
பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட, ஒவ்வொரு தாலுக்காவிலும்
ஒரு போர்டு போடவேண்டுமென்ற நிலையில்தான் இருந்
தார்கள்.

இன்றைக்கு நிறைய கேஸ்கள் பெண்டிங்காக இருக்கின்றன.
1981-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், 32,158 கேஸ்கள்
இருக்கின்றன. இதிலே ஏறக்குறைய 2,254 கேஸ்கள்தான் முடி
வுற்றிருக்கின்றன. மீதி சுமார் 29,000 கேஸ்கள் பெண்டிங்காக
இருக்கின்றன. அதுபோல 1982-83-இல் 33,813 கேஸ்களில்
183 கேஸ்கள்தான் முடிவுபெற்றிருக்கின்றன. இவைகளுக்
கெல்லாம்காரணம், போதிய நீதிபதிகள் இல்லாததுதான்.

[திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1984 மார்ச் 31

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். குளித்தலையில் ஒரு சப் கோர்ட்டை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கரூரில் ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் வேண்டுமென்று கேட்டேன். அது ஆய்வில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவைகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கோர்ட்டுக்குக் கட்டடம் கிடையாது. அங்குள்ள பெஞ்ச், நாற்காலிகள் எல்லாம் வக்கீல்கள் உட்கார முடியாத அளவிற்கு ஹைதர் அலி காலத்தில் உள்ளதைப் போல் இருக்கின்றன. அங்கு போய் உட்கார்ந்தால், சட்டையை கிழிக்கிறது, உட்கார்ந்து எழு தக்கூட முடியவில்லை. அந்த அளவிற்கு பழைய பெஞ்ச் ளாகவும் நாற்காலிகளாகவும் இருக்கின்றன. ஸ்டேஷனரி சாமான்கள் போதியளவிற்குக் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதி நிர்வாகத்திற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்தால்தான், ஜன நாயக நாட்டில், மக்கள் சுபிட்சமாகவும், சுமூகமாகவும் வாழக் கூடிய நிலை ஏற்படும். எனவே, நீதி நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறி இருக்கிறது.

அடுத்து, கைதிகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்: ஏற் கெனவே கைதிகளைப் பற்றி இந்த அவையிலே பேசப்பட்டிருக் கிறது. ஒருவன் சிறையிலே இருந்து வெளியே வரும்போது நல்ல கேரக்டர் என்ற சர்டிபிகேட்டைக் கொடுக்கிறார்கள். வெளியே வரும்போது போலீசிடமும் சர்ட்டிபிகேட் வேண்டுமென்றும் கேட் கிறார்கள். ஏற்கெனவே அவன் கைதியாக சிறையில் இருந்த வன். எனவே போலீசார் அவனுக்கு நல்ல சர்ட்டிபிகேட் கொடுப்பதில்லை. ஆகவே சிறையில் கொடுத்த சர்டிபிகேட்டை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்கள் பிற்காலத்தில் நல்வாழ்வு வாழும் பொருட்டு உத்தியோகம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

எல்லா மாவட்டங்களிலுமுள்ள சிறைக் கைதிகள் உண்ணா விரதம் இருந்ததை நாம் அறிவோம். அவர்களுக்குப் போதிய அளவிற்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் குற்றஞ்செய்தாலும்கூட பிற்காலத் தில் நல்வாழ்வு வாழக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவை மாற் றுத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டிற்கான மாண்பு மிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்



1984 மார்ச் 31] [திரு. மே. அ. இராசகுமார்]

பட்டிருக்கின்ற நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலை மான்யக் கோரிக்கையை வரவேற்று, இந்த மான்யத்தின் மீது ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நீதித் துறையிலும் சரி, சிறைச்சாலையிலும் சரி, பல்வேறு முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள். குறிப்பாக, தமிழகத்திலுள்ள பல்வேறு நீதிபதிகள் தாங்கள் பணி முடிந்தவுடன், வீடு திரும்பும்போது, குற்றவாளிகளுடன் செல் லும் நிலை இருப்பதை நேரில் கண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எல்லா மாவட்டங்களிலுமுள்ள நீதிபதிகளுக்கு கார்போன்ற வசதிகளைச் செய்துகொடுத்திருக்கிறார்கள்.

அதுபோலவே, நீதித்துறையிலும், ஏழை எளிய மக்கள் எளி தாகப் புரிந்துகொள்ளும் வகையில் தமிழை எல்லாத் துறை களிலும் புகுத்தியது போல் தீர்ப்புகளையும் தமிழில் வெளியிட தமிழ் மக்கள் அந்த நீதியை நன்றாகப் புரிந்து கொள்ளும்வண்ணம் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப் போலவே தமிழ்நாட்டிலே புதியதாக பல்வேறு நீதி மன் றங்களை ஏற்படுத்தி இன்று ஏழை எளிய மக்கள் வெகுதூரம் செல்லாமல் பக்கத்திலே உள்ள கோர்ட்டுக்குச் சென்று தங்க ளுடைய வழக்கை எடுத்துச் சொல்லி நீதி பெற ஆவன செய் திருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு புரட்சித் திட்டங்களை தமிழக முதல்வர் அவர்கள் செய்து தமிழக மக்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்று இருக்கிறார்கள்.

அதைப்போலவே இன்று தமிழக உயர்நீதி மன்றத்திலே தமிழ் தெரிந்த ஒருவர் தலைமை நீதிபதியாக வரவேண்டும் என்ற கருத்தையும் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதையும் பொதுமக்கள் பாராட்டுகிறார்கள். பொதுவாக இந்த நீதித் துறையிலே பல்வேறு சிறப்பு அம்சங்களைச் செய்திருந்த போதி லும் இன்னும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினால் அது மிகவும் நன்றாக இருக்கும். அவைகளில் குறிப்பாக இந்த டி.சி.ஆர். கோர்ட் என்பது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு கோர்ட்டுதான் இருக்கிறது. எனவே மாவட்டத்திலுள்ள அனைத்து அரிசன மக்கள் வெகு தூரத்தில் இருந்து அந்தக் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தக் கோர்ட்டுக்களைப் பரவலாக்கி எல்லா இடங்களிலேயும் ஏற்படுத்துவோமானால் மக்களுக்கு அதிக நன்மை பயக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, திருச்சியிலே வழக்கறிஞர்கள் தங்குவதற்கு சரியான இடம் இல்லை. ஆகவே, அங்கே வழக்கறிஞர்கள் தங்கு வதற்குக் கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. மே. அ. இராசகுமார்] [1984 மார்ச் 81

அதைப்போலவே திருச்சியில் மணப்பாறையில் உள்ள, முன்சீப்
கோர்ட்டில் இருந்து அப்பெலட் ஜுரிஸ்டிக்சனுக்காக கரூருக்குச்
செல்லவேண்டியிருக்கிறது. கரூர் என்பது 65 மைல், 70
மைல் தொலைவில் இருக்கின்றது. ஆகவே அந்த அப்பெலட்
ஜுரிஸ்டிக்சனை திருச்சிக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போலவே மணப்பாறையில் உள்ள குற்றவியல் நீதி
மன்றத்திலே ஒரு கேம்ப் கோர்ட் அமைத்துத் தர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே திருச்சியில் அதிகமான கட்டிடங்கள் இல்லா
ததினால் மாவட்ட நீதி மன்றத்தில் கூட்டம் அதிகமாக மிகவும்
நெருக்கடியான நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, அங்கே
இன்னும் பல கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே நீதித்துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு
வேலைப் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள்
இரவு 7 மணி, 8 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருக்கிறது.
ஆகவே அவர்கள் குறைகளைப் போக்க மேற்கொண்டு பணி
யாளர்களை அங்கே நியமித்து அவர்கள் வேலைப் பளுவைக்
குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே திருச்சி சிறையில் தண்ணீர் பற்றாக்குறை
இருக்கின்றது. அந்தக் குறையையும் தீர்த்து வைக்க வேண்டும்
என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து
முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, சிறைகளினுடைய நிர்வாகம், நீதி நிர்வாகம், ஆகிய
துறைகளைப் பற்றிய விவாதம் மிக முக்கியமான விவாதமாகும்.
சிறைச்சாலை என்பது அரசியல்வாதிகள் மட்டும் செல்லு
கின்ற இடமாக இல்லாமல், இன்றைக்கு இருக்கக்கூடிய
ஆட்சியில், ஆசிரியர்கள், மாணவர்கள், என்.ஜி.ஓக்கள், தொழி
லாளர்கள், விவசாயிகள், இப்படி சமுதாயத்தினுடைய பல்வேறு
துறையைச் சேர்ந்தவர்கள் சென்று வருகின்ற புண்ணியஸ்தலமாக
சிறைச்சாலை இருந்து கொண்டிருக்கின்றது. இன்னும்
சொல்லப்போனால் ஹரியானாவிலே ஒரு சிறைச்சாலையை
திறந்து வைப்பதற்காக அடிக்கல் நாட்டு விழாவிற்கு ஏற்பாடு
செய்தார்கள். கட்டிடம் கட்டி முடித்ததற்குப் பிறகு.
அவரே கைது செய்யப்பட்டு, சிறைக்குப் போகக்கூடிய நிலைமை
ஏற்பட்டது. இதைச் சொல்வதினாலே, நம்முடைய அமைச்ச
ருக்கு அந்த நிலைமை ஏற்படவேண்டும் என்று நான் சொல்வ
தாக தயவு செய்து கருதக்கூடாது. ஜனநாயக சக்கரத்
திலே அரசியல்வாதிகளும், மற்றவர்களும் தவிர்க்க முடியாமல்,
இன்றைக்குச் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டியவர்களாக
இருக்கிறார்கள்.



1984 மார்ச் 31]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாற்றுத் தலைவர்
அவர்களே, குற்றம் என்று ஒன்று இழைக்கப்படுமானால், அமைச்
சரும் செல்லத்தான் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகு
மான்கான் அவர்களும் செல்லத்தான் வேண்டும். நீதியினுடைய
ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். அதைப்பற்றி
நான் கவலைப்படவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : இந்த அரசாங்கத்தாலே பல்வேறு
குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ஏற்கெனவே பலமுறை
சிறைக்கு அனுப்பப்பட்டவன்தான் நான். அதற்காக
நம்முடைய அமைச்சரும் அந்த மாதிரி குற்றச்சாட்டுகளுக்கு
உள்ளாகவேண்டும் என்று நான் விரும்பவில்லை. இது எல்லாத்
தரப்பு மக்களும் போகக்கூடிய இடமாக ஒருவேளை இருக்குமோ
என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயாவது அதைப்பற்றிக்
கொஞ்சம் சிந்திக்கவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

(முற்பகல் 11-20)

ஆயுள் தண்டனைக் கைதிகள் சிறைச்சாலைகளில் பல்வேறு
வசதிகள் இல்லாமல் வாடுகிறார்கள். இது போன்ற
விவாதத்தை நடத்துவதன் மூலமாக அரசின் கவனத்
திற்கு கொண்டு வந்து, அவர்களின் பிரச்னையைத் தீர்ப்
பதற்கு ஓரளவிற்கு உதவியாக இருக்காதா என்ற நல்ல எண்ணத்
தோடுதான் இங்கே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

சிறை மானியத்திற்கு அதிகமாக தொகை ஒதுக்கப்பட வேண்
டும் என்பது லாபகரமான காரியம் அல்ல. அத்தகைய திட்டங்
களை நாம் நான்-பிளேனிங் என்று கூட சொல்கிறோம். ஆனால்
குற்றவாளிகளுக்கு மறு வாழ்வு அளிக்கின்ற ஒரு நல்ல
வாய்ப்பை ஏற்படுத்தி தரும்போது அரசு அதிலே லாப
நட்ட கணக்கு பார்க்கக் கூடாது. அந்த மனிதாபிமான அடிப்
படையில் குற்றவாளிகள் திருந்தி சமுதாயத்திலே நல்ல வாழ்வு
பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களை
சீர்திருத்துவதற்காக, அவர்களுடைய வசதிக்காக செலவ
ழிப்பது மிக மிக முக்கியமான பணியாகும். அந்த
அடிப்படையிலே தெரிவித்துக் கொள்கிறேன். துரதிருஷ்ட
வசமாக இன்றைக்கு சிறைச்சாலையில் கழிப்பிடங்கள்
கூட சரியாக இல்லை; தரப்படும் உணவு தரமானதாக இல்லை;
மருத்துவ வசதி சரியாக இல்லை. 15-3-1984 அன்று பாபு
என்ற ஆயுள் கைதியும், 17-3-1984 அன்று வேலு கவுண்டர் என்ற
ஆயுள் கைதியும் நெஞ்சு வலியால் சரியான மருத்துவ வசதி
யில்லாமல் வேலூர் சிறைச்சாலையில் இறந்து போயிருக்கிறார்கள்.
இவைகளையெல்லாம் அரசு கவனிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். சுகாதாரமான அறைகள் இல்லை.
இதுபோன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல் அங்கே பணியாற்றக்கூடிய வார்டர்
கள் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு
போலீஸ் காவலர்களுக்குத் தரப்படும் சம்பளம் தரப்படு
வதில்லை. ஆனால் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது.
இவைகளையெல்லாம் பரிசீலித்து, இந்தக் குறைகளைத் தவிர்ப்
பதற்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். காரணம் நாம் எவ்வளவோ வேறு
பல நல்ல காரியங்களுக்கு செலவு செய்கிறோம்.

இந்த வருஷம் அமைச்சர்களுக்கு 9 புது அம்பாசிடர் கார்கள்
வாங்க வேண்டும் என்பதற்காக 4 லட்சத்து 33 ஆயிரத்து 643
ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர்களுக்கு
புது கார்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. காரில்
போகாமல் அமைச்சர்கள் பாத யாத்திரையாக போக
முடியாது. அதற்காகக் கூடுதல் நிதியை கொடுத்திருக்கிறோம்.
அது மட்டும் அல்ல, 5-வது உலகத்தமிழ் மாநாட்டை நடத்தி
னோம். அதற்காக தமுக்கம் மைதானத்தில் பிரம்மாண்டமான
தோரண வளைவு கட்டுவதற்காக 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்
செலவு செய்கிறோம். எத்தனையோ குழு வைத்திருக்
கிறோம். வாரியம் வைத்திருக்கிறோம். வைஜயந்திமாலா
அவர்கள் இந்திரா காங்கிரஸின் கையை பலப்படுத்
துவேன் என்று சொல்பவர்கள், பம்பாயிலே இருக்கி
றார்கள். அவர்களுடைய கலைச் சேவையை பாராட்டி நாம்
நம்முடைய வரிப் பணத்திலிருந்து மாதம் 1,500 தருகிறோம்.
ராஜநர்த்தகிக்கு 1,500 ரூபாய் தருகிறோம்.
நம்முடைய தொகை போகிறபோது, சிறையிலே இப்படியெல்லாம்
கைதிகளின் நன்மைக்காக, அரசாங்கம் கூடுதல் நிதி இருக்கக்கூடிய
என்று சொல்வதற்காக நான் இவைகளைச் ஒதுக்கலாம்
தவிர வேறு அல்ல. சொன்னேனே

1836-ல் லார்ட் மெக்காலே உறுப்பினராக இருந்த
கமிட்டியினுடைய ரிப்போர்ட்டாக இருந்தாலும், 1919-ல்
தரப்பட்ட இந்தியன் ஜெயில் கமிஷன் ரிப்போர்ட்டாக
இருந்தாலும், தமிழ்நாடு ஜெயில் ரிஃபார்ம்ஸ் கமிட்டியின்
கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுடைய ரிப்போர்ட்டாக இருந்தாலும்,
இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டாக இருந்தாலும், கடைசியாக
உங்களுடைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட நரசிம்மன்
கமிட்டி ரிப்போர்ட்டாக இருந்தாலும் சரி, அவைகளில் சிறை
சீர்திருத்தத்திற்காக சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு அம்சங்
களை இன்னும் இம்பிலிமெண்ட் செய்யவில்லை.

திருவாளர்கள் டயஸ், வெங்கடராவ், நரசிம்மன் ஆகியவர்
கள் உறுப்பினர்களாக இருந்த அந்தக் குழுவிலே பல் கோரிக்கை
களை தந்திருக்கிறார்கள். அதிலே 178 சிபாரிசுகள் உள்ளன என்று
கருதுகிறேன். ஆனால் 23 மட்டும்தான் நிறைவேற்றப்பட்டிருக்
கிறது. எந்த மாதிரியான சிபாரிசுகள் என்றால் சிறைச்சாலைக்
குள்ளே உடல் பயிற்சி செய்யலாம். புதுக்கோட்டையில் உள்ள





சிறுவர்கள்சிறையில் அவர்கள் தலையணை வைத்துக்கொள்ளலாம்
என்பது போன்ற பைனான்சியல் கமிட்மெண்ட் இல்லாத சில
அம்சங்களைத்தான் அரசு கவனித்திருக்கிறதே தவிர, மற்ற அம்சங்
களை கவனிக்கவில்லை. பைனான்ஸுக்கு எங்கே போவது என்று
சொல்லவேண்டியதில்லை என்பதற்காகத்தான் இவைகளைக
கோடிட்டுக் காட்டினேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
சிறையிலே போடுகின்ற பத்திரிகைகள் எப்படி இருக்கின்றன.
என்று கேட்டால், அண்ணா பத்திரிகை போடுகிறார்கள் ஆளும்
கட்சி பத்திரிகையைப் போடவேண்டாம் என்று நான் சொல்ல
வில்லை. சுதேசமித்திரனைப் போடுகிறீர்கள். அது 5 ஆயிரம்
காப்பிகூட விலைபோகிறதா என்று சந்தேகம். ஆனாலும் உங்கள்
ஆதரவாளர்கள் அதனால் போடுகிறீர்கள். அதைப்போல
தினமலர், தினமணி பத்திரிகைகளைப் போடுகிறீர்கள். ஆனால்
ஒரு விடுதலைப் பத்திரிகையை போடக்கூடாதா? தீக்கதிர் பத்திரி
கையைப் போடக்கூடாதா? தினகரன் பத்திரிகையைப் போடக்
கூடாதா? முரசொலி பத்திரிகையைப் போடக்கூடாதா? எதிரொலி
பத்திரிகையைப் போடக்கூடாதா? ஜனசக்தி பத்திரிகையைப்
போடக்கூடாதா? என்ன காரணம்? ஏன் போட மறுக்கி
றீர்கள்? அங்கே இருப்பவர்கள் எல்லாம் எம். ஜி. ஆர்.
மன்ற ரசிகர்கள் மட்டும்தானா? அவர்களும் நாட்டு
நடப்பைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இல்லையென்றால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் முன்னாலே சொன்னது போல மதுரைவீரன்
சினிமாப் படம் பார்த்துதான் இந்தக் கட்சிக்கு வந்தேன் என்று
சொன்னதைப் போல, அது உண்மையாக இருக்கலாம், இல்லா
மலும் இருக்கலாம், அதை அவர் தான் மறுக்க வேண்டும்.
இப்படிப் போட்டால் எல்லோரும் கட்சிக்கு வந்து விடுவார்கள்
என்றா? இந்த மாதிரி சிறையில் இருப்பவர்களை இன்னொசன்
டாக, இக்னரண்டாக, இருட்டிலே வைத்திருப்பது நியாயம்
தானா, முறையானதுதானா என்று தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

ஒரு மாதத்திற்கு முன்னால் நான் கைது செய்யப்பட்டு சிறைச்
சாலை சென்றிருந்தேன். என்னுடைய வீட்டிலேயிருந்து பத்தி
ரிகைகள் அனுப்பப்பட்டன. சண்டே, இல்லஸ்ட்ரேட்டட்
வீக்லி ஆப் இந்தியா, புரோப், லிங்க், பிளிட்ஸ், கரண்ட் போன்ற
பத்திரிகைகளை வீட்டிலிருந்து அனுப்பினார்கள். ஆனால்
இதுபோன்ற பத்திரிகைகள் உள்ளேயே அனுமதிக்கப்பட
வில்லை. ஜெயிலரைக் கேட்டால் ஜெயிலர் சொன்னார்.
இன்ன இன்ன பத்திரிகைகள் அனுமதிக்கப்படலாம் என்று ரூல்
இருக்கிறது. ஆகவே இந்தப் பத்திரிகைகளை அனுமதிக்க முடி
யாது என்று சொல்கிறார். ஏதோ ஒரு காலத்திலே என்ன
பத்திரிகைகள் வரவேண்டுமென்று ஒரு விதியை வைத்துக்,

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 3

கொண்டு அந்த லிஸ்டிற்குள்ளே வரவில்லையென்றால் நீங்கள்
லிஸ்ட் போட்ட காலத்திற்கு பிறகு துவக்கப்பட்ட பத்திரிகைகள்
இருக்கின்றன, சண்டே, இந்தியா டுடே இவைகள் எல்லாம்
ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிப் பத்திரிகைகள் அல்ல. இல்லஸ்ட்
ரேட்டட் வீக்லி அப்படியல்ல, புரோப் அப்படியல்ல, லிங்க் அப்
படியல்ல, கரண்ட் அப்படியல்ல. இந்தப் பத்திரிகைகள் உள்ளே
போகக்கூடாது என்று தடை விதிப்பது எந்தவிதத்திலே நியாயம்
என்று நான் கேட்க விரும்புகிறேன்.

சிறையில் 10 ஆண்டுகளுக்குமேலே ஆயுள்கைதிகள் பல பேர்
கள் வாழ்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி மதுரை
சிறைச்சாலையிலே மட்டும் 128 பேர்கள் இருக்கிறார்கள்.
17 ஆண்டுக்காலம் கூட ஒருவர் இருப்பதாகக் கேள்வி. பெயர்
கூட என்னிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள். அட்வைசரி
போர்டு வைப்பதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும்
எடுத்ததாகத் தெரியவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள்
ஒரு காரணத்தைச் சொல்லக்கூடும். வழக்கமாகச் சொல்கிறார்.
குற்றவாளிகள் பிறக்கிறபோதே குற்றவாளிகளாகப் பிறப்பது
இல்லை. Criminals are not born but made by circumstances.
ஏதோ ஆத்திரத்திலே செய்கிறார்கள், தவறுகளை உணர்கிறார்
கள், அவர்கள் மன்னிக்கப்பட்டு சிறைச்சாலையிலே ஆயுள்கைதி
களாக இருந்தாலும் 10 ஆண்டுகள் தண்டனையை அனுபவித்து
விட்டால் அவர்களை விடுதலை செய்வதற்கும் போர்டு வைத்து
பரிசீலிப்பதற்கும் தி.மு.க. ஆட்சியிலே வழி இருந்தது. இப்
போது அது இல்லை. என்ன காரணம்? கிரிமினல் புரசீஜர்
கோட் செக்ஷன் 433-ஏ மத்திய சர்க்கார் ஒரு அமென்ட்மென்ட்
கொண்டு வந்திருக்கிறது. ஆகவே அந்த அமென்ட்மென்ட்டின்
படி 14 ஆண்டுகள் ஆயுட் கைதிகள் தண்டனையை அனுபவித்தே
தீரவேண்டும், இங்கே மாநில சர்க்கார் என்ன செய்ய முடியும்?
என்னுடைய கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர்
அவர்கள் சொல்வார்கள். மாநில சுயாட்சிக்காகப் போராடுகிற
நாம் முதலில் இதை எதிர்த்துப் போராட வேண்டும். நீதிபதி
தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு ஒரு ஆயுள்கைதி எவ்வளவு
காலம் சிறையில் இருக்கலாம் என்பதை நிர்ணயிக்கும் உரிமை
மாநில சர்க்காருக்குத்தான் இருக்க வேண்டும். மத்திய
சர்க்கார் அந்த அதிகாரத்தை கபளீகரம் செய்வது, அதிகாரத்
தைப் பறிப்பது எந்தவிதத்திலும் நியாயமாக இருக்க முடியாது.
கைதிகள் விடுதலை செய்யும் காலத்தை நிர்ணயம் செய்யும்
அதிகாரம் மாநில அரசிடத்திலே தான் இருக்க வேண்டும். ஆனா
லும் கூட மத்திய சர்க்கார் அந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்திருக்கிறது என்று சொன்னாலும் கூட சுப்ரீம் கோர்ட்டு
தீர்ப்பிலே ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். என்ன விளக்கம்?
19-12-1978-க்கு முன்னாலுள்ள ஆயுட்கைதிகளை விடுதலை
செய்ய வேண்டும். அப்படியானால் 1978-க்கு முன்னால் உள்ள
ஆயுட்கைதிகளைப் பரிசீலிக்கலாம், 10 ஆண்டுகள் தண்டனை
அனுபவித்துவிட்டால் விடுதலை செய்யலாம், அவர்களுக்கு



1984 மார்ச் 31] [திரு. அ. ரகுமான்கான்]

போர்டு வைக்கலாம், முடிவுக்கு வரலாம் என்பதிலே எந்தத்
தடையும் கிடையாது. நான் சொல்கிற நபர்கள் எல்லாம்
1978-க்கு முன்னாலே வருகிறவர்கள்தான். அந்த அதிகாரம்
இருக்கும்போது நீங்கள் ஏன் வைக்கக்கூடாது? அடுத்த
கேள்வியைக் கேட்கிறேன், உங்கள் கரங்கள் கட்டப்பட்டிருக்
கின்றன. மத்திய சர்க்கார் சட்டத்தின்படி 14 ஆண்டுகள்
ஆயுள் கைதியாக இருந்தாக வேண்டும் என்று சொல்கிறீர்களே
அதிலே சரியாக இருக்கிறீர்களா? அதிலே எப்படி இருக்கிறது
பாருங்கள். பாலதாண்டன் என்பவர் யார்? ஆயுட்கைதி.
அவர் மத்திய சர்க்கார் சட்டப்படி செய்வதற்கான நிலையில்
இருக்கிறீர்களா? விடுதலை செய்யப்படுகிறார், என்ன கார
ணம்? 5 ஆண்டுகளிலே விடுதலை செய்யப்படுகிறார், என்ன
காரணம்? அவர் திருமலை என்ற ஒரு டைரக்டருடைய மகன்.
அவரை எப்படி விடுதலை செய்தீர்கள்? சட்டம் ஏன் குறுக்கே
நிற்கவில்லை. துரை பாபு, ஒரு ஆயுட்கைதி, அவர் யார்?
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
செயலாளர். அவர் கருணை மனு போடுகிறார். அவருடைய
தண்டனைக் காலம் 7 ஆண்டுக் காலமாக குறைக்கப்படுகிறது.
அது எப்படி சாத்தியமாகிறது? இவர்களை விடக்கூடாது என்று
சொல்பவன் அல்ல நான். இவர்கள் விடப்பட வேண்டும்.
கருணை அடிப்படையில் மன்னிக்கப்பட வேண்டும், ஆனால்
அந்த நியாயம் ஆளுங்கட்சிக்கு மட்டும் இருக்கக்கூடாது. அரசி
யல் பார்க்காமல் எல்லோருக்கும் அந்த நியாயம் இருக்க
வேண்டும். ஒன் வே டிராபிக்காக இருக்கக்கூடாது. தட்சிணா
மூர்த்தி என்ற ஆயுட்கைதி திருமணமாகி 15 நாட்கள் பரோலில்
வந்தார். 10 நாட்களுக்கு—திருமணம் ஆனவர்களுக்குத் தெரி
யும். மனைவியோடு குடும்பம் ஆக இல்லாமல் அவரை உள்ளே
தள்ளுவது, பரோல் நீட்டிக்க மாட்டேன் என்று சொல்வது
'இன்ஹீமன்' என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்து சிறைக் கண்காணிப்பாளர்களே பரோலில் விடலாம்.
அதில் பாரபட்சம் இருக்கிறது. சிலரைப் பொறுத்தவரையில்
டாக்டர் சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். சிலரைப் பொறுத்த
வரையில் போலீஸ் ரிப்போர்ட் கேட்கிறார்கள். ஆனால்
சிலரைப் பொறுத்தவரையில் இது விதி விலக்காக இருக்கிறது.
மாசிலாமணி என்ற எங்களுடைய தோழர் ஒருவர்
வேலூர் சிறைச்சாலையில் இருக்கிறார். அவருடைய
தாயார் 20 நாட்களாக உடல் நலம் இல்லாமல் இருக்கிறார்.
அவரைப்பற்றி போலீஸ் ரிப்போர்ட் கேட்டு இருக்கிறார்கள்.
டாக்டர் ரிப்போர்ட் கேட்டு இருக்கிறார்கள். இரண்டும் வர
வில்லை. 10 வருடமாக அவர் ஆயுள் கைதியாக இருக்கிறார்.
18 முறை பரோலில் வந்து இருக்கிறார். கண்காணிப்பாளர்
15 முறை கொடுத்ததுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
63 நாட்களுக்கு தான் அந்தப் பரோலை நீட்டித்துத் தந்து
இருக்கிறார். ஆனாலும் இப்போது அவருக்குச் சொல்வது

போலீஸ் ரிப்போர்ட் வரவேண்டும், டாக்டருடைய ரிப்போர்ட்
வரவேண்டும் என்பது ஆகும். ஆனால் எல்லா விஷயத்தி
லும் அப்படியே இருக்கிறீர்களா ? முருகையயன், எம்.பி. யைக்
கொலை செய்தார் ஒருவர். அவருடைய பெயர் சுபாஷ் சந்திர
போஸ், அ.இ.அ.தி.மு.க. காரர். 5 வருடங்கள் கூட முடிய
வில்லை; 6 மாதத்திற்கு மேல் பரோலில் விட்டு இருக்கிறார்கள்.
இன்னும் சொல்லப்போனால் இந்த வருடம் மட்டும் 3 மாத
காலத்தில் 48 நாட்கள் பரோலில் விட்டு இருக்கிறார்கள். ஆறு
முகம், வேலூர், 5 வருட தண்டனை. 3 மாதம் பரோல்
தொடர்ச்சியாக தரப்பட்டிருக்கிறது. இது போன்ற சூழ்நிலை
இருப்பது நியாயம் அல்ல.

அடுத்து இன்னும் ஒரு முக்கியமான பிரச்னை Remnad d
Prisoners தமிழ்நாடு சிறையில் மட்டும் 5 ஆயிரம் பேர்
இருக்கிறார்கள். பல ஆண்டுகள் விசாரணை இல்லை. கோர்ட்
டுக்கு அவர்களைக் கொண்டுவருவது இல்லை. இந்த மாதிரி
அவர்களைச் சிறையில் வைத்துப் பல வேலைகளுக்குப் பயன்
படுத்துகிறீர்கள். அவர்கள் விசாரணை இல்லாமல் இருப்பது
injestice என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து நீதி துறைக்கு நான் வர விரும்புகிறேன். நீதித்
துறையைப் பொறுத்தவரையில் ஒரு சிக்கலா பிரச்னை.
உயர்நீதிமன்றம் என்பதை மாற்றி தமிழ்நாடு நீதிமன்றம்
என்று பெயர் வைக்க வேண்டும். இதற்கான முயற்சி என்ன
ஆயிற்று என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
அதைப்போலவே இன்றைக்கு அவர்கள் திருவனந்தபுரம்
உயர்நீதி மன்றம் என்று வைக்கவில்லை. கேரளா உயர்
நீதிமன்றம் என்றே வைத்து இருக்கிறார்கள். சென்னைக்குத்
தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் வைத்
தார்கள். எனவே இந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது
என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது போலவே இன்னும் ஒன்றை நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். இன்றைக்கு சிவில் கோர்ட்டுகளிலும், கிரிமினல்
கோர்ட்டுகளிலும் தீர்ப்புகள், நடவடிக்கைகள் தமிழில் இருக்க
வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சில நீதிபதிகள்
விதி விலக்கு கேட்கிறார்கள். விதி விலக்கு கொடுப்பது தவறு.

திருச்சியைப் பொறுத்த வரையில் 10 சிவில் கோர்ட்டுகள்
இருக்கின்றன. அங்கு 4 தமிழ் தட்டச்சுகள்தான் இருக்கின்றன.
ஏராளமான வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன என்று
புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. நான் கேட்கிறேன், இந்த
வழக்குகள் பெண்டிங்காக இருப்பதற்கு என்ன காரணம்? பொய்
வழக்குகள் போடுவது ஒரு காரணம். தேவை இல்லாத விஷயத்
தில் அப்பீல் செய்வது மற்றொரு காரணம். பிரமிளா என்ற
ஒரு நடிகைமீது விபச்சார குற்றச்சாட்டு சைதாப்பேட்டை
கார்ட்டுக்கு வந்து அது aqcuite செய்து விட்டது. ஆனால் அவசர



அவசரமாக இந்த அரசு அப்பீலுக்குப் போகிறது. நான் கேட்
கிறேன் தப்பு செய்கிற நடிகையை பத்தினி ஆக்குவது அல்ல
இந்த அரசின் வேலை. இது எல்லா நடிகை விஷயத்திலும்
அமுல் நடத்தப்படுகிறதா ? நான் தனிப்பட்ட ஒரு நடிகைக்கு
வாதாடுவதற்காக சொல்லவில்லை. யார் பாதிக்கப்பட்டாலும்
கிடைக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். அது போல
பல பொய் வழக்குகள் போடுவதால் கோர்ட்டுகளில் கேஸ்கள்
குவிகின்றன. காலாகாலதில் போலீஸ்காரர்கள் வழக்குகளைத்
தொடராமல் சார்ஜ் சீட் போடாததால் 3 லட்சம் வழக்குகள்
அண்மையில் டிஸ்மிஸ் ஆகியிருக்கின்றன.

அதைப் போலவே நான் இன்னும் ஒன்றையும் இங்கே
தெரிவிக்க விரும்புகிறேன். நம்மைப் பொறுத்தவரையில் லா
காலேஜ், அட்மிஷனில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அரங்கநாயகம்—உங்களுக்கு இல்லை என்றாலும் கூட்டு
பொறுப்பு இருக்கிறது, இது சட்டக் கல்லூரி—அவர்களுடைய..

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்
திற்கு மேல் அதிகமாக மாண்புமிகு உறுப்பினருக்கு தருகின்ற
நேரத்தில் கல்வித் துறை சம்பந்தப்பட்டதை இப்போது பேசு
கிறார். ஏற்கனவே கல்வி மானியத்தில் பேசியிருக்கிறார்.
அதற்கு அமைச்சரும் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, அதைப் போலவே நான் இங்கே தெரிவிக்க விரும்புவது
மிக முக்கியமான பிரச்சினை. இந்த அரசு நீதி மன்றத்தை மதிக்
கக்கூடிய அரசாங்கமாக இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இங்கே நான்
ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன். முதலமைச்சர் பதில்
அனுப்பி வைத்திருக்கிறார்கள். கேட்கப்பட்ட கேள்விகளுக்குச்
சபையில் பதில் சொல்ல முடியவில்லை என்றாலும், ஹோம்
டிபார்ட்மென்ட் மூலம் அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி,
அனுப்பி வைத்திருக்கிறார்கள். நீதித் துறை சம்பந்தப்பட்ட
ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன்.

நான் என்ன சொன்னேன் என்றால், ஜீவகன் என்ற ஒருவர்,
நக்சலைட் என்று குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டி
ருந்தார். ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்யப்பட்டது.
நீதிபதி கொண்டு வரச் சொன்னார். அதை விசாரித்த நீதிபதி
இது பொய் வழக்கு, முப்பதாயிரம் ரூபாய் திருடியிருப்பதாகக்
கூறப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல,
இப்படி அநியாயமாகப் பொய் வழக்கு போட்ட போலீஸ் அதி
காரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, பெயரைச்
சொல்லித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியதற்குப் பிறகு, அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, போலீஸ் தங்க மெடல் கொடுக்கிறீர்களே என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இதைப்பற்றிக் காவல்துறை மானியத்தின் மீது பேசியிருந்தால் மாண்புமிகு முதல்வரவர்கள் அதற்குத் தக்க பதிலைச் சொல்லியிருக்க முடியும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகையால், அப்படி கேட்ட பொழுது என்ன பதில் சொன்னார்கள் என்று கேட்டால், இங்கே ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். கோர்ட் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. கோர்ட் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் ? கோர்ட்டிற்கு மாறாகப் போகக் கூடாது என்பது வேறு வாதம். அதற்குச் சொல்லி யுள்ள காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 10-12-1982 அன்று இந்த மனுவைத் தள்ளுபடி செய்து உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது ; தீர்ப்பின் நகல் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னால், அதாவது ஜட்ஜ்மென்ட் காப்பி இன்னும் கிடைக்கவில்லையாம். யாருக்கு ? ஜீவகன் சம்பந்தப்பட்ட வழக்கு நடந்தது 1982 ஆம் ஆண்டு. நான் கேட்க விரும்பு கிறேன், இதனுடைய ஜட்ஜ்மெண்ட் காப்பி கிடைப்பதற்கு உங் களுக்கு ஏழு மாதங்கள் ஆகின்றன. * * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நடந்து, தீர்ப்பு சொல்லி, தீர்ப்பின் நகல் கிடைக்கவில்லை என்றால், மாண்புமிகு ரகுமான்கான் போன்ற விவரம் தெரிந்த வழக் கறிஞர்கள் உதவி செய்திருந்தால் விரைவில் அதை வாங்கியிருக்க முடியும். எனவே, நீதிமன்றத்தின் ஜட்ஜ்மென்ட் காப்பிகளை விரைவில் வாங்குவதும், காலதாமதமாக வாங்குவதும் வழக்கறி ஞர்களின் திறமையைப் பொறுத்து இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் ரகுமான்கான் அவர்கள் அறிவார்கள். ஆகவே, இதையும் அதையும் ஒப்பிட வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு ஜட்ஜ்மெண்ட் காப்பியை வாங்குவதற்கு அர சாங்கத்திலே பல ஏற்பாடுகள் உண்டு. அதற்கு என்று அதிகாரி கள் இருக்கிறார்கள். அதற்கு என்று வழக்கறிஞர்கள் இருக்கி றார்கள். இன்னும் சொல்லப்போனால், ஜட்ஜ்மெண்ட் காப் பியை வாங்குவதற்கு இவ்வளவு காலதாமதம் தேவையில்லை. ஆனால் அதே நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன் * * *

* * * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பெற்றதுக.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பைச் சொல்லி, அந்த ஜட்ஜ்மெண்ட் காப்பி கிடைக்கவில்லை, தாம தம் ஆகிறது, இவ்வாறு தாமதம் ஆகக் கூடாது ; ஜட்ஜ்மென்டின் காப்பி துரிதமாகக் கிடைக்க வேண்டுமென்பதற்கான ஆலோசனை களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லட்டும். அதுகுறித்து நடவடிக்கை எடுக்கிறோம்.

ஆனால் அதற்கும் * * * * *

பற்றிக் கூறியவைகளை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் ; (திரு. வே. இரா. ஜெயராமன் :) மானியக் கோரிக்கை விவாதத்திலே பேசிக்கொண்டிருக்கும் பொழுது இதையும் அதையும் கம்பேர் பண்ணிப் பேசுவது சரியல்ல. எனவே, ** ** பற்றிக் கூறிய பகுதிகளை வைக்குறிப்பிலேயிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவதெல்லாம், சட்ட இலாக்கா இருக்கிறது ; அதற்கு என்று அமைச்சர் இருக்கிறார். அவர்கள் நீதி மன்றத்தின் தீர்ப்பின் நகலைப் பெறுவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும். ஆனால் ஜீவகன் வழக்கிலே அதை வாங்குவதில் காலதாமதம் செய்யப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் பல கமிஷன்களைப்போட்டு அவைகளின் தீர்ப்புகளிலே அக்கறை காட்டுகிறோம்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்பு மிகு அமைச்சருக்குக் கவனமூட்ட விரும்புகிறேன். ஒரு வழக்கிலே இந்த சர்க்கார் கோர்ட்டை அவமானப்படுத்தியிருக்கிறது என்று அபராதம் கட்டியிருக்கிறது, மன்னிப்பு கேட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். நீதிமன்றத் துறையின் நிர்வாகம் நல்ல முறையில் இருக்க வேண்டும். கோர்ட் தீர்ப்பை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொண்டு அபராதம் கட்டுவது, மன்னிப்பு கேட்பது என்ற நிலைமைகள் இருந்தால் அது நீதி மன்றத்திற்குச் சரியாக இருக்காது.

(முற்பகல் 11-40)

மதுரைக்கு ஹைகோர்ட்டின் பிராஞ்ச் ஒன்று வேண்டும் ; சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்சு ஒன்று இங்கே சென்னைக்கு வேண்டும். குற்றவாளிகள் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு வெகிகில்ஸ் இல்லை. கூட காரிலே போகிறார்கள், மன்னிக்க வேண்டும், ஒரு இன்ஸ்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 31

பெக்டருக்குக் கூட ஒரு மோட்டார் சைக்கிள் இருக்கிறது. ஆனால்
மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அது கூட இல்லை. சம்பளம் குறைவாக
இருக்கிறது. அவைகள் எல்லாம் கவனிக்கப்பட வேண்டுமென்று
சொல்லி, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் பதில் சொல்
வார் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய
மானியக் கோரிக்கைகள் மீது ஆளுங்கட்சியின் சார்பில் என்
னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.
எனக்கு முன்னாலே பேசிய என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர்,
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அன்பர், சகோதரர்
ரகுமான்கான் அவர்கள் அரசியல் அடிக்கடி பேசி, அதிகம்
பயிற்சிபெற்றவர். ஆனால், இங்கே நீதித் துறை கோரிக்கை
யின் மீது அவர் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே அதிகம்
பேசுவார் என்று எதிர் பார்த்தேன். அதிலும் அரசியல் கலந்து
அவர் ஏன் ஆதாயம் தேட முனைந்தார் என்று தான் எனக்கு
உண்மையிலே புரியவில்லை. அவர்கள் சிறைச்சாலையைப்
பற்றி பேசும் பொழுது ஒன்றை ஒத்துக் கொண்டார்கள், புரட்சித்
தலைவர் ஆட்சியில் சிறைச்சாலைகள் எல்லாம் இன்று புண்ணிய
ஸ்தலங்களாக மாறி இருக்கின்றன. காரணம், சமுதாயத்தினு
டைய பல்வேறு பிரிவினரும் சிறைச் சாலைகளுக்குச் செல்கின்ற
காரணத்தால், இன்று சிறைச்சாலைகள் எல்லாம் புண்ணிய
ஸ்தலங்கள் என்று கூடச் சொல்ல வேண்டுமென்று அவர்கள்
சொன்னார்கள். (குறுக்கீடு) சமுதாயத்தின் பல்வேறு பிரிவின
ரும் பல்வேறு சூழ்நிலைகளில் சிறைகளுக்குச் செல்ல வேண்டி
யிருக்கிற காரணத்தால் தான் புரட்சித் தலைவர் ஆட்சியில்
தான் சிறைச்சாலைகள் மேம்பட்டு திகழ்கின்றன என்பதை நான்
இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத்
தலைவர் அவர்களே, சமுதாயத்திலே இருக்கக் கூடிய பல்வேறு
துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்த அரசாங்கத்தினாலே அடக்கு
முறைகளுக்கு ஆளாக்கப்பட்டு பல்வேறு விதமான பொய் வழக்கு
களை, தவறான வழக்குகளைச் சந்தித்து, சிறைச் சாலைகளுக்குச்
செல்கிறார்கள். ஆனால், அவர்களைப் பொறுத்த வரையில்
என்ன தான் தண்டனை வழங்குவதாகக் கருதி அனுப்பினாலும்
பொது வாழ்விற்கு வந்தவர்களுக்கு அது குயில் கூவிடும் பூஞ்
சோலைதான். அதைத்தான் சொன்னேன்.

திரு. கே. குப்புசாமி : சுதந்திரம் அடைந்த 1947 ஆம்
ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை சிறைச்சாலைகளில்
ஏற்படாத சீர்திருத்தங்கள் எல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சி
யிலே ஏற்பட்டிருக்கின்றன, என்பதை நடுநிலையாளர்கள்
நிச்சயமாக ஒத்துக் கொள்வார்கள் என்றே நான் கருதுகிறேன்.
ஆனால் நன்கு படித்த வழக்கறிஞர் ரகுமான்கான் அவர்கள்



984 மார்ச் 31] [திரு. கே. குப்புசாமி]

இதை ஏன் திசை திருப்பி அரசியல் ஆதாயம் தேட முனைகிறார்
என்பதுதான் இன்னும் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது
என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறைச்சாலையிலே இருக்கிற கைதிகளுக்கு, அது முதல் வகுப்
பாக இருந்தாலும் சரி, அது இரண்டாவது வகுப்பாக இருந்தாலும்
சரி, மூன்றாவது வகுப்பாக இருந்தாலும் சரி, வேண்டிய
வசதிகளை எல்லாம் இந்த அரசு செய்திருக்கிறது. அவர்களுக்கு
வேண்டிய படிகளை எல்லாம் இந்த அரசு உயர்த்தி
இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய மற்ற இன்றியமையாத
தேவைகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறது.

அதே போன்று வார்டர்களைப் பற்றியெல்லாம் அவர்கள்
சொன்னார்கள். வார்டர்களுக்கு இந்த அரசு செய்திருக்கிற
நல்ல காரியங்களைப் பாராட்டி, வார்டர்களே தீர்மானம்போட்டு
அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே
நான் மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்குப் பணிவோடு
தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆயுள் தண்டனைக் கைதிகளை எல்லாம் விடுதலை செய்
வதிலே பாரபட்சம் காட்டப்படுவதாக இங்கே சொன்னார்கள்.
இந்தத் துறையைப் பொறுத்த வரையிலும் ஆயுள் கைதிகளாக
இருந்தாலும் சரி, அதற்குக் குறைவான தண்டனையை அனு
பவித்துக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, அவர்கள் எந்தக்
கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாகுபாடு பார்க்கா
மல், இன்னும் கூடச் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்த பலரே இன்று அரசால் தண்டனை காலத்
திற்கு முன்னாலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். திரா
விட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பலர் அடிக்கடி அமைச்சர்
அவர்களைச் சந்தித்து ஜெயிலில் இருப்பவர்களுக்கு பரோல்
வாங்கச் சொல்கின்ற நிலைமையை யாரும் மறுக்க முடியாது.
அந்நிலையில் சிறையிலே இருப்பவர்களைக் கட்சி பேதம்
காட்டி, அங்கே டிஸ்கிரிமினேஷன் நடக்கிறது என்று கூறுவது,
அரசியல் ஆதாயம் தேடுவதற்காகச் சொல்லப்படுகிற
குற்றச்சாட்டே தவிர, இந்தக் குற்றச்சாட்டிலே எந்த
விதமான நியாயமும் இல்லை என்பதை நான் இந்த நேரத்
திலே தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். இந்த அரசு
பொய் வழக்குகளைப் போடுகிறது என்று சொன்
னார்கள். ஒரு வழக்கு காவல் துறையிலே பதிவான உடனே
கோர்ட்டிற்கு போகிறது. அங்கே சாட்சியங்கள் விசாரிக்கப்
படுகிறார்கள். சில வழக்குகளில் தண்டனை வழங்கப்படுகிறது ;
சிலவற்றில் விடுதலை செய்யப்படுகிறார்கள். விடுதலை செய்யப்
படுவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. சாட்சியங்கள்
சரியாக இல்லாமல் போகலாம் ; சட்டச் சிக்கல்களால் கூட

சில இடங்களில் வழக்குகள் தள்ளுபடி ஆகலாம்; அவற்றை எல்லாம் பொய் வழக்குகள் என்று சொல்வது எந்த ஆதாரத்தை வைத்து உறுப்பினர் சொல்கிறார் என்பது தான் எனக்குத் தெரியவில்லை.**

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசுகிறபோது தவறான தகவலை இந்தச் சபைக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் இதில் நான் குறுக்கிட வேண்டியுள்ளது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மேல் ** நீதிமன்றத்திற்கு அப்பீல் ** செய்யப்பட்டிருக்கிறது.

என்பதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கே. குப்புசாமி : நான் விளக்கம் சொன்ன பிறகு வேண்டுமானால் நீக்கி விடலாம். (குறுக்கீடுகள்).

திரு. பாபு ஜனார்த்தனன் : அவைக்கு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : ஒரு பாயிண்ட்டை அவர் ரெய்ஸ் பண்ணி இருக்கி றார். பின்னால் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ** என்று அவர் எப்படி சொல்லலாம்? அதை நீக்கிவிட வேண்டும். (குறுக்கீடு). கள்).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ** மாற்றுத் தலைவர் அவர்களே ** என்று மாண்புமிகு உறுப்பினர் பேசியிருந்தால் அதைத் தாங்கள் நீக்கிவிடலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : உறுப்பினர் கூறிய அந்த வாசகங்கள் நீக்கப்படுகின்றன.

திரு. கே. குப்புசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு பதில் சொல்வதற்கு ஒரு உதாரணமாகத்தான் சொன்னேன். விடுதலை செய்யப்படுகிற வழக்குகள் எல்லாம் பொய் வழக்குகள் என்றால் ** **

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க பெற்றது.





என்ற வழக்குக் கூட தள்ளுபடியானது. அப்படியென்றால் அதுவும் பொய் வழக்கு என்று நாம் எடுத்துவிட முடியுமா? இன்னொரு உதாரணத்தைக் கூட சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது பாலசுந்தரம் என்பவருக்கு பரோல் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். (குறுக்கீடுகள்) இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு இந்த அரசு செயல்படவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) : உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது வேறோர் உறுப்பினர் உட்கார்ந்துக் கொண்டே குறுக்கிட்டுப் பேசுவது சரியல்ல. திரு. குப்புசாமி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

(முற்பகல் 11-50.)

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலை வர் அவர்களே, நான் மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்த மன் உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஏன் இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்றால், 1977-க்குப் பின் னாலே புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகு சிறையில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தம் மற்ற மாநிலங்களை விட அதிகமாக இருக்கிறது என்பதை பெருமையோடு சுட்டிக்காட்டு வதற்காகத்தான் என்று சொல்லிகொள்கிறேன்.

நீதி நிர்வாகத் துறையைப் பற்றி சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நீதித்துறையின் மீது சட்டமன்றத்திற்கும், அரசுக்கும் பொதுமக்களுக்கும் நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் நீதித்துறை செயல்பட்டாக வேண்டும். அதேபோன்று சட்ட மன்றத்தின் மீது நீதித்துறைக்கு மரியாதை ஏற்படுகிற வகையிலே சட்டமன்றமும் செயல்பட்டாக வேண்டும் என்பதை நாம் உணரவேண்டும் என்று நாட்டுமக்கள் விரும்புகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கார ணம், மக்களுக்கு நன்மை பயக்கின்ற பல்வேறு வெல்பேர் மெஷர் களை, இந்த அரசு சமுதாயத்தில் நலிந்த, வறுமையில் வாடுகின்ற பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய பாட்டாளி மக்களுக்கு செய்யவேண்டுமென்ற நல்ல எண்ணம் கருதி கொண்டு வருகிறார்கள். அவைகள் வழக்கு மன்றத்திற்கு செல்கிறபோது— அரிசனங்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்வது, வீட்டுவசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்வது, குடிசைமாற்று வாரியம் நில ஆர்ஜிதம் செய்வது போன்ற வெல்பேர் மெஷர் திட்டங்களை, மக்கள் நலன்கருதி அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தச் செய்யும் திட்டங்களைக் கொண்டு வருகிறபோது—உயர்நீதி மன்றத்தில் அதைத் தடை செய்ய வேண்டுமென்று சில வசதிபடைத்தவர்கள், வாய்ப்பு பெற்ற வர்கள் முயற்சிகள் எடுத்து தடையை வாங்கி விடுகிறார்கள். இதனால் சாதாரண மக்கள் மனதில் என்ன நிலைமையேற்படுகி

றது என்று சொன்னால், அரசின் நல்ல திட்டங்களுக்கு இந்த வசதி படைத்தவர்கள் எல்லாம் உயர்நீதிமன்றத்தைப் பயன் படுத்தி தடையை வாங்கி வந்து விடுகிறார்களோ என்று எண்ணம் தோன்றுகிறது. இதனால் சாதாரண மக்களுக்கு சமுதாய நீதி வழங்கும் வகையில் உயர்நீதி மன்றம் செயல்படாமல் போய் விடுமோ என்று சாதாரண மக்கள் நம்பிக்கை இழந்து விட கூடிய நிலைமை நிச்சயமாக ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் உயர்நீதிமன்றத்தையும் சட்டமன்றம் மதிக்க வேண்டும். நீதித்துறையில் பல தீர்ப்புகள் வெளிவருகின்றன. கமிஷன்கள் பலவற்றைப் போடுகிறோம். அந்தத் தீர்ப்பு களும் வருகின்றன. அப்படி தீர்ப்புகள் வந்தவுடனே அவை கள் சாதகமாக இருந்தால் பாராட்டுகிறார்கள், பாதகமாக இருந் தால் சாடுகிறார்கள். தீர்ப்பு சாதகமாக இருந்தால் பாராட்டு வது, பாதகமாக இருந்தால் தாக்குவது என்ற நிலையைக் கூட பொறுத்துக்கொள்ளலாம். நீதிபதிகளைக் கேவலமாகப் பேசு வது, இங்கே மரபுகளை எல்லாம் மீறி நீதித்துறையை எவ்வளவு இழிவாகப் பேசமுடியுமோ அவ்வளவு இழிவாகப் பேசுவது, அப் படிப்பட்டவர்கள் இங்கே வந்து நீதித்துறையில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று சொன்னால், அது அரசியல் ஆதாயம் பெறுவதற்குத்தானே ஒழிய வேறு இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே கூட அவர்கள் சொன்னார்கள். நான் அதைப்பற்றி என்ன சொல்கிறேன் என்றால் தீர்ப்புகள் வருகிறது. அதைத் தாக்கி பத்திரிகையில் எழுதுகிறார்கள். கோர்ட்டில் வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன. அதைப் பற்றி இங்கே பேசு கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அந்தத் தீர்ப்புகளின் நகல்களை, ஜனநாயக முறைப்படி நடக்கின்ற இந்தச் சட்டமன் றத்திலேயே கொளுத்தும் காட்சியைக் கூட நாம் கண்டோம். இதையெல்லாம் பற்றி வெளியே உள்ள பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்? சட்டமன்றத்தைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்? ஜனநாயக மரபுகளைக் காப்பாற்ற வேண்டிய இடத்தில், அதில் நம்பிக்கை வைத்துள்ள ஒரு அவையில், இப்படி மரபுகள் மீறப்படுகின்றன என்கிற நிலைமையில்லாமல், அந்த மரபுகள் காப்பாற்றப்பட வேண்டிய கட்டாயம் நமக்கு இருக் கிறது என்ற வகையில் நாம் நடந்து கொள்ள வேண்டும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலை வருகிறபோது, அவைகள் மறுபடியும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு, மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

ஆண்டுகள் பலவாக ஆயிரக்கணக்கான வழக்குகள் தீர்க்கப் படாமல் இருக்கின்றன. நீதிமன்றத்தின் நீண்ட நெடிய படிக் கட்டுகளில் வழக்கிற்காக வாதாடுகின்ற வழக்கறிஞர்களும், வழக்கை நடத்துகின்ற பொதுமக்களும் இன்று ஏறி இறங்கி நீண்ட நாட்கள் வரவேண்டிய இக்கட்டான நிலைமை இருந்து



வருகிறது. இதை மாற்ற வேண்டும். வழக்கு மன்றங்கள் ஆங்காங்கு இன்னும் கிராமப்புறப் பகுதிகளில், சிறு நகரங்களில் அமைக்கப்பட வேண்டும். அந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் புரட்சித் தலைவர் அரசு 1977 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் புதிதாக 29 சிவில் நீதிமன்றங்களையும், 21 குற்ற வியல் நீதிமன்றங்களையும், 3 சிறப்பு நிலை நீதிமன்றங்களையும் மற்றும் நடமாடும் நீதிமன்றங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் இவற்றை ஏற்படுத்துவதற்கு 1970-லே ஒரு அதிகாரிகள் குழுவை அப்போது இருந்த ஆட்சி அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரை 1973-லே அரசுக்கு வந்தது. 1973லே குழுவின் பரிந்துரை அரசுக்கு வந்தும் நண்பர் ரகுமான்கான் கட்சி ஆட்சி நடத்திய காலத்தில் 1973-ல் இருந்து 1976 வரையில் வழக்கு மன்றங்களைப் புதிதாக ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அதை அப்படியே கிடப்பிலே போட்டு விட்டது. புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் இன்றைக்கு 50-க்கு மேற்பட்ட நீதிமன்றங் களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு சென்னை உயர்நீதி மன் றத்தைப் பொறுத்தவரையில், நீதி வழங்க வேண்டிய நிலை யிலும் இருக்கிறது. நீதி நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டிய நிலையிலும் இருக்கிறது. அதோடு கூட, பாண்டிச்சேரி மாநி லத்திற்கும் சேர்த்து நீதி, நிர்வாகம் கவனிக்க வேண்டிய பொறுப் பில் இருக்கிறது. இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை 25. ஆனால் 19 நீதிபதி கள் தான் அங்கே பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சாதாரணமாகச் சொல்வார் கள். '' ஜஸ்டிஸ் டிலேயிட் இஸ் ஜஸ்டிஸ் டினைடு '' என்று. தாமதப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்று பொருள். எனவே தேங்கிக் கிடக்கும் வழக்குகளை எல்லாம் உடனடியாக முடிக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே காலியாக இருக்கும் ஆறு இடங்களுக்கும் நீதிபதிகளை நியமிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, நீதிபதிகளுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் குறை வாக இருக்கிறது. ஹைக்கோர்ட் தலைமை நீதிபதிக்கு ரூ 4,000 சம்பளம் என்றும், மற்ற நீதிபதிகளுக்கு ரூ. 3,500 என்ற நிலையிலும் இருக்கிறது. இவர்களைவிட அதிகமாக சம்ப ளம் வாங்குகிறவர்கள் எத்தனையோ பேர் இன்றைக்கு இருக்கி றார்கள். இன்றைக்குப் பல்வேறு நிலையில் இருப்பவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். இந்த உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். 'They should be above suspicion and they must be like Caesar's Wife' என்று சொல்வதிலே பொருள் ஏதும் இல்லை. எனவே,

[திரு. சே. குப்புசாமி] [1984 மார்ச் 31

நீதிபதிகள் நேர்மையாகவும் நியாயமாகவும் நீதி வழங்க வேண்டுமானால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று எனக்கு முன்னாலே பேசிய பலபேர் சொன்னார்கள். உச்சநீதிமன்றத்தின் கிளை குறித்து 1972-லேயே அரசால் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1978-ம் ஆண்டு புரட்சித் தலைவர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகுதான் மத்திய அரசுக்கு அந்தப் பிரிவு இங்கே கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும் என்கிற அவசியம் குறித்து கடிதம் எழுதப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னாலே 1981-ல் மத்திய அரசு ஜஸ்வந்த் சிங் குழுவை உத்தரப் பிரதேசத்தில் ஒரு பிரிவு அமைப்பது குறித்து மட்டும் மைய அரசு ஆணையிட்டது. அதற்குப் பிறகு மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் சென்னையில் ஒரு பிரிவு அமைப்பது குறித்து 1973-லிருந்து தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அது குறித்து மைய அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதுமட்டுமல்லாமல், மேற்கு மாநிலங்களில் மட்டும் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கமிஷன் நியமித்ததை இந்த அரசு கடுமையாகச் சாடியது. அதற்குப் பிறகு தான் 1983-ல் ஒரு கமிஷன் அமைத்தார்கள். தமிழ்நாடு, கர்நாடகம், கௌஹாத்தி, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உச்சநீதி மன்றப் பிரிவுகளை அமைப்பது குறித்த ஆய்வை மைய அரசு செய்வதற்கு ஆணையிட்டது. 1984-ல் அந்தக் கமிஷன் சென்னைக்கு வந்து விசாரித்தது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் According to the Constitution, all States are equal. It contemplates equality among all the States. ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது வடமாநிலங்களில் இருப்பவர்களுக்கு மட்டும், கிராமப் பகுதிகளில் உள்ளவர்கள் கூட நியாயங்களை தங்கள் பகுதியிலேயே பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறபோது தென்மாநிலங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிற நிலையில் மத்திய அரசு நடந்திருக்கிறது என்பதைத் நான் இங்கே சுட்டிக் காட்ட முடியும். இதற்குக் காரணம் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே நம்முடைய நியாயமான கோரிக்கையை மைய அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம், தமிழ்நாட்டு மக்களும் பயன் பெறுகிற வகையில் செயல்பட வேண்டும். அதைப்போலவே சென்னை நகரத்திலுள்ள உயர்நீதிமன்றத்தின் கிளையும் மதுரையில் அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் இந்தக் குரல் ஒரு மித்த குரலாக தமிழக மக்களின் ஏகோபித்த அபிப்பிராயமாக இருப்பதால் மைய அரசு உடனடியாக தமிழ்



1984 மார்ச் 31] [திரு. கே. குப்புசாமி]

நாட்டில் உச்ச நீதி மன்றத்தின் ஒரு பிரிவையும், மதுரை நகரில் உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவையும் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, இன்றைக்கு உயர்நீதின்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைச் சுலபமாக நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம் இன்றைக்கு மத்திய அரசு உயர்நீதிமன்ற நீதிபதிகளை மற்ற மாநிலங்களுக்கு மாற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்ற இடங்களுக்குப் போவதில் சிரமம் இல்லை. சென்னையில் இருக்கிற ஜட்ஜ் மதுரைக்குச் செல்வதில் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆகவே நம்முடைய அரசு இதிலே விரைந்து ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்டகிரேட்டட் ஜுடிஷியரி முறையை உருவாக்க வேண்டும். இந்த ஒருங்கிணைப்பு நடவடிக்கையில் இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் வகுப்பு நடுவர்களாக உயர்த்தி, அவர்களை டிஸ்டிரிக்ட் முன்சீப் அந்தஸ்துக்குக் கொண்டுவந்து 'ஈக்குவலைஸ்' செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது ஆங்காங்கே சிறு வழக்குகள் எல்லாவற்றையும், அல்லது அவர்களுடைய அதிகாரத்திற்குள் வருகின்ற இடங்களில் வருகின்ற வழக்குகளை அவர்களே விசாரித்து தீர்ப்பளிக்கும் போது வழக்குகள் விரைந்து முடிக்கப்படும். ஆகவேதான் இந்த ஒருங்கிணைப்பு ஜுடிஷியரி முறையைச் செயல்படுத்த வேண்டுமென்று நாம் முனைந்து நடவடிக்கை எடுத்தோம். ஏன் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்று தெரியவில்லை. விரைவிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 16,000 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே சிலர் திறமை இல்லாதவர்களாக இருக்கலாம்; பலர் நல்ல திறமை உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே புதிதாக நீதிபதிகளை நியமிக்கும்போது அல்லது அரசு வழக்கறிஞர்களான ஏ.பி.பி-க்களை நியமிக்கும்போது இந்த 16,000 வழக்கறிஞர்களிலிருந்து நியமிக்க வேண்டும். மற்றத் துறைகளிலிருந்து இங்கே கொண்டுவந்து நீதிபதிகளாக நியமிக்கும் பழக்கத்தை அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குக் காரணம் அவர்கள் முற்றிலும் சட்டத் துறையில் பயிற்சி பெறாதவர்கள். ஃபிஷரீஸ், பாரஸ்ட், அனிமல் ஹஸ்பண்டரி போன்ற துறைகளிலிருந்து வருகின்றவர்கள் பி.எல். படித்திருந்தாலும் தீர்ப்பு அளிக்கக் கூடிய பயிற்சி இல்லை. அப்படிப்பட்டவர்களை எல்லாம் நீதிபதிகளாக நிய

[திரு. கே. குப்புசாமி] [1984 மார்ச் 31

மிக்கும்போது எதிர்காலத்தில் நீதித் துறையின் தரம் எந்த அளவுக்குக் குறைந்துபோகும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, இந்தப் பழக்கத்தை நிறுத்திவிட்டு, திறமையான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள்; அவர்களிலிருந்து தேர்வு செய்து நியமிக்க வேண்டும். இப்போது இருக்கிற காலி இடங்களுக்கும், இனிமேல் வருகின்ற இடங்களுக்கும்—முன்சீப்பாக இருந்தாலும், மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தாலும்—வழக்கறிஞர்களிலிருந்து தேர்வு செய்து, நீதிபதிகளாக நியமிக்க வேண்டும். ஏற்கனவே பிற துறைகளிலிருந்து பிற அலுவலகங்களிலிருந்து, நீதித் துறைக்குத் தொடர்பு இல்லாதவர்களாக இருக்கின்றவர்களை அவர்களுடைய தாய்த் துறைக்கே திருப்பி அனுப்பி விட்டு, பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களை இந்த இடத்தில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு டைரக்ட்ரேட் ஆஃப் பிராசிகியூஷன் என்ற ஒரு துறையை விரைவிலே ஏற்படுத்த வேண்டும். இப்போது ஒரு கேஸ் 'அக்யூட்' ஆனால் அதை அப்பீல் செய்ய வேண்டுமா, விட்டுவிடலாமா என்பதுபற்றி காவல் துறையில் இருப்பவர்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இல்லை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கிற ஒரு கிளார்க் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குச் சட்டத்தைப் பற்றிய பயிற்சி கிடையாது. அதனால் அவர்களால் சரியான முடிவுக்கு வர முடியாது. இந்த சங்கடமான நிலையைத் தவிர்க்க, வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு தனி 'டைரக்ட்ரேட் ஆஃப் பிராசிகியூஷன்' அமைக்கப்பட்டால் அவர்கள் சட்டம் தெரிந்தவர்கள் என்பதால், அந்த கேசை நல்லமுறையில் ஆராய்ந்து பார்த்து, முடிவு எடுக்க வசதியாக இருக்கும். அரசு இந்தக் கோரிக்கையை ஏற்கனவே ஏற்றுக்கொண்டது. ஆனால் அமுல் படுத்தவில்லை, இதைச் செயல்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் துறைக்கு பொறுப்பாக ஹைகோர்ட் ரிட்டயர்டு ஜட்ஜ் அல்லது டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அல்லது நல்ல சீனியர் அட்வகேட் நியமிக்கப்படலாம். அந்த வகையிலே இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் அதிகமான வாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், பெண்களுக்கு இந்த அளவுக்கு இல்லை. குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் பெண்களுக்கு எடுத்துக் கொடுத்திருக்கிற சலுகைகள், வேலைவாய்ப்புகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்று உறுதியாகக் கூறமுடியும். ஆனால் நீதித் துறையில் அஸிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர், பப்ளிக் பிராசிக்யூட்டர், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர், டிஸ்டிரிக்ட் முன்சீப், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், ஹைகோர்ட் ஜட்ஜ் போன்ற



1984 மார்ச் 31] [திரு. கே. குப்புசாமி]

பதவிகளில் பெண்கள் அதிகமாக நியமனம் பெறும் வாய்ப்பைப் பெறவில்லை. இந்தப் பதவிகளிலும் பெண்கள் அதிகமாக இடம்பெற தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சில குற்றங்களை பெண்களே விசாரிக்க ஏற்பாடு செய்யலாம்.

For example, offences of rape, adultery, kidnapping, child labour maintenance, outraging modesty, molesting, acceptance of dowry immoral traffic, begging, இது போன்ற குற்றங்களுக்கு எல்லாம் ஸ்பெஷல் கோர்ட் ஏற்படுத்தி, அதில் பெண்களை நீதிபதிகளாகப் போட வேண்டு மென்றும் அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விரைவாக இந்த வழக்குகளை எல்லாம் முடிப்பதற்கு, நல்ல நீதி, மக்கள் எதிர்பார்க்கின்ற சமுதாய நீதி கிடைப்பதற்கும் இது உதவிகரமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அதோடு வழக்கறிஞர்கள் வெல்பேர் பண்டு என்று ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கு கோர்ட் பீசோடு சேர்த்து ஒரு சிறு தொகையை வசூல்செய்து, அதை இந்த ஃபண்டுக்குக் கொடுக்கலாம். இப்படி வறுமையிலே வாடுபவர்கள், முதியோர்கள், தொழிலை விட்டு வந்தவர்கள் எல்லோருக்கும் உதவி செய்கிற எண்ணத்தோடு, இந்த கோர்ட் பீசோடு வசூல் செய்து, பார் கௌன்சிலில் கொடுத்து, அட்வகேட் வெல்பேர் பண்டு என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் சீரிய முறையில் செயல்படவேண்டுமென்றால், இந்த அட்வகேட் வெல்பேர் ஸ்கீமிற்கு அரசு எல்லா உதவிகளையும் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழனியைப் பொறுத்தவரைக்கும், இந்த ஆண்டு ரூ. 11 இலட்சத்தில் முன்சீப் கோர்ட் கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்ததற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பழனியில் முதல் வகுப்பு—'ஃபர்ஸ்ட் கிளாஸ்-மாஜிஸ்டிரேட்டு கோர்ட்' வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பத்திற்குப் பக்கத்தில் உத்தமபாளையத்தில் ஒரு கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, எல்லாவற்றையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கையை வரவேற்று, அமர்கிறேன். வணக்கம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறை மானியக் கொள்கை விளக்கக் குறிப்பில், இந்த மாநிலத்தில் உள்ள 119 சப்-ஜெயில்களையும் சிறைத் துறையில் எடுத்துக் கொண்டது ஒரு நல்ல காரியம் என்பதை முதலில் குறிப்பிட

விரும்புகிறேன். ஆனால் எந்த நோக்கத்திற்காக, அந்த சப்-ஜெயில்களை சிறைத்துறைக்கு மாற்றவேண்டுமென்று கேட்டோமோ, அதாவது அந்த கைதிகளுடைய கண்டிஷனை இம்ப்ரூவ் பண்ணுவதற்கு—அந்த நோக்கம் நிறைவேறியதாக எனக்குக் கிடைத்த தகவலின்படி, இல்லை. ஆகவே அதனுடைய பாலோ-அப் ஆக்ஷன்-அவர்களுக்கும் இந்த கண்டிஷன்ஸ் எக்ஸ்டண்ட் பண்ண வேண்டுமென்ற முறையில் பாலோ-அப் ஆக்ஷன் உடனடியாக எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு பதில் கூறுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் சொல்வார்கள், என்று நினைக்கின்றேன். காரணம் சப்-ஜெயில்களில் ஆயிரக்கணக்கான கைதிகள் அதிலே சம்பந்தப்பட்டிருப்பதனால், அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

1983-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அனைத்து சிறைகளிலுள்ள கைதிகள் உண்ணாவிரதம் இருந்தது பற்றி விவாதத்தில் பதில் கூறுகிறபோது, அமைச்சர் அவர்கள் அன்று கூறினார்கள்—சிறை விதிகள்—'ஜெயில் மானுவல்' திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவைகள் அமுலுக்கு வந்தால், கைதிகளின் பெரும்பாலான குறைகள் நிச்சயமாகத் தீரும் என்றும் சொன்னார்கள். அது அச்சகத்திலே அச்சடிப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். அது கூறி, பல மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அச்சடிக்க முடியவில்லை, என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்டில் இன் பிரிண்ட் என்று இருக்கிறது. ஆயிரக்கணக்கான கைதிகளின் வாழ்க்கை சம்பந்தப்பட்டிருக்கிற இந்த முக்கியமான விஷயத்தில் இவ்வளவு மெத்தமான போக்கை எப்படி அனுமதிக்க முடியும்? அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, இப்போதாவது, ஒரு கெடு சொல்லி, இவ்வளவு மாதத்திற்குள் இது வெளிவரும். அமுல் படுத்தப்படும் என்று 'டெபனட் கமிட்மெண்ட்டை' சொல்ல வேண்டும். இது முக்கியமான விஷயம் என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம். சிறைக்குள் நடக்கும் மரணம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சிறைக்குள் நடக்கும் மரணங்கள் சிறை அதிகாரிகளின் மன்னிக்க முடியாத அலட்சியப் போக்கினால் நடந்திருக்கின்றன. பிராம்ப்ட் ஆக, உடனடியாக கவனிக்கப்படாமல், அலட்சியப்படுத்துவதால், மரணங்கள் ஏற்படுகின்றன. மரணங்கள் சம்பந்தமாக எனக்கு வந்த ஒரு தகவலைப் பற்றிச் சொல்கிறேன்.

வேலூர் மத்திய சிறையில், பாபு என்ற கான்விக்ட் நம்பர் 1313 என்பவர்—மோகனா இளம் மனைவி, சுரேஷ் கைக்குழந்தை, இவர்களுக்கு வேறு ஆதாரம் கிடையாது. அந்த பாபு என்பவ





ருக்கு 15-3-1984 வியாழனன்று, நள்ளிரவு 12 மணி அளவில் நெஞ்சு வலி வந்துவிட்டது. அவர் துடித்துக் கொண்டிருந்தார். மற்ற பிரிசினர்ஸ் எல்லாம் சத்தம் போட்டு கத்தினார்கள். கேட்டு திறக்கப்பட வேண்டுமென்று ஏராளமாக சத்தம் போட்டுப் பார்த்தார்கள். ஆனால் எந்த அதிகாரியும் வரவில்லை. அவன் துடித்து, அப்படியே மயங்கிவிட்டான். வாயில் நுரை தள்ளியது. பேதியும் ஏற்பட்டது. இதைக்கண்ட மற்ற கைதிகள் எல்லாம் அலறினார்கள். கோஷம் கொடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்து, அதிகாரிகள் வந்து அன்ன நடை போட்டு, பிறகு வேலூர் மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றார்கள். 12 மணிக்குச் சத்தம் போட்டால் 2 மணிக்கா வருவது?

There the Doctors said "We will not accept the Dead Body and it is a serious matter".

(பிற்பகல் 12-10)

எனவே அந்தமாதிரி வேலூர் மருத்துவமனை அதிகாரிகள் அதை மறுத்து விட்டார்கள். "பிணத்தையா எங்களிடம் ஒப்படைக்கிறீர்கள்" என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். The doctors have refused. சிறை அதிகாரிகளின் மனிதத் தன்மையற்ற போக்கினால், ஒரு இளம் பெண் ஒரு கைக்குழந்தையுடன் இன்று அனாதையாக ஆக்கப்பட்டிருக்கின்றார்.

What does the Government propose to do for the family—I do not know. எனவே, இதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்று யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதேமாதிரி, மதுரை மத்திய சிறையில் சிவன் கோனார். நான் ஒன்றிரண்டு சாம்பிள்ஸ்தான் சொல்கிறேன். இந்த ஆட்டிட்டியூட் மாற்றப்படவில்லை. அதற்கு ஒரு உத்திரவாதம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவில்லை என்றால், This will continue.

மதுரை மத்திய சிறையில் சிவன் கோனார் என்ற ஆயுள் தண்டனைக்கைதி. அவனுடைய மனைவி இறந்து விட்டாள். 10 வயது மகள் ஜெயா கிரிஷ்டியன் மிசினரிலே படித்துக் கொண்டிருக்கிறாள். இந்தக் கைதியை, மதுரை மத்திய சிறை சூப்பிரன்டெண்டென்ட் குணசேகரன் லைபர்சை வெளியே வேலைக்குக் கொண்டு போகவேண்டும் என்று சொன்னால், I do not know th correct position அந்த லைபரை சூப்பிரன்டெண்டென்ட் வீட்டிற்கு வேலைக்காகக் கொண்டு போனார்கள். வேலை செய்யும்போது அங்கே தவறி விழுந்து செத்துப் போனான் என்று சொல்கிறார்கள். இப்போது ஜெயா என்கிற 10 வயது

பெண்ணுக்கு அப்பா இல்லை. அம்மா இல்லை. இன்றைக்கு அந்தப் பெண் அனாதையாக இருக்கிறது. இன்னும் பல உதாரணங்களைக் கூறமுடியும். நேரம் இல்லை.

But I am giving a few examples to tell you, how the attitude of the Officials is. அதிகாரிகள் இப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது, பிராம்ப்டாக இண்டர்வீன் பண்ணி, ஒரு ஹியூமன் லைப் நம்முடைய கஸ்டடியிலே இருக்கிறது என்ற முறையிலே கவனிக்காததின் காரணமாக இப்படிப்பட்ட மரணங்கள் ஏற்படுகின்றன. இந்த மாதிரி வேறு கேஸ்கள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் தனியாகக் கொடுக்கிறேன். என்னிடம் இதற்கெல்லாம் R.D.O. Inquest, Police Inquest, பஞ்சாயத்தார் என்றெல்லாம் சொல்லாதீர்கள்.

Because we know whet those inquests are. பஞ்சாயத்தார், ஜூடிசியல் என்கொயரிக்குப் போனதெல்லாம் எப்படி வந்தது என்பது தெரியும்.

Even in the Post-Mortem report the Doctor has to say somthing different. அதனால், இதில் உள்ள சீரியஸ்னஸைப் பார்க்க வேண்டும். விஷயம் என்ன என்றால் சிறைகளில் காலாகாலத்தில் சிகிச்சை செய்யாததினால் அல்லது சட்ட விரோதமாக அதிகாரிகள் வீட்டிலே உள்ள வேலைகளுக்கு கொண்டுபோனதால் ஏற்படும் ஆக்சிடெண்ட்ஸ், அதன் விளைவாக ஏற்படக் கூடிய சாவுகள் பல இருக்கின்றன. அவைகள் எல்லாம் மறைக்கப்படுகின்றன. ஆர்டினரி ரொட்டீன் டெத்தாகச் சொல்லப்படுகிறது. அரசு மட்டத்தில் ஆழமாகப் பார்க்காமல், இது சாதாரண சாவு என்று எண்ணுவதால் பல கைதிகள் பரிதாபகரமாக காக்காய் போல் சாகும் அபாயம் உள்ளது என்று நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

அடுத்து, திருச்சி சிறையில், 28—10—1979 அன்று மாரியப்பத் தேவர் மரணம் பற்றி, முருகேசன் கமிஷன் தீர்ப்பு கூறியது. அதாவது மாரியப்பத் தேவர் தானே தூக்குப் போட்டுச் செத்தார் என்பதை ஏற்க முடியாது; அவர், மாரியப்பத் தேவர் மிருகத்தனமாக அடிக்கப்பட்டார் என்பதும் அவர்களுடைய பைண்டிங்ஸ். இதிலேயிருந்து என்ன பொருள்.

That it is a down-right murder. அதாவது தற்கொலை அல்ல. அடிக்கப்பட்டார் என்று இரண்டு பைண்டிங்ஸ் இருக்கிறது. அப்படி என்றால், அவர்கள் அடித்துக் கொன்று இருக்கிறார்கள் என்று அவருடைய தீர்ப்பிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது. அதற்குப் புலன் விசாரணை செய்த போலீஸ், இந்தக் கொலை செய்த Assistant Jailor Sylv st r-ஐ ஏன் 302 செக்ஷனிலே இன்றையதினம் வரையிலும் கைது



செய்யவில்லை? ஏன் பிராசிக்கியூட் பண்ணவில்லை? போலீசாரால் துப்பு கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

நேற்றுதான் ஆளும்கட்சி சார்பிலே பேசுகின்றபோது, போலீஸ்பற்றி, அவர்களுடைய திறமையைப் பற்றிச் சொன்னார்கள். பெங்களூரிலே போய் குற்றவாளியை கண்டுபிடித்தனர், திருட்டுப் போன சாமியின் மனைவியை லண்டனில் கண்டு பிடித்தனர், திருட்டுப்போன சாமியை அமெரிக்காவிலே போய் கண்டுபிடித்தனர். உலகத்தில் போய் குற்றவாளிகளைக் 'கண்டு பிடிக்கின்ற போலீஸ் நம்ம ஊரிலே நடந்திருக்கக்கூடிய ஒரு கொலையைப் பற்றி, இந்த ஜூடிசியல் என்கொயரியினுடைய சர்ட்டென் கன்குளுசன் அவர்களுடைய இன்வெஸ்டிகேசனிலே இந்தக் கொலையைப் பற்றி சொன்ன பிறகும், இது வரைக்கும் ஏன் அந்த Assistant Jailor Sylvestor-ஐ 302-ல் பிடிக்கவில்லை. ஒரு கொலைகாரனை வேண்டும் என்று' இன்றைக்கு வெளியில் விட்டிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். இந்த அசிஸ்டென்ட் ஜெயிலரை 302-ல் கைது செய்ய வேண்டும். There is v lue for humanl ife என்று சொன்னால், That is an essential thing என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சில நல்ல முடிவுகளையும் உத்தரவுகளையும் அரசாங்கம் போட்டுள்ளது. உதாரணமாக உணவின் அளவை அதிகப்படுத்தியுள்ளீர்கள்; கைதிகளின் குறைகளை அறிய இரகசிய பெட்டிகள் வைத்து, செஷன்ஸ் நீதிபதிதான் அதைத் திறக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்துள்ளீர்கள். ஆனால் இவைகள் அமல்படுத்தப்படுகிறதா என்றால், இவைகளை அமல் படுத்துவதற்கு ரத்தத்திலேயே ஊழல் ஊறிப்போன ஒரு அதிகார இயந்திரத்தை நம்பித்தான் இருக்கிறீர்கள். அது சரிவர அமல் படுத்தப்படுமா, இம்பிளிமென்ட் செய்யப்படுமா என்பதே க்ருஷியல் குவஸ்டின் என்று சொல்ல விரும்புகிறேன்.

உங்களுடைய உத்தரவுகள் இந்த அதிகாரிகளுடைய ஊழல் சம்பாத்தியத்தை பாதிக்குமானால், அவர்களுடைய திருட்டை பாதிக்குமானால், அவர்களுடைய லஞ்சத்தை பாதிக்குமானால், உங்களுடைய உத்தரவுகளை முதலிலே தகர்த்தெறியக்கூடியவர்கள் அந்த அதிகாரிகள்தான். அட்மினிஸ்ட்டிரேஷன் பண்ணக் கூடிய அதிகாரிகளே முதலில் அதை தூக்கி எறிவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே, அவர்களுடைய கையிலே இந்தப் பொறுப்பை கொடுப்பது என்பது பூனையின் கையிலே கிளியைக் வளர்த்துக் கொடுத்தேன் என்று சொல்வார்களே அது போலத்தான் ஆகும். அதுதான் இப்பொழுதும் நடந்து கொண்டிருக்கின்றது.

சிறையிலே நடக்கும் ஊழல் சம்பந்தமாக இந்தியச் சிறைகளைப் பற்றி கும்கும்சந்தா என்கின்றவர் சமீபத்திலே ஒரு ஆய்வு செய்து, லஞ்சம், ஊழல், திருட்டின் ஊற்று சிறைகளிலே

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 31

எவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். உணவு, சிறை
வாயில் கதவு, கைதிகளுக்கு வார்டு ஒதுக்குவதில், கைதிகளுக்கு
வேலை ஒதுக்குவதில், தண்டனையை குறைக்க மார்க் அளிப்பதில்
அதாவது ரெமிஷன், ஆஸ்பத்திரிகளிலே கைதிகள் அட்மிஷன்,
பேட்டி, இண்டர்வியூ கொடுப்பதில் ஊழல் என்று இந்தத் துறை
யிலேதான் புயங்கரமான ஊழல்களுக்கு இடம் தரப்படுகின்றன
என்று கும்கும்சந்தா என்கிற பெண் பத்திரிகையாளர் குறிப்பிடு
கிறார். டெல்லியிலே இருக்கும் திஹார் சிறைச்சாலையில் உள்ளது
போன்ற அளவுக்கு, அந்த அளவுக்கு இங்கே ஊழல் இருக்கிறது
என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த அளவுக்கு அங்கே ஊழல்
இருக்கிறது என்று அந்த அம்மா அவர்கள் சொன்னதைப் போல,
But I am not comparing the I. Gs. and Officers here டெல்லி திஹார்
சிறையைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். இந்த ஊழல்களை
விரிவான கணக்கு போட்டு, அதிகாரிகளுக்கு கிடைக்கும்
தாராயமான தொகையை அந்த ஆய்வாளர் கொடுப்பது—ஐ.
ஜி.க்கு மாதம் 1 இலட்சம், சூப்பிரண்டெண்டுக்கு
70,000லிருந்து 75,000, ஜெயிலர் 50 ஆயிரத்திலிருந்து 60,000
உதவி ஜெயிலர் சில ஆயிரங்கள், ஜெயிலிலே இருக்கக்கூடிய
அந்த டாக்டருக்கு 15,000 இப்படி இருக்கிறது. இது திஹாரில்.
இங்குள்ள ஐ.ஜி. பற்றி நான் சந்தேகம் கூறவில்லை. திஹார்
ஜெயில் அளவுக்கு தமிழகத்தில் ஊழல் உண்டு என்று சொல்ல
வில்லை. அது இண்டர்நேஷனல் ஜெயில். இண்டர் நேஷனல்
கைதிகள் எல்லாம் வருகிற அளவுக்கு இருக்கின்ற ஒரு ஜெயில்.
ஆனாலும் தமிழக சிறைகளிலேயும் எந்த அளவிற்கு நடைபெறு
கின்றது என்று நான் கூற விரும்புகிறேன்.

மதுரைச் சிறையிலே காண்டிராக்ட் மூலமாக விறகு வாங்கப்
படுவதாக கணக்கு எழுதுகிறார்கள், பணத்தை எடுத்துக் கொள்
கிறார்கள். ஆனால் விறகு வாங்கப்படவில்லை. சிறைச்சாலை
காம்பவுண்டிற்குள் இருக்கும் மரங்களை வெட்டி பயன்படுத்து
கிறார்கள். நான் சில மரங்களின் நெம்பர்களைச் சொல்கிறேன்.
மரம் நெம்பர் 51 வேப்ப மரம், மரம் நெம்பர் 185 புளிய மரம்,
மரம் நெம்பர் 10, ஏ. பி. (குறுக்கீடு) ஆதாரத்தோடு சொன்னால்
தானே உங்களுக்கு நலலது. அதே போல மரம் நெம்பர் 2-பி
வாகை மரம். இப்படி இன்னும் சில மரங்களின் பட்டியல் என்
னிடத்திலே இருக்கிறது. ஆகவே, இந்த மரங்களை வெட்டி
விறகாக சமையலுக்குப் பயன்படுத்திவிட்டு விறகு காண்டிராக்ட்
மூலம் வாங்கியதாக கணக்கு எழுதி, பணம் எடுத்துக் கொள்
கிறார்கள். இது ஏராளமாக அங்கே நடைபெற்றுக் கொண்டு
இருக்கிறது. சூப்பிரண்டெண்டின் உத்தரவு இல்லாமல்
அந்த மரங்கள் அங்கே வெட்டப்பட முடியாது.

அதே போல மதுரை ஜெயிலர், இண்டர்வியூ கொடுப்பதற்
காக கைதிகளின் உறவினர்களிடம் இலஞ்சம் வாங்குவதாக
புகாராக என்னிடம் தம்பெரிய... வந்திருக்கிறது. பல்லாண்டு
களாக அவர் அங்கே இருக்கிறார். பிறகு அவருக்கு டிரான்ஸ்பர்
உத்தரவு வந்தது. ஆனால் அவர் இங்கு வந்து டிரான்ஸ்பர்



1984 மார்ச் 31] [திரு. ரா. உமாநாத்]

உத்தரவை ரத்து செய்துவிட்டு, மதுரையிலேயே வாங்கிக் கொண்
டார். இப்போது மதுரையிலேதான் இருக்கிறார். சிறைக்
கைதிகளுக்கு ஓரளவிற்கு எங்காவது நம்பிக்கை இருக்கும் என்
றால், அது மேலிடத்தில் தான் இருக்கும். ஆனால், மாற்றல்
உத்தரவை மேலிடத்திற்கே வந்து மறுபடியும் மாற்றிச் செல்
கிறார் என்று சொன்னால், அந்தக் கைதிகளுக்கு மேலிடத்திலும்
நம்பிக்கை இருக்காதே.

அடுத்து திருச்சி சிறை. திருச்சி சிறை சூப்பிரண்டெண்ட்
தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காக, தனக்குத்
தேவையான இரண்டு கட்டில்கள், 4 சாய்வு நாற்காலிகள், ஒரு
டேபிள், ஒரு டைனிங் டேபிள், ஒரு பஞ்சு மெத்தை, இவைகளை
சிறையிலேயே தயாரித்து எடுத்துச் சென்றதாக எனக்கு தகவல்
கள் வந்துள்ளன. உணவுத் துறையில் இலட்சக்கணக்கான
ரூபாய் மதிப்புள்ள பொருள்கள், அனைத்துச் சிறைகளிலும்
திருடப்படுகின்றன. நான் இந்த பாயின்ட்டுக்களை எதற்குச்
சொல்கிறேன் என்றால், இந்த பூதாகரமான ஊழல் வருமானம்
பாதிக்கப்படும் என்பதால் உங்களுடைய உத்தரவுகளையும்.
பஞ்சாயத்து கமிட்டிகளையும் செயல்படுத்துவதற்கு எப்படி
விடுவார்கள்? அவர்களுக்கு வரக்கூடிய பயங்கரமான வரு
மானத்தின் மீது கை வைக்கப்படுமானால், சிறைக் கைதிகளின்
பஞ்சாயத்தை பங்ஷன் பண்ண அவர்கள் விட மாட்டார்கள்.

(பிற்பகல் 12-20)

ஒரு சாம்பிள் சொல்கிறேன். மதுரை சிறை பஞ்சாயத்து
7-4-82-ல் அமைக்கப்பட்டது. அங்கத்தினர்கள், கருப்பையா,
அய்யாவு ஆகியோர்களை அந்தக் கமிட்டி அமைத்து 15 நாட்
களுக்குள் டிரான்ஸ்பர் பண்ணிவிட்டார்கள். டிசிப்ளின் என்ற
பிரிடெக்ஸ்ட் அவர்களிடம் இருக்கிறது. அழகர் என்பவர், மெம்
பர் வேலூருக்கு மாற்றப்பட்டார். ராஜேந்திரன் என்ற மெம்பர்
சேலத்திற்கு மாற்றப்பட்டார். ராமசாமி என்ற மெம்பர்
திருச்சிக்கு மாற்றப்பட்டார். இப்படி அந்த கமிட்டி குளோஸ்
பண்ணப்பட்டது. திருச்சி சிறையிலே 12 உறுப்பினர்கள். ராம
சாமி இங்கேயிருந்து எப்படி மாற்றப்பட்டாரோ அங்கேயிருந்தும்
மாற்றப்பட்டார். ஐயாக்கண்ணு மாற்றப்பட்டார். இவர்கள்
எல்லாம் ஜெயில் கமிட்டி மெம்பர்ஸ். இப்படி இரண்டு பேர்
களை மாற்றிய பிறகு மற்ற 7 பேர்களும் They became inactive
பயந்து விட்டார்கள். நமக்கும் டிரான்ஸ்பர் வரும்போல் இருக்
கிறது என்று சொல்லி தங்களுடைய குடும்பங்களைப் பார்ப்பது
கஷ்டமாக இருக்குமே என்று சொல்லி He made the whole
Committee inactive, by giving some conditions to them.
அதை பயன்படுத்தி திருச்சி ஜெயில் சூப்பிரண்டெண்ட் அந்த
கமிட்டியிலே உள்ள 3 பேர்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்
கள். அவர்கள் மூலமாக ஏதாவது கன்சஷன் கேட்டால் அவர்
களுக்குக் கொடுத்து அவர்களை டெவலப் பண்ணுவது. It makes
the whole Committee infructuous. அரசாங்கம் நல்ல உத்திரவைத்

தான் போட்டிருக்கிறார்கள். I am happy. பாக்ஸ் வைக்க வேண்டுமென்று நான் சொன்ன யோசனையை கவர்ன்மெண்ட் அக்சப்ட் பண்ணி அனுப்பியிருக்கிறார்கள். அது தான் நடக் கிறது. ஆனால் திருச்சி சிறையினுடைய அபாயம் என்னவென் றால் அங்கே 17 பேர்களை தன்னுடைய சைட் என்கிற முறை யில் ஸ்பிளிட் பண்ணி சூப்பிரண்டெண்டெண்ட் வைத்திருக்கிறார். எந்த நேரமும் அந்தச் சிறையிலே கிளாஷ் ஏற்படக் கூடிய அபாயம் உண்டு.

சிறையிலே குறைகளைப் பற்றிய மனுக்களைப் போட பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. செஷன்ஸ் நீதிபதி அதைத் திறக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நான் எக்சாம்பிள் சொல்கிறேன். திருச்சி மத்திய சிறையில் —மற்ற சிறைகளிலும் அப்படித் தான் இருக்கிறது—உள்ள பெட்டி களில் ஜனவரி மாதம் மனுக்கள் போடப்பட்டிருக்கின்றன. 3 பாக்ஸ் வைத்திருக்கிறார்கள். சிறையிலே தயாரிக்கப்பட்ட மரப் பெட்டி. அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சிறை அதிகாரிகளே அதனுடைய அடிப் பலகையின் ஆணியை எடுத்து அதைத் திறந்து About 300 petitions were stolen by the officials. நல்லது செய்வதற்கு மந்திரி உத்தரவு போடுகிறார்கள். ஆனால் அங்கே அவர்கள் விடுவார்களா? அவர்கள் வருமானத்தின்மீது கைவைக்கிற போது அவர்கள் அதனுடைய ஸ்குருக்களை எல்லாம் திறந்து பெட்டிஷன்களை தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். Yon are dealing with the officers who are stealing. The officers who are supposed to control the offiences themselves steal. 300 பெட்டிஷன்களைத் திருடியிருக்கிறார்கள் என்றால் அந்த பாக்ஸ் வைத்த நிலைமை என்ன ஆகும்? ஒன்று அவர்கள் விரும்பிய பெட்டிஷன்கள் போகட்டும் என்று சொல்லிப் போகும், அல்லது பெட்டிஷனே இருக்காது.

என்னுடைய யோசனை கைதிகளுடைய பஞ்சாயத்து மெம்பர் களை மாற்றுவது என்றால் அமைச்சர் அனுமதி தேவை என்ற உத்திரவு வேண்டும். நாட் தட், ஐ. ஜி.யினிடத்திலே கான்பி டன்ஸ் இல்லை என்பது இல்லை. அந்த குவஸ்டின் இல்லை. After all he is part and parcel of the official machinery. என்ற நம்பிக்கையில் பார்க்க முடியும் என்று சொல்கிறேன். அந்த பஞ்சாயத்துக் கமிட்டியிலே இருக்கக் கூடிய மெம்பர்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால் ஒரு ஸ்டிபுலேஷன், அமைச் சருடைய அனுமதியின் பேரில்தான் செய்ய வேண்டும். பாக்ஸ் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொன்னால் உலோகத் தகடுகளைக் கொண்டு ஒரு பாக்ஸ் வைக்க வேண்டும். அதனுடைய சாவி செஷன்ஸ் நீதிபதியிடம் கொடுத்துவிட வேண் டும். கைதிகளுடைய பார்வையில் அந்த பாக்ஸ் பிளாக்கிற் குள்ளே வைக்கப்பட வேண்டும். வெளியிலே இருந்தால்தான் இந்த மாதிரி நடக்கிறது. போஸ்ட் பாக்ஸ் மாதிரி வைத்து விட்டால்—கையை விட்டாலும் உள்ளிருந்து அந்த எடுக்க





முடியாத நிலைமை இருக்கும். ஆகவே தகடுகளைக் கொண்டு செய்யப்பட்ட பாக்ஸை வைக்க வேண்டும். நான் ஒரு யோசனை சொல்கிறேன், இந்த அபாயத்தைத் தடுப்பதற்காக. பெட்டர் யோசனை இருந்தால் தாராளமாக செய்யுங்கள். நீங்கள் போட்ட உத்திரவுகள், வசதிகள் கைதிகளுக்கு கிடைக்க உத்திர வாதம் செய்யத்தான் போன செசனில் இதை எல்லாம் தவிர்ப் பதற்காக நான் சஜ்ஜஸ்ட்டு செய்தேன். எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட ஆலோசனைக் குழு சிறை மட்டத்திலே அமைக்க வேண் டும் என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இது வரைக்கும் அது நடக்கவில்லை. இப்படி இருந்தது என்று சொன்னால் அப்போதைக்கு அப்போது அந்தப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சம் குறைந்து உங்களுடைய உதவி அவர்களுக்கு பலன் தரக்கூடிய அளவில் இருந்து இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆயுள் தண்டனை கைதிகள் 10 ஆண்டுகள் பூர்த்திச் செய்யப் பட்டால் விடுதலை சம்பந்தமாக, இதை தீர்ப்பதற்காக 15 நாட்களுக்கு ஒரு தடவை ஆலோசனைக் குழு கூட்டுவதற்கு உத்திரவு போட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் அது அப்படி once in fifteen days கூட்டுவது இல்லை, இப்போது. அது தான் பொசிசன். கைதிகள் விடுதலைப் பரிசீலனையை ஒன்று, இரண்டு மணி நேரத்தில் முடிக்கிறார்கள். கூட்டும் போதும் just they spent one or two hours. ஒவ்வொரு கைதிகளின் நிலையை பரிசீலித்து முடிக்க சில நிமிடங்கள் கூட எடுப்பது இல்லை. ரொட்டீனாக இப்படி விடுதலை விஷயங்கள் ஒரு சில நிமிடங்களில் முடிப்பது நல்லது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி செயல்படும் முறை கண்டு தங்கள் மீது நம்பிக்கையை இழந்து இருக்கிறார்கள் கைதிகள். மேலும் ஒரு லேட்டஸ்டு உதாரணம் அந்த போர்டு கூடினாலும் என்ன நடக்கிறது என்றால் பழனியாண்டி நெம்பர் 50995 Trichy Central Jail, Probationary Officer, premature release செய்து விட்டார்.

The Probationary Officers and the R.D.O. recommended. குற்றம் நடந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய கலெக்டர் ecommended கண்டசியில் அவருக்கு அரசிடம் இருந்து என்ன வந்து இருக்கிறது என்றால் அவர் இன்னும் 5 வருடங்கள் இருக்கவேண்டும் என்று வந்திருக்கிறது. பெயர் பழனியாண்டி, நெம்பர் 50995, Trichy Central Jail. குற்றம் நடந்த மாவட்டத்தில் உள்ள கலெக்டர் அவர்கள் கிளியரன்ஷ் கொடுத்த பிறகு இன்னும் 5 வருடங்கள் இருக்க வேண்டும் என்று சொன்னால் I do not know how it happens. இந்த மாதிரி 2 வருடங்கள் இருக்கவேண்டும், மேலும் 3 வரு டங்கள் இருக்க வேண்டும். இப்படி என்று பலது வருகிறது. ஆகவே இது எதனால் ஏற்படுகிறது என்று பார்த்து அதை rectify செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 31

கிறேன். ஆகவே அரசு அதில் மேலும்
எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடவடிக்கை
நியாயம் ஆகும். ஆகவே இந்த ஆலோசனைக் இது எப்படி
பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கும் அட்வைசரி போர்டு குழுவின் செயல்
கள் கழித்தவர்களை துரிதமாக விடுதலை செய்வதற்கும் 10 ஆண்டு
சரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவ
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு
பின் ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டவர்கள் 18-12-1978-க்கு
கட்டாயமாக பூர்த்தி செய்தால் தான் 14 ஆண்டுகள்
துரை செய்யலாம் என்று சட்டத்தில் ஒரு விடுதலைக்கு பரிந்
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் செக்ஷன் இருக்கிறது.
கொடுமையை தவிர்க்கவும் அவர்கள் விடு தெரியும். இந்தக்
களுக்குப் பிறகு பரிசீலனை செய்வதற்கு தலையை 10 ஆண்டு
பெறுவதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. நாம் அதிகாரம்
மத்திய அரசு ஏற்கவில்லை. மீண்டும் அந்தச் சட்டத்தை அதை
கொண்டுவர வேண்டும் என்று நான் வற்புறுத்த நாம்
கிறேன். விரும்பு

அடுத்தபடியாக பரோல் விஷயம். மாண்புமிகு அமைச்
சரிடம் பரோல் கேட்டபோது எல்லாம் நிச்சயமாக கிடைத்து
இருக்கிறது. நான் அதில் குறையைச் சொல்ல மாட்டேன்.
Whenever I approached for various prisoners I got it. இப்
போதுகூட லேட்டஸ்ட்டாக ஒன்றுக்கு கொடுத்து இருக்
கிறார்கள். அதனால் தாராளமாக கொடுக்கிறார். எல்லா
பிரிசனருக்கும். Who are all in need cannot approach through a
M. L. A. கொடுக்கவேண்டும். அதிலே ஒரு விஷயம் இருக்
கிறது. அதனால் இங்கே நாம் அப்ரோச் செய்ததில் டிபிகல்ட்
இல்லை. போன செசனில் பரோலில் விடுப்பு விடுவதனை
தாராளமாக்குவதை பரிசிலிப்பதற்காக Liberalisation of parole
rules என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி
கொடுத்தார்கள். ஆனால் கொள்கைக் குறிப்பைப் படித்துப்
பார்த்தால் The old things still continue. அதிலே ஒன்றும்
'லிபரலைசேஷன்' பார்க்கவில்லை. இதுவரை சூப்பிரன்டெண்
டெண்ட்டு அவசர லீவு கொடுத்துவந்தார். இப்போது போலீசை
கேட்டுதான் அவசர விடுப்பு கொடுக்கவேண்டும் என்று நிபந்
தனைகள் போட்டு இருப்பதால் தான் உண்ணாவிரதம் எல்
லாம் நடந்து அதற்கு உங்கள் சார்பாக பதில் சொல்லப்பட்
டிருக்கிறது. அதற்கு அரசின் சமாதானம் என்ன என்று கேட்
டால் இப்படி விடுப்பில் போகிற சில கிரிமினல்கள் அவர்கள்
மேலும் கிரிமினல் குற்றத்தில் ஈடுபட்டு இருக்கிற சம்பவத்தி
னால் போலீஸ் வெரிபிகேஷன் தேவை என்றுதான் சமாதானம்.
நான் கேட்கிறேன் அதனை லாஜிக்காகக் கொண்டு போனால்
அப்படிப்பட்ட பயங்கரமான குற்றங்களை கைதிகள் அல்ல நம்
முடைய பிரஜைகளாலே டெய்லி நடந்து கொண்டிருக்கிறது.
அப்போது பிரஜைகள் இந்த மாதிரி கொலை செய்கிறார்கள்,
குத்தி விடுகிறார்கள் என்பதால் இந்த பிரஜைகள் எல்லோரை



1984 மார்ச் 31] [திரு. ரா. உமாநாத்]

யும் ஜெயிலுக்கு கொண்டுபோக முடியுமா? I want to stress that that logic will not apply properly to all. நான் சொல்வது என்ன என்றால் அதற்காக நாட்டிலுள்ள அனைத்து பிரஜை களையும் கொண்டு போகமுடியுமா? குற்றம் செய்பவர்களை மட்டும் தண்டிப்பது தான் நியாயம். அது போன்று இவர்களில் யார் யார் விடுப்பில் போய் குற்றம் செய்தார்களோ அவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். Under Criminal Law Offence தண்டனை வாங்கிக் கொடுங்கள். ஆகவே சூப்பிரண்டெண்டென்ட் பார்த்து அவசர விடுப்பு கொடுப்பதற்கு பதிலாக போலீசை கேட்டு செய்வது என்பது எந்த பர்பசுக்கு நீங்கள் சொன்னீர்களோ அது சர்வ் ஆகாது. அதனால் நான் சொல்கிறேன்.

நான் குறிப்பைப் பார்த்தேன். ஜெயிலில் போடும் பத்திரி கைகள், தினமணி, இந்து என்று இருக்கின்றன. ஆனால் பார்ட்டி பேப்பரைப் பார்த்தபோது அண்ணா இருக்கிறது. இது நியாயம் அல்ல. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள் வார்கள் என்று நினைக்கிறேன். எப்போது நீங்கள் ஆளும் கட்சியினுடைய கட்சி பத்திரிகையைப் போட்டீர்களோ ஜெயில் காஸ்ட்டில், மற்ற எதிர்க்கட்சிகளுடைய கட்சி பத்திரிகை களையும் போடுவது நியாயமானது ஆகும். அதை நிச்சய மாக அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறை அடக்குமுறை விஷயத்தில் லேட்டஸ்ட்டாக ஒரு புகார். வேலூர் சிறையிலிருந்து மரண தண்டனை கைதிகள் ஏதோ ஒரு ரிட் போட்டு இருக்கிறார்கள் போலிருக்கிறது. I want the Hon'ble Minister to enquire. அந்த ரிட்-க்கு அரசுக்கு நோட்டீஸ் வந்திருக்கும். கோர்ட் விசாரணையில் அதை பலன் இல்லாமல் செய்ய கைதிகளிடம் பொய் ஸ்டேட்மெண்டு வாங்க Mr. Vidyasagar, D. I. G. வந்தார் என்றும், பல கைதிகள் கொடுத்த ஸ்டேட்மெண்டு அதிகாரிகளுக்கு எதிராக போகவே ஆத்திரம் கொண்ட டி.ஐ.ஜி. வித்தியா சாகர் அந்த பஞ்சாயத்து மெம்பர்களை தேர்ந்தெடுத்து அவர்களை 48 மணி நேரம் லாக் அப்பில் வைத்து the first action was to keep them under lock up for 48 hours. அப்புறம் என்ன நடந்தது பாருங்கள். லாக் அப்பில் வைத்த பிறகு அது வரை போடப்பட்டு வந்த சாப்பாட்டின் தரம் குறைந்து போய் விட்டது. இதை எதிர்த்து 26-2-1984-ல் உண்ணா விரதம் நடந்து இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

மார்ச் 10, 11, 12 தேதிகளிலும் அந்த ஜெயிலில் நடந்திருக் கிறது. பிறகு அந்தச் சிறை அதிகாரிகள் இறங்கிவந்து விட்டார் கள். அந்தச் சாப்பாட்டைப் பழைய மாதிரி கொடுத்தார்கள்.

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் .31

அதைச் செய்தார்கள் என்று பார்க்கின்றபொழுது, இது உண்மை என்றால், This is sadism ஹைகோர்ட்டில் விசாரிக்கும் பொழுது, பிரஷர் கொடுத்து இம்மாதிரி செய்வது என்றால், 'It is contempt of Court. This involves that' மற்றவர்கள் துன்பத்தில் நாம் இன்பம் பெறுவது என்பது. Enjoying satisfaction at others' cost.

அடுத்து, கற்பழிப்பு, கொலை வழக்குகள் சம்பந்தமாக ஒரு வார்த்தை நான் கூற விரும்புகிறேன். ஒரு பரிதாபகரமான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. சமீபத்தில் மதுரை அருகே மாங்குளத்திலிருந்து 18 வயது பெண்ணை ஒரு லாட்ஜில் வைத்து எட்டு பேர் கற்பழித்துக் கொலை செய்திருக்கிறார்கள். நீதிபதிக்கு இவர்கள் தான் கற்பழித்தவர்கள், கொன்றவர்கள் என்று மனச்சாட்சிக்கு தெரிகிறது. இது நீதிபதி சொல்கின்ற அந்த ஜட்ஜ்மெண்டிலேயிருந்து பார்த்தால் தெரிகிறது. ஆனால் அவர் ஜட்ஜ்மெண்டிலே என்ன எழுதுகிறார் என்றால், அது பத்திரிகையிலே வந்தது. It is a fact. I am quoting from the judgement. The Judge is convinced. The Judge says :இந்த வழக்கில் விசாரணை செய்த போலீஸ் அதிகாரிகள், சிறிது எச்சரிக்கையுடன் செயல்பட்டிருந்தால் சாட்சியங்கள் கலைக்கப்பட்டிருக்க முடியாது. அவர்களுடைய அலட்சியத்தினால் 8 பேரையும் விடுதலை செய்கிறேன்' என்று கூறினார். ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஒரு பெண்ணை எட்டு பேர் கடத்தி வந்து, கற்பழித்து, கொலையும் செய்திருக்கிறார்கள் என்று ஜட்ஜும் கன்வின்ஸாகியிருக்கிறார். ஆனால் ரெக்கார்டுகளில் சாட்சியம் இல்லை.

What is the police doing? Conspiracy case was launched against us. அரசியல் காரணமாக நான் சிறையில் இருக்கின்றபொழுது பிரிட்டிஷார் காலத்தில் எல்லாம் சாட்சியைக் கலைத்து விடாமல் இருப்பதற்காக சாட்சிக்குப் பின்னால் போலீஸ் போய்க் கொண்டே இருக்கும். ஆனால் அதெல்லாம் பொய்ச் சாட்சிகள். இது உண்மையான சாட்சி. எனவே, இந்தச் சாட்சியத்தைக் கலைக்காமல் ப்ரொடக்ஷன் கொடுப்பதற்கு போலீஸ் தரப்பிலேயும், சர்க்கார் தரப்பிலேயும் நடவடிக்கை எடுக்க வேண்டுமா இல்லையா? அப்படி இல்லாத காரணத்தால் இந்த வழக்கு இப்படிப் போய்விட்டது. போலீஸ் சரியான முறையில் ஆய்வு செய்யாத காரணத்தால் ஒரு இளம் பெண்ணின் உயிர் பலி கொடுக்கப்பட்டிருப்பதற்கு நியாயம் ஏற்படாமல் போய்விட்டது. These people require sacking. அலட்சியத்தின் காரணமாக பெண்ணைக் கற்பழித்து, கொலை செய்த வழக்கில் நியாயம் இடைக்காமல் போய்விட்டது. அப்படி அலட்சியமாக இருக்கின்ற அதிகாரிகள் Such officers must be sacked. I have no objection. இருக்கின்ற புரொசிஜர்படி வேலை செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 31] [திரு. ரா. உமாநாத்]

அடுத்து இன்னொரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
பி.,எச். இ. எல். சேர்மனுடைய மனைவி, சுஷ்னுதா என்பவர்.
அவரை வரதட்சினை பாக்கி வரவில்லை என்று உயிருடன் கொளுத்
திக் கொன்றான். அந்தப் பெண்ணின் வாக்கு மூலம், காவலர்
களுக்கு முன்னாலே கொடுத்த வாக்கு மூலம், கணவன் மண்ணெண்
ணெய் ஊற்றிக் கொன்றான் என்று கொடுத்திருக்கிறார்.
பிறகு கொஞ்ச நேரம் கழித்து அந்தப் பெண் செத்துவிட்டார்.
இப்படியிருந்தும், இன்வெஸ்டிகேட்டிங் ஆபீசர்கள், புராசிகியூட்
டர்ஸ் ஆகியவர்களின் அலட்சியப் போக்கின் காரணமாக சம்பந்த
பட்டவர்கள் ,விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சாட்சி
களெல்லாம் அப்செட்டாகி ரெட்ராக் ஆகிறார்கள். இப்படி ஒரு
துர்பாக்கியமான நிலைமை. அந்தப் பெண், தான் சாகின்ற
நேரத்திலேயும் உறுதியாக இருந்து, என்னுடைய கணவன்தான்
எரித்தது, வரதட்சிணை விஷயத்தில் என்று சொல்லி
after some time, she deiead. அந்தப் பெண் உறுதியோடு நின்று,
இந்தக் குற்றத்தைச் செய்தவனுக்குத் தண்டனை கொடுக்க
வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லுகின்றபொழுது அந்த நியா
யத்தைச் செய்வதற்கு வேண்டிய அவசரத்தைக் காட்டவில்லை
என்றால் இதைப்பற்றி என்ன சொல்வது ? இப்படிச் செய்வது
சரியாக இருக்காது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் பாஸ் செய்யும் ஜி. ஓக்களை, வெல்ஃபேர் மெஷர்க்
காக செய்யக் கூடிய காரியங்களைப் பற்றியெல்லாம் தமிழிலே
அங்கே எழுதிப் போட வேண்டும். அப்பொழுதுதான் கைதி
களுக்கு அது தெரியும். (குறுக்கீடு) "அண்ணா"வில் வருவ
தாகச் சொல்கிறார்கள். அப்படியில்லாமல், அந்த பிளாக்குகளில்,
எந்தெந்த சலுகைகள் எப்பொழுது எப்பொழுது அளிக்கப்
படுகிறதோ அது பற்றிய ஜீ. ஓ.வைத் தமிழில் அங்கே போட
வேண்டும். அப்பொழுதுதான் என்லைட்டன்ட் கைதிகள்
அதைப் படித்துப் பார்த்து They will be able to assert.

அடுத்து, அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் ஜஸ்டிஸ்-ஐப் பொறுத்த
வரையில் சொல்ல விரும்புகிறேன். மாஜிஸ்ட்ரேட் போஸ்டுக்கும்,
முன்சீப் போஸ்டுக்கும் இரண்டுவிதமான நியமன முறைகள்
உண்டு. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவும், மற்ற அரசு
இலாக்காக்களில் இருந்து Forests, Fisheries Departments அவர்
களை டிரான்ஸ்ஃபர் செய்வதன் மூலமும் செய்யப்படுகிறது.

1966 ஆம் ஆண்டு முதல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம்
மாஜிஸ்டிரேட் நியமனமே நடக்கவில்லையென்பது எனக்குக்
கிடைத்த தகவல். அதே போல் கடந்த 9 ஆண்டுக் காலமாக
பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக முன்சீப் நியமனமே இல்லை
யென்பது எனக்குக் கிடைத்த தகவல். காலி போஸ்ட்களை
நிரப்புவதற்குப் பதிலாக, அவசர நியமனம் அதாவது ஒரே
மாஜிஸ்டிரேட் இன்னொரு இடத்திற்கு காம்ப் போனால்
டி. ஏ. வருகிறது என்று சொல்லி, டி. ஏ. வைத்

தவிர்ப்பதற்காக போஸ்ட்டை பில் அப் பண்ணுகிற வரைக்
கும் டெம்பரரி எமர்ஜன்ஸி அப்பாய்ன்ட்மென்ட் என்று
வைத்திருக்கிறார்கள். அந்த டெம்பரரி அப்பாயின்ட்மென்ட்
தான் இப்பொழுது யூஸ் பண்ணிக் கொண்டு வருகிறார்கள். அந்த
டெம்பரரி, எமர்ஜன்சி போஸ்டிங்கில் 181 பேர்கள் இருக்கிறார்
கள். அந்தத் தவறான நிலைமை உண்டாகியிருக்கிறது. பப்ளிக்
சர்வீஸ் கமிஷன் மூலமாக அந்த ஸ்தானங்களைப் பூர்த்தி செய்ய
வேண்டும்.

தொழில் கோர்ட் நியமனங்களில் இன்னும் மோசமான நிலை
மைகள் இருக்கிறது. மதுரை அடிஷனல் தொழில் கோர்ட் பதவி
காலி, இன்னும் நியமிக்கப்படவில்லை. சென்னை இன்டஸ்
ரியல் டிரிபியூனல் பதவி 3 மாதம் காலி, இன்னும் நியமனம்
செய்யப்படவில்லை. இதற்கெல்லாம் ஹைகோர்ட்டிலிருந்து
லிஸ்ட் வந்து செய்ய வேண்டும். சென்னை மூன்றாவது அடி
ஷனல் தொழில் கோர்ட் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.
அதற்கு இடம் கொடுக்கப்படவில்லை, 3 மாதங்களாகி விட்டன.
ஆளும் கொடுக்கப்படவில்லை. அது மட்டும் அல்ல, தொழில்
கோர்ட் போஸ்ட்டுக்கு ரிடையர் ஆகிற நிலையில் உள்ள சிவில்
ஜட்ஜ்கள் மத்தியில் பெரிய கிராக்கி இருக்கிறது. அது ரகசியமோ
என்னவோ தெரியவில்லை. நான் இதை உங்களுடைய கவனத்
திற்கு கொண்டு வருகிறேன். ஹைகோர்ட்டிலே இருந்து லிஸ்ட்
வருகிறது. அவர்கள் சிம்பத்தியோடு லிஸ்ட் எல்லாம் கொடுக்
கிறார்கள். ரிடையர் ஆகிற நிலையிலுள்ள சிவில் ஜட்ஜ்களைப்
போட ஏன் கிராக்கி வருகிறது என்றால், சிவில் ஜட்ஜ்கள் தொழில்
கோர்ட் ஜட்ஜ்ஜாக நியமிக்கப்பட்டால் சற்று கூடுதல் ஊதியம்
கிடைக்கும். வாங்குகின்ற ஊதியத்தைவிட, தொழில் கோர்ட்
டில் கொஞ்சம் அதிகமாக ஊதியம் கிடைக்கும். அதனால்
ரிடையர் ஆனால் அந்தக் கூடுதல் ஊதிய அடிப்படையில் பென்
ஷன் கிடைக்கும். அதுதான் காரணம். ஆகவே, இங்கே வந்து
சேர்ந்தால் ரிடையர் ஆகும்போது, கூடுதல் பென்ஷன் கிடைக்
கும் என்று கிராக்கி ஏற்படுகிறது. இதனுடைய விளைவு என்ன
வென்றால் தொழில் சட்டம், தொழில் கோர்ட் அனுபவம் முற்
றிலும் இல்லாதவர்கள் நியமனம் ஆகிறார்கள். அவர்கள் இரண்டு
மாதத்தில் ரிடையர் ஆகிற நேரத்திலே அங்கே வருகிறார்கள்.
சிலர் 2 மாதத்திலே ரிடையர் ஆனார்கள், சிலர் 6 மாதத்திலே
ரிடையர் ஆனார்கள், சிலர் 12 மாதத்திலே ரிடையர் ஆகிறார்கள்.
ஆகவே அந்தப் பாதகங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, தொழிலாளர்
களுக்கு நீதி வழங்க வேண்டிய மன்றங்கள், கடைசி காலத்தில்
தங்களுக்குச் சலுகை பெறுவதற்கான கூடாரங்களாக
இன்றைக்கு மாறியிருக்கின்றன. இதை ஹைக்கோர்ட்டின்
கவனத்திற்குக் கொண்டு வந்து மாற்ற வேண்டுமென்று நாம்
ரிக்குவஸ்ட் பண்ண வேண்டும்.

கடைசியாக, அட்வகேட்ஸ் வெல்பேர் பண்ட் ஆக்டுக்காக
ஒரு டிராப்ட் பில்லை, இங்கே இருக்கக்கூடிய பார் தயார் பண்ணி
1981 முதல் லா டிபார்ட்மென்டில் இருக்கிறது. இன்று வரை



யிலும் பாசாகாமல் இருக்கிறது. நான் கேள்விப்பட்டது உங்களுக்கு
பீகார் பேட்டர்ன் வேண்டுமா
கேரளா பேட்டர்ன் வேண்டுமா; என்று சொல்லப்படுகிறது. அந்த கான்ட்
என்று கேட்கிறார்கள், டிராப்ட் கொடுத்த மாதிரி
ரவர்சி வேண்டாம். அவர்கள் டிராப்டை சீக்கிரமாக
வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த
இந்த டிஸ்கஷன் முடிந்தபிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
லா டிபார்ட்மென்டிடம் இருந்து வாங்கி, ஒரு ஆக்டாகவே பாஸ்
பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட
அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற நீதித் துறை, சிறை
நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்
பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நீதி மன்றங்களிலும் சிறைச்சாலைகளிலும் பன்னெடுங்காலமாக
இருந்துவந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்ற வகையில்
பல்வேறு வகையான சீர்திருத்தங்களைச் செய்து இருக்கிறார்கள்.
உதாரணமாக, சிறைச்சாலைகளிலே இருந்த விசாரணைக் கைதி
களுடைய எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டு 15,195 என்று இருந்
தது 1982 ஆம் ஆண்டு 4,000 என்ற அளவுக்குக் குறைந்தது.
நீண்ட நாட்கள் கோரிக்கையான, வருவாய்த் துறை அதிகாரியி
னுடைய வரம்பிலே இருந்து 119 சிறைச்சாலைகளைச் சிறைத்
துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது, இந்த அரசு.
இதையெல்லாம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமா
நாத் அவர்களே — அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை எல்லாம்
பாராட்டினார்கள். பல்வேறு வகையிலே அரசு சிறப்பான நட
வடிக்கைகளை எடுத்து, சிறைக் கைதிகள் வைத்த கோரிக்கைகள்
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் ரகுமான்கான்
அவர்களும் பத்திரிகைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். நான்
உமாநாத் அவர்களைக் கேட்க விரும்புவது, எல்லா பத்திரிகை
களையும் சொல்கிறீர்களா ? பத்திரிகை தர்மத்தையே மீறுகிற
முரசொலி பத்திரிகையைக் கூட வேண்டுமென்று சொல்கிறீர்களா?
பத்திரிகை தர்மத்தையே புறக்கணித்தன என்று பத்திரிகை கவுன்
சிலாலே குற்றம் சாட்டப்பட்டிருக்கிற பத்திரிகைகளை வேண்டு
மென்று ரகுமான்கான் போன்றவர்கள் சொல்கிறார்களா என்று
நான் அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
நம்முடைய உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகிற
போது சிறைச்சாலைகளில் பத்திரிகைகள் போடுவதைப் பற்றி
சொன்னார்கள். அரசியல் கட்சிகள் வேறுபாடில்லாமல் எல்லா

இயக்கங்களுடைய பத்திரிகைகளும் அங்கே போடப்பட வேண்டும்
காரணம் அண்ணா போன்ற ஆளும் கட்சியின் பத்திரிகை அரசாங்
கச் செலவில், அட் ஜெயில் காஸ்ட், அதைப் போடுகிறபோது
எதிர்க்கட்சிகளின் பத்திரிகைகளும் போட வேண்டும். ஆளும்
கட்சிக்கு இருக்கிற அதே உரிமை எங்களுக்கும் உண்டு. உங்க
ளுடைய சொந்தப் பணமாக இருந்தால் அதில் பிரச்சினை இல்லை;
அது அரசாங்கப் பணம்..

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : துணைத்
தலைவர் அவர்களே, அவர் எப்படி பத்திரிகைகள் போட வேண்டு
மென்று கோரிக்கை வைத்தாரோ, அதைப் போல போடக் கூடாது
என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. பத்
திரிகை கவுன்சில் அந்தப் பத்திரிகைகள் மிக மோசமாக நடந்து
வந்ததை குறித்து தீர்ப்பு வழங்கி இருக்கிறது. பத்திரிகை தர்மத்
திற்கு முரணாக 'முரசொலி' செயல்படுகிறது; பத்திரிகை
தர்மத்திற்கு புறம்பாக 'எதிரொலி' செயல்படுகிறது; நியாயத்
திற்கு புறம்பாக செய்திகளை வெளியிடுகின்றன என்று பிரஸ்
கவுன்சில் தீர்ப்பு அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட பத்திரிகை
களை சிறைச்சாலையில் போடக்கூடாது என்று சொல்வதற்கு
ஆளும் கட்சியிலே இருக்கிற எங்களுக்கும் உரிமை இருக்கிறது
என்ற கருத்தை வைக்க விரும்புகிறேன். இங்கே பேசுகிறபோது
உமாநாத் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்..(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்
மானியத்தில் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கலாம். பொதுக்
கூட்டத்தில் பேசுவதைப் போல அரசியலைப் பேசக்கூடாது.
இன்னும் நிறைய உறுப்பினர் பேசவேண்டி இருப்பதால் விவ
காரங்களை வளர்க்காமல் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.
இப்படி நீங்கள் பேசினால் மற்றவர்களுக்குப் பதில் சொல்வதற்கு
வாய்ப்பு தரவேண்டியுள்ளது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே
பிரஸ் கவுன்சிலைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட்டிருக்கிற
இந்தப் பத்திரிகைகள் விடுதலை, முரசொலி, எதிரொலி, தீக்
கதிர் ஜனசக்தி ஆகியவற்றை பிரஸ் கவுன்சில் விசாரித்து தீர்ப்பு
வழங்க இல்லை. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது சில
குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. அது சம்பந்தமாக........
..............(குறுக்கீடு).

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : அந்தக்
கருத்திற்கே நான் வரவில்லை........

திரு. அ. ரகுமான்கான் : பிரஸ் கவுன்சில் தீர்ப்பு என்ன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி இருவரும்
பேசிக்கொண்டிருந்தால் அதில் எந்த முடிவும் வராது.





திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
பிரஸ் கவுன்சில் பற்றி சொல்கிறபோது நான் விளக்கம் சொல்ல
வேண்டாமா ? முதலமைச்சர் மீது சில ஊழல் குற்றச்சாட்டுகள்
சொல்லப்பட்டன. அதை 'பிரஸ் கவுன்சிலில் ரெஃபர்
செய்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் எதிரொலி பத்
திரிகை, முரசொலி பத்திரிகை ஆகியவற்றை அழைத்து விசாரித்து
முடிவுகளை எடுத்திருக்கிறார்களா என்றால் கிடையாது. அது
போல அந்த நிலை எல்லா பத்திரிகைகளுக்கும் உண்டு.
'பிளிட்ஸ்'-க்கும் உண்டு. நானும்கூட 'அண்ணா' பத்திரிகை
மீது கொடுத்தால் அவர்கள் விசாரிக்கக்கூடும். அதுவல்ல பிரச்னை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : இப்போது
சொன்ன விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள் மிக தவறான தகவலை சொல்லி இருக்கிறார்கள். பிரஸ்
கவுன்சில் கொடுத்த தீர்ப்பை நான் வாசிக்கிறேன். 'Though ample
time was given to two Newspapers, they failed to support and prove
of their writings. It is unethical and against journalistic standard'.
அப்படி பத்திரிகைகளுக்கு உயர்ந்தபட்சமாக ஒரு அமைப்பாக
இருக்கிற பிரஸ் கவுன்சிலில், பத்திரிகை தர்மத்திற்கு விரோதமான
பத்திரிகை முரசொலி என்றும், சந்தர்ப்பத்தைக் கொடுத்தும்,
அங்கே வந்து விளக்கமளிக்க பயந்து கொண்டு வரவில்லை முர
சொலி என்ற சூழ்நிலையில், சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்
கொள்ளாத பத்திரிகை, தர்மத்திற்கு முரணான, நியாயத்திற்கு
முரணான பத்திரிகைகளை சிறைச்சாலையில் போடாதீர்கள் என்று
அரசிற்கு கோரிக்கை வைக்க எங்களுக்கும் உரிமை இருக்கிறது.
அந்த வகையில்தான் அந்தப் பத்திரிகைகளை போடாதீர்கள்
என்று என்னுடைய கருத்தை வைத்தேன்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் பேசுகிற
போது இந்த அமைச்சரவை, இந்த புரட்சித் தலைவர் அரசு
எதிர்க்கட்சி என்று பாராமல் 'பரோல்' வழங்குவதில் நியாய
மான முறையில் வழங்குகிறார்கள் என்று பாராட்டினார்கள்....
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது
நடப்பது மானியத்தில் விவாதம். இந்தமாதிரி விவகாரத்தில்
ஒவ்வொன்றாக நீங்கள் பேசினால் அவர்கள் பதில் கொடுக்க
வேண்டும் என்பார்கள். அதில் ஒரு முடிவு வராது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் தன்
கருத்தைச் சொன்னால் அதற்கு என்ன பதில் வேண்டி இருக்
கிறது ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரச்சனைகளை
ஏற்படுத்தாமல் மானியக் கோரிக்கைகள் மீது பேசினால் நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : அவருடைய கருத்தைச் சொல்கிறார். மற்றவர்கள் பேசும்போது வேண்டுமானால் அதற்குப் பதில் சொல்லட்டும். இடையிடையே குறுக்கிட வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறுக்கீடு இல்லாத அளவுக்கு கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒருவரைப் பற்றி ஒருவர் குறிப்பிடும்போது, அதற்கு பதில் என்று வருகிறது. வாதம் எதிர் வாதம் எல்லாம் வெளியே வைத்துக் கொள்ளலாம். இங்கே குறிப்பிட்ட பொருளைப் பற்றி மட்டும் பேசினால் பிரச்சனை வராது. உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதில் சொல்வார்.

திரு. அ. ரகுமான் கான் : துணைத் தலைவரவர்களே, ப்ரஸ் கவுன்சில் ஏதோ கருத்தைச் சொல்லிவிட்டுப் போகட்டும். ஆனால் விடுதலை பத்திரிகையை போடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்களா ? ஜனசக்தி பத்திரிகைப் போடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேப்பர் எத்தனை வேண்டுமானாலும் போடலாம். ஆனால் யாரும் சும்மா போடமாட்டார்கள். இருக்கின்ற நிதிநிலைக்கு ஏற்பத்தான் வாங்கிப்போடுவார்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : நீதித் துறையில் இருக்கிற காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இன்னும் கூடுதலாக 27 சிவில் நீதிமன்றங்களையும் 20 குற்றவியல் நீதிமன்றங்களையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதைப்போன்று வழக்குகள் நடைபெறும்போது தீர்ப்பின் நகல்களைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு ஜெராக்ஸ் காப்பி எடுத்துக் கொடுக்கும் முறையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடுதான் முதன் முறையாகச் செயல்படுத்தியிருக்கிறது. வழக்குகள் நடைபெறுவதில் காலதாமதம் என்பதைப் பொறுத்தவரையில் மற்ற பல்வேறு மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் குறைந்திருக்கிறது. இருந்தாலும் பைசல் ஆகாமல் இருக்கிற வழக்குகளை விரைவில் பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலதாமதத்தைக் குறைப்பதற்கு ஆலோசனை சொல்வதற்காக சட்டக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் சில ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறது. அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்தக் கமிஷன் சொன்னதோ அத்தனை நடவடிக்கைகளையும் மாநில அரசைப் பொறுத்த



வரையில் எடுக்கப்பட்டுவிட்டன. அவர்களுடைய ஆலோசனைப்படி எல்லா நடவடிக்கைகளையும் எடுத்த ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான். ஆனால், நீதித்துறையில் இருக்கிற அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நீதிமன்றம் அல்லது நீதித்துறை எடுக்காமல் இருக்கிறது.

நீதித்துறையிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்தால் தான், சட்டக் கமிஷன் சொல்லியிருக்கிற ஆலோசனைப்படி அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்தால்தான் பைசல் ஆகாமல் இருக்கிற வழக்குகளை பைசல் செய்ய முடியும். குறிப்பாக 10 தினங்களுக்குள், கீழ் நீதிமன்றத்திலிருந்து உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீதிமன்றங்கள் கண்காணிக்க வேண்டும்.

அந்த சட்டக் கமிஷனிலே சுட்டிக்காட்டியிருக்கின்ற மற்றொன்று, பல நீதிபதிகள் நீதிமன்றங்களுக்கு உரிய காலத்தில் வருவதில்லை என்பது. இதை மாவட்ட அளவில் இருக்கிற நீதிமன்றங்கள் கண்காணித்து, தகுந்த ஏற்பாடுகளைக் செய்ய வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட, நீதிமன்றத்தில் பொய்யான அஃபிடவிட் போடுகிறார்கள். ஆங்காங்கே இருக்கிற நீதிபதிகள் அதைத் தடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டக் கமிஷன் சொல்லியிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற எந்த நீதிமன்றமும் பொய்யான வழக்குகள் போட்டதாக இதுவரையில் எந்த ஒருநபர் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்று பல தீர்ப்புகளில் சொல்லியிருக்கிறார்கள் ; இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பொது மக்கள் நலன் கருதி வழக்குகளை விரைவிலே பைசல் செய்வதற்கு. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு ஒருபக்கம் தீவிர முயற்சிகளை எடுத்தாலும் நீதித் துறையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். 1924-லிருந்து பல்வேறு கமிட்டிகள் அமைக்கப்பட்டு, ஆலோசனைகள் சொல்லப்பட்டாலும் காலதாமதத்தைக் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதில் நாம் பின்தங்கியிருக்கிறோம். காலதாமதத்தைத் தவிர்க்க நீதித் துறையின் முதல் நடவடிக்கையாக நீதிமன்றத்திற்கு இருக்கிற கோடைக்கால விடுமுறையைக் குறைக்க வேண்டும் : இந்தக் கருத்தை ஆராய்ந்து, இதுபற்றி எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் இந்தக் கோடைக்கால விடுமுறையை 5, 6 வாரங்கள் என்று வைத்திருந்தார்கள். ஆனால்,

]திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1984 மார்ச் 31

தமிழகத்தில், தற்போது நீதிபதிகளுக்குக் கோடைக்கால விடுமுறை
தேவையில்லை. நிச்சயமாக கோடைக்கால விடுமுறை என்று,
5, 6 வாரங்கள் அதாவது ஆண்டில் 5-ல் ஒரு பாகம், அல்லது
6-ல் ஒரு பாகம் கோடைக்கால விடுமுறையிலேயே போய் விடு
கிறது. கோடைக்காலத்தில் சட்டமன்றம் இயங்கிக்கொண்டிருக்
கிறது. பல்வேறு அலுவலகங்களும் இயங்கிவருகின்றன. ஆனால்
நீதிமன்றம் மட்டும் ஏன் இயங்கக்கூடாது என்று கேட்கவிரும்பு
கிறேன். பிரிட்டிஷ் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அந்த நடை
முறையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சம்மன் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை
தவிர்க்க வேண்டும். சம்மன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படு
வதற்குக் காரணம் பிராசசர்களிடம் இருக்கின்ற தன்மைகள்தான்.
1924-ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம். ஆண்டு வரையிலும், சட்
டக் கமிஷன் சுட்டிக்காட்டியிருந்தும்கூட, அதற்கான நடவடிக்
கைகளை நீதித்துறை எடுக்கவில்லை. அந்தப் பிராசசர்களை
அடிப்படையாக ஊக்குவிக்கும் முறையில் நடவடிக்கைகளை
எடுக்க வேண்டும். ஏனென்றால் அந்த வழக்குகளில் முதல் கட்
டத்தில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இது
உதவும்.

நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் பைசல் ஆகாமல் இருப்ப
தற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லுகிறேன். இன்றைக்கு
பல்வேறு சட்டங்களை அரசும், நாடாளுமன்றமும், சட்டமன்ற
மும் போட்டால் கூட, அந்தச் சட்டங்களை நாடாளுமன்ற சட்
டங்களை, நீதித்துறையால் அமல்படுத்தப்படாமல் இருக்கிறது
என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்
வதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் நான்
நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றிச் சொல்லவில்லை. நீதிமன்ற நட
வடிக்கைகள் பற்றிச் சொல்கிறேன். பாராளுமன்றத்தில், சட்ட
மன்றத்தில் போட்ட ஆணைகள் மீது, நடவடிக்கைகள் எடுக்க
வேண்டுமென்று போட்ட ஆணைகளை அமல்படுத்துகிறார்களா
என்று பார்த்தால் நிச்சயமாக அமல்படுத்துகின்ற சூழ்நிலை
இல்லை.

வழக்குகளைப் பார்க்கின்றபோது, ரிட்டன் ஸ்டேட்மென்டு
போட்டு, அதற்கு இவ்வளவு காலத்திற்குள் போடவேண்டுமென்
றிருக்கிறது. ஆனால் அப்படிப் போடப்படுவது இல்லை. தடை
ஆணை வழங்கப்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்குள், தடை
ஆணை வழங்கப்பட்ட அந்த பெட்டிஷன் மீது—கிரிமினல் ப்ரொ
சிஜர் கோட் தெளிவாகச் சொல்கிறது. இருந்தாலும்கூட, இந்த
நீதிமன்றம் அப்படி எக்ஸ்-பார்ட்டி கொடுத்து, உத்தரவின்படி,
ஒருமாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்ததாகத்தெரியவில்லை.



1984 மார்ச் 31] [திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்]

அது போல பல்வேறு சமூகநலச் சட்டங்கள் இருக்கின்றன.
பல்வேறு சிக்கலான நிலையில் இரண்டு, மூன்று வழக்குகள் ஏற்
படும் சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில் இப்போது ஏற்பாடு
செய்திருக்கின்ற விதிகளை முறையாக அமல்படுத்தினால், நீதி
மன்றங்களில் காலதாமதத்தைக் குறைப்பதற்கு வாய்ப்பிருக்கும்.
ஆகவேஅதற்கு நீதித்துறையில் இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சென்னை உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரை
யில், தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்ற பெயர் மாற்றம் செய்ய
வேண்டுமென்று கோரிக்கையின்மீது அரசு நடவடிக்கை எடுத்து,
மத்திய அரசை அணுகியிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு
அமைச்சரவர்கள் சட்டப் பேரவையில் ,குறிப்பிட்டார்கள்.

1969-ஆம் ஆண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்
கள் இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்து
மகிழ்ந்தார்கள். சென்னை மாநிலம் முழுவதற்கும் இருக்கின்ற
இந்த உயர்நீதிமன்றப் பெயர். சென்னை உயர்நீதி மன்றம் என்று
இருப்பதை மாற்றவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. பல்
வேறு காரணங்களைச் சொல்லி-பாண்டிச்சேரி யூனியன் டெரிடரி
என்றிருக்கிறது—கேரளத்திலே கேரள உயர்நீதி மன்றம் என்று
வைத்திருக்கிறார்கள். எனவே, இந்த நடவடிக்கையை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தொடங்கி
இருக்கிற புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், மற்றும் சிறைச்சாலை நிர்
வாகம் சம்பந்தமாக, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே என்
னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

நீதி நிர்வாகம் சம்பந்தமாக நீதி கோரும் மக்களுக்கு அந் நீதி
எளிதாக, உடனடியாகக் கிடைக்கவேண்டுமென்ற கொள்கையை
நிறைவேற்றக் கூடிய அளவிற்கு, இன்றைக்கு நடவடிக்கைகள்
நடைமுறையில் இருக்கின்றதா என்று பார்க்கக்கூடிய நேரத்தில்,
அது மிகவும் குறைவாக, வேதனை அளிக்கக் கூடிய நிலையில்
இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்
றையதினம் அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்
கத்தில்.சென்னை உயர்நீதிமன்றத்தில் 25 நீதிபதிகள் பதவி இருக்
கின்றன அதிலே 19 நீதிபதிகள் இருக்கிறார்கள். 6 இடங்கள் காலி
யாக இருக்கின்றன. தொடர்ச்சியாக அவை பல ஆண்டுகளாக
காலியாக இருக்கின்றன. அதனுடைய விளைவு என்ன என்பதை
நிலுவையில் உள்ள வழக்குகளின் எணிக்கையைப் பார்க்கின்ற
நேரத்தில், அது மிகவும் கவலை அளிப்பதாகவே இருக்கிறது
என்பதை நான் குறிப்பிடவிரும்புகிறேன்.

இது சம்பந்தமாக நான் குறிப்பிட விரும்புவது. இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே, சென்னை உயர்நீதிமன்றத்திலே உள்ள அனைத்து ரிட் வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, ஒன்றி ரண்டை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேல் முறையீடுகள், 1983-ஆம் ஆண்டில் நிலுவையில் இருப் பது, 2,198. இந்த ஆண்டு புதிதாக வந்திருக்கக்கூடிய மனுக்கள் 2,814. ஆகவே, அந்த அடிப்படையில் நிலுவையில் இருக்கக் கூடிய வழக்குகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ரிட் மனுக்கள் நிலுவையில் இருப்பது, 24,959 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு இறுதியிலே நிலுவையில் இருந்தது. 12,469 ஆக இருந்திருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான பல்வேறு விவரங்கள் இந்த அறிக்கையிலே குறிப் பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, 'இம்மாதிரியாக உள்ள ரிட் மனுக்களை வழக்குகள் அனைத்தையும் உடனடியாக தீர்க்கவேண்டும் என்பதோ, அல்லது முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்கான நிலையோ இன் றையதினம் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு வந்தால், அதை தகப்பன் வழக்கு தொடுத்தால், ஒருவேளை அவருடைய மகன் வந்து, அதற்குப் பிறகுதான் அந்த வழக்கின் தீர்ப்பை பெறவேண்டும் என்ற அள விற்கு நிலைமை ஏற்பட்டு' இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சென்னையில் உச்சநீதிமன்றத்தின் ஒரு ஆயத்தை நிறுவுவது சம்பந்தமாக, அதற்கு துரித நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும். மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய ஆயம் நிறுவுவது சம்பந்தமாக துரிதமான நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும்.

அடுத்து நீதிமன்றங்களினுடைய தீர்ப்பு அனைத்தும் தமிழிலே இருக்கவேண்டும் என்று ஏற்பாடுகளைச் செய்ய அரசு கோள்கை அளவிலே அறிவித்தாலும் பெருவாரியான நீதிமன்றங்களில் தீர்ப்புகள் இன்றைக்கும் ஆங்கிலத்தில்தான் வழங்கப்படக் கூடிய நிலைமையிருக்கிறது. எனவே, அதை முழு மையாக மாற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, நீதித்துறையில் எல்லா இடங்களிலும், உள்ள ஊழலைப்பற்றி எல்லாம் பேசுகிறார்கள். இன்றைய தினம் நீதித்துறை எவ்வாறு வந்திருக்கிறது என்பதற்கு சமீபத்திலே பத்திரிகையிலே வந்த செய்தியே போதுமானது. திரு நெல்வேலி மாவட்டம் தென்காசியில் உள்ள ஒரு நீதிமன்றத்தில் உள்ள ஒரு நீதிபதி தொடர்ந்து லஞ்சம் வாங்குகின்றார் என்ற காரணத்திற்காக, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற வழக்கறிஞர்





கள் அனைவரும் நீதிமன்றத்தை பகிஷ்கரிப்பது என்ற அளவிற்கு முடிவு எடுத்து, அம்மாதிரியான நடவடிக்கைகளில் இறங்கக்கூடிய அளவிற்குச் சென்று இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நீதிபதிகளை நீதி தேவன் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த நீதி தேவனுக்கு வைக்கவேண்டிய காணிக்கையை வைத்தால்தான் நீதியைப் பெறமுடியும் என்ற அளவிற்கு நிலை மைகள் வந்தால், நீதிக்கு எங்கே செல்வது என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, மதுரையிலே 2 லேபர் கோர்ட்டுகள் இருக்கின்றன. அதிலே ஒன்றை திருச்சிக்கு மாற்றி, அங்கே கோர்ட் அமைக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக இந்த மன்றத்திலே கோரிக்கையை நாம் வைத்துக் கொண்டிருக்கி றோம். எனவே, அதை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மணப்பாறையில் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட நீதி மன்றத்திற்கு உயர்நீதி மன்றம் இரண்டு ஆண்டுக்காலம் அனுமதி கொடுத்து இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் முதல் 6 மாதத் திற்குக் கொடுத்து, அதற்குப் பிறகு, இரண்டும் கெட்டான் நிலை ஏற்பட்டு, அதற்குப்பிறகு இதை நீடிப்பது என்கிற நிலைக்குச் சென்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, இம்மாதிரி யான நிலைமைகள் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலையில் சப்-கோர்ட் அமைக்கவேண்டும். பெருந்துறை யில் சிவில் நீதிமன்றம், இந்த ஆண்டே துவக்கப்படவேண்டும். நிலக்கோட்டையில் ஜில்லா முன்சீப் கோர்ட் சாங்சன் செய்யப் பட்டிருக்கிறது. இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதை உடனடி யாக ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குற்றவியல் நீதிமன்றங்களில், இன்றைய தினம் நீதி பதியாக இருக்கக்கூடியவர்கள், எவ்வாறு நீதித்துறையும், நிர் வாகத் துறையும் பிரிக்கப்பட்டதற்குப் பிறகும் இன்றைய தினம் வழக்குகள் ஆங்கு அதிக அளவிலே தேங்கி அதன் காரணமாக மக்கள் பல ஆண்டுக்காலம் கோர்ட்டுக்குச் சென்று அவர்களை அலைக்கழிக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் குறிப்பிடவிரும்புகிறேன். 1978-ஆம் ஆண்டு, சென்னையில் ஒரு வழக்கு பதிவாகிறது. 1983-ஆம் ஆண்டு தீர்ப்பு அளிக்கப் படுகிறது. 5 ஆண்டுக்காலம் இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர் கள் அனைவரும் வழக்குமன்றத்திற்கு 15 தினங்களுக்கு ஒரு முறை செல்லவேண்டும்.

(பிற்பகல் 1-00)

ஆகவே, போலீஸ் காவல் துறையைச் சார்ந்தவர்கள் காலத் திலே அவர்கள் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யவில்லை என்றால், அதற்கான முறையிலே எச்சரிக்கை கொடுத்து,

அந்த வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற நிலைமையிலே நடைமுறையிலே உள்ள அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்த மறுக்கிறார்கள். என்ன அச்சம் என்று புரிந்துக் கொள்ள முடியவில்லை. ஒரு ஆண்டு அலல, இரண்டு ஆண்டு அல்ல 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் போலீசார் வழக்குகளை தொடர்கிறார்கள். குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய மாட்டார்கள். இதன் காரணமாக குற்றவாளிகள் அவர்கள் நிரபராதிகளாக இருந்தாலும் சரி, இன்றைய தினம் பல ஆண்டுகளுக்கு மேலாக கோர்ட்டுக்கு சென்று அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருக்கக்கூடியவர்கள் காவல் துறையாக இருந்தாலும் சரி, வேறு எந்த துறையாக இருந்தாலும் சரி, உரிய நீதியை வழங்குவதற்குரிய வகையிலே, அதற்கான தெம்பை அவர்கள் பெறக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து சிறைச்சாலை சம்பந்தமானது. சிறைச்சாலைகளை சீர்திருத்தச் சாலைகளாக அமைக்க வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சிறைச்சாலைகள் சீர்த்திருத்தச் சிறைச்சாலைகளாகவா காட்சியளிக்கிறது? இல்லை. அதற்குப் பதிலாக, சிறைச்சாலைக்கு செல்லக்கூடியவர்கள் அதிகமாகக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, மேலும் குற்றங்களை புரிய வேண்டும் ஏன்ற எண்ணத்தோடு வெளியே வரக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்று கூறவிரும்புகிறேன். கைதிகள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டும்; அவர்களுக்கும் மனித உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இந்த நியாயத்தை எல்லோரும் பேசுகிறோம். ஆனால் நடைமுறையில் இன்றையதினம் சிறைகள் சித்திரவதை கூடங்களாக தான் இருக்கிறது. சிறைச்சாலைகளிலே கைதிகள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இது தொடர்ந்து நடைபெறுகிறது. இன்றைக்கும் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

உதாரணமாக, திருச்சி சிறையிலே இருக்கிற கைதிகள் தங்களுக்கு அவசர கால விடுப்பு அளிப்பதிலே ஏற்படக் கூடிய காலதாமதத்தை போக்க வேண்டும் என்பதற்காக, அங்கே இருக்கிற சிறை அதிகாரி சேரலாதன் என்பவரைச் சந்தித்து கைதிகள் அவர்களை இது பற்றி கேட்கிறபோது சரியான பதில் இல்லை. அங்கேயிருக்கிற சிறைக் கைதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து அமைப்பைச் சேர்ந்தவர்கள், சிறை அதிகாரிகள் அவசர கால விடுப்புக் கொடுப்பதிலே கால தாமதத்தை போக்க வேண்டும். 30 கைதிகளுக்கு காலத்திலே வழங்கப்படவில்லை என்று முறையிட்டிருக்கிறார்கள். என்ன நிலைமை?





அங்கேயிருக்கிற அந்தப் பஞ்சாயத்தை, அதாவது அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்தவர்களை, திடீர் என்று ஒரு நாள் இரவு 9 மணிக்கு, அத்தனை பேரையும். அந்தச் சிறையை விட்டு வேறு சிறைச்சாலைக்கு மாற்றியிருக்கிறார்கள் என்கிற நிலைமையைத்தான் பார்க்க முடிகிறது. அந்தச் சிறையிலே இருக்கிற மற்ற நிலைமைகளைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள்

சிறைக் கைதிகளுக்கு அவர்களுடைய குறை மனுக்களைப் போடுவதற்காக இரகசிய பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியை யார் முன்னாலே திறக்க வேண்டும், அந்த மனுக்களை எவ்வாறு பரிசீலனை செய் வேண்டும் என்று அரசு தெளிவாக உத்திரவு போட்டிருக்கிறது.

ஆனால் திருச்சி சிறையிலே நடந்திருப்பது, பெட்டிக்கு அடியிலே ஒரு ஸ்க்குருவை கழட்டி, பலகைகளை கழட்டி அதில் இருக்கிற மனுக்களையெல்லாம் எடுத்துவிட்டு, பெட்டியை வைத்திருக்கிறார்கள். மனுக்கள் எங்கே போய்ச் சேரும். அந்த அளவுக்கு கொடுமைகள் இன்றைய தினம் சிறையிலே நடைபெறுகிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சிறை சீர்திருத்தக் குழு பல்வேறு பரிந்துரைகளை கூறியிருக்கிறது. ஆனால் உண்மையாக எவ்வளவு பரிந்துரைகள் செயல்படுத்தப்படுகின்றன? கன்விக்ட் வார்டர்கள் கூடாது என்று ஒரு நிலை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கும் கன்விக்ட் வார்டர்கள் இருக்கிற முறை அமலில் இருக்கிறது. அது மட்டுமல்ல சிறைவாசிகள் விடுப்பு சம்பந்தமாக பாரபட்சமாக இருக்கக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காவல் துறைக்கு அனுப்பி, அவர்களுடைய ஆய்வு பெற்று அதற்குப்பிறகு விடுப்பு கொடுப்பது என்றால் இன்றையதினம் நிச்சயமாக, சிறைச் சாலையிலே இருக்கிறவர்கள் எந்த நோக்கத்திற்காக விடுப்பு கேட்கிறார்களோ, அது நிச்சயமாக நிறைவேறாது. ஆகையினாலே சிறையிலே இருக்கிற நன்னடத்தை அலுவலர் அவர்களுடைய சான்றிதழைப் பெற்று, அவர்களை விடுப்பில் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருச்சி சிறையிலே இருக்கிற சிறை அதிகாரிகளின் கொடுமை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். கைதிகள் சாதாரணமாக ஏதோ குறைகளை முறையிட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் பதிலுக்கு மதுரையிலே மண்டை உடைந்து ரத்த ஆறு ஓடச் செய்தோம். அங்கு ரத்த ஆறு ஓடியது உங்களுக்குத் தெரியாதா? இங்கும் அப்படி ஓடச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இங்கும் அவ்வாறு ஓடச் செய்வோம். ஆகவே உங்களுடைய கோரிக்கைகளைப்

பற்றி பேசுவது என்று வாயைத் திறந்தாலே இந்தச் சிறை யிலே உங்களை நான் சும்மா வைத்திருக்க மாட்டேன் என்ற முறையிலே பேசக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் உருவாகி யிருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அங்கே நிலைமைகள் மிக மோசமாக உருவாகியிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அடுத்து, சிறைச்சாலையிலேயே கைதிகள் இறப்பது என்பது மிகவும் அதிகமாகி வருகிறது. சமீபத்திலே திருச்சி சிறையிலே ஒரு கைதி இறந்திருக்கிறான். வேலூர் சிறையிலே ஒரு கைதி இறந்திருக்கிறான். இந்தியா முழுவதும் எடுத்துக் கொண்டால் தமிழகத்தில்தான் சிறைச்சாலைகளில் கைதிகள் இறப்பது என்பது அதிகமாக இருக்கிறது என்று கணக்குப் பார்த்ததில் தெரிந்திருக்கிறது. ஆகவே, அதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நன்னடத்தை அலுவலர்கள் என்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒரு தனிப் பிரிவாக இருக்க வேண்டும். அப்படி ஏற்படுத்த வேண்டுமென்று இருந்தாலும் உண்மையிலே ஏற்படுத்தப்படவில்லை. இதற்கும் யார் தலைவர் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே இவைகள் எல்லாம் மாற்றப் படவேண்டும்.

ஒவ்வொரு மாஜிஸ்ரேட்டின் எல்லைக்கும் ஒரு நன்னடத்தை அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். சென்னையில் இருக்கிற நன்னடத்தை அலுவலருக்கு பிரயாணப்படி என்பது கிடை யாது. அவர்களுக்கு பஸ்களிலே செல்ல இலவச பாஸ் கொடுக் கப்பட்டு வந்தது. அதை அனுமதிக்க வேண்டும்.

அடுத்து சிறை வார்டர்களுக்கு காவல் துறையைச் சேர்ந் தவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படக் கூடிய சகல வசதி களையும் அளிக்க வேண்டும். சம்பளம், உணவு போன்ற வசதிகளைக் கொடுக்க வேண்டும். அவர்களை மாநிலம் முழுவதும் மாற்றுவது என்பது நிறுத்தப்பட வேண்டும். இம் மாதிரியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

தஞ்சை பெரிய மாவட்டம், திருச்சி மாவட்டத்திலே சிறையிலே இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே மாவட்டத்திற்கு ஒரு தனிச் சிறை ஏற்படுத்த வேண்டும். பெரியார் மாவட்டத்திலே தனி சிறைச்சாலை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கோரிக்கையை நான் முன்வைக்கிறேன். 10 ஆண்டுகள் சிறையில் இருக்கிற ஆயுள் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. போர்டு கூட்டம் காலத்திலே நடத்தப்படு வதில்லை. போர்டு சிபாரிசு கொடுத்தாலும் அது நிறுத்தப்



படுகிறது. கடலூரிலே நாகப்பன், சாம்பசிவன் ஆகியவர்கள் 14 ஆண்டுகளாக சிறையில் இருந்திருக்கிறார்கள். இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். அந்தக் குறை பாட்டைப் போக்க 10 ஆண்டுகள் ஆயுட்கைதிகளாக இருந் தால் விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை யினுடைய துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும் சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதும் மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்தியம்பியிருக் கிறார்கள்.

நீதி நிர்வாக மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரைக்கும் அரசினுடைய நோக்கம், நீதிமன்றங்கள் தன்னிச் சையாக செயல்படுவதற்கு அவர்கள் பெற்றிருக்கிற அரசியல் சட்ட அதிகாரத்திற்கு ஒரு சிறிதும் குந்தகம் ஏற்படாமல் சிறப்பாக அரசு இயந்திரம் உறுதுணையாக இருக்க வேண்டு மென்ற முறையில் பிரச்சினைகளை அணுகுகிறது என்பதை முதற்கண் கூற விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-10]

நீதித் துறைக்கு இன்னும் பல வசதிகளை செய்து தர வேண்டும், நீதிபதிகளுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கிற வசதிகள் இன்னும் விரிவாக்கப்படவேண்டும். மிகைப்படுத்தப் பட வேண்டும் அப்போதுதான் நீதிபதிகள் தங்களுடைய பணி களை இன்னும் செவ்வனே செய்ய உறுதுணையாக அமையும் என்றமுறையில் இந்த அரசு பிரச்சினைகளை அணுகுகிறது. குறிப்பாக பொதுமக்களுடைய நலன் கருதி நீதிமன்றங்கள் அதிகமாக்கப்பட்டு, சிவில் நீதிமன்றங்கள் 27-ஐ கடந்த சில ஆண்டுகளில் அதிகமாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது. அதைப்போலவே குற்றவியல் நீதிமன்றங்கள் 19புதியதாக ஏற்படுத்தி அதன்காரணமாக மக்களுடைய இன்னல் களை களைகின்ற நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது. நீதி மன்றங்களில் வழக்குகளின் தேக்கம் மிகையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை தான். நீதி மன்றங்களில் சிலயிடங்களில் நீதிபதி களுடைய இடம் நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தால் மட்டும் அல்ல. அப்படி நீதிமன்றங்களில் எங்கெங்கே நீதிபதிகள் நிரம்ப இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளில் கூட வழக்கு களுடைய தேக்கம் மிக அதிகமாக இருப்பதை அரசும் உணருகிறது, உயர்நீதிமன்றமும் உணருகிறது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. வாதி பிரதிவாதி ஆகிய 2 தரப்பினரும் தங்களது நியாயங்களை எடுத்துச் சொல்ல போதுமான வாய்ப்பு

1984 மார்ச் 31] [திரு சி. பொன்னையன்]

தங்களுக்கு தரவேண்டும் என்று கோருகிறபோது சற்று அளவுக்கு மீறிய கால தாமதம் ஏற்படுவதை அவை அறியும் என நான் கருதுகிறேன். அது மட்டும் அல்லாமல் தற்போது நடைமுறை யில் இருக்கின்ற The Provisions of the Civil Procedure Code and the Criminal Procedure Code அவற்றில் இருக்கின்ற அந்த சரத் துக்கள் எல்லாம் நடைமுறைப்படுத்துகிறபோது இயற்கையாகவே கால தாமதம் அதிகமாகஆகி பல நேரங்களில் என்ன முயற்சி களை மேற்கொண்டாலும் ஒரு வழக்கினை 2 ஆண்டு காலம் 3 ஆண்டுகாலம் முடிக்கமுடியாத நிலை ஏற்படுவதை In-built defects என்று கூட நான் சொல்ல விரும்புகிறேன். அவையே மாற்றப்பட வேண்டும் என்ற நிலையை கூட அரசு எடுத்து இருக்கிறது. இன்னும் ஒரு முக்கியமான காரணம் பற்பல காரணங்களின் அடிப்படையில் என்ன தான் நீதிபதிகள் வாய்தா கொடுக்காமல் வழக்குகளை விரைவில் முடிக்கவேண்டும் என்று நினைத்தாலும் கூட வழக்குறைஞர்கள் வாய்தா வாங்குகின்ற ஒரு நிலை உண்மையிலேயே நடைமுறையில் இருப்பதை நாம் மறுக்கக் கூடாது. அது இல்லை என்று சொல்லவும் முடியாது. இந்த நிலையில் பிரச்சினைகளை அணுகவேண்டும் என்று தற்போது உயர்நீதிமன்றத்திலுள்ள பல பிரிவுகளும் அதன் கீழ் பணியாற்று கின்ற Subordinate Courts என்று சொல்லப்படுகின்ற கீழே இருக்கின்ற நீதிமன்றங்களிலெல்லாம் வழக்குகள் தேக்கம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவேண்டும், அக்கறையோடு இருக்கவேண்டும் என கீழே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றங்களுக்கு எல்லாம் உயர்நீதிமன்றம் ஆணையிட்டு இருக்கிறது. மாவட்ட நீதிபதிகள் அந்த அந்த மாவட்டத்தில் இருக்கின்ற மற்ற நீதிமன்றங்களில் வழக்குகள் துரிதமாக நடை பெறவேண்டும் செம்மையாக நடைபெறவேண்டும் என்ற முறை யில் அவ்வப்போது ஆய்வுகள் செய்து எங்கெங்கு தேக்கம் அதிகமாக இருக்கிறதோ அல்லது செம்மையான முறையில் பணிநடக்காமல் இருக்கிறதோ அங்கு நடவடிக்கைகளைகூட உயர் நீதிமன்றம் மாவட்ட நீதிபதிகளுக்கும் எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு நிலையினை அண்மையில் அவர்கள் மிக தீவிரமாக கடைப் பிடித்து வருகிறார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன். அதைப் போலவே தான் குற்றயியல் வழக்குகளாக இருந்தாலும் இதே அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகமாக்குகிற போது தேக்கங்கள் குறைந்து விடும். அதுவும் ஒரு கணிசமான அளவுக்கு குறையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு தான் நீதி மன்றங்கள் இன்னும் அதிகமாக ஏற்படுத்தப் படவேண்டும். வட்டத்திற்கு வட்டம் நீதிமன்றங்கள் வேண்டும். அனைத்து நீதிமன்றங்களும் ஒரு கூறையின் கீழ் இருக்கவேண்டும் என்ற முறையில் கூட அரசு ஆணைகளை இட்டு அவ்வப்போது நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது என்பதை அவை அறியும் என கருதுகிறேன். குறிப்பாக மாவட்ட நீதிபதிகள் தகுதியினுடைய நீதிமன்றங்கள் மட்டும் 1977 வரை 30 ஆண்டுகளாக இருந்தது 31 பதவிகள்



1984 மார்ச் 31] [திரு. சி. பொன்னையன்]

என்று இருந்த நிலையை மாற்றி 1977-க்கு பிறகு 1984 வரை அதிகமாக்கப்பட்ட பதவிகள் ஒட்டுமொத்தமாக 27 என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். 31 ஆக 1977 வரை இருந்த நிலை மாறி தற்போது 58 பதவிகளாக மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் என்ற அளவில் உடைய நீதிபதிகள் பதவிகளை உயர்த்தி இருக்கிறோம். இது வழக்குகளின் தேக்கத்தைக் குறைக்கவும், மக்களுக்கு அதிகமான பலன் கிடைக்கவும் உறு துணையாக இருக்கும் என்ற முறையில் இதை செய்து இருக்கி கிறோம். அதைப் போலவே Sub-judge தகுதியிலே 1977 வரை 67 பதவிகள் என்ற நிலையை மாற்றி 25 பதவிகளை கூடுதலாக ஏற்படுத்தி அவை 92ஆக தற்போது உயர்த்தி இருக் கிறது இந்த அரசு. அதைப்போலவே District Munsiff Cadre-ல் உள்ள பதவிகள் 93 முன்னால் இருந்தது. இந்த நிலையை மாற்றி 44 பதவிகளை அதிகமாக்கி அதை 137 என கடந்த சில ஆண்டுகளில் இந்த ஆட்சி இந்த நடவடிக்கைகளை மேற்கொண் டிருக்கிறது. Sub-divisional Judicial Magistrate என்ற பதவியைப் பொறுத்தவரைக்கும் 15 என்று இருந்த பதவியை முப்பதாண்டுக்காலமாக வெறுமனே 15 என்று இருந்ததை இப்போது 14 பதவிகளைக் கூடுதலாக ஆக்கி அது 29 ஆக இருக்கிறது. Judicial first class Magistrate பொறுத்த வரையில், இந்த ஆட்சி பொறுப்புக்கு வருகிறபொழுது 21 பதவிகள்தான் இருந்தன. அதில் 36 பதவிகளைக் கூடுதலாக ஆக்கி இப்பொழுது அது 57 பதவிகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இது போன்று ஒட்டுமொத்தமாக, இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 396 பலதரப்பட்ட நீதிபதிகளினுடைய பதவிகள், இலாக்காக்கள், அமைப்புகள் என்று இருந்த நிலைமையை, 166 பதவிகளைக் கூடுதலாக உயர்த்தி அது தற்பொழுது 562 பதவிகளாக உயர்த்தப்பட்டிருப் பதால் தான் இந்த அளவிற்கேனும், அளவுகடந்து இருந்த தேக்க நிலை, நீதிமன்றங்களில் இருந்த வழக்குகளின் தேக்க நிலை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அரசு நடத்தும் வழக்கறிஞர்களுடைய எண்ணிக்கை குறை வாக இருக்கின்றபொழுது வாய்த்தாக்கள் அடிக்கடி ஏற்பட்டு வழக்குகள் நிலுவையில் தொடர்ந்து இருக்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதை ஆய்ந்து, அறிந்ததற்குப் பிறகு, அதையும் மாற்ற வேண்டுமென்ற முறையிலே இந்த அரசு நட வடிக்கை எடுத்தது.

இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால்—1977-ம் ஆண்டு வரை ஒட்டுமொத்தமாக அரசு வழக்குரைஞர்கள் பல் வேறு கட்டங்களில் Publice Prosecutors at District level, Government Pleaders at District level or Pleaders doing government work at the Regional level.

உயர்நீதிமன்றத்தினுடைய பலதரப்பட்ட வழக்குரைஞர்கள்,
உதவி வழக்குரைஞர்கள் என்ற நிலையிலேயெல்லாம், இந்த
ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் 185 பதவிகள்
மட்டுமே இருந்தன. தேக்க நிலையில் வழக்குகள் அதிகமாக
இருக்கின்ற காரணத்தால் அதைப் போக்க வேண்டுமென்ற முறை
யில் கடந்த ஆறாண்டுக் காலத்தில் மட்டும் கூடுதலாக 261
வழக்குரைஞர்களை இந்த அரசு நியமித்திருக்கிறது. அதாவது
ஏற்கெனவே 185 என்று இருந்தது, 261 கூடுதலாக உயர்த்தி,
தற்பொழுது ஒட்டுமொத்தமாக எண்ணிக்கை 446 வழக்கறிஞர்
கள் என்ற நிலைக்குக் கடந்த ஐந்தாறு ஆண்டுக் கால நடவடிக்கை
களின் காரணமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதன் நோக்கமெல்லாம், வழக்குகளின் நிலுவை அதிகமாக
இருக்கிறதே, சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், நலிந்த
பிரிவு மக்கள் எல்லாம் ஐந்தாண்டு, ஆறாண்டு, ஏழாண்டு, பத்
தாண்டு என்றுகூட அவர்களுடைய வழக்குகள் முடிவுறா நிலையில்
பலவித இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்களே என்ற
காரணத்தினால்தான், மக்களின் நலன் கருதி, பப்ளிக் இண்டரஸ்
டில் இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது
என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு பகுதிகளுக்கு இன்னும் கூடுதலாக நீதிமன்றங்கள்
அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. நிதிநிலைத்
தட்டுப்பாடு இருந்தபோதிலும்கூட நீதித் துறைக்கு, மக்களின்
நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க நிதி ஒதுக்க வேண்டு
மென்ற முறையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்
திருக்கிறோம்.

குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பேசுகின்ற
பொழுது பலவித பகுதிகளுக்கும் நீதிமன்றங்கள் வேண்டு
மென்று கேட்டார்கள்.

செங்கை மாவட்டத்திலே பூந்தமல்லிக்கு ஒரு சார்நிலை நீதி
மன்றமும், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேயத்திற்கு
ஒரு மாவட்ட முன்சீப் நீதி மன்றமும், கரூர் பகுதிக்கு ஒரு கூடுதல்
மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், சேலத்திற்கு ஒரு கூடுதல்
மாவட்ட முன்சீப் நீதிமன்றமும், அதைப்போலவே, செங்கல்பட்டு
மாவட்டத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு நூல் நிலைய
மும், தஞ்சை கிழக்கு மாவட்டம் நாகப்பட்டினத்திலுள்ள
மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு நூலகமும், பல்வேறு பகுதிகளில்
14 உரிமையியல் நீதிமன்றங்களை ஏற்படுத்தவும் அரசு நட
வடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் நான் சொல்ல
விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்
பொழுது ஒன்றைச் சொன்னார்கள். இலட்சக்கணக்கான வழக்கு
களுக்கு சார்ஜ் ஷீட் போடாத காரணத்தால் அந்த வழக்கு





களெல்லாம் டிஸ்சார்ஜ் ஆகிவிட்டன என்று சொன்னார்கள்.
ஆனால், உண்மை நிலை அதுவல்ல. காரணம், மதுவிலக்குக்
குற்றங்களுக்காக, Section 4 (1)(a), 4(1)(b), 4(1)(i), 4(1)(j),
பிரிவுகளில் எல்லாம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, இலட்சக்
கணக்காக வழக்குகள் நீதிமன்றங்களில் இருந்தபொழுது இவையே
நீதி மன்றங்களில் பிற முக்கிய வழக்குகளின் தேக்க நிலைக்கு
முக்கியமான ஒரு காரணமாக அமைந்துவிட்டதை உணர்ந்ததால்
தான், சாதாரண சிறுசிறு மதுவிலக்குக் குற்ற வழக்குகளில்
பாதிக்கப்பட்ட மக்கள் ஏழைகளாக அதிகம் இருந்த காரணத்தால்
அரசு அதற்கு ஒரு ஆணையிட்டு, நிலுவையில் இருந்த 1,36,832
வழக்குகளில் 1,06,303 வழக்குகளையும், அதைப்போலவே
புலன் விசாரணையிலிருந்த 1,18,001 வழக்குகளில் 91,494
வழக்குகளையும் இந்த அரசு வாபஸ் பெற வேண்டுமென்று
உத்தரவிட்ட காரணத்தால்தான் அவை வாபஸ் பெறப்பட்டன
என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை
வர் அவர்களே, வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்ற
கோரிக்கை வந்தது. இந்த மாமன்றத்தில் உமாநாத் போன்ற
வர்களும் மற்றும் என்னைப் போன்றவர்களும் எடுத்துச் சொன்
னோம். திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் நீதிபதி
யாக, பல ஆயிரக்கணக்கான வழக்குகளை டிஸ்மிஸ் செய்து
சார்ஜ் ஷீட்டுக்கே காலமானதைக் குறிப்பிட்டாரே அதைத்தான்
நான் குறிப்பிட்டேனே தவிர், இந்த வழக்குகளுக்கும் அவை
களுக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அதைப் பொறுத்தவரைக்கும், ரிமாண்ட்
பிரிசனர்ஸ் பொறுத்த வரைக்கும் ஒருவர் ஒரு குற்றத்தைச்
செய்து விடுகிறார். குற்றத்தைச் செய்தவர் அவர்தான் என்
பதனை நிரூபிப்பதற்கு தடயங்கள் தேவை சட்டத்தின் அடிப்
படையில். தடயங்கள் பல நேரங்களில் அதுவும் குறிப்பாக,
'ஒயிட் காலர் அபென்சஸ்' போன்ற குற்றங்களில் எல்லாம்
மிக சாமர்த்தியமாக மறைக்கப்படுகிறபொழுது, காலதாமதம்
ஆகிவிடுகிறது. குற்றவாளிகள் இவர்கள்தான் என்பதற்கு
The evidence and circumstancial factors, Corroboration
இவைகளை எல்லாம் கண்டறிந்து, அவைகளை பேஸ் பண்ணு
வதற்கு மிகச் சிரமமாகிவிடுகிறது, காலதாமதமாகி விடுகிறது.
இந்தக் காரணத்தால் ரிமாண்ட் பிரிசனர்ஸ் சில நேரங்களில்,
நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்குப் பிறகு, அவர்கள் குற்ற
வாளிகளே இல்லை என்று வரலாம். புலனாய்விலே கூட இறுதி
யாக அவர்கள் ஒரு தவறும் செய்யவில்லையென்று வரலாம்.
ஆனால் பல நேரங்களில் நிரபராதிகள் தண்டிக்கப்படுகின்ற அள
வுக்கு, ரிமாண்ட் பிரிசனர்ஸ் ஜெயிலில் அதிக காலம் இருக்கும்

ரீதியிலே அவர்கள் ஒரு தவறும் செய்யாத நிலையிலே கூட பாதிப்
புக்கு உள்ளாக்கப்படுகிற காரணத்தால், அதைப் பொறுத்த
வரைக்கும் இதை ஆய வேண்டுமென்று அரசே ஒரு குழுவைப்
போட்டிருக்கிறது என்று நான் சென்ற கூட்டத்திலே சொன்
னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலும் சென்னை
யிலே கமிஷனர் தலைமையிலேயும், ஒரு குழுவைப் போட்டு,
எந்த, ,எந்த வழக்குகளில் எல்லாம் காலதாமதம் ஆகிறதோ
எந்த வழக்குகளில் எல்லாம் சார்ஜ் ஷீட் பைல் பண்ணவில்லையோ
அந்தக் குறிப்பிட்ட வழக்குகளில் எல்லாம் வாபஸ் பெற வேண்டு
மென்று அரசே ஏற்கனவே நடவடிக்கை எடுத்து ஒரு குழுவைப்
போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நடவடிக்கை
எடுத்து வந்தது. அதை ஒட்டித்தான் அந்த உயர்நீதிமன்
றத்திலே மாண்புமிகு இரத்தினவேல் பாண்டியன் அளித்த
தீர்ப்பும் அரசு ஏற்கனவே உத்தரவிற்கு ஒட்டிய தீர்ப்பு. எனவே,
மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு. இரத்தினவேல் பாண்டி
யன் அளித்திருக்கிற அந்தத் தீர்ப்பு மக்களுடைய நலன் கருதி
அளித்திருக்கிற நல்ல தீர்ப்பாகவே அரசு கருதி, துரித நட
வடிக்கையை இந்தத் தீர்ப்பை ஒட்டி தற்போது எடுத்து
வருகிறது என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

அதைப் போலவே நீதிமன்றங்களுக்கெல்லாம் கட்டிடங்கள்
வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள்
கூறியிருக்கிறார்கள். நீதிமன்றக் கட்டிடங்களைப் பொறுத்த
வரைக்கும் படித்துக் கொண்டே போனால் நிறைய இருக்கிறது.
தற்போது பல்வேறு மாவட்டங்களுடைய 12 பகுதிகளில் கூடுத
லாகக் கட்டிடவசதிகளை ஏற்பாடு செய்து தர அரசு உத்தர
விட்டிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகி
றேன்.

அதைப் போலவே, 1984-85-வது ஆண்டிலே திருச்சி
ராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற வளாக மேம்பாட்டிற்காகவும்
சென்னை உயர்நீதிமன்றத்திற்கு பெருநகர் நீர் வாரியத்திற்கு
குழாய்களிலிருந்து தண்ணீர் எடுக்கின்ற வசதி செய்து தரு
கின்ற பணிக்காகவும் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக்
குற்றவியல் நடுவர் ஆகியோர்கள் உபயோகத்திற்காக கிருஷ்ணகிரி
மாவட்டத்தினுடைய மேம்பாட்டிற்காகவும் கீழ்த் தஞ்சை
மாவட்டத்தில் நீதிமன்றக் கட்டிடத்தினுடைய மேம்பாட்டிற்
காகவும் அரசு ஆணையிட்டு நடவடிக்கை எடுக்க இருக்கிறது
என்பதையும் கூறவிரும்புகிறேன்.

நீதிபதிகளுக்கு இந்த அரசு என்ன, என்ன சலுகைகளை,
ஏற்கனவே நீதி நிர்வாகத்தினுடைய நலன் கருதி அளித்திருக்கி
றது என்பதை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். 18
மெமோ ரெக்கார்டர்கள். 88 மைக்ரோ கேஸட்டுகள் இவை
யெல்லாம் நீதிபதிகளுடைய பணி சுமையைக் குறைக்க,
நிர்வாக செம்மையை மேம்படுத்த இந்த அரசு ஏற்கனவே





ஆணையிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது. மாவட்ட
மற்றும் செஷன்ஸ் நீதிபதிகள் மற்றும் நீதித் துறை தலைமைக்
குற்றவியல் நீதிபதிகள் அனைவருக்கும் தமிழக அரசு அண்மை
யிலே கார்களை வழங்கியிருப்பதையும் இந்த அவை அறியும்
என்று கருதுகிறேன். இந்திய துணைக் கண்டத்திலேயே, எந்த
மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நாம்தான் இந்த உத்த
ரவை, நீதிபதிகளுடைய செம்மையான பணி குறித்து எடுத்தி
ருக்கிறோம்.

அதைப் போலவே சென்னையைப் பொறுத்த வரையிலும்
நீதிபதிகளுக்குக் குறிப்பாக, உயர்நீதி மன்றத்தின் கீழ் பணி
புரியக் கூடிய சபார்டினேட் கோர்ட் நீதிபதிகள் பொறுத்தவரைக்
கும் பல நேரங்களில் பேருந்துகளில் குற்றவாளிகளுடன் இணைந்து
சென்று, நீதிபதியை, மன்றத்தையே குற்றவாளிகள் மதிக்காத
நிலைகூட ஏற்பட்டுவிடுமோ என்ற காரணத்தால், சென்னையிலே
பணியாற்றுகிற நீதிபதிகளுக்கும் பேருந்துகள் இரண்டினை
வழங்கி, அவர்கள் இல்லந்தோறும், சென்று அவர்களை அழைத்து
நீதிமன்றத்திற்குச் சென்று மாலையிலே மீண்டும் அவர்கள் இல்லத்
தில் விடக்கூடிய அளவுக்கு அண்மையிலே ஒரு உத்தரவிட்டு அதை
நடைமுறைப்படுத்த வாகனங்களைக் கூட வழங்க இருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 119 சார்பு நீதி
மன்றங்களைப் பொறுத்தவரைக்கும் தொலை பேசி வசதி
இல்லாத காரணத்தால் பல்வேறு சிரமங்கள் இருந்து வந்தன.
உயர்நீதி மன்றம் மாவட்ட நீதிமன்றங்களை கண்காணிக்கின்ற
பொறுப்பு இருக்கிறது. Police and Judges are there
to look after the functioning of the Subordinate Judiciary.
அதேபோல மாவட்ட நீதிபதி அவர்களுக்கு கீழே இருக்கிற
நீதிபதிகளுடைய பணிகளை அவ்வப்போது கண்காணித்து,
ஆணையிட்டு செம்மைப் படுத்த வேண்டிய பணியில் இருக்கிறார்.
ஆனால் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் அருகாமையில்
இருக்கிற போலீஸ் ஸ்டேஷன் அல்லது தாலுக்கா ஆபீஸ் போன்ற
இடங்களிலிருந்து போன் செய்து நீதிபதி மற்றவர்களுடன்
தொடர்பு கொள்ள வேண்டும் ; அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு
கொள்ள வேண்டியிருந்த நிலை இருந்ததால்—நீதிமன்றம் தன்
னிச்சையாக, சுதந்திரமாக செயல்படக்கூடிய ஒன்று ; மற்ற
குறுக்கீடுகள் இருக்கக்கூடாது என்ற காரணத்தால் 119
நீதிமன்றங்களுக்கு தனியாக தொலை பேசி வசதி தரவேண்டு
மென்ற உத்தரவையிட்டு இந்த அரசு தற்போது நடவடிக்கை
எடுத்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே சபார்டி
னேட்-ஜுடிஷரிக்கு இப்படி 119 தொலைபேசிகளை கொடுத்தி
ருக்கிற அரசு இந்த அரசு தான் என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன்.

தட்டச்சுப் பொறிகள் எல்லாம் வழங்கப்படவில்லை என்று
சொன்னார்கள். அதுகுறித்து அரசு தற்போது நடவடிக்கை
எடுத்து இருக்கிறது.

அதைப்போலவே அரசு வழக்குரைஞர்களுடைய ஊதி யத்தை—ஏ.பி.பி. 1 மற்றும் 2 என்ற நிலையில் ஒவ்வொரு முதுநிலை வழக்கு நடத்துனரும் தங்களுடைய அலுவலக அவசிய செலவுகளுக்காக நிரந்தரமாக அவர்களுக்கு இதுகாறும் 30 ரூபாய் கொடுக்கப்பட்டிருந்த தொகையை 70 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது என் பதை நான் கூற விரும்புகிறேன்.

அதைப்போலவே சட்ட புத்தகங்கள் ; பல நேரங்களில் கீழே இருக்கிற நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களுக்கு The latest case laws என்னவென்று தெரியாமல் போய் விடுகிறது ; அப்படி.. இருக்கிறபோது

Unless there is a well equipped library in the subordinate court to enable the advacate to have the maximum benefit there from it would be very difficult for them to do justice to their job.

என்ற முறையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு வழக் குரைஞர்களுக்கு தங்களுடைய சட்ட நுணுக்கத்திலே அவர்கள் திறமை பெறவேண்டுமென்ற முறையில் அவர்களுக்கு புத்தகங் கள் எல்லாம் கிடைக்கிற அளவிற்கு வசதி செய்து தரவேண்டு மென்று அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல வழக்குரைஞர்களுடைய நலனிற்காக பல இடங் களில் அவர்களுக்கு வேண்டிய அட்வகேட்ஸ் சேம்பர் ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற முறையில் அரசு பல நடவடிக்கையை தற் போது எடுத்திருக்கிறது.

ஒருங்கிணைப்பைப் பொறுத்தவரையில் Cilvil cases and Criminal cases Particularly in taluk level ஒவ்வொரு தாலுக்காவிலும் சிவில் நீதிமன்றம் இருக்கும் ஆர். டி. ஓ. மட்டத்திலே கிரிமினல் நீதிமன்றம் இருக்கும் நீதிமன்றம் அங்கே இருக்கும். சாதாரண ஏழைஎளிய மக்கள் எல்லாம் பல மைல் தூரம் சென்றுதான் நீதியைப் பெற வேண் டிய நிலையில் இருக்கிறார்கள். அதை மாற்றுகிற முகத்தான் ஒவ்வொரு வட்ட அளவிலும் சிவில் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, கிரிமினல் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, First class and second class Criminal offences and the civil matters that would be falling within the jurisdiction of the district munsiff. இவைகள் எல்லாம் ஒரு கூரையின் கீழே இருக்க வேண்டு மென்ற முறையிலே தான் District Munsiff and Judicial Magistrate என்ற அமைப்பை ஒவ்வொரு வட்டத்திலும் கொண்டு வந்து





மக்களுக்கு இருக்கிற இன்னலை போக்கவேண்டுமென்று நட வடிக்கையை அரசு எடுக்க ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையி லும் மதுரையிலும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. பல விதமான சிறு, சிறு வழக்குகளை எல்லாம் செம்மையாக அவை கவனித்து, மக்கள் நலன் கருதி துரிதமாக தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த அனுபவத்தின் அடிப்படையில் கோவையிலும் விரைவில் நடமாடும் நீதிமன்றம் அமைக்க நட வடிக்கை எடுக்க இருக்கிறோம்.

மதுரையில் உயர் நீதிமன்றத்தின் கிளை ஒன்றை அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசும்போது தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாநில அரசு பல முறை மதுரைக்கு உயர் நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை ஏற்படுத்துவது அவசியம் என்று மைய அரசுக்கு எழுதியிருக்கிறது. காரணம், தென் மாவட்டங்களில் உள்ளவர்கள் எல்லாம் மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கிற சென்னைக்கு, வந்து, உயர் நீதிமன்றத்தில் நீதி பெற பணச் செலவும் கால தாமதமும் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, மக்கள் நலன் கருதி இந்த அமைப்புத் தேவை என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மைய அரசுக்கு பல முறை எழுதியிருக்கி றார்கள்.

அண்மையில் ஜெஸ்வன்சிங் தலைமையில் ஒரு குழு வந்து, ஆராய்ந்து பார்த்து, ஒரு நல்ல முடிவினை எடுக்க மத்திய அர சோடு தொடர்பு கொண்டிருக்கிறது. அந்தக் குழு எங்களுக்கு நம்பிக்கை தந்திருக்கிறது. விரைவில் மதுரையில் உயர் நீதி மன்றத்தின் கிளை ஒன்றை அமைக்க மத்திய அரசு உத்தரவு தரும் என்ற முழு நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றை தென் மாநிலத்தில் அமைப்பது பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக சென்னையில் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தென் மாநில மக்கள் நலன் கருதி, 'சார்ட்டட் ஹைகோர்ட்' என்ற முறையில் சென்னையில் அமைக்க முயற்சி செய்கிறோம். சார்ட்டட் ஹைகோர்ட் என்று சொன்னால் இந்தியாவில் சென்னை, பம் பாய், கல்கத்தா, இந்த மூன்றும் தான். அந்த அளவுக்கு மிகவும்

சிறப்பான ஒரு சூழ்நிலை நமக்கு இருக்கிறது. உச்ச நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை சென்னையில் அமைக்க வேண்டுமென்ற மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு பரிவோடு பரிசீலித்து வருகிறது, நமக்கு நம்பிக்கை தந்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் வந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள்.

தற்போது சென்னையில் சட்டக் கல்லூரி இருக்கும் இடம் உகந்ததாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையில் பல்வேறு மாவட்டங்களில் இப்போது சட்டக் கல்லூரி விரிவாக்கப்பட்டிருப்பதால் தற்போது சென்னையில் இருக்கிற 'லா காலேஜ்' அதற்கு உகந்ததாக, சிறந்த இடமாக, நல்ல வசதி கொண்டதாக இருப்பதால் அந்த இடம் பொருத்தமாக இருக்கும் என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பார்வையிட்டு, கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசும் இது குறித்து ஆராய்ந்து வருகிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.

ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குவது 1977 லிருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு இலவச சட்ட உதவி வழங்க, ஒரு குழுவை அமைத்து, அதன் மூலம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ''ஃப்ரீ லீகல் எய்டு டு பூவர்'' திட்டத்தைச் செயல் படுத்தி வருகிறோம். இதற்காக 1981 ஆம் ஆண்டில் 13 இலட்சம் ரூபாய், 1982 ஆம் ஆண்டில் 21 இலட்சம் ரூபாய், 1983 ஆம் ஆண்டில் 27 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. இப்படி 20 இலட்சம், 28 இலட்சம் என்று இல்லாமல் ஏழை எளிய மக்களுக்கு சட்ட உதவி செய்ய எவ்வளவு பணம் தேவை என்று 'ஃப்ரீ லீகல் எய்டு போர்டு' சொல்கிறதோ, அதன் தலைவரும் செயலாளரும் முறையே முன்னாள் நீதிபதிகள் கிருஷ்ணசாமி ரெட்டியாரும், இராமகிருஷ்ணனும் எப்போது எவ்வளவு பணம் தேவை என்று தகவல் தருகிறார்களோ அப்போதே தேவையான பணத்தைக் கொடுக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இலவச சட்ட உதவி அளிப்பதன் காரணமாக, ஏழைகள், பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள், அருந்ததியினர் போன்றவர்களுக்கு எந்த அளவுக்கு இந்த உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்றால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் நாட்டில் அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதிக மக்கள் பயனடைந்திருக்கிறார்கள். இதை அறிந்து தான் 'ஃப்ரீ லீகல் எய்டு போர்டு' பாதுகாவலராக இருக்கிற ஜஸ்டிஸ் பகவதி அவர்களும்; ஏழைகளுக்கு இலவச உதவி தேவை, பாரத மக்கள் நலன் கருதி அதை செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி வந்த முன்னாள் நீதிபதி





கிருஷ்ணய்யர் அவர்களும் தமிழக அரசு மிகச் சிறந்த முறையில் இலவச சட்ட உதவி செய்து வருகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

அதைப் போன்று உச்ச நீதிமன்றமும், ஷீராபார்சி, வர்ஸஸ் ஸ்டேட் ஆஃப் மகாராஷ்டிரா என்ற வழக்கின்போது, இலவச சட்ட உதவி எந்த எந்த மாநிலத்தில் எந்த எந்த அளவுக்கு அளிக்கப்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கிற ஒரு நிலையில் தமிழ் நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு மிக நல்ல முறையில் இலவச சட்ட உதவி வழங்கப்பட்டிருக்கிறது என்று பாராட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக சிறை சீர்திருத்தக் குழு பலவிதமான ஆலோசனைகளைச் சொல்லியிருந்த போதிலும் இன்னும் நடை முறைப் படுத்தப்படாமல் இருப்பது நிறைய இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அரசைப் பொறுத்த வரைக்கும், சிறை நிர்வாகத்தினுடைய மேம்பாட்டிற்காக, பல வித ஆணைகளை ஏற்கனவே இட்டு, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தமிழகத்தினுடைய சிறைச்சாலைகள் செம்மையான முறையில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்குக் கூற விரும்புகிறேன். ஆனால் அது போதுமானதா என்றால் போதாது என்று நான் உளமாற ஒத்துக் கொள்கிறேன். இன்னும் மிகைப்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு கண்டிப்பாக எடுக்கும் என்பதனை இந்த அவைக்கு நான் முதற்கண் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, பல தவறுகள் அதிகாரிகள் செய்கிறார்கள் என்றும், தவறு செய்கின்ற அதிகாரிகள் கைதிகளுடைய நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகிறார்கள் என்றும் மிக்க புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் பேசுகின்றபோது சொன்னார். அரசைப் பொறுத்த வரைக்கும், அவர் சொன்னதைப் போலவே பல்வேறு ஆணைகளை, ஏற்கனவே சொன்னது போல, சிறைக் கைதிகளின் நலனைக் கருதி, பிறப்பித்திருக்கிறது என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன். நிர்வாக இயந்திரம் செம்மையாக இருக்க வேண்டும். அப்போது தான் அரசு எண்ணுகின்ற எண்ணம் நடை முறையில் ஈடேறும், என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். உமாநாத் கூறிய கருத்தில் நான் ஒன்றுகிறேன். இன்னும் தெளிவாகக்கூடக் குற்றச்சாட்டுகளை எடுத்துச சொன்னார்கள். அதைக் கூட குறித்துக் கொண்டேன்.

குறிப்பாக சிறை நிர்வாகத்தைப் பொறுத்த வரைக்கும், என்னென்ன தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய்ந்த போது, உணவு வழங்குதல், கேட்டில் எந்த வார்டர்

களை ஒதுக்குவது, கைதிக்கு வேலைகளை ஒதுக்குவது, தண்
டனையைக் குறைப்பதற்கு மார்க்குகள் அளிப்பது, ஹாஸ்பிடல்
அட்மிஷன், கைதிகளின் உறவினர்கள் பார்க்க வருவது போன்ற
பகுதிகளில் தவறுகள் நடக்கிறது என்று எடுத்துச் சொன்னார்
கள். இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் அரசிற்கும் வந்திருக்
கிறது. இவைகளைக் கடுமையான குற்றங்கள் என்று கருதி,
அங்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு
தவறுகளைச் செய்த காரணத்தினால், தயவு தாட்சண்யமின்றி
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக, சிறை ஐ. ஜி
பணிக்கப்பட்டு அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்
திருக்கிறார்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு
சூப்பிரண்டெண்டண்டு ஆப் பிரிசன்ஸ், டெபியூட்டி ஜெயிலர்,
அசிஸ்டண்டு ஜெயிலர் ஒரு ஆபிஸ் மானேஜர், பல அசிஸ்டண்டுகள்
போன்றவர்கள் தவறுகள் செய்ததற்காக அரசு நடவடிக்கை
களை எடுத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, இன்னும்
கூட ஒன்றைச் சொன்னார்கள். வேலூர் சிறைச்சாலையில் பல
தவறுகள் நடந்திருக்கின்றன. டி.ஐ.ஜி. வித்யாசாகர் அந்த
நடவடிக்கைகளை செவ்வனே எடுக்காமல் கடுமைப்படுத்தினார்
என்று சொன்னார்கள். வித்யாசாகரைக் காப்பாற்ற வேண்டு
மென்ற நோக்கோடு இதைச் சொல்லவில்லை. அதிகாரிகள்
தவறு செய்தால், தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க
வேண்டும். ஏனென்றால், அவர்களோ குற்றவாளிகள், குற்றம்
சாட்டப்பட்டு, தண்டனை அனுபவிக்கின்றவர்கள். அவர்கள்
மனம் திருந்தி, சிறையிலிருந்து வெளியே வந்து, நல்வாழ்வு
வாழவேண்டுமென்று தான் விரும்புகிறோம். அங்கு அவர்
களுடைய நலனுக்குப் புறம்பாக எந்த அதிகாரி செயல்பட்டா
லும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது தான்
அரசினுடைய கொள்கை என்பதில் மாற்றம் இல்லை.

வேலூர் சிறையைப் பொறுத்தவரைக்கும், அது உயர்நீதி
மன்ற வழக்கு என்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்
சுட்டிக்காட்டினார். அதைப் பற்றி பத்திரிகையிலே செய்தி
வந்த பிறகு, ஐ.ஜி. அவர்களை அழைத்து, அதன் மீது நட
வடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னோம். கைக்குத்தல்
அரிசி வாங்குவதாக கணக்கு காட்டிவிட்டு, அதற்குப் பதிலாக,
மற்ற சாதாரண அரிசியை வாங்கிவிட்டு, அதிலே வருகிற
பணத்தை அவர் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்று உயர்
நீதிமன்றத்தில் குற்றத்தை சுமத்தி இருப்பது உண்மையா என்
பதைப் பற்றி கண்டுபிடிப்பதற்காக, ரகசிய விசாரணை நடத்த
வேண்டுமென்று சொல்லி, ஐ.ஜி., டி.ஐ.ஜி., போன்றவர்களை
விசாரிக்கச் சொன்னேன். உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கில்
குறிப்பிட்டுள்ளபடி இதில் தவறு நடந்திருக்கிறது. அது
உண்மை என்று அரசிற்கு அறிக்கை வந்திருக்கிறது. அந்த





அடிப்படையில் நடவடிக்கை எடுக்கயிருக்கிறோம். தவறு நடந்
திருக்கிறது என்பதை டி.ஐ.ஜி. அவரும், அவருடனே சென்ற
அதிகாரிகளும் பார்த்து, கண்டுபிடித்து, எந்த ஒரு குற்றச்சாட்
டின் காரணமாக வேலூர் சிறைக் கைதிகளின் போராட்டம் நடந்
ததோ, அந்தக் குற்றச்சாட்டு உண்மை என்ற ஆதாரத்தோடு
கண்டு பிடித்து தந்திருக்கிறார்கள்.

எனவே கடுமையான நடவடிக்கையை நாம் எடுக்க இருக்கிறோம்
என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து, பிரிசனர்ஸ் மானுவலைப் பொறுத்தவரைக்கும்,
அவை அச்சகத்திலேயிருந்து அச்சடித்துக்கொடுப்பதற்குக் கால
தாமதம் ஆகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள்.
எனக்குக் கூட இதில் வருத்தம்தான். பிரிசனர்ஸ் மேனுவலைப்
பொறுத்தவரைக்கும், புதுப்பிக்கப்பட்ட பிரிசனர்ஸ் மேனுவல்
நடைமுறைக்கு வருகின்றபோது தான் பல செம ..மகனளக்
கொண்டுவரக்கூடிய தவறு செய்கின்றவர்கள் அதிகாரிகளாக இருந்
தாலும், யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க முடியும் என்ற
காரணத்தால், அந்த பிரிண்டிங் பிரஸ்ஸோடு தொடர்பு கொண்டு,
துரிதமாக, இந்த பிரிசனர்ஸ் மானுவல் வருவதற்கு அரசு
நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் சொல்ல
விரும்புகிறேன்.

அதைப்போலவே வேலூர் சிறையில் உள்ள பாபு என்ற
கன்விக்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்
கள் சொன்னார்கள். அவருக்கு செஸ்ட் பெயின் ஏற்பட்டு டைம்லி
மெடிக்கல் அட்டென்சன் கொடுக்காத காரணத்தால், அவர்கள்
இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், அதற்கு கவனக்குறைவு
தான் காரணம் என்றும் எடுத்துச்சொன்னார்கள். இது குறித்து
அரசு விசாரித்து, உண்மை நிலை என்ன என்பதைக் கண்டறிந்து,
அதற்கேற்ற நடவடிக்கையை எடுக்கும் என்பதை நான் சொல்லிக்
கொள்கிறேன்.

அதைப்போல, மதுரைச் சிறையில் சிவன் கோனார் என்ற
கைதி ஜெயில் சூப்பிரன்டென்ட் வீட்டிற்குப்போய் வேலை
செய்யும் போது அங்கே விபத்திலே சிக்கிய காரணத்தாலே
இறந்தார் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய தகவல்
என்னிடம் இல்லை. அதை விசாரித்து, அந்த அடிப்படையிலே
தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை நான் சொல்லிக்
கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தை விசாரித்து இது
சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொன்னதற்கு நன்றி. நான் இதை எதற்குச் சுட்டிக்

[திரு. ரா. உமாநாத்] [1984 மார்ச் 31

காட்டுகிறேன் என்று சொன்னால், உதாரணத்திற்காக, ஜெயி லுக்குள்ளே ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்பட்டது என்று சொன்னால், உடனடியாக இரவில் 'வனிக்கப்படவில்லை என்று சொன்னால், அது உடனடியாக ரெக்டிபை பண்ணு வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என் பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து சரியான கருத்துத்தான். அந்த அடிப்படையில் தக்க நட வடிக்கைகளை எங்கெங்கே குறைபாடுகள் இருக்கின்றதோ, அங்கெல்லாம், குறைபாடுகளை களையக்கூடிய முறையில் நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த தபால் பெட்டியைப் பொறுத்த வரைக்கும், மாவட்ட நீதிபதியின் முன்னால், அது திறக்கப்பட வேண்டும் என்றுதான் அரசு இட்டிருக்கிற ஆணை. ஆனால் திருச்சிச் சிறையிலே ஒரு தவறு நடந்திருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். அதை விசாரிக்க இருக்கிறோம். விசாரித்து, அது உண்மை என்று கண்டறிந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம் என்பதை நான் சொல்லிக்கொள்ளுகிறேன். (குறுக் கீடு). யார் தவறு செய்ய விழைந்தாலும் கூட, தவறு செய்ய வாய்ப்பு இல்லாத முறையில் அந்தப் பெட்டி அமைய வேண்டும் என்ற கருத்தும் சரியான கருத்துத்தான். அதையும் அரசு பரிசீலிக்கும்.

அதைப்போலவே, மதுரை ஜெயிலைப் பொறுத்தவரைக்கும் ஜெயிலுக்குச் சொந்தமான மரம் என்று நான் கருதுகிறேன். ஜெயிலுக்குச் சொந்தமான மரத்தை எடுத்து, அடுப்பு எரிக்க பயன்படுத்திவிட்டு, வெளியிலேயிருந்து மரம் வாங்கியதாக கணக்கு எழுதியிருப்பதாக ஒரு தகவல் வந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரத்தினுடைய எண்ணிக் கையைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். மரத்தினுடைய அந்த நம்பர் எல்லாம் சொல்லுகின்றபோது, அது ஆதாரம் நிறைந்தாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதற்கு உடனடியாக விசாரணை செய்ய உத்தரவிட்டு அதற்கு கடுமையான நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஜெயில் கைதிகளைப் பொறுத்தவரைக் கும், அவர்களுக்காக ஒரு பஞ்சாயத்து வேண்டும் என்று மாண்பு மிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்ன ஆலோச னையின் அடிப்படையில்தான் அதை நாம் அமைத்திருக்கிறோம். ஆனால் ஆங்காங்கே பஞ்சாயத்துக் கமிட்டி மெம்பர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். தவறுக்கு உடந்தையாக இல்லாத நேரத்தில் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது எந்த



1984 மார்ச் 31] [திரு. சி. பொன்னையன்]

அளவிற்கு சரியானது என்று தகவல் என்னிடம் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஜெயில் கமிட்டியிலே இருக்கின்ற கைதிகளை அடிக் கடி மாற்றுவது என்பது, அது மாண்புமிகு உறுப்பினர் சொல்லு வதைப் போன்று, குற்றச்சாட்டுகளுக்கு இடம் தரக்கூடியதாக அமையும் என்ற காரணத்தால், அரசினுடைய அனுமதியின்றி எடுக்கக்கூடாது என்ற ஆலோசனையை சொல்லியிருக்கி றார்கள். அது நல்ல ஆலோசனை. அது குறித்தும் அரசு பரிசீலிக்கும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே கற்பழிப்பு பற்றிச் சொன்னார்கள். மதுரை மாவட்டத்திலே. இந்தத்துறை சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும், 8 பெண்கள் கற்பழிப்பிற்குக் காரணமாக இருந்த வன், தப்பிக்கக் காரணமாக இருந்தது, தக்க புலன் ஆய்வு அல்லது தக்க நடவடிக்கைகளை காவல்துறை அங்கு செய்ய வில்லை என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். அதுபற்றி ஏற்கனவே தெரியும். அரசே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆணையை ஏற்கனவே இட்டிருக்கிறது. அந்த அடிப் படையில் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக் கிறோம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே வரதட்சிணை கொடுமையின் காரணமாக மனவியை கணவன் கொன்ற, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் கேஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி, அரசு அப்பீல் போடவேண்டும் என்று சொன்னார்கள். நான் தக்க நட வடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். எடுத்திருப்பார்கள் என்றும் நம்புகிறேன். அது குறித்து நான் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன்.

அதைப்போலவே சிறையிலே அரசு இடுகிற ஆணைகள் எல் லாம் தமிழிலே இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழில்தான் இருக்க வேண்டும். எப்படி ஆங்கிலத்தில் இருக் கிறது என்று தெரியவில்லை. (குறுக்கீடு) அப்படி தமிழிலே பெரிய எழுத்திலே இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள் என்று கருதுகிறேன். அது தேவையான ஒன்று.

திரு. சௌரிராஜன் அவர்கள் பேசுகிறபோது இடையிலே, ஆணைகள் எல்லாம் எதற்கு அண்ணா பத்திரிகை அங்கே வந்தால் போதாதா என்று சொன்னார்கள். அவர் வேடிக்கையாகவோ அல்லது அரசியல் உணர்வோடோ அதைச் சொல்லியிருப் பார்கள் என்று கருதுகிறேன். அண்ணா பத்திரிகையில் எல் லாம் அரசாங்க ஜி. ஓ. வெளியிடப்படுவது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்களுக்கு சொல் லிக் கொள்ளவிரும்புகிறேன். இந்த ஜி.ஓ.-க்களைப் பொறுத்த வரைக்கும், சிறைக் கைதிகளுக்கு தெரியக்கூடிய அளவிற்கு

தமிழிலே இருக்கவேண்டும் என்பதுதான் சரியான கருத்து,
மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதைப்
போல அதிலே, தக்க நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதை
சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்டஸ்ட்ரீஸ் டிரிப்யூனலைப் பொறுத்த
வரைக்கும் நீதிபதிகள் தற்போது அங்கே நிர்ணயிக்கப்பட்டிருக்
கிறார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரைக்கு ஏற்ப
மற்ற நீதிமன்றங்களிலேயும், எங்கெங்கே நீதிபதிகள் உடனுக்
குடன் போடப்படவேண்டுமோ, அந்த நடவடிக்கைகளையும்
அரசு உடனேயே எடுக்கும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்பு
கிறேன். நான் ஒன்றை பாராட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)
பரோலில் போவது பற்றி.

பரோலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத்
அவர்களும், பெரியவர் கருப்பையா அவர்களும் பேசுகிறபோது
தாராளமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான்
உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் பரோலைப்
பொறுத்தவரைக்கும் கடந்த எந்தக் காலத்திலும் இல்லாத
அளவுக்கு தற்போது மிகத் தாராளமாக இருக்க வேண்டும் என்ற
உத்தரவைத் தான் நாங்கள் இட்டு, அந்த முறையில் அதை
நடைமுறைப் படுத்தி வருகிறோம் என்பதை நான் அவர்களுக்கு
சொல்ல விரும்புகிறேன். அதற்கான காரணங்களைச் சொல்
கிறேன். நான் அதை மீண்டும் பரிசீலிப்பேன். அதை
அட்ஜெர்ன்மெண்ட் மோஷனிலும் கூட சொல்லியிருக்கிறேன்.
உதாரணமாக பல கைதிகள், ஒன்றல்ல இரண்டல்ல கிட்டத்தட்ட
32 கைதிகள் பரோல் வாங்கிக் கொண்டு போய் பல தவறுகளைச்
செய்திருக்கிறார்கள்.

நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கிற பரோலில்
தவறு நடந்துவிட்டது. அல்லது மற்றவர்களுக்கு கொடுக்கிற
பரோலில் தவறு நடந்துவிட்டது என்று நான் சொல்லவில்லை.
பல நேரங்களில் சூப்பிரண்டென்டென்ட் ஆப் பிரசன் மூலமாக,
அவர்களுக்குள்ள நார்மல் பரோலை 2 நாள், 3 நாள் வாங்கு
கிறார்கள். 3வது நாள் நேரிடையாக என்னை வந்து சந்திக்
கிறார்கள். அவர்களுடைய குடும்பப்பிரச்னைகளை சொல்
கிறார்கள். போலீஸ் துறை மூலமாக உண்மையை கண்டு ஆராய
வேண்டும் என்றால் கண்டிப்பாக காலதாமதம் ஆகும். அவர்
கள் சொல்வதைக் கேட்கிறபோது, பரோல் எக்ஸ்டென்ஷன்
உடனடியாக கொடுக்கவில்லை என்றால் விளைவு மிக விபரீத
மாகவே அவர்களுக்கு இருக்கும் என்ற அளவில் பரிதாபத்தை
உண்டுபண்ணக் கூடிய அளவிற்கு சொல்கிறார்கள். பரோல்
கொடுத்துவிடுகிறோம்.

அப்படி பரோல் வாங்கிக் கொண்டு போய் குற்றத்திலே
ஈடுபடுகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஒரு
கன்விக்ட் நெம்பர் 6755 சுந்தரம் என்று பெயர். வேலூர்





ஜெயிலில் இருக்கக்கூடியவர்! பரோலை வாங்கினார்.
பரோலை வாங்கிச் சென்று ஒரு பெண்ணை கற்பழிக்கக்
கூடிய மாபெரும் குற்றத்தை செய்திருக்கிறார். உதாரணத்
திற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அதைப்போலவே கன்விக்ட் நெம்பர் 3796 இன்பராஜ் என்ப
வர் பரோலிலே வெளியே சென்று ராப்பரி, தெப்ஃட் போன்ற
வைகளில் ஈடுபட்டு தவறு செய்திருக்கிறார்கள். அதைப்
போலவே கன்விக்ட் நெம்பர் 9337 ராமலிங்கம் என்பவர் பரோ
லிலே வெளியே சென்று ஒரு கொலையே செய்துவிட்டு வந்தார்.
அவர் கொலை குற்றத்திற்காகத்தான் ஏற்கனவே உள்ளே
இருக்கிறவர். அதைப்போலவே கன்விக்ட் நெம்பர் 59612
என்பவர் பரோலிலே வெளியிலே சென்று ஒரு கொலை செய்து
விட்டு வந்தார். இன்னொருவர் அப்படியே 3714, இப்படி
பல கைதிகள், கொலை செய்வது கொலை செய்ய முயற்சிப்பது,
கற்பழிப்பது போன்ற பலவகையான குற்றங்களில் எல்லாம்
அதிகமாக ஈடுபடுகிற நிலைமை வந்தபோதுதான் எனக்கு
சற்று அச்சமே ஏற்பட்டு விட்டது என்பதையும் இந்த அவைக்கு
சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாராளமான முறையில் கைதிகளுக்கு கஷ்டம் ஏற்படக்
கூடிய காலத்தில் அவர்கள் பரோலில் வீட்டுக்குச் செல்ல வேண்
டும், அவர்கள் நல்ல முறையில் திருந்தி வாழ வேண்டும் என்ற
முறையில் தான் பரோல் எக்ஸ்டென்ஷனில் லிபரலாக இருக்க
வேண்டும் என்று நாம் ஆணை கொடுத்திருக்கிறபோது, அண்மை
யிலே பரோலிலே வெளியே செல்கிறவர்கள் பல தவறுகளைச்
செய்கிறார்கள் என்ற ஒரு நிலைமை ஏற்படுவது உகந்தது அல்ல
என்பதற்காகத்தான் அரசு அதிலே சற்று கடுமையாக இருக்க
வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக அண்மையிலே கூட அனைவரும் பத்திரி
கையில் பார்த்திருப்பார்கள். அது போக இன்னும் சில நேரங்
களில் கைதி சிறையிலே இருந்து வெளியே போகிறபோது
அவர் கொலை செய்துவிட்டு உள்ளே வந்திருப்பதால், கொலை
செய்யப்பட்டவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய
மகனோ, தம்பியோ, அண்ணனோ இருக்கிறபோது, அதில்
ரிவேன்ஞ் எடுக்க வேண்டும் என்ற முறையிலே அவர்கள் இவர்
வெளியே வருவதை எதிர் பார்த்து காத்துக் கொண்டிருப்
பதையும், பல முறைகளிலே நாம் இல்லை என்று சொல்லிவிட
முடியாது.

அப்படி அண்மையிலே மதுரையிலே ஒருவர் பரோலிலே
வெளியே சென்று, போலீஸ்காரரையே துப்பாக்கியால் சுட்டுக்
கொன்றார். அண்மையிலே கூட சென்னையிலே ஒருவர் பரோ
லில் வெளியே சென்றபோது, அவர் முன்பு யாரை கொலை
செய்து விட்டு, சிறைத் தண்டனை அனுபவிக்க வந்தார்களோ

அந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் காத்துக் கொண்டிருந்து
அவரை கொன்று விட்டார்கள். பத்திரிகையிலே கூட
அண்மையிலே 2 நாட்களுக்கு முன்பு 28–3–1984லே வந்ததை
மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்கள்.

(பிற்பகல் 1-50)

இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்ற நிலைமைகள் இருப்பதன்
காரணமாக சற்று எச்சரிக்கையாக இருக்கவேண்டியிருக்கிறது.
ஆனால் சொல்வது ஒன்றையே வைத்து முடிவு எடுக்கக்கூடாது
என்றாலும்கூட, 3 தினங்களுக்கு முன்பு வந்தாலும்கூட என்னால்
அதைச் செய்ய முடியும். அந்தந்த பகுதிக்கு அனுப்பி தகவல்
களைச் சேகரித்து பிரத்தியேகமாக என்ன பிரச்சினை என்பதைக்
கண்டறிந்து உண்மையான காரணத்திற்காகத்தான் கேட்கிறாரா
என்று பார்த்து எக்ஸ்டன்ஷன் கொடுத்து விடலாம். 15 நாட்கள்
பரோலில் வருகிறார்கள். 15-வது நாள் சரியாக வருகிறார்கள்.
வந்து இன்றைக்கே போகவேண்டும் அல்லது நேற்றே போயிருக்க
வேண்டும், போகவில்லை, இன்று இங்கு இருக்கிறேன். நீங்கள்
உத்தரவு போட்டால்தான், இல்லாவிட்டால் என்னை சிறையில்
தொல்லை செய்வார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி
இருக்கிற காரணத்தால் பல பிரச்சினைகள் உருவாகிவிடுகின்றன.
அந்த அடிப்படையில் தான் அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது.
ஆனால் அதற்காக பரோல் எக்ஸ்டன்ஷன் என்று வருகின்ற
யாருக்குமே பரோல் எக்ஸ்டன்ஷன் கொடுக்கக்கூடாது என்பது
அரசினுடைய எண்ணம் அல்ல என்பதையும் அந்த முறையில்
பிரச்சினையை அணுகமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். பரோல் எக்ஸ்டன்ஷன் விவகாரத்தில் திரு. ரகு
மான்கான் அவர்கள் பேசுகின்றபோது கூட ஒருவருக்கு டிஸ்கிரிமி
னேஷன், ஒருவருக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது இன்னொரு
வருக்கு குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்
னார்கள். அப்படியில்லை, அந்தந்தப் பிரச்சினைகளினுடைய
தன்மைகளுக்கு ஏற்ப Extension of parole given by the Govern-
ment is purely discretionary, of course taking into account the
negative and positive aspects of the claims they are making.

ஆனாலும்கூட மாசிலாமணியை உதாரணமாகக் கூறினார்.
மாசிலாமணியை உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரகுமான்கான் கூறியது மிகத் தவறு என்பதை பாபு ஜனார்த்
தனன் அவர்களைக் கேட்டாலே சொல்வார். முன்னாள் சபா
நாயகர் புலவரைக் கேட்டாலேகூட அவர் உங்களுக்குச் சொல்
வார். அவர்களுக்காக நீங்கள் பரோலுக்கு ஒருமுறை கூட
என்னிடம் வரவில்லை. உங்கள் சார்பிலே ஒருவேளை அவர்கள்
பலமுறை வந்திருக்கிறார்கள். மாசிலாமணியைப் பொறுத்த
வரையிலும் அவருடைய மனைவியும் பாபு கோவிந்தராசன்
போன்றவர்கள் எல்லாம் பலமுறை வந்து அவர் எத்தகைய
குற்றத்தைச் செய்தார் என்பதற்காக நாங்கள் போகவில்லை,





மனிதாபிமானம். அந்தக் கொலைக் குற்றத்தைப்பற்றி இந்த
அவை நன்றாக அறியும். அந்த மாணவர் எங்கள் இயக்கத்தைச்
சேர்ந்த மாணவர் கொலை செய்யப்பட்டார் என்பது இந்த
அவைக்குத் தெரியும். ஆனாலும்கூட, அவர் இந்த ஆட்சி
பொறுப்புக்கு வந்த பிறகு அரசு மூலம் வாங்கியது எல்லாம்
சட்டப்படி 90 நாட்கள் பரோலில் சென்றிருக்கலாம். கீழே உள்ள
அதிகாரிகள் தரக்கூடிய பரோல் எல்லாம் முடிந்த அளவுக்குத்
தந்துவிட்டார்கள். மாசிலாமணியின் மனைவி உடல்நலம் சரியாக
இல்லாமல் இருந்தபோதும், கர்ப்பிணியாக இருந்தபோதும் பின்
னரும் பரோல் தரவேண்டுமென்று வந்த அடிப்படையில் அவருக்கு
அடுத்தபடியாக மட்டும் 132 தினங்கள் பரோல் கொடுத்திருக்கி
றோம் என்ற உண்மை மாசிலாமணிக்கே தெரியும். ஒரு முறை
பரோல் வேண்டுமென்று கோரி வந்தபோது அடிக்கடி வந்து
விடுகிறீர்களே 10 ஆண்டுகள் கம்ப்ளீட் ஆகவேண்டும், இல்லை
யென்றால், Your period to be in prison will get extended
in view of the provision of the Prison Manual. என்று
சொல்லி அடிக்கடி கேட்கவேண்டாம், தேவை
யான நேரம் வாருங்கள் என்று சொன்னபொழுது அதற்கு
இசைந்து பெற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் முரசொலிப்
பத்திரிகையிலே வருகிறது. திரு. ரகுமான்கானுக்குச் சொல்ல
வேண்டியது கடமை என்று கருதுகிறேன். மாசிலாமணியினுடைய
மனைவியின் வேண்டுகோளுக்கு ஏற்ப பரோல் கொடுத்துவிட்
டோம். உடனடியாகப் பத்திரிகையில் எழுதுகிறார். சட்ட
அமைச்சர் என்று போடவில்லை, துறை அமைச்சர் கோட்டைக்
குச் சென்றவுடன் தன்னுடைய மனைவிக்கு தொலைபேசியில்
விசாரிக்கக்கூடிய அளவுக்குப் பாசம் இருக்கிறபோது ஒரு கைதி
தன்னுடைய மனைவியினுடைய நலனில் அக்கறையில்லாமல்
இருப்பாரா என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா என்று எப்
போது எழுதுகிறார் என்றால் விதியை மீறி 60 நாட்களுக்கு
பரோல் தந்து மாசிலாமணியின் மனுவைப் பெற்றுக் கொண்டு
புலவர் கோவிந்தன் அவர்களும் பாபு கோவிந்தராசன் அவர்களும்
ஜனார்த்தனன் அவர்களும் வந்துவிட்டு இப்போது வேறு யார்
மூலம் வந்துவிட்டு நான்கு நாட்களுக்குத் தாமதம் ஆனால் 5-வது
நாள் பத்திரிகையில் எழுதுகிற பண்பு சரியான பண்பல்ல என்
பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த
வரைக்கும் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், அந்த இயக்கத்
தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையை கைதி பற்றி நாம்
கருதுவதே இல்லை. அந்த அடிப்படையிலே மாசிலாமணியே
பாராட்டியிருக்கிறார்.

தட்சிணாமூர்த்தி பற்றி திரு. ரகுமான்கான் பேசுகின்றபோது
சொன்னார். தட்சிணாமூர்த்தி திருமணத்திற்காக பரோல்
கேட்டபோது கொடுத்தோம். எக்ஸ்டன்ஷன் கேட்டபோது
கொடுத்தோம். உங்களுடைய பத்திரிகையாகிய குங்குமம
பத்திரிக்கையிலேயே வந்து எந்த அளவுக்கு பரோல் முறையில்
இந்த அரசு தாராளமாக இருக்கிறது என்பதைச் சொல்லி

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 31

என்னையும் தனிப்பட்ட முறையில் பாராட்டி தட்சிணாமூர்த்தி எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் படித்துப் பார்க்காமல் ஏதோ சொல்லவேண்டுமென்பதற்காக அவையில் சொல்வது வேறு. நடைமுறையில் இருப்பது வேறு என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தில் ஒரு சிறு சந்தேகம். மாசிலாமணியைப் பொறுத்தவரையிலே விதி விலக்குக்கு உட்பட்டு அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் உங்கள் மூலம் நான் சொல்ல விரும்புகிறேன் ஏறத்தாழ அவர் மொத்தம் பரோலில் வந்து இருப்பது 18 முறைதான்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலி லேயே படித்து விட்டார் நான் செவிமடித்துக் கேட்டேன். குறித்து வைத்துக் கொண்டு இருக்கிறேன். இப்போது பதிலைச் சொல்கிறேன். (குறுக்கீடு) அரசின் கணக்கு தவறு இல்லை என்பதைதான் அரசின் சார்பில் நான் சொல்கிறேன். கணக்கு தப்பு இல்லை உங்களுக்குக் கிடைத்த தகவல் தவறான தகவல் அவருக்கு கொடுத்து இருக்கவேண்டிய பரோல் 90 நாட்கள். நாங்கள் கொடுத்து இருக்கின்ற பரோல் 207 நாட்கள் விடுப்பை தந்து மாசிலாமணி அவர்களை நீங்கள் இந்த அவைக்கு அழைத்து வந்து கேட்டால்கூட நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டை அவர் சொல்லமாட்டார். அவர் மனச்சாட்சி நிரம்பியவர் என்று நான் கருதுகிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்த வரைக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத்தலைவர் அவர்களே. விதிகள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும் என்பது தான் என்னுடைய பிரச்சினை. நான் சொல்ல விரும்புவது முருகையன் எம். பி. கொலை செய்யப்பட்டது. அவரை ஒரு அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த சுபாஷ் சந்திரபோஸ் செய் தார். அவருக்கு 5 வருடம் முடியவில்லை. ஆயுள் கைதி. அவருக்கு 6 மாதத்திற்கு மேல் பரோல் தரப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத்தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அ.இ.அ.தி.மு.க. காரர் ஒருவரை கொலை செய்து விட்டார். அவருக்கு 6 மாதம் பரோல் என்பது தவறானது. அது என்ன என்று விசாரிக்கிறேன். ஆனால் அப்படி சொல்கிறபோது மாசிலாமணிக்கு விதியை மீறி தளர்த்திக் கொடுத்து இருக்கும் போது கொடுக்கவில்லை என்ற ஒரு தவறைச் சொல்வது என்ன நியாயம். தட்சிணாமூர்த்திக்கு கூட கொடுக்கவில்லை என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர் குங்குமம் பத்திரிக்கையில் என்னை பாராட்டி அவர் எழுதி



1984 மார்ச் 31] [திரு. சி. பொன்னையன்]

இருக்கிறார். யாருக்கு கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறாரோ அவரே என்னைப் பாராட்டி எழுதி யிருக்கிறார்கள். எனவே, அரசியலுக்காக எதையும் சொல்ல வேண்டாம் நடைமுறையில் இருக்கின்ற உண்மையை தான் பேசவேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும் எந்த இயக்கத்தைச் சார்ந்தவராக யாராக இருந்தாலும் சரி கைதிகளுக்கு வந்து தங்களுக்கு P.role Extension கொடுப்பதிலே அரசு எதையும் இழந்துவிடவில்லை It purely a matter bassed on humanitarian approach அந்த முறையில்தான் இந்தப் பிரச்சினைகளை நாங்கள் அணுகு கிறோம் என்பதை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது State Advisory Committees of prisons consisting of public repre-sentatives i.e! M.L.A.s என்ற ஒரு கருத்தைக்கூட சொல்லி நான் ஏற்கனவே இதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறேன். இதிலே யார்? யார்? இந்த குழுவில் போட்டு அந்தக் குழுவை அமைப்பது என்ற குறிப்பை ஒவ்வொரு மாவட்ட கலெக்டரிடமிருந்து பெறப்பட்டு இருக்கிறது. விரைவில் அது குறித்த அறிவிப்பை அரசு செய்யும் என்பதை நான் அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் பரோல் என்று பேசிக் கொண்டு இருக்கும்போதே நான் நினைத்தேன் நம் நாட்டில் பரோல் என்ற வார்த்தையே கிடையாது.

Parole is a term used in England and America. இங்கே நாம் வீவு என்பதைத்தான் பயன்படுத்த வேண்டும். Parole means leaving out a prisoner after he has completed 2/3rd of the period of sentence. அதாவது மதித்து போய் விட்டு நன்னடத்தையில் உள்ளே வந்து விடுவேன் என்று அர்த்தம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோதும் மற்றவர்கள் பேசுகிறபோதும் 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கைதிகள் அதாவது Regarding those who have completed 10 years in the crucial date of 19-12-78. நாம் ஏற்கெனவே இந்த அவையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றி யிருக்கிறோம். மாநில அரசினுடைய அதிகாரத்தை மத்திய அரசு பறித்து விட்டது. அது தவறானது. மீண்டும் தரவேண்டும் என்று சட்டத்தை இயற்றி நாம் மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். நாம் மட்டும் அல்ல. மற்ற சில காங்கிரஸ் இயக்கங்கள் ஆளுகின்ற மாநிலங்களைச் சார்ந்தவர்கள்கூட மாநில அரசுக்கு இதை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், மாநில அரசுக்கு அதி காரம் வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். அந்த அடிப்

படையில் Those who have completed ten years. அந்த பழைய சட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கின்ற வர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்களுக்கு பரோல் அட்வைசரி போர்டு மூலமாக விபரலாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய ஆணை. 15 தினங்களுக்கு ஒரு முறை அட்வைசரி போர்டு கூட வேண்டும் என உத்திரவிட்டு இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பில் இருக்கிறபோது பல்வேறு பணிகளில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறகாரணத்தாலோ என்னவோ இதை அடிக்கடி கூட்டாமல் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். எனவே அது இன்னும் கடுமையான நடவடிக்கை எடுத்து இந்தக் சிஸ்டத்தை How to revamp the existing system so as to enable the Advisory Boards meeting being conversed within a fortnight. என்பதை ஆய்ந்து அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் கூட அவர் பேசுகிற போது மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் புறப்பட்டு கொண்டே இருக்கிறார் கள். ஒன்றைச் சொன்னார்கள்.

(பிற்பகல் 2-00).

ஏதோ பேசுகிற போது, ஏதேனும் சொல்ல வேண்டுமென் பதற்காக, திராவிட பாரம்பரிய இயக்கத்திலேயிருந்து வந்தவர் தான்; திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்துதான் நாங் களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை அமைக்க வேண்டிய நிலைக்கு உருவாக்கப்பட்டோம். அவர் சொன்னார், சினிமாவைப் பார்த்து அரசியலுக்கு வந்தேன் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள் என்று ஒரு வார்த்தையைச் சொல்லி, ஏதோ சொல்ல வேண்டுமென்ற நோக்கத்திலே சொன்னார்.

நான் சொல்லியிருக்கிறேன். நான் சொல்லியிருப்பது என்ன வென்றால், தந்தை பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் பரப்பிய கொள்கைகளை எல்லாம் அவர்கள் ஏட்டிலே பரப்பி னார்கள்; மேடைப் பேச்சிலே பரப்பினார்கள்; சினிமா மூல மாகவும் பரப்பினார்கள். என் போன்ற இளைஞர்கள் உள்ளத் தில் எல்லாம் திராவிடப் பாரம்பரிய உணர்வுகளைப் பரப்பு வதற்குக் காரணமாக இருந்தது மேடைப் பேச்சு, எழுத்து மட்டுமல்ல, திராவிடப் பராம்பரிய இயக்கத்தைச் சேர்ந்த அனை வரும் கண்டுபிடித்த சினிமா, நாடகம் என்பதனை நான் எடுத்துச் சொன்னேன்.

எங்களுடைய தலைவர் நடிகராக இருந்திருக்கலாம். உங் களுடைய தலைவரும் கலைஞர் தான் என்பதனைச் சொல்ல நான் விரும்புகிறேன். அவரும் கலைத் துறையிலே இருந்தவர்;



நாடகத்திலே இருந்தவர்; கதை எழுதியவர்; வசனம் எழுதிய வர். அண்ணாவின் கருத்தை கலைஞர் அவர்கள் ஒரு நாடகத் திலேயோ, ஒரு சினிமாவிலேயோ சொல்லுகின்றபொழுது, அண்ணாவின் கருத்து வருகின்றபொழுது, இளைஞர்கள் உள்ளங் களிலே அது ஏறினால், கலைஞர் மூலமாக அந்தக் கருத்து வந்தது, அண்ணாவின் கருத்தைச் சொன்னார்கள், ஏற்றுக் கொண்டோம் என்று சொல்வதில் தவறு இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நம் அடிப்படையை உணர்ந்து சொல்ல வேண்டுமென்பதற்காக அதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு ஆலோசனைகளை எடுத்துச் சொன்னார்கள். அரசைப் பொறுத்த வரைக்கும், Directorate of Prosecution என்ற ஒரு அமைப்பை நிறுவ வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் மாண்புமிகு உறுப் பினர்கள். அதை நிறுவ அரசு தக்க நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்லுகிறேன்.

அதைப் போல, வழக்குரைஞர்களுக்காக 'வெல்பேர் பண்ட்' ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அரசு ஏற்கனவே இதில் முடிவெடுத்திருக்கிறது. விரைவிலே வழக்குரைஞர்களினுடைய நலன் கருதி, ஒரு 'வெல்பேர் பண்ட்'' அவர்களுக்கு ஏற்பாடு செய்ய அரசு ஆணைகளை விரைவில் இட இருக்கிறது என்பதையும் நான் அவைக்கு எடுத்துச் சொல்லு கிறேன்.

என்னைப் பொறுத்தவரைக்கும் சில கருத்துக்களை மாண்பு மிகு உறுப்பினர்கள் சொல்லுகின்ற பொழுது, இதை ஏன் சொல்லு கின்றீர்கள் என்று நான் கேள்வி கேட்கவில்லை. காரணம், சில உண்மைகள் அரசுக்குத் தெரியாமல் இருக்கலாம். சில உண்மை கள், நடைமுறையில், அடிமட்டத்தில் என்ன நடக்கிறது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக இதை ஏற்றுக்கொள்ளவில்லை, அதில் தவறே நடக்கவில்லை, அதிகாரி கள் எல்லாம் சரியானவர்கள் என்ற அணுகுமுறையோடு நான் பிரச்னையை அணுகவில்லை. மக்களினுடைய நலனுக்காக, நாட்டினுடைய நலனுக்காக நல்ல ஆலோசனைகளைச் சொல்கிற பொழுது, குறைபாடுகள் எங்கே இருக்கின்றன என்று சுட்டிக் காட்டுகின்றபொழுது, அதைக் கேட்டு ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதுதான் நல்ல அரசினுடைய கடமை. அந்த அடிப்படையிலே உங்கள் நல்ல ஆலோசனைகளை எல்லாம் ஏற்று, இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 31

சேரன்மாதேவி கோர்ட் பற்றியும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர் க்ளுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தக் காலமோ ஜீ. ஓ. இஷ்யூ ஆகிவிட்டது. இன்னும் திறக்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கோருகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிரிமினல் புரொசிஜர் கோடு 433 (ஏ)யின்படி, ஆயுள் தண்டனைக் கைதிகளை 14 ஆண்டுக்குக் குறைவாக விட முடியாது என்று சட்டம் இயற்றப் பட்டு அது சரி என்று உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. அதை மீண்டும் உச்ச நீதிமன்றம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசு உச்ச நீதிமன்றத்தைக் கோருமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவரவர்களே, This is a legislative Power that vests exclusively with the Parliament. அது தான் அவர்கள் தற்போது திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நாம் சொல்லி, நாம் கொண்டு வந்திருக்கிறோம். மைய அரசைப் பொறுத்த வரைக்கும், மைய அரசு ஒரு முடிவை எடுத்தாக வேண்டும். மைய அரசினுடைய அனுமதி இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது. That falls in the concurrent list. அவர்களி னுடைய அனுமதியையும்பெற நமக்குத் தேவை இருக்கிறது Any provision of a legislation only when it is made repugnant to any of the exsisting provisionமைய அரசினுடைய அனுமதியில்லா மலே மாநில அரசு செய்ய முடியும். கிரிமினல் புரொசிஜர் கோடைப் பொறுத்தவரைக்கும் That is a legislation that is being legislated by the Parliament நாம் கொண்டு வருகின்ற திருத்தம், ஏற்கனவே பார்லிமெண்ட் கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தோடு ஒவ்வாத நிலை ஏற் படுகின்றபொழுது When that is repugnant to the provisions of the Central Act their assent is very much necessary. அதற்காகத்தான் இவைகளையும் வற்புறுத்தி வருகிறோம் ; செவி சாய்ப்பார் கள் என்று நம்புகிறோம். காரணம், சில காங்கிரஸ் மாநிலங் களும் இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கின்றன.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னையிலே இருக்கின்ற சிட்டி சிவில் கோர்ட்டுக்குச் சமமான அந்தஸ்து உள்ள நீதிமன்றங்கள்



1984 மார்ச் 31] [திரு. கு. பா. பழனியப்பன்]

தான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற சார்பு நீதிமன்றங்களெல்லாம். ஆனால், சென்னையிலே மட்டும் ஒரு வித்தியாசம் இருக்கிறதே. அதாவது, ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற் கொண்ட அளவில் இருக்கின்ற சிவில் வழக்குகளானாலும், அதைப் போல, Presidency Town Insolvents Act, Indian Succession Act, Divorce Act இது போன்ற சட்டங்களின் கீழேயும் இருக்கின்ற பல்வேறு வழக்கு கள் இங்கே நேரடியாக சிட்டி சிவில் கோர்ட்டில் போடாமல் உயர்நீதிமன்றத்தில் போடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகை யால், சிட்டி சிவில் கோர்ட் ஆக்டை, நம்முடைய சட்ட மன்றம் திருத்த வேண்டிய அளவிற்குத் திருத்தியும், மற்ற சட்டங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு திருத்தங்களைச் செய்வதற்கு வலியுறுத்தியும் செய்தால், இங்கே உயர்நீதிமன்றத்தில் அதிக மான வழக்குகள் தேக்கம் உள்ள நிலையை மாற்ற முடியும். இது குறித்து அரசாங்கம் என்ன கருதுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, If the valuable suggestion of the Hon. Member is implemented, the High Court will have to loose its power with regard to original jurisdiction என்ற முறையில் தான் இது தற்போது வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசினுடைய கொள்கை யைப் பொறுத்தவரைக்கும் எப்படி மற்ற நீதிமன்றங்களுக்கு no limit என்று இருக்கிறதோ அதைப் போலவே, சென்னை நகரத்திலே இருக்கிற நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரவேண்டு மென்று தான்முதலில் நினைத்தோம். அதை அரசு மீண்டும் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி வுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், ரா. கிருஷ்ணன் ஆகிய வர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற் றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் சு. பாலன், எம். ஆறுமுகம் ஆகியவர்களு டைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,05,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

[1984 மார்ச் 31

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், சு. பாலன், ரா. கிருஷ்ணன், தி.கா. நல்லப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,22,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1984. (மே.செ.)

(எ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 25/1984).

2. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 26/1984).



1984 மார்ச் 31]

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 9—4—1984 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

154. சென்னை, ஜெர்மன் தொழுநோய் சங்கத்திற்கு சொந்தமான இருபத்தொன்று வண்டிகளுக்கு வரி செலுத்துவதில் சலுகைகள் செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 20-1-1984 ஆம் நாளிட்ட 207 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

155. தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத்தின் 1979-80 ஆம் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை, [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

156. தமிழ்நாடு சர்க்கரை ஆலைக் கழகத்திடம் மதுரா சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்தை ஒப்படைப்பது குறித்து தொழில் துறையின் 27-12-1983 ஆம் நாளிட்ட 1972 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்

ஆங்கிலம்), [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுரா சுகர்ஸ் லிமிடெட் (நிறுவனத்தை கையகப்படுத்தல், மாற்றுதல்) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1983) 33 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

157. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

109. கோரிக்கை எண். 13— நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

110. கோரிக்கை எண். 14— தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984–85. (தமிழ், ஆங்கிலம்).

111. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகை தாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1984).

112. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1984).

113. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1984) நகலும் இணைப்பும்.

114. உடுக்குறியிடப் பெறாதப் வினாக்களும், விடைகளும், (ஐந்தாம் பட்டியல்.)



# இணைப்பு I

(654-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

## கொள்கை விளக்கக் குறிப்பு.

## மானிய எண். 13.

## நீதி நிர்வாகம் 1984–85.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. புதிதாக நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதின் பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு, நீதிமன்றங்களுக்குத் தேவையான இடவசதி உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாக தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் பின்வருமாறு:—

13 ஆம் எண். கோரிக்கையும், 'நீதி நிர்வாகம்' தொடர்பான மானியங்களும் இதன்கீழ் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவை குறிப்பதாகும் :—

(1) உயர்நீதிமன்றம், சென்னை.

(2) நொடித்தவர் சொத்தாட்சியர் உயர்நீதிமன்றம், சென்னை.

(3) செஷன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உள்பட) சிவில்.

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை.

(5) மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.

(6) சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள், சப்-டிவிஷனல் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள்.

(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

(8) அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள், மற்றும் தொழில் நடுவர் மன்றம், சென்னை.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) 1976 ஆம் ஆண்டு சட்டத்தின்படி செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக்கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு தொடர்புடைய துறைக் கணக்குகளில் பற்று எழுதத் தக்கதாகும்.

3. நீதிமன்றங்கள், அலுவலகங்களிடையே பின்வருவனவற்றைப் பற்றிய செலவு, ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனுமதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
|---|---|
| 1. உயர்நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், மூல வழக்குகள் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத்துறை, சட்டத்துறை அறிவிப்பாளர்கள் மற்றும் பணியாளரமைப்பு புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் குறித்த தனி அலுவலர் ஷெரிப், உயர் நீதிமன்றம், சென்னை, பணியாளர்கள்). | 1. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ் நீதி மன்றங்கள். |
| 2. நொடித்தவர் சொத்தாட்சியரும் அவரது பணியாளரமைப்பும். | 2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை. |
| | 3. மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை. |
| | 4. குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள். |
| | 5. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை, |
| | 6. அரசு சட்ட ஆலோசகர்கள் வழக்குரைஞர்கள். |
| | 7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையில் தொழில் நடுவர் மன்றம். |
| | 8. முதன்மை பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை. |





4. சென்னை உயர்நீதி மன்றம்.—இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர்நீதி மன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

5. உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள், சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000-க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளை பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி (பொறுப்பு) மற்றும் ஒரு தனி நீதிபதி உட்பட 19 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்கு தலைமை நீதிபதி ரூ. 4000-மும் ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும் ரூ. 3,500-ம் ஊதியமாக பெறுகின்றனர். நீதிபதிகளின் ஊதியம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர் மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர்

உள்ளனர். உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத்துறை, நூலகம் வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நடைமுறை (?) அசல்தரப்பு நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி வழக்குகள்) பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர் பிரிவு, நேர்முக உதவியாளர் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத்துறைப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, மற்றும் ஆவணப் பிரிவு ஆகியவையாகும். புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின்) தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு, பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையைத் திரும்பப்பெறுகிறது.

நீதி வ்ழங்குவதோடு மாநில நீதித்துறையின் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள்— மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசுச் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப் பட்டுள்ள வழக்குரைஞர்கள் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செலவுகள் உட்பட அரசு வழக்குரைஞரால் செய்யப்படுகிற செலவுகளையும் ஏற்க இத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஒருவரும் அரசு மாநிலத் தலைமை வழக்குரைஞர் ஒருவரும் உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். அரசு வழக்குரைஞர் ( Government Pleader ) தவிர ஆறு கூடுதல் அரசு வழக்குரைஞர்களும் ( Addl. Govt. Pleaders ), எட்டு அரசு வழக்குரைஞர்களும் (சிவில்) ஏழு வழக்குரைஞர்களின் (வரைவு) உதவியுடன் எதிர் ஆணை உறுதி ஆவணம் தயாரிக்க ஒரு சிறப்பு அரசு வழக்குரைஞரும் உள்ளனர். வனத்துறை வழக்குகளுக்காக ஒரு அரசு வழக்கறிஞர் உள்ளார். குற்றவியல் வழக்குகளுக்காக குற்றவியல் வழக்கு நடத்துநர் ஒருவரும், ஒரு கூடுதல் வழக்கு நடத்துநர் மற்றும் மூன்று அரசுத் தரப்பு வழக்கறிஞர்களும் (குற்றவியல் வழக்கு) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். இது தவிர மாநகர அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஒ:ருவர் மற்றும் மாநகர கூடுதல் வழக்கு நடத்துநர் இருவர், மாநகர அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் மற்றும் மாநகர் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர், இருவர் ஆகியோர் மாநகரிலுள்ள சட்ட அதிகாரிகளாவர். வெளியூர்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்கள் அரசு குற்றவியல் வழக்கு, நடத்துநர்கள் மற்றும் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றி வருகின்றனர்.



மாநகரிலும், பிற இடங்களிலும் உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை I, II) மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழு நேர அரசுப் பணியாளர்களாவர்.

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவு படுத்த வேண்டுமென்ற நோக்குடன் ஒவ்வொரு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கும் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II) ஒருவரை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாவட்டங்களில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். மாநகரில் அவர்கள், சென்னை காவல் துறை ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கென்று தனியாக ஒரு துறைத் தலைவர் தற்போது இல்லை. '' குற்றவியல் வழக்கு நடத்துனர் துறை இயக்குநர் '' என்னும் தனியானதொரு துறைத் தலைமையை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு ஒன்று தற்போது அரசின் ஆய்வில் உள்ளது. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும் சார் நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணி ஆற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணி பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் தொடர் புரிமைச் கட்டணம் பெறுவதற்கு இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்கு நடத்துனர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவினம் தற்போது "214. ஏ. நீதி நிர்வாகம் ஏ. எச். சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்-ஏ.சி., அரசு உரிமையில் வழக்கு நடத்துநர்-04 அலுவலக செலவுகள் '' என்பதன் கீழ் பற்று வைக்கப்பட்டு வருகிறது.

9. 1984–85 ஆம் ஆண்டில் '' சட்ட அதிகாரிகள் '' என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவுத் தொகை ரூ. 89,07,000 என்று மதிப்பிட்டுள்ளது. மேற்சொன்ன செலவில் வெளியூரிலுள்ள I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர்களின் சம்பளமும், படியும் பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள்

(வெளியூர்) அதாவது I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள
அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் செலவு 1981–82
ஆம் ஆண்டு முதல் '' ஏ. எச். சட்ட ஆலோசகர்கள். வழக்குரை
ஞர்கள் '' என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

10. அரசு பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்
தாட்சியர்) சென்னை/சென்னை, அரசு பொறுப்பு சொத்தாட்சியர்
(பொறுப்பு சொத்தாட்சியர்) மாவட்ட நீதிபதி பதவி தரத்தில்
உள்ள ஒரு அதிகாரியாவார். அவருக்கு உதவியாக, துணை அரசு
பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) ஒருவர்
உள்ளார். அவருடைய சம்பள விகிதம் ரூ. 750-50-1,350 ஆகும்.
இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் மரண
மடைந்தவர்களின் சொத்துக்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றை
கவனித்து வருகின்றனர். அவர்கள் அரசு பொறுப்பு சொத்
தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்தி
லும் உள்ள விதித்துறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்
கப்படும் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதி
காரிகளுக்குத் தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக
ரூ. 600—30—750—35—890—40—1,050 என்ற சம்பள விகிதத்
தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது. பட்டயக்
கணக்கு கல்வித் தகுதியுடைய சிறப்புக் கணக்கர் பதவி ஒன்றும்
இவ்வலுவலகத்தில் உள்ளது.

1984-85 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ. 4,48,000
செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

11. பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் : இம்மாநகரில்
பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்,
தலைமை கூடுதல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், பெருநகர்
நகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உட்பட 25 பெரு
இரு மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரண்டு நடமாடும் நீதிமன்றங்
களின் மாஜிஸ்டிரேட்களாகப் பணியாற்றுகின்றனர். செயல்பட்டு வருகின்றன.
தலைமை மாஜிஸ்டிரேட் இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி
பதவித்தரத்தில் இருப்பவராவார். பெருநகர்
மாஜிஸ்டிரேட் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவரா
வார். பொருளாதார குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த
மாவட்ட நீதிபதிகள் பதவித்தரத்தில் இரண்டு கூடுதல் தலைமை
பெருநகர் மாஜிஸ்டிரேட் பதவிகள் உள்ளன.

இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம்
பெருநகர் மாஜிஸ்டிரேட்களும் சார் நிலை நீதிபதிகள் பதவித்
தரத்தைச் சேர்ந்தவராவர். ஏனைய அனைத்து பெருநகர்
மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்
தோராவர். பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகள் சென்னை மாநகரி
லுள்ள காவல் நிலையங்களையொட்டி அதிகார வரம்பைச்
செலுத்துகின்றனர்.



1984–85-ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள குற்றவியல் நீதி மன்றங்களின் செலவினம் ரூ. 36,87,000 ஆகுயிருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக, எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும் சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இது குறித்து ஏற்படும் செலவு முதற்கண் மாநில அரசால் ஏற்கப்படுகிறது, பின்னர்இச்செலவுத் தொகை இரயில்வே துறையிடமிருந்து திரும்ப பெறப்படுகிறது.

12. மாநகர் சிவில் நீதிமன்றம், சென்னை : சென்னை, மாநகர சிவில் நீதி மன்றத்தில் 29 நீதித்துறை அதிகாரிகள் (9 மாவட்ட நீதிபதிகள்-19 சார்நிலை நீதிபதிகள்) மாநகர் சிவில் நீதிமன்றத்தில், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் பதிவாளர் ஒருவர், உள்ளனர். பதிவாளர் நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர் சிவில் நீதி மன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் முழுவதுமாகும். 1,00,000 ரூபாய் வரை பணஞ்சார்ந்த அதிகார வரம்பையும்; 30,000 ரூபாய் வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும், சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் கொண்டதாயுள்ளது. சென்னைக் கோட்டத்தின் ( Division ) செஷன்ஸ் நீதி மன்றமாகவும் இந்த மாநகர் சிவில் நீதி மன்றம் செயல்படுகின்றது. குற்றவியல் சட்ட திருந்தச் சட்டத்தின் கீழ் வழக்குகளை ( C.l nder c.s.s ) விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம், சென்னை மாநகர் சிவில் நீதி மன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர் சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், 1984–58 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 40,95,000 ரூபாய் செலவு ஆகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

13. மாவட்டங்களிலுள்ள சிவில் நீதிமன்றங்கள் : மாநிலத்தில், மொத்தம் 16 மாவட்ட நீதி மன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென் ஆற்காடு, இராமநாதபுரம், வட ஆற்காடு, மதுரை (தெற்கு), பெரியார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் மாவட்ட-செஷன்ஸ் நீதி மன்றமும் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. அந்தந்த கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செஷன்ஸ் நீதிபதிகளாக செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டி விபத்து கோரிக்கைகள் சட்டம் போன்ற தனி சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டத்தின் சார்நிலை சிவில் நீதி மன்றங்களையும்

தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்களையும்,
மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்
புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள் பக்கத்தி
லுள்ள மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மாவட்டங்களில்
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை
விசாரணைச் செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதி
களாக செயல்படுகின்றனர். இந்த நீதிபதிகள் ரூ. 30,000 வரை
யிலும் மேல் முறையீட்டு சிவில் அதிகார வரம்பு கொண்டவர்களா
யுள்ளனர்.

மேலும், இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ்
வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட செஷன்ஸ் நீதி
பதி பதவித் தரத்தில் ஆறு கூடுதல் நீதி மன்றங்களை சென்னை,
தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம்
ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982-ஆம் ஆண்டு ஆகஸ்டு
மாதம் அனுமதி வழங்கியது. இது தொடர்பாக செலவினம்
" 214ஏ, நீதி நிருவாகம் " என்ற தலைப்பின் கிழ் " ஏ.இ.
குற்றவியல் நீதி மன்றங்கள் ' என்பதன்கீழ் பற்று வைக்கப்படு
கிறது".

14. சார்நிலை நீதிமன்றங்கள் : இம்மாநிலத்தில் 66 சார்
நிலை நீதிமன்றங்கள் (Sub courts ) உள்ளன. இவற்றில்
கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனை
வரி மேல் முறையீட்டு நடுவர் மன்ற கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த
நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதிபதிகள்
அசல் தரப்பு வழக்குகளில் வரம்பு ஏதுமின்றி பணம் சம்மந்தப்
பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரமுடைய
வராவர். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதி
மன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்
15,000 ரூபாய் மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும்
அதிகாரம் உள்ள மாவட்ட முன்சீப்புகள் வழங்கும் தீர்ப்புகளுக்
கெதிராக செய்யப்படும் மேல் முறையீடுகளையும் விசாரித்து
தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவார். சார் நிலை நீதிபதி
களே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும், தற்போது
சார் நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி
விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன.
10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்
நிலை நீதிபதிகள் மோட்டார் வண்டி விபத்து உரிமை கோரிக்கை
நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர் என்பதோடு இந்
நடுவர் மன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் : இம் மாநிலத்தில்
மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 129 உள்ளன. அத்துடன்,
மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்
டிரேட்டு நீதிமன்றங்கள் 6-ம், மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்
துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 2-ம் உள்ளன,



1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ஆம் நாளிலிருந்து ரூ. 15,000
வரையிலும், பணஞ்சார்ந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு
வழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சீப்கள் பெற்றுள்ளனர்.
ஒவ்வொரு மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களும் வரையறுக்கப்பட்ட
அதிகார வரம்பை கொண்டுள்ளன. இவர்கள் ரூ. 500 வரையிலுள்ள
சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும்
இந்த நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட
பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்
படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்
வோர் ஆகிய பணியாளர்கள் அமைப்பு உட்பட, வெளியூர்களி
லுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள்.
மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவைகள் தொடர்பாக
1984-85-ஆம் ஆண்டில் 6,49,14,000 ரூபாய் செலவு ஏற்படு
மென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செலவில், அதிகாரிகளின்
சம்பளம், படிகள், அரசுப்பணி அஞ்சல் வில்லைகள் வீதங்கள்,
வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள் குறிப்
பிட்ட கால முறை வெளியீடுகள், மின் கட்டணம், தொலைபேசி
கட்டணம், மேசை நாற்காலிகள் போன்றவை. உணவுக் கட்டணம்
செஷன்ஸ் நீதிமன்றங்கள் முதலியவற்றிற்கும் சாட்சியம் அளிக்க
வர வேண்டிய சாட்சிகளுக்கு வழங்கத் தக்க போக்குவரத்துக்
கட்டணம் போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், ஆகிய இடங்களி
லுள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்கள் : சென்னையில்
நான்கு தொழிலாளர் நல நீதிமன்றங்களும், மதுரையில் இரண்
டும். கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும்
அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர்
மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதி
மன்றங்கள் தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகள்,
மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசு
அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும் தரப்பினர் தாக்கல்
செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும், தொழிலாளர் நல நீதி
மன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றங்
கள் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும், முகாம் நீதி மன்றங்
களை அமைத்து, அவரவரது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதி
களில் எழும் தொழிலாளர் தகராறுகளையும், கோரிக்கை மனுக்
களையும் தீர்த்து வைக்கின்றனர்.

தொழிலாளர் நல நீதி மன்றங்கள் தொடர்பாக ஏற்படும்
செலவு 13-ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் " 287ஏ.
தொழிலாளர் நலம்-வேலைவாய்ப்பு " என்ற தலைப்பின் கீழ்
பற்று வைக்கப்படுகிறது.

[1984 மார்ச் 31

சென்னை, தொழிலாளர் நல நீதி மன்றங்கள், தொழில்
நடுவர் மன்றங்கள் தொடர்பாக 1984-85 ஆம் ஆண்டில்
மொத்தம் ரூ. 12,03,000 செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்
பட்டுள்ளது.

17. சிறு வழக்கு நீதி மன்றம், சென்னை : மாவட்ட நீதிபதி
பதவித் தரத்தைச் சேர்ந்த தலைமை நீதிபதியே இந்த நீதி மன்
றத்தின் நீதிபதியாவார். சார் நிலை நீதிபதி (Sub Judg ) பதவித்
தரத்தைச் சேர்ந்த 6 நீதிபதிகளும், மாவட்ட முன்சீப் பதவித்
தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும் உள்ளனர். மாவட்ட முன்சீப்
பதவித் தரத்தைச் சேர்ந்த பதிவாளர் ஒருவர் உள்ளார். இவரே
நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கிறார். குறிப்பிட்ட சில நிறை
வேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித் துறை
அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர
சிறு வழக்கு நீதி மன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை
விசாரிக்கும் அதிகாரத்தை தலைமை நீதிபதியும் இதர நடுவர்
களும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின்
கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக V-ஆம்
நீதிபதி பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்
தகை-வாடகைக் கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு
அதிகாரிகளாக VI மற்றும் VII-ஆம் நீதிபதிகள் பணியாற்று
கின்றனர். VIII-லிருந்து XIV வரையிலான நீதிபதிகள்
சென்னை மாநகரத்தின் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிகளாகப்
பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதியும் II, III, IV நீதி
பதிகள், மற்றும் VI, VII-ஆம் நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்
பாட்டு மேல் முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அதி
காரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்
பாக 1984-85-ஆம் ஆண்டில் ரூ. 23,65,000 செலவு ஏற்படும்
என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள்—இனாம் எஸ்டேட்டுகள்
ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு பகிர்ந்
தளிக்கும் பணிக்காக திருச்சிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்தி
லும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உள்-சிறு தலைப்
பில் கணக்கெழுதப்பட்ட 39,000 ரூபாய் செலவுத் தொகையும்
மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் :

(i) நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் :
இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்
கள் 14 உள்ளன. இவற்றுடன் பொருளாதாரக் குற்றங்களை
விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திரு
நெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும்,
மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்
டிரேட்டு நீதி மன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை
விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி



1984 மார்ச் 31]

மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இந் நீதி மன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார் நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார் நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். இந் நீதிபதிகள் தங்களுக்குரிய சம்பளத்தோடு திங்கள் ஒன்றுக்கு 50 ரூபாயை சிறப்பு ஊதியமாகப் பெறுகின்றனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் விதித்துறைகளின் கீழ் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகள் அந் நீதி மன்றங்களால் மேற்கூறிய நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் i நீதித் துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 20 உள்ளன. இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகள் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராக செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை

(iii) நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் : மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக 21 கூடுதல் நீதி மன்றங்கள், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக 4 கூடுதல் நீதி மன்றங்கள், வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக 3 கூடுதல் நீதிமன்றங்கள் ஆகியவைகள் உட்பட மொத்தம் 57 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இந்த நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் முதல் வகுப்பு வழக்குகளை முடிவு செய்வதில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.

(iv) நீதித்துறை இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்கள் : நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 145 உள்ளன. இந்த நீதி மன்றங்களிலுள்ள மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்
திற்கும் 1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 3,49,93,000 செலவு
ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர, பயணச் சீட்டு இன்றி பயணம் செய்வது
போன்ற குற்றங்களை, இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ்
விசாரணை செய்ய, வடாற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர்
மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி
ஆகிய மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதி
மன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்
களுக்குரிய செலவு, தொடக்கத்தில், மாநில அரசால் செய்யப்
படுகிறது. பின்னர் சென்னை, மாநிலக் கணக்குத்துறைத்
தலைவர் மூலமாக இரயில்வே துறையிடமிருந்து வசூலிக்கப்
படுகிறது.

20. தமிழில் சட்ட இதழ்கள்: ''தீர்ப்புத் திரட்டு'' என்னும்
தமிழ் சட்டத் திங்கள் இதழ்ஒன்றை உயர்நீதிமன்றம்வெளியிட்டு
வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை-2 பதவித்
தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், சார்நிலை நீதிபதி பதவித்
தரத்தில் கூட்டுப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவி பதிப்பாசிரி
யர்கள், சுருக்கெழுத்துத்தட்டச்சர், படிதிருத்துபவர், அடிப்படை
பணியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி
அளித்துள்ளது. தமிழ்நாடு சட்ட இதழ் தலைமைப் பதிப்பாசிரி
யர், அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளக்
படிகள் குறித்த செலவு ''214ஏ.நீதி நிர்வாகம்—ஏஜே. ஏனைய
செலவு—ஏ.ஜி. சட்ட இதழ் வெளியிடுதல்'' என்னும் தலைப்பில்
பற்றெழுதப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டுக்கான செலவு
ரூ. 3,83,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
மாதாந்திர சட்ட இதழ் (தீர்ப்பு திரட்டு) வழக்கறிஞர்களுக்கும், தமிழ்நாடு
பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 5 என்ற மலிவு விலையில்
விற்பனைக்குக் கிடைக்கிறது.

21. நீதிமன்றக் கட்டிடங்கள்: உயர்நீதிமன்றக் கட்டிடங்
களையும் உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்
களையும் பராமரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண். மானியக்
கோரிக்கையில் ''259, பொதுப் பணிகள்'' என்ற கணக்குத்
தலைப்பின்கீழ் காட்டப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில்
செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 8,35,000 ஆகும்.

22. அரசு 1983-84-ம் ஆண்டில் பின்வருவனவற்றுக்கு
அனுமதி வழங்கியுள்ளது—

(i) மதுரை (வடக்கு) மாவட்டம், பழனியிலுள்ள மாவட்ட
முன்சீப் நீதிமன்றத்திற்கு ரூபாய் 10.92 இலட்சம் மதிப்பீட்டுச்
செலவில் நீதிமன்றக் கட்டிடம் கட்டுதல்.



(ii) கோபிச்செட்டிப்பாளையத்தில் உள்ள உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றக்கட்டிடம் மற்றும் மாஜிஸ்டிரேட்டுக்கான குடியிருப்பு ஆகியவைகளை ரூ. 9.11 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டுதல்.

(iii) வள்ளியூரில், உட்கோட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டிடம், அதனுடன் தொடர்புடைய நீதிபதிக்குரிய குடியிருப்புக்களையும் ரூ. 9.48 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டுதல்.

(iv) ஈரோடு, சூரம்பட்டியில் ரூபாய் 11.20 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 25 வழக்குரைஞர் அறைகள் கட்டுதல்.

(v) திருச்செங்கோட்டில் அண்மையில், அமைக்கப்பட்ட மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கூடுதல், மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஆகியவைகளை அமைப்பதற்கு திருச்செங்கோடு பனைவெல்லச் சங்கத்திற்குச் சொந்தமான 3.38 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தையும், கட்டிடத்தையும் ரூபாய் 2.86 இலட்சம் செலவில் வாங்குதல்.

(vi) தற்போது வேலூர், கோட்டை வளாகத்தில் அமைந்துள்ள சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்களை, வேலூர், சத்துவாச்சாரி வீட்டுவசதிக் குடியிருப்பில் அமைப்பதற்காக வாங்கப்பட்ட 10.22 ஏக்கர் நிலத்தின் முன்னாள் உரிமையாளருக்கு 1980-ம் ஆண்டு ஜூன் திங்களில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு இருந்த இழப்பீட்டுத் தொகையான ரூபாய் 9.30 இலட்சத்துடன் கூடுதலாக ரூபாய் 5.12 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாகவும் வழங்குதல்.

23. மதுரையில் உயர் நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல்:—மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்து 1972-ம் ஆண்டிலேயே பரிசீலிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம் பிரிவின்படி உயர் நீதிமன்றத்தினை அமைக்கும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரியது. எனவே, இம் மாநிலத்தில் தென் மாவட்டங்களிலுள்ள வழக்குத் தொடுக்கும் பொது மக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில் உயர்நீதி மன்றத்தின் ஆயம் அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 1978-ம் ஆண்டிலேயே மைய அரசுக்கு இம் மாநில அரசு கடிதம் எழுதியது. அண்மையில் மைய அரசு நகர தலைநகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர்நீதி மன்றங்கள் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்த அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்ச நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றினை நியமித்தது. திரு. ஜஸ்வந்த்சிங் தலைமையிலான குழு சென்னை நகரத்துக்கு வருகை தந்து 28-1-1984-ம்நாளன்று இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடனும் 30-1-84, 31-1-1984 ஆம்

நாட்களில் உயர்நீதி மன்றத்தின் பிரதிநிதிகளுடனும் கலந்துரை
யாடியது. இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் இது
குறித்து மைய அரசு முடிவு ஒன்றினை எடுக்கும்.

24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை
நிறுவுதல்:—(Constitution of a bench of the Supreme Court)
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்படி
உச்ச நீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகார
வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை, நிர்ண
யித்தல் ஆகியவை மத்திய நாடாளுமன்றத்துக்கு மட்டுமே
உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்
130 ஆம் பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலு
டன் இந்திய தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக் கூடிய
வாறு டில்லியில் அல்லது வேறு பிற இடம் அல்லது இடங்களில்
உச்ச நீதிமன்ற ஆயம் அமையும். சென்னையில் உச்ச நீதி மன்றத்
தின் ஆயம் ஒன்றினை நிறுவுவதற்கு மைய அரசின் இசை
வினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்
பாக விரைவில் முடிவு ஒன்றினை எடுக்குமாறு மாநில அரசு மைய
அரசைக் கேட்டுக்கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச
நீதிமன்றத்தின் ஆயம், நீதிபதியின் குடியிருப்புக்கான கட்டிடங்கள்
போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் இம்
மாநில அரசு மைய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்
பாக செயற்குறிப்பு இந்திய தலைமை நீதிபதிக்கு அனுப்பப்
பட்டுள்ளதாக மைய அரசு 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்
இம் மாநில அரசுக்குத் தெரிவித்தது. இந்திய தலைமை நீதிபதி
யின் பரிந்துரை கிடைத்தவுடன் இச்செயற்குறிப்பின்மீது மைய
அரசு முடிவு எடுக்கும்.

25. பொது: தற்போது சிவில் நீதிமன்றங்களின் அதிகார
வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்
கப்பட்டுள்ளது. இதுபோன்ற மாநகர சிவில் நீதிமன்றத்தின்
அதிகாரவரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின்
கீழும், சிறுவழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு மாநகர
சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் வரையறுக்கப்
பட்டுள்ளன. மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அதிகார வரம்பு
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்
பட்டது. சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று
அல்லது அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்துக்கு நீட்டிக்கப்
பட்டுள்ளது. மாவட்டம் செஷன்ஸ் நீதிமன்றத்தைப் பொறுத்த
மட்டில் அதன் அதிகார வரம்பு (கோயம்புத்தூர், மதுரை,
தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர) ஏனைய வருவாய் மாவட்டம்
முழுவதற்குமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குற்றவியல்
நடைமுறை சட்டக் கோவையின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.
நீதித்துறை, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்





களின் அதிகார வரம்பு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட
காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. நீதித்துறை
முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், நீதித்துறை
உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்பு
பல நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்
களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில்
இருப்பதை தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய வழக்குகளுக்காக
தலைமை இடங்களுக்கு செல்வது கடினமாக இருக்கிறது என்பதால்
வழக்குத் தொடுத்துள்ள பொதுமக்களுக்குத் தகுந்த உதவி
அளிப்பதற்காகவும் தலைமை இடங்களில் உள்ள நீதிமன்றங்கள்
பரவலாக்கப்படவேண்டும் என்று அரசும் உயர்நீதிமன்றமும் கருது
கின்றன. சிவில், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை
மாநில வாரியாக ஆய்வு செய்வதற்காக 1970 ஆம் ஆண்டு
அரசினால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் குழு, 1973 ஆம்
ஆண்டு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியது.

மேற்சொன்ன குழு 28 புதிய சிவில் நீதிமன்றங்களையும், 27
புதிய குற்றவியல் நீதிமன்றங்களையும் அமைக்க பரிந்துரைத்தது.
நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குறித்த இக்குழுவின் (1975)
பரிந்துரையை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு,
ஐந்து ஆண்டுக்கால அளவில் படிப்படியாக அப்பரிந்துரைகளை
நிறைவேற்ற முடிவு செய்தது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு
குறித்த குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொருட்டு, உயர்
நீதிமன்றம், சிவில், குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க
முன்னுரிமைப்பட்டியல் ஒன்றைத் தயாரித்தது.

நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குறித்த குழு பரிந்துரைத்த
28 சிவில் நீதிமன்றங்களில் கீழ்க்காணும் 27 சிவில் நீதிமன்றங்
களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

2 சார்நிலை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

3 சார்நிலை நீதிமன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

4 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

5 சார்நிலை நீதிமன்றம், திண்டிவனம், தென்னார்க்காடு மாவட்டம்.

6 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், செஞ்சி, தென்னார்க்காடு மாவட்டம்.

[1984 மார்ச் 31

7 சார்நிலை நீதிமன்றம், திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

8 சார்நிலை நீதிமன்றம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

9 சார்நிலை நீதிமன்றம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

10 சார்நிலை நீதிமன்றம், விருத்தாசலம், தென்னார்க்காடு மாவட்டம்.

11 சார்நிலை நீதிமன்றம், பெரியகுளம், மதுரைமாவட்டம்

12 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பொன்னேரி, செங்கற்பட்டு மாவட்டம்.

13 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.

14 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், மேட்டூர், சேலம் மாவட்டம்.

15 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

16 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

17 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

18 சார்நிலை நீதிமன்றம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

19 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

20 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஜெயங்கொண்டான், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

21 மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், மதுரை (வடக்கு மாவட்டம்), திண்டுக்கல்.

22 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், போளூர், வடார்க்காடு மாவட்டம்.

23 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பவானி, பெரியார் மாவட்டம்.

24 சார்நிலை நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.



1984 மார்ச் 31]

25 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்.

26 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நன்னிலம், தஞ்சாவூர் மாவட்டம்.

27 மாவட்ட முன்சீப் நீதிமன்றம், முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் (நீதிமன்ற அதிகாரவரம்பு குறித்நகுழு பரிந்துரையில் எஞ்சிய நீதிமன்றம்) அமைப்பதை பொறுத்தவரையில், ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசு வழங்குகிற நிதியுதவியைக் கொண்டு திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் அமைக்க ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் சிவில் வழக்குகளையும் குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கும் முறை தற்போது வெற்றிகரமாகச் செயற்படவில்லையென்று தெரியவந்துள்ளதாக அதிகார வரம்பு குறித்த குழு தெரிவித்ததன் பேரில், சிவில் வழக்குகளை (வள்ளியூர் மாவட்ட முன்சீப் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்திரேட்டாக) விசாரணை செய்ய வள்ளியூர் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுக்கு சிவில் அதிகாரங்களைக் கொடுக்க உயர்நீதிமன்றம் விரும்பவில்லை. வள்ளியூரில் தனியே மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பை உயர்நீதிமன்றம் பரிசீலித்து வருகிறது. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட்டு விட்டால் சிவில் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், நீதிமன்ற, அதிகார வர்ம்பு குறித்த குழுவின் பரிந்துரை முழுமையாக நிறைவேற்றியதாகிவிடும்.

27. நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரைத்த 27 குற்றவியல் நீதிமன்றங்களில் கீழ்க்காணும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:

1. உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், திருவண்ணாமலை.

2. உட்கோட்ட நீதித்துறை நீதிமன்றம் மாஜிஸ்டிரேட்டு; பொன்னேரி.

3. உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம் பொள்ளாச்சி.

4. உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.

5. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், சிதம்பரம்.

6. நீதித்துறை முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திருவள்ளூர்.

7. நீதித்துறை முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

8. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், குளித்தலை.

9. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திருக்கழுக்குன்றம்.

10. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், பாலக்கோடு.

11. நீதித்துறை கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், குழித்துறை.

12. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திண்டுக்கல்.

13. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், உசிலம்பட்டி.

14. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

15. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், இராமநாதபுரம்.

16. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், மேட்டூர்.

17. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், துறையூர்.

18. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், விளாத்திகுளம்.

19. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், அம்பத்தூர்.



28. எஞ்சியுள்ள பின்வரும் எட்டு குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில், உயர்நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், தருமபுரி.

2. உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், உத்தமபாளையம்.

3. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், கோயம்புத்தூர்.

4. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், கன்னியாகுமரி.

5. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், திண்டுக்கல்.

6. நீதிமன்ற நடுவர் தீர்ப்பாயம், இராஜபாளையம்.

7. நீதிமன்ற நடுவர் தீர்ப்பாயம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

8. முகாம் நீதிமன்றம், அரூர்.

29. 1983-84-ல் கீழ்க்காணும் சிவில், குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிவில் நீதிமன்றம் :

1. சார்நிலை நீதிமன்றம், ஆரணி, வடார்க்காடு மாவட்டம்.

2. சார்நிலை நீதிமன்றம், சங்ககிரி, சேலம் மாவட்டம்.

3. மோட்டார் வண்டிவிபத்துக்கள் உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றத்தில் (அசல் மனு) நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் சார்நிலை நீதிபதி பதவி தரத்தில் கூடுதல் நீதிமன்றம் ஒன்று.

4. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

5. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், மதுரை நகரம்.

குற்றவியல் நீதிமன்றம் :

1. பெரியார் மாவட்டம் காங்கேயத்தில் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைத்தல்.

2. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைத்தல்.

30. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு பதவிகள் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாமென்றும். மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் அவற்றைச் சேர்க்கலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இருவகையினரும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை ஒன்றாக அறிந்திருக்க வேண்டியும் மாஜிஸ்ட்ரேட்டுகள் சிவில் வழக்குகள் விசாரணைபற்றி அனுபவம் பெறவும் வகை செய்வதே இதன் நோக்கமாகும். இதனைச் செயல்படுத்த சட்டம் கொண்டுவரப் பட்டது. விரைவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப் படுகிறது.

31. உயர்நீதிமன்றம், அசல் தரப்பு, மேல்முறையீட்டு வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களும் ''நீதி நிர்வாகம்'' என்ற தலைப்பின்கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு தொடர்பான கூறு ஆகும்.

''065ஏ. நீதி நிர்வாகம் 030 பி. நீதித்துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத்தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணங்கள்)'' என்ற தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் வரவு, ''214ஏ நீதிநிர்வாகம்'' என்பதன்கீழ்





1979-80, 1980-81, 1981-82, 1982-83, 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளுக்கான செலவு ஆகியவை பின்வரும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1979-80 ஆம் ஆண்டு கணக்குகள். | 1980-81 ஆம் ஆண்டு கணக்குகள். | 1981-82 ஆம் ஆண்டு கணக்குகள். | 1982-83 ஆம் ஆண்டு மதிப்பீடுகள். | 1983-84 ஆம் ஆண்டு மதிப்பீடுகள். | 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| வரவு | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 065ஏ. நீதி நிர்வாகம். | 180.35 | 197.58 | 195.37 | 253.75 | 236.62 | 270.72 |
| 030பி. நீதித் துறை முத் திரைத் தாள்கள். | 617.42 | 590.21 | 652.26 | 774.46 | 712.60 | 803.00 |
| மொத்த வரவு | 797.77 | 787.89 | 847.63 | 1027.61 | 949.22 | 1073.72 |
| செலவு. | | | | | | |
| 214ஏ. நீதி நிர்வாகம் | 662.02 | 758.27 | 867.20 | 1103.91 | 1240.20 | 1347.74 |

(வ.செ.தி.ம.)

32. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி இந்திய அரசியலமைப்பின் 39-ஏ பிரிவின்படி, ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்கும் பொருட்டு 1977 ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர் கூறும் நெறிமுறைகளின்படி செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும் சட்ட உதவி குழுக்கள் இருப்பதுடன் நகரிலும் மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 18 மாவட்டக் குழுக்களும் 84 வட்டக் குழுக்களும் 35 சட்ட ஆலோசனை நிலையங்களும், உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

[1984 மார்ச் 31

33. இக்குழு, ஏழை எளியவர்களுக்கும் சட்ட ஆலோசனை
பெற விரும்புவோருக்கும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும்
சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்
களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்
குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள்
நடுவர் மன்றங்களிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம்
வாங்கித்தர உதவி செய்வதும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும்
வாழ்க்கைச் செலவு படியை அளிக்க உதவி செய்வதும் இக்
குழுவின் பணித் திட்டத்தில் அடங்கும்.

34. அரசு அதிகாரிகளும், ஏனையோரும் உள்ள ஒரு
நிர்வாகக்குழு, சட்ட ஆலோசனை உதவிக்குழுவின் பணிகளை
நிர்வகிக்கின்றது. மேற்கூறிய குழுவின் செலவிற்காக
1983-84ல் மானியமாக ரூ. 27 இலட்சத்தை அரசு அனுமதித்
துள்ளது. 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்
பீட்டில் ரூ. 28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு
மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக்குழு கூடுதல் உதவித்
தொகைக்காக அரசை அணுகும்பொழுது, அத்தொகையை
அரசு வழங்கும்.

35. நடமாடும் நீதிமன்றங்கள்: நடமாடும் நீதிமன்றம் ஒன்று
1976லிருந்து மதுரையில் இயங்குகிறது. பொதுக் குற்றங்
களையும் போக்குவரத்து விதிகளையும் மீறி இழைக்கப்படும்
குற்றங்களை விசாரிக்க நீதித்துறை 2 ஆம் வகுப்பு மாஜிஸ்ட்
ரேட்டு தலைமையில் இந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.
பெருகிவரும் குற்றங்களைத் தடுக்கவும் குற்றங்களைச்
செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அரசு
மீண்டும் நடமாடும் நீதிமன்றங்களைச் சென்னை மாநகரில்
(இந்நீதி மன்றங்கள் 1977 லிருந்து செயல்படுவது நிறுத்தி
வைக்கப்பட்டது) செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. சென்னை
மாநகரில் பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை
மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வ
தற்கு மாவட்ட முனிசீப் பதவி தரத்தில் வட சென்னையில்
ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக இரண்டு நடமாடும்
நீதிமன்றங்களைத் தேவையான பணியாளர்களுடன் அமைப்
பதற்கு 1982 ஆகஸ்ட் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.
நடமாடும் நீதிமன்றங்கள் 31-3-1983 ஆம் நாளிலிருந்து செயல்
படத் தொடங்கியுள்ளன.

36. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல்
உயர்நீதிமன்றத்தின் கீழுள்ள நடுவர் மன்றங்கள்,
குறித்த நீதிமன்றங்கள், வருவாய் நீதிமன்றங்கள் வாடகை
உரிமையியல் நீதிமன்றங்களில் 1-2-1982லிருந்து உட்பட
தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழில்



1984 மார்ச் 31]

37. 1983-84 அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்—

(1) பெரியார் மாவட்டத்தில் உள்ள ஈரோட்டில் மாவட்ட
நீதிமன்ற நூலகம் அமைத்தல்.

(2) மதுரை (வடக்கு) திண்டுக்கல்லில் மாவட்ட நீதிமன்ற
நூலகம் அமைத்தல்.

(3) உதகமண்டலம் சார்நிலை நீதிமன்றத்தில் ரூ. 1.55
இலட்சம் செலவில் வழக்குரைஞர் அறை கட்டுதல்.

(4) சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைந்துள்ள வழக்
குரைஞர் சங்க சிற்றுண்டி சாலையை ரூ. 0.52 இலட்சம்
செலவில் விரிவாக்கவும் மேம்படுத்தலும்.

(5) மேல்நிலைத் தொட்டி வசதி உள்ள 15 நீதிமன்றங்
களில் வழக்காடும் மக்கள், நீதிமன்ற அதிகாரிகள், பணியாளர்
களின் நலனுக்கென்று, ஒவ்வொரு நீதிமன்றத்திலும் 30,000
ரூபாய் வீதம் மொத்தம் ரூ. 4.50 இலட்சம் மதிப்பீட்டுச்
செலவில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

(6) திருவாரூர், மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில், ரூ. 0.61
இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டுதலும்
நீர் வழங்க ஏற்பாடு செய்தலும்.

(7) நாமக்கல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ரூ. 0.38
இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஓய்வறையும் உணவுக் கூடமும்
கட்டுதல்.

(8) தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் நீதித்
துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில்
ரூ. 0.15 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீரடிக் கழிப்பிடங்கள்
கட்டுதலும், நீர் வழங்க ஏற்பாடு செய்தலும்.

(9) கோயம்புத்தூரில் இரு தற்காலிக கூடுதல் மாவட்ட
முன்சீப் நீதிமன்றங்களுக்கு உத்தேச செலவு ரூ. 0.42 லட்சம்
மதிப்பீட்டில் இடவசதியளித்தல்.

38. 1981, 1982, 1983 ஆம் ஆண்டுகளில் சென்னை
உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமை
யியல் குற்றவியல்) தொடரப்பட்ட முடிக்கப்பட்ட, விசாரணை
யிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறித்த விவர அறிக்கை
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1981, 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றம் சார்நிலை நீதிமன்றங்கல் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட முடிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறாமலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் பின்வருமாறு :

| நீதிமன்றங்கள். | 1981. | | | | 1982 | | | | 1983 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் ஒருவகை செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் ஒரு வகை செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் ஒரு வகை செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| **உயர்நீதிமன்றம், சென்னை.** | | | | | | | | | | | | |
| 1 முதல் மேல் முறையீடு .. | 926 | 4,514 | 953 | 3,561 | 948 | 4,509 | 522 | 3,987 | 834 | 4,821 | 579 | 4,242 |
| 2 அசல் தரப்பு மேல் முறையீடு .. | 197 | 435 | 114 | 321 | 228 | 549 | 128 | 421 | 207 | 628 | 114 | 514 |
| 3 முத்திரைப் பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள் | 115 | 292 | 72 | 220 | 120 | 340 | 71 | 269 | 148 | 417 | 99 | 318 |
| 4 ரிட் மேல் முறையீடுகள் .. | 643 | 1,775 | 423 | 1,358 | 799 | 2,151 | 618 | 1,533 | 1,281 | 2,814 | 616 | 2,198 |
| 5 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 2,289 | 7,006 | 1,578 | 5,422 | 2,061 | 7,489 | 1,137 | 6,352 | 2,337 | 8,689 | 1,320 | 7,369 |
| 6 ஆணைகளுக்கெதிரான மேல் முறையீடுகள் | 851 | 1,746 | 611 | 1,135 | 864 | 1,999 | 433 | 1,566 | 889 | 2,455 | 249 | 2,206 |
| 7 மேல் முறையீட்டு ஆணைகளுக்கெதிரான மேல் முறையீடுகள் | 41 | 71 | 10 | 61 | 62 | 123 | 17 | 106 | 72 | 178 | 18 | 160 |
| 8 சிவில் ரிவிஷன் மனுக்கள் .. | 4,754 | 7,608 | 4,547 | 3,061 | 5,205 | 8,266 | 4,546 | 3,720 | 5,621 | 9,341 | 3,877 | 5,464 |
| 9 வரி தொடர்பான வழக்குகள் .. | 1,645 | 5,911 | 1,215 | 4,696 | 1,497 | 6,193 | 971 | 5,222 | 1,164 | 6,386 | 713 | 5,673 |
| 10 வரி வழக்கு தொடர்பான மனுக்கள் .. | 408 | 690 | 428 | 262 | 583 | 845 | 281 | 564 | 564 | 1,128 | 713 | 415 |
| 11 ரெபர்ட் வழக்குகள் (Referred cases) | 4 | 17 | .. | 15 | 3 | 18 | 4 | 14 | 8 | 22 | .. | 22 |
| 12 இல்வாழ்க்கை தொடர்பான வழக்குகள் (Matrimonial cases) | 21 | 31 | 6 | 25 | 13 | 38 | 9 | 29 | 22 | 51 | .. | 51 |
| 13 ரிட் மனுக்கள் .. | 1,782 | 20,679 | 8,374 | 12,305 | 11,052 | 23,357 | 4,388 | 18,969 | 12,469 | 31,438 | 6,479 | 24,989 |
| 14 உச்ச நீதிமன்ற லீவ் மனுக்கள் (Supreme Court Leave Petitions) | 262 | 509 | 252 | 257 | 111 | 368 | 195 | 173 | 187 | 360 | 210 | 150 |
| 15 தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 66 | 552 | 2 | 550 | 52 | 602 | 109 | 493 | 53 | 546 | 4 | 542 |
| 16 அவமதிப்பு குறித்த வழக்குகள் .. | 9 | 9 | .. | 9 | 5 | 14 | 2 | 12 | 6 | 18 | 4 | 14 |
| 17 வணிகக் குறி தொடர்பான மேல் முறையீடுகள். | 4 | 10 | .. | 10 | 4 | 14 | 1 | 13 | 2 | 15 | .. | 15 |
| 18 வணிகக் குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | 3 | 3 | 1 | [illegible] | 1 | 3 | 1 | 2 | 1 | 3 | .. | 3 |
| 19 பல்வகை வழக்குகள் .. .. | | | | | | | | | | | | |
| | 32,158 | 52,362 | 23,058 | [illegible] | 33,813 | 63,117 | 29,487 | 33,630 | 38,264 | 71,894 | 31;877 | 40,017 |
| **மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை.** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. | 11,084 | 27,777 | 9,812 | 17,965 | 12,490 | 30,455 | 13,653 | 16,802 | 10,462 | 27,264 | 12,246 | 15,018 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 23,661 | 45,977 | 24,144 | 21,833 | 23,664 | 45,497 | 24,424 | 21,073 | 25.535 | 46,608 | 24,906 | 21,702 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 441 | 615 | 345 | 271 | 555 | 827 | 401 | 425 | 507 | 932 | 536 | 396 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. | 215 | 367 | 188 | 179 | 243 | 422 | 239 | 183 | 274 | 457 | 279 | 178 |
| 5 நிறைவேற்று நடைமுறைகள் .. | 2,908 | 4,978 | 2,815 | 2,136 | [illegible] | 5,230 | 2,456 | 2,776 | 2,552 | 5,326 | 2,507 | 2,819 |

1981, 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம் சார்நிலை நீதிமன்றங்களில் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறாமலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் பின் வருமாறு :—

| நீதிமன்றங்கள். | 1981 | | | | 1982. | | | | 1983. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | ஒரு வகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் ஒருவகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் முடிவுறாமல் இறுதியில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் ஒருவகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவுறாமல் இறுதியில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் ஒரு வகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவுறாமல் இறுதியில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| **சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை—** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 4,855 | 8,041 | 4,567 | 3,474 | 4,163 | 7,637 | 5,224 | 2,413 | 4,816 | 7,329 | 4,602 | 2,727 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 14,124 | 16,846 | 13,250 | 3,566 | 20,626 | 24,192 | 19,727 | 4,465 | 19,555 | 24,020 | 19,155 | 4,865 |
| 3 நிறைவேற்று மனுக்கள் .. .. | 838 | 1,969 | 1,406 | 563 | 2,819 | 3,382 | 2,222 | 1,160 | 2,235 | 3,395 | 1,937 | 1,458 |
| **மாவட்ட நீதிமன்றங்கள் —** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 925 | 1,024 | 943 | 91 | 916 | 1,007 | 902 | 105 | 904 | 1,007 | 726 | 83 |
| 2 சிவில் மேல்முறையீடுகள் .. .. | 3,638 | 5,906 | 3,991 | 1,915 | 3,961 | 5,876 | 3,891 | 1,985 | 3,906 | 5,871 | 42 | 1,849 |
| 3 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் .. | 1,450 | 2,005 | 1,161 | 844 | 1,663 | 2,507 | 1,475 | 1,032 | 1,238 | 2,270 | 1,370 | 880 |
| 4 சிவில் பல்வகை வழக்குகள் .. | 21,242 | 26,107 | 22,047 | 4,060 | 30,498 | 34,558 | 29,738 | 4,820 | 29,071 | 33,891 | 28,602 | 5,287 |
| 5 நிறைவேற்று மனுக்கள் .. .. | 216 | 306 | 190 | 116 | 177 | 293 | 149 | 144 | 202 | 346 | 264 | 82 |
| 6 நொடிப்பு நிலை மனுக்கள் .. .. | 4 | 5 | 5 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| **துணை நீதிமன்றங்கள்—** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 12,557 | 40,107 | 31,693 | 8,414 | 14,907 | 23,321 | 11,173 | 12,148 | 15,613 | 27,761 | 13,025 | 14,736 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 66,425 | 91,803 | 75,168 | 16,635 | 96,171 | 1,12,806 | 88,545 | 24,261 | 97,831 | 1,22,092 | 94,562 | 27,530 |
| 3 சிவில் மேல்முறையீடுகள் .. .. | 5,300 | 9,882 | 5,672 | 4,160 | 5,706 | 9,865 | 5,409 | 4,456 | 5,694 | 10,150 | 5,135 | 5,015 |
| 4 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் .. | 2,983 | 5,943 | 2,895 | 3,048 | 2,648 | 5,696 | 3,106 | 2,590 | 2,703 | 5,293 | 2,716 | 2,577 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் .. | 6,262 | 12,786 | 8,823 | 3,963 | 5,308 | 9,271 | 4,972 | 4,299 | 5,794 | 10,093 | 5,272 | 4,821 |
| 6 நொடிப்பு நிலை குறித்த மனுக்கள் .. | 589 | 1,002 | 509 | 493 | 601 | 1,084 | 533 | 561 | 657 | 1,218 | 560 | 658 |
| **மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்—** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 1,28,748 | 2,17,505 | 1,01,534 | 1,16,070 | 1,08,965 | 2,25,035 | 1,11,071 | 1,13,764 | 92,628 | 2,06,592 | 1,00,765 | 1,05,827 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 2,14,999 | 2,57,537 | 2,03,362 | 54,175 | 3,49,898 | 4,03,673 | 3,04,089 | 99,584 | 302,076 | 4,01,660 | 3,00,315 | 1,01,345 |
| 3 நிறைவேற்று மனுக்கள் .. .. | 71,662 | 93,983 | 53,352 | 40,631 | 49,676 | 90,307 | 49,602 | 40,705 | 48,114 | 88,819 | 48,033 | 40,788 |
| 4 நொடிப்பு நிலை குறித்த மனுக்கள் .. | 195 | 236 | 116 | 120 | 195 | 215 | 162 | 153 | 173 | 326 | 180 | 146 |

1981, 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் தொடரப்பட்ட முடிக்கப்பட்ட மற்றும் விசாரணையிலுள்ள குற்றவியல் வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்

**1981**

| நீதி மன்றங்கள். (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (2) | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை (3) | இவ்வாண்டில் இறுதி வகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (4) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை (5) |
|---|---|---|---|---|
| **உயர்நீதி மன்றம், சென்னை—** | | | | |
| 1 ரெபர்ட்டிரெங்லீஸ் .. .. .. | 12 | 15 | 12 | 3 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் .. | 745 | 3,222 | 1,077 | 2,145 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் .. | 902 | 2,460 | 1,096 | 1,364 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட வழக்குகள் | 7 | 19 | 11 | 8 |
| 5 பல்வகை வழக்குகள் .. .. .. | 7,008 | 9,055 | 6,394 | 2,661 |
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 செஷன்ஸ் வழக்குகள் .. | 2,846 | 3,669 | 2,276 | 1,393 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் .. | 4,398 | 6,063 | 4,109 | 1,954 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் .. | 831 | 1,206 | 828 | 378 |
| **பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் .. | 2,15,744 | 2,32,033 | 2,10,622 | 21,411 |
| **நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 மேல் முறையீடுகள் .. .. .. | 1,473 | 1,937 | 1,648 | 289 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் .. .. | 4,49,645 | 4,88,165 | 3,62,607 | 1,25,558 |
| 3 இந்திய தண்டனை சட்ட கோவையின் கீழ் வரும் வழக்குகள் | 97,660 | 1,56,461 | 1,03,037 | 53,364 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 4,448 | 6,810 | 5,428 | 1,384 |



**1982.**

| நீதி மன்றங்கள். (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் ஒருவகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) |
|---|---|---|---|---|
| **உயர்நீதி மன்றம், சென்னை—** | | | | |
| 1 ரெபர்ட்டிரெங்லீஸ் | 6 | 9 | 4 | 5 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் | 748 | 2,898 | 86 | 2,007 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் | 876 | 2,240 | 610 | 1,630 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட வழக்குகள் | 12 | 20 | 7 | 13 |
| 5 பல்வகை வழக்குகள் | 7,268 | 9,929 | 5,796 | 4,133 |
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 செஷன்ஸ் வழக்குகள் | 3,902 | 4,295 | 2,692 | 1,603 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் | 4,810 | 6,764 | 4,258 | 2,506 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் | 1,212 | 1,590 | 951 | 639 |
| **பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் | 2,06,360 | 2,27,771 | 2,07,041 | 20,739 |
| **நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 மேல் முறையீடுகள் | 603 | 892 | 782 | 110 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் | 4,51,038 | 5,76,596 | 4,72,577 | 1,04,019 |
| 3 இந்திய தண்டனை சட்ட கோவையின் கீழ் வரும் வழக்குகள் | 1,05,121 | 1,58,485 | 97,624 | 60,861 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 5,130 | 6,512 | 4,921 | 1,591 |

**1983.**

| நீதி மன்றங்கள். (1) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (10) | ஒருவகை செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (11) | இவ்வாண்டில் ஒரு வகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|
| **உயர்நீதி மன்றம், சென்னை—** | | | | |
| 1 ரெபர்ட்டிரெங்லீஸ் | 12 | 17 | 7 | 10 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் | 901 | 2,908 | 451 | 2,457 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் | 920 | 2,550 | 468 | 2,082 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட வழக்குகள் | 14 | 27 | 7 | 20 |
| 5 பல்வகை வழக்குகள் | 8,930 | 13,063 | 8,978 | 4,085 |
| **செஷன்ஸ் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 செஷன்ஸ் வழக்குகள் | 3,321 | 4,924 | 3,155 | 1,769 |
| 2 குற்றவியல் மேல்முறையீடுகள் | 5,377 | 7,883 | 5,315 | 2,56 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் | 1,257 | 1,896 | 1,184 | 718<br>2 |
| **பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் | 2,24,967 | 1,896<br>2,45,727 | 2,24,001 | 21,726 |
| **நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—** | | | | |
| 1 மேல் முறையீடுகள் | 772 | 882 | 634 | 248 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் | 4,60,350 | 5,64,369 | 4,40,313 | 1,24,056 |
| 3 இந்திய தண்டனை சட்ட கோவையின் கீழ் வரும் வழக்குகள் | 1,15,588 | 1,76,449 | 1,13,655 | 62,794 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 26,468 | 2858,0 | 25,564 | 3,546 |

[1984 மார்ச் 31

## இணைப்பு II.

(126ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

### 14-ஆம் எண் மானியக் கோரிக்கை குறித்த கொள்கைக் குறிப்பு.

### 1984–85.

இம்மாநிலத்தில் உள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட் டையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, புழலிலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை, சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச் சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, 119 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றை சிறைத்துறை கவனிக் கிறது. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவும், இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண் டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத் தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப் பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து நன்கு செயற்படவும், உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்தி அவர் களுக்குப் புது வாழ்வு அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்க யாகும்.

I. சிறைகளின் வகைப்பாடு :

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகை களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) தனிவகைச் சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்).

(3) திறந்தவெளிச் சிறைகள்.

(4) தனிக் கிளைச் சிறைகள்.

(5) கிளைச் சிறைகள்.

பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்த வர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு திங்களுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர் களும், கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள், இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின் றனர் அது போல ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் தனித்



1984 மார்ச் 31]

தனியே பிரித்து சிறை வைக்கப்படுகின்றனர். வழக்கமாகக் குற் றம் செய்யும் கைதிகள் (Habitual Prisoners) சேலத்திலும், கட லூரிலும் உள்ள மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கு மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதி கள் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையில் வைக்கப்படு கின்றனர். இளங் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி இயங்குகிறது. தற் காலிக நடவடிக்கையாக, மனநோய்க் கைதிகள் சென்னை, அர சினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய் கைதிகளுக்கெனத் தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| 1. மத்திய சிறைகள் .. .. .. | 8 |
| 2. மாநில மகளிர் சிறை, வேலூர் .. | 1 |
| 3. சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை .. | 1 |
| 4. தனிக் கிளைச் சிறைகள் .. .. | 3 |
| 5. கிளைச் சிறைகள் .. .. .. | 119 |
| 6. திறந்தவெளிச் சிறைகள் .. .. | 1 |
| 7. பண்ணைச் சிறை .. .. .. | 1 |
| 8. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் .. | 1 |

கிளைச் சிறைகள் நீங்கலாக மத்திய சிறைகளில் மொத்தம் 12,079 கைதிகளுக்கும், கிளைச் சிறைகளில், 3446 கைதிகளுக்கும் இடவசதி உண்டு. சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

II. நிர்வாகம்.

சிறைத் துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1972–73 முதல் 1982–83 வரையிலான ஆண்டுகளில் சிறைத் துறையின் செலவினங்கள், 1983–84 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1984–85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1972–73 முதல் 1982–83 ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் வரவினங்கள், 1983–84 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1984–85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு குறித்த விவரங்கள் ஆகியவை இணைப்பு III-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

[1984 மார்ச் 31

(அ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச் சிறை
களைப் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ்
சிறைத்துறை நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளுதல்.

இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் 1977 ஆம் ஆண்
டிற்கு முன்னர் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருந்
தன. 1977 ஆம் ஆண்டில் 10 கிளைச் சிறைகள் சிறைத் துறை
யின் நிருவாகத்தில் கொண்டுவரப்பட்டன. 1—10—1981 ஆம்
நாளிலிருந்து, பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்
களிலுள்ள 16 கிளைச் சிறைகள் இத்துறையின் நிருவாகத்தின் கீழ்
கொண்டுவரப்பட்டன. வட ஆற்காடு, சேலம், தருமபுரி, மதுரை,
இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்
டங்களிலுள்ள 55 கிளைச் சிறைகள் 20—4—1983 ஆம் நாளி
லிருந்து சிறைத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்
பட்டன. தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்
கோட்டை ஆகிய மாவட்டங்களில் எஞ்சியுள்ள 38 கிளைச் சிறை
கள் 19—10—1983 ஆம் நாளிலிருந்து சிறைத் துறையின் நிரு
வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. வருவாய்த்துறையின் கட்
டுப்பாட்டின் கீழுள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறையின்
நிர்வாகத்திற்கு மாற்றும் மேற்சொன்ன திட்டங்கள் ஏழாம் நிதிக்
குழு பரிந்துரைத்ததின் பேரில் அக்குழுவின் நிதி உதவியின்
கீழ் வருகின்றன.

(ஆ) சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது.
இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 48 இரண்டாம் நிலைச் சிறைக்
காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிருவாகம், உடற்
பயிற்சி, ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்
படுகிறது. பயிற்சி கால அளவு 6 திங்களாகும். மேலும், மத்
திய சிறைகள், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளி ஆகியவற்
றைச் சேர்ந்த 6 முதல் நிலைச் சிறைக் காவலர்களுக்கும், 6
முதன்மைத் தலைமைச் சிறைக் காவலர்களுக்கும் முறையே 30,
15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும்
பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி சிறைக் கைதிகளை
அணுகும் முறை குறித்து பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்
படுகிறது. கிளைச் சிறைகள் அனைத்தையும் சிறைத் துறை
யின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டதால்,
மேற்கூறிய பயிற்சிப் பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுவோரின் எண்
ணிக்கையை 100 ஆக உயர்த்துவதற்குரிய செயற் குறிப்பு அரசின்
பரிசீலனையில் உள்ளது.

(இ) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டலப்
பயிற்சிப் பள்ளி :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்
நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலு
வலர்களுக்கான மண்டலப் பயிற்சிப் பள்ளி வேலூரில் 1-10-1976



1984 மார்ச் 31]

முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை சான்
றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப்பள்ளிகள், இதர இணைந்த
சீர்திருத்தப் பணியிலுள்ள அலுவலர்களுக்கு, குற்றங்களைத் தடுக்
கவும், குற்றவாளிகளைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளைச்சிறந்த
முறையில் நடத்தி காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும்,
தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழி முறைகள் ஆகியவற்றில்
பயிற்சி அளிப்பதை இப் பயிற்சிப்பள்ளி நோக்கங்களாகக் கொண்
டுள்ளது. இப்பயிற்சி அளிக்கப்படும் அதிகாரிகளில் மத்திய சிறை
களில் உதவிச் சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் கண்
காணிப்பாளர் வரையுள்ளவர்களும் ஏனைய சீர்திருத்த நிறு
வனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித்தர அலுவலர்களும்
அடங்குவர். குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை
நிருவாகம், இளங்குற்றவாளிகள், நன்னடத்தை, சமூக நலப்பணி,
சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்
படுகிறது. ஒரே நேரத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலு
வலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது
வரை இம்மாநிலத்தைச் சார்ந்த 63 அலுவலர்கள் பயிற்சி பெற்
றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா
இனச் செலவுகள், நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப்
பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

III. திறந்தவெளிச் சிறைகள் :

இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்தவெளிச் சிறை தற்
போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில்
உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இட வசதி
உள்ளது. இதைத் தவிர, சேலம் மத்திய சிறையுடன் பண்
ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூரில்
திறந்த வெளிச் சிறை அமைந்திருந்த நிலத்தைத் தமிழ்ப் பல்
கலைக் கழகத்திற்குக் கொடுத்ததைத் தொடர்ந்து, அத் திறந்த
வெளிச் சிறை மூடப்பட்டுள்ளது.

2. திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன :

(அ) சிறைகளில் காணப்படும் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைவாசிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக, அவர்
களுக்குச் சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சியளித்தல்.

(இ) உணவுப் பொருள் உற்பத்தியில் சிறைகள் தன்னிறைவு
அடைதல்.

(ஈ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கை
யின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்.

(உ) கைதிகள் குறைந்த அளவே அடைத்து வைக்கப்பட வேண்டும்; சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும்; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

IV. கைதிகளின் வகைப்பாடும் சிறப்புரிமைகளும் :

சிறையில் உள்ள கைதிகளுக்காக " ஏ ", " பி " என்ற இரு பிரிவுகள் உள்ளன. கைதிகளின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத் துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட வகுப்புகளை தண்டனை வழங்கும் நீதிமன்றங்கள் நிர்ணயிக்கின்றன. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம் ஆகிய வற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் கைதி கள் " ஏ " வகுப்புப் பெற தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்துகொண்ட குற்றத்தை செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் " ஏ " வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமூதாயத் திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும் சிறையில் " ஏ " வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். "ஏ" வகுப்பைச் சேராத இதர சிறைவாசிகள் "பி" வகுப்பைச் சேர்ந்தவர்களாவார் ள்.

V. (அ) உணவு :

(1) சாதாரண உணவு முறை.

" ஏ " வகுப்புக் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின் வரும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் (2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்; அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள்; (3) உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள். (4) அசைவ கைதிகள் தங்களது சொந்தச் செலவில் பழங்களையும், " ஏ " வகுப்புக் கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருள்களையும் பிஸ் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். " பி " கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வகுப்புக் வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத் துவக் காரணங்களுக்காக, பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய், பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங் கலாம்.





(2) திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு.

இம்மாநிலத்தில் மத்திய சிறைகளில் " பி " வகுப்புக் கைதிகளுக்கு 1—9—1982 ஆம் நாளுக்கு முன்னர் பின்வரும் இருவகை உணவுகள் வழங்கப்பட்டன.

(i) சத்துணவு.

(ii) ஓரளவு சத்துணவு.

கைதிகளுக்கான உணவில், கலோரி அளவை அதிகம் அளிப் பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதலில் சென்னை மத்திய சிறையில் 1971 ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்னர், மதுரை, கோயம்புத்தூர் மத்தியச் சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து செயற்படுத்தப்பட்டது. சத்துணவுத் திட்டத்தின்படி, காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், நான்கு நாட்களுக்குப் பிட்டும் அளிக்கப்பட்டு வந்தன. கைதிகளுக்கு மாலையில் தரப்படும் கடலைச் சுண்டலுக்குப் பதிலாக .வேர்க் கடலைப் பருப்பு வழங்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்தியச் சிறைகளிலும், வேலூரி லுள்ள மகளிருக்கான மாநிலச் சிறையிலும் ஓரளவு சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இருந்தது. இத் திட்டத்தின் கீழ் " பி " வகுப்புக் கைதிகளுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், பிட்டும் வழங்குவதைக் கைதிகள் விரும்பாததால் வாரத்தில் நான்கு நாட்களுக்குக் கஞ்சி அல்லது இட்டிலியும் வழங்கப்பட்டது. மாலையில் கடலைச் சுண்டல் வழங்கப்பட்டது.

" பி " வகுப்புக் கைதிகளுக்கும் சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும், விசாரணைக் கைதிகளுக்கும், தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவை வழங்க, உள் துறையின் (சிறை. 3) 14-9-1982 ஆம் நாளிட்ட 2366 எண் அரசாணையில் அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. " பி " வகுப்புக் கைதிகள், சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்குத் தற்போது, புளிச் சாதம், தயிர் சாதம், தேங்காய் சாதம் போன்ற பல்வேறு உணவு வகைகள் பொருத்தமான கூட்டுக் கறியுடன் வழங்கப் படுகின்றன. இவ்வாறு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மத்தியச் சிறைகளில் நடைமுறையில் இருந்த சத்துணவுத் திட் டத்தைவிடச் சிறந்ததோர் உணவுத்திட்டம் அனைத்து மத்தியச் சிறைகளிலும், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறையிலும் சேலம், கொக்கிரகுளம், திருச்சிராப்பள்ளி ஆகிய

இடங்களிலுள்ள மூன்று தனிக் கிளைச் சிறைகளிலும், கோயம்புத்தூர் மாவட்டம் சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச் சிறையிலும் 1-9-1982-லிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

சோளத்திற்கு பதிலாக மில் அரிசி வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது.

(3) உணவுக்கான செலவு :

(அ) பல்வேறு வகைக் கைதிகளுக்கு அனுமதிக்கத்தக்க பல்வேறு அளவு உணவுக்கு கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஆகும் தோராயமான செலவு குறித்த விவரங்கள் வருமாறு:—

(i) " ஏ " வகுப்புக் கைதிகள் :

சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதி ஒருவருக்கு ரூ. 9.45.

சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதி ஒருவருக்கு ரூ. 8.85.

அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதி ஒருவருக்கு ரூ. 9.71.

அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதி ஒருவருக்கு ரூ. 9. 53.

(ii) " பி " வகுப்புக் கைதிகள் சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்கு உள் துறையின் (சிறை. 3) 14—9—1982 ஆம் நாளிட்ட 2366 ஆம் எண்ணுள்ள அரசாணைப்படி திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கு :—

| | அரிசி உணவு. | கோதுமை உணவு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வேலை செய்வோர்—வேலை செய்யாதோர் .. .. | 4.80 | 4.25 |

சிறப்புணவு :—பொங்கல், சுதந்திரதினம் முதலிய விழாக்களின்போது, கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. மேற்காணும் சிறப்பு நாட்களில் பெண். கைதிகளின் குழந்தைகளுக்கு ரூ. 1 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்க 1984 ஜனவரித் திங்களில் அரசு ஆணையிட்டுள்ளது.



(ஆ) உடையும் படுக்கையும் :—

" ஏ " வகுப்புக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை செய்யும் நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். " ஏ " வகுப்புக் கைதிகள் அவர்களது உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம்.

"பி" வகுப்புத் கைதிகள், எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். அனைத்து மத்தியச் சிறைகள், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறை, தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள் ஆகியவற்றில் சிறை வைக்கப்பட்ட " பி " வகுப்புக் கைதிகளுக்கும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும், உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசு ஒப்புதலளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட எல்லாச் சிறைகளுக்கும் உறையுடன் கூடிய தலையணை வழங்கப்பட்டுள்ளது.

(இ) சோப்பு முதலியன :

திங்களுக்கொருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சிகைக்காய்த் தூளும் (Soapnut Powder) சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்தியச் சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்குக் கூடுதலாக எண்ணெய் வழங்கப்படுகிறது.

நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஈ) நேர்க்காணலும், கடிதங்களும் :

" ஏ " வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். " பி " வகுப்புக் கைதிகள் மாதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

உ) செய்தித்தாள்களும் இதழ்களும் :

அரசுச் செலவில் '' பி '' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்
கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

1. தினமணி.
2. சுதேசமித்திரன்.
3. அண்ணா.
4. தினத்தந்தி.
5. தினமலர்.
6. இந்து.

' ஏ ' வகுப்புக் கைதிகள் தங்களது சொந்தச் செலவில் அரசு
ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனு
மதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புக் கைதிகளும், தங்கள்
சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக்
கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, கைதிகளின்
பயனுக்காக சிறை நூலகத்தில் சில புத்தகங்கள் வைக்கப்பட்டுள்
ளன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும் புத்தகங்கள்
பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி
இயக்குநரைக் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட பயனுள்ள
புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை
வாங்குவதற்குச் சிறைச்சாலை கண்காணிப்பாளர்களுக்கு அனுப்
பப்படுகிறது.

(ஊ) இதரச் சலுகைகள் :

' ஏ ' வகுப்புக் கைதிகள் மேசை , நாற்காலி கொசுவலை
ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும் அருந்துவதற்கும்
தேவைப்படும் கலன்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற
வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு
முன் சிறைத் தண்டனை அடையாத, வழக்கமாகக் குற்றம் செய்
யாத, சிறை மருத்துவமனையில் இருக்கும் கைதிகள், மருத்துவ
ஆலோசையின்பேரில், சிறை மருத்துவ மனையின் வெளிப்புறத்
தில் தகுந்த காவலோடு உறங்க சிறைக் கண்காணிப்பாளரின் விருப்
பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக்
கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொருத்தும்,
அவர்கள் அனுபவித்துள்ள தண்டனையைக் காலத்தைக் கணக்
கிட்டும், இரவுக்காவற்காரர்கள் (Convict Night Watchmen)
மேற்பார்வையாளர் (Convict Overseer) காவலர்கள் (Convict
Warders) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.



(எ) பொழுதுபோக்கு வசதிகள் :

ஞாயிற்றுக் கிழமைகள், சிறை விடுமுறை நாட்களில் மத்திய
சிறைச்சாலைகளிலுள்ள எல்லா கைதிகளும், கைப்பந்து, சடுகுடு,
பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரி
லுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளை
பந்து (Tennikoit) விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர்.
ஆழ்நிலை தியான முறை. அனைத்து மத்திய சிறைச்சாலை
களிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், 'மகரிஷி
நிறுவனம் மூலம் விரும்பும் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகிறது.
சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு சென்னை
யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தவும்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

VI. கைதிகளுக்கான செய் தொழிலும் சிறைகளின் தொழிற்
சாலைகளும் :

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளுக்குச் சிறையில்
வேலை அளிக்கப்படுகிறது. கைதிகள் விடுதலையடைந்த பின்பு
அவர்களுக்கு புதுவாழ்வு கிடைக்க வகை செய்வதே இதன்
நோக்கம். என்வே, பயனில்லா வேலை உற்பத்தியை நோக்க
மாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை
வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு
என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ
அலுவலரின் ஆலோசனையின்படி கைதிக்கு உரிய வேலை
கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்
களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை,
நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோலால்
பொருட்களை செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்
தல் , சோப்பு செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படு
கின்றன. கைதிகள் தங்களது விடுதலைக்குப்பின் தங்களைச்
சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் நவீன
வேளாண்மை முறைகள், பால்பண்ணை ஆகிய தொழில்களிலும்
பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்தியச் சிறையில்
நெசவுப் பிரிவு, சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது.
இத் தொழிற்சாலைப் பிரிவுகள் 1977–79-ல் இந்திய அரசின்
உதவி பெற்று நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய சிறைகள்,
வேலூர், மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி
ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின்/வாழ்க்கைத்
தொழில்களின் பட்டியல் இணைப்பு V-ல் குறிக்கப்பட்டுள்ளது.

ஏழாவது நிதிக்குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில்,
மத்திய அரசு வழங்கிய நிதி உதவியிலிருந்து, எட்டு மத்திய
சிறைச்சாலைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும்
பின்வரும் எளிய தொழில்கள் தொடங்கவும் சிறைக் கைதிகளுக்கு
பயிற்சி அளிக்கவும் அரசு ஏற்பளித்துள்ளது :—

(1) செங்கல் உற்பத்தித் தொழில்.
(2) குழாய்களைப் பழுதுபார்த்து இணைத்தல்.
(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி.
(4) வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உட்பட).
(5) சைக்கிள் பழுதுபார்த்தல்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, வேலூர், பாளையங்
கோட்டை மத்தியச் சிறைகள், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளி
ஆகியவற்றில் இத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. மீத
முள்ள மூன்று சிறைச்சாலைகளில் அதாவது கோயம்புத்தூர்,
சேலம், கடலூர் மத்திய சிறைகளில் இத் தொழில்கள் தொடங்கு
வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆறு சிறைச்
சாலைகளில் தொடங்கப்பட்டுள்ள, மூன்று சிறைச்சாலைகளில்
தொடங்கவுள்ள சிறு தொழில்களின் பெயரைக் காட்டும் பட்டி
யல் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற சிறைவாசிகள் மேற்கண்ட தொழில்களில் பயிற்சி
பெற்று குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம்
சிறைவாசிகள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடை
பெறத் தகுதி பெற்றவர்களாவார்கள் :—

| | பணிக்கொடையின் வீதம். (ஒரு திங்களுக்கு) |
|---|---|
| | ரூ. பை. |
| 1. சிறைவாசி இரவுக் காவலர்.. .. | 0.50 |
| 2. சிறைவாசிகள் மேற்பார்வையாளர்கள் | 1.00 |
| 3. சிறைவாசிகள் காவலர் .. .. | 2.00 |

அன்னத்து மத்திய சிறைச்சாலைகளிலும், வேலூரிலுள்ள
பெண்களுக்கான மாநிலச் சிறைச்சாலையிலும் தற்போது
கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலிலுள்ளது. கைதி
களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக் கூடிய ஊதிய வீதங்கள்
பின்வருமாறு :—

| | ரூ. பை |
|---|---|
| (i) தேர்ச்சிப்பெற்ற வேலையாள் .. | 1.00 |
| (ii) ஓரளவு தேர்ச்சிப்பெற்ற வேலையாள் | 0.50 |
| (iii) தேர்ச்சி பெறாத வேலையாள் | 0.25 |

VII. மருத்துவ-துப்புரவு நல ஏற்பாடுகள் :

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு நல ஏற்
பாடுகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், புதுக்
கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர்
சிறையிலும், பகுதிநேர மருத்துவ அலுவலர் ஒருவரும், அம்
மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ அதிகாரி ஒன்று அல்லது
அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவ அலுவலரும், ஒரு மருந்
தாளுநரும் கொண்ட மருத்துவமனை ஒன்று உள்ளது. புழல்
ஆடவர் பிற்காப்பு இல்லத்தில் பகுதி நேர மருத்துவர் ஒருவரை
யும் முழுநேர மருந்தாளுநர் ஒருவரையும் கொண்ட மருந்தகம்
ஒன்று உள்ளது கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின்
பரிந்துரையின் பேரில் அரசின் செலவில், தேவைப்படுகின்ற கைதி
களுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும்





சிறையைப் பார்வையிடும் பல் துணை மருத்துவரால் பல்நோய்
சிகிச்சைக்கும் வகை செய்யப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில்
தொழுநோய்க் கைதிகள் தனியாகப் பிரித்து, தனிக்கூடங்களில்
வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக
இயல் மருத்துவ நிபுணர் பணியமர்த்தப்பட்டுள்ளார்
மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் கைதிகள் சென்னை
தலைமையிட மருத்துவமனை உளநோய் மருத்துவர்களின் பரிந்
துரையின் பேரில் சென்னை மனநல நிறுவனத்திற்கு அனுப்பப்
படுகின்றனர்.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூரிலுள்ள மாநில
மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும்,
தனிக் கிளைச் சிறைகளிலும், 89 கிளைச் சிறைகளிலும், தண்ணீர்
வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ரூ. 67.87 இலட்ச மதிப்
பீட்டில் இம்மாநிலத்தில் எஞ்சிய கிளைச் சிறைகளில் தண்ணீர்
வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டங்
களுக்கு 1983, ஏப்ரல் திங்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

VIII. கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல் :—

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய கைதிகளுக்கு சிறையில்
கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறையி
லும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளி
உள்ளது. முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்
கொண்டு சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி
புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும்
பொருட்டு சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்
களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும், வர
வழைத்துச் சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளி
லும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்
கலைக்கழகங்கள், அஞ்சல் வழிக் கல்வி நடத்தும் முதுகலைப்பட்ட
படிப்பு, பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., எம்.எட். முதலியவை போன்ற
தொழிற்கல்வி வரையிலான தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படு
கிறார்கள். இது தொடர்பான புத்தகங்கள், தேர்வுக் கட்டணம்,
இதர செலவுகளை அரசு ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் தேர்
வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறுமுறையும் தேர்வுக்கு அரசு
செலவில் செல்லலாம். இதுபோல் மொத்தம் மூன்று தடவை
தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், கைதி
கள் தேர்வு எழுதச் செல்லும்போது, அவர்களது சொந்த உடை
யிலேயே தேர்வு எழுத இசைவளிக்கப்படுகிறார்கள். அதேபோல்
அவர்களைக் காவல்காத்து, அழைத்துச் செல்லும் காவலர்களும்
சாதாரண உடை அணிந்து செல்கின்றனர்.

சிறையில் சமயம், நீதி நெறி வகையான விரிவுரைகள் அனு
மதிக்கப்படுகின்றன. ஆனால், நீதி அல்லது சமயம் சம்பந்தமாக
உரைகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது

என்பதோடு விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சார்ந்தவராக உள்ளாரோ அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் அத்தகைய உரைகளும் போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

IX. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை :

இப்பள்ளியில் 18 வயதிலிருந்து 23 வயதுவரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர் களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது :—

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) வேளாண்மை.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பாண்டு இசைக் கருவி பயிற்சி.

(ஐ) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து அனுப்பப்பட்ட பின்னர் தாங்களாகவே வேலையைத் தேடிக்கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங் குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு, அங்கு 24,25 வயது பிரிவைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இத்தகைய சிறை வாசிகள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக் கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலுள்ள துயிற்கூடம், 1894-ம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் கீழ் சிறையாக மாற்றப்பட் டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட சீர்திருத்தப்பள்ளி மாண வர்களின் புது வாழ்வுக்காக இயந்திரங்கள், பசு மாடு அல்லது எருமை மாடுகள் வாங்குவதற்காக நிதி உதவி வழங்கப்படு கிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூலிக்கப்படுகிறது.

X. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் :

சீர்திருத்த நிறுவனங்களிலிருந்தும், சீர்திருத்தப் பணி சேராத நிறுவனங்களிலிருந்தும் வெளிவருபவர்களுக்கு இலாபகரமான சொந்த தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு தச்சு வேலை, உலோக வேலை, அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக புழலில் ஆடவர் பிற்காப்பு இல்லம் அமைக்கப்பட் டது. பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை





இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில், நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு தொழில் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடத் திட்டத்தின்கீழ் ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலை மைக்கும் தேவைக்கும் ஏற்றாற்போல் மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. உரிய வயதுவந்த ஆடவர் மட்டுமே இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். மத்திய சிறைகளில் உள்ள 'பி' வகுப்புச் சிறைவாசிகள், சாதாரண காவல் வழக்குக்குட் பட்ட சிறைவாசிகள் ஆகியோருக்கு வழங்கப்படும் சிறந்த உணவு இப்பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

பல்லாவரத்தில் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டி டங்களில் இயங்கிவந்த இவ்வில்லம் புழலேரிக்கு அருகே உள்ள புழல் கிராமத்தில் சிறைத் துறைக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு, 1—11—1983 முதல் இங்கு செயல்பட்டு வருகிறது.

XI. சிறைப் பார்வையாளர்கள் :

குற்றவியல், நீதித்துறை, மருத்துவம், துப்புரவு நலம், தொழில், தீயணைப்புப் பணிகள் ஆகிய துறைகளிலிருந்து நியமிக் கப்படும் அரசுச் சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத் துறையில் நாட்டமுள்ள பொதுமக்கள் முக்கியமாக சமூகப் பணி யாளர்கள், உளநோய் வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு சிறைவாசி களின் நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் ஒவ்வொரு சிறையி லும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப் படுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்படும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர்கள், வழக்கமாக விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவிச் சங்கத்தில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு சிறைக்கும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர் கள் நியமிக்கப்படுவதுடன், மாவட்ட அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களையும் அரசு நியமித்துள்ளது. அவர்கள், மாவட்டத்திலுள்ள எந்தச் சிறையையும் பார்வையிடலாம். சிறை வாசிகளை நடத்துவது, சிறைகளை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் ஆகியன சிறைகளில் உரிய வாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தாம் தெரிந்துகொள் வதும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள சிறை வாசிகளைப் பார்வையிடுவதும், சிறைவாசிகள் எவரேனும் அவ ரிடம் புகார் செய்தால் அதனைக் கேட்டு, விசாரணை செய்வதும் பார்வையாளரின் கடமை ஆகும். சிறைப் பார்வையாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

XII. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் :

சிறைவாசிகள் தங்களது குடும்பத் தேவைகளை கவனிப்பதற் காக அவர்களுக்கு சம்பந்தப்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அரசால் விடுப்பு

அளிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக அத்தகைய விடுப்பு அளிக்கப்
படுவதற்கு முன்னர் காவல் துறையினரிடமிருந்து அறிக்கைபெறும்
முறையை கைவிட்டுவிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதிகார
வரம்புடைய சம்பந்தப்பட்ட நன்னடத்தை கண்காணிப்பு அலுவலர்,
சிறைவாசிகள் முதல் விடுப்புக் கோரிக்கை சம்பந்தப்பட்ட
எல்லா இனங்களிலும் உள்ளூர் காவல்துறை உதவி ஆய்வாளரை
கலந்தாலோசித்து தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக
அனுப்புகிறார். அதன்பிறகு அனுமதிக்கப்படும் விடுப்பிற்கான
கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை, நன்னடத்தைக்
கண்காணிப்பு அலுவலர் உள்ளூர் காவல்துறை உதவி ஆய்வா
ளரை கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அறிக்கையை
அனுப்புகிறார்.

ஐந்து ஆண்டு சிறைவாசம் அனுபவித்துள்ளவரும், இதுவரை
யில் விடுப்பில் சென்றிடாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில்
ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன்பிறகு இதற்கு முன்
னர் கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்
டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு
அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டுகாலம் சிறைவாசம் அனு
பவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து
விடுவிக்கப்பட்டபின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு
இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற
வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு, சிறைவாசிகளுக்கு அவர்கள் தங்களுடைய
நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி,
சொந்த மகன்/சொந்த மகள் மற்றும் சொந்த சகோதரி/சொந்த
சகோதரன் 'மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்
தாலோ அல்லது இறந்துபோனாலோ அவர்களைச் சென்று பார்க்
கவோ மற்றும் நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த
மகள் மற்றும் சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியோ
ரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் அவசரகால
விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. வருடத்திற்கு இத்தகைய அவசர
கால விடுப்பு 15 நாட்களுக்கு மேம்படக்கூடாது என்ற நிபந்தனைக்
குட்பட்டு இவ்வாறு அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள்
4 தவணைகளில் முதல் தவணை 6 நாட்களுக்கு மேற்படாமலும்,
எஞ்சியுள்ள 3 தவணைகளில் ஒரு தவணை ஒரு சமயத்தில் 3 நாட்
களுக்கு மேற்படக்கூடாது என்ற அளவின்படி, ஒரு குறிப்பிட்ட
காலத்திற்கு தண்டனை பெற்ற அல்லது ஆயுள் தண்டனை பெற்ற
சிறைவாசிகளுக்கு சிறையில் அவர்களின் நடத்தை திருப்திகரமாக
இருந்தால் வழங்கப்படுகிறது.

XIII. தண்டனைக் குறைப்பு.

சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம்
ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கும் வகையில் பலவிதமான
தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படு



கின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக, ஒரு மாதத்திற்கு
இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும்
சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக்
குறைப்பும் சாதாரண வகை தண்டனைக் குறைப்பாக அளிக்கப்
படுகிறது. சிறப் பணிகளுக்காக ஞாயிறன்றும், ஏனைய சிறை
விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்
வோராகவும் பணிபுரிய வேண்டிய சிறைவாசிகளுக்கு இவ்விதி
களின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு
மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பு
வழங்கப்படுகிறது. தண்டனைக் காவலர்களுக்கு, மாதத்திற்கு
எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறை
களின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் சிறைவாசி
களுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக்
குறைப்பாக ஒரு ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக
சிறப்பு தண்டனைக் குறைப்பாக சிறைத்துறைத் தலைவரால் ஒரு
ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகின்றன. கருத்தடை
அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு
ஓராண்டுகாலச் சிறப்புத் தண்டனைக் குறைப்பும் இரத்த தானம்
செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு சமய நேரத்தில் 15 நாட்கள்
தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்ட
னைக் குறைப்புத் தவிர, இரண்டாண்டும் அதற்கு மேலும் தண்ட
னையடைந்த சிறைவாசிகளை அக்கால அளவிற்கு முன்னரே
விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக்குழு பரிசீலனை செய்
கிறது. இதற்காக அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடத்தை
பற்றிய குறிப்புகளையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது,
மாவட்ட ஆட்சியர், நன்னடத்தை அலுவலர் ஆகியோர் அளித்த
அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைவாசியை அவருக்கு அளிக்
கப்பட்ட சிறை தண்டனை கால அளவு முடிவடைவதற்கு
முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது
பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

மத்திய அரசு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்
சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவை அமைக்கும்
முன்னர், ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளை அவர்களுடைய
தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்
வது குறித்து பரிசீலனை செய்வதற்காக ஆலோசனைக் குழு
வின் முன் வைக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் சிறையில் நன்
முறையில் நடந்திருக்கவேண்டும் என்பதோடு, 10 ஆண்டு சிறைத்
தண்டனை அனுபவித்திருக்க வேண்டும். இந்த 10 ஆண்டில்
அவர்கள் இரு பிரிவின்கீழ் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் கால
மும் அடங்கும். ஆனால், குற்றவியல் நடைமுறைச் சட்டக்
கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவின்படி ஆயுள் தண்டனை
அடைந்த சிறைவாசிகள், அவர்களுக்குரிய தண்டனைக் குறைப்பு
நீங்கலாக 14 ஆண்டுகள் சிறையிலிருந்த பின்னர் அவர்களுக்குரிய
தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்
வது குறித்து ஆலோசனைக் குழுவின் முன் பரிந்துரைக்கு வைக்க
வேண்டும். இப்புதிய பிரிவு நடைமுறைக்கு வந்தபோதிலும்

[1984 மார்ச் 31

அதாவது, 18—12—1978-க்கு முன் விசாரணை நீதிமன்றத்தால்
குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையளிக்
கப்பட்ட சிறைவாசிகளுக்குப் பொருந்தாது என்றும் 18—12—1978
ஆம் நாளோ, அதற்குப் பின்னரோ குற்றவாளியெனத் தீர்ப்
பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு
மட்டுமே பொருந்தும் என்றும் இந்திய உச்ச நீதி மன்றம் கருத்துத்
தெரிவித்துள்ளது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் மேற்சொன்ன
கருத்தினையொட்டி, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை
யின் 433-ஏ என்னும் புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர்
செயலிலிருந்து ஆலோசனைக் குழுத் திட்டத்தின் கீழுள்ள நடை
முறை விசாரணை நீதி மன்றத்தால் 18—12—1978-க்கு முன்னர்
குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்
கப்பட்ட சிறைவாசிகள் குறித்து பரிசீலனை செய்வதற்காக
பின்பற்றப்படும் என்று அரசு உள்துறையின் 6—1—1981
நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறைவாசிகளும், 55 வயதிற்கு
மேற்பட்ட பெண் சிறைவாசிகளும் முதன் முறையாக தண்டனை
அளிக்கப்பட்டிருந்து அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்ப
உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்
திருந்தால், ''வயது மூப்புத் திட்டத்தின்'' கீழ் அவர்களை விடு
தலை செய்ய, ஆலோசனைக்குழுவினால் பரிசீலனை செய்யத்
தகுதி உடையவர்களாவார்கள். மாநிலச் சிறைச்சாலைகள்
நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிட்டவாறு, சிறை மருத்துவ
அதிகாரி சான்றிதழ் வழங்குவதன்பேரில், நோயுற்ற ஆயுள் தண்
டனைச் சிறைவாசிகள் அவர்களது தண்டனைக் காலம்
முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப் பரிசீலனை
செய்யப்படுகிறது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலுள்ளோரைப்
பொறுத்தவரையில், காலக்கெடு முடியுமுன் விடுதலை செய்யும்
முறை செயலில் உள்ளது. ஆனால், இதுகுறித்துப் பின்பற்றப்
படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை ''நல்லிணக்கத்தின்
பேரில்'' விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல் என்று அழைக்கப்
படுகிறது. 1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சார்ந்த (1) உட்
பிரிவின்படி கண்காணிப்பாளர், நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை
செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள்
பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும்,
உரிய விசாரணைகளைச் செய்து, பெற்ற தகவலைப் பார்வை
யிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு
கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களிலுள்ள அந்
தந்த மாவட்ட நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை
மாநகரில் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளருக்கும்
பார்ஸ்டல் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும்



1984 மார்ச் 31]

நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும்
குழு பரிந்துரைத்துள்ள சிறைவாசிகள் பற்றிச் சிறைத்துறைத்
தலைவர் பரிசீலித்து பின்னர் ஆணை பிறப்பிக்கிறார்.

1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் 10-ஏ விதி
யின் கீழ் ஏனைய மத்திய சிறைகளிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு
மாற்றப்படுபவர்கள் (ஆயுள் தண்டனை அடைந்தவர்கள்) 23
வயதை அடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக தண்ட
னையைக் குறைக்க அரசால் பரிசீலனை செய்யப்படுகிறது. அவர்
களது தண்டனையைத் தள்ளுபடி செய்ய அரசு மறுத்தால்,
அவர்கள் 25 வயதை அடையும் வரை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள
துயிற்கூடத்தில் வைக்கப்பட்டு பின்னர் அவர்கள் முன்னதாக
எந்த மத்திய சிறையிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்பட்
டார்களோ, அந்த சிறைக்கே மீதமுள்ள தண்டனையைக் கழிக்க
மாற்றப்படுகின்றனர்.

## XIV. சிறைவாசிகளின் நலன் :

தற்போது சிறைவாசிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம்
10 உள்ளன. எட்டு மத்திய சிறை ஒவ்வொன்றிலும் ஒரு
பதவியும், வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைக்கு ஒரு
பதவியும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கு ஒரு பதவியும்
உள்ளன. இந்த நல அலுவலர் சிறையின் விதிமுறைக்கேற்ப
சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும்
அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி
செய்தும் வருகிறார்கள்.

பெண் சிறைக்கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்
தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைக்கப்படுகின்றனர்.
அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தை காப்பிடமும், வேலூர்
மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களை
சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வரா
விட்டால் அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் சென்னை
மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பால
மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்
களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை காந்தி கிராமத்
திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைக்கைதிகளின் பயனுக்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும்
பண்பாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக்
குழு, சிறைக் கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்
கொருமுறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக்
கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

மத்திய சிறைகளில் எல்லாவற்றிலும் சிறைக்கைதிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பணிக்கொடை ஈட்டும் சிறைக்கைதிகளும் தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைக் கைதிகளும் இந்த சிற்றுண்டி, விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளுக்கு அவர்களின் விடுதலைக்குப் பின்னர் அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் வகையில் பெரம்பூரிலுள்ள டான்சி தோல் தொழிற்சாலையில் பூட்சு மற்றும் ஷூக்கள் தயாரிப்பிலும், இயந்திரங்களை இயக்குவதிலும், 50 ஆயுள் தண்டனை பெற்ற சிறைக் கைதிகளுக்கு பயிற்சி அளிக்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த ஏற்பாடானது வேலூர் மத்திய சிறையில் தயாரிக்கப்படும் பூட்சு மற்றும் ஷூக்களின் தரத்தை மேம்படுத்த உதவும்.

இந்திய குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைக் கைதியின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய், மனைவி/கணவன், மகன்/மகள், சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியவர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல் அச்சிறைகைதி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்ப்பதற்கு வசதியாக, தமிழ்நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம், குறைந்தபட்ச வகுப்பில் புகைவண்டி அல்லது சாலை வழிப்பயணத்திற்கான போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறை கண்காணிப்பாளர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் மாநில மகளிர் சிறை, வேலூர் கண்காணிப்பாளருக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

சிறையில் ஒழுங்கமைதியைப் பராமரிக்கும் நோக்குடன் சிறை நிருவாகத்தில் கைதிகள் பங்கேற்ற ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பஞ்சாயத்து முறை, திரும்ப திரும்ப குற்றம் செய்து சிறைக்கு வரும் கைதிகளுக்காகவென்றே உள்ள சேலம் மத்திய சிறை, கடலூர் மத்திய சிறை ஆகியவை நீங்கலாக, மத்திய சிறை அனைத்திலும் வேலூரிலுள்ள மகளிர் சிறைச்சாலையிலும் கொண்டுவரப்பட்டுள்ளது.

## XV. சிறைக் கைதிகளுக்கு சட்ட உதவி.

விசாரணைகைதிகளுக்கும், தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும் கைதிகளின் பிரச்சினையை ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய மத்தியச் சிறைகளில் வழக்குரைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு கொண்டுவந்துள்ளது.



## XVI. சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல்.

அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, எட்டு மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளியிலும், வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறையிலும், கைதிகள் புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய, முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. கைதிகள் தங்கள் புகார்களை எழுதி அப்பெட்டிகளில் இட, எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதத்தின் முதல் பணிநாளில் சிறை அதிகாரிகளால், மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளின் முன் புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகளைக் கொண்டுவருவர். அவை ஒவ்வொன்றையும் அவர்கள் ஆய்வு செய்து, அல்லது சிறை அதிகாரிகள் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின் குறிப்புகளை சிறைத்துறைத் தலைவருக்கு நேரடியாக அனுப்புவர். கைதிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப்பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| தொடர் எண்ணும், சிறையின் பெயரும். (1) | பெட்டிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. சென்னை மத்திய சிறை .. .. .. | 3 |
| 2. வேலூர் மத்திய சிறை .. .. .. | 3 |
| 3. கடலூர் மத்திய சிறை .. .. .. | 3 |
| 4. திருச்சிராப்பள்ளி மத்திய சிறை .. .. | 3 |
| 5. சேலம் மத்திய சிறை .. .. .. | 3 |
| 6. கோயம்புத்தூர் மத்திய சிறை .. .. | 3 |
| 7. மதுரை மத்திய சிறை .. .. .. | 3 |
| 8. பாளையங்கோட்டை மத்திய சிறை .. | 3 |
| 9. புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி .. | 3 |
| 10. வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை .. | 2 |

## XVII. நன்னடத்தைக் கண்காணிப்புப் பணி.

நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது குற்றவாளிகள் வளர்ந்த சூழ்நிலை அவர்கள் நடந்துகொள்ளும் விதம் பற்றி விசாரிப்பது, பிணையப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும், இளங்குற்றவாளிகளையும், நன்னடத்தை ஜாமீனில் பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும்

ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப் பட்டவர்களைக் கண்காணிப்பதும் நீதிமன்றங்களுக்கு ஆலோ சனை நல்குவதும் முதலியன ஆகும். சிறைத் துறைத் தலை வரின் முழுக்கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட் பட்ட நன்னடத்தைப் பணிப்பிரிவு, நன்னடத்தைக் கண்காணிப் புத்தலைமை கண்காணிப்பாளரின் நேரடிப்பொறுப்பில் உள்ளது. வட்டார அலுவலர் ஒருவரைக் கொண்டு நன்னடத்தை ஆராய்ச் சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்திற்குப் பதிலாக, 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்ன டத்தை கண்காணிப்புச் சட்டம் எனப்படும் மத்தியச் சட்டம் ஒன்று (மத்தியச் சட்டம் 20/1958) கொண்டுவரப்பட்டது. இம்மத்தியச் சட்டம் சென்னை மாநகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962-லிருந்தும் தமிழ்நாடு முழுவதும் 1—5—1964-லிருந்தும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. குற்றவாளிகள் புரிந்த குற்றம் முதல் தடவையாக இருந்தாலும், அக்குற்றத்திற்கான தண்டனை இரண்டு ஆண்டுகளுக்கு மேற் படாத சிறைத் தண்டனை அல்லது அபராத தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைகளோ விதிக்கக்கூடிய வகையில் இருந்து முந்தைய குற்றம் எதுவும், குற்றமிழைத்தவருக்கு எதிராக நிரூபிக்கப்படாமலிருந்தால், நன்னடத்தை கண்காணிப்பில் விடு தலை செய்ய இச்சட்டம் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக் கிறது. மத்தியச் சட்டத்தின் விதித்துறைகள் சீர்திருத்த நிரு வாகத்தின் தற்காலப் போக்கிற்கேற்ப உள்ளது.

XVIII. விடுதலைப்பெற்ற கைதிகள் உதவிச் சங்கம், தமிழ்நாடு.

தமிழ்நாடு விடுதலைப்பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குற்றம் புரிந்து தண்டிக்கப் பட்டவர்களுக்குப் புது வாழ்வு அமைத்துக்கொடுத்தல், தேவைப் படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், தற்செயலாக குற்றம் புரிந்தவர்களும், இளங்குற்றவாளிகளும் வழக்கமாகக் குற்றம் புரிகிறவர்களாக மாறுவதைத் தடுத்தல், அவர்களின் நலனுக்காக புதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்துதல் ஆகியவை இச் சங்கத்தின் நோக்கங்களாகும். சிறுதொழில்கள் நடத்து வதற்கும் கருவிகள், தேநீர் கெண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கும், இச்சங்கம், உதவித் தொகை கொடுக்கிறது. மேலும், புகைவண்டி, பேருந்து செலவிற்காக உதவித்தொகையும் தொழில் செய்வதற்கும் துணைக்கருவிகள் வாங்குவதற்கும் மானியங்களையும் வழங்குகிறது. தொழிற் பயிற்சி பெறுவதற்கும் வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழக்காட சட்ட உதவி செய்வதற்கும், வயது முதிர்வு ஓய்வூதியம் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற் றையும் வழங்குகிறது.



இச்சங்கத்திற்கு அரசினால் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மானிய உதவி ரூ. 12,000, 1980–81-லிருந்து ரூ. 18,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

XIX சென்னை நகரத்திலும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் உள்ள தண்டனைச் சிறைவாசிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறை யைப் புழலில் (செங்குன்றம்) கட்டுதல்.

புழல் கிராமத்தில், சிறைத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீனமாக ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி தொடங்கப் பட்டுள்ளது. கீழ்க்காணும் பணிகளை நிறைவேற்றிட, அரசு 1981 ஜூலையில் ரூ. 50 இலட்சத்திற்கு அனுமதி அளித் துள்ளது.

(1) சுற்றுச்சுவர்.

(2) நிர்வாகக் கட்டிடம்.

(3) 200 சிறைக்கைதிகளுக்கு இட வசதி அளிக்க இணைக் கட்டிடத் தொகுதி ஒன்று.

(4) புறப்பணியாளர் சிகிச்சைக்காக மருத்துவக் கட்டிடம்

(5) தொடக்கத்தில் தேவையான தண்ணீர் வசதி அளித்தல்

மேற்காணும் பணிகளைப் பொதுப்பணித்துறையினர் நிறை வேற்றி வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், புழலில் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக, 1981 அக்டோபரில், அரசு ரூ. 10 இலட்சம் வழங்கியது:—

(1) மேல் நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(2) கழிவு நீரின் நச்சுத் தன்மை நீக்கும் இயந்திரத் தொகுதி.

இப்பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் எடுத்துக்கொண்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக, புழலில் அமைக்கப்பட்டு வரும புதிய மத்தியச் சிறையில் கூடுதல் தொகுதிகள், மருத்துவமனை, சமையல் அறை-உணவருந்தும் கூடம், தனியிருப்புத் தொகுதி மகளிர் வெளி முற்றம், முதலியவற்றைக் கட்டுவதற்காக ரூபாய் 143.01 இலட்சம் செலவிலான பணிகளுக்கு அரசு, 1983 ஏப்ரலில் அனுமதி வழங்கியது. பணிகள் நடந்தேறிவருகின்றன. தற் போது கட்டப்பட்டு வரும் கட்டிடங்களில் ரூ. 44.85 இலட்சம் செலவில் வசதிகள் செய்து கொடுப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1984 மார்ச் 31

## XX. சிறை சீர்திருத்தக் குழு.

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான
பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும் நேர்மையுடனும்
வாழ்க்கை நடத்தும் வகையில் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்
பதும், சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும், இம்மாநிலத்தின்
சிறைச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்தில்
சிறைகள் நிர்வாகத்தில் செய்யவேண்டிய மேம்பாடுகள் குறித்துப்
பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி பாட்னா
உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர். எல்.
நரசிம்மன், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் முன்னாள் சிறைத்
துறைத் தலைவர் திரு. எஸ். எம். டயஸ் அவர்களையும்,
பேராசிரியர் டாக்டர் ஏ. வெங்கோபராவ் (உளவியல் மருத்துவப்
பேராசிரியர் மற்றும் உளவியல் துறைத் தலைவர்) அவர்களையும்
உறுப்பினர்களாகக் கொண்டு 1978 பிப்ரவரியில் அரசு சிறை
சீர்திருத்தக் குழுவை நியமித்தது. சிறைகள், கைதிகள் தொடர்
பாக பல பரிந்துரைகளை இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்
துள்ளது. மொத்தம் 223 பரிந்துரைகளில் 73 பரிந்துரைகள்
குறித்து அரசு இதுவரையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. இக்
குழுவின் ஏனைய பரிந்துரைகள் அதிக நிதி ஒதுக்கம் தேவைப்
படுபவை; சிறைச் சட்டங்களைத் திருத்த வேண்டியவை; இம்
மாநிலத்தின் நிதி ஆதாரம் மத்திய அரசு உறுதி அளித்துள்ள
நிதி உதவி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, அரசு இவை
குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. சிறைகளின் நிலை
யிலும், கைதிகளின் நிலையிலும் மேலும் நல்ல முன்னேற்றம்
காணும் வகையில் அரசு இயன்றவரையில் முடிந்த அளவிற்குப்
பல பரிந்துரைகளைச் செயல்படுத்த பெரிதும் ஆர்வம் கொண்
டுள்ளது.

## XXI. மாநிலச் சிறை நடைமுறை நூலைத் திருத்துதல்.

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கி
யுள்ள விதித் துறைகளையும், 1978-79 ஆம் ஆண்டு சிறை
சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரை
களையும் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த
நடைமுறை நூலின் தொகுதி II, பாகம் I-ல் சட்டப்படியான
விதிகளை திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு
சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலுக்கு அரசு ஏற்பளித்துள்
ளது. இந்த நூல் அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகிறது.
திருத்தப்பட்ட தமிழ்நாடு சிறை சீர்திருத்த விதிகளின் தொகுதி
II-ஐ இரண்டு தொகுதிகளாக, அதாவது ஒரு தொகுதி படிவங்கள்
முதலியவற்றைக் கொண்டதாயும், மற்ற தொகுதி பிற்சேர்க்கை
கொண்டதாயும் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.



1984 மார்ச் 31]

## XXII. 1984-85 ஆம் ஆண்டில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்.

பின்வரும் திட்டங்கள் 1984-85 ஆம் ஆண்டில் நிறைவேற்றக்
கருதப்பட்டுள்ளன :—

| திட்டங்களின் பெயர். | செலவு. |
|---|---|
| | ரூ. காசு |
| 1. சிறைத் துறைத் தலைவர் அலுவலகம்: சில்லறைக் கணக்குப் பட்டிகளை ஆய்வு செய்வதற்காக உதவியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல். | 12,000.00 |
| .. ஆறு மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலுமுள்ள தரம் II மேலாளர்களின் பதவிகளை தரம் I மேலாளர் பதவிகளாகத். தரம் உயர்த்துதல். | 5,000.00 |
| 3. கைதிகளுக்குச் சட்ட உதவி 'ரிட்' மேல் முறையீடுகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்கு கண்காணிப்பாளர் பதவி ஒன்று, உதவியாளர்கள் பதவி இரண்டு, தட்டச்சர் பதவி ஒன்று ஆகியவற்றிற்கு அனுமதி அளித்தல். | 48,000.00 |
| 4. மத்திய சிறை, கோயம்புத்தூர் — ஓய்வுக் கொட்டகை கட்டுதல். | 1,15,000.00 |

## XXIII. ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரை:

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகள் நிர்வாகத் தரத்தை
உயர்த்த வேண்டுமென்று ஏழாவது நிதிக்குழு வலியுறுத்தியுள்ளது.
நாளொன்றுக்கு கைதி ஒருவருக்கு 6 ரூபாய் செலவிடப்படவேண்டு
மென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுபடுத்துவதன் மூலமும்.
புதிய சிறைகள் கட்டுவதன் மூலமும் சிறைகளில் அதிக
எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்
என்றும், இக்குழு வலியுறுத்தி உள்ளது. அதன்படி, இக்குழு
1979-80 முதல் 1983-84 வரையிலுமுள்ள காலத்திற்கு வரு
வாயினச் செலவு வகையில் ரூ. 631 இலட்சமும், மூலதனச்

செலவு வகையில் ரூ. 862 இலட்சமும் ஒதுக்கீடு செய்யும்படி பரிந்துரைத்தது. ஆண்டு வாரியான பிரித்தளிக்கப்பட்ட இவ்வுதவி தொகையின் விவரம் பின்வருமாறு :—

மூலதனச் செலவு.

| ஆண்டு. | கட்டிடங்கள் கட்ட. | வசதிகள் செய்து கொடுக்க. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1979–80 .. | 269.78 | 30.60 | 300.38 |
| 1980–81 .. | 180.87 | 71.61 | 252.48 |
| 1981–82 .. | 99.82 | 19.00 | 118.82 |
| 1982–83 .. | 91.72 | 20.00 | 111.72 |
| 1983–84 .. | 69.84 | 8.50 | 78.34 |
| மொத்தம் .. | 712.03 அல்லது 712.00 | 149.71 அல்லது 150.00 | 861.74 அல்லது 862.00 |



வருவாயினச் செலவு.

| வரிசை எண்ணும் விபரமும். | 1979-80. | 1980-81. | 1981-82. | 1982-83. | 1983-84 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| 1 சத்துணவுத் திட்டத்தை விரிவு படுத்துதல் : சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துதல். சிறையில் பணிபுரியும் காவலர்களுக்கு ஒருவேளை உணவு வழங்குதல். | 5 | 28 | 31 | 34 | 37 | 135 |
| 2 சிறைக் கைதிகளுக்குக் கூடுதல் படுக்கைகள், பாத்திரங்கள் வழங்குதல். | 3 | 4 | 5 | 6 | 7 | 25 |
| 3 கூடுதல் பணியாளர்களுடன் கூடிய மேற்பார்வை கணக்குப் பிரிவுகள் உட்பட கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான நிருவாகச் செலவு. | .. | .. | 52 | 55 | 58 | 165 |
| 4 எட்டு மத்தியச் சிறைகளுக்கு மெட்டடோர் வண்டி வழங்குதல. | .. | .. | 3.65 | 2.19 | .. | 5.84 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 தட்டச்சுப் பொறி | .. | .. | 0.34 | 0.16 | .. | 0.50 |
| 6 தொலைபேசி | .. | .. | 0.07 | 0.08 | .. | 0.15 |
| 7 மேசை நாற்காலி முதலியன | .. | .. | 1.00 | 0.58 | .. | 1.58 |
| 8 சிறைக் கைதிகளுக்கு பணி வசதி அளித்தல். | .. | .. | 2.75 | 2.60 | .. | 5.35 |
| 9 வருவாய்த் துறையிடமிருந்து கிளைச் சிறைகளின் நிர்வாகத்தை சிறைத் துறை மேற்கொள்ளுதல். | .. | .. | 18.00 | 78.00 | 117.00 | 213.00 |
| 10 சிறைக் கைதிகளுக்கு ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவு படுத்துதல். | .. | .. | 8.60 | 10.00 | 10.00 | 28.60 |
| 11 சிறைக் கைதிகளுக்கு சிறு தொழிலில் பயிற்சியளித்தல். | .. | .. | 13.20 | 16.00 | 17.00 | 46.20 |
| 12 சிறைக் கைதிகளுக்காக சிற்றுண்டிச் சாலை வசதிகள் செய்து கொடுத்தல். | .. | .. | 0.20 | .. | .. | 0.20 |
| 13 செலவு உயர்வுக்கு ஒதுக்கீடு | .. | .. | .. | .. | .. | 4.58 |
| மொத்தம் .. | 8.00 | 32.00 | 135.81 | 204.61 | 246.00 | 631.00 |



மூலதனச் செலவு.

மூலதனச் செலவு வகையின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 862 இலட்சத்தில், மத்திய அரசு இதுநாள் வரை கீழ்க்காணும் செலவினங்களை ஒப்பளித்துள்ளது:—

| திட்டம். (1) | ஒப்பளித்த வருடம். (2) | ரூபாய் இலட்சத்தில். (3) |
|---|---|---|
| 1. 1979-80 ஆம் ஆண்டில் கூடுதல் இடவசதி ஏற்படுத்த, குடியிருப்புகள் கட்ட. | ஜூன் 1980 .... | 200.00 |
| | பிப்ரவரி 1981 .. | 100.00 |
| 2. தற்போதுள்ள சிறைகளில் கூடுதல் இடவசதி பெருக்க மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க. | பிப்ரவரி 1982 .. | 118.82 |
| 3. சிறைகளில் கூடுதல் இடவசதி பெருக்கவும், அடிப்படை வசதிகள் செய்யவும். | செப்டம்பர் 1982 | 111.72 |
| | மொத்தம் .. | 530.54 |

இத்தொகையைப் பயன்படுத்துவதன் மூலம் மூலதனச் செலவின்கீழ் மாநில அரசு கீழ்க்காணும் திட்டங்களுக்கு அனுமதி அளித்தது.

| திட்டத்தின் பெயர். (1) | செலவுத் தொகை. (2) | அரசு ஆணை எண். நாள். (3) |
|---|---|---|
| | ரூபாய். | |
| 1. பாளையங்கோட்டை, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம் ஆகிய மத்திய சிறைகளில் கூடுதல் இடவசதி செய்து கொடுக்க, குடியிருப்புகள் கட்டுதல். | | |
| 2. நீரடிக் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி முதலிய வசதிகளை ஏற்படுத்தல். | 2,96,73,215 (1 முதல் 3 வரை) | 487, உள்துறை, நாள் 22-2-1980. |
| 3. கடலூர், செங்கற்பட்டு கிளைச் சிறைகளை தனிக் கிளைச் சிறைகளாக மாற்றுதல். | | |
| 4. புழலில் புதிதாக மத்திய சிறை கட்டுதல் (முதற்கட்ட கட்டிடப் பணிகள்). | 50,00,000 | 1726, உள்துறை, நாள் 23-7-1981. |
| 5. புழலில் மேல்நில நீர்த்தொட்டிகள் நீர்சேமிப்புத் தொட்டிகள் கட்டுதல். | 10,00,000 | 2555, உள்துறை, நாள் 31-10-1981. |
| 6. திருச்சிராப்பள்ளி, கோவை, கடலூர் மத்திய சிறை மற்றும் செங்கை, பெரியார், கோவை மாவட்டங்களில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட, அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல். | 2,32,75,000 | 747, உள்துறை, நாள் 8-4-1983. |
| 7. புழலில் உருவாகிக் கொண்டிருக்கும் மத்திய சிறைக்கான இரண்டாவது கட்ட கட்டிடப் பணிகள். | 1,43,01,000 | 749, உள்துறை, நாள் 9-4-1983. |
| 8. கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க. | 67,87,000 | 714, உள்துறை, நாள் 6-4-1983. |



## வருவாயினச் செலவு.

வருவாயினச் செலவு வகையில் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 631 இலட்சத்தில், மத்திய அரசு இந்நாள் வரை கீழ்க்கண்டவாறு ரூ. 272 இலட்சத்திற்கு அனுமதித்துள்ளது:—

| திட்டத்தின் பெயர். (1) | ஒப்பளித்த வருடம். (2) | செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்). (3) |
|---|---|---|
| 1. சிறைவாசிகளுக்கு சத்துணவு, சாப்பிடுவதற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள் வழங்குதல். | ஜூன் 1980 .. | 40 |
| 2. சிறைகளில் கைதிகளை கூடுதலாக வைப்பதால் கண்காணிப்பு மற்றும் கணக்குப் பிரிவுகளில் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்கள் குறித்த செலவு. | ஜூன் 1981 .. | 52 |
| 3. கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிருவாகத்திலிருந்து சிறைத்துறை நிருவாகத்திற்கு கொண்டு வருதல். | ஜூன் 1981 .. | 18 |
| 4. கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்தல் மற்றும் சிறைக்குள் சிற்றுண்டி வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல். | ஜூன் 1981 .. | 22 |
| 5. சத்துணவு திட்டத்தை விரிவுபடுத்தல் .. .. | செப்டம்பர் 1982 | 29 |

| திட்டத்தின் பெயர். (1) | ஒப்பளித்த வருடம். (2) | செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 6. (அ) இளைச் சிறைகளை வருவாய்த்துறை நிருவாகத்திலிருந்து சிறைத் துறை நிருவாகத்திற்கு கொண்டுவருதல். | செப்டம்பர் 1982 | 78 |
| (ஆ) சிறைவாசிகளுக்கு கூடுதல் படுக்கை மற்றும் பாத்திரங்கள் வழங்குதல். | டிை | 6 |
| (இ) கைதிகளுக்கு ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்த, கைதிகளுக்கு சிறு தொழில்களில் பயிற்சி அளிக்க, சிறைக்குள் சிற்றுண்டி சாலையை ஏற்படுத்த. | டிை | 27 |
| மொத்தம் .. | | 272 |



வருவாயினச் செலவு வகையில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி அளித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். (1) | அரசு ஆணை எண்: நாள். (2) |
|---|---|
| 1. சிறைக் கைதிகளுக்கு சத்துணவு வழங்க. | 487 உள்துறை, நாள் : 22—2—1980 |
| 2. மத்தியச் சிறைகளிலுள்ள கைதிகளுக்கு பாத்திரங்கள், உறையோடு கூடிய தலையணை வழங்குதல். | 487, உள்துறை, நாள்: 22—2—1980. |
| 3. (அ) பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறையின் கீழ் எடுத்துக் கொள்ளுதல். | 1840, உள்துறை, நாள்: 5—8—1981 |
| (ஆ) வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கிளைச் சிறைகளை சிறைத்துறை எடுத்துக்கொள்ளுதல். | 675, உள்துறை, நாள் : 30—3—1983 |
| (இ) தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறை எடுத்துக்கொள்ளுதல். | 1976, உள்துறை, நாள் : 22—9—1983 |
| 4. சிறைக் கைதிகளுக்கு சிற்றுண்டிச் சாலையை திறத்தல். | 144, உள்துறை, நாள் : 23—1—1982 |
| 5. கைதிகளின் ஊதியம் ஈட்டும் திட்டத்தை நிறைவேற்றுதல். | 1815, உள்துறை, நாள்: 17—7—1982 |
| 6. சிறைச்சாலைகளில் கைத்திறத் தொழில் அறிமுகப்படுத்துதல். | 1326, உள்துறை, நாள்: 28—5—1982 |
| 7. திருத்தியமைக்கப்பட்ட அதிகரிக்கப்பட்ட உணவு வழங்க. | 2366, உள்துறை நாள்: 14—9—1982 |

| திட்டத்தின் பெயர். (1) | அரசு ஆணை எண். நாள். (2) |
|---|---|
| 8. மேற்பார்வை, கணக்குப் பிரிவுகள் உட்பட காவல் பணியாளர்களை வேலைக்கமர்த்தல் :— | |
| (1) வேலூர் கிளைச் சிறை .. | 840, உள்துறை, நாள் : 28–4–1983. |
| (2) மதுரை மத்தியச் சிறை .. | 2566, உள்துறை, நாள் : 8–12–1983. |
| (3) பாளையங்கோட்டை | 2568, உள்துறை, நாள் : 8–12–1983. |
| (4) கடலூர் கிளைச் சிறை .. | 2569, உள்துறை, நாள் : 8–12–1983. |
| (5) செங்கற்பட்டு தனிக் கிளைச் சிறை. | 2570, உள்துறை, நாள் : 8–12–1983. |
| (6) சேலம் மத்தியச் சிறை .. | 2571, உள்துறை, நாள் : 8–12–1983. |

இம் மாநிலத்திலுள்ள கிளைச் சிறைகள் அனைத்தும் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து சிறைத்துறை நிருவாகக் கட்டுப்பாட்டிற்கு காவல் துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அதிகாரிகளுக்குப் பதிலாக சிறைத்துறை பணியாளர்களை நியமிப்பதன் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது, மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஏழாவது நிதிக் குழுவின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் தொகையைப் பயன்படுத்துவது குறித்த தற்போது நிலை, இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதியுதவி முழுவதையும் 1983–84 ஆம் திட்டக் கால அளவிற்கு முன்னதாகப் பயன்படுத்துவதற்காக மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து எஞ்சியுள்ள மூலதன உதவியின் கீழ் ரூ. 331.20 இலட்சத்தையும், வருவாய் செலவிற்கான உதவியின்கீழ், ரூ. 359.00 இலட்சத்தையும் வழங்க அனுமதி அளிக்க வேண்டுமெனத் தமிழக அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது.

## XXIV. எட்டாவது நிதி உதவிக் குழு :

மூலதனச் செலவு வகையில் ரூ. 1,700.30 இலட்சத்திற்கும், வருவாயினச் செலவு வகையில் ரூ. 500.55 இலட்சத்திற்கும் எட்டாவது நிதி உதவிக் குழுவின் பரிசீலனைக்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# இணைப்பு I.

(IIஆம் எண் இனத்தைக் காண்க.)

சிறைத் துறைத் தலைவர்.
(ரூ. 1,600—75—1,750—100—2,250.)

சிறைத் துறைத் துணைத் தலைவர்
(ரூ. 1,300—75—1,900—100—2,090)

---

...ாப்பு இல்லம்,
...ம்.

...ர்
...1,850.)

...ாளர்
...75-30-855-

...குநர்
...190-20-650-

...45-15-550).

...45-15-550).

...ளர், நிலை 1
...45-15-550).

...வர், நிலை 11
...5-10-475).

---

நன்னடத்தைப் பிரிவு.

தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்
(ரூ. 1,000-60-1,300-70-1,650)

வட்டார நன்னடத்தை அலுவலர்
(ரூ. 750-50-1,350).

நன்னடத்தை அலுவலர்
(ரூ. 600-30-750-35-890-40-1,050).

---

மத்திய சிறைச்சாலைகள் (தேர்வு நிலை)
கண்காணிப்பாளர் (ரூ. 1,000-60-1,300-70-1,650).

கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500).

அலுவலகம்.

சிறைச்சாலைக்குள்

கூடுதல் கண்காணிப்பாளர்
(ரூ. 750-50-1,350).

சிறை அலுவலர்,
(ரூ. 600-30-750-35-890-40-1,050).

சிறைத் துணை அலுவலர்
(ரூ. 450-20-590-25-740-30-800).

சிறை உதவி அலுவலர்
(ரூ. 400-15-490-20-650-25-700).

முதன்மை தலைமைச்\ சிறைக் காவலர்/வாயிற் காவலாள்
(ரூ. 350-10-420-15-600).

சிறைக் காவலர், நிலை I
(ரூ. 295-5-315-10-475).

சிறைக் காவலர், நிலை II
(ரூ. 280-5-320-10-450).

உற்பத்தி நிறுவனம்

தொழிற்சாலை மேலாளர்.
(ரூ. 600-30-750-35-890-40-1,050).

காலணி தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர்
(ரூ. 525-25-675-30-855-35-925).

தச்சு ஆசிரியர், நிலை 1 / தச்சு கம்மியர்
(ரூ. 400-15-490-20-650-25-700).

நூற்பு ஆசிரியர், நெசவு ஆசிரியர், சாய வேலை ஆசிரியர், சணல், கம்பளி சிக்கு எடுப்பு ஆசிரியர்
(ரூ. 525-25-675-30-855-35-925).

தையல் ஆசிரியர், நிலை I
(ரூ. 325-10-445-15-550).

தையல் ஆசிரியர், நிலை II முதலியவர்கள்
(ரூ. 280-5-320-10-450).

இப்ப எழுத்தர், நெசவுப் பணியாள், புத்தகம் கட்டும் மேஸ்திரி
(ரூ. 265-5-325-10-425).

பயிற்சி.

இடை நிலை-ஆசிரியர்
(ரூ. 350-10-420-15-600).

தொடக்க நிலை ஆசிரியர் (ரூ. 280-5-320-10-450).

---

மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்.
கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200.60-1500).

பாலர் பள்ளி

இடை நிலை ஆசிரியர்
(ரூ. 350-10-490-15-600).

தொடக்க நிலை ஆசிரியர்
(ரூ. 280-5-320-10-450).

ஆயா (ரூ. 280-5-320-10-450).

சிறைச்சாலைக்குள்.

துணைக் கண்காணிப்பாளர்
(ரூ. 600-30-750-35-890-40-1,050).

மூதாய் (ரூ. 450-20-590-25-740-30-800).

உதவி மூதாய் (ரூ. 450-20-590-25-740-30-800).

தலைமை வாயிற் காவலாள் (பெண்), முதன்மைத் தலைமைச் சிறைக்காவலர் (பெண்)
(ரூ. 350-10-420-15-600).

சிறைக் காவலர் (பெண்), நிலை I (ரூ. 295-5-315-10-475).

சிறைக்காவலர் (பெண்), நிலை II (ரூ. 280-5-320-10-450).

---

பார்ஸ்டல் பள்ளி, புது...
கண்காணிப்பாளர்
ரூ. 850-50-1,200.60,-...

அலுவலகம்.

பள்ளி...

துணைக் கண்...
(ரூ. 600-3...
40-1,05...

உதவிக் கண்...
(ரூ. 450-2...
30-800)

துணை உத...
பாளர் (ரூ...
650-25...

முதன்மை அ...
(ரூ. 350-1...

சிற்றலுவலர்,...
(ரூ. 295-...

சிற்றலுவலர்,...
(ரூ. 280-...

## இணைப்பு II.

(IIஆம் எண் இனத்தைக் காண்க)

சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கை.

| தொடர் எண் | பதவிகளின் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சிறைத் துறைத் தலைவர் .. .. .. | 1 |
| 2. | சிறைத் துறைத் துணைத் தலைவர் .. | 1 |
| 3. | கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4. | உதவி கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 5. | சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6. | சிறைக் கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) | 7 |
| 7. | சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 2 |
| 8. | கண்காணிப்பாளர், மகளிர் மாநிலச் சிறை, வேலூர். | 1 |
| 9. | சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 6 |
| 10. | துணைக் கண்காணிப்பாளர்கள், மாநில மகளிர் சிறை மற்றும் சீர்திருத்தப்பள்ளி. | 2 |
| 11. | சிறை அலுவலர்கள் .. .. .. | 8 |
| 12. | அரசு உதவி மருத்துவர்கள் (தேர்வு நிலை) .. | 1 |
| 13. | அரசு உதவி மருத்துவர்கள் .. .. | 17 |
| 14. | தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் | 1 |
| 15. | துணைத் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர். | 2 |
| 16. | மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |
| 17. | கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல். | 1 |

பணியாளர் அமைப்பு :

1. பொதுவான வகையினர்.

| | | |
|---|---|---|
| 18. | தேர்வு நிலை அலுவலகக் கண்காணிப்பாளர் | 1 |
| 19. | அலுவலக கண்காணிப்பாளர் .. .. | 6 |
| 20. | உதவியாளர்கள் (தேர்வு நிலை) .. .. | 25 |
| 21. | உதவியாளர்கள் .. .. .. | 65 |
| 22. | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 76 |
| 23. | இளநிலை உதவியாளர்கள் (தேர்வு நிலை) .. | 10 |
| 24. | சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. .. | 3 |
| 25. | தட்டச்சர்கள் .. .. .. .. | 36 |
| 26. | பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 33 |
| 27. | பதிவுரு எழுத்தர்கள் (தேர்வு நிலை) .. | 3 |

| தொடர் எண் | பதவிகளின் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | (2) | (3) |
| 28. | டபேதார் (தேர்வு நிலை) | 1 |
| 29. | அடிப்படை பணியாளர்கள் | 90 |
| 30. | அடிப்படை பணியாளர்கள் (தேர்வு நிலை) | 4 |
| | **2. சிறப்பு வகையினர்.** | |
| 31. | காப்பாளர் | 1 |
| 32. | துணைச் சிறை அலுவலர்கள் | 11 |
| 33. | உதவி கண்காணிப்பாளர்கள் | 1 |
| 34. | துணை உதவி கண்காணிப்பாளர் | 1 |
| 35. | கண்காணிப்பாளர்கள் — தனிக் கிளைச் சிறைகள். | 3 |
| 36. | கண்காணிப்பாளர்கள்— கிளைச் சிறைகள் (I) | 5 |
| 37. | உதவிக் காப்பாளர்கள் | 2 |
| 38. | கண்காணிப்பாளர் — கிளைச் சிறைகள் (II) | 5 |
| 39. | உளவியல் வல்லுநர்கள் | 3 |
| 40. | சமூகப் பணியாளர்கள் | 3 |
| 41. | உதவிச் சிறை அலுவலர்கள் | 92 |
| 42. | தொழிற்சாலை மேலாளர் | 1 |
| 43. | செவிலியர் (தேர்வு நிலை) | 2 |
| 44. | செவிலியர் | 8 |
| 45. | மருந்தாளுநர்கள் | 17 |
| 46. | மருந்தாளுநர் (தேர்வு நிலை) | 1 |
| 47. | செவிலியர் உதவியாளர் (ஆண்) | 29 |
| 48. | முதன்மைத் தலைமைச் சிறைக் காலவர்/வாயிற் காவலர்கள். | 35 |
| 49. | வாயிற் காவலர்கள் தனிக் கிளைச் சிறைகள் | 3 |
| 50. | சிறைக் காவலர்/சிற்றலுவலர் (நிலை-I) | 270 |
| 31. | சிறைக் காலவர்/சிற்றலுவலர் (நிலை II) | 1,804 |
| 52. | அலுவலக மேலாளர்கள் (நிலை I) | 3 |
| 53. | அலுவலக மேலாளர்கள் (நிலை II) | 7 |
| 54. | சிப்ப எழுத்தர்கள் | 9 |
| 55. | சிப்ப எழுத்தர் (தேர்வு நிலை) | 1 |
| 56. | இடைநிலை ஆசிரியர்கள் | 27 |
| 57. | இடைநிலை ஆசிரியர்கள் (நிலை I) | 12 |
| 58. | தொடக்க நிலை ஆசிரியர்கள் | 5 |
| 59. | உடற்பயிற்சி ஆசிரியர் | 1 |
| 60. | தச்சுத் தொழில் பயிற்றுநர்கள் நிலை I மற்றும் நிலை II). | 16 |
| 61. | நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் | 5 |
| 62. | நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை) | 1 |
| 63. | புத்தகம் கட்டும் மேஸ்திரிகள் (தேர்வு நிலை) | 2 |



| தொடர் எண் | பதவிகளின் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 64. | தையல் தொழில் பயிற்றுநர்கள் | 11 |
| 65. | தையல் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை). | 3 |
| 66. | கருமார் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை) | 3 |
| 67. | தச்சுத் தொழில் முதலாள் | 2 |
| 68. | தச்சுத் தொழில் முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 69. | மின் கம்பியாட்கள் | 9 |
| 70. | மின் கம்பியாட்கள் (தேர்வு நிலை) | 8 |
| 71. | நன்னடத்தை அலுவலர்கள் | 96 |
| 72. | நல அதிகாரிகள் | 10 |
| 73. | லாரி ஓட்டுநர்கள் | 8 |
| 74. | பிரம்புத் தொழில் பயிற்றுநர் | 1 |
| 75. | தச்சுத் தொழில் கம்மியர் (தேர்வு நிலை) | 1 |
| 76. | லாரி ஆள் | 1 |
| 77. | காலணி தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் | 1 |
| 78. | காலணி தயாரிப்பு பணி கம்மியர் (தேர்வு நிலை) | 1 |
| 79. | காலணி தயாரிப்புப் பணி மேஸ்திரிகள் (தேர்வு நிலை). | 3 |
| 80. | அலுமினிய பட்டறை முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 81. | வண்டிக்காரர்கள் | 6 |
| 82. | வண்டிக்காரர்கள் (தேர்வு நிலை) | 2 |
| 83. | நூற்பு ஆசிரியர் (தேர்வு நிலை) | 1 |
| 84. | நெசவு ஆசிரியர் (தேர்வு நிலை) | 1 |
| 85. | சாய வேலை ஆசிரியர் (தேர்வு நிலை) | 1 |
| 86. | பாவு ஆசிரியர் (தேர்வு நிலை) | 1 |
| 87. | இசைக் குழு ஆசிரியர் | 1 |
| 88. | பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் (நிலை II மற்றும் III). | 5 |
| 89. | கூடார உதவி மேஸ்திரி | 1 |
| 90. | பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாள் (தேர்வு நிலை). | 1 |
| 91. | கொதிகலன் சிற்றாள் (தேர்வு நிலை) | 1 |
| 92. | பொருத்துத் தச்சர் (தேர்வு நிலை) | 1 |
| 93. | நெசவுப் பணியாளர் (நிலை I) | 1 |
| 94. | நெசவுப் பணியாளர்கள் (நிலை II) | 2 |
| 95. | நெசவு பணியாளர் நிலை III) | 1 |
| 96. | கட்டு. கட்டும் பணியாளர். | 1 |
| 97. | பொருத்துபவர் நீரேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிப்பவர் (தேர்வு நிலை) | 1 |
| 98. | கொதிகலன் முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 99. | குழாய் பொருத்துநர் (தேர்வு நிலை) | 1 |

1984 மார்ச் 31]

| தொடர் எண் | பதவிகளின் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 100. | உருளை மூடுபவர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 101. | மோட்டார் பணியாட்கள் (தேர்வு நிலை) .. | 2 |
| 102. | நூற்புத் தலைமைப் பணியாளர் (தேர்வு நிலை). | 1 |
| 103. | உதவி நூற்புப் பணியாளர் (தேர்வு நிலை) | 2 |
| 104. | நூற்பு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 105. | செய்முறை விளக்குநர்கள் .. .. | 2 |
| 106. | எந்திரம் இயக்குபவர் (நிலை I) .. .. | 1 |
| 107. | உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 108. | தச்சர்கள் .. .. .. .. .. | 4 |
| 109. | பால்காரர் .. .. .. .. | 1 |
| 110. | கால்நடை உதவியாளர்கள் .. .. .. | 5 |
| 111. | செவிலிப் பணி உதவியாளர் (பெண்) .. | 1 |
| 112. | பற்ற வைப்பவர்கள் .. .. | 2 |
| 113. | தலைமை ஆயா .. .. .. .. | 1 |
| 114. | ஆயாக்கள் .. .. .. .. | 8 |
| 115. | மின்சார மோட்டார் பணியாட்கள் .. | 3 |
| 116. | மேற்பார்வையாளர்கள், கையால் தயாரிக்கப் படும் காகிதத் தொழில் ஆசிரியர்கள். | 5 |
| 117. | மின்துறை மேற்பார்வையாளர் (தேர்வு நிலை) | 1 |
| 118. | சவுக்கார வேதியல் பணியாளர் (தேர்வு நிலை). | 1 |
| 119. | இயந்திரம் ஓட்டுநர் .. .. | 1 |
| 120. | மெருகிடும் உதவியாளர் .. .. .. | 1 |
| 121. | காகிதத் கூழ் செய்யும் உதவியாளர்கள் .. | 5 |
| 122. | காவலாள் .. .. .. .. | 12 |
| 123. | கிளைச் சிறையின் அடிப்படைப் பணியாளர்கள் வார்டர்கள். | 37 |
| 124. | இயல் மருத்துவத்தொழில் நுட்பப் பணியாளர் (தேர்வு நிலை). | 1 |
| 125. | கால்நடை மேய்ப்பவர் .. .. .. | 1 |
| 126. | எந்திரக் கலப்பை ஓட்டுநர்கள் .. .. | 2 |
| 127. | பெருக்குவோர் .. .. .. .. | 4 |
| 128. | சமையற்காரர்கள் .. .. .. .. | 17 |
| 129. | சமையற்காரர் (தேர்வு நிலை) .. .. | 3 |
| 130. | தோட்டக்காரர் .. .. .. .. | 2 |
| 131. | உழுவை (எந்திரக் கலப்பை) சுத்தம் செய் பவர். | 1 |
| 132. | துப்புரவாளர்கள் .. .. .. | 3 |
| 133. | பினாயில் உதவியாளர் .. .. .. | 1 |
| 134. | பெண் சிறைக்காவலர்கள் .. | 36 |
| 135. | பால்காரர் .. .. .. .. | 1 |
| 136. | சுகாதாரப் பணியாளர்கள் .. .. .. | 5 |



[1984 மார்ச் 31

## இணைப்பு III.

(II ஆம் எண் இனத்தைக் காண்க).

1972-73 முதல் 1982-83 ஆம் ஆண்டு வரை சிறைத்துறை தொடர்பான செலவு, வருவாய் குறித்த விவரங்களையும். 1983-84 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீட்டையும், 1984-85 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை.

### I. செலவு.

| | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| 1972-73 .. .. .. | 2,58,50 |
| 1973-74 .. .. .. | 2,91,61 |
| 1974-75 .. .. .. | 3,76,34 |
| 1975-76 .. .. .. | 4,78,26 |
| 1976-77 .. .. .. | 4,56,44 |
| 1977-78 .. .. .. | 4,27,02 |
| 1978-79 .. .. .. | 4,53,23 |
| 1979-80 .. .. .. | 5,32,94 |
| 1980-81 .. .. .. | 5,61,44 |
| 1981-82 .. .. .. | 6,30,72 |
| 1982-83 .. .. .. | 6,38,62 |
| 1983-84 திருத்திய மதிப்பீடு. | 6,35,80 |
| 1984-85 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 7,16,82 |

### II. வருவாய் வரவுகள்.

| | |
|---|---|
| 1972-73 .. .. .. | 96,12 |
| 1973-74 .. .. .. | 1,33,13 |
| 1974-75 .. .. .. | 1,00,61 |
| 1975-76 .. .. .. | 99,82 |
| 1976-77 .. .. .. | 1,18,61 |
| 1977-78 .. .. .. | 1,24,99 |
| 1978-79 .. .. .. | 1,14,02 |
| 1979-80 .. .. .. | 80,43 |
| 1980-81 .. .. .. | 1,41,20 |
| 1981-82 .. .. .. | 1,60,13 |
| 1982-83 .. .. .. | 1,53,57 |
| 1983-84 திருத்திய மதிப்பீடு. | 1,55,00 |
| 1984-85 வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1,55,00 |

# இணைப்பு IV.

(I-ஆம் எண் இனத்தைக் காண்க.)

I. சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவை :

1. மத்திய சிறை, சென்னை.
2. மத்திய சிறை, வேலூர்.
3. மத்திய சிறை, கடலூர்.
4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்திய சிறை, சேலம்.
6. மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7. மத்திய சிறை, மதுரை.
8. மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9. மாநிலச் சிறை, மகளிர், வேலூர்.
10. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
11. தனிக்கிளைச்சிறை (ஆண்கள்), சேலம்.
12. தனிக்கிளைச்சிறை, கொக்கிரகுளம்.
13. தனிக்கிளைச்சிறை, திருச்சிராப்பள்ளி.
14. திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர்.

(I) செங்கற்பட்டு மாவட்டம் :

15. கிளைச்சிறை (நிலை I), சைதாப்பேட்டை.
16. கிளைச்சிறை (நிலை II), செங்கல்பட்டு.
17. கிளைச்சிறை (நிலை II), மதுராந்தகம்.
18. கிளைச்சிறை (நிலை II), பூவிருந்தவல்லி.
19. கிளைச்சிறை (நிலை II), திருவள்ளூர்.
20. கிளைச்சிறை (நிலை II), திருத்தணி.
21. கிளைச்சிறை (நிலை II), பொன்னேரி.
22. கிளைச்சிறை (நிலை II), காஞ்சிபுரம்.

(II) கோயம்புத்தூர் மாவட்டம் :

23. கிளைச்சிறை, அவிநாசி.
24. கிளைச்சிறை, மேட்டுப்பாளையம்.
25. கிளைச்சிறை, திருப்பூர்.
26. கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை.
27. கிளைச்சிறை, பொள்ளாச்சி.
28. கிளைச்சிறை, பல்லடம்.







III. பெரியார் மாவட்டம் :

29. கிளைச்சிறை, தாராபுரம்.
30. கிளைச்சிறை, பவானி.
31. கிளைச்சிறை, ஈரோடு.
32. கிளைச்சிறை, கோபிச்செட்டிப்பாளைய...
33. கிளைச்சிறை, காங்கேயம்.
34. கிளைச்சிறை, சத்தியமங்கலம்.
35. கிளைச்சிறை, பெருந்துறை.

(IV) நீலகிரி மாவட்டம் :

36. கிளைச்சிறை, உதகமண்டலம்.
37. கிளைச்சிறை, குன்னூர்.
38. கிளைச்சிறை, கூடலூர்.

(V) வட ஆர்க்காடு மாவட்டம்:

39. கிளைச்சிறை, அரக்கோணம்.
40. கிளைச்சிறை, ஆம்பூர்.
41. கிளைச்சிறை, செய்யார்.
42. கிளைச்சிறை, ஆரணி.
43. கிளைச்சிறை, செங்கம்.
44. கிளைச்சிறை, குடியாத்தம்
45. கிளைச்சிறை, போளூர்.
46. கிளைச்சிறை, திருப்பத்தூர்.
47. கிளைச்சிறை, திருவண்ணாமலை.
48. கிளைச்சிறை, வாணியம்பாடி.
49. கிளைச்சிறை, வாலாஜாபேட்டை.
50. கிளைச்சிறை, வந்தவாசி.

(VI) தென் ஆர்க்காடு மாவட்டம்:

51. கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி.
52. கிளைச்சிறை, சிதம்பரம்.
53. கிளைச்சிறை, கடலூர்.

[1984 மார்ச் 31

VI. தென் ஆற்காடு மாவட்டம் — தொடர்ச்சி.

54. கிளைச்சிறை, செஞ்சி.
55. கிளைச்சிறை, காட்டுமன்னார் கோயில்.
56. கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை.
57. கிளைச்சிறை, திருக்கோவிலூர்.
58. கிளைச்சிறை, திண்டிவனம்.
59. கிளைச்சிறை, உளுந்தூர்ப்பேட்டை.
60. கிளைச்சிறை, விழுப்புரம்.
61. கிளைச்சிறை, விருத்தாசலம்.
62. கிளைச்சிறை, பண்ணுருட்டி.

(VII) சேலம் மாவட்டம்:

63. கிளைச்சிறை, ஆத்தூர்.
64. கிளைச்சிறை, நாமக்கல்.
65. கிளைச்சிறை, ஓமலூர்.
66. கிளைச்சிறை, பரமத்தி.
67. கிளைச்சிறை, இராசிபுரம்.
68. கிளைச்சிறை, சங்ககிரி.
69. கிளைச்சிறை, திருச்செங்கோடு.
70. கிளைச்சிறை (மகளிர்), சேலம்.

(VIII) மதுரை மாவட்டம்:

71. கிளைச்சிறை, திண்டுக்கல்.
72. கிளைச்சிறை, கொடைக்கானல்.
73. கிளைச்சிறை, நிலக்கோட்டை.
74. கிளைச்சிறை, பழனி.
75. கிளைச்சிறை, பெரியகுளம்.
76. கிளைச்சிறை, திருமங்கலம்.
77. கிளைச்சிறை, உசிலம்பட்டி.
78. கிளைச்சிறை, உத்தமபாளையம்.
79. கிளைச்சிறை, வேடசந்தூர்.
80. கிளைச்சிறை, மேலூர்.



1984 மார்ச் 1]

(IX) கன்னியாகுமரி மாவட்டம்:

81. கிளைச்சிறை, தக்கலை.
82. கிளைச்சிறை, குழித்துறை.
83. கிளைச்சிறை, நாகர்கோவில்.

(X) இராமநாதபுரம் மாவட்டம்:

84. கிளைச்சிறை, அருப்புக்கோட்டை.
85. கிளைச்சிறை, முதுகுளத்தூர்.
86. கிளைச்சிறை, பரமக்குடி.
87. கிளைச்சிறை, இராமநாதபுரம்.
88. கிளைச்சிறை, சாத்தூர்.
89. கிளைச்சிறை, திருவில்லிபுத்தூர்.
90. கிளைச்சிறை, திருப்பத்தூர்.
91. கிளைச்சிறை, திருவாடானை.
92. கிளைச்சிறை, விருதுநகர்.
93. கிளைச்சிறை, சிவகங்கை.

(XI) திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

94. கிளைச்சிறை, அரியலூர்.
95. கிளைச்சிறை, செயங்கொண்டான்.
96. கிளைச்சிறை, குளித்தலை.
97. கிளைச்சிறை, லால்குடி.
98. கிளைச்சிறை, மணப்பாறை.
99. கிளைச்சிறை, முசிறி.
100. கிளைச்சிறை, பெரம்பலூர்.
101. கிளைச்சிறை, துறையூர்.
102. கிளைச்சிறை, கரூர்.

(XII) புதுக்கோட்டை மாவட்டம்:

103. கிளைச்சிறை, புதுக்கோட்டை.
104. கிளைச்சிறை, அறந்தாங்கி.
105. கிளைச்சிறை, கீரனூர்.
106. கிளைச்சிறை, திருமயம்.

[1984 மார்ச் 31

(XIII) திருநெல்வேலி மாவட்டம்:

107. கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்.
108. கிளைச்சிறை, கோவில்பட்டி.
109. கிளைச்சிறை, சங்கரன் கோவில்.
110. கிளைச்சிறை, தூத்துக்குடி.
111. கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்.
112. கிளைச் சிறை, தென்காசி.
113. கிளைச் சிறை, திருச்செந்தூர்.
114. கிளைச் சிறை, நாங்குநேரி.

(XIV) தஞ்சாவூர் மாவட்டம் :

115. கிளைச் சிறை, கும்பகோணம்.
116. கிளைச் சிறை, மயிலாடுதுறை (மாயவரம்).
117. கிளைச் சிறை, மன்னார்குடி.
118. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
119. கிளைச் சிறை, நன்னிலம்.
120. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
121. கிளைச் சிறை, பாபநாசம்.
122. கிளைச் சிறை, சீர்காழி.
123. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
124. கிளைச் சிறை, திருவையாறு.
125. கிளைச் சிறை, திருவாரூர்.
126. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
127. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.
128. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

(XV) தருமபுரி மாவட்டம் :

129. கிளைச் சிறை, ஓசூர்
130. கிளைச் சிறை, அரூர்.
131. கிளைச் சிறை, தருமபுரி.
132. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
133. கிளைச் சிறை, ஊத்தங்கரை.



1984 மார்ச் 31]

## இணைப்பு V.

(VI ஆம் எண் இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள்/வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை/புதுக்கோட்டை சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, புழலிலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின்/வாழ்க்கைத் தொழில் பட்டியல் :—

| நிறுவனம். | தொழிற்சாலைகள். |
|---|---|
| (1) | (2) |
| 1 மத்திய சிறை, சென்னை. | தச்சு, தையல், பினைல் உற்பத்தி, டேக் (Tag) உற்பத்தி, பைண்டிங், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |
| 2 மத்திய சிறை, வேலூர். | நெசவு, தையல், பைண்டிங், தச்சு, பூட்ஸ் தயாரித்தல், பலவகை. |
| 3 மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார், பட்டறை, தச்சு, நெசவு, காகித உற்பத்தி, பைண்டிங், தையல். |
| 4 மத்திய சிறை, கோவை. | நெசவு, சாயம் தோய்த்தல், தையல் கூடாரம் உற்பத்தி, கையால் தயாரிக்கப்படும் காகித உற்பத்தி, புத்தக பைண்டிங், சோப்பு, தயாரிப்பு, தச்சு. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | தச்சு, நெசவு, பாய் முடைதல் தையல் சோப்புத் தயாரித்தல் |
| 6 மத்திய சிறை, மதுரை. | நெசவு, தையல், காகித உற்பத்தி. பைண்டிங், தச்சு. |
| 7 மத்திய சிறை, பாளையங்கோட்டை. | தச்சு, நெசவு, தையல், கையால் தயாரிக்கப்படும் காகித உற்பத்தி மற்றும் பைண்டிங். |
| 8 மத்திய சிறை, கடலூர். | நெசவு, தையல், தச்சு. |
| 9 ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை. | தச்சு, தையல், உலோக வேலை. |
| 10 சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு, தையல், அட்டை கட்டுதல், பைண்டிங், கருமார் பட்டறை. |
| 11 மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்குநூல் உற்பத்தி, தையல் மற்றும் நெசவு. |

1984 மார்ச் 31]

## இணைப்பு VI.

(VI ஆம் எண் இனத்தைக் காண்க.)

ஆறு சிறைகளில் செயல்படுத்தியுள்ளவையும், சாதாரண கைவேலைகளின் எஞ்சியுள்ள 3 இறைச்சாலைகளில் செயல்படுத்தக் கருதியுள்ளவையுமான சாதாரண கை வேலைகளின் பட்டியல் :—

ஏற்கெனவே செயல்படுத்தியுள்ள சிறைகள்.—

| | |
|---|---|
| 1 மத்திய சிறை, மதுரை. | குழாய் வேலை. |
| 2 மத்திய சிறை, சென்னை. | சாதாரண மின் கம்பி இடும் பணி. |
| 3 மத்திய சிறை, பாளையங்கோட்டை. | குழாய் வேலை. |
| 4 மத்திய சிறை, வேலூர். | கொல்லத்து வேலை. |
| 5 மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | குழாய் வேலை. |
| 6 சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை. | சாதாரண மின் கம்பி இடும் பணி. |

செயல்படுத்தக் கருதியுள்ள சிறைகள்.—

| | |
|---|---|
| மத்திய சிறை, கோயம்புத்தூர். | குழாய் வேலை. |
| 2 மத்திய சிறை, சேலம். | விளம்பரப் பலகைகள் எழுதுதல், உட்பட வண்ணம் பூசுதல். |
| 3 மத்திய சிறை, கடலூர். | சைக்கிள் பழுது பார்த்தல். |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

25111 அ. 31/85

வெளியீடு 26-2-85] [Issued 26-2-85

2784

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 9, 1984 - தொகுதி LXIV எண் 5
Monday the 9th April 1984 - Volume LXIV No. 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்


பக்கங்கள்

9-4-1984

1. இரங்கல் குறிப்பு:

முன்னாள் உறுப்பினர் திரு டி. கரிய கவுண்டர் மறைவு 812—813

2. இந்திய விண்வெளி வீரர்களுக்கு அவை வாழ்த்துத் தெரிவித்தல்

3. வரவு—செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 15 — காவல் துறை 813

(ஆ) கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள். 813

(இ) கோரிக்கை எண் 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை. 813

திரு. இரா. கருப்பையா 813—822

திரு. அ. ரகுமான்கான் 823—836, 879

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் 837—840

திருமதி டி. யசோதா 840—849

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் 829—893

திரு. துரைமுருகன் 853—859

திரு. ரா. உமாநாத் 878

திரு. எல். இளையபெருமாள் 862—890

திரு. ஜே. எஸ் இராசு 867

திரு. நா. சுந்தரராஜ் 880—881

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 895

1984, ஏப்ரல் 9, திங்கட்கிழமை

பங்குனி 27, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்''

சிறிய படை உடையவன் தனக்குத் தகுந்ததாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிந்து போவான்.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. டி. கரிய கவுண்டர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு டி. கரிய கவுண்டர் அவர்கள் 30-3-1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கரிய கவுண்டர் அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை, வட ஆற்காடு ாவட்டம் செங்கம் தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்டமன்றப் ரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல றயில் பணியாற்றியுள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கிரஸ் இயக்கத்திலிருந்து தொண்டாற்றியவர். 1941-42 ம் ஆண்டு வட ஆற்காடு மாவட்ட வாரியத்தின் 'டிஸ்ட்ரிக்ட் பார்டின்' தலைவராக இருந்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சர்பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. இந்திய விண்வெளி வீரர்களுக்கு அவை வாழ்த்துத் தெரிவித்தல்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, விண்வெளி, வானியல் விஞ்ஞான வரலாற்றிலே பெருமைக்குரிய சாதனையாக இன்றைக்கு இந்தியா–சோவியத் கூட்டுறவு விண்வெளிப் பயணம் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய பாரதத்தைச் சேர்ந்த விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா சல்யூட்-7–ன் மூலமாக இன்றைக்கு பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி வருகிறார்கள். ஆகவே வளர்ந்து வருகிற விஞ்ஞான நாடுகளோடு பாரதமும் சேர்ந்திருக்கிற இந்த நல்ல நேரத்தில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கும் வகையில், சோவியத் நட்புறவிற்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் வகையில், இந்திய–சோவியத் விண்வெளி விஞ்ஞானிகளுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் வகையில் தாங்கள் வாழ்த்து கூறுவது, இந்த நாடு தழுவிய வெற்றியோடு, நாமும் அந்த வெற்றியை பகிர்ந்து கொள்கிறோம் என்ற அளவில் பொருத்தமாக அமையும். அந்த முறையில் தாங்கள் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதல் முறையாக இந்திய வீரர் ஒருவர், ராகேஷ் சர்மா என்று சொல்லக்கூடிய வீரர், ரஷ்ய விண்வெளி வீரர்களோடு இணைந்து விண்வெளி பயணத்தை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் பல விஞ்ஞான சாதனைகளை அவர்கள் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள், அந்த விண்வெளி வீரருக்கு இந்த அவை தன்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.என். எஸ்.வி. சித்தன் அவர்களும், திரு. அழகர்சாமிஅவர்களும் சொன்ன கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். திரு ராகேஷ் சர்மா அவர்கள் Kajakhstan பகுதியிலிருந்து 14 மாடிக் கட்டிடம் உயரமுள்ள ஒரு பெரிய ராக்கெட்டின் மூலம் விண்வெளி பயணத்திற்கு புறப்பட்டுச் சென்று இன்றைக்கு ஒரு மகத்தான சாதனையைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இரவு 10 மணிக்கு சென்னையைக் கடந்து செல்வார்கள் என்றும்; சென்னையை அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் செய்திகளை நேற்று மாலை பத்திரிக்கையில் போட்டு இருந்தார்கள். ஆகவே இன்றைக்கு நாம் வாழ்த்துத் தெரிவிப்பது நல்ல நேரம் என்று தான் நினைக்கிறேன். ஏனென்றால் நேற்றைக்குத் தான் அவர் நம்மை யெல்லாம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள். மிகப் பெரிய சாதனையை இந்தியா இன்றைக்கு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்தியா இதுவரையிலும் வளர்ந்து வருகிற நாடு என்று தான் எடுத்துச் சொன்னார்கள். இந்த விஞ்ஞான வளர்ச்சியை ஒப்பிட்டுப்



பார்க்கிறபோது மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்த வகையில் வளர்ந்து விட்ட நாடாகவே மாறிக் கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விஞ்ஞான அற்புதங்களை விளைவித்துக் கொண்டிருக்கிற சோவியத் நாடு இந்த விஞ்ஞான கருத்துக்களை மற்ற நாடுகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நட்பு, நேசக்கரம் நீட்டி, நம்முடைய தோழர்களையும் அழைத்து தங்களுக்குத் தெரிந்த விஞ்ஞான உலகத்தை அவர்களுக்கும் தெரிவிக்கிற வகையில் பயிற்சி அளித்து திரு. ராகேஷ் சர்மா அவர்களைத் தேர்ந்தெடுத்ததற்காக அந்த நாட்டிற்கும் நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நட்புறவுகள் வளரவேண்டும். உலகத்தில் சமாதானம் தழைக்க இந்த நட்புறவு பயன்படும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே உலக சமாதானத்திற்கு எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் இந்திய-சோவியத் நட்புறவு வளர்வதோடு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட விஞ்ஞான வளர்ச்சி உலகத்தின் எந்தப் பகுதியில் ஏற்படுமானாலும் அதிலே மற்ற நாடுகள் பங்குகொள்வது எதிர்கால அமைதிக்கு வழிகோலும் என்பதை எடுத்துச் சொல்லி, திரு. ராகேஷ் சர்மா வெற்றிக்கு தமிழக சட்டமன்றத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வரவு–செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 15 — காவல்துறை தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 16 — தீயணைப்புப் பணிகள் ,,

(இ) கோரிக்கை எண். 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை. ,,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலுரை அளிக்கவேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் தங்கள் உரைகளை முடித்துக் கொள்ளவேண்டும்.

* **திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை தீயணைப்புத் துறை மற்றும் மாநில ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காவல்துறை கொள்கை சம்பந்தமாக கூறும் போது, சமூக நலனை முன்நிறுத்தி, நாட்டு நலனுக்கு உழைப்பது காவல்துறையின் பணியாகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு காவல் துறையினிடத்திலே இருக்கிறது என்றாலும், தமிழகத்திலே அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு காவல்துறையினர் எவ்வாறு செயல்படுகிறார்கள், எவ்வாறு செயல்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான் இன்றைய தினம் இருக்கும் பிரதான கேள்வியாக அமைந்து இருக்கிறது.

மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் இதர பகுதி மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, பெறுவதற்கு போராடக்கூடிய காலங்களில் அந்தப் போராட்டங்களை அடக்கக்கூடிய அடக்குமுறைக் கருவியாகத்தான் இன்றையதினம் காவல்துறை பயன்படுத்தப்படுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய நாட்டிலே இருக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காக இயக்கம் நடத்தும் நேரத்திலும், எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிப்பதற்காக ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தக்கூடிய நேரத்தில், அந்த ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் விதத்தில்தான் இன்றையதினம் காவல் துறையின் கொள்கை செயல்படுகிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இது வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் ஒரு நிகழ்ச்சி. இன்றையதினமும் அது தொடர்ந்து வருகிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் குற்றவியல் பிரிவு 107, 110 ஆகியவற்றின் கீழ் வழக்குகள் போடப்பட்டு, ஜாமீனில் வெளியே வரமுடியாத நிலையில் வழக்குகளைப் பதிவு செய்வார்கள். தொடர்ந்து இன்றைக்கும் அந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. இன்றைக்கு தமிழக அரசு அதே கொள்கையை எவ்வாறு கடைபிடிக்கிறார்கள் என்றால், சாதாரண போராட்டங்கள் நடத்துவது என்றால் கூட, அந்தப் போராட்டங்களை அடக்குவதற்கு கொலை செய்ய முயற்சித்தார்கள், கொலை செய்தார்கள் என்ற முறையில் வழக்குகளைத் தொடர்ந்து போட்டு வருகிறது என்பதை நான் கூறவிரும்புகிறேன். இதற்கு பல்வேறு உதாரணங்களை நான் கூறமுடியும்.

இன்றையதினம் காவல்துறை எவ்வாறு இருக்கிறது என்பதை உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி, ஏற்கனவே அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் முல்லா அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். Th r is no Organisation in India as lawless as Polic . என்கிற முறையிலே அவர்களே காவல் துறையை விமரிசிக்கின்ற அளவுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

காவல் துறையின் மிருகத்தனமான நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையிலே, நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதி என்பது ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைக்கு இல்லை. ஏழை எளிய மக்களுக்கு





அது மிகவும் கீழாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வழக்குகள் சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் காலம் தாழ்த்தி வழக்குகளை நடத்துவது என்ற நடைமுறை இன்று இருக்கிறது. இப்படிப்பட்ட முறைகள் தொடர்ந்து நீடிப்பதன் மூலம் இன்றையதினம் தொழிற் சங்கங்களையும் மற்ற இயக்கங்களையும் அடக்குவது என்ற அளவில் இந்த அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ஜனநாயக உரிமை என்று வரக்கூடிய முறையில், நம்முடைய சட்டமன்றம் கூடிக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னாலும் சட்டமன்றம் கூடக்கூடிய நேரங்களிலும் சட்டமன்றத்திற்கு அருகே கூட்டங்கள், ஊர்வலங்களை முறைப்படுத்துவதற்கு அனுமதி பெற்று வரவேண்டுமென்று தடை உத்தரவு பிறப்பிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இன்றையதினம் நிரந்தரமாக இந்தப் பகுதியிலே ஊர்வலங்கள் நடததக் கூடாது என்றஅடிப்படையிலே தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 1969 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர் சங்கம் ஒரு மாபெரும் பேரணியை நடத்தியது. இன்றைக்கு நிதியமைச்சராக இருக்கிற நம்முடைய நாவலர் அவர்கள் அன்றையதினம் அந்த விவசாயத் தொழிலாளர் பேரணியை, நேரடியாகக் கோட்டைக்கு முன்னால் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கை மகஜரைப் பெற்று வந்தார்கள். இது பழைய நிலை. ஆனால் இன்றையதினம் யாரும் கோட்டைக்கு ஊர்வலமே வரக்கூடாது என்று நிரந்தரமாக தடை உத்தரவுப் போடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த முறையிலே இன்றையதினம் நிரந்தரமாக ஒரு தடை உத்தரவு எல்லா இடங்களிலும், எல்லா நகரங்களிலும், போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்சொள்கிறேன்.

நான் ஜனநாயக இயக்கங்கள் என்று சொல்லும்போது மதுரையிலே முன்னாள் உச்ச நீதமன்ற நீதிபதி தார்குண்டே தாக்கப்பட்ட சம்பவம் அனைவருக்கும் தெரியும். நுழைவு வரியை எதிர்த்து, வர்த்தகர்கள் அமைதியாக கடையடைப்பு செய்தார்கள். அந்தப் போராட்டத்தில் பலர் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டார்கள். அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்குகள் இன்னும் முடியவில்லை. அவர்களை எவ்வாறு காவல் துறையினர் கொடுமைப்படுத்தினார்கள் என்ற விவரம் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. நெடுமாறன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. நல்லசிவம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் அப்போது கைது செய்யப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் போடப்பட்டன. இன்றைக்கும் அந்த வழக்குகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதே அடிப்படையில்தான் சென்ற 3-ந் தேதி அன்று இந்தியா முழுவதும் இருக்கிற இளைஞர்கள் தங்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்; அதற்கு அரசாங்கம் சட்ட பூர்வமான உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்று ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். இந்தியா முழுவதிலும் இளைஞர்கள் நடத்திய போராட்டம் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டிலும் போராட்டம் நடத்தினார்கள். ஏறத்தாழ 5000-க்கு மேற்பட்ட இளைஞர்கள் அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். அந்தப் போராட்டத்தை அடக்குவதற்கு இந்த அரசாங்கம் கையாண்ட முறை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார்கள். கைது செய்ய வேண்டுமென்றுதான் வருகிறார்கள்; அவர்களைக் கைது செய்யக் கூடாது என்பது அல்ல நோக்கம். அதே நேரத்தில் மாநிலம் முழுவதிலும் காவல் துறைக்கு ஒரே கொள்கைதான் இருக்கிறது. அந்தக் கொள்கை எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்றால் திருச்சி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் கைது செய்யப்பட்டவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களில் உள்ளவர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். ஜனநாயக உணர்வோடு நேர்மையான முறையிலே ஒரு இயக்கம் போராட்டம் நடத்துகிறபோது இப்படிப்பட்டகொள்கை கடைபிடிக்கப்படுவது ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து வழக்குகள் சம்பந்தமாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ந் தேதி அன்று அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தைச் சேர்ந்தவர்கள் கோட்டைக்கு முன் வந்து, அமைச்சர்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி கோரிக்கையை சமர்ப்பிக்க வந்தார்கள். அன்றையதினம் அவர்கள் நாங்கள் உழைக்கத் தயாராக இருக்கிறோம், எங்களுக்கு வேலை கொடு என்ற கோரிக்கையோடு அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் வழி மறிக்கப்பட்டு, கொடூரமாக தாக்கப்பட்டு அன்றையதினம் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான தோழர் கே.முருகேசன் அவர்களும் மற்றும் தா.பாண்டியன் உட்பட 9 பேர்கள் கைது செய்யப்பட்டு, 1978-ம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டது. 1978 ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கு 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே முடிவடைகிறது. அந்த வழக்கிலே அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். 1978-ம் ஆண்டு துவக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டு வரை—அதாவது ஐந்தாண்டுகளுக்கு மேல் ஒரு வழக்கு நடைபெறுகிறது என்றால் அதற்குபொறுப்பாளிகள் யார் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த அரசு இன்றைக்கும் அதே கொள்கையைத்தான் தொடர்ந்து கடைபிடிக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



தஞ்சை மாவட்டத்தில் 1982-ஜூன் மாதம் 19-ந் தேதி இந்தியா முழுமையிலும் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய தங்களது உரிமையை பறிக்கக் கூடாது என்பதற்காக இந்தியா முழுமையும் நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு,தஞ்சைமாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் ஆதரவு தெரிவித்தார்கள் என்கிற காரணத்திற்காக அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. 2 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் அந்த வழக்கிலே கைது செய்யப்பட்டு தஞ்சை மாவட்டத்திலே உள்ள சாதாரண அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், விவசாயத் தொழிலாளர்கள்மீது இன்றைக்கும் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இம்மாதிரியாக பல்வேறு உதாரணங்களை நாள் கூற முடியும். அடுத்து மாணவர்கள் போராடினால் அவர்களை அடிப்பது, உதைப்பது, சித்திரவதை செய்வது என்பதுதான் இந்த அரசின் கொள்கையாக இருக்கிறது. சமீபத்திலே மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சென்ற பிப்ரவரி மாதம் 3-ந் தேதி அமைதியாக தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் போன்று எவ்வாறு அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள் என்கிற செய்தியை இந்த மன்றத்திலே விவரமாக நாம் விவாதித்து இருக்கிறோம். அதேமாதிரி மார்ச் 10-ந் தேதி சிவகாசியிலே சினிமாவுக்குச் சென்று வந்த மாணவர்களை குடிபோதையில் இருந்த காவல் துறை போலீசார் தாக்குகின்றனர். அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைதியான முறையிலே மாவட்டத் துணை ஆட்சியாளர் இடத்திலேயும், மற்றவர்களிடமும் கோரிக்கை வைக்கச் சென்ற மாணவர்கள்மீது அடக்குமுறையை ஏவி அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள் என்ற விவரத்தையும், அமைதியாகச் சென்ற மாணவர்கள்மீது காவல் துறையினர் எவ்வாறு கொடுமையாக நடந்து கொண்டார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி, மார்ச்சு 27-ந் தேதி செங்கல்பட்டிலே இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள பரனூர் என்ற இடத்தில் தொழுநோயாளிகள் தங்களுக்கு உணவுக்காக கொடுக்கப்படுகின்ற படியை ஓரளவு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று போராடினார்கள் என்பதற்காக அவர்களை அடித்து நொறுக்கினார்கள். இம்மாதிரியான முறையில் காவல் துறை நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக போராடக்கூடிய தொழிலாளர்கள்மீது இன்றையதினம் 302 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் போடுவது என்பது சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சியாக இருக்கிறது. கரூர்

மில் தொழிலாளர்கள் இன்றைக்கும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் ரௌடிகளை வைத்து தொழிலாளர்களை அடிக்கிறார்கள். போராடக்கூடிய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ரௌடிகளை வைத்து அடிக்கின்ற முதலாளிகளை எதிர்த்து எந்த நடவடிக்கைகளையும் காவல் துறை எடுப்பதில்லை. ஆனால் முதலாளிகள் புகார் செய்தால் தொழிலாளர்கள்மீது 307 பிரிவின்படி வழக்குப் போடுகிறார்கள். 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்மீது 307 செக்ஷன்படி வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ஏற்கனவே எல்லா ஆட்சிக் காலத்திலும் கடைபிடிக்கப்பட்டு வந்த முறை தொழிலாளர் போராட்டம் நடத்துகின்ற காலத்தில் அந்தத் தொழிலாளர்கள்மீது தொடரப்படும் வழக்குகள் அந்தப் போராட்டம் முடிந்த பின்னர் வாபஸ் பெறுவது என்பதுஆகும். தொழில் அமைதி ஏற்பட்ட பிறகு, அந்தத் தொழிலாளர்கள் நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அந்தக்கொள்கைகைவிடப்பட்டு, போராட்டம் நடத்திய தொழிலாளர்கள்மீது வஞ்சம் தீர்ப்பது என்ற அடிப்படையில் இன்றைய தினம் அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

1978 ஆம் ஆண்டு டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள் போராடினார்கள். 56 பேர்கள் பழி வாங்கப்பட்டார்கள். அவர்கள் அன்றையதினம் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள்மீது வழக்கு போடப்பட்டு இன்றைக்கு நடைபெறுகிறது. அவர்கள் பழி வாங்கப்பட்டு வேலை இழந்து வீட்டிற்கு வந்து விட்டார்கள். வேலையை இழந்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள்மீது வழக்கு போடப்பட்டு நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்தத் தொழிலாளர்கள்மீது போடப்பட்டு இருக்கக்கூடிய வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்ற வாக்குறுதியை அளித்து இருக்கிறார்கள். இந்த மன்றத்திலே கூட அவ்வாறு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அதற்கு நேர் எதிர்மாறான முறையில் செயல்படுகிறார்கள் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரி, அம்பத்தூர் இந்திய போர்ஜ் தொழிலாளர்கள் 273 பேர்கள்மீது 1977–ல் வழக்கு போடப்பட்டது. தொழில் அமைதி உள்ளது என்று கூறி அந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம் என்று நிர்வாகத்தினர்



முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு வரையிலும் வழக்கு வாபஸ் பெறப்படவில்லை. சென்ற ஒரு வார காலத்திற்கு முன்னாள் அவர்களைக் கைது செய்து கோர்ட்டுக்கு கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேமாதிரி, ஈரோடு கந்தசாமி மில் தொழிலாளர்கள் போராட்டத்தில்—அங்கே நடைபெற்ற கொலையை யாரும் விரும்பவில்லை. ஆனால் அதேநேரத்தில் இன்றையதினம் 158 தொழிலாளர்கள்மீது 302 செக்ஷன் கீழ் வழக்கு போடப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் கோர்ட்டில் சென்று நிரூபிக்க முடியுமா, என்ன நிலை ஏற்படும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அந்நிலையில் 158 தொழிலாளர்கள் மீது வழக்கு போடப்பட்டு இருப்பது, தொழிலாளர்களை பழி வாங்க வேண்டும் என்ற கொள்கையின் ஒரு பகுதிதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, காவல் நிலையங்களில் காவல் கைதிகளிடம் காவல் துறையினரின் அத்துமீறிய மிருகத்தனமான நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்த மன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறோம். (மணியடிக்கப் பெற்றது).

சேலம், கிச்சிப்பாளையம் போலீஸ் காவல் நிலையத்தில் தெய்வமணி என்கிற இளம் பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் குறித்து இந்த அவையில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான பல்வேறு சம்பவங்களைப் பற்றி பேசியிருக்கிறோம். சென்னை மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஏழுமலை என்பவர் மரணம் சம்பந்தமாக நடந்திருக்கின்ற விவரங்கள்பற்றி பேசியிருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். வால்பாறை தாலுக்காவில் வாட்டர் பால்ஸ் என்ற காவல் நிலையத்தில் திருமதி சிலம்பாயி என்பவர் ஒருவர், அவருடைய பக்கத்து தோட்டத்தில் ஏற்பட்டு இருக்கின்ற தகராறு சம்பந்தமாக அவர்களை அழைத்துக் கொண்டு சென்றபோது காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், தாயின் முன்பு அவருடைய மகனை நிர்வாணமாக நிறுத்தக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் காவல் துறையினர் மிகவும் கேவலமான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன். ஆகவே, இம்மாதிரியான நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கின்றது. தொழிலாளர்கள், விவசாயிகள் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதே காவல் துறையினர் நடவடிக்கையாக உள்ளது.

இன்றைய தினம் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பதிலே எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

திருச்சி நகரத்தில் சென்ற 2 மாத காலமாக சட்டம் ஒழுங்கு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் சட்ட மன்றக் கூட்டம் துவங்குகிற நேரத்தில், திருச்சி நகரத்தில் சமூக விரோதிகள் சட்டத்தையும் அதிகாரத்தையும் தங்களுடைய கையிலே எடுத்து வைத்துக் கொண்டு எவ்வாறு அங்கே அக்கிரமங் களைச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி குறிப்பிட்டேன். காவல்துறை இன்றைய தினம் திருச்சி நகரத்திலே செயலற்ற நிலையிலே இருக்கின்றது. இதைப்பற்றி தொடர்ச்சியாக பல்வேறு பத்திரிகையிலே விவரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. திருச்சி நகரத்தில், சென்ற பிப்ரவரி 28-29 தேதிகளில், நடைபெற்ற கலைவிழாவில் தம்போலா என்ற பெயரால் அங்கு சூதாட்டம் நடைபெறக்கூடிய நிலைமையை ஒட்டிசமூக விரோதிகளுக்கிடையே 2 ரௌடிக் கும்பல்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டு, கலவரம் ஏற்பட்டு, மக்களிடையே பீதி ஏற்பட்டு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. இன்றைய தினம் திருச்சி நகரத்தின் அமைதி கெட்டு, அதன் காரணமாக, அந்த நகரத்திலே உள்ள மக்கள் அமைதியாக வாழ முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வியாபாரிகள் முறையீடுகள் செய்கிறார்கள் வர்த்தகம் நடைபெறவில்லை என்ற அடிப்படையிலே அவர்கள் புகார் செய்கிறார்கள். அரசியல் கட்சிகள், இன்றையதினம் நகரத்தினுடைய அமைதி கெட்டிருக்கிறது என்ற முறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிந்து ஆகிய முக்கிய நாளேடுகளும் குறிப்பிட்டுள்ளன.

மார்ச் 4 ஆம் தேதி காந்தி மார்க்கெட்டில் கலவரம்; மார்ச் மாதம் 11 ஆம் தேதியன்று உறையூரில் கலவரம். அதற்குப் பிறகு மார்ச் 11 தேதி ராம்ஜி நகரிலே கலவரம், அதற்குப் பிறகு சென்ற மார்ச் மாதம் 31 ஆம் தேதி திருச்சி நகரத்தில் முக்கியமான பகுதியாக இருக்கின்ற கோர்ட் வளாகத்தின் முன்பு, கன்டோன் மெண்டிலே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு கண்ட்டோன்மெண்ட் காவல் நிலையத்திற்கு 100 கெஜ தூரத்திற்கு முன்பு அமல்ராஜ் என்பவரின் கொலை நடந்திருக்கிறது. ஏப்ரல் 2 ஆம் தேதி மிளகு பாறையிலே பயங்கரமாக கலவரம். இப்படிப்பட்ட சம்பவங்களின் தொடர்ச்சியாக பல்வேறு விஷயங்கள் இன்றைக்கு வெளியே பகிரங்கமாகக் கூறப்படுகின்றன. இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள். அந்தக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்கு அனுசரணையாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இன்றையதினம் காவல் துறையினர் இப்படிப்பட்ட காரியங்களில் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. இன்னும் முழுமையான விவரங்களை, பல்வேறு விஷயங்களை நான் எடுத்துக்கூற முடியும் என்றாலும் அதுபற்றி பேசுவதற்கு நேரமில்லாத காரணத்தினால் நான் சுருக்கமாகக் கூற விரும்பு கிறேன்.



இன்றையதினம் அமைதியையும் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிற காவல் துறையினர் தங்கள் கடமையை முழுமையாகச் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கான காரணங்களை நீங்கள் பரிசீலித்து உடனடியாக திருச்சி நகரத்திலே இருக்கிற மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுப்பதோடு, சமூக விரோதிகளை ஒடுக்கு வதற்கும் ஏற்ற முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் வேடிக்கை என்ன வென்றால், நிபந்தனை ஜாமீனில் இருக்கக்கூடிய ஒரு நபர் கொலை செய்கிறார். அந்த அளவிற்கு இன்றையதினம் காவல்துறை அங்கே செயலற்ற முறையில் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சந்திரன் என்பவர் மீதும் மற்றும் 10 நபர்கள் மீதும் இன்று வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றிய முழுமையான விவரங்களை வரவழைத்து திருச்சி நகரத்திலுள்ள மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 22 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. கருப்பையா: அடுத்து நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், எட்டயபுரத்தில் சென்ற மார்ச் 2-ம் தேதி சுண்ணாம்பு வாங்கச் சென்ற முத்து என்பவர் வீடு திரும்பவில்லை. இரண்டு தினங்கள் கழித்து அவருடைய பிணம் தட்டான்குளத்தில் மிதக்கிறது. தொடர்ச்சியாக ஆறு மாதத்தில் நான்கு கொலைகள் நடந்து அந்தக் குளத்தில் பிணங்கள் மிதந்ததாக அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். அங்கே ஒரு பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காவல் நிலையத்திற்கு எதிரே நடந்திருக்கிறது என்ற முறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாகவும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய மாநிலத்தில் இருக்கிற குற்றங்கள் சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு 72.5% ஆக இருந்த குற்றக் கண்டுபிடிப்பு இந்த ஆண்டு 65.5 % ஆகக் குறைந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் நம் மாநிலத்தில் காவல்துறை எந்த அளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

காவலர் நலன் சம்பந்தப்பட்டமட்டில், 1980-ல் 24 கிலோ அரிசி கொடுக்கப்பட்டு வந்தது. இன்றையதினம் ஆறு கிலோ தான் கொடுக்கப்படுகிறது. இன்றையதினம் காவலர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுப்பதாகக் கூறினாலும் நடை முறையில் அந்தச் சலுகைகள் பறிக்கப்பட்டிருக்கிற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது என்னவெனில். இன்றையதினம் காவல்துறையில் பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன. இன்று 35 டி.எஸ்.பி. போஸ்ட்ஸ் இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. 60 ஆய்வாளர்கள் காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. ஐயாயிரம் காவலர் இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. முதல்நிலை காவலர்கள் தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்தப்பட்டு ஆயிரம் இடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டும் இன்றையதினம் அவை பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இது சம்பந்தமாக தொடர்ச்சியான அறிவிப்புகள் வந்திருந்தாலும் அவை பூர்த்தி செய்யப்படாக நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் காலி இடங்களை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நான்கு தடவை கடைசியாக, கடைசியாக என்று சொல்லிவிட்டீர்கள். எது கடைசி என்று எனக்குப் புரியவில்லை. முடித்துக் கொள்ளுங்கள், ஒரு வரன்முறை வேண்டும்.

திரு. இரா. கருப்பையா: கடைசியாக தஞ்சை மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் வீடு இரண்டு தினங்களுக்கு முன்பாக தாக்கப்பட்டிருக்கிறது. காவல்துறையினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை. இம்மாதிரியான சம்பவங்களில் எதிர்க் கட்சிகளுக்கு எதிராக காவல் துறையினர் கண்டும் காணாதது போன்ற போக்கை கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10-30)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே காவல் துறை, தீயணைப்புப்பணிகள், மாநில ஆயத்தீர்வைத்துறை ஆகிய கோரிக்கைகள் சம்பந்தமாக சில கருத்துக்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அவையில் பல குற்றச்சாட்டுகளை நான் சொன்னேன். அவைகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவைகளுக்கு அரசாங்கத்திலே பதில் தருவதாக முதல்வர் அவர்கள் சொன்னார்கள். சிலவற்றுக்கு பதில் சொல்லப்பட்டிருக்கிறது. சில கேள்விகளை நான் தபால் மூலம் கேட்க முடியாது. சபையின் மூலம் கேட்க வேண்டியிருக்கிறது.

சிதம்பரத்திலே ஒரு டி. எஸ்.பி. காவல் நிலையத்திலே, இரண்டு மூன்று பெண்களை ஜீப்பிலே ஏற்றிச் சென்று, கற்பழித்து கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அந்தப் பெண் தூக்கிட்டுக் கொண்டு, இறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அது தற்கொலையா அல்லது கொலை செய்தார்களா என்ற சந்தேகம் எல்லாம் ஏற்பட்டது. அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னது. எனக்கு விவரம்



கிடைத்திருக்கிறது. சர்க்காருக்கும் அறிக்கை கிடைத்திருக்கிறது அந்த டி. எஸ். பி. மீது நடவடிக்கை உண்டா? தெரியவில்லை? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

ஷோபா தற்கொலை. அது தற்கொலையா அல்லது கொலையா என்பது பற்றி நீண்டகாலமாக கேட்கிறேன். புலனாயவிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் புலனாய்வு முடிவுக்கு வரவில்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சேலம், காளியப்பன் நாயக்கன்பட்டியில் தண்ணீர் கேட்ட தாய்மார்களுக்கு எதிராக துப்பாக்கிச் சூடு, தடியடி எல்லாம் நடை பெற்றது. அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. ஆர். டீ. ஓ. விசாரணை முடிந்து, சர்க்காருக்கு அறிக்கை வந்து இருக்கிறது. அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல், மச்சக்காளை என்பவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது, நக்சலைட் என்று குற்றம் சுமத்தி, அவரை மலையிலே இருந்து உருட்டி விட்டு, அவரைக் கொன்று விட்டார்கள் காவல்துறைச் சார்ந்தவர்கள் என்பது குற்றச்சாட்டு. நீதிமன்றத்திலே வழக்கு போடப்பட்டிருக்கிறது, ஹேபியஸ் கார்பஸ் என்னும் பெட்டிஷனில் அந்த ஆளைக் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, நீதிபதியால். ஆனால், போலீஸ் துறை இது சம்பந்தமாக விசாரணை செய்து, சட்டப்படி நீதிமன்றத்திற்கு தகவல் அனுப்பியிருக்க வேண்டும். இது கோர்ட் உத்தரவு. இப்போது விசாரணை செய்யப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளதாகக் கேள்வி. ஆனால், மச்சக்காளை என்ன ஆனான்? அந்த விவரம் எனக்குத் தபாலில் அனுப்பிய கேள்வி பதிலில் இடம் பெறவில்லை. ஆகவே, கேட்கிறேன்.

இன்னொன்றையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தென்காசி பஸ் ஸ்டாண்டிலே நின்று கொண்டிருந்த மாரியம்மா என்ற பெண்ணை, போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கற்பழிக்கப்பட்டாள். அந்த அம்மாள் போலீசிலே புகார் கொடுத்தார்கள். அங்குள்ள இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்திருக்கிறார். ‘ரேப்’ கேஸ் என்று வழக்கு பதிவு செய்வதற்குப் பதிலாக, அவர் செக்ஷன் 354—லே போட்டு, மானபங்கப்படுத்தப்பட்டதாக வழக்கை பதிவு செய்திருக்கிறார். என்ன ஆயிற்று? இதிலே வேடிக்கை என்னவென்றால், சஸ்பெண்ட் செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீண்டும் வேலையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் லாக்காப்பிலே போட்டு, கற்பழிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் நிலை இதுதானா? அதுபற்றியும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், போரூரில் காவல் நிலையத்தில், செல்வி என்ற திருமணமாகாத பெண்ணை போலீஸ் லாக்காப்பில் இரவு நேரத்தில் வைத்து, அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. அது தற்கொலையா அல்லது கொலையா? விசாரணை உண்டா? விசாரணையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இரவு நேரத்தில் ஒரு பெண்ணை லாக்காப்பில் வைப்பது தப்பான நடவடிக்கை. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? சர்க்காருக்கு அறிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? அது பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே, இன்னொன்றையும் நான் இங்கே தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய காவல் துறையில், ஏராளமான போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். சட்டம், ஒழுங்கை அவர்கள் காப்பாற்ற வேண்டும். ஆனால், இந்த போலீஸ் அதிகாரிகள் வீட்டிலேயே திருட்டு நடைபெறு கிறது. ரவீந்திரன், ஐ.பி. எஸ்., வீட்டிலே திருட்டு. டீ. ஐ. ஜி. ராகவன், வேப்பேரி வீட்டிலே திருட்டு, மதுவிலக்குப் புலனாய்வுத் துறை அடிஷனல் சூப்பரின்டென்டன்ட் ராமையா, கடலூர் வீட்டிலே திருட்டு. சிதம்பரம் டி. எஸ். பி வீட்டிலே திருட்டு. சேலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிலே திருட்டு. தமிழ்நாடு காவல் துறை அதிகாரி ஜே.டி. ஜோசப் வீட்டிலே திருட்டு. ஆவடியிலே விளையாட்டைப் பார்க்கச் சென்ற, சாலிக்கிராமம், தசரதபுரத்தில் பூட்டிவிட்டுச் சென்றிருந்த போலீஸ் அதிகாரி வீட்டிலே திருட்டு. போலீஸ் அதிகாரிகள் வீடாகப் பார்த்து, இந்த இராஜ்யத்திலே திருட்டு நடைபெறுகிறது. அப்படியானால், மற்றவர்கள் கதி என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நீதிபதி முன்னால் நிறுத்தப்பட்ட ஒரு குற்றவாளியைப் பார்த்து நீதிபதி, 'நீ ஏன் போலீஸ் அதிகாரிகள் வீடுகளாகப் பார்த்துத் திருடுகிறாய்'? என்று கேட்டதற்கு, குற்றவாளி பதில் சொன்னானாம், 'ஐயா, நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது, உங்கள் வீட்டிற்கு வருவதாக இருந்தேன், நேரம் சரியில்லை, என்றானாம். இன்றைக்கு நிலைமை அப்படி இருந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு கார்ட்டூன் வந்தது, அதைப் பார்த்தேன்.

காவல் துறையைச் சார்ந்தவர்களே வழிப்பறி செய்கிறார்கள். விழுப்புரத்திற்குப் பக்கத்தில், சிங்காரத் தோப்பு என்னுமிடத்தில் சென்று கொண்டிருந்த ஒருவரிடமிருந்து ரூ. 39-ஐ போலீஸ்காரர்களே வழிப்பறி செய்திருக்கிறார்கள். அடுத்த கிராமத்தில் ரூ. 850 வைத்துக் கொண்டிருந்த ஒருவரிடமிருந்து, ரூ. 500-ஐ பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். காவல்துறையைச் சார்ந்தவர்கள். அவர் பெயர் செல்வராஜ், சஸ்பென்ட் செய்யப் பட்டிருக்கிறார்.





திருப்பத்தூரிலே சாமி சிலைகளைத் திருடுகிறார்கள். திருடியது யார்? போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர். கதிரிமங்கலம் கிராமம், சுப்பிரமணியம் வீட்டில் இரவு நேரத்தில் புகுந்து, அங்கே பிள்ளையார் சிலைகள் 2, சரஸ்வதி சிலை 1, ஆகியவைகள் திருடப்பட்டிருக்கின்றன. அந்தச் சிலைகள் செம்பு, வெள்ளியால் ஆனவைகள். அந்தச் சிலைகள் சாராயக் கடையில் கொடுக்கப்பட்டு, அங்கே வைத்திருக்கிறார்கள். திருப்பத்தூர் தாலுக்கா போலீஸ்துறை, காவல் பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் துரைராஜ், அவர் நண்பர், ஆகியவர்கள் இதற்காக அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். கேஸ் போடப் பட்டிருக்கிறது. அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கிற பாலிஸி நோட்டிலே பக்கம் 27-லே, தஞ்சாவூரிலே இருக்கக்கூடிய செங்கிப்பட்டி புறக்காவல் நிலையத்தைச் சேர்ந்த நாராயணசாமி என்பவர் அந்தப் போலீஸ் துறையிலே இருக்கக்கூடிய போலீஸ் காவலர். இவர் குடி போதையிலே ஒரு பெண்ணை கெட்ட எண்ணத்தோடு ஒரு தனியான வீட்டிற்கு அழைத்துச் சென்றாராம். கூட்டம் கூடிய தாம். உடனே அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று துப்பாக்கியை தூக்கி வந்து சுட முயற்சி செய்தாராம். அவர் மீது விசாரணை நடக்கிறதாம். அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. பாலிஸி நோட்டிலே சொல்லப்படவில்லை.

அடுத்து, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே லஞ்சம் என்பது நாட்டிலே சில இடங்களிலே இருந்தாலும் காவல் துறையிலும் இருக்கிறது. அதற்கு சின்ன ஒரு உதாரணம் சொல்லவிரும்புகிறேன். இந்த லஞ்சம் என்பது கீழ் மட்டத்தி லிருந்து மேல் மட்டம் வரைக்கும் இருப்பதாக தகவல்.

ஆதாரம் ஒன்று, திருவான்மியூர் போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டர் பலராமனும், தலைமை போலீஸ்காரர், சுப்பிரமணியமும் ஒரு வழக்கை பதிவு செய்யாமல் இருக்க ரூபாய் 200-ஐ லஞ்சம் வாங்கினார் என்று லஞ்ச ஒழிப்பு போலீஸ்காரரே கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். இப்படி போலீஸ் துறையை சேர்ந்தவர்களாலேயே இந்தத் தவறு நடக்கிறது.

சென்னை மயிலாப்பூரிலே ரிக்ஷாக்காரன் மனைவி சுலோசனாவை, குடித்துவிட்டு பூபாலன் என்ற போலீஸ்காரரும், சுப்பையாவும் சேட்டையும் செய்தார்களாம், கேலியும் செய்தார் களாம். அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. தொண்டியாந்திலே இருக்கிற காவல் நிலையத்தைச் சேர்ந்த ஒரு தலைமை போலீஸ்காரருடைய மகன் பரீட்சை எழுதியிருக்கிறான். காப்பி அடித்திருக்கிறான். வாத்தியார் காப்பி அடிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். தன்னுடைய மகனை காப்பி அடிக்கக்கூடாது என்று எப்படிச் சொல்லலாம் என்று தலைமை

போலீஸ்காரர் வாத்தியாரைப் போட்டு அடித்து, மாணவர்கள் போராட்டம் நடத்தி, அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

அதைப்போலவே இன்றைக்கு பாண்டிபஜாரிலே நடைபெற்ற சுங்க இலாகா அதிகாரி கொலை, கண்டு பிடிக்கப்படவில்லை. அவருடைய மனைவியும் கொல்லப்பட்டார். கண்டுபிடிக்கபடவில்லை. சென்னையிலே வணிக வரி இலாகா அதிகாரி கொலை, கண்டு பிடிக்கப்படவில்லை. அண்ணா நகரில் நடைபெற்ற டாக்ஸி டிரைவர் கொலை, கண்டு பிடிக்கப்படவில்லை. அம்பத்தூர் சாக்கடையிலே ஒரு பிணம், அதை அனாதை பிணம் என்று சொல்லி விட்டு விட்டார்கள். ஆனால் அது கொலை, கண்டு பிடிக்கப்படவில்லை. நம்முடைய போலீஸ் கமிஷனர் இவைகளைக் கண்டு பிடிக்க அதிர்ஷ்டம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த அதிர்ஷ்டம் எப்போது வருமோ எனக்குத் தெரியாது.

புத்தனூர் தண்டு, மதுராந்தகம் ஞான சௌந்தரி, திருத்தணி லட்சுமி கதி என்ன வாயிற்று, போலீஸ் விசாரணை தொடர்கிறதோ என்னமோ புரியவில்லை. மானாமதுரையிலே ஒரு கொலையைப் பற்றி உமாநாத் அவர்கள் பேசுகிற போது இங்கே சொன்னார்கள். மானாமதுரை சித்ரா டயர் கம்பெனி, இரண்டு இளம் பெண்கள் கற்பழித்து கொல்லப்பட்டார்கள் என்பது அந்த அம்மாவினுடைய கம்ப்ளையின்ட், அந்த கம்ப்ளையின்ட் போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படவில்லை. டாக்டருடைய ரிப்போர்ட்டிலே கற்பழித்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று இருக்கிறது. அந்த அம்மா முதல்வர் அவர்களுக்குக் கூட பெட்டிஷன் எழுதினார்கள். நடவடிக்கை இல்லை. சுப்ரீம் கோர்ட்டுக்கு கூட கடிதம் எழுதினார்கள். அதையே அவர்கள் அஃபிடவிட்டாக பாவித்து, சத்தியதேவ், விசாரிக்க வேண்டும் என்று சொல்லி, பிறகு ஹைக்கோர்ட்டிலே போட்டார்கள். விசாரிக்கப்பட்டது. அதை திரும்ப விசாரிப்பதற்காக எல்லா தஸ்தாவேஜுகளும் கொடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது என்று பார்த்தால், டி. ஐ. ஜி. ராஜசேகரன் அறிக்கை கொடுக்கிறார்கள். டாக்டர் சொல்லியிருப்பது தப்பு. கற்பழிப்பு என்பது இல்லை. கொலை செய்யப்படவில்லை. எனவே டாக்டரை டிரான்ஸ்பர் செய்ய வேண்டும். டாக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

அதன் படி டாக்டர் டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார்கள். டாக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நியாயத்திற்கு எங்கே போவது, அருள் கூர்ந்து நினைத்துப் பார்க்க வேண்டும்.



அதைப்போலவே, போலீஸ் லாக்காப்பிலே ஏரான
மான சாவு நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் இளநீர்
வியாபாரி சைதாப்பேட்டையிலே கொல்லப்பட்டதை
குறிப்பிட்டார். இளமலை என்பவர் மீன்சூரிலே கொல்லப்
பட்ட சம்பவத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 343 க்கும் மேலே
பல பேர் போலீஸ் லாக்காப்பிலே கொலை செய்யப்பட்டார்கள்
என்பது குற்றச் சாட்டு. பல விசாரணைகளை வைத்தார்கள்.
ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது, அவர்கள் குற்ற
வாளிகள் என்று சொல்வியதற்குப் பிறகும், ஒரு ஆள் மீதாவது
நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று கேட்டால், வழக்கமான
சஸ்பென்டே தவிர வேறு அல்ல. 302 செக்ஷனை ஏன் இதிலே
போடக்கூடாது. கர்நாடகத்திலே அப்படி போட்டிருக்கிறார்
களே, ஏன் கர்ப்பூரி தாகூர் முதல்வராக இருந்தபோது பீகாரிலே
போட்டார்களே. ஜபல்பூரிலே கைதிகள் கண்களைக் குருடாக்
கியவர்கள் மீது கோர்ட்டில் வழக்குப் போட்டு கடுங்காவல்
தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதே ஏன் அதை இங்கே செய்யக்
கூடாது. ஆகவே தான், போலீஸ் லாக்காப்பிலே டெத்—அதாவது
சாவு என்பது சாதாரணமாக இருந்து' கொண்டிருக்கிறது.

செஞ்சி வட்டத்திலே கண்டநல்லூர் கிராமத்திலே எல்லம்மா
என்கிற 53 வயது பெண்மணி மீது தேவையில்லாத புகார்களைச்
சொல்லி, அவர்களை கட்டி தொங்க விட்டு, அந்த அம்மா
வினுடைய மர்மஸ்தானத்திலே இரும்பை விட்டு— நான் சொல்
வதற்கு வெட்கப்படுகிறேன், வேதனைப் படுகிறேன். அவ்வளவு
பெரிய மனித மிருகங்கள் இத்தகைய காரியங்களைச் செய்
திருக்கிறார்கள். 53 வயதாகிய அந்த அம்மாவை இப்படி
கொடுமைப்படுத்தி, கேவலப்படுத்தி, அடித்து நொறுக்கி
ரோட்டிலே போட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நம்முடைய
மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
சகோதரர்கள் முதல்வர் அவர்களுக்கு மனு அனுப்பியிருக்
கிறார்கள். நடவடிக்கை உண்டா தெரியவில்லை.

(முற்பகல் 10-40)

அதைப்போலவே இன்றைக்கு விபசாரம். தமிழகத்திலிருந்து
பல பெண்கள் கடத்தப்படுகிறார்கள். இந்தியாவிலே இருக்கக்
கூடிய ரெட் லைட் ஏரியாவிலே 24 ஆயிரம் தமிழ்ப் பெண்கள்
இருப்பதாக சபையிலேயே நம்முடைய அமைச்சர்
திரு.பொன்னையன் புள்ளிவிவரம் கொடுத்தார். இந்த அளவுக்குக்
குடும்பப் பெண்கள் கடத்தப்படுகிறார்கள். வரதட்சணைக்
கொடுமையால் பல பேர்கள் கொல்லப்படுகிறார்கள். நம்
முடைய முதல்வர் அவர்கள் கூட அடுத்த
அசெம்பிளியில் அதற்குச் சட்டம் கொண்டு வருகிறேன் என்று
சொன்னார்கள். சட்டம் வந்தபாடில்லை. கணவன்
மனைவி இருவரும் தூங்குகிறார்கள், இரவு நேரத்திலே
உள்ளே நுழைந்து நகைகளை எடுத்துக் கொண்டு
போய் விட்டார்கள். அடுத்து 76 வயது கிழவன். 8 வயது
சின்னப்பெண்ணு, பெயர் ஜெயசித்ரா, அந்தப் பெண்ணை
கோவை அம்மன் கோயில் தெருவிலே கற்பழிக்கிறார்.

ஏற்கேனவே ஒரு சம்பவம் சொன்னேன். 70 வயது கிழவியை 20 வயது இளைஞன் கற்பழிக்க முயற்சித்தான் என்று சொல்லி சைதாபேட்டை கோர்ட்டில் ஒரு கேஸ் இருக்கிறது. அடுத்து ஒரு சம்பவம் என்னவென்றால் 76 வயது கிழவன் 8 வயது சிறுமியை கற்பழிக்க முயற்சித்தான். இப்படி கிழவன் கிழவி சங்கதிகள் இன்றைக்கு மிகக் கேவலமாக இந்த ராஜாங்கத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பகலிலே பெண்கள் தனியாக இருக்கமுடியவில்லை.

அடுத்து மூகமூடிக் கொள்ளை கடுமையாக இருக்கிறது. போலீஸ் அதிகாரியே கொல்லப்பட்டிருக்கிறார். பாதுகாப்பே இல்லை. கேட்டால் நரிக்குறவர்களைக் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள். ஆட்டோவிலே போகிறவர்களை நிறுத்தச் சொல்கிறார்கள். போலீசை போலீஸ் வேஷத்தில் இருக்ககூடிய முகமூடியோ என்று ஆட்டோவும் ஆனால் ஆட்டோவிலே ஓடுகிறவர்களைப் பார்த்து அவர்களை முகமூடியாக இருப்பார்களோ என்று இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருநூறுக்கு மேற்பட்டவர்களை விசாரணை என்ற பெயரால் அழைத்து சென்ட்ரல் ஜெயிலில் வைத்து இருப்பதாக எனக்குப் தகவல். ஆக விசாரிக்கப்படவேண்டிய நிரபராதிகளை தண்டிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. முகமூடி மிகப் பெரிய சேலஞ்சாக இந்த சர்க்காருக்கு இருக்கிறது. அதை கவனிக்கவேண்டும்.

தென்காசியிலே 1984 இல் சூதாடுகிற இடத்திலே நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அகில இந்திய அண்ணா தி.மு.க. வினுடைய ஒரு முக்கியமான பொறுப்பிலே இருப்பவரை கைது செய்தார்கள். அவரைச் சார்ந்த சிலரையும் கைது செய்தார்கள். வழக்குப் போட்டார்கள். அந்த் வழக்குப் போட்ட போலீஸ் அதிகாரி டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். வழக்குப் போட்டவர் ஏன் டிரான்ஸ்பர் செய்யப்பட்டார். என்ன காரணம்? அதுதான் காரணம். ஆகவே தலையீடு இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

சந்தேகம் என்ற பெயரால் கேட்கிறேன். இந்திராகுமாரி உங்கள் கட்சியிலே இருந்தவர். அவர் மீது போடப்பட்ட வழக்கு என்ன ஆயிற்று? 'நீ தொடும்போது' படத்தை எடுத்ததாகக் கேள்வி. அதைப்பற்றிப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடிய சிலருடைய கறுப்புப் பணம் அதிலே இருப்பதாகத் தகவல். இது குறித்து போலீஸ் விசாரிக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தங்கபாலு எம். பி. யாகி இருக்கிறார், நல்வாழ்த்துச் சொல்கிறேன். கூட்டணியில் இருக்கிறார் அவர் மீது போடப்பட்ட வழக்கு என்ன ஆயிற்று? அது இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிய விரும்புகிறேன்.



குமாரசாமி ரிஜிஸ்திரார் ஆக இருந்தவர், உங்கள் அண்ணா தி.மு.க. வின் வேட்பாளர். நாவலருடைய பாணியிலே சொல்வது என்றால் வெற்றி பெறுகிற வாய்ப்பை இழந்தவர், அவர் மீது சி.ஐ.டி. டிபார்மெண்ட் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்த வழக்கு என்ன ஆயிற்று என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

சர்வீஸ் கமிஷனில் குவஸ்டின் பேப்பர் லீக் ஆகிவிட்டது என்று சொல்லி சிலர் கைது செய்யப்பட்டார்கள். வழக்கு போடப் பட்டது, அந்த வழக்கு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

நம்முடைய நடிகர் ஜெமினி கணேசன், எனக்கு நண்பர் தான். எங்கள் தலைவர் அவர் பாதிக்கப்பட்டபோது பார்த்து வந்தார்கள். ஆனால் சட்டத்தின் முன் எல்லோரும் சமம். அவர் கூட சத்துணவு தந்தவர் புரட்சித் தலைவர் என்று பாரட்டினார். நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று சொன்னார். ஆகவே ஒரு சந்தேகம், அந்த தற்கொலை முயற்சி வழக்கு என்ன ஆயிற்று? விசாரணை நடக்கிறதா இல்லையா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று சொன்னவர் என்பதால் அவருக்கு நீங்கள் ஒரு பரிசு கொடுத்துவிடுவீர்களோ என்ற அச்சத்தில் கேட்கிறேனே தவிர நடந்து விட்டது என்று சொல்லவில்லை.* ஜனநாயக நாட்டில் எந்தக் கருத்தையும் ஒரு சட்டத்திற்குட் பட்டு முறைகளின்படி மாறுபாடான கருத்தைக் கூடச் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு .ரகுமான்கான் அவர்கள் டேப் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி டேப் செய்தது யார்? அவர்கள் எப்படித் தெரிந்து கொண்டார்கள்? தெரிந்துகொண்டு அவர்மீது வழக்குப் போடலாமே. ஏன் அதைப் போடுவதற்கு அங்கே யோசனை சொல்லவில்லை. இங்கே சொன்னால் நாங்கள் வழக்குப் போடுகிறோம்.

திரு. அ. ரகுமான்கான்: எங்களுடைய நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. கோபால்சாமி ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்தார்.

மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது அங்கே யார் அவருடைய பேச்சை பதிவு செய்தார்கள் நாடாவில் என்பதுதான். அது அவருக்குத் தெரிந்தால் சொல்ல வேண்டும், அவர் மேலே பேசுவதை அனுமதிக்கிறீர்களா என்பது உங்களுடைய தீர்ப்பில் இருக்கிறது. ஆனால் எனக்கு அவருடைய பதில் தேவை.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் அந்த பதிலை சொல்வதற்குத்தான் வந்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏதோ சம்பந்தம் இல்லாமல்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பேசுகிறேன் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். திரு கோபால்சாமி அந்த உரிமைப் பிரச்சினையை எழுப்புகிற போது சொன்னார், தமிழ்நாடு அரசாங்கம் ஒரு உத்திரவு போட்டு இருக்கிறது, என்னுடைய கடிதங்களை தணிக்கை செய்யும்படி. அது மட்டுமல்லாமல் அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு என்னுடைய பேச்சு டேப் செய்யப்படுகிறது, என்னுடைய கடிதங்கள் தணிக்கை செய்யப்படுகின்றது என்று உரிமைப் பிரச்சினை. ....

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே சமயத்தில் அந்த மன்றத்தின் தலைவர் அவர்கள் என்ன தீர்ப்பு வழங்கினார்கள் என்பதையும் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் தெரிவித்தால் நலமாய் இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற நாடுகளில் எதிர்க்கட்சிக்காரர்களுடைய பேச்சை டேப் செய்வதோ, அவர்கள் கடிதங்களை தணிக்கை செய்கின்ற முறையோ இல்லை. ஆனாலும் சபா நாயகர் என்ற முறையில் இதுபோன்ற உத்திரவு தமிழகத்தில் இருக்குமானால் அதற்கு நான் பாதுகாப்பு தரமுடியாது என்று ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார். வேண்டுமானால் முதலமைச்சர் அவர்கள் கருத்து வேறுபாடு இருந்தால் சொல்லலாம்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புகிறேன், என்றைக்கு என்னுடைய பேச்சு கூட டேப் செய்யப்படுமோ என்ற அச்சம் வருகிறது. நாங்கள் ஒரு குற்றச்சாட்டை முதலமைச்சர் அவர்களிடம் சொல்கிறோம். ஆக டேப் செய்யப்படுகிறதா என்று விசாரிக்க வேண்டும். எங்களுடைய கடிதங்கள் இங்கே தணிக்கைக்கு உள்ளாக்கப்படுகிறதா என்பதை இந்த அரசு விசாரிக்க வேண்டும் என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் சொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எம் ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தவைவர் அவர்களே, இப்போது சொல்கின்ற கருத்து வரவேற்கக் கூடியது. ஆனால் டேப் செய்யப்பட்டது என்று சொன்னார்களே, அது எந்த ஆதாரத்தில்?

**திரு அ. ரகுமான்கான்.** I und.rstand from r.liabl: sourc s. சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு. காரணம்

**மாண்புமிகு டாக்டர் எம். ஜ. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்த மன்றத்தினுடைய மரபுக்கும், வரம்புக்கும் மீறிய பதிலாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். உங்கள் தீர்ப்பு தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** டேப் செய்யப்பட்டு இருக்கிறது என்றால் அதைச் சொல்லுங்கள். இல்லை என்றால் இல்லை என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு அ., ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாங்கள் ஒரு பிரச்சினையிலே ஒரு கருத்தைத் தெரிவிக்கிறபோது சிலவற்றிற்கு டைரக்ட் எவிடென்ஸ் கொடுக்க முடியும். சிலவற்றிற்கு சர்கம்ஸ்டென்ஷியல் எவிடென்ஸ் தான் கொடுக்க முடியும்.





**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியம் என்பதும் நேரடி சாட்சியம் என்பதும் எங்களுக்கும் ஓரளவுக்கு புரியும். தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. டேப் செய்யப்பட்டது என்று சொன்னால் யாரால்? எங்கு? அதைச்சொல்லியாக வேண்டும். முன்பு இந்திரா நகருக்கு சாட்சி சொல்லியது போல் சொல்லக் கூடாது. (கைதட்டல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன். நேரம் ஆகி விட்டது, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு அ. ரகுமான்கான்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளிலே என்னுடைய டைம் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** குறுக்கீட்டில் டைம் போகவில்லை. ஜாக்கிரதையாக நான் கவனித்துக்கொண்டு தான் வருகிறேன். பேசுவதற்கு முன்பாகவே காலையிலேயே நான் சொல்லிவிட்டேன். என் பெயரில் கோபித்துக்கொள்ளக் கூடாது.

**திரு அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணேசன் என்ற ஒரு மலேசிய மாணவன் 1982 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி விஷயமாக ஒரு புகார் கொடுத்திருக்கிறார் போலீஸ் அதிகாரி ரமணன் இடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ராமதாஸ் என்பவர் முதலமைச்சருக்கு மிகவும் வேண்டியவர், பொறுப்பில் இருக்கக்கூடியவர். அவரிடத்தில்

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்,** மாண்புமிகு பேரவைத் தவைவர் அவர்களே, எனக்கு திரு. ரகுமான்கான் அவர்களும் வேண்டபபட்டவர் தான். கலைஞரும் வேண்டப்பட்டவர் தான். எல்லோரும் வேண்டப்பட்டவர்கள் தான். ஆகவே யாராவது ஏதாவது தவறு செய்தால் எனக்கு வேண்டப்பட்டவர் என்று கூறுவதை விட குற்றவாளி யார் என்று சொன்னால் விசாரிக்கலாம்.

**திரு அ. ரகுமான்கான்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரிடத்தில் 50 ஆயிரம் ரூபாய் மருத்துவ கல்லூரியில் இடம் வாங்கித் தருவதற்காக கொடுக்கப்பட்டு அவர் ஏமாற்றியதாக புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது விசாரிக்கப்படுகிறதா? இதனுடைய கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் ஒன்றை நான் இங்கே உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே பல பொய் வழக்குகள் போடுகின்ற தோரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கருத்துக்களை

அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு சொல்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. அதை எதிர்ப்பதற்கு ஆளும் கட்சிக்காரர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அதற்காக வேண்டும் என்றே வழக்குகளை போடுவது என்பது சரியாக இருக்க முடியாது. ஒரு தொகுதியிலே மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டி ஒரு போஸ்ட்டர் போட்டார்கள். சபாஷ் உங்கள் அனுமதியோடு கேட்கிறேன். எந்தத் துறையாக இருந்தாலும் திறமையாக செயல்படுகின்ற ஆற்றல் படைத்தவர் திருநாவுக்கரசு. முதலமைச்சர் எம். ஜி. ஆர். இதயம் கவர்ந்தவர். திறமை மிக்கவர். தினந்தோறும் அரசுப் பணிகளை கவனிப்பதை கடமையாகக் கொண்டவர். அவரது திறமையைப் பார்த்து கூட்டுறவுத் துறையை நிர்ணயித்து இருக்கிறார் முதலமைச்சர் இனிமேல் கூட்டுறவுத் துறையிலும் மறு மலர்ச்சி உறுதி என்று அறந்தாங்கித் தொகுதி அ.இ.அ.தி.மு.க. என்று ஒரு போஸ்ட்டர் போடப்பட்டு இருக்கிறது. இது உங்கள் கருத்து. அதிலே ஒன்றும் வேறுபாடு இல்லை, குறுக்கிடுகின்ற் வகையில் நாங்கள் இல்லை நாங்கள்எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், இவர்களும் போஸ்டர் போடுகிறார்கள். ஆன் லுக்கர்ஏடு அம்பலப்படுத்திய பலகோடி ரூபாய் லஞ்சப் புகார் எதிரொலி இவர்கள் லுக்கரைச் சொல்கிறார்கள் அமைச்சர் திருநாவுக்கரசு பெருந்தொழில் இலாக்கா பறிமுதல், ஒன்றிய தி.மு.க. அறந்தாங்கி, இந்த நோட்டீஸைப் போட்டதற்காகவே அறந்தாங்கி ராஜன், இன்னும் அந்தப் பத்திரிகை நோட்டீஸ் போட்டுக் கொடுத்தவர்களைக் கைது செய்து, வழக்குப்போட்டு சிறையில் அடைத்தால் என்ன நியாயம்? பத்திரிகைச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரத்திற்கு இது முறைதானா என்று நான் கேட்கிறேன்.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இறுதியில் பேச வேண்டியவன் என்றாலும், பிரச்சனைகள் அதிகமாகிக் கொண்டே இருப்பதால் நான் நான்கைந்து நாட்கள் தொடர்ந்து பதில் சொல்லுகின்ற அவசியம் வந்து விடக்கூடாது என்பதற்காகவே இப்பொழுதே சொல்ல விரும்புகிறேன்.

உங்கள் தலைவர்களையோ, நண்பர்களையோ பாராட்டிப் பேசுவதில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு குற்றச் சாட்டைச் சொல்லும்பொழுது அது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். ஏதோ, பத்திரிகையில் வந்த குற்றச்சாட்டை, அதில் கூறியுள்ளவைகளை இங்கே விளம்பரப்படுத்துவது என்பது எப்படி முறையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி அதை எல்லோரும் கடை பிடிக்க ஆரம்பித்தால் நாட்டிலே அமைதியே இருக்காது





திரு அ. ரகுமான்கான். மாண்புமிகு மன்றத் தலைவரவர்களே என்னிடத்திலே ''ஆன் லுக்கர்'' பத்திரிகை இருக்கிறது. இதை நீங்கள் கைது செய்ய முடியுமா? இதிலே என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றால் . . .

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்குப்போடுவது என்பதையும், அதை எப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்பதையும் நாங்கள் உணர்ந்துதான், நாங்கள் கொண்டு வந்த திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்றோம், இதே மன்றத்திலே உள்ளவர்கள் கேட்டதால்தான். இதே பத்திரிகையில் இப்படிப்பட்ட செய்திகள் பல வந்திருக்கின்றன. ,'இந்தியா டுடே''-விலேயும் என்னென்னமோ வருகின்றன. அவையெல்லாம் அரசாங்கத்தினுடைய அல்லது மக்களுடைய உண்மையான பிரதிபலிப்பை அல்லது கொள்கையை எதிரொலிக்கின்றன என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்துக் கொண்டு எதைச் சொன்னாலும் அதற்கு நாங்கள் தலைவணங்கக் காத்திருக்கிறோம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவரவர்களே இங்கே அவர்கள் சொல்லுவது குற்றச்சாட்டு அல்ல. எப்படிப் பத்திரிகைகளுக்குக் கருத்து சொல்வதற்கு உரிமையிருக்கிறது என்று சொல்கிறோமோ அதேமாதிரி தான் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், பத்திரிகையில் சொன்னால் கைது இல்லை வழக்கு இல்லை. ஆனால் அதைப் போஸ்டராகப் போட்டால் கைது. . . .

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரகுமான்கான் அவர்களுடைய பேச்சிலே நேரம் குறைந்தாலும் நான் கொஞ்சம் பதில் சொல்வதற்கு' என்னுடைய நேரத்தை வேண்டுமென்றாலும் குறைத்து கொண்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த உரிமை அவருக்குக் கிடைக்கட்டும்.

சமீபத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில், இந்தியாவில்' அதுவும் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு: அதாவது ஈழத் தமிழர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாகப் படம் எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் படம் உண்மை என்று ஒத்துக்கொள்ளப் போகிறீர்களா? எங்கே அப்படி நடக்கிறது? உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஆகவே, இதைப் போன்றவைகளையெல்லாம் நாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் பொய்மைதான் மிஞ்சும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, பொய்மை மிஞ்சக் கூடாது என்பதற்காக, வழக்கு போடுகிறபொழுது, அதை எழுதிய அந்தச் சகோதரர் மீது ஏன் வழக்கு போடக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதுதான் சிரமமாக இருக்கிறது.

அடுத்து, நான் சொல்ல வருகின்ற பிரச்னை, இன்னொருவர் மீது வழக்கறிஞர் பாண்டியன், இங்கே பக்கத்தில் இருக்கக் கூடிய தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடியவர் இளைஞர் அணியைச் சார்ந்தவர், அவர் தன்னுடைய ஊரிலே கூட்டத்திலே பேசுகின்றபொழுது, செம்பனார் கோவிலில், நம்முடைய முதலமைச்சரையும் அவர்கள் கொள்கை பரப்புச் செயலாளரையும் கேவலமாகப் பேசிவிட்டார் என்று சொல்லி பேசுகின்ற உரிமை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டு இருக்க வேண்டும், வேண்டுமானால் முதலமைச்சரவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் என்ன பேசுகிறார் என்று....

மாண்புமிகு டாக்டர் எம், ஜி. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் பதில் சொல்ல முடியாமல் இருப்பவர்களுடைய பிரச்னையையெடுத்துக்கொள்வது முறையல்ல.

திரு அ. ரகுமான்கான் : அவர் மீது 505, 506 ஐ.பி.சி கூட்ட்த்திலே பேசியதற்காக.

அடுத்து, அதைப்போலவே, தூத்துக்குடியில்' எங்கள் கட்சியைச் சேர்ந்த ஸ்டெல்லா....(மணியடிக்கப்பெற்றது) குறுக்கீடுகள் வந்துவிட்டன. எனவே, எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கெல்லாம் சேர்ந்து நேரம் கொடுக்கப்பட்டாகிவிட்டது. குறுக்கீட்டையும் சேர்த்துத் தான் உங்கள் பேச்சுக்கு நேரம் கொடுக்கப்பட்டது.

திரு. அ. ரகுமான்கான்: அதைப்போலவே ஸ்டெல்லா அவர்கள், தூத்துக்குடியில் பேசுகின்ற போது முதலமைச்சர் அவர்களையும், மற்றவர்களையும் விமரிசிக்கக் கூடாது என்று சொல்லி, துப்பாக்கியைக் கொண்டு வந்தார் கூட்டத்தில் என்று சொல்லித்தடுத்திருக்தார்கள். அதைப்போலவே ஊட்டியிலே ஒரு சம்பவம் நடந்தது. அந்தப் போலீஸ்காரர்கள் தப்புச் செய்யவில்லை, பாதுகாப்புக் கொடுக்கத் தவறவில்லை என்று நாவலர் அவர்கள் சொல்கிறார் அப்படியானால் அந்த எஸ்.பி—யை ஏன் ட்ரான்ஸ்பர் செய்கிறீர்கள்? அந்த ஏட்டை ஏன் சஸ்பெண்ட் செய்கிறீர்கள் இன்னும் சொல்லப்போனால் திரு. ராஜ்குமாருக்குத் காயம் இல்லை ஒரு இடத்தில் சூட்டிங் நடந்தது. பின்னால் மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னதற்குப் பிறகு அந்தப் போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுத்ததில் என்ன நியாயம் இருக்கின்றது இன்னொன்றும் இங்கே சொல்ல விரும்புகிறேன். நாவலர் அவர்கள் சொன்னார் அதிகாரிகள்தான் அப்படிச் செய்துவிட்டார்கள் இதிலே முதலமைச்சருக்கு பொறுப்பு இல்லை என்று. நம்முடைய திரு.ஆர்.எம். வீரப்பன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார் இல்லை, இல்லை முதல்வர் ஊரிலே இருக்கின்றபோது ராஜ்குமாருக்கு காயம் என்ற



தகவல் கிடைத்தவுடன் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார், உடனே இதற்கும் உத்தரவிட்டார்'' என்று. அதாவது இந்த ட்ரான்ஸ்பருக்கும், சஸ்பென்ஷனுக்கும் உத்தரவிட்டார் என்று அவர் சொன்னார். ஆகவே இதில் எது உண்மை? முன்னவர் சொன்னது உண்மையா? பின்னவர் சொன்னது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் சொன்னது முன்னால் உண்மை பின்னவர் சொன்னது பின்னால் உண்மை.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, முன்னவர் சொன்னதைப் பின்னவர் சொல்லலாம். பின்னவர் சொன்னதை முன்னவர் சொல்லலாம். ஆனால் முரண்பாடு இருக்கக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் எங்கோ போய்க் கொண்டிருக்கிறார். முன்னாலும், பின்னாலும் தெரியாமல் பேசக் கூடாது. முன்னவர் முன்னால் பேசியது, அது முடிந்துவிட்டது பின்னவர் பின்னால்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, சில நேரங்களில் நாம் பேசுகின்ற முறைகள் முதலமைச்சருடையதிலிருந்து வேறுபட்டிருக்கலாம். ஆகவே முன்னது, பின்னது விளங்காமல் இருக்கலாம். திரு. வீரப்பன் ஒரு கருத்தை சொன்னார்; நாவலர் இன்னொரு கருத்தைச் சொன்னார். இதில் எது சரி என்று புரியவில்லை. ஆகவேதான் கேட்டேன். அவர் சொன்னது சரி என்று சொல்லிவிட்டார். அதுசரி. ஆனால் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார். அங்கே கர்நாடகத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, நீங்கள் ஏன் ஒருவார்த்தை கூட கேட்கவில்லை? திரு ராஜ்குமாரைக் கூப்பிட்டுப் பேசுவதாகச் சொன்னீர்கள். என்ன அப்படி புதிய ராஜாங்க ரகசியத்தைப் பேசிவிட்டீர்கள்? அதை மக்களுக்குச் சொல்லக்கூடாதா ஏனென்றால் அதற்குப் பின்னால் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழர்கள் பிரச்சினைதானே அது?

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் டெலிகிராம் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு தொலைபேசியில் பேசி இருக்கிறேன். அதன் பிறகு அவர் அவருடைய வாழ்க்கைத் துணைவியாரோடு நேரிலே வந்து என்னிடம் பேசினார். அட்வைசர்களோடு வந்து பேசினார். அப்போது இதைப்பற்றிப் பேசி அறிக்கை விட வேண்டும் என்றோம். அறிக்கை விட்டார் தனக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று.

திரு. அ. ரகுமான்கான்: கடைசியாக நான் குறிப்பிடுவது காவல் துறை சப் இன்ஸ்பெக்டர் செலக்ஷன். போலீஸ்காரர்கள் செலக்ஷன். இதில் எல்லாம் எவ்வளவு முறைகேடுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லி இரண்டே நிமிஷங்களில் முடித்து

விடுகிறேன். உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். 27-12-1981 அன்று சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு நியமனம் செய்வது பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் வருகின்றது. ஆயிரக்கணக்கானவர்கள் 25 ரூபாய் கட்டி விண்ணப்பம் போடுகிறார்கள். ஃபிசிக்கல் எஃபிசியன்சி டெஸ்ட் முடிந்தது. மாவட்டத் தலைநகரங்களிலே வைக்கப்பட்டன. ரிட்டன் டெஸ்ட் எழுதப்பட்டுவிட்டது. பிறகு தேதி குறிப்பிடாமலே செலக்ஷன் நின்றுவிட்டது. முதல்வர் சொல்லிய காரணம்: தவறு நடந்துவிட்டது செலக்ஷனில், எனவே ராணுவ அதிகாரியை வைத்துத் தேர்வு செய்யப்படவேண்டும் என்று சொன்னார். அப்படிப்பட்ட தேர்வு வரவில்லை. எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால் கோர்ட்டிலே ஸ்டே வாங்கப்பட்டிருக்கின்றது என்பதாகும். அப்படி இருக்கும்போது எப்படி சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷன் என்று சொல்லி பழையபடியும் கால்ஃபார் பண்ணுகிறீர்கள்? ஏன் 25 ரூபாய் வாங்குகிறீர்கள்? ஏற்கெனவே கட்டியது 25 ரூபாய்; பல இலட்சம் பேர்; அது கொடுக்கப்படவில்லை; இப்போது கட்டியது 25 ரூபாய்; இதுவும் பல இலட்சம் பேர்; இதுவும் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஏமாற்றி, பணத்தை வைத்துக்கொண்டு சர்க்கார் தன் இஷ்டத்திற்கு தருவேன் என்று சொல்வது என்ன நியாயம்?

நீதிக்குத் தலை வணங்குபவர்கள் நாம் என்பது உண்மையானால் கோர்ட்டிலே ஸ்டே இருக்கும்போது செலக்ஷன் நடத்துவது எப்படி நியாயம்? அப்படியானால் இப்போது எடுக்கிறீர்களே, அப்போது எடுத்தது என்னவாயிற்று? ஆகவே இந்த முரண்பாடுகளுக்கெல்லாம் பஞ்சாயத்துத் தேர்தல் முரண்பாடுகள் போல் இல்லாமல் முதல்வர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இன்னொன்று.

**மாண்புமிகு பேரவை தலைவர்:** அதிக நேரம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். இத்தோடு முடித்துவிடுங்கள். அடுத்து திரு. வி பி. பாலசுப்பிரமணியன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அவை முன் வைத்திருக்கின்ற காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற காவல் துறை அதனுடைய சீரிய பணியின் காரணமாக—இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு கொந்தளிப்புகள் சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்—தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக ஆக்கி ஆட்சித் தேர் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் காவல் துறை தன்னுடைய சீரிய பணியினைச் செய்து கொண்டிருக்



கின்றது. பல்வேறு மாநிலங்களில் குற்றங்கள் கூடிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், பல்வேறு சமுதாயக் கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட குற்றங்களின் எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டி கூடியிருக்கின்றது என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-00)

புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு இந்த மாநிலத்திலே பொதுமக்கள் கொடுக்கிற அத்தனைக் குற்றங்களையும் காவல் துறையினர் பதிய வேண்டுமென்ற கட்டாய உத்தரவினை இந்த மாநிலத்தில் அமுல்படுத்திய பிறகு பொது மக்கள் காவல் துறையிடம் கொடுக்கிற புகார்கள் இங்கே பதிவு செய்யப்படுகின்ற சூழ்நிலையை மட்டும் எடுத்துக் காட்டி இங்கே அருமை அன்பர்கள் பேசினார்கள். நான் இந்த நேரத்திலே ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே குற்றக் குறியீட்டு எண் ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டு வருகின்ற ஒரே மாநிலம், புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற தமிழகம்தான் என்பதைப் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

எந்தக் கட்சிஆண்டாலும் சரி, 1980—ஆம் ஆண்டு இந்த மாநிலத்தினுடையகுற்றக் குறியீட்டு எண் 243—ஆக இருந்தது. புரட்சித்தலைவர் ஆட்சியிலே, காவல் துறையினர் 1981-ஆம் ஆண்டு 238.1 ஆகக் குறைத்திருக்கிறார்கள். 1982-ஆம் ஆண்டு அந்தக் குற்றக் குறியீட்டு எண் 238-லேயிருந்து 235-ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 1983—ஆம் ஆண்டு 222-ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை, இதற்கு முன்பு இந்த மாநிலத்தை ஆண்டவர்கள் இருந்தபோதும் சரி, 22 மாநிலங்களிலே தற்போது ஆண்டு கொண்டிருக்கின்ற எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்ற மாநிலங்களிலும் சரி, கடந்த ஆண்டை விட, குற்றம் குறைந்திருக்கிறது என்ற வரலாறே கிடையாது. ஏன், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்திலும் சரி, காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலும் சரி, 1960-ஆம் ஆண்டிலேயிருந்து குறியீட்டு எண் ஏறுமுகத்தைத்தான் பார்த்திருக்கிறதே ஒழிய, புரட்சித் தலைவர் ஆட்சியிலே இருக்கிற இந்த ஒரே ஒரு தமிழகத்திலேதான் குற்றக் குறியீட்டு எண் இறங்கியிருக்கிறது. இந்த மைய அரசு வெளியிடுகிற பல்வேறு புள்ளி விவரங்கள், புள்ளி விவரப் புத்தகங்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

இங்கே ஏதோ ஒருசில நிகழ்ச்சிகளைச் சொல்லி, காவல் துறையைக் குற்றம் சாட்டுகின்றார்கள். ஆனால், பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்துக் காவல் துறையைப் பாராட்டி இருக்கிறார்கள். பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்கள் இந்தக் காவல் துறையின் அரிய பணியைப் பாராட்டியிருக்கிறார்கள். காணாமல் போன அமெரிக்கப் பெண் மணி பற்றி துப்புத்துலக்கி கண்டுபிடித்ததற்காக, சென்னை நகரப் போலீசாருடைய பணியை சென்னையிலே இருக்கிற

அமெரிக்க தூதுவர் மனமுவந்து பாராட்டினார். மத்தியப் பிரதேச வணிகக் குழுவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எஸ். மாத்ரு அவர்களுடைய பொருள் களவு போனதை 24 மணி நேரத்திற்குள்ளேயே கண்டு பிடித்துக்கொடுத்ததற்காக மனமுவந்து, சட்டம் ஒழுங்கைச் சிறப்பாக அமுல்படுத்துவதிலே சிறப்பான இடத்தை வகிக்கிறது தமிழக காவல் துறை என்று மத்தியப் பிரதேச சட்டமன்ற உறுப்பினர் பாராட்டியிருக்கிறார்.

31-3-1982—லிருந்து 19-1-1983 வரையிலே எல்லா மாநிலங்களிலும ஏற்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்னையில், தமிழக போலீசாருடைய சிறப்புக்களையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் மத்திய அரசே வியந்து பாராட்டி இருக்கிறது. ஏன் கூட்டு சேரா நாடுகள் கூட்டத்திற்கு வந்த பாகிஸ்தான் அதிபரே தமிழக போலீசாரை வெகுவாகப் பாராட்டி, சட்டம், ஒழுங்கு பிரச்னைகளைத் தீர்ப்பதில் மற்றவர்களுக்கு வழி காட்டுகின்ற வகையிலே இந்தக் காவல் துறை இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். இப்படிச் சிறப்பான முறையிலே, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வைக்கிற பணியிலே தமிழகக் காவல் துறை சிறப்பாக நடவடிக்கை எடுக்கிறது.

அதே நேரத்திலே, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு சில தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னாலும் கூட, ஜனநாயக உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து, தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர், அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியதே கிடையாது. காவல் துறையில் சில தவறுகள் நடைபெற்று விட்டன என்று, சில தவறுகள் அங்கே சுட்டிக்காட்டப்படுகின்ற பொழுது, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அலட்சியப்படுத்தாமல், ஜனநாயக உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்தவைகள் உண்மையா, பொய்யா, என்பதை அறிய அவர்கள் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி விசாரணைக்கு உத்தரவிடுகின்ற தாயுள்ளம் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர், நீதி விசாரணைக்கு உத்தரவிட்டதோடு மட்டுமல்ல, நீதி விசாரணை அறிக்கையை இந்த மன்றத்திலே விவாதிக்க வேண்டுமென்று ஒரு புதிய ஜனநாயக மரபை உருவாக்கி இருக்கிறார்கள்.

தவறுஎன்று சுட்டிக்காட்டினால், அதற்கு ஆதாரம்இருக்கின்ற பொழுதுஅது நிருபிக்கப்படுகின்றபொழுது, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பல்வேறு இடங்களிலே, பல்வேறு கட்டங்களிலே நீதி விசாரணைக் குழு அமைத்து, அவைகளை இங்கே விவாதிப்பதற்கான உரிமைகளையும் கொடுத்திருக்கின்றார். மற்ற மாநிலங்களில் எப்படி என்பதைத் தயவு செய்து, அருள்கூர்ந்து எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறு பிரச்னை என்று சொன்னாலுங்கூட அதிலே நடந்தது என்ன என்பதைக் கண்டறிவதற்காக, அதிலே காவல் துறையினர் தலையிட்டார்களா என்பதைக் கண்டறிவதற்காக், குழு அமைக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் மற்ற மாநிலங்





களிலே, என்ன நிலைமை? இங்கே ஒரு அதிகாரி தவறு செய்து விட்டார் என்கிற குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்களைக் குறை சொல்கின்றவர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அக்கிரமமான நடவடிக்கைகளிலே அங்கங்கே, பல்வேறு மாநிலங்களிலே, காவல் துறை ஈடுபட்டதைக்கூட அந்த அரசாங்கங்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

திரிபுரா மாநிலத்தில்போலீஸ் அக்கிரமத்தை அங்கே இருக்கிற அரசாங்கமே பாராட்டி இருக்கிறது. இங்கே சொல்கிறார்கள், இருக்கிறதா, ஆதாரம் இல்லையா என்பதைவிட தவறுகள் நடைபெற்றுவிட்டன என்று மட்டும் சொல்கிறார்கள். தவறுகள் நடைபெற்று விட்டன வென்று. 52 ரவுண்டுகள் போலீசார் சுட்டு விட்டார்கள் என்று, அந்த அரசாங்கமே ஒரு நீதி விசாரணைக் கமிஷனை நியமிக்கிறது. நீதி விசாரணைக் கமிஷனுக்கு தலைமை தாங்கிய நீதிபதி மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள். காவல் துறைத் தரப்பிலே சொல்லப்பட்டவைகள் அனைத்தும் பொய்; சுட்டு இறந்த ஏழு பேர்கள் தேடப்பட்ட கைதிகள் என்று சொல்கிறார்கள். தேடப்பட்ட கைதிகள் என்றால் போலீஸ் ரெக்கார்டிலே அந்த ஏழு பேர்களுடைய பெயர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு காரணமாக போலீஸ் தரப்பிலே சொல்லப்பட்ட ஆறு காரணங்களும் தவறானவை, பொய்யானவை என்று நீதி விசாரணைக் கமிஷன் தன்னுடைய அறிக்கையை திரிபுரா சட்டமன்றத்திலே கொடுத்தும் கூட அந்த அறிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அந்த அரசு சொன்னது. அங்கே ஆண்டு கொண்டிருக்கிற கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. இதைச் சுட்டிக்காட்டுவதற்கு காரணம் நீங்கள் பல்வேறு காலக் கட்டங்களில் சொல்கிற பல்வேறு பிரச்னைகளில் தீர்வு காண நீதி விசாரணைக்கு உத்தரவிட்டது மட்டுமல்லாமல், அவைகளை இந்த மக்கள் மன்றத்திலே விவாதிக்க வேண்டுமென்கிற ஜனநாயக மரபை புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் முதன்முதலாகத் துவங்கப்பட்டது. என்பதை ஏனோ எதிர்க்கட்சிக்காரர்கள் மறந்து விட்டார்கள்.

குற்றக் குறியீட்டெண் மட்டுமல்லாமல், குற்றங்களை கண்டு பிடிப்பதிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்றாலும் கூட, அதற்கும் பொதுமக்கள் தொடர்பு வேண்டும்.

இங்கே விமர்சிக்கிற உங்களைக் கேட்கிறேன். மேற்கு வங்கச் சட்டமன்றத்திலே ஜோதி பாசு அவர்கள் சொல்கிறார்கள், வெறும் சட்டங்களை மட்டும் போட்டால் காவல் துறையை நடத்த முடியாது வெறும் நிர்வாக உத்தரவுகளால் மட்டும் குற்றங்களைக் குறைக்க முடியாது பொது மக்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்று சொல்கிறார்கள். அப்படி ஒத்துழைப்பு கிடைக்கிறபொழுது பல்வேறு வழக்குகளில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒத்துழைப்புத் தரவேண்டியது பொது மக்களுடைய கடமை.

இங்கே இருக்கிறவர்கள் கூட பல்வேறு காலக் கட்டங்களில் ஏதோ ஆதாரம் இருக்கிறதென்று மார்தட்டி பேசியவர்கள் இன்னும் ஆதாரம் கொடுக்கவில்லை என்றால் காவல் துறையை மட்டும் குறை சொல்ல முடியுமா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். பொது மக்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் குற்றங்களைக் குறைக்க முடியாது என்று ஜோதி பாசு அவர்கள் சொல்கிறார்கள். அந்த ஒத்துழைப்பு இருக்குமானால் இந்தியத் துணைக்கண்டத்திலேயே முன்னணியில் காவல் துறை இன்னும் கூடுதலான குற்றங்களைக் கண்டுபிடிக்கிற சூழ்நிலை ஏற்படும்.

அதேபோல ஏற்பட்டிருக்கிற பல்வேறு சமுதாய நலச் சட்டங்கள் காரணமாக வழக்குகளின் எண்ணிக்கை கூடினாலும் இந்தக் குற்றக் குறியீட்டெண் தமிழகத்தில் குறைந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இன்றைக்கு பல்வேறு கட்சியினர் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற தினத்திலேயிருந்து எந்த ஒரு மாநிலத்திலும் குற்றக் குறியீட்டெண் குறைந்ததாக வரலாறே கிடையாது. தமிழகத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் 1980-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் குற்றக்குறியீட்டெண் தொடர்ந்து குறைந்து வருகிற சூழ்நிலை இருக்கிறது என்றால் இதற்குக் காரணம் காவல்துறை எடுத்திருக்கிற சீரிய பணிகளும், அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய தாய் உள்ளம் கொண்டு நடவடிக்கையும் தான். இந்த மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கே உதாரணமாக ஒரு அமைதிப் பூங்காவாக இருக்கிற வகையிலே இங்கே சமர்ப்பித்து இருக்கிற காவல்துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று, வழங்கிய வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திருமதி டி. யசோதா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுகிற வாய்ப்பை நல்கியதற்கு தங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே சட்டம் ஒழுங்கு காத்து மக்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் பாராட்டிற்குரியது ஆகும். மத்திய அரசின் உதவியுடன் காவல் துறையை நவீன மயமாக்கியதற்கு மகிழ்வு கொள்ள இயலாத அளவில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகப்படியான கொலை, கொள்ளை, களவுகள் நடந்து இருக்கின்றன. 1982—ஆம் ஆண்டில் 52 கொலைகள் என்றால் 83ல் 69 கொலைகள், 82-ல் 38 கொள்ளைகள் என்றால் 83-ல் 60 கொள்ளைகள் கன்னக் களவுகள், சிறிய திருட்டுகள் ஆயிரக் கணக்கில் அதிகரித்து இருக்கின்றன. குற்றங்கள் கூடுதலாகலாம். ஆனால் அதேசமயம் காவல் துறைக்கு சகல வசதிகளும் செய்து கொடுத்துள்ள பொழுது கண்டுபிடிப்புகளும் முந்தைய ஆண்டை விட அதிகமாக இருக்க வேண்டும் அல்லவா? அப்படி கண்டுபிடிக்காததற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 11—10)

இவ்வளவு வசதிகள் செய்து கொடுத்த பிறகும்கூட கண்டுபிடிப்புகள் குறைந்து இருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகள் 52, அதிலே கண்டுபிடிக்கப்பட்டவை 39 கண்டுபிடிக்கப்பட்ட கொலைகளின் விழுக்காடு 75. 1983-ஆம் ஆண்டு நடைபெற்ற கொலைகள் 69, கண்டுபிடிக்கப்பட்டவை 29. கண்டுபிடிக்கப்பட்ட கொலைகளின் விழுக்காடு 42. 32 விழுக்காடு குறைந்து இருப்பதற்கு, அதுவும் நவீனமயமாக்கப்பட்ட பிறகு குறைந்து இருப்பதற்கு, என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். பெரும்பாலும் பல்வேறு சமூக பொருளாதார பிரச்னைகள் காரணமாகவும், 1983—ல் மாநிலத்தில் நிலவிய வறட்சியும், நகரங்கள் விரிவடைந்து இருப்பதும் தான் குற்றங்கள் அதிகரித்து இருப்பதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும் குற்றங்கள் கண்டுபிடிப்பதில் விழுக்காடு குறைந்து இருப்பதற்கும் இந்த வறட்சியும், நகரங்களின் விரிவு அடைந்து இருக்கும் நிலைமைதான் காரணமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நடு இரவில் தன்னந்தனியாக ஒரு கன்னிப்பெண் நகைகளை அணிந்துகொண்டு, தான் எந்த இடம் நோக்கிச் செல்ல நினைக்கிறாளோ அந்த இடத்திற்கு சென்றடைந்தால், கள்வர் பயம் இல்லாமல், காமுகர் பயம் இல்லாமல், சென்றடைந்தால், அப்போதுதான் உண்மையான சுதந்தரம் நாட்டிலே வந்திருக்கிறது என்று அர்த்தம் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால் இன்றைக்கு அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், பெண்களே நீங்கள் பலரின் கண்ணுக்குத் தெரிவதுபோல் நகைகளை அணிந்து வெளியே செல்லாதீர்கள் என்று அவர்களை அச்சப்படுத்துகின்ற முறையில் அறிவுரைகள் வழங்குவது பத்திரிகையில் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைகள் நீடிக்கவேண்டும் என்பதற்காகவா நாம் நவீனமயமாக்கினோம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு ஏழைகள், அதுவும் சமூகத்தில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களிடத்தில் தனிக்கவனம் செலுத்தி பல துறைகளில் உதவி தருவதுபோல், காவல்துறையில் இருப்பவர்களும் ஏழைகள் சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு உதவுவதாக இருக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தான் இந்த ஆய்வுரையிலும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள், அல்லது உதவி கோரி வருகிறவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மக்கள், சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை காவல்துறையினர் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். அவர்களிடம் காவல் துறையினர் அன்பும், அனுசரணையும் காட்டி நடந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விட்டு இருப்பது, விசாரணை இல்லாமலேயே மாநில முதல்வர்கள் நேரில் வந்து சாட்சி

சொன்னதுபோல் அமைந்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் காவல் துறையினர் ஏழைகள் மீது குற்றங்களைச் சாட்டுகிறார்கள். சித்ரவதை செய்கிறார்கள். விசாரணை இல்லாமல் வழக்கு போட்டு தண்டனை கொடுக்கிறார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன்.

மைலாப்பூர் லஸ் பகுதியில் தோஷி அண்ட் தோஷி என்ற கெடிகாரக்கடை ஒன்று இருக்கிறது. அதிலே பி.காம். படித்த பட்டதாரி, வேறு வேலை கிடைக்காத காரணத்தால் ரூ. 250 மாத சம்பளத்தில் அங்கே பணி செய்கிறார். அவருடைய முதலாளி வீடு இராயபுரத்தில்இருக்கிறது. அங்கேயிருந்து அவர் தினமும் சாவியை வாங்கிக்கொண்டு வந்து காலை 8.00 மணிக்கு கடையைத் திறக்க வேண்டும். பின்னர் இரவு கடையைப் பூட்டி சாவியை முதலாளி வீட்டில் கொடுக்கவேண்டும். ஒருநாள் காலை அவர் வந்து கடையைத் திறந்து பார்த்தபோது, பூட்டைத் திறக்காமலேயே கடையைத் திறந்துவிட்டார், உள்ளே போனால் கிட்டத்தட்ட 400-க்கு மேற்பட்ட வாட்ச் அங்கே இருந்து களவு செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. உடனே அவர் முதலாளிக்கு போன் செய்கிறார். அவர் போலீசில் புகார் கொடு என்று சொல்கிறார். ஆனால் போலீசார் என்ன செய்கிறார்கள் என்றால், அந்த ஏழையின் மீது முதலாளிக்குச் சந்தேகம் என்று சொன்னதால், அவனை அங்கே போலீஸ் நிலையத்தில் உள்ள லாக்-அப்பில் வைத்து, பல கொடுமைகளுக்கு அவனை உட்படுத்தி இருக்கிறார்கள். இதன் காரணமாக அவன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சைகூட எழுத முடியாமல், அவன் வாழ்க்கையே நாசமாகிவிட்டது. 9 நாட்கள் கழித்து ஒரு தகவல் தெரிகிறது. அந்தக் களவைச் செய்தவர்கள் பாண்டிச்சேரியில் இதைப்போன்று ஒரு கொள்ளை அடித்து இருக்கிறார்கள் என்றும் அதிலே சம்பந்தப்பட்டவர்களின் கைரேகை இதிலேயும் இருக்கிறது என்றும் அறிந்து அதற்குப்பிறகு அவனை விடுவித்து இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் தவறு செய்து இருப்பார்கள் என்று பொருளாதாரத்தில் மேம்பட்டு இருக்கிறவர்கள் சொன்னால் அதைத் தெய்வ வாக்காக எடுத்துக்கொண்டு, இப்படி ஏழை எளியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் சூழ்நிலை நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாக ஒழுங்கு முறைகளை வரவேற்கும் அதே நேரத்தில் ஆங்காங்கே எற்படுகின்ற தீமைகளையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஏழை எளிய மக்களாக இருப்பவர்கள் எதையும் செய்வார்கள் என்ற மனப்பான்மை காவல் துறையில் இருப்பவர்களுக்கு ஏற்பட்டிருப்பது நிச்சயமாக வரவேற்கக்கூடியது அல்ல. மிகச் சிறிய குற்றம் என்றால் எச்சரித்து விட்டுவிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன? மிகச்சிறிய குற்றங்களைச் செய்கின்ற குற்றவாளிகள்தான் மிகப்பெரும் குற்றங்களைச் செய்கின்ற பெரிய குற்றவாளிகளைப்போல் காவல் துறையினராக நடத்தப்படுகிறார்கள். வீட்டிலே இருக்கின்ற பெண்மணிகள் பாதுகாப்பற்ற நிலையில் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் நாளைக் கழிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. வீட்டிலே இருக்கிற மனைவிக்கு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று வெளியிலே செல்கிற கணவனுக்கு அச்சம். வெளியிலே சென்ற கணவன் நல்ல முறையில் வீடு திரும்ப வேண்டுமே என்று வீட்டிலே இருக்கிற மனைவிக்கு அச்சம்.



இன்றைக்குப்பத்திரிகைகளைப் புரட்டினால்கூட, தினம் தினம் கொள்ளை நடக்கிறது என்பது தெரிகிறது, கொள்ளை நடக்காத நாளே இல்லை. சாலை விபத்து இல்லாத நாளே இல்லை என்று பத்திரிகை வயிலாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். செங்கை மாவட்டத்தில் என்னுடைய தொகுதி இருக்கிறது, அங்கே பெரமந்தூர், மணிமங்கலம், குன்றத்தூர் ஆகிய மூன்று இடங்களில் காவல் நிலையங்கள் இருக்கின்றன. அந்தக் காவல் நிலையங்களில் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. பல்லாவரத்தில் இருக்கிற இன்ஸ்பெக்டர்தான் குன்றத்தூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்சார்ஜ், அவர் பெரும்பாலும் பல்லாவரத்திலேயே பொழுதைக் கழித்து விடுகிறார். வாரத்திற்கு ஒரு முறைகூட குன்றத்தூருக்கு வருகிறார் என்று சொல்ல முடியாது, மாதத்திற்கு ஒன்றிரண்டு முறைதான் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதுபோன்று பெருமந்தூரில் இருக்கிற இன்ஸ்பெக்டர்தான் மணிமங்கலம் போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்சார்ஜ். பெரும்பாலும் அவர் அங்கே போவது இல்லை; சில நாட்கள் போனாலும் மற்ற நாட்களில் அங்கே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர்தான் எல்லா வேலைகளையும் பார்த்துக் கொள்கிறார். குன்றத்தூரில் 49 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்திற்கு 3, 4 கிராமங்கள் இருக்கின்றன. அதோடு அங்கே இருக்கிற காலனிகளையும் சேர்த்துக்கொண்டால் 5, 6 ஊர்கள் தேறும். அந்தக் காவல் நிலையத்தில் இருக்கிற காவலர்களோ 10 அல்லது 12 பேர்கள்தான். அவர்களிலே ஒருவர் வாசலில் 'பாரா' இருப்பார். இரண்டு பேர் லீவில் இருப்பார்கள். வேலையில் இருப்பவர்கள் 5, 6 பேர்கள்தான். இந்த நிலையில் காவல் நிலையத்தினை அவர்களால் எப்படி பராமரிக்க முடியும்? இந்த அளவுக்கு குறைந்த காவலர்களை வைத்துக்கொண்டு போலீஸ் நிர்வாகத்தை நடத்துவது என்றால் மிகவும் சிரமமாக இருக்கும்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியிலே அதிகமான திருட்டு நடக்கிறது. புகார் வருகிறது, கண்டுபிடிப்புகள் இருக்கிறதா என்றால் இல்லை. அதற்குக் காரணம் என்ன? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். சின்னச் சின்ன திருட்டுக்கள் அதிகமாக நடக்கின்றன. கிராமங்களில் இருப்பவர்கள் நல்ல வசதியான சூழ்நிலையில் இல்லை. அதனால் சின்னச் சின்ன

திருட்டுக்கள்தான் நடக்க முடியும், அந்தத் திருட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட முடியவில்லை என்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது. இந்த வேதனையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தில் வேட்டைக்காரன்புதூர் இருக்கிறது. அங்கே ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாரம் தூக்குகிறவர்கள், மூட்டைத் தூக்குகிறவர்கள். லாரிகளில் ஏற்றுகிறார்கள், இறக்குகிறார்கள். ஒவ்வொரு குருப்பைச் சேர்ந்தவர்களும் ஒரு சங்கத்தை வத்திருக்கிறார்கள். அங்கே ஆலமடை போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிற காவலர்களால் ஐ.என்.டி.யு.சி தொழிலாளர்களுக்குப் பெருத்த பாதகம் ஏற்படுகிறது. காங்கிரஸ் தொழிலாளர்களை அவர்கள் தடுக்கிறார்கள். அங்கே எல்லாக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களும் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மூட்டை ஏற்றலாம், இறக்கலாம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் மூட்டை ஏற்றலாம் இறக்கலாம், அண்ணா தி.மு.க. தொழிலாளர்கள் மூட்டை ஏற்றலாம், இறக்கலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் மூட்டை ஏற்றக் கூடாது, இறக்கக்கூடாது என்று போலீஸ் குறுக்கீடு இருக்கிறது. அதுபற்றி நான் தலைமை காவல் துறை அதிகாரியிடம் ஒன்றிரண்டு தடவை எடுத்துச் சொன்னேன். ஆனால் இன்று வரையில் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதனால் அங்கே இருக்கிற காங்கிரஸ் தொழிலாளர்கள் உண்ணா விரதம் எல்லாம் இருக்கக்கூடிய பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள்.

அதைப்போன்று கோவை மாவட்டத்தில் நடைபாதை வியாபாரிகள் இருக்கிறார்கள். அங்கேயும் கட்சி வித்தியாசத்தோடு செயல்படுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கடை வைக்க அனுமதி இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடை வைக்க அனுமதி இருக்கிறது. முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடை வைக்க அனுமதி இருக்கிறது. அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கடை வைக்க அனுமதி இருக்கிறது. ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் கடை வைக்க அனுமதி மறுக்கப்படுகிறது. அவர்கள் கடை வைத்தால் அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் நடவடிக்கை எடுக்கிறார்கள். இதையும் தலைமை காவல் அதிகாரிக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இது வரையில் நியாயம் வழங்கப்படவில்லை. போலீஸார் தலையீடு இல்லாமல் இருந்தால் அங்கே இருக்கிறவர்கள் சுமுகமான ஒரு முடிவுக்கு வந்து, கடை வைத்து நடத்த முடியும். ஒரு கட்சிக்கு எதிராக அங்கே இப்படிப்பட்ட பரிதாபகரமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்,



(முற்பகல் 11–20)

ஆக, உண்மையிலேயே இதுபோன்ற குறைகள் இருந்தாலும் கூட லக்னோவில் நடைபெற்ற 27–வது அகில இந்திய காவல் துறையினர் விளையாட்டில் 4 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் நம்முடைய காவல் துறையினர் பெற்றார்கள் என்பது உண்மையிலேயே பாராட்டுக் குரியதுதான். கூட்டுசேரா நாடுகளின் மாநாட்டின்போது நம்முடைய காவல் துறையினரின் பணிகள் வெளிநாட்டு மக்களுடைய பாராட்டைப் பெற்றது என்று சொன்னால் அது சிறப்புக்குரியதுதான். அது சாதாரணமான ஒன்று அல்ல. இவ்விதம் பாராட்டையும் சிறப்பையும் கொண்ட காவல் துறையினர் தொழிலாளர்கள் நடத்தும் வேலை நிறுத்தத்தின் போது தொழிலாளர்களுக்கு எதிராகச்செயல்படுவது உண்மையிலேயே வேதனைக்குரியது, கண்டனத்திற்குரியது என்ற நிலையினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நக்சலைட்டுகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்று அறிக்கை கூறுகிறது. ஆனால் அவர்கள் செயல் திட்டம் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. பட்டதாரிகள், வேலையில்லாத விவசாயக் கூலிகள் அனைவரும் அவர்களுக்கு ஆதரவாக இருந்து போஸ்டர்கள் ஒட்டி, கண்டனங்கள் எழுப்பினார்கள் என்று இருக்கிறது. அரசு விவசாயிகளுக்கு நிர்ணயித்த கூலி ரூ. 8, கொடுக்கப்படுவதோ ரூ. 3. இந்த நிலையில் அரசு உத்தரவு சரியான முறையில் நிறைவேற்றப்படாத காரணத்தினாலே இன்னும் இதுபோன்ற அமைப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு உரிய அரசினுடைய நன்மைகள் கிடைக்குமானால் நிச்சயமாக இதுபோன்ற ஒரு நிலைமை தோன்றுவதற்கு உரிய சூழ்நிலை ஏற்படாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பெண் குற்றவாளிகளை இரவில் காவலில் வைக்கக்கூடாது என்பது நம்முடைய அரசாங்கத்தினுடைய மரபாக இருந்து கொண்டிருக்கிறது; உத்தரவும் இருந்து வருகிறது. ஆனால் பெண்கள் இன்றைக்குப் போலீஸ் லாக்–அப்பில் மரணம் அடைகின்றார்கள் என்கின்ற நிலைமை வருகிறபோது அந்த உத்தரவு எந்த அளவுக்கு காப்பாற்றப்படுகிறதுஎன்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அறிவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

மதுரை, சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் 4 நாய்ப் படைகள் பயன்படுத்தப்பட்டு 738 வழக்குகளில் 260 வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் தீண்டாமையை அகற்றுவது-என்ற உயர்வான நோக்கத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் தீங்கினை அகற்றுவதற்கும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவும் 20 சுற்றுக்காவல் படைகள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆய்வாளர் ஒரு உதவி ஆய்வாளர் இரண்டு

[திருமதி டி. யசோதா] [1984 ஏப்ரல் 9

சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உள்ள ஏழைகளுக்கு
அனுசரனையும் காட்டவேண்டும் என்று நம்முடைய அன்பும்
அவர்கள் சொல்கிறார்கள். அது அவருக்கு முதல்வர்
குணம். அது போலீஸ்காரர்களுக்கு இருக்கவேண்டும் இருக்கிற தனிக்
எதிர்பார்க்கவில்லை. மனிதாபிமானத்தோடாவது என்று நான்
கொள்ளவேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நடந்து

இன்னும்கூட, கடந்த ஆண்டு குற்றங்கள் அதிகரித்தது
போலவே, நடப்பு ஆண்டிலேயும் குற்றங்கள் அதிகரித்து
இருக்க நாம் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும், அதிகரிக்காமல்
எல்லாவகையிலேயும் பாதுகாபபு அளிக்கவேண்டிய ஒரு அதற்கு
பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் குறிப்பிட மிகப்
விரும்புகிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் பாடியதைப் போல், "திட்டம் போட்டு
திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கும், சட்டம் போட்டு
தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கும். திருடனாப்
பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற
நிலைமைதான் உருவாகும் என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன். இது சம்பந்தமாக நான் ஒரு விஷயத்தைச் சொல்ல
விரும்புகிறேன். ஃபிமல் ஸ்குவார்ட் என்று வேலை செய்கிறார்கள்.
முதல் அமைச்சர் அவர்கள்கூட முன்னதாகச் சொன்னார்கள்.

இதிலே வேலை செய்பவர்கள் டெம்பரரியாக பல வருஷங்
களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையிலே அந்தப்
பணிக்காக நிரந்தரம் செய்யப்படவில்லை. பெண் போலீஸ்
காரர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரக்கும்
ஆண்களுக்குச் சமமாக அவர்களுக்கு பணிகள் கொடுக்கப்
படுவதைத் தவிர்க்கவேண்டும். அதுமட்டுமல்ல, பெண்கள் என்று
சொன்னால், மென்மையானவர்கள் என்று சொல்வார்கள்.
அதற்கேற்ற வகையில் பெண்களின் பணிகள் நிர்ணயிக்கப்பட
வேண்டும். அதே நேரத்தில் பெண் போலீஸாருக்கு உடைமாறுதல்
குறித்துக் கூட அரசின் பரிசிலனையிலே இருப்பதாகச் சொல்கி
றார்கள்— அதையும் கவனிக்க வேண்டும்,

அதேபோல் தீயணைப்புப்பணியாளர்கள் என்று சொல்கிற
போது, அவர்கள் உண்மையிலேயே தங்கள்உயிரை அர்ப்பணித்து,
அந்தப் பணியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாகள். அவர்கள்
பணி சிறப்புக்குரியது. வெள்ளத்தின்போது அவர்களுடைய பணி
உண்மையிலே பாராட்டுக்குரிய பணியாக இருந்தது. அப்படி
வீரச் செயல்கள் புரிந்து பல உயிர்களைக் காப்பாற்றுகின்ற
அந்த நல்லவர்களுக்கு எல்லாம் நிச்சயமாக பதவி உயர்வும், பல
சிறப்புக்களும் அரசின் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
நம்முடைய முதல்வர் அவர்கள்கூட சற்று முன்னதாகச் சொன்
னார்கள் தமிழகத்திலேயிருந்து இலங்கைக்குத் தவறான தகவல்கள்
பத்திரிகையின் வாயிலாகச் சென்றுகொண்டிருக்கின்றன என்று
சொன்னார்கள். டெப்டி ஹை கமிஷனராக இப்போது



1984 ஏப்ரல் 9] [திருமதி டி. யசோதா]

நியமிக்கப்பட்டு இருக்கிறார்
பி.ஏ சேனா என்பவர் ஒருவர் வந்திருக்கிறார், அவர்கள்
அவர் இன்றைக்கு சென்னையிலே விளம்பரப் பிரிவில்
இதற்கு முன்னதாக இலங்கைப் பிரதமருடைய பத்திரிகை
தலைமை அதிகாரியாக இருந்தவர்கள். அவர்களுக்கு இங்கே
கள் நன்றாகத் தெரியும். அதன் காரணமாக அவர்கள்
பொறுப்பேற்றவுடனே ஒரு விருந்து வைத்தார்கள்.

(முற்பகல் 11-30)

சொல்லி முடித்து விடுகிறேன்
கடைசி பாயிண்ட் அங்கே இலங்கையிலே
அவர் பொறுப்பு ஏற்ற உடனேயே அதற்கு எல்லாப்
விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். பத்திரிகைக்
பத்திரிகையாளர்களும் போனார்கள். நம்முடைய சொன்னார்.
காரர்களும் சென்றிருக்கிறார்கள். அவர் அப்போது பத்திரி
பாருங்கள் நான் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு எப்படி விட்டிருக்
கைகளை எங்கள் பக்கம் திருப்புகிறேன்' என்று சவாலே ஏற்றதற்குப்
கிறார்கள். அதன் அடிப்படையிலே, அவர் பொறுப்பு அவர்களுக்கு
பிறகு இந்தியாவிலே இருக்கிற ஒரு பத்திரிகையே ஏற்பட்டிருக்கிறது.
விலை போய் இருக்கிறதோ என்ற அச்சம்கூட தந்துக்கொண்டிருக்
அத்தகைய நிலையில் தவறான தகவல்களைத் தமிழகத்
கிறார்கள். தமிழகத்தில் ஆயுதங்கள் செய்கிறோம். தவறான
தில் அது நடக்கிறது, இது நடக்கிறது என்று சொல்லி, ஹை கமிஷனராக
தகவல்களைக் கொடுக்கின்ற ஒருவரை டெபுட்டி பார்க்கிற
நியமனம் செய்திருக்கிறார்களே என்ற நிலையைப் மிகவும்
போது, நம்முடைய காவல்துறையும், அரசாங்கமும் நிச்சயமாகவே
விழிப்புணர்ச்சியோடு இருந்து, அவர்களையெல்லாம் இருக்கிறோம்
மிகவும் கூர்ந்து கவனிக்க வேண்டிய கட்டத்திலே நன்றி
என்பதைக் கூறி, பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக
கூறி, அமர்கிறேன். வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்
பினர் என்ன கேட்கப் போகிறார் என்பது எனக்குத் தெரியும்
நான் பேசும்போது அதற்குப் பதில் சொல்லிவிடுகிறேன்.
(குறுக்கீடு) நான் பேசும் போதே உங்களுக்கு அது புரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை
தீயணைப்பு பணிகள் மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை ஆகியவை
சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது சில நாட்களாக,
இடைவெளிக்கு முன்பும், இடைவெளிக்கு பின்பும்—22 பேர்கள்
என்று கருதுகிறேன்—பேசியிருக்கிறார்கள். இந்த 22 மாண்புமிகு
உறுப்பினர்களும் தங்களுடைய கட்சியினுடைய கொள்கையை
யும், நாட்டு மக்களுடைய நன்மையையும், அவர்களுடைய
கோணத்திலேயிருந்து பார்த்து, அவரவர்கள் எந்தெந்த நன்மை
களை மக்களுக்குத் தரவேண்டும் என்று விரும்புகிறார்களோ
அந்த வகையில் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும், சில சமயம் ஒரே கட்சியில் இருப்பவர்களானாலும் கூட, ஒரே கொள்கைக்குச் சொந்தக் காரர்களாக இருந்தாலும் கூட, ஒரு பிரச்னையை அணுகும் முறையில், ஒரு கோணத்திலேயிருந்து பார்ப்பார்களேயானால், மற்றவர்களுடைய வழிமுறைகள் சரியல்ல என்றோ. குறைபாடு கள் உள்ளதாகவோ தோன்றுவதற்கு இடம் உண்டு- ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் தான் சிந்திக்கும்போது தன்னுடைய அறிவு, ஆற்றல், திறமை அனைத்தையும் ஒரு முகப்படுத்தி, தனக்கென்றே உள்ள விசாலமான அந்த நோக்கத்தோடு, அந்தப் பிரச்னையைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவு எடுக்கிறான். அந்த முடிவு அவனுடைய உள்ளத்தில், தனி உணர்வோடும் அல்லது தன் உணர்வோடும் நுழைந்து வெளிப்படுகையில் ஒருமுகப் படுத்தப்படுமாயின், அது அவனுடைய நம்பிக்கையின் எழுச்சி யாக அமைந்து விடுகிறது.

அப்போதுதான் அங்கே மாறுப்பட்ட கருத்துக்களை ஒன்றுக் கொன்று மோத விடுகின்ற நிலைமையில் சந்தர்ப்பங்கள் உரு வாகின்றன. இது பொதுக் கருத்து.

அது போலவே இந்த மன்றத்திலே நாம் எல்லோரும் ஒன்று கூடி விருப்பு வெறுப்பு இல்லாமல் கொள்கையின் அடிப் படையில் கருத்து மாறுபாடு பட்டாலும், குற்றங்களைச் சுட்டிக் காட்டினாலும், இந்த நேரத்தில் நாம் நமது உள்ளம், , நமது மரபு நமது சுற்றுப்புறச் சூழ்நிலை, நாம் எடுத்துக் கொண்ட கொள்கையின் அந்த விரிவான நோக்கம். இவைகளை யெல்லாம் வைத்துக்கொண்டுதான் இங்கே வழக்கமாக நாம் கருத்துக்களை வைக்கிறோம். அப்படி இருந்தும், இங்கே எடுக் கின்ற முடிவுகள் ஒரு மனதாக, ஒருமுனைப்பாட்ட நிலைமை யிலே, ஒருமை உள்ளதாக இல்லாவிட்டாலும், ஆனால் பெரும் பான்மை என்ற ஜனநாயக மரபின்படி, அது ஏற்றுக் கொள்ளப் பட்டு, அது மன்றத்தின் முடிவாகக் கருதப்படுகிறது. இதே போல் நான் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது விளக்கம் தந்தவர்கள் விரிவுரை என்று கூடச் சொல்லாம் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொழிப்புரை என்று எல்லாம் சொன்னார்களே——அதுபோலவும் இருக்கலாம் ஆனால் அடிப்படையில் அவர்களுடைய உள்ளத்திலே என்ன நோக்கங்கள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலிலே என்னுடைய மனத்திலே உள்ள வருத்தத்தைச் சொல்லிவிட்டு பிறகு பதில்களுக்குப் போகலாம் என்று நான் கருதுகிறேன். இந்த மாமன்றத்திற்கு வந்தபிறகு இங்கே இருப்பவர்கள் எத்தனை கோடி மக்கள் தமிழகத்திலே இருக் கிறார்களோ அத்தனை கோடி மக்களுடைய பிரதிநிதிகளாக நாம் இங்கே இருக்கிறோம். எந்தத் தொகுதியிலிருந்து என்ற கேள்வியில்லை. அப்படியானால் இறுதியிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் கிழக்கரை பற்றியோ



இராமநாதபுரம் பற்றியோ மதுரை பற்றியோ பேசியிருக்க முடியாது. மற்றவர்களும் அதைப்பற்றிச் சொல்லியிருக்க முடியாது, அவர் தொகுதி பற்றித்தான் — ஸ்ரீபெரும்புதூர் பற்றித்தான்—சொல்லியிருக்க முடியும். அப்படியானால் இங்கே வந்திருக்கிற நாமெல்லாம் ஒரு தொகுதியிலிருந்து வந்திருந் தாலும் தொகுதிக்கு மட்டும் நாம் பிரதிநிதிகளாக இல்லை. தமிழகம் முழுவதற்குமாக பிரதிநிதிகளாக ஒவ்வொருவரும் இருக் கிறோம். ஆகவே இங்கே இருக்கிற 235—நியமன உறுப்பினரை யும் சேர்த்தால்— உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த அரசுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அது அத்தனையும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது என்பதை உணர்ந்து தான் நாங்கள் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எந்த நிகழ்ச்சி நிரல் இறுதியாக்கப்பட்டாலும் இந்த மாமன்றத்திலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு தான் இறுதியானது. அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே என்ன முடிவு எடுக்கிறார்களோ அதன்படி தான் இங்கே நிகழ்ச்சிகள் நடைபெற அனுமதிக்கப்படுகின்றன. அதற்கு மீறிப் போகுமானால் அது கேள்விக்குரியதாக இருக்கும். அது பேரவைத் தலைவருடைய பதிலுக்கு நிச்சயமாக காத்திருக்கும். பேரவைத் தலைவர் அதற்குப் பொறுப்பேற்றாக வேண்டும். அந்த வகையில் என் வருத்தத்தைச் சொல்ல காரணம், அலுவல் ஆய்வுக் குழுவில் என்னுடைய மானியக் கோரிக்கைகளை 29,30 ஆம் தேதிகளில் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப் பட்டது. அநேகமாக அந்தக் குழுவிற்கு நான் போவதில்லை, உரிமைப்படி இருக்கவேண்டும். அவர்களே செய்து கொள்ளட்டும் என்று நான் ஒதுங்கி இருக்கிறவன். அன்று தொலைபேசியிலே என்னிடம் பேரவைத் தலைவர் கேட்டார்கள். இந்தத் தேதி களில் வைக்கலாம் என்று இருக்கிறோம் என்று. சரி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அப்போது நானும் வெளி நாடு போவதாக ஒரு நிலைமை வந்தது. சரி, 29, 30 ஆம் தேதிகளில் எடுத்துக் கொண்டு 30 ஆம்தேதி மாலையே வேண்டுமானாலும் நான் பதில் சொல்லிவிடுகிறேன் என்ற எண்ணத்தை நான் வெளியிட்டேன். 29, 30 ஆம் தேதிகளில் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு, அதை ஏற்றுக்கொண்டது. அதை முடிவு செய்தது அலுவல் ஆய்வுக்குழு; எம்.ஜி.ஆர். அல்ல; முதலமைச்சர் அல்ல; அங்கே பெரும்பான்மை எதிர்க்கட்சித் தலைவர்கள் தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் போட்டி அல்லது வோட்டு எடுப்பது என்ற முறையில் அலுவல ஆய்வுக் குழுவில் முடிவு எடுப்பதில்லை, எல்லோரும் பேசி ஒரு முடிவுக்கு வருகிறார்கள்.

(முற்பகல் 11—40)

அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிறவர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் தலைவராக இருக்கிறார்கள். அந்த ஆந்தக் கட்சியினுடைய லட்சக்கணக்கான தொண்டர்களுடைய தியாகிகளுடைய பிரதிநிதிகளாக அங்கே இருக்கிறார்கள். ஆகவே எளிதாக என்னைப் போன்ற சாதாரண மனிதர்களால் ஏமாற்றி விட முடியும் என்று யாராவது சொல்வார்களானால் அதை யாரும ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படி சொல்கிறவர்களைப்பற்றி நீங்கள் என்ன கருதுவீர்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்களுக்கு நீங்கள் தான் தகுந்த பெயரைச் சூட்ட வேண்டும். ஆனால் என்ன நடைபெற்று இருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். ஒரு மாபெரும் குற்றச்சாட்டை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இடத்தில் சொல்லிக்கொள்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவை நான் ஏமாற்றி விட்டதாக, அலுவல் ஆய்வுக் குழு ஏமாந்து விட்டதாக வெளியே பொதுக் கூட்டத்தில் ஒரு பொறுப்புள்ள தலைவர் பேசியிருக்கிறார் அவர் பேசியது என்ன என்பதை நான் படித்துக் காண்பிக்கிறேன். அதற்கிடையில் ஒன்றைச் சொல்ல வேண்டும். 29 ஆம் தேதி 30 ஆம் தேதி காலையில் தேர்தல் நடக்கிறது- மாலையில் வைக்கலாமா என்று கூட நான் கேட்டேன் இல்லை, வாக்குப் பதிவுகள் இருக்கும். ஆகவே வேண்டாம் என்று சொன்னார்கள். பிறகு எப்போது என்று கேட்டேன். மறு நான் பதில் சொல்லலாம் என்று இருந்தது. நான் போகவில்லை என்று முடிந்தவுடன், அந்தக் கூட்டுறவுத் துறையை கையில் வைத்து இருந்த சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தொழில் துறை சம்பந்தமாக அவர் வெளியூர் போய் இருக்கிறார். அவர் 2 ஆம் தேதி வெளிநாட்டுக்குச் செல்கிறார் என்பதற்காக அவருடைய மானியக் கோரிக்கையை 31 ஆம் தேதி எடுத்துக் கொண்டு அன்றே முடித்து விடுவது என்று முடிவு எடுக்கப் பட்டது. இவைகள் எல்லாம் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் வெளியே என்ன பேசப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் தேர்தல் நடைபெறுகின்ற அந்த நேரத்தில் காவல் துறை மேல் அதிகாரிகள். பெரிய அதிகாரிகளை எல்லாம் இங்கே வைத்துக்கொண்டு எங்கள் கட்சிகளுடைய தோழர்கள் பிரமுகர்கள் அல்லது உறுப்பினர்கள் என்று எந்த வார்த்தையை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம்மேன்ற உறுப்பினர்கள். அவர்கள் வாக்கு அளிப்பதை—வேறு ஒருவருக்கு அவர்கள் வாக்குகளை அளிப்பதைத் தடுப்பதற்காக அச்சுறுத்துவதற்காக பயன்படுத்த இங்கே சூழ்ந்து கொண்டு இருந்தார்கள் என்று வெளியே பேசப்பட்டிருக்கிறது. இது அவையை அவமானப்படுத்துவது ஆகும். இது முறை அல்ல, அதுவும் 6, 7 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் சொல்லியிருக்கிறார் என்றால், அதை நான் காட்டி விட்டேன். டப்பை அவர்களிடம் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதை படித்துக் காண்பித்து விட்டேன். ஆகவே



அலுவல் ஆவுய்க் குழுவில் பேசப்பட்டது என்ன என்று தெரிந்தும் (குறுக்கீடு) பதில் சொல்ல வேண்டியவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் தகுந்த வாய்ப்பைக் கொடுப்பார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் சொன்னதைச் சொல்லியிருக்கிறார். இதை யார் சொன்னார்கள் என்றும் சொல்லியிருக்கிறார் (குறுக்கீடுகள்—கூச்சல்—குழப்பம்,) பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம் பேச்சு முடிந்த பிறகு வைத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக் கூடாது என்று நான் ஒருவரைப் பற்றி குறிப்பிடுகிறபோது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நீங்களும் நீக்கி விட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னது வேறு. வெளியே இருக்கிறவரை—அதுவும் இன்னொரு கட்சியில் இருக் கிறவர் ஒத்துக்கொள்கிறேன். உங்களைப் பற்றிய பிரச்சினை பற்றி அவர் வெளியே பேசியிருந்தால் நீங்கள் பேசியிருக்கலாம். இந்த அவையை அவமதித்து இருந்தால் தெரி வித்து இருக்கலாம் (கூச்சல்- குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தைப் பொறுத்த மட்டில் எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அவமதிக்கும் விதத்தில் பேச வில்லை, அதைப் போலவே நம்முடைய பிசினஸ் அட்வைசரி கமிட்டி பற்றியும்அவர்கள் அவமதிக்கும் விதத்தில் பேசவில்லை. 25 ஆண்டு காலம் இங்கே இருந்தவருக்கு அது எல்லாம் தெரி யாது என்பது அல்ல. அவர் சொல்லியிருப்பது எல்லாம் மக்களுடைய நன்மையைக் கருதி போலீஸ் மானியம் விவாதிக்கப் பட வேண்டிய கால கட்டம் ஒரு பக்கம். அதே நேரத்தில் இங்கே தேர்தல் நடக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான் அவர் என்ன பேசினார் என்பதைப் படிக்கவில்லை. அதற்கு முன் அவர் பேசு கிறார். அது நியாயம் அல்ல.

இந்த அமைச்சரவையைக் குறை கூறியது பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் இந்தச் செய்தி மக்களிடம் தெரி விக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்கிறேன். அதற்குரியதை இங்கே நாடாவில் பதிவு செய்து வைத்து இருக் கிறேன். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் இடத்தில் தருகிறேன். (மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்தில் தரப் பட்டது)

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே, அந்த டேப்பில் என்ன இருக்கிறது என்று தெரிய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கும்போது சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு போட்டுக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே அவர் ஏற்கனவே ஒரு டேப் தரப்பட்ட போது நான் பேசிய பேச்சு அல்ல வேறு என்று சொல்லி விட்டார் இந்த டேப் என்ன? உண்மைதானா போட்டு காண்பிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சந்தர்ப்பம் வரும்போது அது போட்டு காண்பிக்கப்படும் (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மேலவைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக தேர்தல் நடைபெற்றது (குறுக்கீடுகள்-கூச்சல்-குழப்பம்] சட்டமன்ற வளாகத்திற்குள் அதிலும் குறிப்பாக சட்டமன்றம் நடைபெறுகின்ற தாழ்வாரத்திற்குள் போலீசார் அனுமதிக்கப்படக் கூடாது என்பது மரபு—விதி. நீண்ட நாட்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒழுங்கு முறையும் கூட என்று கூறி சில நேரங்களில் வெள்ளை உடுப்பு அணிந்த துப்பறியும் போலீசார் சட்டமன்ற வளாகத்திற்குள் உலாவுகிறபோது அது குறித்து சட்டமன்ற உறுப்பினர்களாலே சபாநாயகரிடம் புகார் செய்யப்பட்டு அவரும் உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து அது சட்டமன்ற நிகழ்ச்சிகள் குறிப்பேட்டில் இடம் பெற்றிருக்கிறது என்றார். (கூச்சல்—குழப்பம்)

Thiru N.V.N. SOMU: Sir, I am on a point of order.
(கூச்சல்—குழப்பம்)

MR. SPEAKER: I am not allowing it.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணியம் குறையாமல் இருக்க வேண்டும். மீறினால் பின்னால் ஏற்படுகிற விளைவுகளுக்கு முதலமைச்சர் பொறுப்பேற்க முடியாது. (கூச்சல்—குழப்பம்)

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசிய விஷயத்தின் மெரிட்டுக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் ஒரேவொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்களும். தாங்களும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவையில் இல்லாத ஒரு நபரைப்பற்றிக் குற்றச் சாட்டுகள் வந்தால்,— quoting spe.ches si different——



ஒரு குற்றச்சாட்டு என்று இங்கே தப்பித் தவறி வந்தால் தாங்கள் ஸ்ட்ரிக்டாக ரூலிங் கொடுத்து விடுகிறீர்கள். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆப்பர்சுனிட்டி இல்லாதவர்களின் மீது குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது என்று. அவர்கள் முன்பு இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள் அப்படி இருக்கும்பொழுது அவர்களுக்கு ஆப்பர்சுனிட்டி இருந்தது. ஆனால் அப்படி இல்லாதபொழுது. . . .

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தத் தகவலில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், இது, இந்த அவையில் அலுவல் ஆய்வுக் குழுவால் முடிவெடுக்கப்பட்டு நடந்த ஒன்று. அதைத் திரித்து, அலுவல் ஆய்வுக் குழுவை ஏமாற்றிவிட்டார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்று சொல்லி, அலுவல் ஆய்வுக் குழுவின் தரத்தையும் குறைத்து, இங்கே காவல்துறையை வைத்து பயமுறுத்தி தேர்தல் நடத்தப்பட்டது என்று சொல்வது. இந்த வளாகத்தில் நடந்தது என்று சொல்வது, இந்த வளாகத்திற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற பேரவைத் தலைவரின் உரிமை சம்பந்தப்பட்ட விஷயம், அவர்கள் இதற்குப் பாதுகாப்புத் தர வேண்டும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ப்ரீச் ஆஃப் பிரிவிலெஜ் இம்மாதிரி விஷயங்களில் இருக்கின்றது என்றால் அது யாரைப் அந்த வடிவத்திலே கொண்டு வரப்படுகின்றபொழுது, பற்றிக் கொண்டு வருகிறோமோ அவர் அங்கே சமாதானம் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அங்கேயும் வாய்ப்பு இல்லாமல் இங்கேயும் வாய்ப்பு இல்லாமல் குற்றம் சாட்டுவது சரியல்ல என்பதுதான் என்னுடைய பாயின்ட்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவர் பதில் சொல்ல இடமில்லை என்று தீர்மானித்துவிட முடியாது. பேரவைத் தலைவரவர்கள் ஏற்றுக்கொண்டால் அவரையும் விசாரிக்கலாம் என்னையும் விசாரிக்கலாம் உங்களையும் விசாரிக்கலாம்; அப்பொழுது என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளலாம். ஆனால், இப்படிப் பேசுவது என்பது, யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் இந்த அவையை அவமானப்படுத்தும் விதத்தில் பேசுவது என்பது முறையல்ல.

எவ்வளவோ பேசுகிறார்கள்; அதையெல்லாம் நாங்கள் பொறுத்துக்கொள்கிறோம். ஆனால், இந்த அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்த ஒன்றை, என்னுடைய திறமையால் ஏமாற்றி விட்டேன் என்று சொல்வதும், அந்தத் தேர்தலில் பயமுறுத்தி காவல் துறை அதிகாரிகளை வைத்து நாங்கள் வாக்குகளைச் சேகரித்துக் கொண்டோம் என்று சொல்வதும், அதுவும் இந்த வளாகத்தில் நடந்தது என்று சொல்வதும் என்றால் அது இந்த மன்றத்தை அவமானப்படுத்துவதாகும்.

(முற்பகல் 11—50)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நான் இரண்டு பிரச்னைகளைச் சொல்லவிரும்புகிறேன். முதல் பிரச்னை, இந்தத் தேர்தல் நடந்த அன்றைக்கு போலீசார் இங்கே உலாவினார்கள் ஆளுங்கட்சிகாரர்களை மிரட்டியிருக்கிறார்கள் என்று வெளியிலே பேசப்பட்டதாக முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். வெளியிலே ஒரு கருத்தை அரசியல் ரீதியாக அவர் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர் ஒரு கட்சியின் தலைவர். அரசியல் ரீதியிலே முதலமைச்சர் அவர்கள் அதற்கு வெளியிலே பதில் சொல்லலாம் ஆனால் ஏதோ இந்த மன்றத்தையும் பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டியையும் கலைஞர் அவமதித்துவிட்டார் என்று ஒரு குற்றச்சாட்டை இந்த அவையில் எழுப்புவது—நண்பர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் அவையில் இல்லாத ஒருவர்மீது இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி அவரை எப்படியாவது கொண்டுவந்து சிக்கலில் மாட்டுவது என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் முற்படுகிறார் என்பதை நான் உணருகிறேன். இது ஒன்று.

இரண்டாவதாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு உறுப்பினர், ஒரு கட்சியினைச் சேர்ந்தவர் கேள்வி கேட்கின்ற போது முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள். தாங்களும் அனுமதிக்கிறீர்கள். அப்படிப் பேசுகின்ற முதல அமைச்சர் அவர்கள் இன்றைக்கு வழக்கத்திற்கு மாறாக உணர்ச்சியை இழந்து அப்படிப் பேசினால் அதற்கு என்ன நடக்கும் என்பதற்கு முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்று பேசி இருப்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். காரணம், நாங்கள் இந்த மன்றத்திலே உங்களுடைய மெர்சியிலே தான் இருக்கிறோம். முதலமைச்சருடைய மெர்ஸியிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, ஒரு கட்சி எப்படிச் செயல்படுகின்றது என்றும் அந்தக் கட்சி ஆளும் கட்சியாக இருக்கின்ற காரணத்தால் போலீஸைத் தனக்குப் பயன்படுத்துகின்றது என்றும் சொல்வது ஒரு எதிர்க்கட்சிக்கு இருக்கின்ற இலக்கணம்; உரிமையும் கூட. அந்த வகையில் கலைஞர் அவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அதில் எந்தத் தப்பும் இல்லை. இப்போது இந்த மன்றத்தில் இதுபற்றிப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை. அப்படி இருந்திருந்தால் அதே குற்றச்சாட்டை நானே துரைமுருகனே சொல்லியிருப்பேன்; சொல்லக்கடமைப் பட்டிருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல வழக்குரைஞர் நல்ல அறிஞர் என்ற பெயரை வாங்கி சட்டமன்றத்திலே பிரமாதமாகப் பேசுகிறார் என்று சில பத்திரிகைகளால் பாராட்டப்படுகின்ற நிலைமைக்கு ஆளாகிய துரைமுருகனார் அவர்கள் நல்ல பாங்கான பதிலைச் சொல்ல முனைந்திருக்கிறார்கள். இதே குற்றச்சாட்டை தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் இங்கே சொல்வேன் என்று அவர் சொல்வதிலிருந்தே திட்டம் போட்டு உள்ளேயும், வெளியேயும் அவர்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகின்றது. அப்படியானால் இன்னமும் கொஞ்சம் நான் கவனத்தோடு அதிலே அக்கறை காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைப்பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உணர்ச்சிவயப்படுவது என்பது ஒருதலைப்பட்சமாக இருக்க முடியாது; கட்டுப்படுத்துவது என்பதும் ஒருவரால் ஆகக்கூடியது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. நான் முதலிலேயே சொன்னேன். ஒவ்வொருவருக்கும் தன்மானம் இருக்கிறது. தனித் தன்மை இருக்கின்றது. சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள்தான் இங்கே கூடியிருக்கிறோம். ஒருவர் உணர்ச்சிவயப்பட்டு தவறு செய்கிறார் என்றால் பல காலம் பொறுக்கலாம். ஆனால் அதற்கு ஒரு வரம்பே இல்லாமல் போனால் எல்லோரையும் மகாத்மா காந்தியாக ஆக்க யாராலும் முடியாது. முதலமைச்சராகிய நான் என் கட்சியை கட்டுப்படுத்தும்போது எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும் தங்கள் கட்சியைக் கண்ணியமாக நடத்தவேண்டும். இங்கே என்னுடைய மெர்ஸியிலே இல்லை என்று சொன்னார்கள். நானே என்னுடைய மெர்ஸியிலே இல்லை. அதைத் தயவு செய்து தெரிந்துகொள்ள வேண்டும். என்னுடைய, வாழ்க்கையை என்னுடைய அளவில் நான் வைத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலிருந்து கொஞ்சம் விளக்கம் புரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தல் என்பது குறித்துச் சொன்னதைப் பொறுத்த வரையில்—அதிகாரிகளையும் மற்றவர்களையும் கண்டு பயப்படுகின்ற மாதிரி எம்.எல்.ஏ-க்கள் இல்லை. ஆகவே அந்தக் கருத்தை யார் சொன்னாலும் தவறுதான். என்னைப் பொறுத்தவரையில் ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் வந்தது. எல்லோரும் போனார்கள். நான்கூட தனியாகத்தான் போனேன்; யாரும் மிரட்டவில்லை. ஆகவே அந்தக் கருத்தை மட்டும் விட்டு விடுங்கள் மற்றவற்றை ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் அந்தத் தேர்தலுக்கு என்னுடைய அலுவலகம்தான் பொறுப்பு.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எனக்கு இருந்த வருத்தம் என்னவென்றால் 29 ஆம் தேதியும், 30 ஆம் தேதியும் நான் அலுவல் ஆய்வுக் குழுவில் உள்ள தலைவர்களை ஏமாற்றிவிட்டேன் என்று சொன்னதற்காகத்தான். அன்றைக்கு நான் வரவேயில்லை. அவர்களே முடிவெடுத்தார்கள். இந்தத் தேர்தல் பற்றி எனக்குத் தகவல் வந்தது. நான் அங்கே இருந்து கேட்டேன்

பேரவைத் தலைவர் அவர்களிடம் மாலையில் வைத்துக் கொள்ளலாமா இந்த விவாதத்தை என்று. அப்படிக் கேட்ட போது 30 ஆம் தேதி சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஊருக்குப் போக டிக்கெட் வாங்கிவிட்டார்கள்; எனவே 31 ஆம் தேதியும் வைத்துக்கொள்ளமுடியாது என்ற நிலைமை பற்றி தெரிவிக்கப்பட்டது. திரு. பொன்னையன் அவர்கள் ஊருக்குப் போகின்ற காரணத்தால் அவர்களுடைய மானியக் கோரிக்கையை முடிக்கவேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்து என்னுடைய இலாக்காவின் மானியக் கோரிக்கையை 9 ஆம் தேதிக்கு தள்ளி வைத்து விட்டார்கள். நான் கேட்டேன், 2 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாமா, 3 ஆம் தேதி தொடர்ந்து வைக்கலாமா, என்று. இல்லை, எல்லோரும் 1 ஆம் தேதி போகவேண்டுமென்கிறார்கள். செஷன் முடிந்து மீண்டும் கூடுகிறபோது வைக்கலாம். இடையில் விடுமுறை கொடுக்கலாம். 9 ஆம் தேதி வைக்கலாம் என்று அலுவல் ஆய்வுக் குழு தீர்மானித்தது, அப்பொழுதும் நான் அங்கே இல்லை, நான் சொன்ன யோசனை அல்ல. ஆனால் 3 ஆம் தேதியே வைக்கலாம் என சொல்லப்பட்டு, இந்தப் பொறுப்பிலே இருக்கிற நான், இங்கே உள்ளவர்களை ஏமாற்றி, அதாவது அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிற இப்படிப் பட்ட தலைவர்களை எல்லாம் ஏமாற்றி, தேதியை நிர்ணயித்து, நாட்களைத் தள்ளிப் போட்டு, பதில் சொல்வதற்கு தயங்கி, பின்வாங்கி, அச்சமோ அல்லது பயமோ எனக்கு வந்து அதற்காக நான் வற்புறுத்தி 9 ஆம் தேதி என்று தள்ளி வைத்தேன் என்று வெளியில் பேசுகிறார்கள் என்றால் இராமச்சந்திரனுடைய ஆட்சி சரியல்ல என்று சொல்லட்டும், காவல் துறை சரியல்ல என்று சொல்லட்டும், நான் இலஞ்சம் வாங்கினேன் என்று சொல்லட்டும், வெளியே சொல்லட்டும் கவலையில்லை நான் பார்த்துக்கொள்கிறேன், பதில் சொல்கின்றேன். ஏதோ கூட்டத்தையே பார்க்காத எம். ஜி. இராமச்சந்திரன் பேசுவது போல், புதிதாகக் கட்சிக்கு வந்தவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். அதுதான் எனக்கு அதிசயமாக இருக்கிறது. என்னுடைய கூட்டத்தை நடத்தி ஓட்டு வாங்கியவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து கூட்டத்திலே பேசக் கூடாதா என்று சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இராமச்சந்திரன் எந்தக் கூட்டத்தைப் பார்த்துப் பயந்தான்? கொஞ்சம் யோசிக்க வேண்டாமா? இடம் கிடைத்து விட்டது இங்கே. இப்பொழுது இருக்கிறார்கள், பேசலாம். ஆனால் நான் கூட்டத்தைப் பார்த்து பயந்து விட்டேன் என்பது போல் கூட்டத்திலே பேசிக் கொள்ளுங்கள்.... (கூச்சல் குழப்பம்).

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் முதலமைச்சர் அவர்கள் கூட்டத்தைக் கண்டு பயப்படுகிறார் என்ற குற்றச் சாட்டைச் சொல்லவில்லை. சொல்லாத ஒன்றை முதலமைச்சர் எடுத்துக் கொள்ளக் கூடாது. கட்சியினுடைய தலைவர் தன்னுடைய கருத்தை, அரசியல் கட்சி என்ற ரீதியிலே சொல்கின்றபொழுது, அதற்குப் பதிலையும் அரசியல் கட்சித்



தலைவர் என்ற முறையிலே வெளியிலே சொல்லலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே முதலமைச்சர் அவர்கள் கூட்டத்தைக் கண்டு பயப்படுகின்றவர் அல்ல இன்னொன்றையும் சொன்னார், அவரை வைத்து ஓட்டு வாங்கியவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். என்கிறார்கள் நான் முதலமைச்சருக்கு வேண்டியவன் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. ஒரு காலத்திலே நான் அவர் வீட்டுப் பிள்ளையாக இருந்தவன், மறுக்கவில்லை. அவர் வீட்டுப் பிள்ளையாக இருந்தவன், ஆனால் இன்று வரையிலும் முதலமைச்சர் துரைமுருகனுக்கு ஓட்டுப் போடு என்று காட்பாடியிலே நின்ற காலத்திலும் எனக்காக வந்து பேசியதில்லை, அதற்குப் பிறகும் பேசியதில்லை. ஓட்டுப் போடாதே என்று பேசியிருக்கிறார். அவருடைய மெர்சியாலே நான் ஓட்டு வாங்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் மறுபடியும் சொல்லுகின்றேன், துரை முருகன் மட்டும் அதை எடுத்துக் கொண்டாரானால் எனக்கு மகிழ்ச்சி. துரைமுருகனுக்கும் சொல்கிறேன் அவருடைய தொகுதிக்குப் பக்கத்து தொகுதியில், என் தம்பி துரைமுருகன் நிற்கிறான் என்று பேசிய டேப் இருக்கிறது. அவரிடம் இருக்கும்.

(நண்பகல் 12-00).

என்னுடைய வாதம் எல்லாம் இதுதான். சாமார்த்திய சாலிகள் எப்பொழுதும் நேரடியாகச் சொல்லமாட்டார்கள். சுற்றி வளைத்துச் சொல்வார்கள். சுற்றி வளைத்து சொல்வதிலே கொஞ்சம் அதிகமாகப் பழக்கப்பட்டு விட்டார்கள். சில நண்பர்கள்—என் அன்புப் பிள்ளைகள் என்று சொன்னார்களே, அதுபோல் திரு, துரைமுருகனார் அவர்கள் திறமையாகப் பேசியிருக்கிறார்கள். என்னால் வளர்க்கப்பட்டவர். பொதுக் கூட்டத்தில் பேசியதற்குப் பொதுக் கூட்டத்தில் பதில் சொல் என்றால் ஒரு முடிவு உண்டா? அதாவது எம். ஜி. இராமச்சந்திரனைப் பற்றி தனியாகச் சொன்னால் பதில் உண்டு, ஏற்றுக் கொள்கிறேன், ஏதோ கப்பல் பேர ஊழல் என்றெல்லாம் சொன்னார்கள், இங்கேயும் சொன்னார்கள். நான் மக்களைச் சந்தித்தேன். இங்கே பதில் சொன்னேன்; ஆனால் மக்களைச் சந்தித்தேன், அதுபோன்ற பிரச்னைகள் வேறு. நிகழ்ச்சி நிரல் இங்கே அமைத்ததை ஏமாற்றி விட்டேன். இந்த அலுவல் ஆய்வுக்குழு ஏமாந்துவிட்டது; 29 ஆம் தேதி 30 ஆம் தேதி வைத்துக்கொண்டதால் தேர்தல் நேரத்தில் எங்களுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தி,

பயமுறுத்துவதற்காக என்று சொன்னால் இது எங்கே போய் நிற்கும்? இங்கே இடம் இல்லாமல் இருக்கலாம்; மேல் சபைக்கு வரலாம்; அங்கே பதில் சொல்லலாம். ஆகவே அந்தப் பிரச்னை இருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவதற்கு அனுபவம் மிக்கவர்கள் வெளியே ஏற்பாடு செய்வதை, முயல்வதை தவிர்க்கவேண்டும் என்பதற்காக இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன். மீண்டும் வலியுறுத்துவது இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று பின்னால் நான் கோர இருக்கிறேன் என்பதைச் சொல்லி இந்தப் பிரச்னையை இதோடு நிறுத்தி இவைகளை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

(சில தாள்களையும் ஒலிப்பதிவு நாடாவுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்தார்.)

22 உறுப்பினர்கள் இவ்வளவு நாட்கள் பேசிய பல விவரங்களை நான் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்தக் குற்றங்களுக்கு எல்லாம் காரணம் ஆங்காங்கு நடைபெறுகிற சில நிகழ்ச்சிகள் தான்; அவை பெரிதாக்கப்பட்டிருக்கலாம்; அல்லது பெரியதாகவே இருக்கலாம். அதற்கெல்லாம் பதில் சொல்வது என்றால் பல நாட்கள் ஆகும் என்பதால் சிலவற்றை மட்டும் கோடிட்டு காண்பிக்க விரும்புகிறேன். எப்படி இங்கே தங்களுக்கு தெரிந்ததை எல்லாம் வைத்துக் கொண்டு, ஏதோ ஒன்றிரண்டை சொல்வதற்காவது நேரம் கிடைத்தது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருப்தி பட்டுக்கொண்டிருக்கிறார்களோ அதைப்போல நானும் என்னை திருப்தி படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே 33 தலைப்புகளில் குறைகளை கூறி இருக்கிறார்கள்—இன்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்களைத் தவிர. இளையபெருமாள் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லி இருக்கிறார்கள், வரதட்சணை கொடுமையால் ஜமீதா பீபி என்பவர் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்; தற்கொலை செய்து கொண்டதாக வற்புறுத்தி கடிதம் வாங்கப்பட்டுள்ளது—கடிதம் வாங்கி இருந்தால் வற்புறுத்தி வாங்கப்பட்டது; வாங்காமல் இருந்தால் வாக்குமூலம் வாங்கவில்லை என்ற அளவில் இப்படிப்பட்ட விவாதத்தை வைத்துக் கொள்வோமானால் எதற்கும் நான் பதில் தர முடியாது. வாங்கிய வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அது சரியா, இல்லையா என்பதில் பிறகு விவாதம். துவக்கத்திலேயே வற்புறுத்தி வாங்கப்பட்டது என்பதை முடிவு செய்து விட்டால் அங்கே விசாரணைக்கு இடமில்லாமல் போய்விடும். நீதிபதி கடமையை செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.





ஜமீதா பீபிக்கு திருமணம் ஆகி மூன்று வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. இதனால் அவருடைய கணவர் ஆமீர் கான் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதாகக் கூறிய தால் மனம் உடைந்த ஜமீதாபீபி 27-12-83 அன்று இரவு 8-30 மணிக்கு தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார். பலத்த தீக் காயங்களுடன் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்க அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து தியாகதுர்க்கம் காவல் நிலையம் குற்ற எண் 240/83, இந்திய காவல் சட்டப் பிரிவு 350-ல் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். இதற்கிடையில் ஜமீதா பீபி 30-12-83 அன்று பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே 2-1-84 அன்று மரணம் அடைந்தார். ஜமீதா பீபியிடமிருந்து கள்ளக்குறிச்சி நீதிபதி மரண வாக்கு மூலம் பெற்றுள்ளார். ஜமீதா பீபி வரதட்சணைக் கொடுமையால் துன்புறுத்தப்பட்டதாகக் கூறுவது உண்மையல்ல என்றும் மேலும் வழக்கில் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து விசாரிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்; நீதிபதியிடம் அவர் அளித்த வாக்குமூலம்.

ஜமீதா பீபி: நான் கள்ளக்குறிச்சி 2-ம் வகுப்பு நீதிபதி என்பது தெரிந்து கொண்டேன்.

நீதிபதி: உனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி என்ன சொல்கிறாய்?

ஜமீதா பீபி: "என் வீட்டுக்காரர் குடித்துவிட்டு வந்து ஆபாசமாக திட்டுவார். நேற்று இரவு 9-00 மணிக்கு குடித்துவிட்டு வந்து வீட்டில் வந்து திட்டினார். தினமும் இந்த மாதிரியாக கெட்ட வார்த்தைகளால் திட்டுவார். நான் எதுவும் பேச மாட்டேன். என்னை ஓட்டிவிட்டு, இரண்டாம் கல்யாணம் பண்ணப் போகிறேன் என்றும் கொலை செய்து விட்டு வேறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்றும் அவர் மிரட்டினார். நான் பொறுத்த மட்டும் பொறுத்து விட்டு நேற்று தாங்க முடியாமல் வீட்டில் இருந்த மண்ணெண்ணையை எடுத்து நானே ஊற்றிக் கொண்டு நெருப்பு வைத்துக் கொண்டேன். அதில் தாடையின்கீழ் இருந்து உடம்பு முழுவதும் எரிந்து புண் ஏற்பட்டது. அப்புறம் நானே ஆஸ்பத்திரிக்கு வந்தேன். இதுவரைக்கும் என் வீட்டுக்காரர் பார்க்க வரவில்லை. இந்த உறுதிமொழி சொல்லச்சொல்ல என்னால் எழுதப்பட்டு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது." அதன் பிறகு ரேகை தரப்பட்டது.

இந்த உறுதிமொழி கொடுக்கும்போது நோயாளி நல்ல மனநிலையிலும் பேசும் தருவாயிலும் உள்ளார். நோயாளி டாக்டர் திரு பெண்கள் வார்டில் வைக்கப்பட்டுள்ளார்.

ரங்கராஜன் அவர்களும் நர்ஸ் திருமதி ஆறுமுகம் அவர்களும்
கவனித்து வருகிறார்கள். இந்த உறுதிமொழி 30-12-1983
அன்று இரவு 6-45 முதல் 7-05 மணிக்குத் தரப்பட்டது,
ஒப்பம்: டாக்டர் ரங்கராஜன்

ஒப்பம்: ராஜையா,

2-ம் நிலைகுற்றவியல் நீதிபதி, கள்ளக்குறிச்சி.
30-12-1983.

திரு. எல். இளையபெருமாள்: ஒரு கிளாரிபிகேஷன் அன்ட்
இன்பர்மேஷன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு
அக்கறை எடுத்துக்கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றி
அதிகாரிகள் மூலம் விசாரிக்கச் சொல்லி விவரங்களைச் சொன்ன
தற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஒரு உண்மையை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்வது போல்,
மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும், நான் ஒரு உண்மையை
இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். உண்மையிலேயே
அந்தப் பெண்ணின் கணவன் அந்தப் பெண்ணை மிகவும் இம்சித்து
மண்ணெண்ணெயை எடுத்து ஊற்றி, கொளுத்தி இருக்கிறார்.
ஆனால் அவர் அந்தப் பெண்ணிடம் நான் மறுமணம் செய்யப்
போவது இல்லை, உன்னையே மீண்டும் வைத்துக்கொள்கிறேன்.
ஆகவே, நீயே அந்தத் தவறைச் செய்து கொண்டதாக ஒப்புக்
கொள் என்று சொன்னதால்,

இரண்டாவது கல்யாணம் நடக்காது என்ற காரணத்தால்'
அந்தப் பெண் அந்தக் குற்றத்தை தான் செய்ததாக ஒப்புக்
கொண்டு இருக்கிறாள். இங்கே நான் பேசியதற்குப்பிறகும், அங்கே
சென்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதிலே
நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் சொன்னேன். விசாரிப்பார்கள்
என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்தப் பெண் இறந்து
விட்டாலும் அந்தப் பெண்ணின் தகப்பனார் அந்தப் பெண் இந்த
உண்மைகளையெல்லாம் சொன்னதாகச் சொன்னார். கல்யாணம்
செய்துக் கொள்ளாமல், தன்னை மீண்டும் வைத்துக்கொண்டு
வாழ்க்கை நடத்துவேன் என்று சொன்னதால் இதற்கு ஒப்புக்
கொண்டு வாக்குமூலம் அந்தப் பெண் கொடுத்ததாக என்னிடத்தில்
அவர் சொன்னதையும் நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: விசித்திரமான
விநோதமான வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய
பெருமாள் அவர்கள் இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். நாம்
யாரையாவது சில நேரங்களில் நம்ப வேண்டும். ஒன்று அதிகாரி
களை நம்பவேண்டும் அல்லது செய்தி தருபவர்களை நம்ப
வேண்டும். செய்தி தருபவர்கள் சொல்வதையெல்லாம் வைத்து





அரசு நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவேதான் அதிகாரிகள்
சொல்வதை நான் நம்புகிறேன். சில சமயங்களில் அதிகாரிகள்
சொல்வது சரியா என்று பரிசீலித்துப் பார்க்க முயற்சிக்கிறோம்,
தேவையானால். ஒன்றை அழுத்தமாகச் சொல்வேன், இது
விசாரித்து வாங்கப்பட்ட அறிக்கை அல்ல. தாமாகவே கொடுக்கப்
பட்ட அறிக்கை. 30-12-1983-ல் கொடுக்கப்பட்டது. இங்கே
பிரச்னை எழுப்பப்பட்ட பிறகு கொடுக்கப்பட்ட பதில் அல்ல.
அவர்களாகவே எழுதிய அறிக்கையை இங்கே தந்து இருக்கிறார்கள்.
தயவு செய்து திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்றைத்
தெரிந்து கொள்ளவேண்டும். கணவன் வந்து கல்யாணம் செய்து
கொள்ள மாட்டேன் என்று சொன்னதால் ஏற்றுக்கொண்டார்கள்
என்று சொன்னால் (குறுக்கீடு) அப்படிச் சொல்லியிருக்கலாம்—
ஆனால் கணவன் வரவில்லை என்று அறிக்கையில் சொல்லியிருக்
கிறார்கள். அதற்குப் பிறகு அவர் எங்கே வந்து சொல்லியிருக்க
முடியும். தகப்பனாரைப் பொறுத்தவரையில், தன் மகள் இப்படி
இறந்து விட்டாளே என்ற வருத்தத்தில் இப்படி சந்தேகம்
கொள்ளலாம். ஆனால் நாம் இந்த அறிக்கையின் அடிப்படையில்
பார்க்கிறபோது, இந்த அறிக்கையை வைத்துப் பேசாமல்,
இறந்து விட்ட ஒருவருக்குப் பதிலாக தகப்பனார் சொல்கிறார்
என்பதை வைத்துக்கொண்டு, எப்படி வழக்கை நடத்தமுடியும்
என்பது புரியவில்லை. செய்திகளைப்பற்றி விசாரிக்க வேண்டியது
கடமை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏதாவது ஒரு
பிரச்னையில் மாறுபட்ட பிரச்னை வந்தால் கவனிக்கவேண்டும்.
இது மரண வாக்குமூலம் அல்ல, இறப்பதற்கு முன்பு இறுதி
யாகக் கொடுக்கப்பட்டது. அவர் கொடுத்தது 30 ஆம் தேதி.
ஆனால் இறந்தது 2 ஆம் தேதி. இந்த நிலையில் நாம்
எதை மதிக்கவேண்டுமோ அதை மதிப்பது தான்
சட்டப்படி ஒழுங்குமுறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இருந்தாலும் மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள்
இவ்வளவு நிச்சயமாகச் சொல்வதால் அதைப் பயன்படுத்திக்
கொண்டு, இதை மேலும் விசாரிக்கலாம் என்று விரும்புகிறேன்.
ஏனென்றால் இளையபெருமாள் அவர்கள் மற்றவர்களைப்போல
தப்பி ஓடமாட்டார்கள்; நான் சாட்சி சொல்லமாட்டேன் என்று
சொல்லமாட்டார்கள். அந்த நம்பிக்கை அந்தத் துணிச்சல்
இருக்கிறது, அவர்கள் சொன்னதை நிரூபிப்பதற்கு சாட்சி
சொல்ல வருவார்கள் சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு வருவார்கள்
என்று நம்புகிறேன். அந்த அளவுக்கு அவர்களுக்கு நன்றி சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

காரைக்குடியில் பாலாம்பாள் என்ற பெண்ணைப்பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். அதாவது சுகமாகக் காணப்பட்டார்,
கற்பழிக்கப்பட்டார் என்பதற்கு சாட்சியம் இல்லை என்று
சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் அந்தக் காவலர் வேலை
பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். 12-2-78
அன்று முகவை கிழக்கு மாவட்டம், காரைக்குடி தெற்குக்
காவல் நிலைய காவலர் ஏ. சங்கரன் என்பவர் பகல்
11-55-க்கு காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்த

செல்வி பாலாம்பாளை மானபங்கம் செய்ததற்காக அல்லது தகாத முறையில் நடந்துகொண்டதற்காக ஊதியத்தில் இரண்டு படிகள் குறைக்கப்பட்டன. பின் நான் பார்த்தேன். அது வந்தபோது நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காவலருக்கு அளிக்கப்பட்ட தண்டனை போதுமானதல்ல என்று அரசு உத்தரவிட்டது. நான்தான் எழுதினேன். இது போதுமான தல்ல. அவருக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று எழுதிய பின்னால் 8-4-83-ல் அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார். இது மிகவும் திருப்திகரமான செய்தியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

செல்வி பாலாம்பாள் 4-4-78 அன்று காலையில் சாக் கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோவில் குளத்தில் நீராட சென்றபோது தற்செயலாக நீரில் மூழ்கி உயிரிழந்தார்? பிரேத பரிசோதனை செய்த மருத்துவ அதிகாரி பாலாம்பாள் நீரில் மூழ்கி மரணம் அடைந்துள்ளார் என்று அறிக்கை அளித் துள்ளார். அறிக்கை இருக்கிறது. இருந்தாலும்......

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அந்தப் பிரச்சனை பற்றி நான் தான் பேசினேன். அதனால் ஒரு சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். பாலாம்பாள் கற்பழிக்கப்பட்டிருப்பாள் என்ற சந்தேகத்தின் பேரில் எக்சிகியூட்டிவ் ஆபீசர் என்ற முறையில் ஆர்.டி.ஓ. அவரை சஸ்பென்ட் செய்ய ஏற்பாடு செய்தார். அந்த சம்பவம் ஏற்பட்ட உடனே ஆஸ்பத்திரிக்கு அந்தப் பெண் அனுப்பப்பட வில்லை. காலம் தாழ்த்தி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி, தடையம் இல்லாமல் செய்து விட்டார்கள் என்பது எங்களுடைய குற்றச் சாட்டு, பொது மக்களுடைய குற்றச்சாட்டு. போனவுடனே அங்கே வேலை பார்த்த பெண் மருத்துவர் பரிசோதனை செய் திருந்தால் உண்மை தெரிந்திருக்கும். அந்தப் பெண்ணை எப்போது மருத்துவமனைக்கு அனுப்பினார்கள், எப்போது பரிசோதனை செய்யப்பட்டது. ஏன் தவறு செய்யப்பட்டது. ஏன் உடனே மருத்துவமனைக்கு அனுப்பவில்லை என்பவை போன்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால் நாங்கள் அதுபற்றி தெரிந்துசொன்ன, புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையாகக் கேட்பார்கள் என்று நான் கருதுகிறேன். எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்; வேறு வழியில்லை. விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுவிட்டதால் இது அத்தனையும் நான் படித்தாக வேண்டும்.

பாலாம்பாள் என்னும் பெயருடைய ஒரு பெண், காவல் புரிந்து வந்த காவற்காரரான பி.சி. 1155 சங்கரன் என்பவர், கருவல வளாகத்திற்கு உள்ளே 12-2-78 ஆம் நாள் இரவு,



தன்னை தொந்தரவு செய்து (நச்சரித்து) தன்னை மானபங்கப் படுத்தியதாக குற்றஞ் சாட்டி, காரைக்குடி தெற்கு காவல் துணை ஆய்வாளரிடம் 13-2-1978 ஆம் நாள் புகார் ஒன்றை கொடுத்தார் எதிரியான காவலர் (1155) சங்கரனுக்கு எதிராக வடிக்கொன்று பதிவு செய்யப்பட்டு, அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டார். பண்பற்ற முறையில் தாக்கப்பட்ட பெண் பாலாம்மாள், காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு மருத்துவரின் கருத்தை அறிவதற்காக அனுப்பி வைக்கப் பட்டார். மருத்துவ அலுவலர் அவளைப் பரிசோதித்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த வழக்கு, காவல் நிலையாணையின் (பி.எஸ்.ஓ. 145) கீழ் விசாரணையை நடத்துவதற்காக தேவ கோட்டை சார்நிலை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டது. தேவகோட்டை சார்நிலை மாவட்ட ஆட்சியர் விசாரணையை நடத்தினார். அவர் 15 சாட்சிகளை விசாரணை செய்தார். சூழ்நிலைச் சாட்சியங்களைத்தான், தாம் நம்ப வேண்டிய தாயிருந்தது என்று தம் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காரணம், நேரில் பார்த்த சாட்சிகளாக கிடைக்கக் கூடிய வர்கள் எல்லோருமே இதில் அக்கறை கொண்டுள்ளவர்களாக இருப்பதோடு, அவர்கள் எதிரியைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை. ஆயினும், வண்புணர்ச்சியில் (கற்பழிப்பில்) ஈடுபட்டதாகச் சொல்லப்படுவதை நிரூபிக்கப் போதுமான சான்றுகள் இல்லை என்பதால், காவலர் திரு. சங்கரன் செல்வி பாலம்மாவை மானபங்கம் படுத்தியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டு உண்மையானது என்னும் முடிவினை அவர் அளித்திருக் கிறார். செல்வி பாலம்மாளை மானபங்கம் படுத்தியதன் மூலம் திரு. சங்கரன் தான் பதவியில் இருக்கும்போதே இழைத்துள்ள குற்றத்திற்காக அவருக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று அவர் பரிந்துரை செய்துள்ளார்.

காரைக்குடி அரசினர் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலரான திரு. மல்லிகார்ஜுனன் என்பவர் அரசு தரப்பு 10—வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். பெண்ணைத் தாம் பரிசோதனை செய்ததாகவும். அவளது உடலில் பார்வைக்கு புலப்படுகிற காயத்தையோ அல்லது புற அதிர்ச்சி புண்ணையோ தாம் காணவில்லை என்றும் அவர் கூறியதோடு, அவள் இசிப்பு நோய் கோளாறு உடையவள் என்று தாம் கருதுவதாகவும் கூறியுள்ளார்.

விசாரணை செய்த அலுவலர் தன் அறிக்கையின் 53-ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்;

"பாலம்மாளுக்கும் எதிரியான காவலருக்கும் இடையே உடலுறவு தொடர்பு இருந்ததைப் பற்றி சூசகமாகக்கூட தனக்கு ஐயப்பாடு தோன்றவில்லை என்பதாக காரைக்குடி அரசினர் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் மல்லிகார்ஜுனன் கூறுவது வியப்பைத் தருகிறது. தேவையான

முழுமையான உடல் பரிசோதனைக்காக மகளிர் மருத்துவ பிரிவில் இருக்கும் ஒரு பெண் மருத்துவரிடம் பாலம்மாளை அவர் அனுப்பியிருக்கலாம். அவ்வாறு செய்ய அவர் முடிவெடுத்திருந்தால், அது விசாரணைக்கு பெருமளவுக்கு உதவியாக இருந்திருக்கும். அதற்குப் பதிலாக அப்பெண் இசிப்பு நோய் கோளாறு உடையவள், அது அவளை அடிக்கடி ஆட்டிப் படைக்கின்றது என்னும் அளவுக்கு சான்றிதழ் ஒன்றை மட்டுமே அவர் தந்துள்ளார். இந்த வழக்கில் 10—வது சாட்சியாக உள்ள மருத்துவர் தன் சிந்தையைச் செலுத்தத் தவறியுள்ளார்.

பின்னர் இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு இராமநாதபுர ஜனதா தலைவரால் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டன. 19—2—1978—ஆம் நாள் அவர் துண்டு சீட்டுகளை அச்சடித்து பொது மக்களிடையே பரப்பினார். 25-2-1978—ம் நாள் இரவு ஜனதா கட்சியால் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. எதிரி (1) திரு கருப்பையாவும், எதிரி (2) திரு. வலம்புரி ஜானும தங்கள் பேச்சுக்களில் அச்சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டனர். அவர்கள் பொதுவாக காரைக்குடி காவல் துறையினருக்கு எதிராகவும், குறிப்பாக ஆய்வாளர் திரு. பால்ராஜ், மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும், மிகவும் மதிப்பைக் குறைத்துப் பேசுவதில் ஈடுபட்டனர். இது கூடியிருந்தவர்களிடையே ஒரு பதட்ட சூழ்நிலையை உருவாக்கிற்று. (குறுக்கீடு) நான் முழுவதையும் படிக்கவில்லையே. மேற்சொன்ன பேச்சாளர்கள் அரசாங்கம் நீதி வழங்க வேண்டுமென்று கோரினர். இப்பேச்சு பொதுமக்களுக்கு ஆத்திரத்தைக்கிளறியது. இதன் விளைவாக உள்ளூர் மக்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. வாய் சண்டையின் விளைவாக காவல் துறையினருக்கும் எதிரிக்கும் காயங்கள் ஏற்பட்டன. காவலர் 1238 கொடுத்த அறிக்கையின் பேரில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 147, 148, 149, 294, 332, போன்ற பல பிரிவுகளின் கீழ் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆய்யாவு என்பவர் கொடுத்த புகாரின் பேரில் இந்திய தண்டனை சட்டத்தின் 114-ம் பிரிவுடன் சேர்த்து 147 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண் 44/78 என்னும் வழக்கு ஒன்று திரு பி. எல். கருப்பையாவுக்கும், மற்ற எதிரிகளுக்கும் எதிராக பதிவு செய்யப்பட்டது- புலனாய்வுக்குப் பிறகு, 44/78 என்று எண்ணிட்ட குற்றமானது 4378 என்ற எண்ணிட்ட குற்றத்துடன் சேர்க்கப்பட்டு, எதிரிகளான திரு. பி. எல். கருப்பையா மற்றும் 9 பேர்களின் மீது இந்திய தண்டனைச்சட்டத்தின் 147 மற்றும் பல பிரிவுகளின் கீழ்குற்றம் சுமத்தப்பட்டது.

(பிற்பகல் 12-20)

இவ்வழக்கு தேவகோட்டை முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (மாஜிஸ்ட்திரேட்) நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. ... எண் 192/78. காரைக்குடி முதல்வகுப்பு நடுவர், ...



தண்டனைச் சட்டத்தின் 307-வது பிரிவின் கீழ் வரும் குற்றச் சாட்டில் வழக்கை எடுத்துக் கொண்டு, திரு. பி. எல். கருப்பையாவிற்கும் மற்றவர்களுக்கும் எதிரான வழக்கை மேல் விசாரணைக்காக செசன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

எதிரிகளான பி. எல். கருப்பையாவையும், விஜயராகவனையும் செசன்ஸ் நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பியதற்குப் பிறகு 3—11—1979 ஆம் நாள், நடந்த மற்றொரு சம்பவம் பரிசீலனைக்குரியதாகும். 8—10—79-ஆம் நாள் மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டதற்குப் பிறகு, 9—10-1979 ஆம் நாளிலிருந்து எதிரிகள் இருவரும் மதுரை மத்திய சிறைச் சாலையில் வைக்கப்பட்டனர். 3-11—79—ஆம் நாள் அவர்கள் இருவரும் தங்களுக்கு எதிராக நடப்பில் இருக்கும் வழக்கை, திரும்பப் பெறவும், காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில், காவலர் திரு. சங்கரனால், பாலம்மாவிடம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வண்புணர்ச்சியைப் பற்றியும் அவளது மரணத்தைப் பற்றியும் நீதி விசாரணை நடத்தவும் கோரிமதுரை மத்திய சிறைச் சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். இது அரசியல் ரீதியாக, திரு. இரா. செழியன் அவர்கள் தலையீட்டின் பேரில் அவர்கள் 10-11-79 ஆம் நாள் தங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

அம்சம் 1; வண்புணர்ச்சிக் குற்றத்திற்காக அல்லது மானபங்கப்படுத்த வேண்டும் என்ற உட்கருத்துடன் தாக்கப்பட்ட பெண் பாலம்மாளை பண்பற்ற முறையில் தாக்கிய குற்றத்திற்காக எதிரான காவலர் சங்கரன் மீது குற்ற வழக்கு தொடரமுடியுமா, அல்லது முடியாதா? என்று கேள்வி எழுகிறது. இந்தவழக்கில் குற்றவாளிக்கு எதிராக, குற்ற வழக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடருவது முடியாததாக இருக்கிறது. காரணம் தாக்கப்பட்ட பெண் பாலம்மாள் இறந்து விட்டாள். மேலும் விசராணை அலுவலர் எதிரிக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரைத்து அனுப்பி உள்ளார். வழக்கில் இந்தச் சூழ்நிலைகளில் குற்ற வழக்கு நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக குற்ற வழக்கு தொடருவது முடியாத காரியமாக இருக்கிறது, இது சட்டப் பிரச்சனை ஆனால் மனிதாபிமானப் பிரச்சனை என்று என்னிடம் வந்தபோது, இந்தத் தண்டனை போதாது, இது சரியல்ல. அவர்கள் மீது கடுமையான தண்டனை வழக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதினேன். இது விசாரணையில் உள்ளது எந்தக் காரணத்தாலும் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் படிப்பதாக இருந்தால் படிக்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராஜு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது மக்கள் கருத்தை அறிந்து நான் எழுப்பிய குற்றச்சாட்டை, வெளியிலேயும் சரி, சட்ட

மன்றத்திலேயும் சரி, பாதிக்கப்பட்டாள் என்று கருதப்பட்ட பாலம்மாள் மருத்துவமனைக்குச் சென்ற உடனே தலைமை மருத்துவ அதிகாரி மல்லிகார்ஜுனன் என்று கருதுகிறேன். அவரோ, அல்லது அவரால் பணிக்கப்பட்ட வேறு ஒரு பெண் மருத்துவரோ, உடனே அந்தப் பெண்ணைப் பரிசோதித்து இருந்தால் உண்மை கிடைத்து இருக்கும் என்பதுதான். உண்ணாவிரதம் இருந்தவர்கள். வெளியிலே ஊர்வலம் நடத்தியவர்கள், ஜனதாக் கட்சிகாரர்கள், தி.மு.க.கழகத்துக்காரர்கள் கருத்து. இதற்கு நாங்கள் லேட்டாகத்தான் அந்தப் பெண்ணைப் பரிசோதித்தோம் என்று மல்லிகார்ஜுனன் தரமுடியாது. அந்த மருத்துவ அதிகாரியும் தரமாட்டார்.

மற்றொன்று, நான் பொதுவாகச் சொல்கிறேன். முதல்வரவர்களுக்கு இதயத்திலே படியத்தக்க அளவிற்குச் சொல்கிறேன். நாங்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை எழுப்புகிறோம். பொது மக்கள் பிரச்சனை, நாங்கள் கேள்விப்பட்டது, கண்டது, ஆராய்ந்தது என்று. எந்தக் குற்றத்திலேயும் கற்பழிக்கப்படவில்லை என்ற போலீசார்கள், தருகிற, அரசு தருகிற, நீங்கள் நம்புகிற வேறு வழி இல்லாததால் இந்த அறிக்கையை நம்புவதாக இருந்தால், நாட்டிலே கற்பழிப்பு இல்லை, எல்லாக் காவல் நிலையத்திலேயும் நடந்து விட்ட கற்பழிப்புச் சம்பவங்கள் எல்லாம் உண்மைக்கு மாறானது என்ற நிலைமை சமுதாயத்திலே போலிஸ்காரர்களால் உருவாகினால், நீங்கள் சொன்னதைப் போல நானும், நீங்களும், நாமும் சேர்ந்து விரும்புகிற அந்த தாய்மார்களுடைய மானம் காப்பாற்றப்படுவதற்கு வழியில்லாமல் போய் விடலாம் என்ற அச்சத்தையும் நான் முதல்வர் அவர்களுக்கு அன்போடு தெரிவிக்கிறேன்

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தப் பிரச்சனை வந்தபோது நான் எவ்வளவு கடுமையாக என்னுடைய எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறேன் என்பதற்காக, அந்தக் கோப்பிலே நான் எழுதியதை இங்கே படிக்க விரும்புகிறேன். ''இத்தகைய முக்கியமான ஒரு வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் அரசுப் பணியில் உள்ளனரா, இல்லையா என்பதைக் கூட அமைச்சருக்கு அறிவிக்காதது பொறுப்புள்ள செயலாகாது. எனவே அதற்குக் காரணமாக உள்ளவர்கள் மீது தலைமைச் செயலாளர் நடவடிக்கை எடுக்கலாம். ஓய்வு ஊதியத்தை ரத்து செய்யும் நடவடிக்கையை, இந்த மாதிரி பொறுப்பற்ற செயலைச் செய்ததற்கு விதிக்கலாம்'' என்று நான் எழுதியிருக்கிறேன். ஒரு சட்டம் என்று வருகிறபோது, பதவியிலே இருப்பவர்கள் வேறு வழியில்லாமல், அதன் விளைவாக காரியத்தை நிறைவேற்ற வேண்டியதிருக்கிறது. ஆனால் உங்களைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாதிரியான பிரச்சனைகளில் தலையிட்டு உண்மைகளை விளக்கிக் கூறி, வெட்ட வெளிச்சமாக்குவதற்கு வேண்டிய முயற்சி செய்வது பாராட்டுக்குரியது. அதை அரசு வரவேற்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது இப்படியே நடைபெறவேண்டும் என்ற அந்த உணர்வு அரசுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்ட பல சம்பவங்களை என்னால் சொல்ல முடியும். காவல் துறையினர் பெண்களை



கதிரவன் உதயத்திற்கு முன், கதிரவன் மறைவுக்குப் பின், வெளியே அழைத்துச் சென்று விசாரணை செய்யக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறேன். உத்திரவு இட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொன்று. உறவினர்கள் அவர்களோடு வரவேண்டும். அப்படி லாக்கப்பிற்கு அழைத்துப் போகிற அவசியம் ஏற்பட்டுவிட்டால், அவர்களுடைய உறவினர்கள், ஆணோ, பெண்ணோ கூட வருவதற்கு அந்தக் காவல் நிலையத்தினர் அனுமதித்தாக வேண்டும். கைது செய்தால் காவல் நிலையத்தில் இரவில் பெண்களை வைக்கக் கூடாது. அருகில் இருக்கிற பெண்கள் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பி விட வேண்டும். இவ்வாறெல்லாம் நான் கட்டளைகளை இட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவு கொள்கிறேன். அதையும் மீறிச் செய்பவர்கள், அவர்கள் மனிதர்களாக இருக்க முடியாது. மிருகங்களாகத்தான் இருக்க முடியும்.

நம் நாட்டிலே கற்பழிப்பே இல்லை என்று சொல்லவில்லை. கற்பழிப்பதை நியாயம் என்றும் சொல்ல முடியாது. நான் மன்னன் அல்ல, அமைச்சர். அதுவும் தமிழ்நாடு தனி நாடு அல்ல, இந்தியாவிலே இருக்கிற ஒரு மாநிலம். ஆகவே, இங்கு நான் என்ன விரும்பினாலும், அதை நிறைவேற்றுவதற்கு ஒரு அளவு இருக்கிறது. ஒரு வரையறை இருக்கிறது. பல முறை நான் சொன்னேன். கற்பழித்தால் தூக்குத் தண்டனை, அதற்கு மன்னிப்பே கிடையாது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு நம்மிடம் சக்தியில்லை. அதைக் கொண்டு வர முடியுமா என்று கேட்டு மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அவரிடம் அதை அனுப்பினேன். அவர் அதைப் பாராட்டினார்கள். ஆனால் அப்போது இருந்த சட்ட அமைச்சர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இது போன்ற முயற்சிகளை இந்த அரசு எடுக்காமல் இல்லை.

பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான், பெண் காவலர்களை நாம் அதிகமாக நியமித்திருக்கிறோம். ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்டவர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏஷியாட்டில் அவர்கள் செய்த பணிக்காக, பலரும் பாராட்டினார்கள். அவர்களுக்கு நாமும் பாராட்டு தெரிவிக்க விரும்பினோம். அதற்குள் இடைக்காலத்தில் பல சம்பவங்கள் ஏற்பட்டு, அதற்கு அனுமதிக்கப்படவில்லை. என்றாலும் அந்தக் கடமையை நிச்சயமாக இந்த அரசு செய்யும்; அவர்களைப் பாராட்டும் என்று உங்கள் முன்னாலே அவர்களைப் பாராட்டிக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வளவு தெளிவாக அந்தப் பணிகளைச் செய்து, எந்தக் குற்றச்சாட்டும் வருவதற்கு இடம் இல்லாமல், செய்து விட்டார்கள் என்பதை பல பெரியவர்கள், அங்கே குறிப்பிட்டு எழுதி

வைத்திருப்பதிலிருந்தும், எனக்கு அனுப்பியிருக்கிற கடிதங்களி லிருந்தும் சொல்ல முடியும். பாராட்டியவர்கள் அத்தனை பேரும், காவல் துறையை ஒட்டு மொத்தமாகவும், சில இடங்களைக் குறிப்பிட்டும், அவர்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே நான் இப்படி குறிப்பிடு வதினால், காவல் துறையை மட்டும பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்குப் பரிந்து பேசுகிறேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. காவலர்கள் பாதுகாக்கப்பட்டால் தான், சமுதாயம் பாதுகாக்கப்படும். காவலர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்ற உத்திரவாதம் இருந்தால் தான், அவர்கள் மக்களுக்கு பாதுகாப்பு தர முடியும். அந்த வகையில் தான் சொன்னேன். குற்றம் சாட்டுகின்றவர்கள் மக்களின் பிரதிநிதிகள், உரிமை உள்ளவர்கள். அவர்கள் மக்களின் எண்ணத்தை பிரதி பலித்தேயாக வேண்டும். அதே சமயத்தில் அனைவரையும் குற்றவாளிகள் என்று சொல்வதற்கு நாம் தயாராக இருக்க முடியாது. அப்படி யாரும் சொல்லவில்லை என்பதற்காக நன்றிகூறிக் கொள்கிறேன். தவறுகள் இருக்கின்றன. முன்னமேயே சொல்லியிருக்கிறேன்.

அவர்கள் தவறு செய்யாமல் இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய சூழ்நிலை மாற்றப்பட்டாக வேண்டும். கற்பழிக் கின்றவர்கள், ஒரு ஆர்வத்தின் மீது அல்ல. வெறியின் காரணமாக, சூழ்நிலையால் கெடுக்கப்பட்டதன் காரணமாக, தங்களுக்கு உரிய வாய்ப்பை இழந்து விட்டதன் காரணமாக, இருப்பவர்கள் தான் இந்த விவாதத்தில் வருகிறார்கள். மனைவி இருப்பாள். ஆனால் தனக்குப் பயன்பட முடியாமல், வேறு ஒருவருக்குப் பயன்பட்டு விட்டாள் என்ற ஆத்திரத்தில், பழி வாங்கவேண்டும் என்று நினைத்து, அவர்களைப் பழிவாங்கி விட்டு, அல்லது அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டு விட்டு, பிறகு இங்கே வந்து, தன்னுடைய ஏமாற்றத்தை வெளியே காட்ட முடியாமல், வேறு எங்காவது கிடைக்குமா என்று சுற்றித் திரிகிற அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எல்லா ஆண்களும் அப்படி அல்ல. ஒரு சிலர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படிப்பட்ட 10, 20 காரியங்களைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு கிடைத்த நேரத்தில் அவ்வளவு தான் சொல்ல முடிந்தது என்றால், 100 ஆக அதைப் பெருக்கிக் கொள்வோம்.

(பிற்பகல் 12-30)

ஆனால் இவ்வளவு பெரிய தமிழகத்தில் இத்தனை கோடி மக்கள் வாழ்கிற இடத்திலே இப்படிப் பட்டதவறுகள் நடப்பது தவிர்க்க முடியாதது என்றாலும் அதைத் தவிர்த்தே ஆக வேண்டும். அதற்குரிய வழியைக் கண்டு பிடிக்க, செய்ய பல திட்டங்களை வைத்திருக்கிறோம், இறுதியில் நான் ஓரளவும் போது அது எல்லோருக்கும் திருப்தி தரத்தக்கதாக ஓரளவுக்காவது, இருக்கும் என்று நான் நம்புகிறேன்.



இன்னும் சொல்கிறார்கள். திருமதி யசோதா ஒன்றைச்
சொன்னார்கள். கையை காட்டி கை நீட்டினார்கள் என்று.
கையை நீட்டினால் தான் கையைக் காட்ட முடியும். அப்போது
தான் பணம் வரும். ஆகவே கையை நீட்டுவதற்கு முன்பு நீட்ட
வேண்டுமா என்று சிந்திப்பதற்குரிய சூழ்நிலை ஒவ்வொரு
வருக்கும் வந்தாக வேண்டும். அது காவலர்களுக்கு நிச்சயமாக
இருந்தாக வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் காவலர்களுக்கு
இப்போது கொடுக்கப்படுகிற ஊதியம் அவர்கள் தேவைக்கு
முழுமையாக திருப்தி அளிப்பதாக இருக்கிறது என்று.
நாங்கள் எண்ணவில்லை. வேறு வழியில்லை, ஆகவே அதை
ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவ்வப்போது அதிகமாகக்
முயற்சிக்கிறோம். அவர்களுக்கு என்று தனியாகச் செய்ய
முடியாது என்றாலும் இப்போது கமிஷனை அமைத்திருக்
கிறோம். அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று
தெரியாது. இருந்தாலும் இதையெல்லாம் எண்ணிப்பார்க்கிற
போது அவர்கள் சுத்த சுயம்புவாக இருக்க வேண்டுமென்றால்
அவர்களுடைய சூழ்நிலை நிச்சயமாக உதவிகரமாக அமைந்தாக
வேண்டும்.

கொடுக்கப்படவில்லை, அவைகள்
வீடுகள் கட்டிக் எப்படி இருக்க முடியும் என்று
எல்லாம் எங்கே இருக்கின்றன? வந்தவுடனே சொன்னேன்.
சொன்னார்கள். நானே ஆட்சிக்கு நடுவிலே குடும்பம் நடத்திக் கொண்
குற்றம் செய்தவர்களுக்கு சேர்ந்த ஒருவர், தன் குடும்பத்தை
டிருக்கிற காவல் துறையைச் விட்டு தன் பணிக்குச் செல்வர்
அவர்கள் மத்தியில் விட்டு இருக்கிற குற்றவாளியை எப்படிக்
ரானால் அந்தப் பகுதியிலே தெரிந்தாலும் எப்படித் அவர்களை
கண்டுபிடிக்க முடியும்? தனது மகளுக்கோ மனைவிக்கோ
கைது செய்ய முடியும்? பாதுகாப்பு என்ன? ஒரு தனி வீடு, மற்றவர்
பெற்றோர்களுக்கோ தவறு செய்கிறவர்களோடு அந்தக் குடும்பம்
களோடு இப்படித் என்றால் நாம் கற்பனை செய்து
வாழ வேண்டியிருக்கிறது எந்த விதமான பாதுகாப்பும்
பார்க்க வேண்டும், அவர்களுக்கு தனியாக வீடு கட்டிக்
இல்லை, அதற்காக அவர்களுக்குத் கொடுக்க வேண்டிய கடமை
கொடுத்து முழுப் பாதுகாப்புக் நிதிப்பற்றாக்குறையால் அதிகமான
அரசுக்கு இருக்கிறது. முடியவில்லையே தவிர, அவர்களுக்கு ஆயிரக்
வீடுகளைக் கட்ட கட்டுவதற்கு பல கோடி ரூபாய்களை
கணக்கான வீடுகளை ஒரு குழுவை அமைத்திருக்கிறோம்
ஒதுக்கி வைத்திருக்கிறோம். அறிந்த உண்மையாகும். அதிலே
என்பது இந்த மாமன்றம்
பிரச்சினையில்லை.

காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே தவறு
செய்கிறார்கள். திரும்பத் திரும்பத் தவறு செய்கிறார்கள்
என்றால் அவர்களை கண்டிப்பாக நடவடிக்கைக்குட்படுத்த
வேண்டும். என்ன தண்டனை வேண்டுமானாலும் அவர்களுக்குக்
கொடுக்கலாம். ஒரு நண்பர், மாண்புமிகு உறுப்பினர்
கேட்டார், பெண் கற்பழிக்கப்பட்டதற்கு இது தானா
தண்டனை? அவரை சஸ்பெண்ட் செய்வதோ, சம்பளத்தந்தப்

பிடிப்பதோ, இதுதானா என்றார்கள். யாரோ சொன்னார்கள் சட்டம் ஒரு மாதிரி, என்று. முன்னாலே கடிக்கும், பின்னாலே போனால் உதைக்கும் என்று. இந்த இரண்டும் செய்ய முடியாமல் சில சமயங்களில் ஒரு மண்பொம்மையாக இருந்து விடுகிறது. அப்படிப்பட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு சாவி கொடுத்தாவது ஓட்ட முடியுமா என்று சொல்லக் கூடிய முறையிலே சில சட்டங்கள் இருக்கின்றன, அவைகளை மாற்றித் தான் தீரவேண்டும்.

தாய்மார்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் தருவதற்கு தமிழகத்திலே வகை இருக்கிறது. வழி முறைகள் இருக்கின்றன என்ற உத்திரவாதத்தை உண்டாக்குவதற்கு. சட்டங்கள் கொண்டு வர வேண்டும். அது விரைவில் கொண்டு வரப்படும். அது டெல்லியினால் அனுமதிக்கப்படுமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் முயற்சித்துப் பார்ப்போம். முயற்சியும் மெய் வருந்தக் கூலி தரும். மெய் வருந்தா விட்டாலும் நம் மனம் மகிழத் தக்க வகையில் கூலி கிடைக்குமா என்று நினைக்கிறேன். மன மகிழ்ச்சியோடு தான் அதைச் செய்ய வேண்டும். ஏமாற்றத்தோடு அல்ல. துணிச்சலிலே தான். தேவை என்பதனால் தான். தேவை மனிதனுக்கு எப்போது ஏற்படுகிறது? தனக்குத் தேவையான வாழ்க்கையை நடத்துவதற்கு உரிய பணம் இல்லாமை. தான் எந்தக் காரியத்தை செய்ய முனைகிறானோ அந்தக் காரியதிற்கு தன்னை உட்படுத்திக் கொள்ளும் போது தன் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமை. இவைகளை எல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். திருடுகிறவர்களைப் பிடிப்பதற்கு காவல் துறை செல்கிறது என்றால் அவரிடம் உள்ள ஒரே ஆயுதம் கைத்தடி, லத்தி தான். அதை வைத்துக் கொண்டு அரிவாள், கத்தி சில சமயம் குண்டு இவைகளை எல்லாம் வைத்து இருப்பவர்களை பிடிக்கப் போவது என்றால் எந்த மனிதனால் முடியும்? எவ்வளவு சக்திப் படைத்த பயில்வானாக இருந்தாலும் ஒருவரை சமாளிக்கலாம், இருவரை சமாளிக்கலாம் அல்லது மூவரை சமாளிக்கலாம். ஆனால் 4, 5 பேரை கையிலே ஆயுதங்களோடு திட்டம் போட்டு அவர்கள் செய்வார்களானால் உயிரை விடுவதைத் தவிர வேறு வழி இல்லை. இந்த நிலையில் அவர்களுக்கு சில தேவைகள் ஏற்படுகின்றன.

என்னமோ எத்தனை நாளைக்கு நாம் இருக்கப் போகிறோம் எப்போதும் ஆபத்து தான். சரி இருக்கிற வரைக்கும் சுகமாக இருக்கலாம் என்று நினைக்கும் போது அங்கே சில தவறுகள் உருவாகின்றன. அந்த இருந்து விட்டு போகலாமே என்ற நிலைமை இல்லாமல், எந்த நேரத்திலும் தன் குடும்பமும், தன் சந்ததிகளும் காப்பாற்றப்படுவார்கள் இந்த அரசால், தமிழக மக்களால் என்ற உத்திரவாதம் இந்த நாட்டில் ஏற்படுத்தப்படுமானால் அவர்கள் குற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே தான் 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரமாக உயர்த்தினோம். பணிசெய்யும் போது ஆபத்து ஏற்பட்டால் மேலும் 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற திருத்தத்தை கொண்டு வந்ததற்கு காரணம், நிறைவேற்றுவதற்கு காரணம், [illegible]



இங்கே இன்னும் ஒன்றை நான் சொல்வேன். இந்த அரசு அப்படிப்பட்ட காவலர்களுக்கு துப்பாக்கி கொடுக்க வேண்டும் என்று விரும்பி அதை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஒரு காவல் நிலையத்தில் இத்தனை துப்பாக்கிகள், பயிற்சிப் பெற்ற காவலர்களுக்கு பயன்பட அவர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள அந்தத் துப்பாக்கிகள் பயன் பெற வேண்டும் என்பதற்காக அதை நான் இங்கே சொல்லி வைத்து இருக்கிறேன். மத்திய அரசிலிருந்து ஓரளவுக்கு அனுமதி வந்து ஆகிவிட்டது. இதுவரை இல்லாமல் இருந்தது. ஆகவே அதை செய்து ஆக வேண்டும். அப்படி செய்தோமானால் திருட்டு, இது போன்ற கொலைகள், வழக்குகள், அதே போன்ற கொடுமைகளைப் பார்க்கும் போது காவல் துறையினர் அச்சப்பட வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் புரியும் நிலையில சொன்னால், தப்பி ஓடும் போது அவர்களுக்கு வேண்டியது பாதுகாப்பு.

அதே போல் வாக்கி டாக்கி. இரவில் ரோந்து போகிறவர்களுக்கு வாக்கி டாக்கி கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இங்கே கேட்டார்கள், நவீனமாக அறிவியல் துறையில் எவ்வளவோ புதுமைகள் எல்லாம் வந்து விட்டன. மாண்புமிகு திருமதி யசோதா அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்படி இருந்துமா இது என்றார்கள். நான் அமெரிக்கா போன போது இதைப் பற்றி விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று அங்கே உள்ள சி. ஐ. டி. மேல் அதிகாரிகளைச் சந்தித்தேன். அவர்களிடம் கேட்டேன், நீங்கள் எப்படி இதை பாதுகாக்கிறீர்கள்? எப்படி கண்டு பிடிக்கிறீர்கள்? என்று அவர்கள் எல்லாவற்றையும் கொண்டு போய் என்ன நிலைமை என்று காட்டினார்கள். அதை 2 வரிகளில் சொல்லி விடலாம் ஆனால் இவைகளை எந்த அளவுக்குக் கண்டுபிடிக்க முயலுகிறோமோ அதைவிட தீவிரமாக விஞ்ஞான முறையில் திருடுவதற்கும், கொள்ளை அடிப்பதற்கும் தூக்கிக் கொண்டு போவதற்கும், கொலை செய்வதற்கும் அங்கே மிகப் பெரிய திறமையானவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று அவர்களே சொன்னார்கள்.

விஞ்ஞானம், கல்வி அறிவு என்பவை எல்லாம் அதிகாரிகளாக வருவதற்குத் தகுதி உடையவர்களுக்கு மட்டும் தரப்படுவது அல்ல. எல்லோருக்கும் அது கிடைக்கிறது. அதில் புத்திசாலிகளாக கொஞ்சம் கூடுதலாக இருந்து விட்டால் அரசில் பணியாற்றுகிறவர்களை விட அவர்கள் பல காரியங்களைச் செய்து விடுகிறார்கள். முன்பு எல்லாம் விரல் ரேகையிலே கண்டு பிடிப்போம். இப்போது க்ளவ்ஸ் போட்டுக் கொண்டு விடுகிறார்கள். இவை எல்லாம் நாகரீக முதிர்ச்சி, அறிவு வளர்ச்சி, விஞ்ஞான அறிவியல் துறையிலே கிடைக்கின்ற பயிற்சி, இவைகள் எல்லாம் அவர்களை பாதுகாப்பதற்கு அழைத்துச் சென்று விடுகிறது. அப்படி இருந்தும் இங்கே உங்களுக்கு தெரியும். அண்மையில் எத்தனை குற்றங்கள் 2 நாட்கள், 3 நாட்கள் ஒரு வாரத்திற்குள்ளாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதை நான் நீடித்துக் கொண்டு போக விரும்பவில்லை. 9 கொலைகள் பற்றி தெரியும்

அதைப் போலவே இன்னும் சிலர் இறந்தது பற்றி தெரியும். பெண் காணாமல் போய் விட்டார் என்றால் ஏறக்குறைய 3 நாளில் அந்தப் பெண் கண்டுபிடிக்கப்பட்டு விடுவாள். கர்நாடாகத்தில் கொள்ளை அடித்தவர்களை இங்கிருந்து பிடித்து கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கிருந்து கொள்ளை அடித்துப் போனவர்களை ஆந்திராவில் போய் கொண்டு வந்தார்கள். இதை எல்லாம் செய்தது அவர்கள் திறமை அற்றவர்கள் என்பதாலோ அல்லது அக்கறை இல்லாதவர்கள் என்பதாலோ அல்ல. திறமை என்பது சமய சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. இருவர் போட்டியிடுகின்ற போது ஒருவர் கொஞ்சம் திறமையை, சந்தர்ப்பத்தை நோக்கி பயன் படுத்தி விட்டால் தோல்வி அடைவார் என்பவர் கூட வெற்றியை அடைந்து விடுவார். சில பந்தயங்களில் பார்க்கிறோம். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். காவலர்கள் எந்த அளவுக்கு தியாகம் செய்கிறார்களோ, அந்த அளவுக்கு மக்களிடமிருந்து அவர்களுக்கு வரவேற்பு இல்லை. இப்போது பத்திரிகைகளில் சில பாராட்டுக் கடிதங்கள் ஆங்காங்கே எழுதுகிறார்கள். தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்களே தவிர அவர்கள் குற்றங்களை மிகைப்படுத்துகிறோம், அவர்கள் திறமைகளை நாம் குறைத்து விடுகிறோம். ஆகவே, குற்றத்தை எப்படி மிகைப் படுத்துகிறோமோ அதைப் போல அவர்களுடைய திறமையையும் நாம் பாராட்டினால் தான் மேற் கொண்டும் அவர்களுக்குப் பணி செய்யும் போது நமக்கு நிச்சயமாக தம்முடைய நல்ல காரியங்களுக்கு எல்லாம் மக்கள் ஆதரவு தரும் போது ஏன் நமது கடமையை துணிந்து செய்யக் கூடாது என்கிற அந்த மனோபாவம் உள்ள மனிதத் தன்மை ஒன்றினால்தான் அது உண்டாகும்.

(பிற்பகல் 12—40)

இங்கே சொன்னார்கள், ஏதோ போராட்டம் என்று அறிவித்தவுடனே எல்லோரையும் முன்னாலே கைது செய்கிறார்கள் என்று. ஏதோ இந்த இராமச்சந்திரன் முதலமைச்சராகி) இந்த உள்துறைக்கான பொறுப்பை ஏற்ற பிறகு தான் இந்த நிலைமைகள் என்பதைப் போலப் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவர்களுக்கெல்லாம், இங்கே உள்ள மாமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பல விஷயங்கள் மறந்து போய் விடுகின்றன.

நேரு அவர்கள் இங்கே வந்தபொழுது, பெரியார் அவர்கள் பேச்சுக்கு நான்சென்ஸ் என்று சொல்லிவிட்டார் என்பதற்காகக் கறுப்புக் கொடி காட்டப் பட்டது. கறுப்புக் கொடி காட்டப் போகிறோம் என்று பகிரங்கமாகவே சொல்லி, அதனால் பல பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள். மருத்துவர்கள், மாணவர்கள், கலைஞர்கள், வழக்குரைஞர்கள் ஆகிய இவர்கள் இந்தக் கறுப்புக் கொடி காட்டுவதில் கலந்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள்



நான் வீட்டிலே இருந்தேன். காலையிலே ஷீட்டிங்கிற்குப் போகலாம் என்று இருந்தேன். ஒரு லாரி வந்தது. என் கூட வருகிறீர்களா என்று கேட்டார்கள், வேறொன்றுமில்லை. எங்கே என்று கேட்டேன். அதைச் சொல்ல மாட்டேன், என் கூட வந்து விடுங்கள் என்று சொன்னார்கள். காப்பி சாப்பிட்டு விட்டுப் போங்கள் என்று சொல்லி விட்டு, நானும் சாப்பிட்டு விட்டுப் போனேன். என்னை அழைத்துக் கொண்டு போனார்கள்; காவல் நிலையத்தில் வைக்கப்பட்டேன். போகும்பொழுதே கேட்டேன். எஸ். எஸ். ஆர். ஐ. எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று. நான் போன பத்து நிமிடங்களுக்குள் எஸ். எஸ். ஆர்-ஐக் கொண்டு வந்தார்கள். கே. ஆர். இராமசாமி அதற்கு முன் கைது செய்யப்பட்டு விட்டார்; இது போன்று டி. வி. நாராயண சாமி. இப்படிக் கலைஞர்களைக் கைது செய்து கொண்டு வந்து வைத்து விட்டார்கள்.

நாங்கள் வெளியே போனால் கவர்ன்மெண்டுக்குத் தெரியாதா என்ன? நான் கறுப்புக்கொடியை எடுத்துக் கொண்டு போனால் தெரியாமலா இருக்கும்? ஆனால் ஏன் செய்தார்கள் என்பது சில நாட்களுக்குப் பிறகு தான் தெரிய வந்தது. அண்ணா அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபொழுது. "ஏன் அண்ணா, நீங்கள்தான் அறிக்கை விட்டீர்களே எங்களை ஏன் பிடித்தார்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், "நீங்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று சொல்லிவிட்டோம், ஆனால் நீங்கள் உணர்ச்சி வயப்பட்டு அங்கே போனால் கூட்டம் சேரும். கூட்டம் சேரும்பொழுது கைது செய்தால் அந்த இடத்தில் கல்லெறிவதோ அல்லது வேறு ஏதாவது நாம் விரும்பாத நிகழ்ச்சிகள் நடைபெறும், அதனால் பல உயிர்கள் சேதமடையும் நிலை ஏற்படும். ஆகவே, பாதுகாப்பாக உங்களை முன்னாலே வைத்தார்கள்". என்று மறுநாள் மத்தியானம் எங்களை வெளியே விட்டுவிட்டார்கள்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், சில நேரங்களில் யாருடைய சக்தி எதற்குப் பயன்படும் என்று தெரியாமல் இருக்கும்பொழுது அப்படிப்பட்டவர்களை என்னைப் போன்ற குண்டர்கள் என்று வைத்துக்கொள்ளுங்களேன், என்னை அப்பொழுது அப்படிக் குண்டர் என்று வைத்துத்தானே இப்படிப் போட்டார்கள்—அப்படி கைது செய்து விட்டால் அவர்களெல்லாம் குண்டர்கள் என்று அர்த்தம் அல்ல. ஏதோ பெரிய பிரச்னைகள், விளைவுகள் வரக்கூடாது என்பதற்காகத் தவிர, வேறொன்றுமில்லை. இரண்டொரு நாட்கள் வைத்திருந்துவிட்டு பிறகு விட்டுவிடுகிறார்கள். ஒரு பிரச்னை முடிந்தது என்றால் விட்டுவிடுகிறார்கள். இதை இங்கே குறிப்பிடுவதற்கு நான் மகிழ்ச்சியோடு இல்லை என்றாலும், அப்படிப்பட்ட நிலைமைகள் நேராமல் இருக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றவைகளைச் சொல்வதற்கு முன் ஸ்ரீலங்காவைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும்; நான் கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கான விவாதத்திலே பதில் சொல்லும் பொழுது என்னுடைய பதிலிலேயே எதிர்பார்த்த நிலையும் உண்டு, பின்னாலே சொல்ல வேண்டாம் என்பதற்காக இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.

இப்பொழுது நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற முறை நமக்கு அச்சத்தைக் கொடுக்கிறது, ஒவ்வொரு தலைவரும் உறுப்பினரும் இதை நன்றாக மனதில் பதிய வைத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அங்கே பிரிவினை கேட்க வேண்டுமென்பது நமது நோக்கம் அல்ல. இங்கே பிரிவினை வேண்டுமென்பது நமது அடிப்படையான நோக்கம் அல்லவே அல்ல. ஆனால் அங்கே தமிழ் மக்கள் ஈழத் தமிழர்கள் என்ன முடிவு செய்கிறார்கள் என்பது அவர்களுடைய முடிவே தவிர, இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் அவர்களுடைய முடிவில் குறுக்கிட இந்த ஆட்சி தயாராக இல்லை என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் விடுதலை கேட்டால் அதுபற்றி என்ன செய்யவேண்டும் என்பதை நாம் எல்லோரும் கூடி முடிவு செய்தாக வேண்டும்.

மதுரையிலே நான் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஒன்றிலே பேசும்பொழுது ஒரு எண்ணத்தை வெளியிட்டேன். இந்திராகாந்தி அம்மையாரைப்பற்றிச் சொல்லும்பொழுது அவர்களும் பெண்குலத்தைச் சேர்ந்தவர்கள், தாய்; இங்கே இத்தனை ஆயிரக்கணக்கான தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், இந்தி பிரச்னைக்காக இந்தி மொழியைத் திணித்தால் அதை எதிர்ப்பதற்காக இந்தத் தாய்மார்கள் அந்தத்தாயினுடைய இராணுவத்தைச்சந்திக்கும்படியானநிலையை ஏற்படுத்தக்கூடாது என்று நான் பேசினேன்.

இன்றையதினம் நான் சொல்கிறேன். இலங்கை அரசு இனியும் அதே வன்முறையில் ஈடுபடுமானால் இந்தத் தமிழக அரசு தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் நிச்சயமாகச் செலவிட்டு எப்படி முறியடிக்க முடியுமோ அப்படி முறியடிப்பதற்கு ஆவன செய்ய களத்தில் இறங்கும். எந்தக் களம் என்று இப்பொழுது குறிப்பிடவில்லை. நிலைமைகள் வருவதைப் பொறுத்துச் சொல்கிறேன். இதைப்பற்றி முடிவெடுப்பதற்கு முன், இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி பேச அனைத்துக்கட்சி கூட்டத்தை நான் தலைவர்களையெல்லாம் சந்திப்பதற்குப் புதன் கிழமை உங்களால் இயலுமா என்று கேட்டுக்கடிதம் அனுப்பியிருக்கிறேன்.





இன்றையதினம்தான் நான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்
கிறேன். அது உங்களுக்கு வரும். நீங்கள் அதை ஏற்றுக்
கொண்டால் புதன்கிழமை சந்திப்போம். இப்போது உடனடி
யாக என்ன செய்யவேண்டும் என்பதை நாம் முடிவெடுப்போம்.
ஆனால் எதிர்காலத்தில் மீண்டும் பழைய சம்பவமே நடக்கும்
என்றால், இந்தத் தமிழகம் தனித்து நின்று ஏதாவது செய்ய
வேண்டும் என்றால் அதைச் செய்ய நான் முன்வருவேன்
என்பதை ஒரு நல்ல முடிவாக அதை எடுக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். என்னைப்பற்றி நான் சொல்லும்போது
ஒவ்வொருவருக்கும் நான் சொல்கிறேன். இப்போதுதான் நான்
உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். ஸ்ரீலங்கா சமாச்சாரம் வரும்
போது தான் நான் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். ஏதோ
படை தயாரிக்கிறார்கள் ராணுவப்பயிற்சிகற்றுக்கொடுகிறார்கள்
என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. திரு. ஜெயவர்த்தனே
அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். நாங்கள் ஒரு மாநிலம்
தான், இந்தியப் பேரரசுதான் இதைப் போன்றவைகளில்
எங்களுக்கு கட்டளையிட முடியும்.

ஆனால் இப்படிச் சொல்லிக்கொண்டு அங்கே தமிழர்களுக்கு
ஏதாவது இன்னல்கள் மேலும் விளைவிப்பார்களேயானால்,
சட்டமோ ஒழுங்கோ, வரைமுறையோ, நிச்சயமாக தமி
ழகத்தில் இருக்காது என்பதை மட்டும் அந்த ஸ்ரீலங்கா
அதிபருக்குச் சொல்லிக்கொள்வது என்னுடைய மாபெரும்
கடமை என்று நான் கருதுகிறேன். எப்படிப்பட்ட கருத்து
வேறுபாடுகள் இருந்தாலும் எப்படிப்பட்ட தேர்தல் கூட்டோ
அல்லது தேர்தல் நேரங்களிலே எதிர்த்துப் பேசுவது என்றோ
இருந்தாலும் அவற்றிலே வெற்றி, தோல்வி என்றிருந்தாலும் இந்த
விஷயத்தில் நான் முதலமைச்சர் என்பதோடு எங்கள் கட்சியின்
சார்பாகவும் சொல்கிறேன். நிச்சயமாக தமிழக மக்களுக்கு
இடையூறு என்ற செய்தி வரும்போது இனியும் அதற்கு
பொறுமை இருக்க முடியாது என்பதை திரு. ஜெயவர்த்தனே
அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கிலாந்து எங்களுக்கு உதவ வரும் என்கிறார் திரு.
ஜெயவர்த்தனே. அவருக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக
ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த ஸ்ரீலங்காவிற்கு
சுதந்திரம் கிடைத்ததே பெரும்பாலும் தமிழக மக்கள் இந்திய
மக்கள் போராடியதால் தான் என்பதை திரு. ஜெயவர்த்தனே
அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது போராடியது
ஆங்கிலேய நாட்டை எதிர்த்து; கையில் ஆயுதம் இல்லாமல்.
ஆனால் இப்போது இந்தியா அப்படிப்பட்ட நிலைமையில் இல்லை.
ஆகவே இதைத் தமிழக மக்களின் உணர்வாகத் தமிழ் மக்களின்
உரிமையாக நான் எடுத்துக் காட்டுவது விளைவுகள் மோசமாகப்
போகாமல் தடுக்க உதவுமானால் நான் மகிழ்ச்சி அடைவேன்.
இல்லை என்றால்—மீண்டும் அதே வேப்பமரம் என்றால். மீண்டும்
வேதாளம் தான் என்றால் அதை எப்படி கீழே கொண்டு

வருவது என்பதற்கு தமிழக மக்களுக்கும், இந்தியாவிற்கும் வழி தெரியும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். அடுத்து தீயணைப்பு பற்றி சொல்லவேண்டும்...

*திரு. ரா. உமாநாத்: பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீயணைப்புத் துறைக்குப் போவதற்கு முன்பாக சட்டம் ஒழுங்கு விஷயத்திலே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே மாவட்டங்கள் பிரிக்கப் பட்டு தலைநகர்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக சட்டம் ஒழுங்கு பாதிக்கும் ஐயப்பாடுடைய நிலைமை, சில மாவட்டங்களில் ஏற்பட்டிருப்பது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரியும். வள்ளியம்மை மாவட்டத் தலைநகர் சம்பந்தமாக நாகையிலிருந்து ஒரு அனைத்துக் கட்சிக்குழு சென்னைக்கு வந்து மாண்புமிகு முதல்வரைச்சந்தித்து அப்போதுஅந்தப் பிரச்சினையை ஒரு நிபுணர் குழுவிற்கு விடுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த ஒரு வாக்குறுதி காரணத்தினால் அங்கே அமைதி ஏற்பட்டது என்பது வரவேற்கத்தக்கது. நிபுணர் குழு இப்போது அமைக்கப்பட்டு ஆகிவிட்டது. ஆனால் தலைநகர் தாவர அந்தக் குழுவிற்கு விடப்படவில்லையே என்கிறபோது அந்த மக்கள் மத்தியில் ஒரு நிலையற்ற தன்மை ஏற்பட்டு, ஒரு சலசலப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இது சம்பந்தமாக என்ன முடிவு? சுமுகமாக இரு மக்களுக்கும் பாதகம் இல்லாமல் தீர்வு காண ஏதாவது வழி இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஒருபிரச்சினை எழுந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தன்னுடைய பொறுப்பு மிக்க கடமை உணர்வால் அது எழாமல் தடுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் இங்கே வரவழைத்து என்னைச் சந்திக்கச் செய்தார்கள். அதற்கு நான் அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். அவர்களும் தன்னுடைய உள்ளத்தைத் திறந்து நிலைமைகளை விளக்கினார்கள். அதற்குப் பிறகு, நான் உட்கார்ந்து பேசியதற்குப் பிறகு, ஒரு முடிவுக்கு வந்தேன். தஞ்சைமாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்றுக்கு நாகபட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் என்று பெயர் வைக்கப்படும். மற்றொன்று தஞ்சை மாவட்டம். இன்னொன்று வள்ளியம்மை மாவட்டம் இப்படி 3 மாவட்டங்களாகப் பிரிப்பதற்காக இருக்கிறோம். அதற்கு இங்கே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளையும் சேர்ந்த வர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

திரு. ரா. உமாநாத்: மூன்று மாவட்டங்கள் எவை என்று தெளிவாகச் சொல்லுங்கள்.



மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: ஒன்று நாகப் பட்டினம் மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்டமாவட்டம் அதற்குத்தான்காயிதே மில்லத் மாவட்டம் என்று பெயர். இன்னொன்று வள்ளியம்மாள் மாவட்டம், இன்னொன்று தஞ்சை மாவட்டம்.

முதன்முதலாக, என்னுடைய மாண்புமிகு நண்பர் திரு. உமாநாத் அவர்கள் எழுந்து பேசாமல் மகிழ்ச்சியோடு இருக்கிற வாய்ப்பைத் தந்ததற்காக......

*திரு. ரா. உமாநாத் : நான் அந்தத் தூது கோஷ்டியைக் கொண்டு வந்துவிட்டபொழுதே என்னுடைய எண்ணம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். இரு பகுதி மக்கள் மத்தியிலே ஒருவருக்கொருவர் சண்டை போடக் கூடாது. எல்லா மக்களும் நமக்கு பொதுவானவர்கள் என்ற முறையிலே சொன்னேன். இப்பொழுது சந்தோஷப்படுகிறேன் என்றால் அதிலே தீர்வு காண வேண்டுமென்ற விருப்பத்தினாலேதான். இப்பொழுது சண்டைக்கு வழி இல்லாமல் பண்ணி இருக்கிறீர்கள்என்றுதான் சந்தோஷம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

அது போலவே, வீரமாமுனிவர் மாவட்டம் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதையும் விரைவிலே தெரிவிப்போம். யாருடைய பெயரையும் வைப்பதில் எங்களுக்குக் கொஞ்சமும் நஷ்டம் இல்லை. எங்கள் பெயரை வைக்கக் கூடாது, அதுதான் எங்களுக்குத் தேவை. பெரியவர்கள், மறைந்தவர்கள் — யாருடைய பெயரை வைக்கின்றோமோ, அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய உண்மையான விருப்பம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகவே, அந்த வகையிலேதான் மறைந்தவர்களுடைய பெயரை வைக்கின்றோம்.

அடுத்து தீயணைப்பு. நல்லவேளை, தீயை வைப்பார் என்று நினைத்தேன். அவர் தண்ணீரைத்தான் கொண்டு வந்து கொடுத்தார். அப்படி உதவியதற்காக திரு. உமாநாத் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில்......

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து நம்முடைய முதலமைச்சர் சொன்ன உணர்வுகள் வரவேற்க வேண்டியவை, தமிழர் சமுதாயமே வரவேற்க வேண்டும். ஆனால், அவரிடத் திலே உங்கள் மூலம் ஒரு வேண்டுகோள்; ஒரு வாரத்திற்கு முன்பு அமெரிக்க தூதுவர் அலுவலகம் முன்பாக, இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் இலங்கைப் பிரச்னைக்காக ஆர்பாட்டம்

செய்ததற்காகக் கைது செய்யப்பட்டு, வழக்கு போடப்பட்டு சிறையில்கூட வைக்கப்பட்டுள்ளார்கள். அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி நாங்கள் யோசனை செய்து, அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்ற முடிவை முன்பே எடுத்திருக்கின்றோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஏ. சாகுல் ஹமீது: நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு கண்ணியம் நிறைந்த காயிதே மில்லத் மாவட்டம் என்று பெயர் சூட்டியதற்காக நான் இந்திய முஸ்லிம் லீக் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தியணைப்புத்துறைக்குச் செல்வதற்கு முன்பாக மிக முக்கியமான ஒரு பிரச்னைபற்றி குறிப்பிடவிரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் குறிப்பாக, ஆளுகின்ற கட்சியாகிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும்—சட்டமன்ற உறுப்பினர்களுக்கு—பயமுறுத்தல் கடிதங்கள் இன்றைக்கு வந்திருக்கின்றன. கையால் எழுதப்பட்ட கடிதங்கள்-கார்டு மூலமாக, உயிருக்கு ஆபத்து விளைவிப்போம். என்று கூறி மாணவர் படை என்று சொல்ல ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எழுதியிருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது **** தமிழகத்தில் ஒரு குண்டர் படை இதில் ஈடுபட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: உங்களுக்குக் கடிதம் மூலம் தெரிய வந்திருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் கடிதம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **** என்று சொல்லி, இங்கே உறுப்பினர்களுக்கு எதையோ ஞாபகப்படுத்த வேண்டாம். ஆகவே அதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மருந்து சாப்பிடும்போது குரங்கை நினைக்காதே என்று மருத்துவர் சொன்னாராம். அது மாதிரி, எதையாவது குறுக்கே இந்திக்காதீர்கள். ஒன்றும் ஆகாது. கடிதம் போட்டவன் ஒன்றும் பண்ண மாட்டான்.

**** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. என். எஸ். வி. சித்தன்: சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேருக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு முன்னமேயே தகவல் வந்திருக்கிறதா? நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று கேட்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் கூட வந்திருப்பதாக நான் அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் சட்டமன்ற உறுப்பினர்தான்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டியதை அவைத் தலைவராகிய நீங்கள் கூறியதற்காக நான் நன்றி கூறுகின்றேன். மாமன்ற உறுப்பினர்களிலே நானும் ஒருவன். என்னையும் அதோடு சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கடிதம் மட்டும் வந்திருக்கிறது. எனக்கு வேறு தகவலும் வந்திருக்கிறது. இதற்குப்பயந்தால் நாம் அரசியலிலே இருக்கமுடியாது. ஆனால், அதற்காகப் பாதுகாப்பு என்பதை நாம் வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. அதற்கு ஆவன செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் அச்சுறுத்தல் வருகிறது. என்னுடைய அனுபவத்தில் சொல்கிறவன் செய்ய மாட்டான், செய்கிறவன் சொல்ல மாட்டான், பயமுறுத்தல் வேறு. (குறுக்கீடு) சொல்லாமல் செய்வர் பெரியோர் சொல்லாமல்—செய்பவர்கள் அவர்கள் பின்னால் இருப்பவர்கள். அவர்கள்செய்கிற செயலுக்கு ாரோ கெட்ட பெயர் வாங்கிக் கொண்டுபோவார்கள்.

எதற்கெடுத்தாலும் மாணவர்கள் பெயரைபயன்படுத்துவது அரசியலில் ஒரு நல்ல இலாபகரமான வேலையாகி விட்டது. ஆகவே மாணவர்கள் என்று குறிப்பிடத் தேவையில்லை. வீரர் என்று சொல்லலாம். தாய் நாட்டின் விடுதலை விரும்பி என்று சொல்லலாம். தியாகிகள் என்று சொல்லலாம் எப்படி வேண்டுமானாலும் நல்ல பெயராகச் சொல்லலாம். ஆனால் மாணவர்களைக் குறிப்பிடுவது. மாணவர்களைப் பற்றி நாம் தவறாக நினைக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிற சூழ்ச்சியாகும். நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது என்பதற்காக எச்சரிக்கை தந்திருக்கிறார்களே அதுவரையில் நாம் மகிழ்ச்சி கொள்வோம். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், வெளியில் இருக்கிற மக்களுக்கு எந்தஅளவிற்குப் பாதுகாப்பு கொடுக்கிறோமோ, கொடுக்க முடிகிறதோ அதைவிட அதிகமாகக் கொடுக்க, குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருப்பதால் அவர்களுக்கு நாம்வழிவகைசெய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி. ஐ. டி. போட்டு அனுப்பினால் எனக்கு வேண்டாம் என்று சொல்லாதீர்கள். சிலபேர் சொல்லி விடுகிறார்கள். செக்யூரிட்டி அனுப்பினால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆனால் பின்னால் செக்யூரிட்டி இல்லை

என்று சொல்கிறார்கள். அதனால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது இன்னொன்றையும் சொல்கிறேன். சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும். நீதிக்கு தலை வணங்க வேண்டும். திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டே இருப்பார்கள். சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கும் என்று நான் பாடிய பாட்டையே யசோதா அவர்கள் சொல்லிக்காட்டினார்கள். ரொம்பவும் மகிழ்ச்சி. இதெல்லாம் அவர்களுக்கு ஞாபகம் இருப்பதால் தான் சிலசமயம் எங்களையும் பாராட்டினார்கள் என்று நான் நம்புகிறேன். சமுதாயத்தில் இருக்கிற மனப்பாங்கு திடீரென்று ஒரு நாளில் தோன்றுவதில்லை. சூழ்நிலை, வளர்க்கின்றமுறை, அவர்களுடைய தேவை, இதையெல்லாம் ஒட்டித்தான் சில எண்ணங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதயமாகின்றன. அந்த வகையில் திருட வேண்டுமென்று நினைக்கிறவர்கள் எப்போது நினைக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது வேலை செய்து கொண்டிருந்த அக்காள், தங்கை இரண்டு பேரும் வெவ்வேறு இடத்தில் வேலை செய்து, வேலை செய்த இடங்களிலிருந்து திருடிக்கொண்டு போய் விட்டார்கள். பல பகுதிகளில் இப்படிச் செய்திருக்கிறார்கள். எங்களிடம் சொல்லிவிட்டுத்தான் நீங்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஒவ்வொரு வீட்டிற்கும் தாக்கீது அனுப்ப முடியாது. அவர்கள் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். திருட்டு நடந்த உடனே சொல்லும்போது உண்மையைச் சொல்ல வேண்டும்.

முன்பு நடந்த ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். வெளி நாட்டிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி இங்கே வந்து 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. நான் கிரவுண்டில் இருந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். அப்போது ஒருவர் பெயரைச் சொல்லி உடனே வரவும் என்று அனவுன்ஸ் பண்ணினார்கள். பிறகு ஒரு மணி நேரத்திலே எனக்கு தகவல் வந்தது. ஒருவர் வீட்டிலே ஒரு பெண்ணை கைகளை கட்டிப்போட்டு, பயமுறுத்தி நகைகளை திருடிக் கொண்டு போய்விட்டார்கள் என்று. பின்னால் விசாரித்துப் பார்த்தால் அந்த அம்மையாரே அவைகளை கிணற்றிலே தூக்கிப் போட்டு இருக்கிறார்கள். இதை எப்படி கண்டுபிடிக்க முடியும்? அவர்கள் வீட்டில் எதற்காக இந்த காரியத்தைச் செய்வதற்கு தூண்டிவிடப்பட்டது? அந்த சூழ்நிலை என்ன என்பதை நாம் எப்படிச் சொல்ல முடியும்? அவர்களுக்கு எப்போது அந்த எண்ணம் வந்தது என்பதை நாம் எப்படி கண்டு பிடிப்பது? சொன்ன குற்றச்சாட்டு வேறு, அங்கே நடந்து இருந்து வேறு. ஆகவே குற்றச்சாட்டுகளுக்கு முன்னால் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது மிக மிக கஷ்டம். அதற்கு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், மதத் தலைவர்களும், சமூகத் தொண்டர்களும் எல்லோரும் ஒத்துழைத்தாலன்றி மக்கள் மனோபாவத்தை மாற்ற முடியாது. அது குழந்தையிலிருந்தே வளர்க்கப்பட வேண்டிய நல்லெண்ணம் ஆகும். அதை எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



18 சதவிதம் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறதா இல்லையா என்று கேள்வி. ஒரு வழக்கு கோர்ட்டிற்கு வந்திருக்கிறது; உங்களுக்கும் தெரியும். தங்களுக்கு உரிய அந்த எண்ணிக்கையில் இடம் கிடைக்கவில்லை. தாழ்த்தப் பட்டவர்களுக்கு அதிகமாகக் கொடுத்து விட்டார்கள், அதை மாற்ற வேண்டுமென்று வழக்கு வந்திருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், கிடைத்தால் இதுவரையில் துன்பப் பட்டவர்களாயிற்றே பெற்றுக்கொள்ளட்டுமே என்ற மனோபாவம் அவர்களுக்கு வரவில்லை. அம்பேத்கார் அவர்களைப்பற்றி சொல்கிறது ஏது திரு. இளையபெருமாள் அவர்கள் ஒரு பிரச்சனையை உருவாக்கி விட்டார்கள். அம்பேத்கார் அவர்களின் கொள்கையை அவர் முழுமையாக ஏற்றுக்கொள்கிறார் என்று நான் நம்பலாமா? (குறுக்கீடு) சரி நம்பலாம். அம்பேத்கார் சொல்கிறார் ** என்று அதை ஒப்புக் கொள்கிறாரா? டாக்டர் அம்பேத்கார் சொல்கிறார் **என்று. (குறுக்கீடு) புத்தகம் வைத்திருக்கிறேன்.

(பிற்பகல் 1—00)

திரு. எல். இளையபெருமாள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். காரணம் கடந்து போன காலத்தில் எந்தவிதமான அவலநிலையில் எதற்காகச் சொன்னார்கள் என்ற நிலையிலே ஒரு நல்ல தீர்க்கதரிசனமான வாசகத்தை முதலமைச்சர் சொன்னபோது நான் அதை முதலமைச்சர் அவர்கள் மிக அழகாக மறுக்கிற நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் தனித்தொகுதியை நுணுக்கமாக கேட்டார்கள். காந்திஜி அவர்கள் தனித்தொகுதியை ஒத்துக்கொண்டார்களா என்று கேட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் திரு. ரகுமான்கான் அவர்கள் குறுக்கிட்டு எனக்கு சந்தர்ப்பம் இல்லாமல் வேறு திசையில் அதை திருப்பி விட்டு விட்டார்கள் மகாத்ம காந்தி அவர்கள் தனித்தொகுதியை விரும்பவில்லை. காரணம் இந்தச் சமுதாயம் பிளவுபடக்கூடாது இந்துச் சமுதாயத்தில் நிரந்தரமான பிளவு வரக்கூடாது என்பது காந்திஜியின் எண்ணம்.

திரு. அம்பேத்கார் என்ன சொன்னார் என்றால் இந்துச் சமுதாயம் என்றைக்கு என்னை இந்து மதத்தவனாக ஏற்றுக் கொள்கிறதோ அன்றைக்குத்தான் காந்திஜி அவர்களே உங்களின் இந்தக் கொள்கையை நான் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னார். எத்தனை காலம் இந்துச் சமுதாயம் என்னை இந்து என்று ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறதோ கோவிலுக்குள் விடமாட்டேன் என்று சொல்கிற அவல நிலை இருக்கிறதோ அதுவரையில் தனித்தொகுதி இருப்பது விரும்பத்தக்கது என்று சொன்னார்கள். திரு. ராஜாஜி அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தான் ஒரு சமாதான ஒப்பந்தம் என்ற வகையில் அரிசன மக்கள் எவ்வளவு நாளைக்கு இந்த பாகுபாடு வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவ்வளவு காலம் வரையில் அவர்களுக்குத் தனித்தொகுதி ஒதுக்கி, அதிலே இந்து சகோதரர்கள் நிற்க முடியாது. ஆனால் இந்து சகோதரர்கள் நிற்கும் தொகுதிகளில் இவர்களும் நிற்கலாம் என்று ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்தார்கள்.

இரண்டாவதாக முதலமைச்சர் அவர்களுடைய அனுபவத்திற்கோ அல்லது சவாலுக்கோ நான் பெரியவன் என்று கருதவும் இல்லை; கருதவும் மாட்டேன். ஆனால் உண்மை ஒன்றைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன். அந்தச் சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி. அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் சொன்னார்கள் என்றால், இந்து மதம் என்னை இந்துவாக ஏற்றுக்கொள்ளாத வரையில் நான் இந்து என்றோ, இந்து மதத்தவன் என்றோ ** ஒப்புக்கொள்ளப்போவது இல்லை, என்று வட்டமேஜை மாநாட்டில் சொன்னார்கள். அதிலே தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அவர்களே, வைஸ்ராய் சவுன்சில் கூட்டத்திலே மேன்ட்டிலி ஜெயிலில் மகாதேவ தேசாய் போன்றவர்களைக் கைது செய்கிறபோது ** என்று சொல்லியிருப்பதையும் நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாபுண்மிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் இவ்வளவு எளிதாகச் சிக்கிக்கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் ** என்று சொன்னதைத்தான் நான் சொன்னேன். ஆனால் அவர் மதத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். இந்து மதம் எனக்குச் சரியான சம உணர்வு, சம தகுதி, சம வாழ்வு தரவில்லையென்றால் எங்களுக்கு அந்த மதம் இல்லை. ஒத்துக்கொள்கிறேன். ** என்பது எப்படியாகிவிடும்? ** இந்தியாவிலே நாங்கள் வேறு மதத்தவர்கள் என்று சொன்னால் சரி, இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், வாதத்திற்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். ***

திரு. எல். இளையபெருமாள். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்து இருக்கிறார்கள். உண்மையிலேயே அந்தப் புத்தகம் எதைச் சொல்கிறதோ அதை ஆட்சேபிக்க நான் வரவில்லை. கடந்த கால செய்தியை மிக ஆர்வத்தோடு எடுத்துக்கொண்டு அந்த மக்களுக்கு ஒரு விடுதலை தருவதற்கு அந்த புத்தகம் ஒரு சாட்சியாக இருப்பதால், அதிலே உள்ள விவரத்தைச் சொன்னால் நல்லது. உண்மை அதிலே இருக்குமானால் உண்மையை நான் எப்போதும் மறுப்பவன் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. ஜே. எஸ். இராசு. ஒரு சின்ன கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். இப்போது கிளாரிபிகேஷன் கேட்க வேண்டாம். (குறுக்கீடுகள்) உங்களில் பல பேர் பார்க்காத அம்பேத்கார் அவர்களோடு நான் ரொம்பப் பழகியவன். அவர் பர்மாவில் சொன்னார். நான் இந்துவாகச் சாகமாட்டேன் என்று சொன்னார். பௌத்தமதத்தில் சேர்ந்த பின்னர்தான் இறந்தார். கிட்டத்தட்ட 35,000 பேரை பௌத்த மதத்தில் சேர்த்தபின்னர்தான் இறந்தார்.**

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். இந்தப் பிரச்னையை நான் எடுத்துக்கொண்டதற்குக் காரணமே, ஆதித் திராவிட மக்களிடம் நாம் இன்னும் பல உண்மைகளைச் சொல்லவில்லை. அதனால்தான் அவர்களுக்கு மத மாற்றம் என்கிற எண்ணம் வருகிறது. அவர்களுக்கு தேவையானது கிடைக்காவிட்டால், தேவையானது பெற முடியாது போய் விட்டால் நாம் மதம் மாறுவோம் என்று அவர்கள் சொல்வது எல்லாம் இந்தச் சூழ்நிலையை வைத்துத்தான் என்பதற்காக

நான் சொல்கிறேன். அங்கே போய்ச் சொல்லும்போது, அம்பேத்காரைப் பற்றிச் சொல்லும்போது புகழ்ந்து பேசுகிறார் கள், நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அவர் தியாகிதான். சந்தேகம் இல்லை. அந்த இனத்திற்காக அவர் மிகத் துணிச்ச லோடு கருத்துக்களை எடுத்து வைத்தார். போராடினார் என்பதையும் நான் வரவேற்கிறேன.

ஆனால் இந்தியா தாயகம்அல்ல என்று சொன்ன பிரச்சனையை எல்லாம் இப்போது தள்ளி வைத்துவிடவேண்டும். இந்து மதம் எங்களுக்குச் சொந்தம் இல்லை; ஏனென்றால் எங்களுக்கு அங்கே இடமில்லை என்று சொல்வதை எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப் போல கோவிலுக்கு உள்ளே போகக்கூடாது, பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது, பொது இடங்களில் தங்கக்கூடாது, பொதுமக்கள் சாப்பிடுகின்ற உணவு விடுதிகளின் உள்ளே போகக்கூடாது, சாப்பிடக்கூடாது. எல்லோருக்கும் கொடுக்கின்ற மரியாதை அவர்களுக்கு இருக்கக்கூடாது என்று எல்லாம் இருந்த நேரத்தில் அது சரி. இப்போது சட்டபூர்வமாக உரிமை தரப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்பவர்கள்மீது வழக்குத் தொடரலாம்; வழக்குப் போடுகிறோம்.

இப்போது 18 சதவீதம் என்ற பிரச்னையை இங்கே நிறைவேற்ற முயற்சிக்கிறோம். ஒன்றை நான் வேகமாகச் சொல்கிறேன். தி அணைப்புப் படையானாலும் சரி, காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துறை என்றாலும் சரி, வேறு எந்தத் துறையானாலும் சரி, 18 சதவீதம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்த இடம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், தகுதி படைத்தவர் அந்த இனத்தில் கிடைக்கவில்லை என்றால், அதை நிறுத்தி வைப்போம்; பிறகு கிடைக்கும்போது பூர்த்தி செய்வோம் என்றால் அதற்காக வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள், வாதாடுகிறார்கள். அதைத் தட்டிக் கேட்பதற்கு அனைத்துக் கட்சிகளும், அனைத்து மதத் தலைவர்களும்—எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும்—அந்த ஜாதித் தலைவர்களும் எல்லோரும் கலந்து கொண்டு இந்த எண்ணத்தை நாம் தெரிவித்தாக வேண்டும்.

தீண்டாமையை ஒழிப்போம் என்று வாயளவில் சொல்லி விட்டு நமது வீட்டிலே தீண்டாமையை வைத்துக்கொண்டிருக்கிற நிலைமையை நாம் அனுமதித்துக்கொண்டிருக்கக்கூடாது என்ற உணர்வோடு நாம் எல்லோரும் போவதற்கு உத்தரவாதம் தரவேண்டும், நமது செயல்முறைகளால். அதற்காகத்தான் அம்பேத்கார் வரலாற்றை எடுத்துக்கொண்டேனே தவிர, அவரை சிக்கவைக்கவேண்டும் என்பதற்காக அல்ல. அவராக மாட்டிக்கொண்டார். ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சனையை நான் இதோடு விட்டுவிட்டு அடுத்தப் பிரச்சனைக்கு வருகிறேன்.

தீ அணைக்கும் படையில் இதுவரை வேலை செய்கின்றவர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு என்பது நிச்சயமாக இல்லை. வருமானம் போதாது. இவை எல்லாம் ஆராய்ந்து, இதை மாற்றலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதுபற்றி என்னுடைய அறிக்கையிலே விளக்கிச் சொல்வேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

தீ அணைக்கும் படைக்குக் கருவிகள் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன; செயர்ஸ் எல்லாம் எங்கெல்லாமோ கிடக்கின்றன என்கிறார்கள். முதலிலே நமக்கு என்ன தேவையோ, எத்தனை கேலன் தண்ணீர் வைக்க வேண்டுமோ, அது தேவை என்று கேட்டு வாங்கினோம். பிறகு முடியாமல் போய்விட்டது. ஆகவே அந்த 500 கேலன் தண்ணீர் 'டாங்க்' எங்கெல்லாம் பயன்படுத்தப்பட முடியுமோ அங்கெல்லாம் பயன்படுத்திவிட்டு முடியாத நிலையில் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு, புதிதாக வாங்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்தபோதுதான் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் குவிக்க இடம் இல்லாத காரணத்தால் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறதே தவிர, வாங்கிப் போட்டுவிட்டு, பயனற்றதாக ஆக்க வேண்டுமென்று அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் மதுரை மருத்துவக்கல்லூரி மாணவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. அதுபற்றி விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்புவதற்காக மதுரை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி அவர்கள் ஒரு நபர் குழுவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி வேண்டுமா, அல்லது பணியாற்றும் மாவட்ட நீதிபதியை அமைக்க வேண்டுமா என்று அவையில் கேட்டபோது மாண்புமிகு திரு சங்கரய்யா அவர்கள் நீங்களே முடிவுசெய்யுங்கள் என்று சொன்னார்கள். அதன் பிறகு உயர் நீதிமன்றத்தில் இந்த விசாரணைக்கு நீதிபதி ஒருவரை கொடுக்க இயலுமா என்று கேட்டபோது, வழக்குகள் நிறைய இருக்கின்றன. இயலாது என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு மாவட்ட செஷன்ஸ் நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே இதில் பிரச்சனை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

சிதம்பரம் முன்னாள் டி. எஸ். பி. யாக இருந்த திரு. டி. ஜோசப் என்பவர் கிரிமினல் வழக்கில்சம்பந்தப்பட்டுள்ளதாக அறிக்கை வந்திருக்கிறது. பின்னால் அவர் மீது டி. வி. எஸ். ஸி. வழக்கு ஒன்று விசாரணையில் இருந்தது. இந்த அடிப்படையில் அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார். ஆகவே, நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் இல்லை.

(பிற்பகல் 1—10)

விளாத்திகுளம் காவல் நிலைய எல்லைக்குள் இருதரப்பினர் மோதிக்கொண்டார்கள். கிராம பொது நல நிதியை எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்பதில் இந்தத் தகராறு ஏற்பட்டது. அதை யார் பொறுப்பில் வைத்துக்கொள்வது என்ற சர்ச்சை நேர்ந்தது. மோதிக்கொண்டதன் விளைவாக இருவர் இறந்தனர். திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியதுபோல, எட்டையபுரம் பகுதியில் அல்ல— 4 பேர் கொலை அல்ல. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல் துறை கண்காணிப்பாளரும் விரைந்து சென்று அமைதி காத்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல் இன்னும் பல விவரங்கள் இருக்கின்றன.

மதுவிலக்கு ஆயத்தீர்வைபற்றி நான் சொல்லியாக வேண்டும். அண்மையில்தான் அதை நான் எடுத்துக்கொண்டேன். வருவாய்த்துறையில் அவர் அதிகமான அக்கறை காட்டவேண்டுமென்பதற்காக—சென்ற ஆண்டு கொஞ்சம் விற்பனை வரி குறைந்துவிட்டது, அதை ஈடுசெய்யவேண்டும் என்பதற்காக அவர் தமிழ்நாடு முழுவதும் சென்று பல வேலைகளை நேரடியாகக் கவனிக்கவேண்டும் என்பதற்காக இந்தத் துறையை

நான் எடுத்துக்கொண்டேன். இதைத்தவிர பல துறைகள் அவரிடம் இருக்கின்றன. இதை எடுத்துக்கொண்ட பிறகு நான் கமிஷனரை நியமித்தேன். இப்பொழுது நடக்கின்ற முறை, வரையறை எப்படி, நியதி எப்படி என்றால், அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அதிகாரிகள் பரிந்துரை செய்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எனக்கு பொறுப்பு இல்லை என்பது அல்ல. தவறுகள் நேர்ந்தால் அதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். பொறுப்பு எனக்கு இருக்கிறது.

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசு இந்த மதுவிலக்கை தளர்த்துவதற்கு முன்னாலே இங்கே பேசியதைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். ரோடிலே எல்லாம் தண்ணீராக ஓடுகிறது சாராயம், மது என்றெல்லாம் சொன்னார்கள். இத்த ன பேரைக் கைது செய்து ஜெயிலில் வைத்திருக்கிறீர்களே நியாயமா என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கெல்லாம் விளக்கம் சொல்லிவிட்டேன். இப்போது நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு வந்தபிறகு எவ்வளவு அக்கறையோடு அந்த டி. ஐ. ஜி. பொறுப்பேற்றிருக்கிற திரு. சர்மா அவர்கள், அந்தப் பணியைச் செய்கிறார்கள், அவர்களுக்கு சி. ஐ. டி. டிபார்ட்மென்ட், டி. ஐ. ஜி. (லா அண்ட் ஆர்டர்) இவர்களெல்லாம் சேர்ந்து உதவி செய்ததன் விளைவாக எந்த அளவுக்கு அவர் கடமையைச் செய்திருக்கிறார், அதிகாரிகள் கடமையைச் செய்கிறார்கள் என்பதை ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. ஏறத்தாழ 35 லட்சம், 40 லட்சம் லிட்டர்கள் இந்த அரசு எடுத்துக் கொள்ளும்போது விற்பனை செய்ய முடிந்தது. பாக்கி எல்லாம் கள்ளச் சாராயம்தான், கள்ள மதுதான். இப்போது 1,22,00,000 லிட்டர் விற்பனை செய்யப்படுகிறது. அந்தப் பணம் முழுவதும் அரசுக்கு வருகிறது. அப்படியானால், ஏறத்தாழ 80,00,000 லிட்டர் கள்ளச் சாராயம் இருந்து, அது மக்கள் மத்தியில் பரவிக் கொண்டு இருந்தது. இப்போது இது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குடிப்பவர்கள் அதிகமாகிவிட்டார்கள் என்பதல்ல, குடிப்பவர்கள் நல்ல சாராயத்தைக் குடித்துவிட்டுத்தான் இருக்கிறார்கள். அது தனியாருக்குச் சேராமல் அது அரசுக்கு சேருகிறது, நமக்குப் பயன்படுகிறது என்பதை இப்போது சொல்கிறேன்.

அதேநேரத்தில் ஒன்றை நான் சொல்லவேண்டும். ஏமாற்றுகிறேன் என்று சிலர் சொல்லலாம். அரசியலுக்காக அல்ல, ஆனால் உண்மையிலேயே சொல்கின்றேன், எவ்வளவு விரைவில் கள்ளச் சாராயம் தமிழகத்திற்குள் வரமுடியாமல் தடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு, அரசு அதிகாரிகளுடைய, அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய, தோழர்களுடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் விரைவிலே எந்த மதுவை தளர்த்தினேனோ அதை மீண்டும் இல்லாத விதத்திலே கொண்டுவர நான் நிச்சயமாக முயன்று கொண்டிருக்கிறேன்



என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்)

இங்கே சொல்கிறேன், தேர்தலைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்பே அப்போதே சொன்னேன், இங்கே சொல்லும்போது யாரோ சொன்னார்கள், ஏதோ பஞ்சாயத்துத் தேர்தல் உடன்பாடு மாதிரி இருக்கக்கூடாது என்று. பஞ்சாயத்துத் தேர்தலுக்கு இன்னும் உடன்பாடு வரவில்லை. எந்தக் கட்சியும் உடன்பாடு பற்றிப் பேசவேயில்லை. சிலருக்கு தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தமோ, அல்லது பேசிக் கொண்டதோ, உடன்பாடு, உடன்பாடு என்றே ஞாபகமாக இருக்கிறது. எங்களுக்கு அது நோக்கம் அல்ல. நாங்கள் ஏதாவது செய்வது என்றால் சொல்லிவிட்டு வந்தோமே, அதை எந்த அளவுக்கு முடிப்பது, செயலாக்குவது என்கிற நோக்கத்தில் செய்கிறோமே தவிர, ஓட்டு வாங்கவேண்டும் என்பதற்காக அல்ல என்பதை தயவு செய்து திரு. இளையபெருமாள் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

திரு. எல். இளையபெருமாள். பஞ்சாயத்துத் தேர்தலைப் பற்றி நான் சொல்லவேயில்லை. ரெக்கார்டைப் பாருங்கள், ரெக்கார்டிலே இருந்தால் நான் ஒத்துக்கொள்கிறேன். நான் சொன்னதெல்லாம் பஞ்சாயத்துத் தேர்தலிலே தாங்கள் ஒதுக்கீடு செய்ததால்தான் அதனை அரசியல்வாதிகள் ஒத்தி வைக்கவேண்டுமென்பதற்காக........

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். அந்தப் பிரச்னை அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, தேர்தலை எண்ணி நீங்கள் காரியத்தைச் செய்ய நினைந்தால் மக்களுக்கு நல்லது செய்ய முடியாது. சொன்னார்கள்... (குறுக்கீடு) அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை. இருந் ருந்தால் உண்மையிலே சொல்கிறேன், பெரும்பான்மையாக இருக்கின்ற ஆதிதிராவிடர் அல்லாத மக்களுடைய நம்பிக்கை வேறு இருக்குமானால் அந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, இந்தச் சலுகையை நாம் கொடுக்கவேண்டும், பதவியில் அவர்களுக்கும் இடம் தரவேண்டும் என்று நாங்கள் கொண்டு வந்திருக்கவே முடியாது, கொண்டு வந்திருக்கமாட்டோம். இன்னும் சொல்வேன். இன்னும் விரைவில், இந்த அசெம்பளி செசன் முடிவதற்குள் வேண்டுமானால், 18 சதவீதம் என்ற முறைப்படி பஞ்சாயத்துத் தேர்தல் உள்ளடக்கிய, யூனியன் தேர்தல்களை எல்லாம் நடத்துவதற்கு நாங்கள் முயற்சிப்போம். அப்படி முடியாமல் போகுமானால் பழைய முறையிலாவது, வெகு விரைவில்—வெகு வி ரவில் என்றால் 2 மாதங்கள், 10 மாதங்கள் அல்ல--அண்மையில், தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசு, இங்கே நிறைவேற்றுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டாலும், கவர்னரின் ஆ ணையாக, சட்டமாகக்கூட, அதைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியுமா என்பதை நாங்கள் முயற்சிப்போம், அதைச் செய்வோம் என்பதை இந்த அ வையில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே அந்தப் பிரச்சனை இனிமேல் இருக்காது.

நாங்கள் தேர்தலைச் சந்திக்க பயந்து ஏதோ, நிபந்தனைகளை எல்லாம் போட்டோம், அந்த விதிகளை எல்லாம் கொண்டு வந்தோம், விழுக்காடுகள் கொண்டு வந்தோம், அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே போகவேண்டும் என்ற எண்ணம் இனிமேல் யாருக்கும் வரக்கூடாது என்பதற்காக, அந்த நல்ல ஆசையை, நம்பிக்கையை நாம் இங்கே வைத்து, அவர்கள் மேலும் அரசியலைப்பற்றி நாம் நம்பிக்கை வைத்து, இந்த உண்மையைச் சொல்வேன். அவர்கள் இனியாவது அப்படி உள்ளேயோ, வெளியேயோ, பேசமாட்டார்கள், இந்தத் தேர்தலுக்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த எண்ணத்தை நாம் நிறைவேற்றும்போது, திரு. இளையபெருமாள் போன்றவர்களும், மற்றவர்களும், ஜனநாயகத்தில் வாக்களித்து வரவேண்டியவர்கள் எங்கெங்கே வரவேண்டுமோ, அந்தப் பதவிகளுக்கு எல்லாம் மக்கள் வர வேண்டும் என்ற நோக்கத்தில், வேறு வழியின்றி இந்த 18 விழுக்காடு என்றெல்லாம் மாற்று கின்றோமே தவிர, நீட்டிக் கொண்டே போக தேர்தலை நாங்கள் விரும்பவில்லை என்ற காரணத்தால் அதைச் செய்ய முனைகிறோம். ஆகவே இவைகளுக்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும். நமக்கு கொள்கை என்று இருக்கிறது. அதைவிட்டுவிடவில்லை. ஆனால் பஞ்சாயத்து தேர்தல், யூனியன் தேர்தல், நகரசபைத் தேர்தல், மாநகராட்சித் தேர்தல்கள் என்ற காரணத்தாலே. தள்ளிக்கொண்டே போகக் கூடாது என்பதால் நான் சொல்கிறேன். யாரை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ, அதை முடிவு செய்யவேண்டியது மக்கள் தான். ஆகவே மக்கள் முடிவு செய்வதுபற்றி, நாங்களே எண்ணிக்கொண்டு, எங்களுக்கு இலாபம் வரும், நாங்கள் எங்கே என்று பார்த்தால் அது சரியாக வராது. ஒத்துவராது. அது ஜனநாயகம் அல்ல. அது வழியும் அல்ல. அதற்கு நாங்கள் தயாராக இல்லை. வெற்றி என்றாலும், தோல்வி என்றாலும், மக்களைச் சந்திக்க நாங்கள் விரும்புகிறோம், உங்களைப்போல. ஆகவே அந்த முறையை நாங்கள் கடைபிடிப்போம் என்பதை நான் உத்தரவாதமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மூன்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று சொல்வதற்குமுன், காவல்துறைக்காக நாங்கள் என்னென்ன புதிய புதிய திட்டங்களைச் செய்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

காவல்துறையில் பணியாற்றும் காவலர்களிலிருந்து ஆய்வாளர்கள் வரையுள்ள பணியாளர்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் அப்போதிருந்த விலையில் 50 சதவீதம் அரசு மானியம் வழங்கியது. விலைவாசியின் ஏற்றத்தைக் கருத்திற்கொண்டு தற்போதுள்ள விலைவாசியில் 50 சதவீதம் ஆக அரசு மானியம் உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ. 1 கோடி செலவாகும்.





காவல் துறையில் அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை ஆராய்வதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு வழங்கிய பரிந்துரைகளின் இறுதியான முடிவு எடுப்பதற்கு முன் உடனடித் தேவைகளை உணர்ந்து 1984-85 ஆம் ஆண்டுக்கு 200 கூடுதல் அமைச்சுப் பணியாளர் பதவிகளை அனுமதிப்பது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து விசாரணை மற்றும் காவற் கைதிகளை நீதிமன்றங்களுக்குப் பாதுகாப்புடன் கொண்டு செல்வதற்காக ஆண்டுக்கு ரூ. 17 இலட்சம் செலவில் காவலர் நிலை 2 முதல் ஆயுதப்படை உதவியாளர்கள் வரை ஓட்டுநர்கள் உட்பட 138 கூடுதல் பணியாளர்களைக் கொண்டு ஒரு விசேஷப்படையை அரசு ஏற்படுத்தும்.

செங்கற்பட்டு மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளைத் தீவிரப் படுத்தும் பொருட்டு, ரூபாய் 6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் 62 நபர்கள் கொண்டு ஒரு காவல்படை ஏற்படுத்தப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூர் பகுதியில் சட்டம் ஒழுங்கைப்பராமரிக்க ரூபாய் 6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் ஒரு சேம காவல்படைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினைப் பராமரிப்பதற்கென ரூபாய் 6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் ஒரு சேமக் காவல் படைப்பிரிவு ஏற்படுத்தப்படும்.

(பிற்பகல் 1—20)

மாநிலத்தில் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு பருத்திச் சீருடைகளுக்குப் பதிலாக டெரி காட்டன் சீருடைகள் 1984-85 ஆம் ஆண்டில், செப்டம்பர் 15 ஆம் தேதி வாக்கில் வழங்கப்படும். முதல் ஆண்டில் தலா 2 செட் உடைகளும், பின்னர் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு செட் என்ற விதத்தில் வழங்கப்படலாம் என்று முடிவெடுத்திருக் கிறோம். பின்னால் அது நிச்சயம் தேவை என்றால், இந்த அரசு சிந்திக்கும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப்பிரிவில் பணிபுரிபவர் களுக்கு மட்டும் ஆண்டுக்கு 2 செட் உடைகள் வழங்கப்படும். இயற்கைச் சீற்றங்களைப் பொருட்படுத்தாது பணிபுரியும் காவலர்களுக்கும், சார்நிலை அதிகாரிகளுக்கும், அந்தந்தப் பணியில் ஈடுபடும்போது, மழைக் கோட்டுகளும், கம்-பூட்சுகளும் குறிப்பிட்டவர்களுக்கு முதல் கட்டமாக ரூ. 7.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

காவல் துறையில் உள்ள உதவி ஆய்வாளர்களுக்கு, ஆய்வாள ராக பதவி உயர்வு அளிப்பதற்கான உச்ச வரம்பு வயது 52லிருந்து 55 ஆக உயர்த்தப்படும்.

சென்னை மாநகரில் இரவு ரோந்துப் பணிக்காக தற்போது பணிபுரியும் 350 முன்னாள் இராணுவத்தினர் தவிர, கூடுதலாக 250 முன்னாள் இராணுவத்தினர் பகலில் நடக்கும் குற்றங்களைத் தடுப்பதற்கென நியமிக்கப்படுவார்கள். இதற்காக ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூ. 9 இலட்சம்.

சேமப்படையில் இருக்கும் காவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் திறன் படி 1944 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் படி மிகவும் குறைவாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. சொல்லப்படுவது மாத்திரம் அல்ல, நாம் உணர்கிறோம். எல்லோருக்கும் சம்பள படி உயர்கிறது. அவர்களுக்கு மட்டும் இல்லை. ஆகவே, தலைமை காவலர்களுக்கு மாதம் ரூ. 2 லிருந்து 10 ஆகவும் காவலர்களுக்கு ரூ. 1லிருந்து ரூ.7½ யாகவும் உடனடியாக உயர்த்தப்படும்.

காவலர் சேம நல நிதிக்கு அரசு ஆண்டுதோறும் வழங்கி வரும் தொகையான ரூ. 2.50 இலட்சம், இவ்வாண்டிலிருந்து ரூ. 3.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

ரூ.64.30 இலட்சம் செலவில் காவல் வானொலி தொடர்புகளை மேம்படுத்தும் பொருட்டு சில முக்கிய நகரங்களில் வி.எச்.எப். தொடர்புமையங்கள் அமைக்கவும், கூடுதலாக தேவைப்படுகின்ற வி.எச்.எப். செட்டுகளைப் புதிதாக வாங்கவும் சில பழுதடைந்த வி.எச்.எப். கருவிகளைக் கழித்துவிட்டு புதிய வி.எச்.எப். செட்டுக்கள் வாங்கவும், வானொலிப் பிரிவிலுள்ள கருவிகளைச் சரி பார்க்கவும் செலக்டிவ் லெவல் மீட்டர்கள், மின் அழுத்தத்தைச் சீராக்கும் கருவிகள் (மின் ஸ்டெபிலைசரஸ்) வாங்கவும் வானொலிப் பிரிவிலுள்ள கட்டுப்பாடு அறையைக் குளிர் பதனப்படுத்தவும் அனுமதி வழங்கப்படும்.

மறைமலை நகர், பழனி மலை அடிவாரம், சோமங்கலம், சேலம் நகரத்தில் ஃபேர் லேண்ட்ஸ், கன்னியாகுமரி மாவட்டத்தில் தாமரைக் குளம் ஆகிய இடங்களில் புதிதாக காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், மேல் மருவத்தூரில் இயங்கி வரும் புறக் காவல் நிலையம், காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மிலட்டூரில் இயங்கி வரும் புறக் காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் அஞ்சி கிராமத்தில் இயங்கி வரும் புறக்காவல் நிலையம் ஆகியவை காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் [illegible] பகுதியைப் பிரித்து முதுகுளத்தூர், கடலாடி ஆகிய இரண்டு இடங்களிலும், காவல் வட்டங்கள் அமைக்கப்படும்.





சேலம் மாவட்டம், திருச்செங்கோடு, காவல் நிலையத்தைப் பிரித்து, திருச்செங்கோடு காவல் நிலையம் (நகரம்), மற்றொரு காவல் நிலையம் (புறநகர்) என இரண்டு காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப் படி மற்றும் சிற்றுண்டிப் படிகளின் அளவு நாளொன்றுக்கு ரூ. 4.50 ஆக உயர்த்தப்படும்.

தீயணைப்புத் துறை பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தால் குடும்ப நல நிதித்திட்டத்தின் கீழ் கிடைக்கும் ரூ 10,000த்துடன் மேலும் ரூபாய் 10,000 கருணை அடிப்படையில் வழங்கப்படும்.

சென்னையிலுள்ள மாநில தீயணைப்புத் துறை பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும் கோட்ட தீயணைப்பு அலுவலர்களுக்கு ரூ. 40/-ம் முன்னனி தீயணைப்போருக்கு ரூபாய் 50/-ம், போதனைப் படியாக வழங்கப்படும்.

குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடாமல் பார்த்துக் கொள்ளும் கடமை உணர்வுடன் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது பணியாற்றுகையில் வீர மரணம் அடையும் காவலர் துறைப் பணியாளர்களின், குழந்தைகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிப்பதற்கும் அவர்களது குழந்தைகள் பள்ளியிலும், கல்லூரிகளிலும் கல்வி பயிலுவதற்கும், தேவைப்படும்போது மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும். (குறுக்கீடு)

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, தம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது ****

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் முடிந்து விட்டது, என்னைப் பொறுத்தவரையில்.

திரு எல். இளையபெருமாள்: அது நடவடிக்கைக் குறிப்பில் இருக்கலாமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொன்னது தன்னுடைய கருத்தா அல்லது இந்து மகாசபைக்காரர் எழுதிய புத்தகத்திலிருக்கிற குறிப்பா, கான்ஸ்டிட்யூவன்ட் அசெம்பிளியில் சொல்லப்பட்டதா என்ற விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: அது ஏ.எஸ்.கே. அவர்களுடையது, ஏ.எஸ்.கே. அவர்கள் இந்து மகாசபையைச் சார்ந்தவர்கள் அல்ல.

---

**** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு எல். இளையபெருமாள்: தனிப்பட்டவர்கள். எழுதி இருக்கலாம். ஏ.எஸ்.கே. அய்யங்கார்....

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: அவர் அய்யங்கார் அல்ல. மற்றவர்கள் அழைத்தால் அவர் என்ன செய்வார், ஜாதி மதம் எல்லாம் அவருக்குக் கிடையாது. நீங்கள் சொல்ல விரும்பவில்லை என்பதால் அவைக்குறிப்பிலிருந்து எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்று சொன்னதை மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, என்னால் எவ்வளவு தூரம் சொல்ல முடியுமோ சொல்லியிருக்கிறேன். முழுக் குறிப்பும் என்னால் படிக்க முடியவில்லை. அதற்கும் வெளியே சொல்வார்கள். 3 நாட்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்வார்கள். ஆகவே இன்னும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சொல்லலாம். ஆகவே இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 15 — காவல் துறை

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. சு. பாலன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக் கோரிக்கை எண். 15-காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,35,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்

திருவாளர்கள் டி. மணி, தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு கெ. சொக்கலிங்கம் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக் கோரிக்கை எண், 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,48,99,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

திரு. எம். செல்லமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. தி. கா. நல்லப்பன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,79,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 10.4.1984 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஏதுவுமில்லை

136251

தலைமைக் காவலர்கள் மற்றும் இரண்டு காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஜீப் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இருந்தும் அவர்கள் ஆற்றிய பணி என்ன என்பதற்கு ஆய்வறிக்கையில் எந்தப்புள்ளி விவரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இனக்கலவரங்கள்பலஇடங்களில் நடைபெற்று வந்துள்ளது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எதுவும்பயன்படுத்தப்பட்டதாகவும் தெரியவில்லை. தமிழக முதல்வர் அவர்கள் கூட மக்கள் குரல் பத்திரிகையிலே செய்திவெளியிட்டிருக்கிறார்கள். எஸ்.ஸி., எஸ்,டி. களுக்கு 18 சதவிகிதம் உத்தியோக உயர்வு கொடுத்திருப்பதாக மக்கள் குரலிலே செய்தி வந்திருக்கிறது. இது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

சிவகாசியிலே அரசினர் கல்லூரியில் நடந்த தேர்தலிலே போட்டி இட்டு ஒரு அரிசன மாணவன்வெற்றி பெற்றான். மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அவனை அடித்துக் கொடுமைப் படுத்தி இருக்கிறார்கள். அவன் காவல் நிலையத்திலே போய் புகார் கொடுத்திருக்கிறான். இதுவரையில் எந்தவிதமன நடவடிக்கையும் இல்லை. நம்முடைய அருமைச் சகோதரர் இளையபெருமாள் அவர்களும் இந்த விஷயத்திலே தலையிட்டு பல கடிதங்களைப் பல உயர் அதிகாரிகளுக்கு எழுதியும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

சாலைப் போக்குவரத்தைச் சீர்படுத்த போக்குவரத்துக் காவலர்கள் மூலைக்கு மூலை நின்று கை நீட்டியும், கை காட்டியும் இருக்கிறார்கள். போக்குவரத்துக் காவல் துறையினர் கவனக் குறைவால்தான் இன்றையதினம் சாலை போக்குவரத்தில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இருவழிச் செய்தி தொடர்பு அதாவது வாக்கி-டாக்கி வழங்கப்படுகிறது. அண்ணா மேம் பாலத்தில் இருந்து நுங்கம்பாக்கம் வழியாக சேத்துப்பட்டு செல்லும் வண்டி தப்பாக வருகிறது, பிடியுங்கள் என்று சொன்னால் நிச்சயமாகப்பிடிக்கமுடியும். இதுபோன்ற வேகமான பணிகளை நம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் அது கிடைக்காத ஒன்றாகத்தான் இருக்கிறது. பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் அனைவரும் டிக்கட் வாங்கி இருக்கிறார்களா என்பதைப்பரிசோதனை செய்வதற்காக அதிகாரிகள் திடீரென்று பஸ்ஸுக்குள் ஏறி, ஏதோ கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்கப் போவதுபோல போகிறார்கள். அதேபோன்று பஸ் ஓட்டுகின்ற அந்த ஒட்டுநர் நிதானத்தோடு ஒட்டுகிறாரா மது அருந்தாமல் அவர் ஓட்டுகிறாரா என்பதைப் பார்ப்பதற்காக ஒரு பறக்கும் படையை பயன்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் தற்போது முகமூடிக் கொள்ளை கடுமையாக அதிகரித்து இருக்கிறது. பிற மாநிலங்களில் இருந்து வந்து இங்கே கொள்ளை அடிப்பது, கன்னக் களவு வைப்பது போன்ற குற்றங்களைச் செய்கின்றனர். முன்னெச்சரிக்கையாக காவல் துறை இல்லாததன் காரணமாகவும், சந்தேகப் படுபவர்களைப் பின் தொடர்ந்து செல்லும்போது அவர்களின் பாஷை புரியாததாகவும் இருக்கின்ற நிலை இருக்கின்றது.



அதேநேரத்தில்சந்தேகப்படும்படியான நபர்களின் நடத்தையை மேலும் அறிய பின் தொடருகையில் ஒரு எல்லையிலே இருந்து வேறு ஒரு எல்லைக்குச் சென்றுவிட்டால், தங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி, காவலர்கள் திரும்புவதும் இதன் காரணமாக அக்கறை செலுத்தாத நிலைமையும் இருக்கிறது. இது குறித்து பரிசீலித்து துப்பு துலக்கும் காவலர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தருதல் வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளில் நமது காவலர்கள் ஈடுபட்டு நம் மாநிலத்திற்கு புகழ் தேடித் தருவதைப் பாராட்டுகிறேன். காவலர்களையும் பொதுமக்களையும் இணைத்துப் போட்டிகள் நடத்தி, பொதுமக்களோடு தொடர்பு ஏற்படுத்தும் திட்டம் வரவேற்கக்கூடியதுதான். ஆனால்நான்ஒருவிவரத்தைமுதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எழும்பூரிலே, அதுவும் புதுப்பேட்டையில் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற வரதராஜபுரம் என்ற பகுதியிலே இருக்கின்ற இளைஞர்கள் கேரம் போர்டு விளையாடி விளையாடுவது கிடையாது. னார்கள். நடுத்தெருவிலேகூட அதற்கு என்று குடிசை போட்டுக்கொண்டு ஒரு ஒதுக்குப்புறமான இடத்திலே அந்த இளைஞர்கள் விளையாடினார்கள். ஆனால் எஸ்–2 காவல்துறை நிலையத்திலே இருக்கின்ற அதிகாரிகள், எழும்பூரிலே உள்ள காவல் நிலையத்தில் உள்ள அதிகாரிகள் போய், அந்த இளைஞர்கள் ஏதோ செய்யாத குற்றத்தைச் செய்ததுபோல, இரண்டு இரண்டு பேராகச் சேர்த்து கையைக் கட்டி, அடி அடி என்று அவர்களை அடித்து, அந்த போர்டை அவர்களுடை தலையிலே வைத்து, தெருத் தெருவாக ஊர்வலம் நடத்திக்கொண்டுபோய் போலீஸ் நிலையத்திலே அடிக்கப்படு கின்ற ஒரு கொடுமையான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும்போது, எப்படி காவல் துறையினரும், நம்முடைய பொதுமக்களும் ஒன்று சேர்ந்து போட்டியிலே ஈடுபடுவதற்கு உரிய வாய்ப்பு ஏற்படும்; அது எப்படிக் கிடைக்கும் என்பதை நான் உங்கள் மத்தியிலே சொல்ல விரும்புகிறேன்.

இதுபோன்ற நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும், யார் விளையாட்டுகளிலே ஈடுபட்டாலும் அதை அந்த விளையாட்டுக் குரிய நல்ல ஒரு குணமாக எடுத்துக்கொண்டு, அந்த முறையிலே அதற்கு உரிய முறையில் நடத்திகொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் என்ன செய்தார்கள் அங்கே இருப்பவர்கள்? அகில இந்திய எஸ்.சி.எஸ்.டி. சேர்மனாக இருக்கின்ற மரகதம் சந்திர சேகர் அவர்களை வரவழைத்து, திறப்பு விழா நடத்தினார்கள். காரணம் அவர்களுக்கு பயம். போலீஸ் வந்து தன்னைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக மரகதம் சந்திரசேகர் அவர்களைக் கொண்டுவந்து திறப்பு விழா நிகழ்ச்சியை நடத்துகிறார்கள் என்று சொன்னால், இதை எல்லாம் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அவர்கள் அணுக வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.